சிவமகா புராணம்

கே. வி. குணசேகரம்

என்னுரை

சிவபெருமான் சைவ சமயத்தை வளர்ப்பதற்காக அது தோன்றிய காலங்களில் இருந்து பலரைப் படைத்து வருகிறார். முன்பு நாயன்மார்கள் சைவசமயத்தை வளர்த்தனர் அவர்கள் பாடிய தேவாரங்கள் தொகுப்பார் அற்றிருந்தபோது நம்பியாண்டார் நம்பியைக் கொண்டு அவற்றைத் திருமுறைகளாகத் தொகுப்பித்தார். நாயன்மார்களுக்கு முன் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியவர் வியாசர், சனத்குமாரர், சூதமுனிவர் போன்றோர்.

சிவபெருமான் உமாதேவியாருக்கும் நேரடியாகச் சொல்லியது தான் சிவமகாபுராணம். அதைச் சொல்ல முன் சிவபெருமான், "இது மிகவும் இரகசியமானது. சிவபக்தர்களைத் தவிர வேறு எவருக்கும் சொல்லக் கூடாதது. இதைச் சொல்வோர், படிப்போர், கேட்போர் யாவரும் பூவுலகில் மேலான இன்பங்களை அனுபவித்துப் பின் என்னை வந்தடைவார்கள்" என்று கூறுகிறார்.

இந்நூலைப் படிக்கவோ இதிலுள்ள கிரியை முறைகளை அனுட்டிக்க விரும்புவோர் முறைப்படி குருவிடம் சென்றே கற்றல் வேண்டும் என்றும் சிவபெருமான் கூறுகிறார். அதை நினைவில் கொள்ளுங்கள்.

அப்படியான அரியதொரு நூலை என்னிடம் தந்து அதை எழுதித்தருமாறு இந்துப் பண்பாட்டுத் துறை அமைச்சின் பணிப்பாளர் திரு. அ. உமாமகேஸ்வரன் கேட்டார். இது ஓர் அருமையான தத்துவநூல், கதை நூல், சைவர்கள் அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டிய நூல். நாம் இது வரை அறியாத நூற்றுக்கணக்கான கதைகளும் சம்பவங்களும் இதில் அடங்கியுள்ளன. பல்வேறு வகையான பழம்தமிழ் நூல்களையும், சைவ நூல்களையும் தேடித்தேடிக் கண்டு பிடித்து வெளியிடும் திரு. அ. உமாமகேஸ்வரனின் பணி மகத்தானது. இவ்வாறான சிவப்பணி சிறக்கச் சிவபெருமான் உதவுவார். இந்நூலை வெளியிடுவதன் மூலம் அவர் புனிதராகிறார் என்றே சொல்ல வேண்டும். இத்தகைய புனிதமான தத்துவ நூலை மிகுந்த கவனத்துடன் கணினிமயப்படுத்தித் தந்த ஆரியன் கிரியேஷன்ஸ் நிறுவனத்துக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். மீண்டும் சந்திப்போம்.

கே.வி. குணசேகரம்

கோட்டக்கல்விப் பணிப்பாளர் (ஓய்வு)

உ

சிவமயம்

1. ஞான சம்கிதை

காப்பு

ஜகதஹ் பிரதம் சம்பும்

ஜகதோ மாதரம் சிவம்

தத்புத்ரம்ச கணாதீஸம்

நக்வைத த்வர்ண யாம் யஹம்

புராண வரலாறு

நைமின்னியம் என்னும் வனத்தில் பன்னசாலை அமைத்து தவம் செய்த முனிவர்கள் அனைவரும் சூத முனிவரிடம் வந்து "மா முனிவரே, எமது வணக்கத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். தங்களுக்கு தெரியாத விடயங்கள் எதுவும் இல்லை. தாங்கள் முக்காலத்தையும் உணர்ந்த ஞானி அதனால் சிவபெருமானின் தத்துவத்தையும், அவருக்குரிய பூசை முறைகளையும், அவரின் சரித்திரங்களையும் எமக்குக் கூறியருளல் வேண்டும். நிர்க் குணனான மகேஸ்வரன் எப்படிச் சகுணனானான் என்றும் உலகப் படைப்பின் முன்பும்,

மத்திய காலத்திலும், இறுதியான பிரளய காலத்திலும் சங்கரன் எவ்விதமாக இருக்கிறான். அவர் எவ்வாறு தோற்றமளிக்கிறார், உலகங்களுக்கு எவ்வகையான பயன்களைக் கொடுக்கின்றார். எதைச் செய்ததால் சர்வேஸ்வரனான சிவன் காட்சி தருவார். என்பதையும் நாங்கள் சிவனைப் பற்றி அறியாத புதுமைகளையும் தாங்கள் எமக்குக் கூற வேண்டும்''. என்று கேட்கச் சூத முனிவர் மகிழ்வுடன் கூறத் தொடங்கினார்.

சோதிலிங்கம் தோன்றிய வரலாறு

''முனிவர்களே, நீங்கள் சிவபெருமானைப் பற்றி அறிய விரும்பியது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. முன்பு நாரதர் பிரமநாதத்தை அறிய விரும்பி தனது தந்தையான பிரமாவைக் கேட்டார். அதைப் பற்றிச் சொல்கிறேன் கேளுங்கள். எல்லா உலகங்களுக்கும் சென்று வாழும் பேறு பெற்ற நாரத முனிவர் பரமாத்மாவான சிவபெருமானின் தத்துவத்தை அறிய விரும்பித் தனது தந்தையான பிரமதேவனை வணங்கி, ''பிதாவே, தங்களின் மூலம் விஷ்ணுவின் தத்துவங்களை அறிந்து கொண்டேன். ஆகையால் சிவபெருமானையும் அவரை ஆராதிக்கும் முறைகளையும் அறிந்து கொள்ள விரும்புகிறேன். இவற்றைத் தங்களைத் தவிர வேறொருவரிடமும் அறிந்து கொள்ள முடியாது. இதைப் பற்றிப் பலரிடம் கேட்டும் அவர்கள் முறையான பதிலைத் தரவில்லை. சிவபெருமானின் மகிமைகளையும், சிவவிரதங்களின் புனிதத்தன்மையையும், அவற்றின் பயன்களையும், உலகம் அவரால் அடையும் நன்மைகளையும், சிவலிங்கத்தின் உற்பத்தியையும், அவர் பார்வதியை மணந்த வரலாற்றையும், அத்துடன் நான் கேட்க மறந்த அவரது மகிமைகளையும் சொல்லுங்கள்'' என்று பணிந்து வேண்டினார்.

நாரதா பெருமைகளும் புதுமைகளும், அருளும் மிக்க சிவபெருமானைப் பற்றி என்னாலும் மகா விஷ்ணுவாலும் கூடச் சரியாக அறிந்து கொள்ள முடியவில்லை. இருப்பினும் எனக்குத் தெரிந்தவற்றை கூறுகிறேன். நாரதா, இந்த உலகம் எப்பொழுது கண்களுக்குப் புலப்படாது போகிறதோ அப்பொழுது அது வியாப்தி ரூபமான பிரமமாக மாறிவிடும். அப்போது அது பருமையையும், நுண்மையையும், உற்பத்தியடைவதையும் இழந்து நாசமடையாத சக்தியையும் மிகச் சிறந்த அறிவையும் உடையதாக மாறிவிடும். அத்தகைய பிரமத்தை யோகிகள் தமது ஞானக்கண்களால் கண்டு கொள்வார்கள். மிகத் தூய்மையான அந்தப் பிரம ஞானத்தையும், விஞ்ஞானத்தையும் கொண்டதாக அமைந்துள்ளது. சில காலம் செல்ல அப் பிரமத்திற்கு இச்சை உண்டானது. அதனால் அதைப் பிரகிருதி என்றும், மூல காரணி என்றும் சொல்வார்கள்.

அந்தப் பிரகிருதி என்பவள் எட்டுக் கைகளையும், விசித்திரமான ஆடைகளையும் அணிந்தவள். ஆயினும் பூரண சந்திரர்களுக்குச் சமமான முகப்பிரகாசம் கொண்டவள். பல்வேறு விதமான ஆபரணங்களை அணிந்திருப்பவள். அனைத்திற்கும் காரணமானவள்

அத்துடன் மாயங்கள் செய்யும் மாயாதேவியானவள். அவள் பிரமத்தில் இருந்து தோன்றும் போது அப் பிரமத்தில் இருந்து புருசனும் தோன்றினான். இருவரும் அடுத்து என்ன செய்வது என்று நினைத்தபோது வானில் இருந்து, "நீங்கள் இருவரும் தவம் செய்யுங்கள்" என்றதொரு வாக்கு எழுந்தது அதனால் இருவரும் மிகக் கடுமையான தவத்தை மேற்கொண்டனர். அவ்விருவரும் நெடுங்காலம் தவம் செய்து தவ நிலையில் இருந்து மீண்ட போது அவ்விருவரின் தேகங்களில் இருந்து பலவிதமான நீர்ப் பெருக்குகள் உண்டாகிச் சகல உலகங்களுக்கும் பாய்ந்து சென்றன. அவை பிரம ரூபமான நீர்ப்பெருக்காயின. அதனால் மிகவும் களைப்படைந்த புருசன் பிரகிருதியுடன் அந்நீர்ப்பரப்பில் துயில் கொண்டான். அதனால் அவனுக்கு நாராயணன் என்ற பெயர் உண்டானது. அப்போது அவ்விருவரையும் தவிர வேறு எதுவும் இருக்கவில்லை.

"பிரகிருதியில் இருந்து சத்துவம், இராசதம், தாமசம் என்ற முக்குணங்களுயும், அம் முக் குணங்களில் இருந்து தன் மாத்திரைகள் ஐந்தும், தன்மாத்திரைகளில் இருந்து ஐம் பூதங்களும், அப் பஞ்சபூதங்களிலிருந்து கன்மேந்திரியங்களும், கன்மேந்திரியங்களில் இருந்து ஐம் பொறிகளும், அந்தக் கரணங்களும் தோன்றின. பிரகிருதியையும் புரிசனையும் தவிர்த்து ஏனையவை சலமயமானவை. பின் இவை பிரகிருதியாலும் புரிசனாலும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டன.

அதன் பின் நீரின் மேல் பள்ளி கொண்ட நாராயணது நாபியிருந்து பேரழகாக ஒரு தாமரை மலர் தோன்றியது. அத்தாமரையில் இருந்து தான் நான் உதித்தேன். எனினும் நாராயணனுடைய மோக மாயையால் என்னால் எதையும் அறிந்து கொள்ள முடியவில்லை. மறுபடியும் நான் வந்த காரணத்தால் மோகமடைந்தேன். தாமரையில் தோன்றிய நான் எதுவும் புரியாமல் திகைத்துத் தாமரை இலையில் இருந்து கீழே இறங்கி வந்தேன். இருப்பினும் நான் தாமரையின் அடிப்பகுதியை நான் காணவில்லை. அதனால் அதன் காம்பு வழியாக மேல் நோக்கிச் சென்றேன். சென்றபோதும் என்னால் எதையும் அடையவோ, அறியவோ முடியவில்லை. களைப்பால் சோர்ந்து மூர்ச்சையானேன் அப்போது "தவஞ்செய்" என்று ஒரு வாக்கு எழுந்தது. அதனால் தவம் செய்தேன். அப்போது சங்கு, சக்கரம், கதை ஏந்திய திருக்கரங்களோடு ஸ்ரீ விஷ்ணு எனக்குக் காட்சி தந்தார். அவரைக் கண்டு அதிசயித்த நான் "நீ யார்"? என்று கேட்டேன்.

மகிழ்வுடன் புன்னகைத்த அவர் "குழந்தாய் நான் தான் விஷ்ணு" என்றார். நான் அதை நம்பவில்லை. அதனால் இருவருக்கிடையேயும் வாதப்பிரதி வாதம் நெடுநேரம் இடம்பெற்றது. அது முற்றிப் பகையானது. அப்போது எம்மிருவருக்குமிடையே அற்புதமான ஒரு சோதி லிங்கம் உண்டானது. அது பெரும் பிரகாசமுடையதாகவும் அடி முடி தெரியாததாகவும் இருந்தது. அதைக் கண்ட நான் பிரமித்துப் போனேன். அப்போது மகா விஷ்ணு என்னைப் பார்த்து பிரமாவே, ஏன் கோபம் கொள்கிறாய் எம் முன் தோன்றிய இந்தச் சோதிலிங்கத்தைப் பற்றி அறிந்து கொள்வோம். இது எப்படித் தோன்றியது.? யாரால் தோற்றுவிக்கப்பட்டது.?

இதன் வரலாறு என்ன. எம்மை விடச் சக்தியான யாரோ ஒருவரின் திருவிளையாடல் தான் இது. அதனால் இதைப் பற்றி ஆராய்வோம். திசையெங்கும், விண்ணிலும், மண்ணிலும் பரந்திருக்கும் இச் சோதியின் அவதாரம் எங்கிருக்கிறது என்று தேடிக் கண்டு கொண்ட பின் எமக்குள்ள பிரச்சினையைப் பற்றி ஆராய்வோம். அதற்காக நீ அன்னப் பறவையின் வடிவமெடுத்து ஆகாயத்திற்குச் சென்று இதன் நுனியை ஆராய்ந்து கண்டு பிடி. நான் பன்றியின் உருவம் எடுத்து நிலத்தைப் பிளந்து சென்று இதன் அடியைக் கண்டு பிடித்து ஆராய்கிறேன். என்று கூறி பன்றியின் உருவம் எடுத்துப் பூமியைப் பிளந்து கொண்டு சென்றார்.

"நாரதா நான் அன்னப்பறவையின் வடிவத்தை எடுத்து வானவெளியில் பறந்து சென்றேன். அதனால் கம்சராசன் என்ற பெயர் எனக்கு உண்டானது. இருவரும் பூமியின் அடியிலும் வானமெங்கும் அடி முடியைத் தேடி ஆயிரம் ஆண்டுகள் அலைந்தோம்." பிரமதேவர் நாரதருக்குச் சொன்னார். நாம் இருவரும் வெகு காலம் தேடியும் அடியையும், முடியையும் காணவேயில்லை இருவரும் மிகக்களைப்படைந்து முன்பு இலிங்கம் தோன்றிய இடத்திற்கு வந்து அந்தச் சோதிலிங்கத்தை வணங்கினோம். அப்படி வணங்குவதற்கான காரணம் எதுவும் எமக்குத் தோன்றவில்லை. மாயையில் வல்லவனான மகா விஷ்ணுவாலும் வித்தையில் வல்ல நானும் அந்த லிங்கத்தை வணங்கினோமென்றால் அது எம்மை விடச் சக்தி வாய்ந்தது. என எண்ணி, "ஆண்டவனே உமது சுய வடிவைக் காட்டும். நீர் யார் என்பதைச் சொல்லும்" என்று கூறி அச் சோதியை ஆயிரம் வருடங்கள் வணங்கினோம். அப்போது ஓம் என்ற நாதம் எழுந்தது. அந்தச் சப்தம் "எங்கிருந்து எப்படி உருவானது என்று நாராயணன் வியப்புடன் யோசித்து விட்டு எதிலிருந்து இந்தச் சப்தம் உருவாகியதோ அதை நான் வணங்குவேன்" என்று சொல்லி அச்சோதியை வணங்கியபோது அவ்வொலியின் நடுவே ஓம் என்ற உருவைக் கண்டார். அது சூரிய சந்திரர்களையும் அக்கினியையும் விடப் பிரகாசமாக இருந்தது. அதற்குள் அவர் பரம்பொருளான பரப்பிரமத்தைக் கண்டார். அது ஐந்து திருமுகங்களுடனும் பத்துத் திருக்கரத்துடனும், பச்சைக் கற்பூரத்தின் நிறமுடையதாகவும் இருந்தது. அது பல விதமான ஆபரணங்களையும் அணிந்து மிகவும் கம்பீரமாகக் காட்சியளித்தது. அது தான் சிவதத்துவமென உணர்ந்தோம். அப்படி நினைத்ததோடில்லாமல் அவர் தான் எல்லாத் தெய்வங்களுக்கும் தெய்வமானவர் என்ற உணர்வு ஏற்பட்டது. அதன் பின் மந்திரங்களால் நாராயணன் அவரைத் துதித்தார். அதனால் மகேஸ்வரனான சிவபெருமான் அந்தச் சோதிக்குள் லிங்கமாகத் தோன்றினார். அதனால் மகிழ்ந்த நாராயணன் மகாதேவனே எமக்கு நல்ல வரங்களை அருள வேண்டும் என்று கேட்டார். உடனே சிவபெருமான் எனக்குப் படைத்தல் தொழில் செய்யும் வரத்தையும், நாராயணனுக்குக் காத்தல் தொழில் செய்யும் வரத்தையும் வழங்கி எம்மை ஆசீர்வதித்தார். அத்துடன் உருத்திரனுக்கு அழிக்கும் வரத்தையும் தந்தருளினார். இவை தேவ சம்பந்தம் கொண்ட பிரகிருதி என்று சொல்லி இதில் பிரமானி என்னும் பெயருள்ள சக்தி பிரமனையும், லட்சுமி என்னும் பெயரை உடைய சக்தி விஷ்ணுவையும், காளி என்ற பெயருடைய சக்தி உருத்திரனையும் அடைந்து

அவரவருக்குடைய சக்தியாகச் செயற்பட்டு அவரவரின் தொழிலுக்கு உதவியாகச் செயற்படும் என்று சிவபெருமான் கூறினார்.

அதைக் கேட்ட விஷ்ணு "சங்கரா எனக்குத் தொழில் தேவையில்லை. தத்துவ உபதேசம் செய்து வையுங்கள்" என்று பணிவுடன் கேட்கச் சிவபெருமான் மகிழ்ந்து பரத்துவமாயும், பிரவை ரூபமாகவும் மங்களகரமாகவும் இருக்கின்ற நாத ரூபத்தை உபதேசித்தார்.

"நாதரூபம் என்பது ஓம் தத்து வமசி" என்று சொல்லப்படும் ஓங்காரத்தைக் காரணமாகக் கொண்ட ஐந்து கலைகளோடு கூடிய மந்திரமாகும். இது சிவ சம்பந்தமான மகா வாக்கியமாகும். அத்துடன் சகல ஐஸ்வரியங்களையும் அதிகரிக்கக் கூடியது. இது இருபத்து நான்கு எழுத்துக்களைக் கொண்டது. காயத்திரி ரூபமுடைய இம் மந்திரம் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு விதப் புருசாத்தங்களையும் மிருத்தியுஞ்சயம், பஞ்சாசரம், சிந்தாமணி, தட்சணாமூர்த்தி மந்திரம் என்று சொல்லப்படும் மந்திரங்களையும் கொண்டது. அதை வேண்டிப் பெற்ற விஷ்ணு மிகவும் மகிழ்ந்தார்."

சிவலிங்கத்தின் மகிமை

"இவ்வாறு சிவபெருமானால் மந்திர உபதேசத்தைப் பெற்ற நாராயணனுக்கு வேதத்தையும் கொடுத்து அதையும் உபதேசித்தார். சகல மந்திரங்களையும், அனுட்டானங்களையும் நிறைந்த அம்மந்திரங்களையும், வேதங்களையும் நாராயணன் எனக்கு உபதேசித்தார். பின்பு நாராயணன் சிவபெருமானை வணங்கி "ஆதி மூலமானவரே, சோதிமயமானவரே எப்படி உம்மை நான் வணங்க வேண்டும், எப்படித் தியானம் செய்வது, அடியேன் செய்ய வேண்டிய தியானம் எது? சங்கரனாகிய தங்களை மனிதன் எவ்வாறு அடைவான்?, பாவங்களையெல்லாம் வேரோடு அழிக்கவல்ல சிவ தத்துவ ஞானத்தை எனக்கு உபதேசித்தருளுங்கள்" என்று நாராயன் வேண்டினான்.

"அதனால் மகிழ்ந்த சிவபெருமான், "விசுவாசம் கொண்ட விஷ்ணுவே, இன்று நீ என்னைக் கண்ட கோலத்தை மனதில் இருத்தி இலிங்கத்தைத் தினமும் வணங்கிவந்தால் சகல யோகங்களையும் பெற்றுக் கொள்ளலாம். உனக்கு மனதில் குழப்பமேற்பட்டால் என்னை வணங்கு, உனது குழப்பம்யாவும் நீங்கும். இவ்வாறு வணங்கி வந்தால் வளர்பிறைச் சந்திரனைப் போல இன்பம் வளரும். இத்தோத்திரத்தால் எனக்குப் பெரு மகிழ்ச்சி உண்டாகும். பயமில்லாது மகிழ்வுடன் என்னைப் பிரார்த்தியுங்கள் அதனால் உங்களின் ஆற்றல் பெருகும், வலிமை உண்டாகும் ஏனென்றால் நாமே உங்கள் மூவராக மாறியுள்ளோம். எனது விஸ்பரூபத்தைப் போலவே எனது உருவம் மூன்றாக மாறியுள்ளது. பிரமன் எனது வலப் பக்கத்திலும், விஷ்ணு எனது இடப்பக்கத்திலும், உருத்திரன் எனது இதயத்துள்ளும் மூன்று

அவதாரமாக இருக்கிறீர்கள். அதனால் நீங்கள் எதை வேண்டினாலும் அதைக் கொடுப்பேன். என்று கூறி எம் மூவரையும் சிவபெருமான் தொட்டு ஆசீர்வதித்தார். அதனால் எனக்குண்டான பேரானந்தத்திற்கு அளவேயில்லை. அதனால் மகிழ்ந்த விஷ்ணு "ஆண்டவரே எமது பக்தி உம் மீது என்றும் நிலைத்திருக்க அருளுவதோடு எமக்குள் ஏதாவது குறைகள் இருப்பின் அதை நிறைவு செய்தருளள் வேண்டும் என்று கரங்குவித்தார்." சிவபெருமான், விஷ்ணுவின் வேண்டுதலுக்கு அருள எண்ணி, "விஷ்ணுவே, உனது பக்தியைக் கண்டு மகிழ்ந்தேன். நீயும் பிரமனும் எப்போதும் என்னைத் தியானித்துக் கொண்டிருங்கள். நீங்கள் பார்த்த சோதிலிங்கத்தைப் பூசை செய்யுங்கள். விதி முறைப்படி பூசை செய்து வந்தால் பயனடைவீர்கள். பிரமனே, நீ என்னுடைய ஆணைப்படி படைத்தல் தொழிலைச் செய் என்று கூறிவிட்டு நாராயணனைப் பார்த்து, "விஷ்ணுவே, நீ சகல சிவ ராச்சியங்களையும் காத்தருள்வாயாக. நீங்கள் செய்யும் பூசை ஆராதனைகள் என்னையும், உருத்திரனையும் வந்தடையும். ஏனென்றால் உருத்திர ரூபமும், சிவ ரூபமும் ஒன்றேயாகும். அதனால் இருவரையும் வேறு என்று எண்ணலாகாது. நானே உருத்திரனாக அவதரித்துள்ளேன். சிவரூபத்தில் இருந்து சிவாம்சமாக இலக்குமியும், சரஸ்வதியும் அவதரிப்பார்கள். அதன் பின் இச்சிவரூபம் கரிய நிமிர்த்தமாகக் காளி என்னும் பெயரில் அவதரிப்பாள். அவதரித்ததும் விஷ்ணுவே நீ லக்குமியைத் துணைவியாகக் கொள். பிரமா சரஸ்வதியைத் துணைவியாகப் பெறுவான், உருத்திரன் காளியைத் துணைவியாகக் கொள்வான். தவறாது சிவ பூசை செய்யுங்கள். சிவபூசைக்கு அன்யமாக இருப்பவர்கள் எனது கருணையைப் பெறமாட்டார்கள்." என்று சிவபெருமான் அருளினார். என்று சூத மா முனிவர் நைமி சாரணிய முனிவர்களுக்குச் சொன்னார்.

படைத்தல் ஆரம்பம்

"சூத மா முனிவரே, இனிச் சிவபெருமான் சோதி வடிவமாகத் தோன்றிய பின் என்ன நடைபெற்றதென்றும், சிவபெருமானது பெருமைகள் பற்றியும் அவர் உலகைப் படைத்த வரலாற்றையும் எமக்கு விரிவாகக் கூற வேண்டும்" என்று சௌகாதி முனிவர்கள் கேட்டனர்.

"சூத முனிவர் அதைச் சொல்லத் தொடங்க ஒரு முனிவர் மகா முனிவரே, எனக்கு ஒரு சந்தேகம் உண்டாகியுள்ளது. அதை நீக்கிய பின்பு முன்பு முனிவர்கள் கேட்ட சோதி வடிவான லிங்கத்தைப் பற்றிக் கூறுங்கள். அதாவது பிரமாவும், விஷ்ணுவும் முறையே வராகத்தின் வடிவத்தையும் அன்னத்தின் வடிவத்தை ஏன் எடுத்தார்கள்? இது தான் எனது சந்தேகம்" என்றார் அந்த முனிவர்.

"தவ ஞானிகளே, சிவனின் சித்தப்படிதான் அவ்விருவரும் அவ்விரு வடிவங்களை எடுத்தனர். சிவபெருமான், விஷ்ணுவுக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்துவிட்டு, "பரந்தாமா,

யார் உன்னை எந்த இடத்தில் பார்க்கிறார்களோ அந்த இடத்தில் உள்ள அனைவரும் மோகவயப்படுவார்கள். அதனால் உன்னை மதித்துத்துதிப்பார்கள் அத்துடன் உலகில் எப்போது துன்பங்கள் வருகின்றனவோ அப்போது நீ அத்துன்பங்களை நீக்குவாய்" என்று சிவபெருமான் கூறினார். அதனால் மிக்க மகிழ்வுற்ற விஷ்ணு "எவ்வேளையினும் நான் தங்கள் நினைவாகவே இருப்பேன். அத்துடன் என்னைத் துதிப்பவன் உம்மை நிந்தித்தால் அவனுக்கு நரகத்தைக் கொடுப்பேன்" என்றார். அதைக் கேட்ட சிவபெருமான் மகிழ்வடைந்து அவ்விடத்தில் இருந்து மறைந்தார்.

அதன்பின் பிரமதேவர் சிவனின் கட்டளைப்படி படைப்புத் தொழிலை ஆரம்பித்தார். முதலாவதாக அவர் சிவபெருமானால் முதலில் படைக்கப்பட்ட நீரில் தனது படைப்புத் தொழிலைத் தொடங்கினார். உடனே நீரில் இருபத்து நான்கு தத்துவங்களை உடைய அண்டம் உருவானது. ஆனால் அது சடத் தன்மை உள்ளதாக இருந்தது. அதனால் கவலைப்பட்ட பிரம்மா, விஷ்ணுவைத் தியானித்த வண்ணம் பன்னிரெண்டு ஆண்டுகள் கடுந்தவம் செய்தார். அதனால் மகிழ்வடைந்த விஷ்ணு பிரமாவின் முன்தோன்றி, "பிரமனே நீ விரும்பும் வரங்களைக் கேள்" என்றார்.

"ஸ்ரீகரியே சிவனின் விருப்பப்படி படைப்புத் தொழிலைச் செய்தேன். அதில் தோன்றிய அண்டம் சடமாக உள்ளது. அதற்கு உயிர் கொடுங்கள் என்று வேண்ட விஷ்ணு ஆயிரம் தலைகளும், ஆயிரம் கால்களும் கொண்ட உருவாக காட்சியளித்தார். உடனே அந்த அண்டம் உயிர்பெற்றது. அதன்பின் பிரமா சில பிள்ளைகளை உற்பத்தி செய்தார். அவர்கள் இறக்காதவர்களாக இருந்தனர். அவர் மீண்டும் சிலரைப் படைத்தார் அவர்கள் மிகவும் விருத்தர்களாக இருந்தனர். அதனால் பிரமா பெரும் வேதனைப்பட்டார். அப்போது சிவாம்சமாக உருத்திரன் தோன்றி, "பிரமாவே உனக்குத் துன்பம் நேர்ந்தால் நான் அதை அகற்றுவேன். அதனால் உனது படைப்புக்கள் இனி நல்ல படி நடக்கும்" என்று கூறி ஆசீர்வதித்து விட்டுத் திருக்கைலாயத்திற்குச் சென்றார். அதன்பின் பிரமன் சப்தரிசிகளைப் படைத்தார். நாரதனை தனது மடியில் இருந்து உற்பத்தியாக்கினார், தனது நிழலில் இருந்து கர்த்த மகரிசியையும், பெருவிரவில் இருந்து தசப்பிரஜாபதியையும் உற்பத்தி செய்தார். பிருகு முனிவரிடமிருந்து மரீசியும், மரீசியிடமிருந்து காசிபரும் தோன்றினர். காசிப முனிவரின் சந்ததியினரால் தான் இவ் உலகம் விருத்தியடைந்தது. தசப்பிரஜாதிபதிக்கு அறுபது பெண் பிள்ளைகள் பிறந்தனர். அவர்களில் பதின்மூன்று பெண்களைக் காசியப்பர் மணந்தார். அப் பெண்களின் மூலம் தேவதைகள், அசுரர்கள், தனுசான் முதலிய அனேகர் உண்டானார்கள். அப் பெண்களில் இருந்து மரங்கள், பறவைகள், பாம்புகள், மலைகள், பல்வேறு கொடிவகைகள் தோன்றின. அவை எல்லா உலகத்தையும் சென்றடைந்தன. அவை செல்லாத இடமே இல்லை. தட்சப்பிரஜா பதிபதிக்கு சதி என்ற புதல்வி இருந்தாள். அவளை தட்சன் சிவபெருமானுக்கு மனைவியாகக் கொடுத்தான். அந்தச் சதி தேவிக்குப் பவானி என்றொரு பெயர் உண்டு.

“முனிவர்களே, சதி என்பவளே மகா காளியாவாள். அவள் பின்பு பார்வதராசனின் புத்திரியாகிய பார்வதியாகப் பிறந்து சிவபெருமானைக் கணவனாக அடைந்தாள். பார்வதிக்கு காளிகா, சண்டிகா, பத்ரா, சாமுண்டா, விஜயா, ஜயா என்ற பெயர்கள் உண்டு என்று கூறியதும் சவுனகாதி முனிவர்கள் அவரை நோக்கி, “மா முனிவரே, மகா காளியின் சரித்திரத்தையும், அவள் சிவபெருமானைக் கணவனாக அடைந்த வரலாற்றையும் விரிவாக எங்களுக்குக் கூறுங்கள்” என்றனர்.

சிவபூசை விதி முறை

“மா முனிவர்களே, எந்தச் சரித்திரத்தைக் கேட்டால் பிறவித்துன்பம் நீங்குமோ அந்தச் சரித்திரக் கதையைச் சொல்கிறேன் கேளுங்கள்” என்ற சூத முனிவர். அச் சரித்திரத்தைச் சொல்லத் தொடங்கினார். “ஒரு சமயம் தக்சனுக்கும் சிவபெருமானுக்குமிடையே யார் பெரியவர் என்ற துவேசம் உண்டானது. அதனால் அகம்பாவங் கொண்ட தக்சன் சிவபெருமானையும் அவரது மனைவியான தட்சாயிணியையும் அழைக்காது மிகப் பெரிய யாகம் ஒன்றைச் செய்தான். அதனால் அவமானமடைந்த தாட்சாயிணி சிவபெருமானிடம் அனுமதி பெற்று அந்த யாகத்திற்குச் சென்றாள். அவளைக் கண்ட தக்சன் தனது மகள் என்று எண்ணாது சிவனின் மனைவி என்று நினைத்துச் சிவநிந்தனை செய்ததோடு தாட்சாயிணியை அளவுக்கதிகமாக ஏசி அவமதித்தான். அதனால் கோபம் கொண்ட தாட்சாயிணி ஓமகுண்டத்தில் குதித்துத் தனது தேகத்தை அழித்தாள். இதை அறிந்த சிவபெருமான் பெருங்கோபங் கொண்டு வீரபத்திரனை அழைத்து யாகத்தை அழிக்கும் படி கட்டளையிட்டார். வீரபத்திரன் கோபங் கொண்டு யாகத்தில் அமர்ந்து கொண்ட தேவர்களை தண்டித்தான். பலரை அழித்தான். அதனால் மனம் வருந்திய தேவர்கள் முறைப்படி சிவபெருமானை வணங்கித் தமது தவறுகளைப் பொறுத்தருளும் படி சிவபெருமானை வேண்ட, அவர் கருணையோடு அவற்றைப் பொறுத்தருளினார். தாட்சாயிணியின் தேகத்தில் உண்டான தீச்சுவாலை கிமோத்கிரியில் விழுந்தது. பின் அது இமய மன்னனான பர்வத மன்னனுக்கும் அவனது மனைவியாகிய மேனகைக்கும் புத்திரியாக அவதரித்தது. தாட்சாயிணி பர்வதத்தில் அவதரித்தமையால் பார்வதி என்ற பெயர் உண்டானது. பின் அவள் தவம் செய்து சிவபெருமானைக் கணவனாக அடைந்தாள்”

அச்சரித்திரத்தைக் கேட்டு மகிழ்ந்த முனிவர்கள், “சிவனை எப்படிப் பூசிக்க வேண்டும். அவரை முன்பு பூசித்தவர்கள் யார்? சிவன் அவளுக்கு என்னென்ன வரங்களை அளித்தார். பார்வதி தேவி செய்த தவம், அவரது திருமணம், திரிபுரவதம், இலிங்கங்களின் உற்பத்தி அவற்றின் வகை, அவற்றின் எண்ணிக்கை, இலிங்கங்களை வழிபடுவதால் ஏற்படும் பலன்கள், நான்கு வர்ணத்தாரும் தனித்தனி எப்படிச் சிவ பூசை செய்வது? என்று தாங்கள் வியாச

மகரிசியிடம் கேட்டுத் தெரிந்தீர்கள் அதை எமக்குச் சொல்லியருளள் வேண்டும்" என்று கேட்டனர்.

"ஞானசிரியர்களே, நீங்கள் கேட்டவற்றை மிகவும் சுருக்கமாக எனது புத்திக்கு எட்டியவரை சொல்கிறேன். இதை விரிவாகச் சொல்வதனால் பல ஆண்டுகள் ஆகும். ஒருவன் சிவபூசை செய்யாவிட்டால் தரித்திரம், நோய், துன்பம், எதிரிகளால் ஆபத்துக்கள் வலிய வந்து சேரும். சிவனைத் தொழுதால் எந்தத் துன்பமும் விலகிவிடும். மனிதப் பிறவி எடுத்தவர்கள் மகாதேவனான சிவனை வணங்கினால் இம்மையிலும் மறுமையிலும் பேரின்பமாக வாழ்வார். நான்கு வர்ணத்திணரும் அதிகாலையில் எழுந்து மலசலம் கழித்து, பல்துலக்கி, உடம்பை நீராடிச் சுத்தம் செய்து சூரிய உதயத்திற்கு மூன்று நாழிகைக்கு முன் மேற்கூறியவற்றை முறைப்படி செய்து தூய ஆடை உடுத்து அந்தந்த வர்ணத்தவர்கள் அவ்வர்ணத்துக்குரிய படி சந்தியா வந்தனம் செய்து சிவ பூசையைச் செய்தல் வேண்டும். முதலில் விநாயகரையும், அதன்பின் துவார பாலகர்களையும், பிறகு திக்குப் பாலகர்களையும் வணங்கிவிட்டுச் சிவபூசையைச் செய்தல் வேண்டும். அப்போது சிவபெருமானின் உருவத்தை மனதில் இருத்திப் பூசையை ஆரம்பித்தல் வேண்டும்.

முதலில் ஆசமனத்திற்காக ஏற்பாடு செய்த பாத்திரத்தையும் நவகும்பங்களையும் ஸ்தாபித்தல் வேண்டும். அவற்றைத் தர்ப்பைகளால் மூடி விட்டு அப்பாத்திரங்களுள் நீரை நிரப்புதல் வேண்டும். குறிப்பிடப்பட்ட பொருட்களை அப்பாத்திரத்தில் இட்டு, விளாமிச்சை வேரும், சந்தணமும், ஜாதி சுகந்கை, வெட்டிவேர், கற்பூரம் ஆகியவற்றைச் சேர்க்க வேண்டும். வாசனைப் பொருட்களாலும், நறுமண மலர்களாலும் தூப தீபங்களாலும் சிவனை பூசிக்க வேண்டும். சிவ மந்திரங்களை உச்சரித்தல் வேண்டும் இதன்போது சத்தியோ ஜாத மந்திரம், வாம வேதமந்திரம், ருத்திர காயத்திரி மந்திரம், அசோக மந்திரம், திரோதம் ஆகியவற்றால் சிவபெருமானைப் பூசிக்க வேண்டும். அதன்பின் அபிஷேகம் செய்தல் வேண்டும். தீர்த்தம், பால், தயிர், தேன், கருப்பஞ்சாறு, நெய் இவற்றால் அபிஷேகம் செய்யலாம். கஸ்தூரி, குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம் போன்றவற்றாலும் அபிசேகம் செய்தல் வேண்டும். பின் கும்பங்களில் வைத்த நீரால் அபிஷேகம் செய்தல் வேண்டும். இவற்றைச் சிவபெருமானின் அருகில் இருந்து செய்தல் வேண்டும்.

"அஞ்ஞானத்திக திவாக் ஞானாது -

- ஜப பூஜா திகம் யா

கிருதம் ததஸ்து ஸபலம் க்கிருபயா

- தவசங்கர"

“சிவபெருமானே எனது அறியாமையாலோ அல்லது அறிவாலோ யபம் பூசை முதலியவற்றைச் செய்தாலும் அவற்றைப் பொறுத்து ஏற்றுக் கொள்ளல் வேண்டும் என வணங்குதல் வேண்டும்”.

“சிவே பக்தி, சிவே பக்தி, சிவே

- பக்திர் பவே பவே

அந்யத சரணம், நாஸ்தி, த்வமேய

- சரணம் மம

“சிவனே, எடுக்கும் பிறவிகள் தோறும் உன்னிடம் பக்தி கொள்ள வேண்டும். எனக்கு வேறு கதியில்லை. நீயே கதி என்று சொல்லி மகேஸ்வரனை வணங்கி இசையுடன் பிரார்த்தனை செய்தல் வேண்டும். பின் மகிழ்வுடன் தனது தொழிலைச் செய்தல் வேண்டும். இவ்வாறு தினமும் சிவ பூசை செய்து வந்தால் செய்வனுக்கு நோய், கவலை, பயம், சூனியம், விஷம், நட்டம் ஆகிய எத்துன்பங்கள் வந்தாலும் சிவபெருமான் அதை நீக்கி வைப்பார். அத்துடன் வேண்டிய வரங்களை அளித்து வாழ்க்கையை இன்பமாக்குவார்.

தரகாசூரன் பெற்ற வரம்

சூத முனிவர் சொல்ல நைமிசாரண்ய முனிவர்கள், “சிவபெருமானின் திரிபுர தகனம் பற்றியும், அத்திரிபுரத்தின் வடிவம் பற்றியும், அங்கு இருந்த படையின் பலம் பற்றியும், சிவனாரது சேனைகள் பற்றியும் கூற வேண்டும்” என்றனர்.

அதற்குச் சூத முனிவர் சொன்னார், “இது புண்ணிய சரிதம் கேட்பவர்களின் துன்பங்கள், துயரங்கள் உடனே நீங்கும். மாயாயாலம் செய்வதில் வல்லமை மிக்கவனான தாரன் என்ற அசுரனுக்கு தாரசன் என்றொரு மகன் இருந்தான். அவன் மது என்ற காட்டிற்குச் சென்று இரு கைகளையும் ஒரு காலையும் மேலே தூக்கியவாறு நூறு ஆண்டுகள் கடுந்தவம் செய்தான். அதன் பின் தனது பெருவிரலை ஊன்றிக் கொண்டு நீரை மட்டும் உண்டு நூறு ஆண்டுகள் தவம் செய்தான். அதன்பின் காற்றைச் சுவாசித்துக் கொண்டு நூறு ஆண்டுகளும், அதன் பின்பு வெயிலில் நின்று நூறு ஆண்டுகளும், பஞ்சாக்கினியின் நடுவில் நின்று நூறு ஆண்டுகளும், மரங்களின் கிளைகளைப் பிடித்துக் கொண்டு நூறாண்டுகளும் அகோரமான தவம் செய்தான். அதனால் அவனது தலையில் இருந்து பெரும் அக்கினிப் பிழம்பு ஒன்று வெளிப்பட்டுத் தேவலோகத்தை எரித்தது தேவர்களும், இந்திரனும் பயந்து பிரமதேவனிடம் ஓடிச் சென்று முறையிட்டனர். அதைப்பற்றி அறிந்து கொள்வதற்காகப் பிரமதேவர் அன்னத்தில் ஏறித் தாரகாசுரன் தவம் செய்யும் இடத்திற்குச் சென்று, “பக்தனே உனது கடுமையான

தவத்தைக் கண்டு நாம் மகிழ்ந்தோம். உனக்கு வேண்டிய வரத்தைக் கேள் தருகின்றேன்" என்றார்.

பிரமதேவனைக் கண்டு மிக்க மகிழ்வடைந்த தரகாசுரன், "தேவர்களுக்கு இறைவனான பிரமதேவனே, நீங்கள் எனக்கு இரண்டு வரங்கள் தந்தருளல் வேண்டும். உம்மால் படைக்கப்பட்ட இந்த உலகில் என்னை விடப் பலசாலியாக யாரும் இருக்கக் கூடாது. அடுத்துச் சிவபெருமானின் வீரியத்தால் உண்டாகும் புத்திரன் சேனாதிபதியாக வந்து அம்பு எய்தால் தான் நான் மரணம் அடைதல் வேண்டும்" என்று கேட்கப் பிரமதேவர் அவ்வரங்களைக் கொடுத்தார்.

அதன்பின் அசுரர்கள் எல்லோரும் சேர்ந்து அவனுக்கு முடி சூட்டி வைத்தனர். அதனால் கர்வம் கொண்ட தாரகாசுரன் பிராமணர்கள், அரசர்கள், வணிகர்கள், மனிதர்கள், தேவர்கள் என ஏழு உலகங்களிலும் வாழ்வோரும் கடுமையாகத் துன்புறுத்தப்பட்டனர். அவர்களது செல்வங்கள் முழுவதையும் அவன் சூறையாடினான், தேவேந்திரனின் உச்சைஸ்ரவம் என்ற குதிரையையும், யமதர்மனின் ரத்திணமயமான தண்டமும், குபேரனின் கதையும் அவனது சொத்துக்களும், வருணனின் குதிரைகளும், காமதேனு என்ற தெய்வீகப் பசுவும் அவ்வசுரனால் கைப்பற்றப்பட்டன. அத்துடன் சமுத்திரராசன் பயந்து இரத்தினங்களைக் கொடுத்தான். சூரியன் அவனுக்குத் தேவையான நேரம் உதித்து ஒளியைக் கொடுத்தான். சந்திரன் எப்போதும் அவனருகில் இருந்து குளிர்மையைக் கொடுத்தான். வாயு தேவன் அவனுக்கருகில் இருந்து தென்றலாக வீசிக்கொண்டிருந்தான். தேவர்களுக்குக் கொடுக்கப்படும் அவி உணவும், பிதிர்களுக்குக் கொடுக்கும் காணிக்கைகளும் அவனுக்கே கொடுக்கப்பட்டன.

வானுலகம், பூவுலகம், பாதாள உலகம் ஆகிய மூன்று உலகங்களும் அவனுக்குச் சொந்தமாகின. அவனது கொடுமைகளைத் தாங்க முடியாத தேவர்கள் பிரமதேவனிடம் சென்று முறையிட்டனர்.

சிவபெருமானின் யோகம் கலைதல்

தேவர்களின் துயரத்தைக் கேட்டு அறிந்த பிரமதேவர், "தேவர்களே வரம் கொடுத்த என்னால் அவ்வரத்தைத் திரும்ப பெற முடியாது. அத்துடன் அதைச் செயல் இழக்கச் செய்யவும் முடியாது. அதனால் இமயமலையில் கொடுமுடி மீது யோக நிஸ்டையில் இருக்கும் சிவபெருமானிடம் செல்லுங்கள். பார்வதி தேவி சிவனுக்குப் பணிவிடை செய்தபடி அங்கேயே இருக்கிறாள். சிவபெருமானின் வீரியத்தில் உற்பத்தியாகும் குமரன்தான் தாரகாசுரனைக் கொல்ல வேண்டும் என்று வரம் கொடுத்து விட்டேன். அதனால் பரமசிவனின் வீரியத்தைக் கவரக் கூடியவள் பார்வதி தேவி. அதனால் அதற்கேற்ற வழிவகைகளைச் செய்யுங்கள்" என்று கூறினார். அதைக் கேட்ட தேவர்கள் தேவேந்திரனிடம் சென்று நடந்தவற்றைக் கூறினர்.

அதைக் கேட்ட இந்திரன், "சிவபெருமான் யோக நிஷ்டையில் இருக்கிறார். அவரது நிஷ்டையைக் கலைத்து காம உணர்வைச் சிவபெருமானுக்கு உண்டாக்கக் காதல் கடவுளான மன்மதனால் மட்டுமே முடியும்" என்று கூறி மன்மதனை நினைத்தார்.

உடனே மன்மதன் தனது மனைவியோடு இந்திரனின் முன்பாக வந்து, "தேவராசனே, என்னை நினைத்த காரணத்தை நான் அறிய விரும்புகிறேன்" என்றான்.

"தாரகன் என்ற கொடுமையான அரக்கன் பிரமதேவரிடம் பெற்ற சக்தி மிக்க வரத்தின் காரணமாகத் தேவர்களையும், ஏனையோர்களையும் பெருந் துன்பத்துக்குள்ளாக்கிறான். அவனை அழிப்பதனால் சிவபெருமானுக்கும் பார்வதிதேவிக்கும் ஒரு குமாரன் பிறக்க வேண்டும். சிவபெருமான் யோகநிஷ்டையில் இருக்கிறார். அந்தயோகத்தைக் கலைக்க வேண்டுமானால் அவரைக் காமம் கொள்ள வைக்க வேண்டும். அது உன்னால் மட்டுமே முடியும். காமத்திற்கான கடவுள் நீ. அதனால் மன்மத பாணங்களை அவர் மீது செலுத்தி அவரது யோகநிஷ்டையைக் கலைத்தல் வேண்டும்" என்றான்.

அதைக் கேட்ட மன்மதன் சிவபெருமான் யோகம் செய்யும் இடத்திற்குத் தனது மனைவியான ரதிதேவியுடன் வந்தான். சிவபெருமான் யோக நிஷ்டையில் இருந்தார். உமாதேவியார் அவருக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தார். கரும்பு, வில்லுடனும் மலர்க்கொத்துக்களுடனும் வந்த மன்மதன் சிவபெருமானின் இடது புறத்தில் நின்றான். அப்போது பார்வதி தேவி பல விதமான மலர்களுடன் சிவபெருமானுக்குப் பூசை செய்து கொண்டிருந்தாள். அவள் அன்று தன்னை மிகவும் அற்புதமாக அலங்கரித்திருந்தாள். அவளது கூந்தலில் அணியப்பட்ட மலர்களின் வாசம் அந்த இடத்தை அழகுபடுத்திக் கவற்சியை வெளிப்படுத்தியது. அதுதான் சிவனை வசீகரிக்கத்தக்க நேரம் என உணர்ந்து மன்மதன் வாசம் மிகுந்த மலர்களைத் தனது கரும்பு வில்லில் பூட்டி இலக்கு வைத்து எய்ய முயன்ற போது கை நழுவியதால் மலர் அம்புகள் நிலத்தில் விழக் கரும்புவில் கை தவறிச் சிவபெருமானின் மேல் விழுந்தது. அதனால் நிஷ்டை கலைந்த சிவபெருமான் சுற்றிவரப் பார்த்தார். நிலத்தில் விழுந்த கரும்பு வில்லை எடுத்து மன்மதன் மலர்களை அம்பாக்கி அவற்றுள் காமத்தை ஊட்டிச் சிவபெருமானுக்கு எய்து கொண்டிருந்தான். அதைக் கண்ட சிவபெருமானுக்குக் கடுங் கோபம் உண்டானது. அவர் கோபங் கொண்டால் நெற்றிக் கண்களில் இருந்து அக்கினி வெளிப்படும். அப்படி வெளிப்பட்ட அக்கினி வேகமாகச் சென்று மன்மதனைத் தாக்க அவன் உடனே எரிந்து சாம்பலானான்.

அதைக் கண்ட ரதிதேவி தாங்க முடியாத துயரத்தால் பெருங்குரலெடுத்து அழுதாள். மன்மதன் அம்புகள் எய்யும் வேளையில் பார்வதி தேவி தனது தோழியர்களுடன் தனது தந்தையின் அரண்மனைக்குச் சென்று விட்டாள். இந்திரன் முதலான தேவர்கள் மன்மதன் எரிந்ததைக் கேள்விப்பட்டுப் பெருந்துயரமடைந்தனர். ரதிதேவியின் அவலக் குரலைக் கேட்ட இந்திரன் மனமிரங்கித் தன்னால் தான் இப் பெருந்துக்கம் நடைபெற்றது என உணர்ந்து

தேவர்களையும் அழைத்துக் கொண்டு சிவபெருமானின் அருகில் வந்தான், "சர்வேஸ்வரனான சங்கரப் பெருமானே, பிரமாவிடம் பெற்ற வலிமையான வரத்தால் தாரகாசுரன் தேவர்களுக்கும், ஏனையோர்க்கும் பெரும் துன்பங்களைத் தினமும் மகிழ்வுடன் செய்கிறான். அதனால் தான் நாம் மன்மதனை அழைத்துத் தங்களது யோக நிஷ்டையைக் கலைக்குமாறு வேண்டினோம். தரகாசுரனை அழிப்பதனால் தங்களுக்கும் பார்வதிதேவிக்கும் ஒரு குமரன் உருவாகுதல் வேண்டும். அதற்காகத்தான் நாம் மன்மதனைக் கொண்டு மலரம்புகள் தொடுப்பித்தோம். கருணை கூர்ந்து மன்மதனுக்கு உயிர்ப்பிச்சை கொடுங்கள் பிரபு" என இந்திரன் கெஞ்சினான்.

"தேவர்களே, இரதிதேவியின் துயரம் விரைவில் தீர்க்கப்படும். தேவர்களானாலும் வினைப் பயனை அனுபவித்தே தீரவேண்டும். கிருஷ்ணன் துவாரகையில் வாசம் செய்து குமரர்களை உண்டு பண்ணப் போகிறான். அதுவரை மன்மதன் உருவமில்லாமலே இருப்பான் அதன்பின் கிருஷ்ணன் ருக்குமணியுடன் சேர்ந்து மன்மதனை உருவாக்குவான். அவனுக்கு பிரத்யும்னன் என்ற பெயர் சூட்டப்படும். கிருஷ்ணனுக்கும் ருக்குமணிக்கும் பிரத்யும்னன் பிறந்ததும் அவனைச் சம்பரன் என்ற அரக்கன் தூக்கிச் சென்று தனது நாட்டில் வளர்ப்பான். அதுவரை ரதிதேவி அவ்வசுரனது நகரில் இருக்கட்டும். அதே நகரில் அவள் மன்மதனைக் கண்டு திருமணம் செய்வாள். அதன்பின் அவ்வசுரனை மன்மதன் கொன்று தனது மனைவியுடன் துவாரகைக்குச் செல்வான். இது சத்தியம்" என்று கூறிவிட்டுச் சிவபெருமான் மறைந்து போனார். ரதிதேவி சிவபெருமானின் கட்டளைப்படி சம்பராசுரனின் நகரை அடைத்தாள்.

சம்பராசுரனின் நகரை அடைந்த ரதிதேவி மன்மதனை அடையும் நாளை எதிர்பார்த்திருந்தாள். பார்வதிதேவி தனது தந்தையான பார்வதராசனின் அரண்மனையை அடைந்து தனது அழகான உருவத்தை அலங்கரிக்காது சிவபெருமானையே தியானித்துக் கொண்டிருந்தாள். அப்போது ஒரு நாள் நாரத முனிவர் பார்வதி தேவியிடம் வந்தார். பார்வதி அவரை வணங்கி வரவேற்றுத் தான் சிவனை அடையும் வழியைக் கூறுமாறு கேட்டாள். அதற்கு நாரதர் "மாதாவே, சிவனைத் தவம் செய்தே அடைதல் வேண்டும். வேறுவழிகளால் அடைய முடியாது" என்று கூறினார்.

பார்வதியின் தவமும் திருமணமும்

பார்வதிதேவி தவம் செய்யத் தீர்மானித்து அதைப் பெற்றோரிடம் சொல்ல வெட்கப்பட்டு தனது தோழிகளை அனுப்பித் தான் தவம் செய்யப்போவதைக் கூறச் சொன்னாள். அதற்கு பார்வதராசன் சம்மதித்தார். ஆனால் தாயான மேனை உடனே சம்மதிக்கவில்லை. அவள் தனது மகளான பார்வதிக்குச் சொன்னாள். "மகளே முன்பு நாம் செய்த தவப் பயனாக நீ எமக்கு மகளாக வாய்த்தாய். உனக்கு இங்கு என்ன குறை?

அப்படித் தவம் செய்வதனால் அரண்மனையிலேயே தவம் செய். நீ முன்பு ஒரு முறை சிவபெருமானுக்குப் பணிவிடை செய்த போது எந்தப் பயனும் கிட்டவில்லை. அதனால் உனது அழகையும் வசதிவாய்ப்புக்களையும் துறக்காது மகிழ்வுடன் எம்முடன் வாழ்'' என்றாள்.

தாய் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் பிடிவாதமாகப் பார்வதி இருந்ததால் பெற்றோர் வேறு வழியின்றிச் சம்மதித்தனர். அவள் தோழிகளுடன் ஒரு மலைப்பிரதேசத்தை அடைந்து தவம் செய்யத் தொடங்கினாள். அதனால் அம்மலை கௌரீசிகரம் என அழைக்கப்பட்டது. பார்வதிதேவி மா முனிவர்களாற் கூடச் செய்ய முடியாத கடுமையான தவத்தை மேற்கொண்டாள். அத்தவத்தைக் கண்ட அருந்தவ முனிவர்கள் பெரு வியப்படைந்தனர்.

பார்வதி தவம் செய்த மலையை ஒரு சோலையாக்கினாள். பழ மரங்களும், பூ மரங்களும் நிறைந்த காய் கனிகளுடனும், பூக்களுடனும் காணப்பட்டன. காட்டு மிருகங்கள் கூட்டங் கூட்டமாகப் பயமின்றி அச்சோலைக்கு வந்து சென்றன. இவ்வாறு பார்வதி தேவி கடுந்தவம் செய்வதைக் கண்ட தேவர்கள் சிவபெருமானிடம் சென்று அவளது தவ வலிமையைக் கூறித் தாரகாசுரனை அழித்துத் தம்மைக் காப்பாற்றுமாறு இரந்தனர்.

அதைக் கேட்டு இரக்கப்பட்ட சிவபெருமான், ''தேவர்களே, மலையரசனின் மகளை நான் விரைவில் திருமணம் செய்வேன். உங்கள் துன்பங்கள் யாவும் தீரும்'' என்று கூறத் தேவர்கள் மிக்க மகிழ்வுடன் சிவபெருமனை வணங்கிவிட்டுச் சென்றனர்.

அதன்பின் சிவபெருமான் ஒரு கிழப் பிராமணர் வடிவமெடுத்துப் பார்வதிதேவி தவம் செய்யுமிடத்திற்கு வந்தார். அவரது தோற்றப் பொலிவைக் கண்டு வணங்கிய தோழியர், அவரின் வருகையைப் பார்வதி தேவிக்கு அறிவித்தனர். பார்வதி தேவி மிக்க மகிழ்வுடன் அவரை வரவேற்று உபசரித்து ஆசனத்தில் இருத்தி விட்டு அவரை வணங்கினாள். அதன்பின், ''சுவாமி தாங்கள் என்னைத் தேடி வந்தது நான் செய்த பாக்கியம். என்னை ஆசீர்வதியுங்கள்'' என்றாள்.

சிவபெருமான் அவளை ஆசீர்வதித்து விட்டு, ''அழகான பெண்ணே, நீ செய்யும் கடுந்தவத்தால் உனது அழகு முழுமையாகக் கெட்டுவிட்டது. அத்துடன் உனது அழகான ஆபரணங்களைக் களைத்துவிட்டு மரவுரிதரித்து இருக்கிறாய். பேரழகியும், அரச குமாரியுமான உனக்கு இது தகுமா..? அதனால் தவத்தைக் கைவிடு ஏன் இக் கடுந்தவம் புரிகிறாய் என்பதை எனக்குச் சொன்னால் நான் உதவி செய்வேன்'' என்றதும் பார்வதிதேவி வெக்கப்பட்டு அப்பால் சென்று தனது தோழியர்களை அழைத்துத் தான் தவம் செய்யும் காரணத்தைச் சிவபெருமானுக்குக் கூறும் படி சொன்னாள்.

அதைக் கேட்ட கிழப் பிராமணர் வியந்தவர் போலப் பார்வதியின் அருகில் சென்று, ''பார்வதி உனது தோழியர் சொன்னது உண்மையா...? உனது விருப்பத்தை அறிந்து கொண்டேன். அதனால் நான் சென்று வருகிறேன்''. என்று கிழப்பிராமணர் புறப்பட்டார்.

அதைக் கண்டு கவலை கொண்ட பார்வதிதேவி, "சுவாமி ஏன் இவ்வளவு அவசரமாகப் புறப்படுகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"மடமையான பெண்ணே, உனது இத்தவம் பயனில்லாதது தேவர்களின் தலைவன் இந்திரனை நீ விரும்பியிருக்கலாம். இல்லா விட்டால் இளவரசியான நீ பெரும் பெரும் அரசர்களை விரும்பியிருக்கலாம். அவர்களை விட்டு விட்டுப் பரதேசியாக அலைபவனை விரும்புகிறாய். ஆண்டியாய்ச் சுடலையில் நடமாடும் அவன் பெரும் மன்னனின் மகளுக்குப் பொருத்தமானவன் என்று நினைத்தாயா..? பட்டாடை அணியும் நீ புலித்தோலையும், யானைத்தோலையும் அணிபவனை விரும்பலாமா..? உனது பேரழகும் பெருங் கௌரவமும் எப்படியானது. அதை மறந்து உடுக்கை அடிக்கும் பித்தனை நீ விரும்பலாமா..? அவனின் அங்கலட்சணங்களில் எது மேன்மையானது. சுடலைப் பொடியை உடல் முழுவதும் பூசி, மண்டை ஓட்டில் பிச்சை எடுக்கும் ஒரு கபோதியை நீ விரும்பலாமா..?" என்று கிழப் பிராமணர் சிவனை நிந்தனை செய்து கொண்டிருந்தார்.

அவற்றைக் கேட்ட பார்வதி தேவிக்கு அடக்க முடியாத கோபம் வந்தது. "சிவ நிந்தனை செய்யும் கிழவா, இனியும் உனது கீழான பேச்சைக் கேட்க நான் தயாரில்லை. பிராமணர் என்றமையால் உமக்கு மதிப்புக் கொடுத்து வணங்கினேன், பேசினேன் நீர் பெருமைகள் பலவும் கொண்ட சிவனை நிந்திக்கும் துரோகி, வஞ்சகர் எனது சிவனார் நிர்க்குணக்காரணத்தால் சகுனராகவும், நிர்க்குணராகவும் விளங்குகிறாரே தவிர, அவருக்குப் பிறவி ஏது? சாதி ஏது? சகலவற்றிக்கும் பிறப்பிடமானவர். வேதங்களை மகாவிஷ்னுவுக்கு வழங்கியவர். பூரணத்து வமான அவருக்கு வித்தைகளால் ஆகவேண்டியவை என்ன? அவருக்கு பிறப்பு இல்லை, இறப்பும் இல்லை. அதனால் பிரகிருதி அவரிடமிருந்தே தோன்றியது. கெடுகாலம் வந்தவனுக்குத்தான் சிவநிந்தனை செய்யும் துணிவு உண்டாகும். துன்மதியுள்ளவனான நீ வேதங்களைப் பற்றி அறியாத கிழவன். அந்தப் பெருமானுக்குச் சேவை செய்வது இன்பமானது. அவரை வணங்குவோர் சகல ஐஸ்வரியங்களையும் பெறுவர். அவரை வணங்கினால் பிறவி அறும். நீர் சாம்பலைப் பூசுவதாகச் சொன்னீர், அவர் நடனமாடிய பின் தேவர்கள் அனைவரும் ஏன் சாம்பலை அணிந்து கரங்கூப்பித் தொழுகின்றனர்..? ஏனையோருக்கு அவர் எப்படி இருந்தாலும் எனது கண்களுக்கு அவர் புனிதராகவும் பெருமைமிக்கவராகவும், சகல வல்லமை பொருந்தியவராகவும் காணப்படுகின்றார். சிவநிந்தை செய்பவன் பெரும் பாவத்தை அடைவான். அதுபோல அதைக் கேட்பவனும் பெரும் பாவியாவான். அதனால் உம்மோடு பேசி நான் பாவத்தைத் தேடாது செல்கிறேன்." என்று கூறித் தோழியர்களுடன் புறப்பட்டாள். அப்போது சிவபெருமான் பெருமகிழ்வுற்றுத் தனது சுய உருவைக் காட்டினார்.

பார்வதி சிவனின் பூரணமான வடிவத்தைக் கண்டு பெருமகிழ்வு கொண்டு அவரை வணங்கினாள், "பார்வதி உனது கடுந்தவத்தைக் கண்டு மிக்க மகிழ்வடைந்தமையால் தான்

இங்கு வந்து உன்னைச் சோதிப்பதற்காக உன்னுடன் தர்க்கம் செய்தேன்'' என்றார். பார்வதிதேவியின் மகிழ்விற்கு அளவேயில்லை அவள் சிவபெருமானின் பாதங்களைப் பிடித்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள். அதனால் மகிழ்ந்த சிவபெருமான், முறைப்படி உனது திருமணம் நடைபெறும்'' என்று கூறி விடை பெற்றார்.

பார்வதி தேவி தனது தோழிகளை அழைத்துக் கொண்டு தனது தந்தையின் அரண்மனைக்குச் சென்றாள். சிவபெருமான் காசிக்குச் சென்று சப்தரிசிகளை நினைத்தார். உடனே சப்தரிசிகளும் அவர் முன் வந்து வணங்கினர், ''முனிவர்களே உங்களை நான் இங்கே வரும்படி நினைத்தமைக்குக் காரணம் பிரமதேவனைக் குறித்துத் தவம் செய்த தாரகாசுரன் வலிமையான வரங்களைப் பெற்றமையால் தேவர்களைத் துன்புறுத்துகின்றான். அதனால் நான் என்னை அடையக் கடுந்தவஞ் செய்த பார்வதி தேவியின் தந்தையாகிய பார்வதராசனிடம் சென்று பார்வதிதேவியை நான் திருமணம் செய்ய வேண்டிய நிலையைக் கூறி அதற்கான ஆயத்தங்களைச் செய்யுங்கள்'' என்றார்.

சப்தரிசிகள் அதைக் கேட்டு அளவில்லாத மகிழ்ச்சியடைந்து பார்வதராசனின் அரண்மனைக்குச் சென்றார்கள். அவர்களைக் கண்ட பார்வதராசன் மிக்க மகிழ்வுடன் அவர்களை வணங்கி வரவேற்று ஆசனத்தில் இருத்தினான்.

''மன்னவனே, நீ பெரும் பாக்கியவான். உலகின் தலைவனான சிவபெருமான் உனது மகளை விரும்பித் திருமணம் செய்ய விரும்புகிறார். அதைத் தெரிவிக்கத்தான் நாம் வந்தோம் என்றார். அதைக் கேட்டு மகிழ்ந்த பார்வதராசன் தனது மனைவியான மேனையுடன் கதைத்து விட்டுத் தனது சம்மதத்தைத் தெரிவித்தான். அதனால் மகிழ்ந்த சப்தரிசிகள் தாம்பூலம் மாற்றித் திருமணத்தை நிட்சயம் செய்து விட்டுத் திரும்பினர்''.

மறுநாள் தேவர்கள் அனைவரும் திருமணத்திற்குப் புறப்பட்டு திருக்கைலைக்கு வந்தார்கள். வந்த தேவர்கள் சிவபெருமானை அலங்கரித்தனர். சிவனாரின் மகுடத்தில் சந்திரன் அமர்ந்தான். நெற்றிக் கண் திலகமானது, காதில் பொற்குண்டலங்களை அணிந்தனர், விபூதி சந்தணமாயிற்று, யானைத்தோல் பட்டு பீதாம்பரமாயிற்று, பாம்புகள் நவரத்தின மாலைகளாயின. மாப்பிள்ளைக் கோலம் பூண்ட சிவபெருமான் சர்வாபதனாலங்காரராக விளங்கினார். கணங்கள் வாத்தியங்களை முழக்கினர், பிரமதேவர் அன்ன வாகனத்தில் வந்து இறங்கினார். மகாவிஷ்ணு கருட வாகனத்தில் வந்தார். இந்திரன் முதலிய தேவர்கள் தத்தமது வாகனங்களில் வந்து சேர்ந்தனர். அட்டவசுக்கள், துவாதச ஆதித்தர்கள், முனிவர்கள், கங்கை முதலிய நதிகள், சப்த சமுத்திரங்கள், காந்தர்வர்கள், தேவதாசிகள், நாகர்கள் முதலிய அனைவரும் சர்வாலங்காரங்களோடும் தத்தமது பயிவாரங்களோடும் சிவபெருமானது திருமணத்திற்கு வந்து சேந்தனர்.

சிவபெருமான் இடபவாகனத்தில் இமயமலையை நோக்கிப் புறப்பட்டார். அவ் ஊர்வலத்தில் தேவர்கள் அனைவரும் முன் செல்ல, வாத்தியங்கள் முழங்க, சப்தரிசிகள்

ஆசீர்வதிக்க, பாநுகம்பன் சங்கத்வனி செய்ய, காணாசூரன் குடவு அடிக்க, நந்திதேவர் பொற் பிரம்புடன் முனிவர் கூட்டத்தை விலக்கி கொண்டு முன்னே செல்ல, இந்திரன் காளாஞ்சி ஏந்த, ஈசானன் அடப்பை தாங்க, வாயு தேவன் சால வட்டம் வீச, அக்கினி தூபம் ஏந்த, வருணன் பூரண கும்பம் தாங்க, நிருதி கண்ணாடி ஏந்த, குபேரன் நவநதிகள் சிந்தயமன் கஞ்சுகத் தொழில் புரிய, நாகராசன் மாணிக்க தீபங்கள் ஏந்த, வேதங்கள் திருவடியைச் சுமக்க கங்கையும், யமுனையும் கவரி வீச, குண்டோதரன் குடை பிடிக்க பிரமாவும் விஷ்ணுவும் இருபக்கமும் கை குவித்து வரச் சர்வ அலங்காரங்களுடன் சிவபெருமான் பர்வதராசனின் அலங்கார மண்டலத்துள் வந்தார்.

பர்வதராசனின் மனைவியான மேனை அரண்மனையின் உப்பரிகையில் நின்று மாப்பிளையுடன் வருவோரைப் பார்த்து இவர்களில் யார் சிவபெருமான் என அடையாளம் காண முடியாது தவித்தாள். தேவர்கள் எல்லோரும் நானாவித அலங்காரங்களுடன் வந்தனர். அவர்களில் விசுவாசு என்ற காந்தவராசன் மிக்க அலங்காரங்களுடன் தேவசபையின் புடை சூழ வந்து கொண்டிருந்தான். அவனின் அழகையும் அலங்காரத்தையும் கண்டு திகைத்த மேனை, நாரதரிடம் சென்று அவரா சிவபெருமான் என்று கேட்க நாரதன் குலுங்கிக் குலுங்கிச் சிரித்து விட்டு. அவர் மாப்பிள்ளையல்ல சிவ சன்நிதியில் சங்கீதம் பாடுபவன் என்று மீண்டும் சிரித்தார். பின்பு அவள் குபேரனைக் கண்டு மகிழ்ந்து குபேரன்தான் சிவபெருமான் என நினைத்தாள். குபேரனின் பின் வருணன் வர அவன்தான் சிவபெருமான் என நினைத்தாள். பின் இந்திரன் சர்வ அலங்காரங்களுடன் வர அவன் தான் சிவபெருமான் என நினைத்தாள். அவர்கள் எவரும் சிவபெருமான் அல்ல என்று நாரதர் சொல்லிக் கொண்டு வந்தார். இப்படியாக ஒவ்வொரு தேவர்களையும் அவள் சிவபெருமானா என்று கேட்க நாரதர் இல்லை இல்லை என்று சொல்லியவாறு வந்தார். அதன் பின் சிவபெருமான் பூத கணங்களுடன் வர, "இவர்தான் உங்கள் மாப்பிள்ளை சிவபெருமான்" என்றார்.அதைக் கேட்டதும் மேனை திடுக்கிட்டு மயங்கி விழுந்தாள். சிறிது நேரங்கழித்து மயக்கம் தெளிந்து எழுந்த மேனை ஆத்திரத்துடன் நாரதரையும், பார்வதிதேவியையும் வாயில் வந்தபடி ஏசினாள். சப்தரிசிகளையும் திட்டினாள். அவர்களின் நீண்ட தாடிகளை அறுப்பேன் என்றாள். நாரதரே சிவபெருமானை எனக்குப் பிடிக்கவில்லை. இவருக்காகத் தானா அவள் கடுந்தவம் புரிந்தாள். என்று பெருங்குரலெடுத்து அழுதாள். அப்போது பிரமதேவர் அங்கு வந்தார். "மேனை நான் சொல்வதைக் கேள். சங்கரனான சிவபெருமான் உலகங்களைப் படைத்தவர். சங்கரிப்பவர். நீ அவரது பெருமைகளை அறியாது துன்பப்படுகிறாய்" என்றார்.

"சுவாமி எல்லோருமாகச் சேர்ந்து என்னை ஏமாற்றப் பார்க்கிறீர்கள். எனது மகளின் அழகு வாழ்வு யாவும் பாழாகிவிட்டது. ஒரு விகார ஆண்டிக்கு எனது மகளைத் திருமணம் செய்து கொடுப்பதை விட அவளைக் கொல்வது மேலானது" என்று கோபத்துடன் கத்தினாள் மேனை.

விடயத்தைக் கேள்விப்பட்டதிக்குப் பாலகர்களும், தேவர்களும், முனிவர்களும், நாரதரும் ஏனையோரும் சிவபெருமானின் பெருமைகளை எடுத்துக் கூறியும் அவள் சம்மதிக்கவில்லை. பர்வதராசன் அங்கு வந்து மேனையின் அறியாமையைப் போக்க முயன்றான். "நாரதா சிவனுக்கு எனது மகளைக் கொடுக்கமாட்டேன். அதிலும் பார்க்க அவளை ஒரு பாறையில் கட்டிக் கடலில் தள்ளி விடுங்கள்" என்று மூர்க்கத்தனமாகக் கூறினாள். அப்போது அங்கு வந்த பார்வதிதேவி தயாரின் அற்ப புத்தியை எண்ணித் துயரப்பட்டாள், "அம்மா, இவ்வாறு ஏன் பேசுகிறாய் உலகில் உள்ள தேவர்களுக்கெல்லாம் தலைவர் அவர். அத்துடன் அவர்கள் வணங்கும் கடவுளும் அவர் தான். சர்வலோகங்களையும் படைத்துக் காப்பவர். பிறப்பு, இறப்பு இல்லாதவர். இங்கு திருமணத்திற்கு வந்தவர்கள் எல்லோரும் அவரது சேவகர்கள். அப்படியிருக்க நீ ஏன் அவரை வெறுக்கிறாய்?. அவரில் பார்க்கப் பெரியவர் யாராவது இருந்தால் எனக்குச் சொல்" என்றாள்.

அப்போது அங்கு வந்த மகாவிஷ்ணு, "மேனா பிதிர்களுக்கு மாயை புத்திரி, தர்மத்திற்கு ஆதாரமான பர்வதராசனின் மனைவியான நீ தர்மத்திற்கு முரனாகப் பேசுகிறாய். சிவபெருமானின் பெருமைகளை அறியாததால் தான் இவ்வாறு பேசுகிறாய். சிவனின் பெருமைகளை வார்த்தைகளால் கூறி முடிக்க முடியாது. நாமெல்லாம் அவரின் தொண்டர்கள். அனைவரும் இறைவனாக வணங்கும் சிவபெருமானை உன்னைத் தவிரக் குறை சொன்னவர் யாருமில்லை. உலகெங்கும் உலகாக வியாபித்திருக்கும் சிவபெருமானே காரியமும், காரணமுமாக இருப்பவர். உலகில் விளங்குகின்ற அனைத்தும் சிவபெருமானே. உண்மை தெரியாதவர்கள் தான் உலகம் சிவனின் இரண்டாவது தோற்றம் என்கின்றனர். ஆனால் ஞானிகள் அனைத்தும் சிவம் என்கின்றனர்" என்றபோதும் மேனை திருப்திப்படாததால் நாரதர் சிவபெருமானிடம் சென்று மேனையின் இயல்பைக் கூறினார். அப்போது சிவபெருமான் கண்டோர் மோகிக்கத்தக்க பேரழகனாகத் தோன்றினார். அத்தோற்றத்தைக் கண்ட மேனை திகைத்து திகிலடைந்து போனாள். அந்தப் பேரழகு அவளைக் கவர்ந்தது. "இந்தக் கோலத்தை நான் முன்பு கண்டிருந்தால் கலவரப்பட்டுக் கோவித்திருக்க மாட்டேன்" என்றாள்.

பிரம்மதேவர் மந்திர உச்சாடனம் செய்ய, மேனை கராகநீர் வார்க்க, அவரது பாதங்களைக் கழுவிய பர்வதராசன் பார்வதி தேவியின் கைகளைப் பிடித்துச் சிவபெருமானின் கைகளில் ஒப்படைத்துவிட்டு, "எனது மகளான பார்வதி தேவியை ஆகம முறைப்படி சிவபெருமானிடம் ஒப்படைத்து மகிழ்கிறேன்" என்று கூறி கன்னிகாதானம் செய்து கொடுத்தான். சிவபெருமான் மிக்க மகிழ்வுடன் பார்வதி தேவியின் கழுத்தில் மாங்கல்யம் செய்தார். கல்யாண மண்டபத்தில் அமர்ந்திருந்த அனைவரும் அவர்களை ஆசீர்வதித்தனர். திருமணத்திற்கு வந்த அவைனருக்கும் அறுவகை உணவு வழங்கப்பட்டது.

சில நாட்கள் கழியச் சிவபெருமானும் பார்வதி தேவியும் சிவகனங்களும் பார்வதராசனது அரண்மனையை விட்டுப் புறப்பட்டு கைலயங்கிரிக்குச் சென்றார்கள்.

அவர்களுடன் அயனும், அரியும், இந்திரனும், தேவர்களும், மா முனிவர்களும், ரிசிகளும் சென்றனர். எல்லா வாத்தியங்களும் இசைக்க தேவமங்கையர் நடனமாடிடத் திருவிழாக் கோலத்தோடு அவர்கள் சென்றனர்.

முப்புரங்களையும் அழித்தல்

பார்வதியின் திருமணத்தைப் பற்றிக் கேட்டுப் பரவசப்பட்ட முனிவர்கள் சூதமுனிவரைப் பணிந்து கேட்டார்கள், "மா முனிவரே, சிவபெருமான் பார்வதிதேவியைத் திருமணம் செய்த பின்பு புத்திரனைப் பெற்று தாரகாசுரனை எவ்வாறு வதம் செய்தார் என்பதை விபரமாகக் கூறுங்கள்".

"பார்வதி தேவியைத் திருமணம் செய்த சிவபெருமான் அவருடன் இல்லற இன்பங்கள் யாவற்றையும் அனுபவிப்பதிலேயே காலங்கழித்து வந்தார். இவ்வாறு பல நூறு ஆண்டுகள் கழிந்தன. தேவர்கள் அவனால் பெருந்துன்பப்பட்டனர். ஒரு நாள் தேவர்கள் அனைவரும் ஒன்று கூடி அக்கினி பகவானைச் சந்தித்துத் தாம் பெறும் துன்பங்களை மிக்க வருத்தத்துடன் கூறினர். அதனால் வருந்திய அக்கினி தேவன் தேவர்களின் துன்பங்களை நீக்குவதற்காக ஒரு புறா வடிவம் எடுத்துச் சிவபெருமானும் பார்வதி தேவியும் தங்கியிருந்த அந்தப்புரத்துக்குள்ப் புகுந்தான். அதைக் கண்ட சிவபெருமான், "யாரடா கபோதி வடிவில் வந்திருப்பவன். எனது வீரியத்தை இவனே தாங்கட்டும்" என்று கூறித் தனது வீரியத்தை விட்டார். புறா வடிவில் இருந்த அக்கினி தேவன் அவ்வீரியத்தை வாயில் கௌவிக் கொண்டு பறந்து சென்றான். அதன் வெப்பத்தைத் தாங்க முடியாத அக்கினிதேவன் அதைக் கங்கையில் விட்டான். அந்த வெப்பத்தைக் கங்கையாலும் தாங்க முடியாமற் போகவே கங்கை அதைத் தருப்பைப் புல்லில் விட்டது. அத்தருப்பைப் புல்லில் அழகான குழந்தை வடிவில் திருமுருகன் தோன்றினார். அப்போது அங்கு வந்த ஆறு இராச கன்னிகள் அக் குழந்தைகளைக் கண்டு என் குழந்தை இது என் குழந்தை இது என்று ஆறு கன்னிகளும் மிக்க மகிழ்வுடன் கூறி அக் குழந்தைக்குப் பாலூட்டிய போது குமாரக் கடவுளான முருகப்பெருமான் ஆறு முகங்களோடு ஆறு கன்னியர்களிடமும் பால் குடித்தார். இதனால் முருகப் பெருமானுக்கு சண்மாதுரன் (ஆறு பெண்களிள் புதல்வன்) என்றும் ஆறுமுகன் என்றும் பெயர் உண்டானது.

ஆறுமுகப் பெருமான் கார்த்திகைப் பெண்களிடம் வளர்வதை அறிந்த நாரத முனிவர் அதைத் தேவர்களிடம் கூறத் தேவர்கள் அனைவரும் மகிழ்ந்து தமது துன்பங்கள் தீரப்போவது உறுதி என்றென்னிச் சிவபெருமானிடம் சென்று முறையிட்டனர். சிவபெருமானின் விருப்பப்படி தேவர்கள் முருகப்பெருமானைத் தமது சேனாதிபதியாக ஏற்று தாரகாசுரன் மீது படையெடுத்துச் சென்று போர் முரசு கொட்டினர். தனது தலை நகரான சேனா புரத்திற்குத் தேவர்கள் படையெடுத்து வந்ததை அறிந்த தாரகாசுரன் பெருங்கோபம் கொண்டு பெரும் படையுடன் வந்து முருகப்பெருமானோடு சண்டை செய்தான். முருகப்பெருமான் தனது

வலிமையினால் ஓரிரு நிமிடங்களில் தாரகாசுரனையும் அவனது அசுரப் படைகளையும் அழித்தார். அதனால் மகிழ்ந்த தேவர்கள் சிவபெருமானிடம் சென்று அவரை வாழ்த்தி வணங்கினர்". என்றார் சூத முனிவர்.

அதன்பின் முனிவர்கள் சூத முனிவரைப் போற்றிப் புகழ்ந்து வணங்கி, "மா முனிவரே, தாரகாசுரனை வதம் செய்த பின்பு நிகழ்ந்த சம்பவங்களை எமக்குக் கூறும்" என்று கேட்டனர்.

"முனிவர்களே, தாரகாசுரனை முருகப்பெருமான் கொன்றதால் அவனது புத்திரர்களான வித்யுன் மாலி, தாரகாசன், கமலாசன் ஆகிய மூவரும் கடுந்தவம் செய்யத் தொடங்கினார்கள். ஒற்றைக்காலில் நின்றும், தலைகீழாக நின்றும், கைகளை மேலே உயர்த்தி நின்றும் பல நூறு வருடங்கள் பிரமாவை நோக்கித் தவம் செய்தனர். அப்போது பிரமதேவன் அவர்கள் முன் தோன்றி, "இக் கொடிய தவத்தை எதற்காகச் செய்கிறீர்கள்" என்று கேட்டார்.

அதற்கு அவர்கள், "படைத்தற் கடவுளே நாம் எண்ணிய இடத்திற்குச் செல்லவும், சஞ்சாரம் செய்யவும், பொன், வெள்ளி, இரும்பு ஆகியவற்றால் ஆன மூன்று நகரங்கள் வேண்டும். அவை ஆயிரம் வருடங்களுக்கொருமுறை ஒன்று கூட வேண்டும். அப்போது ஒரே அம்பால் அம் முப்புரங்களையும் அழிக்க வல்லவன் எவனாவது இருந்தால் அவனால் மட்டுமே எம்மையும் நாம் செல்லும் முப்புரங்களையும் அழிக்க முடியும் என்ற வரத்தை எமக்கு அளிக்க வேண்டும்" என்றனர்.

அதற்கு உடன்பட்ட பிரமதேவர் அவர்கள் கேட்ட வரத்தை அருளிவிட்டு மறைந்து போனார். உடனே அவர்கள் கேட்ட அம் முக் கோட்டைகளும் அவர்களை வந்தடைந்தன. பொன்னால் அமைந்த நகரத்தை தாரகாசுரன் பெற்றுக் கொண்டான். வெள்ளிப்பட்டணத்தை கமலாகரன் பெற்றுக் கொண்டான். இரும்பாலான பட்டணத்தை வித்தியுன்மாலி பெற்றுக் கொண்டான். அத்திரிபுரங்கள் சகல வசதிகளையும் கொண்ட ஒரு பெரிய நகராக இருந்தது. அதன் அழகும், ஒளியும் தேவர்களை அச்சுறுத்தின அப்புரங்களில் ஒன்று வந்து நின்றால் அவ்விடம் சூரியப் பிரகாசமாக இருக்கும். தேவர்களும், முனிவர்களும் அதன் ஒளியின் தன்மையால் கண்களை திறக்க முடியாது அவதிப்பட்டனர். அம்முப்புரங்களும் மூன்று அசுரர்களும் விரும்பிய இடமெங்கும் அவர்களைச் சுமந்து சென்றன. அம் மூன்று கோட்டைகளும் தரித்து நிற்குமிடங்களில் உள்ள பலகோடி சீவராசிகள் அதற்குள் நசியுண் மாண்டன. அதனால் தேவர்களும், முனிவர்களும் பிரமதேவரிடம் சென்று அவரை வணங்கித் தாம் அனுபவிக்கும் துன்பங்களை மிகவும் கவலையோடு எடுத்துரைத்தனர்.

அதைக் கேட்டுக் கவலை அடைந்த பிரமதேவர், "தேவர்களே, நான் கொடுத்த வரத்தை என்னால் மீளப்பெற முடியாது. ஆகையால் கருணா மூர்த்தியான சிவபெருமானிடம் சென்று முறையிடுங்கள். அவர் கட்டாயம் அம் மூவரையும் அழித்து உங்களையும் காப்பார்" என்றார்.

தேவர்கள் மிக்க மகிழ்வுடன் சிவபெருமானிடம் சென்று முறையிட்டனர். சிவபெருமான், "தேவர்களே திரிபுரங்களையும் ஆட்சி செய்யும் மூன்று அரக்கர்களும் புண்ணியசீலர்கள். ஆதலால் என்னால் சங்காரம் செய்ய முடியாது. அதனால் மகா விஷ்ணுவிடம் சென்று எனது கட்டளையைச் சொல்லுங்கள்" என்றார். அதனால் தேவர்கள் விஷ்ணுவிடம் சென்று சிவனிட்ட கட்டளையைக் கூறினர். அதைக் கேட்ட விஷ்ணு, "உங்களது நிலையை எண்ணிக் கவலையாக இருக்கிறது. அவர்கள் புண்ணியசீலர்கள் அதனால் என்னால் அவர்களை அழிக்க முடியாது. அவர்களை அழிக்கச் சிவனின் உதவி தேவை. அதனால் நீங்கள் முறைப்படி சிவலிங்கத்தைப் பூசியுங்கள். யாகங்களை செய்யுங்கள், மூன்று அசுரர்களும் மிகத்தீவிரமாகச் சிவபூசை செய்பவர்கள். அதனால் அவர்களை அழிக்கும்படி சிவபூசை செய்யுங்கள்" என்றார்.

தேவர்கள் துன்பப்படுவதைப் பொறுக்க முடியாத மகாவிஷ்ணு தனது மாயையால் ஒரு புரிசனை உண்டாக்கினார். அவரின் முன் தோன்றிய அப் புரிசன் மகா விஷ்ணுவை வணங்கி நின்றான். "நீ எனது உடலில் இருந்து தோன்றியமையால் எனது கட்டளைப்படி நடத்தல் வேண்டும். இவ் உலகில் உண்மையான வேதங்கள், சாத்திரங்கள் யாவும் பொய் என்றும் சொர்க்கம் நரகம் என்பன இல்லை என்றும் பிரசாரம் செய்தல் வேண்டும். தோன்றுதல், மறைதல், வசியம், அவசியம், சிநேகம், விரோதம் முதலிய விசித்திரவித்தைகள் யாவும் உனக்குக் கைகூடும் என்று கூறி அவற்றை அவனுக்குக் கற்பித்து விட்டு நீ திரிபுரங்களுக்குச் சென்று அங்கு வசிக்கும் அசுரர்களை உனது மாயவித்தையால் மயக்கி அவர்களுக்கு நான் உனக்குக் கற்பித்தவற்றைக் கற்பித்து அவர்களது புண்ணியப் பலன்களை உனது வித்தையால் விலக்கி, திரிபுரங்களும் நாசமாகும்படி செய்தல் வேண்டும்" என்று அந்த மாய புரிசனுக்குக் கட்டளையிட்டு அவ்வசுரர்கள் உனது வாதத்திறமையால் கவரப்பட்டு உவர் நிலத்தை அடைந்து கலியுகம் வரும்வரையில் இருந்து கலியுகம் வந்த பிறகு உனது சீடர்களுக்கு நான் உனக்குப் போதித்ததைப் போதித்து விருத்தி செய் இதை முறைப்படி நீ செய்தாயேயானால் நீ எனது பதவியைஅடைவாய்" என்று ஆசீர்வதித்தார். அதைப் பணிவுடன் ஏற்ற அவன் நான்கு சீடர்களைப் படைத்து அவர்களுக்கு அவ்வித்தைகளைப் போதித்தான். அவர்களை அழைத்துச் சென்று மகாவிஷ்ணுவைப் பணிந்தான்.

மகாவிஷ்ணு அவர்களின் கையைப் பிடித்து, "உனது சீடர்களை உன்னைப் போல நினைத்துக் காப்பாற்று" என்று கூறி அவர்களுக்கு பூஜ்யன், ருஷி, பதி, ஆசார்யன், உபாத்தியாயன் எனப் பெயரிட்டு சத்துருக்களை ஜெயிப்பவன் என்ற பெயர் உனக்கு உண்டாகுக" என்று ஆசீர்வதித்தார். அதன்பின் நாரதர் மகாவிஷ்ணுவைச் சந்திக்கச் சென்றபோது, "நாரதா நான் மாயாரூபியைச் சிருட்டித்து அவனுக்கு நான்குசீடர்களையும் உண்டாக்கி முப்புரங்களுக்கு அனுப்பியுள்ளேன். நீ அங்கு சென்று அவர்களுக்கு உதவி செய்" என்றார். அதனால் நாரதர் அந்த மாயாரூபியையும் சீடர்களையும் சந்திக்க முப்புரங்களுக்குச் சென்றனர்.

நாரதர் முதலில் வித்தியுன் மாலியைக் கண்டு, "அரசே, இவர் மகாபுத்திரமான். சகலதும் அறிந்தவர். முனிவர்களும், ரிசிகளும் இவரிடம் உபதேசம் பெற்றமையால் நானும் பெற்றேன். விருப்பமானால் நீயும் பெற்றுக்கொள். அதனால் பல்வேறு விதமான பாக்கியங்கள் உனக்குக் கிடைக்கும்" என்றார்.

அதைக் கேட்ட மாயரூபி, "அரசே நான் சொல்பவற்றைக் காரணம் கேட்காது செய்தல் வேண்டும்" என்று சொல்லும் போது வித்தியுன்மாலி, தங்கள் கட்டளையை மீறமாட்டேன்" என்றார். உடனே மாயரூபி வித்தியுடன்மாலிக்கு மந்திர உபதேசம் செய்து தீட்சை அளித்த மாயரூபி, "அரசே இத்தீட்சை உனது நகரில் வாழும் அனைவர்க்கும் வழங்கவேண்டும். அதை எனது சீடர்கள் செய்வார்கள்" என்றதும் சீடர்கள் அங்கு வாழ்ந்த அனைவருக்கும் தீட்சை அளித்துச் சமண சமயத்தைப் பரப்பத் தொடங்கினர்.

அதைக் கேட்ட வித்தியுன்மாலி, "பெரும் புண்ணியவனான தாங்களே இவரிடம் உபதேசம் பெற்றமையால் நானும் பெறவிரும்புகிறேன்" என்றான்.

அதை அறிந்த நாராயணன், நான்முகன், இந்திரன் முதலிய தேவர்கள் சிவபெருமானைச் சந்தித்து அவரை வணங்கி மகிழ்ந்தனர். பின் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். தேவர்களது ஆரவாரச் சத்தத்தைக் கேட்டுக் கோபங் கொண்டகும்போதரன் தனது கையில் இருந்த தண்டத்தால் தேவர்களைத் தாக்கினான். அதனால் கலவரமடைந்த தேவர்கள் அலறியபடி ஓடிச் சென்று விஷ்ணுவை அதற்கான காரணத்தைக் கேட்டனர். அதற்கு விஷ்ணு சொன்னார், "நீங்கள் ஒழுங்காகச் சிவபூசை செய்யாததால் தான் இத் தீங்கு ஏற்பட்டது. தேவர்களே முதலில் பிரணவத்தை உச்சரியுங்கள். நம என்பதைப் பிறகு கூறிச் சிவாய என்பதை இறுதியில் சுபம், சுபம் குரு, குரு என்று மேல் சிவாய என்றும் நம என்றும் மீண்டும் பிரணவத்தைச் சேர்த்து சிவகடாச்சம் கிடைக்கும் வரை ஜெபியுங்கள். இம் மந்திரத்தைக் கோடிமுறை உச்சரித்தால் சிவபெருமான் கிருபையோடு விருப்பமான காரியங்களைச் செய்தருளுவார்" என்று சொல்லத் தேவர்கள் ஓர் இடத்திற்குச் சென்று விஷ்ணு சொன்னபடி மந்திரங்களை ஜெபிக்கச் சிவபெருமான் தோன்றி, "உங்கள் விருப்பத்தைக் கூறுங்கள்" என்று கேட்கத் தேவர்கள், "எம்பெருமானே, முப்புரங்களை உடைய அசுரர்களின் கொடுமைகளை எம்மால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவர்களை அழித்து எம்மைக் காத்தருளுங்கள்" என்றனர். உடனே விஸ்வகர்மன் என்ற தேவதச்சனை சிவபெருமான் அழைத்து இரதம், அம்பு, வில்லு ஆகியவற்றைச் செய். அவை திரிபுரங்களை அழிக்க வல்லனவாக இருத்தல் வேண்டும்" என்றார். அதைக் கேட்ட தேவர்கள் மிக்க மகிழ்வடைந்தனர்.

விசுவகர்மன் சிவபெருமான் முப்புரங்களையும் அழிக்கத்தக்க பலமுடைய தேரைச் செய்து கொண்டு வந்து பிரமதேவரிடம் ஒப்படைத்தான். அத்தேரின் வலதுபுறம் சூரியனையும், இடதுபுறம் சந்திரனையும் சக்கரங்களாக அமைத்தான். நட்சத்திரங்களால் தேரை

அலங்கரித்தான். ஆகாயத்தை முடியாகவும், மந்திரகிரி, அஸ்தகிரி, உத்தராயன் தட்சணங்களையும், சப்ரா சமுத்திரங்களையும், கங்கை முதலிய நதிகளை கொண்டு அத்தேர் அமைக்கப்பட்டது. பிரமன் சாரதியாக நியமிக்கப்பட்டான். பிரணவம் குதிரைகள் செலுத்தும் கோலாகவும் அமைக்கப்பட்டிருந்தது. அத்துடன் விந்தியமலை குடையாகவும், மந்திரமலை குடைக் கொம்பாகவும், மேருமலை வில்லாகவும், வாசுகி நாணாகவும், சரஸ்வதி நாணில் கட்டப்பட்ட மணியாகவும், விஷ்ணு பாணமாகவும், வேதங் நான்கும் நான்கு குதிரைகளாகவும், அக்கினி சல்லியமாகவும் அமைக்கப்பட்டிருந்தது. அத்தேரைக் கண்ட தேவர்கள் ஆச்சரியப்பட்டனர். இவ்வளவு பலமுள்ள தேரை அசுரர்களால் தாக்கி அழிக்க முடியாதென்று எண்ணினர்.

சிவபெருமான் கம்பீரமாக நடந்து வந்து தேரில் ஏறி அமர்ந்தார். தேவர்களும், முனிவர்களும் அவரை வாழ்த்தினர். சிவபெருமானுடன் பார்வதி தேவியும் தேரில் ஏறினாள். அப்போது திரண்டு நின்ற சிவகணங்களின் தலைவன், "மகாபிரபு, தாங்கள் நினைத்தாலே அழிய வேண்டியவை அழியும். வரங்கள் தானாகச் செல்லும். அப்படியான தகுதி படைத்த உங்களுக்கு லட்சக்கணக்கான படை வீரரும் இத்தேரும் தேவையா?" என்று கேட்டான்.

அப்போது முப்புரங்களும் ஒன்று சேர்ந்தன. அதைக் கண்ட பிரமதேவர், "முக்கண் பெருமானே, ஆயிரம் வருடங்களுக் கொருமுறை முப்புரங்களும் ஒன்று சேரவரம் கொடுத்தேன். அது இப்போது நிகழ்ந்துள்ளது. அதனால் அம்பை விடுங்கள்" என்றார். அதைக்கேட்டு சிவபெருமான் சிரித்தார். அச்சிரிப்பில் எழுந்த அக்கினி விரைந்து சென்று முப்புரங்களையும் எரித்தது.

அதனால் வியப்படைந்த பிரமதேவன், "தேவதேவா, நானேற்றிய பாணத்தை விடாமல் விடுதல் கூடாது. அதனால் அதைவிட்டு விடுங்கள்" என்றார். அதைக்கேட்ட சிவபெருமான் பாணத்தை விட அது முப்புரங்களையும் சுற்றி வலம் வந்து விட்டுச் சிவபெருமானை வந்தடைந்தது.

அதன் பின் மகாவிஷ்ணுவும் இந்திரனும், ஏனைய தேவர்களும் வந்து சிவபெருமானை வணங்கினர்.

விசுவகர்மா தந்த சிவலிங்கங்கள்

அப்போது தேவர்கள், திருமாலை வணங்கி, "நாம் தினமும் வழிபடச் சிவலிங்கங்களைத் தந்தருளள் வேண்டும்" என்று கேட்டனர். அதனால் பிரமதேவர் விசுவகர்மனை அழைத்து, "விசுவகர்மா, தேவர்களுக்கெல்லாம் அவரவரின் கௌரவத்திற்கு

ஏற்ற சிவலிங்கங்களைச் செய்து கொடு" என்று கட்டளையிட விசுவகர்மா இலிங்கங்களைச் செய்து கொடுத்தார்.

இந்திரனுக்குப் பதுமராக இலிங்கத்தையும், குபேரனுக்கு சுவர்ண லிங்கத்தையும், யமனுக்கு கோமேதகலிங்கத்தையும், வருணனுக்கு நீல லிங்கத்தையும், விஷ்ணுவுக்கு இந்திர லிங்கத்தையும், பிரமனுக்குச் சுவர்ணலிங்கத்தையும், தேவர்களுக்கும், அட்ட வசுக்களுக்கும் வெள்ளி லிங்கத்தையும், வாயு தேவனுக்குப் பித்தளை லிங்கத்தையும், பிராமணர்களுக்கும் பிராமணப் பெண்களுக்கும் படிக லிங்கத்தையும், இலக்குமிக்கு தர்மிக லிங்கத்தையும் விசுவகர்மா பிரம தேவரின் கட்டளைப்படி கொடுத்தார்.

அதன் பின் முனிவர்கள் சூத முனிவரிடம் வந்து, "பிரமதேவர் சிவபூசை விதிகளைத் தங்களுக்கு உபதேசித்தார். அதை எமக்குச் சொல்லுங்கள்" என்றனர்.

"முனிவர்களே, பூலோகத்தில் நல்ல குலத்தில் அங்கக் கேடுகள் இன்றிப் பிறப்பது அரிதிலும் அரிது. அத்தகைய அரிய பிறவியை எடுத்தோர், தம் குலத்திற்கேற்ற கடமைகளை நல்ல முறையில் செய்தல் வேண்டும். யாகங்கள் செய்வதை விடத் தீர்த்தயாத்திரை செய்வது சிறந்தது. அவற்றை விட ஜெபம் சிறப்பானது. அது தான் ஞானமார்க்கத்திற்குச் சிறந்தது. தியானம் செய்பவனுக்கு அருகில் எப்போதும் சிவபெருமான் இருப்பார். தியானம் செய்பவன் சிவலிங்கம் தனது இதயத்தில் இருப்பதாக நம்புகிறான். இந்த லிங்கம் பாஹ்யலிங்கம் ஆந்தரலிங்கம் என இருவகைப்படும். பாஹ்யலிங்கம் கண்ணுக்குப் புலப்படுவது. ஆந்தரலிங்கம் இதயத்துள் இருப்பது. கர்மயோகத்தில் இருக்கும் எல்லோரும் பாஹ்யலிங்கத்திற்கு அர்ச்சனை செய்தல் வேண்டும். ஞானிக்கு உருவ வழிபாடு வேண்டியதில்லை. பூசை செய்பவன் பூசை செய்கிறேன் என்று தெரியாது பக்திப் பரவசமாகச் செய்தால் ஞானோதயம் உண்டாகும். சிரத்தை இல்லாத பூசை எந்தப் பயனையும் தராது. சகுனப் பூசையால் நிர்க்குணமான சிவப் பிராப்த்தி உண்டாகும்".

"முனிவர்களே, கர்ம அனுட்டாணங்களைச் செய்து கொண்டு எந்தெந்த விக்கிரகத்தில் தனக்குப் பக்தி உண்டாகுமோ அந்த விக்கிரகத்திற்குப் பூசை செய்தல் வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் பாவம் ஒழியமாட்டாது. பாவம் ஒழியாவிட்டால் சித்தி உண்டாகாது. இல் வாழ்வில் இருக்கும் வரையில் பிரதிமா பூசை செய்தல் வேண்டும். அது சிவலிங்கப் பெருமானைச் சென்றடையும். சிவலிங்கத்தைப் பூசிப்பதன் மூலம் சகல தெய்வங்களையும் பூசித்த பயனைப் பெறலாம். அத்துடன் அவர்கள் விரும்பியவை யாவும் எளிதில் கிடைக்கும் என்று பிரமதேவர் எனக்குக் கூறினார்" என்றார் சூத முனிவர்.

நித்தியகருமங்கள்

சூதர் முனிவர்களுக்குச் சொன்னார் "முனிவர்களே, பிரம்ம முகூர்த்தத்தில் எழுந்து விஷ்ணுவையும் குருவையும் வணங்கி, மல சலம் கழித்து, கையைக் கழுவி விட்டுப் பல் துலக்கி முகத்தைப் பதினாறு முறை கழுவிப் பின் குளித்தல் வேண்டும். சிரார்த்த தினம், சூரிய சங்கராந்தி கிரகணம், மகாதானம் செய்யும் தருணம், புண்ணியகாலம், உபவச்தினம், அசௌச தினங்கள் இந்தச் சமயங்களில் சுடு நீரில் குளித்தல் ஆகாது. எண்ணெய் தேய்த்து நீராடவேண்டியவர்கள். ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை, வெள்ளிக்கிழமைகளை விலக்குதல் வேண்டும். அப்படியான வேளைகளில் நீராட வேண்டிய தேவை ஏற்பட்டால், ஞாயிற்றுக்கிழமையானால் பூவும், திங்கட்கிழமையானால் மண்ணும், வியாழக்கிழமையாயின் அறுகம் புல்லும், வெள்ளிக்கிழமையானால் நீரும் எண்ணையுடன் கலந்து நீராட வேண்டும். இவ்வாறான தினங்களில் நீராட வேண்டிய நிலை ஏற்பட்டால் கிரகணம் நீங்கிய தினங்களில் கடுகு எண்ணெய்யை உபயோகிக்கலாம். சாத்திரப்படி நீராடும் போது வடக்கு அல்லது கிழக்குத் திசையை நோக்கி நீராடல் வேண்டும். முதல் நாள் உடுத்த உடையையோ அல்லது இரவு உடுத்த உடையையோ அல்லது பிறர் உடுத்த உடையையோ கட்டிக் கொண்டு நீராடக் கூடாது. அதன் பின் தத்தமது குலத்திற்கேற்ற அனுட்டானங்களைச் செய்து விட்டுச் சிவபூசை செய்தல் வேண்டும;" என்றார் சூத முனிவர்.

சிவபூசை விதிமுறைகள்

"முனிவர்களே, பூசை செய்யும் பாத்திரத்தில் உள்ள நீரால் இலிங்கத்திற்கு அபிஷேகம் செய்யலாம். மகாபிஷேகம் செய்வதனால் வேறு நல்ல நீர்களாலும் அபிஷேகம் செய்யலாம். சிவபெருமானை இலிங்கத்தில் இருத்தி, சிவபெருமான் அதில் இருப்பதாக நம்பி விதிப்படி உபசாரங்கள் செய்தல் வேண்டும். அதன் பின் சிவயநம என்ற ஐந்தெழுத்தை ஓதி உபசாரங்களைச் செய்தல் வேண்டும். அதன் பின் வேத மந்திரங்களால் பஞ்சாமிர்தமும், தான் விரும்பிய பழங்கள், அத்தர், பன்னீர், சந்தனம் ஆகியவற்றாலும், நீராலும் அபிஷேகம் செய்தல் வேண்டும். தாமரை, கொன்றை, அத்தி, மல்லிகை, ரோஜா, வில்வம், தர்ப்பை, அறுகு, துளசி போன்றவற்றால் அர்ச்சிக்க வேண்டும். அதன் பின்பு ஐந்தெழுத்தை ஓதுதல் வேண்டும்.

சிவபூசைக்குரிய மலர்களும், தாமரையும்

முனிவர்கள் சூதரை வணங்கி, "மா முனிவரே, சிவ பூசையைப் பற்றித் தெளிவாகச் சொன்னீர்கள். இனிச் சிவபூசைக்கு ஏற்ற மலர்களைக் கூறுங்கள்" என்று கேட்டனர்.

சூதர் சொன்னார், "பெரும் செல்வத்தைப் பெற விரும்புவோர் தாமரை, வில்வம், சதபத்திரம், சங்க மலர் ஆகியவற்றால் பூசித்தல் வேண்டும். ஒவ்வொன்றும் இலட்சக்கணக்கில் இருத்தல் வேண்டும். தாமரை மலர்கள் இருபது கொண்டது பிரஸ்தம், சதபத்திரம் ஆயிரம் கொண்டது அர்த்தப் பிரஸ்தம், வில்வதளம் ஆயிரம் கொண்டது. பிரஸ்தம். மகாபூசையில் மலர்களைச் சமர்ப்பித்து வணங்கும் போது மலர்களை எண்ணிப் பூசிக்கலாகாது முன்பே எண்ணிவைத்து விட்டுப் பூசிக்கலாம்"

"இராஜபோகத்தை விரும்புவோர் பழுதில்லாத பத்துக்கோடி மலர்களால் லிங்கத்தைப் பூசித்தல் வேண்டும். அல்லது பத்துக்கோடி வில்வத்தைச் சந்தனத்தில் தோய்த்துப் பூசித்தல் வேண்டும். தாமரை மலர்களாலும் பூசிக்கலாம்."

"பிரதானித்துவத்தை விரும்புவோர் ஐந்து கோடி மலர்களாலும், சிறையில் இருந்து விடுதலை அடைய விரும்புவோர் இலட்சம் மலர்களாலும், நோய் குணமடைய விரும்புவோர் ஐம்பதினாயிரம் மலர்களாலும், அழகிய பெண்ணை அடைய விரும்புவோர் இருபத்தையாயிரம் மலர்களாலும், கல்வியில் விருப்பம் கொண்டோர் பன்னிராயிரத்து ஐந்நூறு மலர்களாலும், பகைவனை வெல்ல விரும்புவோர் பத்தாயிரம் மலர்களாலும் பூசிக்க வேண்டும். மாரணஞ் செய்ய விரும்வோன் இரண்டு இலட்சம் மலர்களாலும், வசியம் செய்ய விரும்புவோர் பதினாராயிரம் மலர்களாலும், முத்தியடைய விரும்புவோர் ஐந்து கோடி மலர்களாலும், ஞானம் பெற விரும்புவோர் ஒரு கோடி மலர்களாலும் அர்ச்சிக்க வேண்டும்".

"முத்தியை அடைய விரும்புவோர் லட்சம் தருப்பையாலும், தீர்க்காயுளை விரும்புவோர் லட்சம் அறுகாலும், புத்திரப்பேற்றை விரும்புபவன் லட்சம் கருவூமத்தையாலும், புகழை விரும்புபவன் லட்சம் அகத்திப்பூவாலும், சித்திமுத்திகள் வேண்டியவன் லட்சம் லட்சம் துளசியாலும், அழகான பெண்ணை விரும்புவோம் மல்லிகையாலும் பூசிக்க வேண்டும். சிவனுக்கு விருப்பமான மலர்கள் கிடைக்காவிட்டால் சண்பகம், தாழை தவிர்த்து ஏனைய மலர்களால் அர்ச்சிக்கலாம்".

"முனிவர்களே, சிவனுக்குத் தானியங்களையும் சமர்ப்பிக்கலாம். வெள்ளை நிறமுடைய முகை முறியாத அசிரியை லட்சம் சமர்ப்பித்தால் சகல சம்பத்துக்களும் கிடைக்கும். அப்படி பூசிக்கும்போது வில்வம் பழத்தையும் சேர்த்துப் படைத்தல் வேண்டும். அத்துடன் இருபது பிராமணர்க்கு உணவிட்டு நூற்றியெட்டு ருத்திர காயத்திரி மந்திரத்தைச் செபித்தல் வேண்டும்.

எள்ளைப் பதினொரு பலம் சமர்ப்பித்தால் பாவங்கள் யாவும் அழிந்து போகும். அப்போது பிராமண பூசையும் செய்தல் வேண்டும். யவை அட்சதை இலட்சம் சமர்ப்பித்தால் சுவர்கபோகம் கிடைக்கும். கோதுமை அட்சதை லட்சம் சமர்ப்பித்தால் ராசபோகம் உண்டாகும். இவற்றை விடப் பயறு அட்சதை லட்சம் இன்பம் பெருகும். உளுந்து, சாமி, தினை சமர்ப்பித்தால் அறம் பொருள் இன்பம் கிடைக்கும். இவைதவிர வேறு தானியங்களைச் சமர்ப்பித்துப் பூசை செய்யலாம். துவரை இலையைக் குங்குமம் கலந்த சந்தனத்தில் தோய்த்துப் பூசித்தால் வேண்டும் பயன்களைப் பெறலாம்" என்றார் சூத முனிவர்.

தாழம்பூ பெற்ற சாபம்

"மா முனிவரே, சண்பகம், தாழை மலர்களைப் பூசைக்கு எடுக்கலாகாது என்றீர்கள். அதற்கான காரணத்தைத் தயவு செய்து சொல்லுங்கள்" என்று முனிவர்கள் கேட்டார்கள்.

"முனிவர்களே, ஒரு காலத்தில் ஸ்ரீராமர் இலட்சுமணனோடும், சீதையோடும் வனவாசத்திற்குச் சென்றான். அவர்கள் பல்கு நதிக்கரையில் தங்கியிருந்த போது தசரதனின் சிரார்த்ததினம் வந்தது. அதைச் செய்யத் தானியங்கள் தேவை. அதனால் ஸ்ரீராமன் இலட்சுமணனை அழைத்துத் தேவையான தானியங்களை அயலில் உள்ள கிராமங்களுக்குச் சென்று வாங்கிவருமாறு கூற, இலட்சுமணன் தானியங்கள் பெறச் சென்றான். வெகு நேரமாகியும் அவன் திரும்பிவராமையால் சிரார்த்த வேளை தவறி விடும் என்பதற்காகச் ஸ்ரீராமன் புறப்பட்டுச் சென்றான். பன்னசாலையில் சீதை மட்டும் தனியாக இருந்தாள். அவள் சிரார்த்த வேளை முடியு முன் தனது கணவனும் அவனது தம்பியாகிய இலட்சுமணனும் வரவில்லையே என்று கவலையோடு இருந்தாள். பின்பு அவள் நீராடினாள் தாபசம், இங்குதி ஆகிய பழங்களைக் கொண்டு வந்து, நெருப்பிலிட்டு அவித்து விட்டுக் காத்திருந்தாள். அப்போதும் அவர்கள் வரவில்லை. அதனால் பன்னசாலையில் இருந்த சிறிதளவு மாவை எடுத்துப் பிண்டமாகச் செய்து இது எனது மாமனாரான தசரதனுக்கு அர்ப்பணிக்கின்றேன் என நினைத்தாள். அப்போது பிதிர்கள் வந்து "நாங்கள் நீ செய்த சிரார்த்தத்தில் திருப்தியடைந்தோம். மருமகளே உனது கரம் பட்ட உணவு அமிர்தமாகச் சுவைத்தது. அதனால் மிக்க மகிழ்வுற்றோம்" என்று கூறியபோது சீதை நீங்கள் யார்? என்று கேட்டாள். அப்போது, "நான் உனது மாமனான தசரதன். நீ கொடுத்த பிண்டம் என்னை மகிழ்ச்சிக்குள்ளாக்கியது" என்று சொல்ல "நீங்கள் நான் கொடுத்ததை ஏற்றுத் திருப்திப்பட்டீர்கள். இதை எனது கணவர் நம்புவாரா?" என்று கேட்டாள். அப்படியாயின் தக்க சாட்சிகளை வைத்துக்கொள் என்றார் தசரதர் அப்போது அங்கே பல்கு நதி, பசு, அக்கினி, தாழை என்பன இருந்தன. அவற்றைக் கண்ட சீதை, "நீங்கள் நால்வரும் இங்கு நடைபெற்றவற்றைக் கண்டமையால் எனது கணவன் நம்பாவிட்டால் அதற்கான சாட்சியை நீங்கள் சொல்லுதல் வேண்டும்" என்றாள். பிதிர்கள் சென்ற பின்பு ஸ்ரீராமர் வந்தார். "தேவி,

விரைவாகச் சமையலை முடி உனது மாமன் வருவார்" என்றான். சீதை நடந்தவற்றைக் கூறினாள் அதைச் ஸ்ரீராமனும் இலட்சுமணனும் நம்பவில்லை. அதனால் சீதை உங்களது தந்தை வந்து பிண்டங்களை உண்டமைக்குச் சாட்சிகள் உண்டு வேண்டுமானால் அவற்றைக் கேளுங்கள்" என்றாள்.

"ஸ்ரீராமன் அவர்களைக் கேட்ட போது அவர்கள் பயத்தால் நாங்கள் அதை அறியோம்" என்றன. இனியும் தாமதம் செய்யாது உடனே சமை என்று ஸ்ரீராமன் சீதைக்குச் சொல்லிவிட்டு சிரார்த்தத்துக்கான ஆயத்தங்களைச் செய்தார். அப்போது வானில் இருந்து ஓர் ஒலி, "புத்திரனே, ஏன் ஆவாகர்மை செய்கிறாய்? நாம் சீதை செய்த சிரார்த்தத்தால் திருப்தியடைந்தோம்." என்று கூறியது. அதையும் ஸ்ரீராமன் நம்பாததால் சூரியதேவன் ஸ்ரீராமனின் முன் தோன்றி, "வானில் ஒலித்த ஒலி உண்மையானது. உனது தந்தை வந்து உண்டதை நான் கண்டேன்" என்று கூறி மறைந்தார். அப்போது சீதை அந்தச் சாட்சிகளைப் பார்த்து, "நீங்கள் நான்கு பேரும் நேரில் கண்டவற்றை எனது கணவருக்குச் சொல்லாததால் மிக்க கோபங் கொண்டேன். அதனால் பல்கு நதியே நீ ஒருபோதும் மேலே பிரவாகமாக எழுந்து வரமாட்டாய், அது போலத் தாழம்பூவே உன்னைச் சிவபூசைக்கு யாரும் எடுக்கமாட்டார்கள், அது போலப் பசுவே நீ உண்மையை மறைத்தமையால் நீ பின்புறத்தில் யோக்கியமும் முகத்தில் அயோக்கியமும் உள்ளதாவாய், அதுபோல அக்கினியே எல்லாவற்றையும் நின்று எரிக்கும் சர்வபட்சணணாவாய் என்று சபித்தாள்" அதனால் தான் தாழம்பூவைச் சிவபூசைக்கு எடுப்பதில்லை. இனி சண்பகப் பூவின் சாபம் பற்றிச் சொல்கிறேன்" என்றார் சூத முனிவர்.

சண்பகப் பூ பெற்ற சாபம்

"முனிவர்களே, உலகங்கள் அனைத்திற்கும் இன்பத்தைக் கொடுக்கும் சிவபெருமான் கோகர்ணேஸ்வரர் என்ற திருப்பெயரைப் பெற்றுத் தென்திசையில் இருக்கிறார். ஒரு நாள் நாரத முனிவர் அங்கு வந்தார். அப்போது மலர்கள் நிறைந்த சண்பக மரம் ஒன்றையும், அதன் அருகில் மலர் பறிக்க வந்த வேதியர் ஒருவரையும் கண்டார். அவர் அவ் வேதியரைப் பார்த்து, "மறையவரே நீர் கையில் பாத்திரமேந்தி இங்கு வந்த காரணம் என்ன?" என்று கேட்டார். அதற்கு அந்த வேதியர் உண்மையைக் கூறாது, "நான் பிச்சை எடுக்கப்போகிறேன்" என்றார் பின் நாரதர் சிவபெருமானை வணங்கிவிட்டு வெளியே வந்த போது அந்த வேதியரைக் கண்டார். அவரைக் கண்ட நாரதர், "இங்கு என்ன செய்கிறீர்?" என்று கேட்டார்.

"எங்கும் பிச்சை கிடைக்காததால் போகிறேன்" என்றார். அதை நம்பாத நாரதர் செம்பகமரத்தின் அருகே சென்று, "மரமே அந்த வேதியர் எங்கே போனார்? உன்னிடமிருந்து

எத்தனை மலர்களைக் கொய்தார்”? என்று கேட்டார். வேதியர் தன்னைப் பற்றிய தகவல்கள் எதையும் கூற வேண்டாம் என்று சொன்னமையால் அந்தச் சண்பக மரம், “எனக்கு எதுவும் தெரியாது” என்றது. நாரதர் தனது ஞான திருஷ்டியால் சகலவற்றையும் அறிந்தார். பின் சிவனது சந்நிதியை அடைந்து பூசை செய்யப்பட்ட மலர்களை எண்ணிப் பார்த்தார் நூற்றியொரு மலர்கள் இருந்தன. அப்போது இன்னொரு வேதியர் மலர்களைக் கொண்டு வந்து சிவனை அர்ச்சித்தார். அதைக் கண்ட நாரதர், “வேதியரே, நீர் யார்? எதற்காகப் பூசை செய்கிறீர்? இதற்கு முன்பு பூசை செய்தவரைப் பற்றி உமக்குத் தெரியுமா?” என்று கேட்டார். அதற்கு அந்த வேதியர், “முனிவரே, நான் சதா சிவபூசை செய்து முத்தியடைய விரும்புகிறேன். அதற்காகத் தான் தினமும் வருகிறேன். முதல் பூசை செய்தவர் இராச அனுக்கிரகம் பெற வேண்டுமென்று நினைத்துத் தினமும் பூசை செய்து அதன் பயனாக அரசனிடமிருந்து பெரும் செல்வத்தைப் பெற்று அதன் கர்வத்தால் ஏனைய மறையோரைத் துன்புறுத்துகிறார். மேலும் செல்வம் பெற நினைத்துத் தினமும் நூற்றொரு சண்பக மலர்களால் சிவனை அர்ச்சித்து வருகிறார்” என்றார் அந்த வேதியர். நாரதர் உண்மையைச் சொன்ன அந்த வேதியரை வாழ்த்தி, “உனக்குக் கட்டாயம் முத்தி கிடைக்கும்” என்று ஆசீர்வதித்தார். பின் சிவபெருமானின் சந்நிதிக்கு வந்து, “சுவாமி அந்த அந்தணன் சண்பக மலரால் உங்களைப் பூசித்து இராசபோகங்களைப் பெற்று, அதனால் வந்த கர்வத்தால் ஏனையோரைத் துன்புறுத்துகிறான். இவையெல்லாம் சண்பக மலரால் அர்ச்சித்த பயன். அத்தகைய பயனை அந்தத்துட்டனுக்கு ஏன் கொடுத்தீர்கள்”? என்றார்.

அதற்குச் சிவபெருமான், “நாரதரே அது சண்பக மலர்ப் பூசையின் பயன். சண்பக மலரால் பூசை செய்தால் பூசை செய்பவர்கள் மீது எனக்குப் பெரு விருப்பம் உண்டாகிவிடும். வேண்டிய வரங்களை நான் கொடுத்து விடுவேன்” என்று சிவபெருமான் சொல்லிக் கொண்டிருக்கும் போது ஒரு பிராமண மங்கை வந்து சொன்னாள், “அந்தத் துட்டவேதியனைத் தாங்கள் தண்டிக்க வேண்டும். எமது வீட்டிலுள்ள பொருட்களையெல்லாம் அவன் அபகரித்துவிட்டான். எனது கணவர் கர்மவினைப்படி முடமாகி விட்டார். எமக்குத் திருமண வயது வந்த ஒரு பெண் இருக்கிறாள். அவளது திருமணத்திற்காக அரசனிடம் சென்று இரந்து தானம் கேட்டுப் பெற்று வந்தோம். அதையும் அந்த வேதியன் கவர்ந்து சென்றுவிட்டான். அதை நாம் அரசனிடம் சென்று முறையிட்டோம். அரசன் அதைக் கவனிக்கவேயில்லை. அதனால் சிவகங்கரா, எமக்கு நீயே துணை” என்று அழுதாள். பின் அவன் தானம் பெற்ற பொருட்களையும் எம்மிடமிருந்த பசுக்களையும் கவர்ந்து சென்று விட்டான்” என்றாள்.

“சிவசங்கரா, இந்தத் துட்டப் பிராமணன் பசுவைக் கவர்ந்து சென்றது மகாபாவம். தங்களின் பக்தனாகையால் யாராலும் எதையும் செய்ய முடியவில்லை. அதனால் தான் அரசனும் கவனிக்கவில்லை” என்றார் நாரதர். அதைக் கேட்ட சிவபெருமான், “நாரதரே நீர் எமது பரமபக்தன். அதனால் நீர் விரும்பிய தண்டணையைக் கொடும். அவன் என்னைப்

பூசிப்பதால் முன்னால் பாவத்தையும், பிற்காலத்தில் என்னை வணங்கிய பயனையும் பெறட்டும்" என்றார்.

நாரதர் சண்பக மரத்தின் அருகே வந்து, "சண்பக மரமே, உன்னிடம் தினமும் மலர்களைப் பறிப்பவன் யார்? உண்மையை மறைக்காமல் சொல்" என்றார். அதற்கு சண்பக மரம் பதில் கூறவில்லை. அதனால் கோபங் கொண்ட நாரதர், "சண்பக மரமே, நீ முன்பு பொய் சொன்னாய் இப்போ பேசமறுக்கிறாய். அதனால் இனிமேல் உனது பூக்களை யாரும் சிவபூசைக்குப் பயன்படுத்தார்" என்று கூறிய போது அந்த வேதியன் அங்கு வந்தான். அவனைக் கண்டு கோபங் கொண்ட நாரதர், "அற்பப் பயலே, சண்பக மலரால் பூசை செய்து சிவனின் அனுக்கிரகத்தைப் பெற்று அரசன் போலச் செயற்பட்டதால் நீ இராட்சகனாகக் கடவாய்" என்று சபித்தார். அதைக் கேட்டு அப் பிராமணன் நடுநடுங்கி "எனது தவறை மன்னித்து எனக்குச் சாபவிமோசனம் தாருங்கள்" என்று நாரதரின் பாதங்களைப் பணிந்தான்.

"பிராமணா, நான் சொன்னது மாறாது; அதனால் நீ ராட்சத வடிவமெடுத்து அலைந்து திரிவாய். அப்போது ஸ்ரீ ராமரின் தரிசனம் கிடைத்தது. அவரால் மரணமடைந்த பின்பு சிவனின் அருளால் திவ்விய உருவம் அடைவாய்" என்றதும் அவன் விராதன் என்ற அசுரனானான். அதனால் தான் சிவபூசைக்குச் சண்பகமலரை எடுப்பதில்லை" என்றார் சூதமுனிவர்.

கணபாலனின் அவதாரம்

"மகாமுனிவரே, இதுவரை நாங்கள் கேட்ட விடயங்களை விளக்கினீர்கள். இனிக் கணபதியின் உற்பத்தி, அவரது பெருமைகள் பற்றிக் கூறுங்கள்" என்று முனிவர்கள் கேட்கச் சூதமுனிவர் அதைக் கூறலானார்.

"பார்வதிதேவி தனது தோழிகளான ஜயை, விஜயை என்பவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தபோது விஜயை என்பவள், "அம்மா, சிவபெருமானுக்கு நந்தி, பிருங்கி முதலிய கணங்கள் கணக்கின்றி இருக்கும்போது உங்களுக்கு கணங்கள் எதுவும் இல்லையே. அதனால் உங்களுக்கென்று ஒரு சேவகன் இல்லையே" என்று கேட்டாள்.

ஒரு நாள் பார்வதிதேவி நீராடிக் கொண்டிருந்தபோது அங்கு சென்ற சிவபெருமான் நந்தியின் சொல்லைக் கேளாது உள்ளே சென்றார். அவரைக் கண்ட பார்வதிதேவி அவரைக் கண்டு நாணமடைந்து தனது தோழி சொன்னது சரிதான் என நினைத்துத் தனக்கென்றொரு சேவகன் கட்டாயம் இருத்தல் வேண்டும் என்று நினைத்து கையில் நீரை எடுத்துச்

சிவபெருமானை நினைத்து தனது உடலைத் தேய்த்து உருட்டி யானை முகமும், நான்கு தோள்களும், மூன்று கண்களும், மங்கள ரூபமும் உடைய கணன் என்னும் புத்திரனை உருவாக்கி, அவனை வாசலில் நிறுத்தி, "நீ எனது உத்தரவு இல்லாமல் யாரையும் உள்ளே விடக்கூடாது" என்று கட்டளையிட்டு நல்ல ஆடை, ஆபரணங்களைக் கொடுத்து, "நீ எனக்குப் பிரியமான புத்திரன்" என்று கூறி அவனை அணைத்து முத்தமிட்டு, அவனது கையில் ஒரு தண்டத்தைக் கொடுத்து "இனி நீ துவாரபாலகனாக இரு" என்று கூறி அந்தப்புரத்துள்ச் சென்றாள்.

ஒரு நாள் உமாதேவியார் தனது தோழிகளுடன் நீராடிக் கொண்டிருந்தபோது சிவபெருமான் அங்கே வந்தார். அவரைக் கண்ட கணன், "எனது தாயார் நீராடுவதால் உள்ளே போகக்கூடாது" என்றார். சிவபெருமான் அதைக் கேளாது உள்ளே செல்லக் கணன் தனது கையில் இருந்த தண்டத்தால் சிவபெருமானுக்கு அடித்தான். சிவபெருமான் கோபங்கொண்டு கணங்களை அழைத்து கணனை விலக்குமாறு கூறினார். கணங்கள் வந்து பார்வதிதேவியின் கணவன் அவர். நீ விலக்கிப் பாதையை விடு என்றனர். கணன் அவர்களை மதிக்காததால் கணங்கள் சென்று சிவபெருமானிடம் முறையிட்டனர். அப்போது அந்தப்புரத்தில் நீராடிய பார்வதிதேவியும் தோழிகளும் அங்கு வந்து நடந்தவற்றை அறிந்தனர்.

"இன்றைய தினம் நமது சேவகன் காவல் காக்காதிருந்திருந்தால் சிவபெருமானும் அவரோடு கூடவந்த கணங்களும் உள்ளே வந்திருப்பார்கள். அது நல்லதல்ல. அதனால் கணன் நல்ல காரியம் செய்தான். வெளியே தர்க்கம் நடைபெறுகிறது. எமது கட்டளையை ஏற்றுத் தனது கடமையைச் செய்யும் கணனின் செயலை நாம் ஏற்க வேண்டும்" என்றாள் தோழி.

பார்வதிதேவி கணனின்மேல் அபிமானம் உடையவள். "சிவபெருமானாக இருந்தாலும் கணனிடம் அன்பாகப் பேசி அல்லது அவனை வென்று உள்ளே வந்திருக்கலாம்" என்று நினைத்த பார்வதிதேவி தனது தோழியை அழைத்து யாரையும் உள்ளே விட வேண்டாம்" என்று கணனுக்குச் சொல்லுமாறு கட்டளையிட்டாள். அதைத் தோழி சென்று கணனுக்குச் சொல்லக் கணன் கோபங்கொண்டு, "என்னை போரில் வென்றபின்தான் நீங்கள் உள்ளே செல்ல முடியும்" என்றான். அதைக்கேட்ட சிவபெருமான் கணங்களைக் கணனோடு போரிடுமாறு கூறினார். கணங்களின் கூட்டத்திற்குத் தலைமைதாங்கி வந்த நந்தியைக் கணன் பலமாகத் தாக்க, அத்தாக்குதலை எதிர்க்க முடியாத நந்தி தப்பியோடக் கணங்களும் ஓடின.

பிரமனும் இந்திரனும் நாரதர் மூலமாகச் செய்தியை அறிந்து அங்கே வந்தனர். அவர்கள் சிவபெருமானை வணங்கி, "மகாதேவா, எங்களுக்கு அனுமதியளித்தால் நாமும்

போரிடுவோம்" என்றனர். அதற்குச் சிவபெருமான், "நான்முகனே, நீ அவனிடம் சென்று அன்பாகப் பேசி அவனை வசப்படுத்து" என்றார்.

பிரமன் மற்ற முனிவர்களோடு கணபாலன் இருக்குமிடத்திற்கு வந்தபோது, கணன் பிரமனது மீசையைப் பிடித்து ஆட்ட வலியைப் பொறுக்க முடியாத பிரமன், "கணனே, நான் உன்னோடு போரிட வரவில்லை" என்று அலறக் கணன் தனது தண்டை எடுத்துப் பிரமனுக்கு அடிக்கப்போகப் பிரமன் அஞ்சி சிவபெருமானிடம் சென்று நடந்தவற்றைக் கூறச் சிவபெருமான் கோபங்கொண்டு இந்திரன், சுப்பிரமணியர் முதலிய பிரமதர்கள், பூதப் பிரேதபைசாசங்கள் யாவற்றையும் கணனுடன் போர் செய்யுமாறு பணித்தார்.

சிவபெருமானின் கட்டளையை ஏற்று அவர்கள் கடும்போர் செய்தனர். அந்தப்புரத்தில் இருந்த பார்வதிதேவி இரண்டு சக்திகளை உருவாக்கிக் கணனுக்கு உதவியாக அனுப்பினாள். அதில் ஒரு சக்தி பயங்கரமான உடலும், கருநிறமேனியும் மலைபோன்ற உருவமும் கொண்டதாக இருந்தாள். மற்றொரு சக்தி மின்னலைப் போன்ற உருவமும் அதிக கைகளும் உடையதாக வந்து அவர்கள் பாவிக்கும் ஆயுதங்களையெல்லாம் தனது வாயைத்திறந்து விழுங்கிக் கொண்டிருந்தாள். தேவர்கள் கதிகலங்கிப் போனார்கள். செய்வதறியாது நாலாதிசையும் சிதறி ஓடினார்கள். அப்போது ஆறுமுகப்பெருமான் எஞ்சியிருந்த கணங்களை அழைத்துக் கொண்டு சிவனை அடைந்து வணங்கி, "தந்தையே, அந்தக் கணங்களின் வல்லமையைச் சொல்லிமுடிக்க முடியாது. அவனைப் போன்ற ஒரு வீரன் இதுவரை தோன்றியதில்லை. இவனைத் தாங்கள் எதிர்த்து அடக்காவிட்டால் மகாபிரளயம் உருவாகும்" என்று சொல்லக் கோபங்கொண்ட சிவபெருமான் கணனோடு போர் செய்யப் புறப்பட்டார். அப்போது அங்கே வந்த நாரதர், "மகேஸ்வரா, அவன் சிறுவன். பார்வதிதேவியின் கட்டளையை நிறைவேற்றுகின்றான். அவனை வசப்படுத்துங்கள்" என்றார்.

சிவபெருமான் நாரதரின் பேச்சைக் கேட்காது தேவர்களையும் அழைத்துக் கொண்டு சென்று கணனுடன் கடுமையாகப் போர் செய்தார். சிவபெருமானாலும் தேவர்களாலும் கணனின் தாக்குதலைச் சமாளிக்க முடியவில்லை. சிவபெருமான் தனது சூலாயுதத்தால் கணனைத் தாக்கினார். அது கை நழுவிக் கீழே விழுந்தது. பின் அவர் விநாயகவில்லை எடுத்தார். அதையும் கணன் உடைத்தான். விஸ்ணு தனது சக்கரத்தால் கணனைத்தாக்க வந்தபோது கணன் தனது பாலிசாயுதத்தால் விஷ்ணுவின் சக்கராயுதத்தைப் பொடிப்பொடியாக்கினான். அதனால் அவனை வெல்ல முடியாதென்று உணர்ந்த சிவபெருமான் கணனின் பின்புறமாகச் சென்று அவனைப் பாசத்தால் கட்டிவிட்டார். அவன் மூர்ச்சித்து மயக்கமடைந்துவிட்டான். இந்தச் சமயத்தில் தாங்கள் தன்மானம் காத்துக் கொள்ளல் வேண்டும்" என்று பார்வதிக்குக் கோபத்தை உண்டு பண்ணினார் நாரதர்.

கோபங்கொண்ட பார்வதிதேவி ஆயிரம் சக்திகளை உருவாக்கினாள். அச்சக்திகள் பார்வதிதேவியைப் பணிந்து, "நாம் என்ன செய்ய வேண்டும் எனக் கட்டளையிடுங்கள்" என்று கேட்டன. நீங்கள் எதையும் சிந்திக்காது தேவர்கள், முனிவர்கள், யட்சகர்கள், அசுரர்கள் முதலியோரை அழித்து மகாபிரளயத்தை உண்டு பண்ண வேண்டும்" என்றாள். பார்வதிதேவி சொன்னதும் அச்சக்திகள் வாயைப் பிளந்துகொண்டும், ஆயுதங்களுடனும், தலையை ஆட்டிக் கொண்டும் விரைந்து சென்று திருமால், விஷ்ணு, இந்திரன் முதலிய தேவர்களைத் தாக்க அவர்கள் அலறியபடி ஓட்டமெடுத்தனர். அப்போது ஒரு சக்தி சிவபெருமானின் இடுப்பில் ஓங்கி அடித்தாள். அதனால் மிகவும் வருந்திய சிவபெருமான் பார்வதியிடம் சென்று சக்தியற்று இருந்துவிட்டார். தேவர்களும் முனிவர்களும் நாரதரிடம் சென்று பார்வதிதேவியின் கோபத்தைத் தணிக்கும்படி வேண்டினர். நாரதர் சில முனிவர்களுடன் சென்று பார்வதிதேவியை வணங்கி, "தாயே, சிவபெருமானும் நாங்களும் மிகவும் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். அதனால் கொண்ட கோபத்தை நிறுத்திச் சாந்தமடைதல் வேண்டும். நாம் அனைவரும் உங்களால் படைக்கப்பட்டவர்கள். பிழைகள் இருப்பின் மன்னிக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தனர்.

"எனது புத்திரன் கணபாலன் மூர்ச்சை தெளிந்து எழுந்தபின் தான் இத்தாக்குதல் நிற்கும். தாயான எனது கட்டளையைப் பேணித் தனித்துநின்று அந்தப்புரத்தைக் காவல் செய்த சிறுவனைத் தேவர்களாகிய நீங்கள் அனைவரும் போரிட்டது முறையற்ற செயல். ஆதலால் நீங்கள் அனைவரும் அவனைத் தினமும் வணங்க வேண்டும். அத்துடன் எல்லா உலகங்களிலும் வாழும் அனைவருக்கும் அவனே முதற் கடவுளாகவும் இருத்தல் வேண்டும்" என்றாள். அதைக் கேட்ட நாரதர் அதைச் சிவபெருமானிடம் சொல்ல சிவபெருமான், "இப்போது ஏற்பட்ட துன்பம் உடனடியாக நீங்க வேண்டும் என்பதற்காக இதை ஒப்புக் கொள்கிறேன்" என்று கூறி மூலிகைகள் நிறைந்த துரோணாசலம் என்ற மலையை நினைத்தார். உடனே அம்மலை அங்கு வந்தது. அதனால் போரில் இறந்தவர்கள் எல்லோரும் உயிர் பெற்றனர். கணபாலன் மயக்கம் தீர்ந்து எழுந்தனன்.

சிவபெருமான், "இனிப் பர்ர்வதிதேவியார் கேட்டவற்றைக் கொடுப்பேன்" என்றார். அதைக்கேட்ட மகாவிஷ்ணு கணனைக் கணநாதராக இருக்கும்படி அபிஷேகம் செய்து, ஆடை ஆபரணங்கள் அணிவித்துப் பார்வதிதேவியாரிடம் ஒப்படைத்தனர். பார்வதிதேவி மகிழ்ந்து, "மகனே, நீ இன்று முதல் யாவராலும் முன்னதாகப் பூசிக்கத் தக்கவனாவாய். அத்துடன் உனது முகத்தில் சிந்தூரம் அணிந்திருப்பதால் உன்னைச் சிவப்புச் சந்தனத்தால் பூசிப்பவர்களுக்கு அவர்கள் நினைத்தவை கைகூடும்" என்று வாழ்த்தச் சிவபெருமான் தனது தொடையில் விநாயகரைத் தூக்கி இருத்தினார். பின்பு, "பிரம விஷ்ணுக்களே, எல்லோரும் இவனை முதலில் தொழுத பின்பே எம்மைத் தொழவேண்டும். அப்படிப் பூசிக்காவிட்டால் காரியங்கள் சித்தியாகாது" என்று சொல்லிச் சிவபெருமான் கணேசனை முதலில் பூசிக்கப் பின் விஷ்ணுவும் அதன் பின் திருமாலும் அடுத்து பார்வதியும் அதன்பின் தேவர்களும்

பூசித்தனர். சிவபெருமான் மீண்டும் கணபதியைப் பார்த்து, "சதுர்த்தித் தினத்தன்று தவறாது உன்னை நினைத்து விரதம் அனுட்டிப்பவர்களின் குடும்பம் சகல ஐஸ்வரியங்களையும் பெறும்" என்று சொல்லப் பார்வதிதேவி மிக்க மகிழ்வடைந்தாள் என்றார் சூதமுனிவர்.

"மாதவனே, கணபதியின் வரலாற்றைச் சொன்னீர்கள். இனி அவரது திவ்விய சரிதங்களைச் சொல்லுங்கள்" என்று முனிவர்கள் கேட்டனர்.

சூதமுனிவர் அதைப்பற்றிக் கூறத் தொடங்கினார்; "முனிவர்களே, சிவனும் பார்வதியும் கணேசர்மீது விருப்பங்கொண்டு அவரை விளையாட்டுப் பிள்ளையாகவே வளர்த்து வந்தனர். கணேசனும் ஆறுமுகனும் மிகவும் அன்புடன் விளையாடி வந்தனர். அந்நிலையில் இருவருக்கும் திருமணம் செய்துவைக்க விரும்பினர். அதை அறிந்த இருவரும் தனக்குத் தனக்குத்தான் முதலில் திருமணம் செய்து வைக்க வேண்டுமென்று அடம் பிடித்தனர். அதனால் சிவபெருமான் இருவரையும் அழைத்து நீங்கள் இருவரும் உலகத்தைச் சுற்றி வலம் வருதல் வேண்டும். யார் முதலில் வருகிறார்களோ அவருக்குத்தான் முதலில் திருமணம் செய்து வைப்பேன்" என்றார்.

உடனே சுப்பிரமணியர் தனது மயில்வாகனத்தில் ஏறிப் பூமியை வலம்வரச் சென்றார். ஆனால் கணேசன் சிவபெருமானையும் பார்வதிதேவியையும் வணங்கிப்பின் அவர்களைச் சுற்றி ஏழுமுறை வலம்வந்துவிட்டுச் சொன்னார்; "நான் எனது பெற்றோரை வணங்கி ஏழுமுறை வலம் வந்தேன். உங்கள் இருவரையும் வலம்வந்து வணங்கினால் உலகை வலம் வந்ததற்குச் சமமாகும் என்று வேதசாத்திரம் கூறுகிறது. அத்துடன் பெற்றோரைப் பூசித்து வலம் வந்தால் பூமி முழுவதையும் சுற்றிய பயன் உண்டாகும் என்று சாத்திரங்கள் கூறுகின்றன" என்று கூறச் சிவபெருமானும் பார்வதிதேவியும் அதை ஏற்றுக் கொண்டனர்.

அதன்பின் விஸ்வரூபனின் புதல்விகளான சித்தி, புத்தி என்ற அழகிய கன்னியரைக் கணேசனுக்குத் திருமணம் செய்து வைக்கத் தீர்மானித்தார்கள். அதன்பின் மிகவும் விமரிசையாக அவருக்குத் திருமணம் நடைபெற்றது. அதன்பின் சித்திக்கு லசன் என்ற பிள்ளையும், புத்திக்கு லாபன் என்னும் பிள்ளையும் பிறந்தார்கள்.

சுப்பிரமணியர் பூமியை வலம்வந்துவிட்டுத் தந்தையையும், தாயையும் சந்தித்தபோது கணேசருக்குத் திருமணம் முடிந்து பிள்ளைகளும் பிறந்து விட்டனர். அதை அறிந்த சுப்பிரமணியர் கிரௌஞ்சகிரியை நோக்கிச் சென்றார். சிவபெருமானும் பார்வதிதேவியும் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவர் கேட்கவில்லை. சிலநாட்கள் சென்றதும் பார்வதிதேவி புத்திரனது பிரிவைத் தாங்கமுடியாது கிரௌஞ்சகிரிக்குச் சென்றார். ஏற்கனவே புத்திரபாசத்தால் சிவபெருமானும் அங்கு வந்திருந்தார். பெற்றோரின் வருகையை அறிந்த சுப்பிரமணியர் அவ்விடத்தை விட்டுச் செல்ல விரும்பியபோது தேவர்கள் அவரை

அங்கிருக்கும்படி பிரார்த்தித்தனர். அதனால் சுப்பிரமணியர் அங்கிருந்து மூன்று போசணை தூரத்திற்குச் சென்று அங்கு தங்கியிருந்தார். அங்கு சிவபெருமானும் பார்வதிதேவியும் அங்கே வர ஆயத்தமானார்கள்" என்றார் சூதமுனிவர்.

உருத்திராட்சத்தின் பெருமையும் வகையும்

"மாமுனிவரே, நீறு அணிந்த நெற்றியும், உருத்திராக்கம் அணிந்த கழுத்தும், சிவநாமங்களைச் சொல்லும் வாயையும் காணநேரிட்டால் திருவேணியில் நீராடிய பலன் கிடைக்கும் என்று வேதங்கள் சொல்வதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். அம்மூன்றைப் பற்றியும் சொல்லுங்கள்" என்று முனிவர்கள் கேட்டனர்.

சூதர் சொன்னார்; "முனிவர்களே, பிரமதேவர் ஒரு தராசில் மூன்றையும் வைத்து நிறுத்தார். அவை மூன்றும் சமமாக இருந்தன. இவை மூன்றினதும் பயனை என்னால்கூடச் சொல்ல முடியாது. எனினும் பெரும் பேறுகளைத் தரவல்ல ருத்திராட்சத்தின் மகிமையைக் கூறுகிறேன் என்று கூறத் தொடங்கினார். முனிவர்களே, ஆயிரத்தொரு நூறு ருத்திராட்சங்களைத் தரித்தவன் ருத்திர ரூபத்தை அடைவான். அதன் பயனைப் பல ஆண்டுகள் சென்றாலும் சொல்லி முடிக்க முடியாது. ஐந்நூற்றைம்பது மணிகளால் கிரீடம் செய்து தரித்தவன் சிவரூபியாவான். முந்நூற்றிப்பத்து மணிகளால் பூணூல் செய்து தரிக்கலாம். இவ்வாறு தரிப்பவன் முத்தி அடைவான். இவ்வாறு அணிந்து சிவத்தியானம் செய்பவன் பாவங்களில் இருந்து விடுபடுவான். அவனைக் காண்போர் கங்காஸ்நானப் பயனும், சிவதரிசனப் பயனும் பெறுவான். ருத்திராட்ச மாலை அணிந்து நூறு மந்திரம் ஜெபித்தால் பெரும்பயன் கிட்டும். கடவுள்களை நினைத்து மந்திரம் செபிக்கும்போது ருத்திராக்கம் அணிதல் வேண்டும். அதை விரும்பி அணிந்தாலும், விரும்பாமல் அணிந்தாலும் பலன் உண்டு. செல்வத்தை விரும்புவோன் பொன்னால் செய்த மணியும், புகழை விரும்புவோன் முத்து மணியும், பிள்ளைப் பேறை விரும்புவோன் ஸ்படிக மணியும் கையில் வைத்து ஜெபம் செய்தல் வேண்டும். எனினும் சிவன் விரும்புவது ருத்திராட்சத்தையே. ஒரு முக ருத்திராட்சம் காரிய சித்தியைக் கொடுக்கும். இருமுகமணி லட்சுமி கடாட்சத்தைக் கொடுக்கும். மும்முக மணி சகல சித்திகளையும் கொடுக்கும். நான்குமுகமணி அறம், பொருள், இன்பம், வீடு என்ற புருசார்த்தங்களைக் கொடுக்கும். ஐம்முகமணி பாவத்தைப் போக்கும். ஒரு முகமணி கிடைப்பது அரிது" என்றார் சூதமுனிவர்.

ஜோதிலிங்கங்களின் தொகை

“சூதமுனிவரே, புண்ணிய தீர்த்தங்களில் உள்ள லிங்கங்களைப் பற்றியும், புண்ணியத் தலங்களில் உள்ள லிங்கங்களைப் பற்றியும் சொல்லுங்கள்” என்று முனிவர்கள் கேட்டனர்.

“முனிவர்களே, அவற்றின் தொகையைச் சரியாகக் கூற முடியாது. ஏனென்றால் பூமியும், தீர்த்தங்கள் யாவும் லிங்கமே. உலகம் லிங்கத்திலேயே அடங்கியுள்ளது. லிங்கங்கள் பாதாளத்திலும், சொர்க்கத்திலும் இருக்கின்றன. அங்குள்ளோர் அதற்குப் பூசை செய்கின்றனர். சௌராட்டிய தேசத்தில் சோமநாதலிங்கமும், சிறிசைலத்தில் மல்லிகார்சுனலிங்கமும், உச்சையினியில் மகாகாளலிங்கமும், ஓங்காரலிங்கமும், இமயமலையில் கேதாரலிங்கமும், டாசினியில் பீமசங்காரலிங்கமும், வாரனாசியில் விஸ்வேஸ்வரலிங்கமும், கோதாவாவியில் திரியம்பகலிங்கமும், சீதாபுரத்தில் வைத்தியநாதலிங்கமும், தாருகாவனத்தில் நாகேஸ்வரலிங்கமும், சேதுவில் இராமேஸ்வரலிங்கமும், சிவாலயத்தில் குஸ்மேசலிங்கமுமெனப் பன்னிரண்டு லிங்கங்கள் உண்டு. இவ்விலிங்கங்களை வணங்குவோர் மகாபாவிகளாக இருந்தாலும் பாக்கியவான்களாவர். இவை தவிரப் பஞ்சபூத லிங்கங்கள் ஐந்து உண்டு. அவையாவன : காஞ்சியில் நிலம்மயமான ஏகாம்பரலிங்கமும், யம்புகேஸ்வரத்தில் நீர்மயமான யம்புகேஸ்வரலிங்கமும், அருணாசலத்தில் அக்கினிமயமான அருணாசலலிங்கமும் தட்சணகைலாயத்தில் வாயுமயமான சிறிகாளத்திலிங்கமும், தில்லையில் ஆகாயமயமான திருமூலலிங்கமும் உண்டு. அவற்றைப் பார்த்தாலோ அல்லது கேட்டாலோ இஸ்டசித்திகளைப் பெறலாம். இவைதவிரத் தீர்த்தக்கரைகளெங்கும் லிங்கங்கள் எண்ணிக்கையற்று இருக்கின்றன. இத் தீர்த்தங்களில் நீராடுவோர் தாம் செய்த பாவங்களில் இருந்து விடுவிக்கப்படுவர்” என்றார் சூதமுனிவர்.

நந்திகேஸ்வர லிங்க மகிமை

“சிவநேயர்களே, தர்மராசன் நாரதமுனிவரிடம் கேட்ட ஒரு விடயத்தை உங்களுக்குச் சொல்கிறேன்” என்ற சூதமுனிவர் அதைச் சொன்னார்.

“நர்மதை ஆற்றங்கரையில் வாழ்ந்த ஒரு பிராமணன் காசி யாத்திரைக்குச் சென்றபோது அங்கு இறந்து விட்டான். அவனது மனைவியும், இரு பிள்ளைகளும் காசிக்கு வந்து அவனது இறுதிகிரியைகளைச் செய்தனர். அப்போது அப்பிள்ளைகளின் தாய் சொன்னாள்; “பிள்ளைகளே, நான் இறந்தால் எனது உடலை எரித்தபின் வரும் அஸ்தியைக் கங்கையில் கரைக்க வேண்டும்” என்றார். அதன்படி அவள் இறந்ததும் அவளது அஸ்தியை எடுத்துக் கொண்டு அவளது மூத்த மகன் ஒரு சேவகனையும் அழைத்துக் கொண்டு காசிக்குப் புறப்பட்டான். அன்று இரவு வந்ததால் அவர்கள் ஒரு பிராமணனின் வீட்டுக்குச்

சென்றனர். வீட்டு வாசலில் ஒரு பசு கட்டி நின்றது. அதில் பால் கறப்பதற்காக வந்த பிராமணன் கன்றை அவிழ்க்கும்போது அது பால் குடிக்கும் அவசரத்தில் பிராமணனது காலை மிதித்து விட்டது. அதனால் கோபங் கொண்ட அப்பிராமணன் கன்றைப் பாலூட்டவிடாது ஒரு மரத்தில் கட்டிவிட்டு அதற்குப் பலமாக அடிக்க அது கதறியது. அதைப் பொறுக்கமாட்டாத தாய்ப்பசு பிராமணனின் மகனைத் தனது கூரிய கொம்பால் குத்திக் கொன்றுவிட்டது. பின் அது கட்டை அறுத்துக்கொண்டு ஓடியது. முன்பு பால்போல வெள்ளையாக இருந்த பசு அப் பிராமணச் சிறுவனைக் கொன்றதும் கறுப்பாக மாறிவிட்டது"

"பசு வேகமாக ஓடக் காசிக்கு யாத்திரையாக வந்த பிராமணனும் அவனது சேவகனும் அப் பசுவைப் பின்தொடர்ந்து சென்றனர். அப்பசு நர்மதை ஆற்றை அடைந்து அதில் இறங்கி நீராடியதும் அதன் கரியநிறம் மாறி முன்புபோல வெண்ணிறமானது. அதைக் கண்ட காசி யாத்திரீகன் அந்நதியில் தாயின் அஸ்தியைக் கரைத்துவிட்டு அதில் நீராடினான். பின் நந்திகேஸ்வரரை வணங்கிவிட்டு வரும்போது ஒரு பெண் அவர்கள் முன் வந்து "நீ எங்கிருந்து வருகிறாய்...? பொய் சொல்லாமல் உண்மையைச் சொல்" என்றாள். யாத்திரீகன் நடந்தவற்றைச் சொன்னான். அதற்கு அப்பெண், "பிராமணரே, நான் தான் கங்கை. உனது தாயின் அஸ்தியை கங்கையில் கலந்தமையால் அவள் முத்தியடைந்துவிட்டாள். ஒவ்வொரு வருடமும் வைகாச சுத்த சப்தமியில் கங்கை இவ்விடத்திற்கு வருவாள். இன்று சப்தமியாகும். சப்தமியில் அஸ்தியைக் கரைத்தால் அவர்கள் மோட்சம் அடைவர்" என்று கூறி மறைந்தாள்.

"நந்திகேஸ்வரரின் மகிமையைக் கூறி முடிக்க முடியாது. ஒரு சமயம் ஒரு பிராமண விதவைப்பெண் நந்திகேஸ்வரரின் ஆலயத்தில் சிவபூசை செய்தாள். அவளைச் சிவபூசை செய்யவிடாது ஒரு மூடன் தடுத்தான். அவள் உறுதியாக இருந்து சிவபூசை செய்தாள். அதனால் நந்திகேஸ்வரர் அவள் முன்தோன்றி, "பயமில்லாது பூசை செய்" என்றார். அவள் சிவபூசையை முடித்ததும் கங்கை அவள்முன்தோன்றி "உனக்கு என்ன வரம் வேண்டும்" என்று கேட்க, அவள், "கங்கையே, நீ வருடாவருடம் வைகாச சுத்த சப்தமியில் இங்கு வந்து இருக்க வேண்டும்" என்று கேட்டாள். அதனால் அத்தினத்தில் நீராடுவோரின் பாவங்கள் அனைத்தும் நீங்கும்" என்றார் சூத முனிவர்.

அத்திரீஸ்வர லிங்க மகிமை

அவற்றைக்கேட்டு மகிழ்ந்த முனிவர்கள். "சுவாமி, எமக்கு அத்திரீஸ்வர லிங்கத்தின் மகிமைகளைக் கூறுங்கள்" என்றனர்.

“முனிவர்களே, காமதம் என்ற வனத்திலே அத்திரி முனிவர் தனது மனைவியான அனுசூசையுடன் தவம் செய்து கொண்டிருந்தார். அவர்கள் தவம் செய்த காலத்திற்கு முன்பு அதாவது கடந்த நூறு வருடங்களாக மழை பெய்யாததால் மரம் செடி கொடிகள் யாவும் பட்டுவிட்டன. அனுசூசை தனித்திருந்து மழைபெய்யாமையால் மக்கள் படும் துன்பங்களைக் கண்டு துன்பப்பட்டுப் பார்வதிலிங்கம் ஒன்றைச் செய்து பூசித்தாள். அவளது பூசையைக் கண்ட தைத்திரியர், தானவர் முதலியோர் அனுசூசையின் அழகில் மோகங்கொண்டு அவளில் இச்சைபட்டு அவளை நெருங்கி வந்தனர். ஆனால் சிவபூசையின் மகிமையால் அவளை நெருங்க முடியவில்லை. அவள் கடுந்தவம் செய்தாள். அதைக்கண்டு வியந்த சகல தேவர்களும், முனிவர்களும், கங்கை முதலிய தீர்த்தங்களும் அவளைப் பார்ப்பதற்காக வந்தனர். அவளது தவம் ஐம்பது ஆண்டுகள் நீடித்தது. அதன்பின் தவம் கலைந்து எழுந்த அத்திரி முனிவர் தனது மனைவியிடம் தண்ணீர் கொண்டு வரும்படி வேண்ட அனுசூசை கமண்டலத்தை எடுத்துக்கொண்டு எங்கும் அலைந்தாள். தண்ணீர் கிடைக்கவில்லை. அப்போது கங்காதேவி அவள் முன் தோன்றி, “பெண்ணே உன் கையால் ஒரு சிறு குழி தோண்டு. அதற்குள் நீர் உண்டாகும்” என்றதும் அனுசூசை ஒரு குழி தோண்ட அதனுள் நீர் பெருகியது. அதைக் கமண்டலத்தில் எடுத்த அனுசூசை, “கங்கையே, எனது கணவர் தவத்தை முடிக்கும்வரை இங்கு இருக்க முடியுமா?” என்று கேட்டாள். அதற்குக் கங்காதேவி, “பெண்ணே, உனது கணவனுக்கு நீ செய்த பணிவிடையால் வந்த பயனில் ஒரு மாதத்திற்கான பலனை எனக்குக் கொடுத்தாயேயானால் நான் இருப்பேன்” என்றது. உடனே அனுசூசை, “அப்படியே தருகிறேன்” என்று கூறிவிட்டுக் கணவனிடம் சென்றாள். முனிவர் தண்ணீரைக் குடித்துவிட்டு, “பெண்ணே, இது மிகவும் சுவையான நீராக உள்ளது. இதை எங்கே பெற்றாய்” என்று கேட்க. அவள் முன்பு நடந்தவற்றைக் கூறினாள். அதை நம்பாத முனிவர்; “பெண்ணே, நீ சொல்வதை என்னால் நம்ப முடியாதிருக்கிறது” என்றார். அனுசூசை தனது கணவனை அழைத்துக் கொண்டு நீர் பெற்ற இடத்திற்கு வந்தாள். அங்கே கங்கை பாய்ந்து கொண்டிருந்தது. அதில் முனிவர் நீராடியபின் கங்கையைத் தொழுதார். உடனே கங்காதேவி அவர் முன்தோன்ற, அனுசூசை அவளை வணங்கி, “கங்கையே இனி நீ இவ்விடத்தைவிட்டுச் செல்லக்கூடாது” என்று வேண்டினாள். அதற்குக் கங்கை, “தானம், ஸ்நானம், யாகம், பதியின் சேவை முதலியவற்றால் அடையும் பயனைவிடப் பதிவிரதையைக் காண்பதால் பெரும் பயன் கிட்டும். உன்னைக் கண்டமையால் அப்பேறு எனக்குக் கிடைத்துவிட்டது. முன்பு ஒரு மாதப் பயனைக் கொடுத்தாய். நான் இவ்விடத்தில் நிரந்தரமாக இருக்க வேண்டுமானால் உனது தவப்பயனில் ஒரு வருடப் பயனைக் கொடு” என்றாள். கங்கை கேட்டவுடன் அனுசூசை தனது ஒரு வருடப் பயனைத் தாரைவார்த்துக் கொடுத்தாள். அந்த நேரம் சிவபெருமான் அவளின் முன்தோன்றி, “பெண்ணே, உனது தவத்தையும், தானத்தையும் மெச்சினேன். உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்” என்றார். அனுசூசை மிக்க மகிழ்வுடன் சிவனை வணங்கி, “எம்பெருமானே, தாங்களும், கங்கையும் இவ்விடத்தில்

நிரந்தரமாகத் தங்க வேண்டும்" என்று கேட்டாள். சிவபெருமான் மகிழ்ந்து, "பெண்ணே, நான் அத்திரீசுவரர் என்னும் நாமத்துடன் இங்கேயே தங்குகிறேன். கங்கையும் என்கூட இருப்பாள்" என்றார். அதனால் தான் முனிவர்கள் பெருவிருப்புடன் இங்கு வந்து தவம் செய்கின்றனர் என்றார் சூதமுனிவர்.

நாகேஸ்வர லிங்க மகிமை

"முன்னொரு காலத்தில் கடவுள் இல்லை" என்று சொல்லி யாகமே சிறப்பு வாய்ந்ததென்று அறியாமையால் தேவதாரு வனத்தில் இருந்த மகரிஷிகள் பற்றியும், அவர்களது மனைவிமார் தமது கற்பே சிறந்தது. ஆனால் கடவுளை வணங்கத் தேவையில்லை என்ற திமிரிலும் வாழ்ந்தனர். அவர்களைத் திருத்த எண்ணங்கொண்ட சிவபெருமான் மகாவிஷ்ணுவை அழைத்து, "நீ அழகான பெண் வடிவமெடுத்து என்னுடன் கூடவா" என்று பணித்தார். மிகமிக அழகிய பெண்வடிவமெடுத்த மகாவிஷ்ணு பிச்சாடனர் வடிவமெடுத்த சிவபெருமானுடன் தேவதாகுவனத்திற்குச் சென்றார். அவரின் அழகைக் கண்டு மெய்மறந்த முனிவர்களின் மனைவிமார் தம்மை மறந்து அவரின் பின்னால் சென்றனர். சிலரது சேலை நழுவியபோதும் அது அவர்களுக்குத் தெரியவில்லை. அதுபோல் மோகினி வடிவமெடுத்த மகாவிஷ்ணுவின் அழகில் மயங்கித் தம்நிலை இழந்த முனிவர்கள் மோகினியின் பின் சென்றனர். முனிவர்கள் மிக்க அழுகுடன் நிர்வாணமாகச் செல்லும் சிவபெருமானைச் சபித்தனர். சாபமிட்டனர். அவை எதுவும் பயனளிக்கவில்லை. முனிவர்கள் மோகினிக்குப் பின்னாலும், முனிபத்தினிகள் சிவபெருமானுக்குப் பின்னாலும் அலைந்ததால் அவர்கள் இருவரும் வசிட்ட முனிவரின் ஆச்சிரமத்திற்குச் சென்று அவர்களின் பூசையை ஏற்றுக்கொண்டு, திருக்கைலையை அடைந்தனர். சிவனையும், மகாவிஷ்ணுவையும் அவர்கள் தகாத வார்த்தைகளால் ஏசியமையால் அவர்களுக்குப் பெரும் நோய்கள் பல உண்டாகின. அவர்கள் பிரமதேவரிடம் சென்று தமக்கேற்பட்ட துன்பங்களைப் போக்குமாறு வணங்கப் பிரமதேவர் சொன்னார்; "நீங்கள் அறியாமையால் சிவனை மறந்து யாகம் செய்தீர்கள். அத்துடன் சிவனும் மகாவிஷ்ணுவும் பிச்சாடனராகவும் மோகினியாகவும் வந்தபோது நீங்கள் அவர்களைத் தரக்குறைவான வார்த்தைகளால் அவமதித்தீர்கள். அதனால் தான் உங்களுக்கு இக்கதி ஏற்பட்டது. சிவபெருமான் தான் முழுமுதற்கடவுள். அவரிற் பெரியது எதுவும் இல்லை. அதனால் அவரை மகிழ்விக்கத் தினந்தோறும் இலிங்கபூசை செய்யுங்கள்" என்றார். தாருகாவனத்தை அடைந்த முனிவர்களும், அவர்களது மனைவிமாரும் சிவலிங்கத்தை அமைத்து முறைப்படி வழிபட்டு வந்தனர். சில நாட்கள் செல்லச் சிவபெருமான் முன்புபோலப் பிச்சாடனர் வடிவமெடுத்து மகாவிஷ்ணுவை மோகினி வடிவமெடுக்கச் செய்து தாருகாவனத்திற்கு வந்தார். அவர்களைக் கண்ட முனிவர்களும், அவர்களது மனைவிமாரும் ஓடோடிவந்து அவர்களை வணங்கினர். அப்போது சிவபெருமான் மோகினியுடன் அந்தர்த்தனமாய் எழுந்தருளிக்காட்சி கொடுத்து

மறைந்தார். அந்த லிங்கம்தான் தாருகாவன நாகேஸ்வரலிங்கம். அதைத் தாருகாவன-வாசிகள் தினமும் வழிபட்டுத் தமக்குத் தேவையானவற்றைப் பெற்றனர்" என்றார் சூதமுனிவர்.

அந்தகேஸ்வர லிங்க மகிமை

முனிவர்கள் சூதமுனிவரை வணங்கி அந்தகேஸ்வரலிங்க மகிமையை எமக்குக் கூறுங்கள்" என்று கேட்கச் சூதமுனிவர் அதைப்பற்றிக் கூறலானார்.

"முனிவர்களே, இரண்யாட்சனின் மகனான அந்தகாசுரன் பிரமதேவனைக் குறித்துத் தவம் செய்து அண்டங்கள் முழுவதையும் தன் ஆயுள்காலம்வரை ஆளும் வரத்தைப் பெற்று மந்திரமலையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தான். அவன் தேவர்களுக்குப் பெரும் துன்பம் செய்தமையால் தேவர்கள் மிகுந்த பலத்துடன் போராடி அவனை வென்றனர். அதனால் அவன் கடற்கரையில் ஒரு துவாரம் உண்டாக்கி அதனுள் மறைந்து வாழ்ந்தான். அவன் நினைத்த போதெல்லாம் அத்துவாரத்தின் வழியாக வெளியே வந்து தேவர்களைக் கொடுமைப்படுத்தினான். அவனது கொடுமைகளைத் தாங்க முடியாத தேவர்கள் சிவபெருமானிடம் சென்று தம்மைக் காப்பாற்றும்படி முறையிட்டனர். அப்போது, "தேவர்களே, நீங்கள் உங்கள் படையைத் திரட்டி வாருங்கள். நானும் உங்களுடன் வருகிறேன்" என்றார். அதன்படி தேவர்கள் படையெடுத்து வந்தனர். சிவபெருமானும் அவர்களுடன் வந்தார். படைகள் அந்தத் துவாரத்தைச் சூழ்ந்து தாக்கினர். அப்போது சிவபெருமான் அத்துவாரத்தினூடாகச் சென்று அவன் அமைத்திருந்த பெரிய அரண்மனை போன்று அமைக்கப்பட்ட கோட்டையின் பீடத்தில் எழுந்தருளி இருந்தார். அந்தகாதசுரன் தேவர்களைத் தாக்கிவிட்டு அத்துவாரத்தினூடாக உள்ளே சென்று மறைந்திருப்பான். பின் வந்து தாக்குவான். அன்று போர் செய்து களைத்த அந்தகாசுரன் தான் மறைந்து கொள்வதற்காக அத்துவாரத்தினூடாக வந்தபோது சிவபெருமான் சூலத்தால் அவனைக் குத்தினார். அதனால் அவன் வருந்தாது சிவபெருமானைப் போற்றித் துதித்தான். அதனால் மகிழ்ந்த சிவபெருமான், "அந்தகா, உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்" என்றார். அதற்கு அவன், "சுவாமி, நான் பிறவிகள் தோறும் தங்களை அன்புடன் வணங்கும் வரம் தரல் வேண்டும்" என்றான். அதனால் மகிழ்ந்த சிவபெருமான் அவனைக் கணங்களின் தலைவனாக்கினார். அந்த இடத்தில் சிவபெருமான் அந்தகேஸ்வரர் என்ற பெயருடன் எழுந்தருளி இருக்கிறார். அவரை ஆதிசைவர்கள் ஆகமமுறைப்படி பூசை, செய்து வணங்கித் தாம் விரும்பியவற்றைப் பெற்று வருகின்றனர்" என்றார் சூதமுனிவர்.

ஆதிசைவர் பெருமை

“மாமுனிவரே, ஆதிசைவர் என்பவர் யார்? அவர்களின் வரலாற்றைக் கூறுங்கள்” என்று முனிவர்கள் கேட்டார்கள்.

“முனிவர்களே, சைவகர்கள் அநாதிசைவர், ஆதிசைவர், மகாசைவர், அநுசைவர், அவாந்தரசைவர், பிரவரசைவர், அந்யசைவர் என ஏழுவகைப்படுவர். அவர்களுள் ஆதிசைவர் சிவபெருமானது ஊர்த்துவமுகத்திலிருந்து தோன்றியவர்கள். அவர்கள் சிவபெருமானால் தீட்சை செய்யப்பெற்றவர்கள். அவர்கள் சிவாகமங்களில் சொல்லியபடி பூசை செய்பவர்கள். மேலும் அவர்கள் சிவத்துவியர் பெற்றவர்கள். இவர்களைச் சிவபெருமான் தனது புத்திரர்களாக மதிப்பவர். இதற்கு உதாரணமாக ஒரு கதையுண்டு. தசீசி என்ற ஆதிசைவர் ஆகமமுறைப்படி பூசை செய்யும் ஒரு உத்தமர். அவருக்கு ஒரு புத்திரனுண்டு. அவன் முறைப்படி வாழாது ஒரு பெண்ணை மணந்து அவளது சொற்படி வாழ்ந்து வந்தான். அவன் தீயவன். எனினும் அவர்களுக்கு நான்கு புதல்வர்கள் பிறந்திருந்தார்கள். அவன் மனைவியின்மீது விருப்பப்படி வாழ்ந்தாலும் தகப்பனைப் போலச் சிவபூசை செய்தும், பிறருக்குச் சிவதீட்சை செய்து கொண்டும் இருந்தான். ஒருநாள் தசீசி அயலூருக்குச் செல்லவேண்டி இருந்ததால் அவன் தனது மகனிடம் சிவலிங்கத்திற்குப் பூசை செய்யுமாறு கூறிச் சென்றார். அங்கு சென்ற இடத்தில் அவரால் உடனே திரும்ப முடியவில்லை. அதனால் சிலகாலம் தங்கியிருந்தார். அப்போது சிவராத்திரி தினம் வந்தது. அன்று அவன் விரதமிருந்து லிங்கத்திற்குப் பூசை செய்தான். மூன்றுகாலப்பூசையும் நல்லமுறையில் முடிந்தது. நான்காம் சாமப்பூசை செய்யுமுன் மனைவியின் காம இச்சையைத் தணிக்கவேண்டிய தால் அவளுடன் கூடியிருந்துவிட்டுப் பூசையைச் செய்தான். அதனால் கோபங்கொண்ட சிவபெருமான் அவனை உன்மத்தனாகும்படி சபித்தார். அதனை அறிந்து வந்த தசீசி சிவனை மனமுருகி வணங்கியபோது சிவன், “ஒரு தீயவனைக் கொண்டு எனக்குப் பூசை செய்தது உனது குற்றம்” என்று கண்டித்தார். அவ்வேளை தசீசியின் புத்திரனின் மனைவி இறந்து விட்டாள். தசீசி அடைந்த துன்பத்தைக்கண்டு சகிக்க முடியாத ஆதிசைவர்கள் சிவபெருமானையும் பார்வதிதேவியையும் வணங்கித் தசீசியின் துன்பங்களைப் போக்குமாறு வேண்டினர். அதனால் இரங்கிய சிவபெருமான்; “நீங்களே எம்மையும் பார்வதியையும் பூசிக்க உரிமை உள்ளவர்கள். அதனால் தசீசியின் புத்திரனின் பாவங்களை மன்னித்தேன்” என்று கூறி மறைந்தார்.

“முனிவர்களே, ஓர் ஆதிசைவனுக்கு உணவளிப்பவன் அனேக பசுக்களைத் தானம் செய்த பலனைப் பெறுவான். அந்தகேஸ்வரத்தைப் பத்திரன் என்ற அரசன் நீதி தவறாது ஆண்டு வந்தான். அவன் தினமும் ஆயிரம் அந்தணர்களுக்கு உணவளித்து வந்தான். அதனால் சிவபெருமான் அவனிடம் ஒரு கொடியைக் கொடுத்து; “அரசனே, இதை உனது அன்னசத்திரத்தில் தினமும் காலையில் கட்டிவை. அக்கொடி ஒரு சற்புரிசன் உணவு உண்டால் சரிந்து விடும்” என்றார். அதன்படி அவன் அக்கொடியைத் தனது அன்னசத்திரத்தில்

கட்டி விடுவான். ஒரு நாள் அக்கொடி சரிந்து விழுந்தது. அன்று ஒரு ஆதிசைவர் உணவு உண்டிருந்தார். பின் அது சரியவில்லை. அதனால் ஆதிசைவர் உணவுண்டால்தான் கொடி சரியும் என்று அரசனும் பிரதானிகளும் உணர்ந்து கொண்டனர்" என்றார் சூதமுனிவர்.

சோமேஸ்வர மல்லிகார்ச்சன லிங்க மகிமை

"மாமுனிவரே, எமக்கு ஜோதிரலிங்கத்தின் உற்பத்தியையும், அதன் மகிமையையும் சொல்ல வேண்டும் என்று முனிவர்கள் கேட்டனர்.

"முனிவர்களே, ஆதிகாலத்தில் தட்சனுக்கு அஸ்வினி முதலிய இருபத்தேழு பெண்கள் பிறந்தனர். அவ் இருபத்தேழு பெண்களையும் சந்திரனுக்குத் திருமணம் செய்து வைத்தான். சந்திரன் உரோகிணி என்ற பெண்ணையே மிகமிக விரும்பி அவளுடன் குடும்பம் நடத்திக்கொண்டு ஏனையோரைப் புறக்கணிக்க, அவர்கள் அதைத் தட்சனுக்குச் சொல்ல தட்சன் சந்திரனிடம் சென்று தனது மிகுதிப் பெண்களையும் ஏற்றுக் குடும்பம் நடத்தும்படி கேட்கச் சந்திரன் மறுத்துவிட்டான். அதனால் கோபம் கொண்ட தட்சன்; "சந்திரா, நான் சொல்லும் நல்ல வார்த்தைகளை நீ கேளாமையால், உனது ஒளி படிப்படியாகக் குறைந்து அழிந்து போகட்டும்" என்று சபித்தான். அதனால் கவலை அடைந்த தேவர்கள் பிரமதேவரிடம் சென்று அதைக்கூறப் பிரமதேவர் சொன்னார்; "சந்திரன் முன்பும் பல தீயசெயல்களைச் செய்தவன். அவன் வியாழபகவானிடம் கற்கச் சென்றபோது அவரது மனைவிமீது மோகங்கொண்டு அவளை அழைத்துச் சென்றுவிட்டான். அவனுக்கு நாம் புத்திமதி சொல்லியும் அவன் கேட்கவில்லை. அத்தகைய சந்திரன் இப்போதும் அதைத்தான் செய்துள்ளான். அதனால் அவனது தேகநலிவு நீங்கவேண்டுமானால், புண்ணியஷேத்திரமான பிரபாசத்திற்குப் போய் சிவபெருமானை வணங்க வேண்டும்" என்றார்.

அதைக்கேட்ட தேவர்கள் சந்திரனை அங்கு அழைத்துச் சென்று ஒரு தீர்த்தத்தை உருவாக்கி, அதில் ஏனைய தீர்த்தங்களையெல்லாம் வரவழைத்து பார்த்திவ லிங்கத்தைப் பிரதிட்டை செய்து, சிவபூசை செய்யும்படி சந்திரனுக்குச் சொன்னார்கள். அவ்வாறு சந்திரன் செய்யச் சிவபெருமான் அவன் முன்தோன்றி, "சந்திரா, நீ பெற்ற சாபத்தில் இருந்து தப்ப வழியில்லை. அதனால் நீ பதினைந்து நாட்கள் தேயவும், பின் பதினைந்து நாட்கள் வளரவும் அருள்கிறேன்" என்றார். அதனால் மகிழ்ந்த தேவர்கள் சிவபெருமானை வணங்கி, "தேவரீர் இவ்விடத்தில் பார்வதி பிரமதகண சமேதராய், சந்திரனின் பெயரால் எழுந்தருளல் வேண்டும்" என்றனர். அவர்கள் அங்கு தோண்டிய தீர்த்தத்திற்குச் சந்திரகுண்டம் எனப் பெயரிட்டனர். இப்போது உங்களுக்கு நான் மல்லிகார்சன லிங்க மகிமையை சொல்கிறேன்".

முன்பு சுப்பிரமணியர் உலகை சுற்றி வருமுன் கணபதிக்குத் திருமணம் முடிந்தமையால் அவர் கோபங்கொண்டு கிரௌஞ்சகிரியை அடைந்து தங்கியிருந்தார். பலர் சொல்லியும் சமாதானம் அடையாது அங்கு தங்கியிருந்தமையால் சிவபெருமானும் பார்வதியும் சுப்பிரமணியர் இருக்கும் இடத்திற்குச் செல்ல, சுப்பிரமணியக்கடவுள் அவர்கள் இருக்கும் இடத்தில் இருந்து மூன்று போசணை தூரத்திற்குச் சென்றார். அங்கு சென்ற சிவபெருமானுக்கு மல்லிகார்ச்சுனேசர் என்ற பெயர் உண்டானது.

மாகாள ஓங்கார லிங்கத்தின் மகிமை

"சுவாமி, சோதிலிங்கத்தின் மகிமைகளை நாங்கள் மேலும் கேட்க விரும்புகிறோம்" என்று முனிவர்கள் கேட்டார்கள்.

"முனிவர்களே, அவந்திகாபுரி என்ற ஊரில் சிவபெருமானின் மீது பேரன்பு கொண்ட வேதப்பிரியன் என்ற பிராமணன் சிவனின் அருளால் உயர்பதவியை அடைந்தான். அவனுக்குத் தேவப்பிரியன், வேதன், கவிதரன், தர்மவதி என்று நான்கு பிள்ளைகள் இருந்தனர். அவர்கள் சிவனின்மீது பேரன்பு பூண்டு சிவபூசை செய்து வந்தனர். அப்போது இரத்தினமாலா என்ற அரசன் அந்நகரை ஆண்டு வந்தான். அவன் சிவன்மீது வெறுப்புக் கொண்டு சிவநிந்தனை செய்து வந்தான். அவன் சிவத்தலங்களை அழித்து வந்தான். அவர் ஒருநாள் அவந்திநகரை அடைந்து அங்குள்ள பிராமணர்களை வருத்திச் சிவபூசை செய்யக்கூடாது என்று கட்டளையிட்டான். அத்துடன் அந்நகரத்தில் சிவபூசை செய்யக்கூடாது என்றும் கட்டளையிட்டான். அங்குள்ள பிராமணர்கள் அவனது கட்டளையை மதிக்காது மிகவும் தீவிரமாகச் சிவபூசை செய்து வந்தனர். அதனால் கோபங்கொண்ட அரசன் அவர்களைக் கொடுமையாகத் தண்டித்தான். அப்பொழுது சிவலிங்கத்தில் இருந்து மங்களேஸ்வரர் தோன்றி அவர்களை அழித்தார். சிவபெருமான் தோன்றி, "பிராமணர்களே, எதற்கும் அஞ்சாது சிவபூசை செய்யுங்கள். இப்பொழுது நீங்கள் விரும்பும் வரங்களைக் கேளுங்கள்" என்றார். பிராமணர்கள் அவரை வணங்கி, "எம்பெருமானே, எமக்கு முத்தியருளி இங்கு எழுந்தருளி இருக்க வேண்டும்" என்றனர். அதன்படி சிவபெருமான் மங்களேஸ்வரர் என்ற நாமத்துடன் அங்கு வந்து அமர்ந்தார். இனி நான் உங்களுக்கு ஓங்காரேஸ்வர சோதிலிங்கத்தின் மகிமையைச் சொல்கிறேன்" என்று சொல்லிச் சொல்லத் தொடங்கினார். "ஒரு சமயம் நாரதர் வித்தியபுரிக்கு வந்தார். அவரை வரவேற்று உபசரித்து அரச சபையில் இருத்தியபோது விந்தன் கேட்டான். "நான் எல்லா இன்பங்களையும் அனுபவித்து வருகிறேன். எனக்கு எந்தக் குறையுமில்லை" என்றான். அதைக்கேட்ட நாரதர் அவனைப் பரீட்சிக்க விரும்பிப் பெருமூச்சு விட்டார். அதனால் துயரமடைந்த விந்தன், "முனிவரே நீர் பெருமூச்சு விட்டதன் காரணம் என்ன" என்று கேட்டான் "உன்னிடம் எல்லாம் இருப்பினும் மேருமலை உன்னைவிடப் பெரியதாகவும், புனிதமுடையதாகவும் இருக்கிறது" என்றார். "அதைக்கேட்ட விந்தன் சிவபூசை செய்து

மேருமலையை வெல்வேன்" என்றுகூறி ஆறுமாதங்கள் இடைவிடாது சிவபூசை செய்தான். அதனால் சிவபெருமான் அவன் முன் தோன்றி; "உனது விருப்பம் என்ன?" என்று கேட்டார். அதற்கு அவன் "எல்லாவற்றையும் விட நான் உயர்வாக வளர வேண்டும்" என்றான். அதை அவனுக்கருளிய சிவபெருமான், "அதனால் நீ இறுமாப்படைந்தால், அப்பேருருவம் எனது அடியவரால் சிறிதாக அடங்கும்" என்றார். அப்போது தேவர்களும், முனிவர்களும் அங்கு வந்து "எம்பெருமானே, தாங்கள் இங்கு எழுந்தருளி இருக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தனர். அதன்படி சிவபெருமான் அங்கு அமர்ந்து கொண்டார். ஓங்காரயந்திரத்தில் சுயம்புலிங்க மூர்த்தம் ஒன்றும் அவன் பூசித்த பார்வதி லிங்க மூர்த்தம் ஒன்றும் அங்கு விளங்குகிறது. அவற்றிற்கு ஓங்காரேசுரம், அமரேசுவரம் என்ற பெயர்கள் வழங்குகின்றன. இதுவே ஓங்காரேஸ்வரயோதி லிங்கமாகும். பீமாசுரன் சங்கரரின் கதையைக் கூறுகிறேன்" என்றார் சூதமுனிவர்.

"முனிவர்களே கும்பகர்ணனுக்கும் கற்றடி என்ற பெண்ணுக்கும் பீமன் என்ற அசுரன் பிறந்தான். அவன் தனது தாயிடம் தனது தந்தை எங்கே?" என்று கேட்க அவள் உனது தந்தையை இராமன் கொன்றுவிட்டான். பின் எனது பெற்றோரை கதீஸ்ணன் என்ற முனிவர் சாபமிட்டுச் சாம்பலாக்கி விட்டார்" என்றாள். அதைக்கேட்ட பீமாசுரன், "நான் கும்பகர்ணனுக்கு உண்மையில் மகனாக இருந்தால் எனது தந்தையைக் கொன்ற இராமரையும், அந்த முனிவரையும் கொல்லாது விடமாட்டேன்" என்று சபதமெடுத்துப் பிரமதேவரைக் குறித்து ஒரு காலில் நின்று தவம் செய்தான். அதனால் அவனது தேகத்தில் இருந்து வெளிப்பட்ட அக்கினி தேவர்களைத் தாக்கத் தேவர்கள் பிரமதேவரிடம் சென்று அவன் கேட்கும் வரத்தைக் கொடுக்கச் சொன்னார்கள். அதனால் பிரமதேவர் அவன் முன் தோன்றி; "உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்க "அவன் எனக்குப் பெரும் பலத்தைக் கொடுக்க வேண்டும்" என்று கேட்டான். பிரமதேவர் அவன் கேட்ட வரத்தைக் கொடுத்தார்.

அவ்வரத்தைப் பெற்ற பீமாசுரன் காமரூபதேசத்தைக் கைப்பற்றி அதை அரசாண்ட பிரியதர்சனையும் அவனது மனைவியான தட்சினை என்பாளையும் சிறையில் அடைத்தான். அவர்கள் இருவரும் சிறையில் சிவபூசை செய்து கொண்டிருந்தனர். அதேநேரம் பீமாசுரன் சகல உலகங்களையும் வென்று புண்ணிய கர்மங்களை நாசப்படுத்திக் கொண்டிருந்தான். அதனால் தேவர்களும், முனிவர்களும் சிவபெருமானை நினைத்துத் தவமிருந்து அவனை அழிக்கும்படி வேண்டினர்".

அதேநேரம் சில அசுரர்கள் பிரியதர்மன் சிறையில் தன்னை அழிக்கச் சிவபூசை செய்கிறான். என்று அறிந்த பீமாசுரன் பிரியதர்மனைக் கொல்லும் நோக்கோடு சென்று, "என்ன செய்கிறாய். உண்மையைச் சொல்" என வாளை உருவினான். பிரியதர்மன் சத்தியவான். "நான் சிவபூசை செய்கிறேன். சிவபெருமான் எனது துன்பங்களைப் போக்குவார்" என்றான்.

“உமது சிவபெருமானை எனது தந்தையின் சகோதரனான இராவணன் மலையோடு தூக்கியவன். அதனால் சிவபூசையை விட்டுவிடு” என்று அதட்டினான்.

“சிவன் அல்ல, நானே அண்டங்கள் அனைத்திற்கும் தெய்வம். முடிந்தால் உனது தெய்வத்தை அழை” என்றான் செருக்குடன். உடனே அவன் வழிபட்ட பார்த்திபலிங்கத்தில் இருந்து சிவபெருமான் தோன்றி, “இவன் எனது பக்தன். ஆதலால் அவனைக் காப்பது எனது கடமை” எனக்கூறி அவனைத் தாக்க அசுரர்படை சிவனைத் தாக்கியது. அப்போது அங்கே வந்த நாரதர், சிவபெருமானை வணங்கி, “மகாதேவா, இந்த அற்பனை அழிக்கப் பெரும் போர் செய்ய வேண்டுமா?” எனக் கேட்கச் சிவபெருமான் உறும அவ்வுறுமல் பல்வேறு ஆயுதங்களாக உருமாறிப் பீமாசுரனையும், அசுரர்களையும் கொன்றொழித்தது. பின் சிவபெருமான் சாந்தமடைந்து முனிவர்களின் வேண்டுதலுக்காக அங்கே பீமா சங்கரர் என்ற திருப்பெயரோடு எழுந்தருளினார்” என்றார் சூதமுனிவர்.

காசியின் மகிமை

“சிவநேயர்களே, விஸ்வேஸ்வர லிங்கத்தின் மகிமைகள் பற்றிக் கூறுகிறேன். கேழுங்கள் தேஜசில் இருந்து பிரகிருதியும், புருடனும் தோன்றி, “நம்மைப் படைத்தவர் யார்” என்று யோசித்துக் கொண்டிருந்தபோது, பரமான்மாவிடமிருந்து ஓர் அசரீரி எழுந்தது. “அது தவஞ் செய்த பின்பே படைப்புத் தொழிலைச் செய்ய வேண்டும்” என்று கூறியது. அதன்படி புரிசனான விஷ்ணு படைப்புத் தொழிலை விரும்பித் தவஞ்செய்தார். அதிக காலம் தவம் செய்தமையால் அவருக்குக் களைப்பு உண்டானது. அத்துடன் வியர்வை உண்டாகி பிரபஞ்சம் முழுவதும் வியாபித்தது. அதைக் கண்டு விஷ்ணு அதிசயித்தபோது சிவபெருமானின் காதில் இருந்த ஒரு மணி விழுந்தது. அதனால் அந்த இடத்திற்கு மணிகர்ணிகை என்ற பெயர் உண்டானது. மகாவிஷ்ணு அவ்விடத்தில் போகநித்திரை செய்தபோது பிரமதேவர் விஷ்ணுவின் நாபிக்கமலத்தில் இருந்து தோன்றினார். இவ்விதம் தோன்றிய பிரமதேவர் சிவபெருமானின் கட்டளைப்படி படைப்புத் தொழிலைத் தொடங்கினார். முதலில் சிவபெருமான் ஒரு ஆகாய நகரத்தை உருவாக்கித் தனது சூலத்தினால் அதைத் தாங்கிக் கொண்டிருந்தார். அதன்பின் ஆகாய நகரத்தைத் தனது திரிசூலத்திலிருந்து விடுவித்தார். இன்பத்தைக் கொடுப்பதும், சம்சார கர்மங்களை உடையதும், லிங்கத்தை உடையதுமான அந்த நகரத்தை மானிடர்கள் ஒருபோதும் விடக்கூடாது என்று திருவுளம் கொண்ட சிவபெருமான் அதற்குக் காசியெனப் பெயரிட்டார். கர்மங்களை நாசஞ் செய்வதால் இதற்குக் காசியெனப் பெயரிட்டார். அங்கிருக்கும் அவிமுத்த லிங்கமானது காசியில் மகாபாவிகளுக்கு மோட்சத்தை அளிக்கிறது”.

“மாதவர்களே, காசியில் மட்டும் தான் இறைவனோடு ஒன்றாகக் கலக்கும் உத்தமமுத்தி பெறப்படுகிறது. அதனால் தேவர்களும் காசியிலேயே இறக்க விரும்புவர். சிவபெருமான் ஒருசமயம் பார்வதி தேவியுடன் காசிக்கு வந்து தனது ரூபமான அவிமுத்த லிங்கத்தை எல்லோருக்கும் காண்பித்து, அதன் மகிமையைச் சொன்னார். பின்னர் அவ்வூர் அரசன்; “தேவதேவரே, இந்த நகரத்தை ராசதானியாக்க வேண்டும். எப்போதும் நீங்காது இங்கிருந்து எமக்குத் தரிசனம் தரல்வேண்டும். இங்கு வரும் எல்லோருக்கும் முத்தி அளித்தல் வேண்டும்” என்று வேண்டச் சிவபெருமான் தனது பிரமகபாலத்தைப் பிரதிட்டை செய்து அவ்விடத்தில் எழுந்தருளியிருக்க உடன்பட்டார்.

சிவபெருமான் முன்பொருகாலத்தில் அகில உலகங்களுக்கும் சென்று வருகையில் பிரமலோகம் வந்தடைந்தார். பிரமதேவர் மகிழ்ந்து அவரை வரவேற்று உபசரித்தார். அவரது ஐந்து திருமுகங்களில் நான்கு சிவபெருமானைப் புகழ, ஒரு முகம் அவரை மிகக் கேவலமாக இகழ்ந்தது. அதனால் இகழ்ந்த அந்த முகம் நல்ல முகங்களுடன் கூடி இருக்கக்கூடாதென்று நினைத்த சிவபெருமான் அந்த இகழ்ந்த அந்த முகத்தை தனது திருவிரல் நகத்தால் கிள்ளி எறிந்தார். அந்தமுகம் சிவபெருமானைப் பின்தொடர்ந்து வந்து அவர் காசியை அடைய, அவரை விட்டு விலகியது. சிவபெருமான் காசியில் அமர அதுவும் ஒரு காரணமாகும்” என்று சூதமுனிவர் கூற முனிவர்கள், “மகா முனிவரே, பிரமன் தனது நான்கு வாய்களினாலும் சிவபெருமானைப் புகழ அந்த ஒரு வாய் ஏன் இகழ்ந்தது” என்று கேட்டனர்.

“முனிவர்களே, பிரமதேவர் தான் படைத்த சரஸ்வதியின் அழகில் மயங்கி அவளைத் தன்னைத் திருமணம் செய்யும்படி வற்புறுத்தினார். அதற்குச் சரஸ்வதி, “பெரியவரே நீரே என்னைப் படைத்துவிட்டுத் தகாத வார்த்தைகளைப் பேசலாமா...? இது தருமமா என்று கேட்கப் பிரமதேவர் அதை லட்சியம் செய்யாது தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டிருந்தார். அதனால் கோபங்கொண்ட சரஸ்வதி, “புத்திரி என்றும் பாராமல் தகாத வார்த்தைகளைக் கூறிய உனது வாயானது இப்படியே தகாத வார்த்தைகளைப் பேசிக் கொண்டிருக்கட்டும். ஒரு காலத்தில் சிவபெருமான் அதைத் தண்டிப்பார்” என்று சாபமிட்டாள். அதனால் தான் பிரமனது ஒரு தலை கிள்ளி எறியப்பட்டது. விஸ்வேஸ்வர லிங்க மூர்த்தமாகச் சிவபெருமான் குடிகொண்டதன்பின் காசி புனிதப்பிரதேசமானது. இங்கு வருவோரும், இதன் மகிமையைக் கேட்போரும் சகலவிதமமான இன்பங்களையும் அனுபவித்து முத்தியடைவர்” என்றார் சூதமுனிவர்.

காசியின் இரகசியங்கள்

“சிவஞானச் செம்மலே, காசியின் மகிமையை விரிவாகச் சொல்லுங்கள்” என்று முனிவர்கள் கேட்கச் சூதமுனிவர் சொல்லத் தொடங்கினார்.

“முனிவர்களே, ஒரு சமயம் பார்வதிதேவி சிவபெருமானை அன்புடன் பணித்து நாதா, எனக்குக் காசியின் மகிமையை விரிவாகச் சொல்லுங்கள்” என்று கேட்கச் சிவபெருமான், பார்வதிதேவியின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யவும், அவற்றை உலகோர் அறிந்து கொள்வதற்குமாக அதைச் சொன்னார். “தேவி, இந்த இடம் மிகவும் இரகசியமானது. எனக்கு மிகவும் பிரியமானது. இலகுவில் எல்லோருக்கும் மோட்சமளிப்பது இங்கிருந்து. பற்றற்று என்னை வணங்குவோர் ஐம்பொறிகளையும் வென்று என்னை வந்தடைவர். என்னிடம் அன்புடையவனும், பற்றற்றவனும், சமமான மனத்தை உடையவனும், கோபமற்றவனும், சிவஞானமுடையவனுமானவர்களுக்கும் உனக்கும் பேதமில்லை. அவனைக் காண நானும் தேவர்களும் எப்போதும் விரும்புவோம். அவன்தான் சீவன்முத்தன். அவனைவிட விதவை, மலடி, தோசம் உள்ளோர், பாவிகள், மூர்க்கர்கள் இப்படியானோர் இப்புனித பூமியில் இறந்தால் அவர்களும் மோட்சமடைவர். அதனால் இந்நகருக்கு அவிமுக்தம் என்ற பெயருண்டு. இத்தலம் தலச்சிறப்பு, தீர்த்தச்சிறப்பு, மூர்த்தி மகிமை ஆகிய மூவகைச் சிறப்புக்களையும் உடையது. இங்கு வந்து என்னை வணங்குவோர் எண்ணிக்கையில் அடங்காதவர்கள். எதை நினைத்து வணங்குகிறார்களோ அது இங்கு இலகுவில் கிடைக்கும். குபேரன், பராசரன், வேதவியாசன், திருமால், திருமகள், பிரமன், அட்டவசுக்கள், இந்திரன், சூரியன், சிவயோகிகள் போன்றோர் தினமும் என்னைப் பிரார்த்தித்துக் கொண்டு இங்கு இருக்கின்றனர். இங்கு மாண்டவன் எவனும் தாயின் கர்ப்பத்தை அடைய மாட்டான். இங்கு பிரமனால் பிரதிட்டை செய்த லிங்கம் ஒன்றுள்ளது. அது கைலாயத்திற்குச் சமமானது. அந்த லிங்கத்தைப் பிரமா கையில் வைத்துக் கொண்டிருக்க மகாவிஷ்ணு அதை வாங்கித் தானே பிரதிட்டை செய்தார். அதனால் பிரமன் கோவிக்க, “பிரமனே, நான் சிவபக்தன். அதனால் அதை நீ செய்ததாகவே உலகோர் கருதுவர்” என்று விஷ்ணு கூறினார். எனினும் அதில் திருப்திப்படாத பிரமன் வேறொரு லிங்கத்தைப் பிரதிட்டை செய்தார். அதில் நான் லீனமாக இருந்ததால் லீனேஸ்வரன் என்ற பெயர் எனக்கு உண்டானது. அத்துடன் தேவர்களைத் துன்புறுத்திய அசுரேசன் என்பவன் கொடிய புலியின் உருவத்தை எடுத்துத் தேவர்களைத் துன்புறுத்தினான். அதனால் அவனை அழித்தேன். அத்துடன் எனக்கு இவ்விடம் பிடிக்கும் என்று அறிந்து உனது தந்தை இங்குவந்து ஒரு லிங்கத்தைப் பிரதிட்டை செய்துள்ளார். வருணா, அசி என்ற இரு நதிகள் இங்கு செல்வதால் வரணாசி என்ற பெயர் இதற்கு ஏற்பட்டது. அவ்விரு நதிகளும் சங்கமமாகும் இடத்தில் பிரமன் ஒரு லிங்கத்தைப் பிரதிட்டை செய்துள்ளான்” என்று சிவபெருமான் கூறப் பார்வதிதேவி, “நாதா, இங்கு கர்மமில்லாத சந்யாசி, முனிவர்கள், சிவபக்தர்கள் முத்தியடைவது போலச் சண்டாளரும் இங்கு முத்தியடைவது எனக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. இறப்பவன் தன் குடும்பத்தவர்களில் பற்றுக் கொண்டானேயானால் அதற்கேற்ப பிறப்பை எடுப்பான் என்று வேதங்கள் கூறுகின்றன. ஆனால் அப்படி நினைப்பவர்களுக்கும், இங்கு மோட்சம் கிடைக்கும் என்று கூறுவது வியப்பளிக்கிறது” என்று கூறிச் சிவபெருமான் அதற்கான காரணத்தைச் சொல்லத் தொடங்கினார்.

வினைப்பயனும் காசியாத்திரைப் பயனும்

“பார்வதி, மிகவும் நல்லதொரு கேள்வி கேட்டாய். பாவமற்றவன் இத்தலத்தில் இறந்தால் உடனே மோட்சமடைவான். பாவி இத்தலத்தில் இறந்தால், சில பிறவிகளை எடுத்துச் செய்த பாவங்களைக் கழித்த பின்பே மோட்சமடைவான். பாவம் செய்தவன் பசு ரூபத்தையடைந்து காலவைரவரால் பத்தாயிரம் ஆண்டுகள் தண்டிக்கப்பட்ட பின்பே மோட்சமடைவான். நற்கருமங்கள் மூவகைப்படும். காசி முதலிய புண்ணிய பூமிகளில் வணங்குவதால் ஒன்று. நிவாரணப்படி பிராயச் சித்தங்களைச் செய்து கொண்டு பாவங்கள் ஒழித்தல் இரண்டு. என்னை வணங்கிக் கொண்டு காசியில் வாசஞ் செய்வது மூன்றாவதாகும். அதுபோல கர்மங்களும் மூவகைப்படும். அவை சருசிதம், பிராரத்தவம், ஆகாமியம் எனப்படும். பூர்வஜென்மத்தில் செய்தவை சஞ்சிதம். அந்தச் சஞ்சித வினையால் வேறு பிறப்பை அடைந்து அனுபவிப்பது ஆகாமியம். அந்த ஆகாமியம் உடலால் அனுபவிக்கப்படும்போது பிராரத்துவம். இது அனுபவிக்காமல் நாசமடையாது. இவை நீங்கவேண்டுமானால் காசிக்குப் போகவேண்டும். காசிக்கு எல்லோராலும் செல்ல முடியாது. ஒருவன் காசிக்குப் போகவேண்டும் என்று நூறு பிறவிகளில் எண்ணினாலும் அதற்குப் பல தடைகள் உண்டாகும். உலகில் உள்ள சிவத்தலங்கள் முழுவதையும் தரிசித்தவர்களுக்குத்தான் காசித் தலத்திற்குச் செல்லும் வாய்ப்பு உருவாகும்.

அவன்தான் அங்கு வசித்து இறப்பான். காசித்தலத்திற்குச் செல்பவனின் ஆகாமிய சஞ்சிதங்களை ஒழித்தாலும் உடல் உள்ள வரையில் விடாமல் அது தொடரும். ஆகையால் பிராரத்துவத்தை அனுபவித்தே தீரவேண்டும். கர்மத்திற்கு மூன்று பாவங்கள் உண்டு. அவை காசியை அடைந்ததும் பின்தொடராது அற்றுவிடும். காசியில் இறந்தவனுக்கு மீண்டும் பிறப்பில்லை. பிரயாகையில் இறந்தவனுக்கு இஷ்டகாமியங்கள் கைகூடுவது நிட்சயம். பிரயாகைக்குப் போகாவிட்டால் திரிவேணி சங்கமத் தரிசனத்தால் பயனில்லை. பிரயாகையில் இறந்தாலும் மோட்சகாமியாக இருந்தால் முத்தி கைகூடும்” என்று சிவபெருமான் கூறினார். அதனால் பார்வதி மகிழ்ச்சியடைந்தாள். அதுமுதல் சிவபெருமான் விஸ்வநாதர் என்ற பெயருடன் பார்வதி சகிதமாகக் காசியில் எழுந்தருளியிருக்கிறார்” என்றார் சூதமுனிவர்.

அகல்யா குளத்தில் நீர் எடுத்த தகராறு

“அவற்றைக் கேட்ட முனிவர்கள், “மாமுனிவரே, சகல பாவங்களையும் போக்கடிக்கும் திரியம்பகேஸ்வரப் பிரபாகத்தைப் பற்றிக் கூறுங்கள் என்று கேட்கச் சூதமுனிவர்” கூறத் தொடங்கினார்.

“மிகவும் தவவலிமை பொருந்திய கௌதம முனிவர் தனது மனைவியான அகல்யையுடன் பிரமகிரியில் பத்தாயிரம் ஆண்டுகள் தவஞ் செய்தார். அப்போது மழை

பெய்யாமையால் பெரும்பஞ்சம் உண்டானது. மரம், செடி, கொடிகள் யாவும் பட்டன. தானிய வகைகளை விளைவிக்க முடியவில்லை. மிருகங்களும், மனிதர்களும் நீர் இன்மையால் இறந்தனர். அதைக் கண்டு வேதனைப்பட்ட கௌசிக முனிவர் வருணபகவானைப் பிரார்த்திக்க, வருணபகவான் அவர் முன் வந்தான். "பகவானே பலகாலம் நீ மழையாய்ப் பெய்யாமையால் எல்லா உயிர்களும் துன்பப்படுகின்றன. அத்துன்பத்தை மழையைப் பெய்து போக்கு" என்று வணங்கினார். அதற்கு வருணபகவான், "சிவனின் கட்டளைப்படி தான் நான் செயற்படுவேன். அதனால் வேறு வரம் கேள்" என்றார்.

கௌதம முனிவர் பலவாறு இரந்தமையால் வருணன் இரக்கப்பட்டு, "ஒரு குளம் வெட்டும்" என்றான். கௌதம முனிவர் குளத்தை வெட்ட அக்குளத்திலிருந்து நீர் பெருகியதால் அவ்விடம் சோலையானது. அதை அறிந்த முனிவர்கள் கௌதமரின் உதவியுடன் அங்கு வந்து குடியேறினர். அதுபோல மக்களும், மிருகங்களும், பறவைகளும் அங்கு வந்து சேர்ந்தனர்.

அப்படி இருக்கும் நாளில் ஒருநாள் கௌதம முனிவர் தனது சீடர்களிடம் சந்தியாவந்தனம் செய்ய நீர் கொண்டு வாருங்கள் என்று சொல்ல, அவர்கள் நீரை எடுக்கக் குளத்திற்குச் சென்றபோது அங்கு நீரெடுக்கவந்த ரிசிபத்தினிகள் அவர்களை நீரெடுக்கவிடாது தடுத்தனர். அதை அறிந்த அகலிகை அங்கு சென்று சமாதானம் செய்து சீடர்களை நீர் எடுக்க வைத்தாள். அதன்பின் நீர் எடுப்பதில் அகல்யாவுக்கும் ரிசிபத்தினிகளுக்கும் பெரும் முரண்பாடு ஏற்பட்டது. அதை அறிந்த ரிசிகள் தமது பத்தினிமாருக்கு நல்லுபதேசம் செய்தும், அவர்கள் அதைப் பொருட்படுத்தாது அகல்யாவுடனும் சீடர்களுடனும் முரண்பட்டுக் கொண்டிருந்தனர். அதனால் ரிசிகள் ஒன்றுகூடிக் கௌதம முனிவரை அங்கிருந்து அகற்றுவதெனத் தீர்மானித்தனர். அதற்காக அவர்கள் விக்கினேஸ்வரப் பெருமானைப் பூசித்தனர். அவர்களது பூசையால் மகிழ்ந்த விக்கினேஸ்வரப் பெருமான் அவர்கள் முன் தோன்றி, "உங்களுக்கு என்ன வரம் வேண்டும்" என்று கேட்டார். "பெருமானே, எமது தவத்திற்கும், வாழ்விற்கும் கௌதம முனிவரும் அவரது மனைவியும் தடையாக இருக்கின்றனர். அவர்களை இங்கிருந்து வெளியேற்ற வேண்டும்" என்றனர். அதைக் கேட்ட விக்கினேஸ்வரப் பெருமான், "கௌதமரும் மனைவியும் பெரும் சிவபக்தர்கள். அதைவிட இது அவர்களின் பிரதேசம். நீங்கள் இரந்து வேண்டியதால் அவர் உங்களைக் குடியேற அனுமதித்தார். அதனால் அவரை எதுவும் செய்ய முடியாது. வேறு வரம் கேளுங்கள்" என்றார். ஆனால் ரிசிகள் மதிமயக்கத்தால் அதையே கேட்டனர்.

"முனிவர்களுக்கு ஒழுக்கமும், நீதியும்தான் பிரதானம். இரண்டும் இருந்தால் தவம் செய்யத் தேவையில்லை. நீங்கள் காம ஆசைகொண்டு மனைவியரின் விருப்பைப் பூர்த்தி செய்யவே தவம் செய்தீர்கள். அதற்கான பயனை அடைவீர்கள்" என்று விக்கினேஸ்வரப் பெருமான் கூறி மறைந்தார்.

சில நாட்களின் பின் விக்கினேஸ்வரப் பெருமான் ஒரு கிழப்பசுவின் வேடம் பூண்டு கௌதமரின் கோதுமை வயலில் மேய்ந்தார். அதைக்கண்ட கௌதமர் ஒரு பிடி வைக்கோலை எடுத்து வீச அது அப்பசுவின் மீது பட்டதும் அது விழுந்து இறந்து விட்டது. அதனால் கோபங்கொண்ட ரிசிகளும் பத்தினிகளும் கௌதமரைக் கண்டபடி ஏச அவர் அவ்விடத்தைவிட்டுச் சென்று வேறோர் இடத்தில் பசுவின் ஆத்ம ஈடேற்றப் பூசை செய்தார். இவ்வாறு பதினைந்து தினங்கள் கழிந்தன.

கௌதமர் அங்கிருந்த முனிவர்களை அழைத்துப் பரிகாரம் செய்யுமாறு கேட்டார். அவர்கள் முதலில் எதுவும் கூறவில்லை. பின்; "நீ செய்தது மகாபாவம். பசுக்கொலைக்கு எதுவும் ஈடாகாது. நீ செய்த பாவத்தை ஊர் முழுவதும் சொல்லிக் கொண்டு, "நான் பசுக்கொலை செய்த பாவம் தீரப் பிச்சைக்கு வந்தேன்" என்று கூறிப் பிச்சை எடுத்து உண். அத்துடன் கங்கையை இங்கே அழைத்து அதில் நீராடி கோடி பார்த்திவலிங்க அர்ச்சனை செய். அத்துடன் இந்தப் பிரமகிரியை பதினொருதரம் பிரதட்சினம் செய். அதன்பின் சத கும்பாபிஷேகம் செய்தால் பாவம் போகும்" என்றனர். அதன்படி கௌதமர் சிவபூசை செய்தபோது சிவபெருமான் பார்வதிதேவியோடு இடபவாகனத்தில் தோன்றி, "கௌதமா, நீ பாவங்களற்ற புண்ணியன். உன்னைக் கண்டவர்களின் பாவங்கள் ஒழிந்துபோய்விடும். முனிவர்கள் உன்மீது பொய்யாகக் குற்றஞ்சுமத்தி தமக்கு கேடு தேடிக் கொண்டனர்" என்று கூறக் கௌதமர், "எம்பெருமானே, அவர்கள் எனக்குத் தீமை செய்தமையால் தான் தங்களின் கிடைத்தற்கரிய காட்சி எனக்குக் கிடைத்தது. எனக்குத் தாங்கள் கங்கையைக் கொடுக்க வேண்டும்" என்று கேட்கச் சிவபெருமான் தனது தலையிலிருந்து பாய்ந்து செல்லும் கங்கை நீரை எடுத்துக் கௌதமருக்குக் கொடுத்தார். உடனே கங்கை ஒரு பெண்ணுருவெடுத்துக் கௌதமருக்குக் காட்சி கொடுத்தாள். அப்போது சிவபெருமான் "கங்கையே கௌதமரைப் புனிதராக்கு என்று கூறிக் கௌதமா, கங்காதேவியை வணங்கித், தாயே, நீ எம்மோடு இங்கிருக்க வேண்டும் என்று கேள்" என்றார். கங்கை சொன்னாள்; முழுமுதற் கடவுளான சிவபெருமான் இருக்கும் இடத்தில் தான் நான் இருப்பேன். அதனால் சிவபெருமானும் பார்வதிதேவியும் இங்கிருத்தல் வேண்டும்" என்றாள். அதற்குச் சிவபெருமான் சம்மதித்தார். அத்துடன் அந்த நாள் முதல் சிம்மராசியில் குரு பிரவேசிக்கும் போதெல்லாம் தேவர்கள் எல்லோரும் அங்கு வந்து நீராடித் தாம் செய்த பாவங்களை நீக்குவர். கௌதமரைக் கேலிசெய்து அவமானப்படுத்திய முனிவர்கள் அவற்றைக் கேள்விப்பட்டு அங்கே வந்தார்கள். அவர்களைக் கண்ட கங்காதேவி மறைந்து செல்ல விரும்பினாள். அதை உணர்ந்த கௌதம முனிவர், "தேவியே; இவர்கள் எனக்குச் செய்த தீமைகளால்தான் இவ்வளவு பெருமைகளும் எனக்கு வந்தன. அதனால்தானே நீ இங்கு தங்க ஒப்புக்கொண்டாய். தீயவர்கள் தமது தவறை உணர்ந்தால் மன்னிப்பது தெய்வங்களின் கடமை. அதனால் இவர்களை மன்னித்து இவர்கள் செய்த பாவங்களை எனக்காக நீக்கு என்றபோது கங்கையால் அதை மறுக்க முடியவில்லை" என்றார் சூதமுனிவர்.

இராவணன் பெற்ற வரம்

சூதமுனிவர் அதன்பின்பு வைத்திய நாகேஸ்வரலிங்கத்தின் மகிமையைக் கூற ஆரம்பித்தார். "சௌனகாதி முனிவர்களே, ஒரு சமயம் இராவணன் கைலையங்கிரிக்குச் சென்று சிவபெருமானை மிகுந்த சிரத்தையோடு வணங்கியபோது, சிவபெருமான் அவன் முன் தோன்றாமையால், அவன் கிமோத்சிரியில் ஒரு யாககுண்டம் தோண்டி யாகம் செய்தான். அப்போதும் சிவபெருமான் அவனுக்குக் காட்சி கொடுக்காததால் அவன் தனது தலைகளை வெட்டி யாககுண்டத்தில் இட்டபடி இருந்தான். அப்படியும் சிவபெருமான் தோன்றாமையினால் தனது ஒன்பது தலைகளையும் வெட்டிப் போட்டுவிட்டுப் பத்தாவது தலையை வெட்டியபோது, சிவபெருமான் அவனது கையைப் பிடித்தார். பின்பு, "உனக்கு விருப்பமான வரங்களைக் கேள்" என்றார். அதற்கு இராவணன், மகேஸ்வரா எந்தப் பகைவனும் என்னை வெல்லமுடியாத பலத்தை எனக்கு அருள வேண்டும். அத்துடன் வெட்டப்பட்ட தலைகள் மீண்டும் எனக்குண்டாக வேண்டும்" என்றான். சிவபெருமான் அவற்றை அருளி மறைந்தார். அதை அறிந்த தேவர்கள் கவலை கொண்டு செய்வதறியாது தடுமாறினர். அப்போது அங்கு வந்த நாரதர், "தேவர்களே, கவலை கொள்ளாதீர்கள். சிவன் வரமளிக்கும்போது ஆராயாமல் தாம் கேட்டதைக் கொடுத்து விடுவார் என்றுதான் அரக்கர்கள் நம்புகின்றனர். அது மாற்றமடையும். அதனால் கவலை கொள்ளாதீர்கள்" என்று கூறிவிட்டு இராவணனிடம் சென்ற நாரதர்; "இனி உனது வலிமைக்கு முன் யாரும் நிற்க முடியாது. சிவனை நீ எவ்வாறு வணங்கினாய். என்னென்ன வரங்களை வேண்டிப் பெற்றாய் சொல். அத்துடன் அவ்வரம் செல்லுமா என்று பரீட்சித்துப் பார்க்க வேண்டும்" என்றார். இராவணன் மிக்க மகிழ்வுடன் அவற்றைச் சொன்னான். அப்போது நாரதர், "இராவணா, வரத்தைப் பரீட்சித்துப் பார். அதற்கு நான் ஓர் உபாயம் சொல்கிறேன். சிவபெருமானும் உமையும் பள்ளிகொண்டுள்ள திருக்கைலாயமலையைப் பெயர்த்துத் தூக்கினால்தான் சிவபெருமான் தந்த வரத்தை நம்பலாம்" என்றார். அதைநம்பிய இராவணன் கைலையங்கிரியை அடைந்து அம்மலையைத் தூக்கினான். பூகம்பம் உண்டானது போல மலை அசையப் பார்வதிதேவியும், தேவர்களும் பயந்து நடுங்கினர். அதைக்கண்ட சிவபெருமான் கோபங்கொண்டு, "இராவணா, எமது மலையைத் தூக்கிய உனது கரங்களை விரைவில் ஒருவன் சங்கரிப்பதற்காகத் தோன்றுவான்" என்றார். அதைக் கேளாத இராவணன், சிவன் தந்தவரம் உண்மையானது என்று நினைத்து மகிழ்ந்தான். அதன்பின் சகல அண்டங்களிலும் உள்ளவர்களையும் துன்புறுத்தி வந்தான் என்றார் சூதமுனிவர்.

பறக்கும் வனம்

“முனிவர்களே, இனிப் போகேஸ்வரசோதி லிங்கத்தின் மகிமையைக் கூறுகிறேன் கேளுங்கள். ஒரு காலத்தில் தாருகை என்ற அரக்கி பார்வதிதேவியின் அருளைப் பெற்றுக் கர்வத்துடன் வாழ்ந்து வந்தாள். அவளது கணவன் தாருகன். அவன் வலிமைமிக்க அரக்கன். எல்லா அரக்கர்களையும் வென்று மாவீரனாகத் திகழ்ந்தான். அவன் யாகங்களையும், தர்மங்களையும் அழித்துக் கொண்டிருந்தான். அவள் மேலைக்கடற்கரையில் உள்ள பெரிய வனத்தை இருப்பிடமாகக் கொண்டிருந்தாள். அவ்வனம் பார்வதிதேவியின் அருளால் பறந்து நினைத்தவிடங்களுக்கெல்லாம் சென்று வந்தது. தாருகனும் தாருகையும் அந்த வனத்தில் பறந்து சென்று மக்களைத் துன்புறுத்தி வந்தனர். அதனால் அங்குள்ளவர்கள் மிகவும் தவவலிமையுள்ள ஔரவ முனிவரிடஞ் சென்று தாருகனும் தாருகையும் செய்யும் சிவத்துரோகங்களைக் கூறித் தம்மைக் காப்பாற்றுமாறு இரந்தனர். அவர்களின் துன்பங்களைப் போக்க எண்ணிய முனிவர், “நீங்கள் எதற்கும் அஞ்ச வேண்டாம் என்று கூறி” அவ் அரக்கர்கள் இனிமேல் யாகங்களைக் குழப்பினாலோ அல்லது தர்மங்களை அழித்தாலோ அல்லது சிவத்துரோகங்கங்களைச் செய்தாலோ செய்தவுடன் இறப்பர்” என்று சாபமிட்டார். அதை அறிந்த தேவர்கள் அவ் அசுரர்களை எதிர்த்துப் போர்செய்தனர். போரில் பெரும் தோல்வியடைந்த அரக்கர்கள் ஔரவ முனிவரின் சாபத்திற்கு அஞ்சி தருகையிடம் வந்து முறையிட அவள் பார்வதிதேவியை நினைத்துத் தாம் தங்கியிருக்கும் வனம் சமுத்திரத்தின் நடுவே சென்று அடையட்டும் என வேண்ட அவ் வனம் சமுத்திரத்தை அடைந்தது. அந்தவனம் சகல வசதிகளையும் கொண்டிருந்ததால் அரக்கர்கள் மகிழ்வுடன் வாழ்ந்தனர். இருந்தபோதும் அவர்கள் கடலில் பயணம் செய்வோரைக் கைது செய்து அவர்களின் பொருள்களைக் கைப்பற்றியதோடு அவர்களைத் துன்புறுத்திச் சிறையில் அடைத்தனர். அப்படி அடைக்கப்பட்ட வர்த்தகர்களுக்குள் சுப்பிரியன் என்ற சிவபக்தன் இருந்தான். அவன் சிறையில் இருந்தவர்களோடு சேர்ந்து பார்த்திவலிங்கம் அமைத்துச் சிவபூசை செய்து வந்தான். அவனுடன் சிறையில் இருந்த அனைவரும் பக்தியுடன் சிவபூசை செய்து வந்தனர். அன்று தன்னை மறந்தநிலையில் கண்களைமூடி மெய்மறந்து சிவபூசை செய்த சுப்பிரியனின் கண்களைச் சிவபெருமான் விழிக்க வைத்தார். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று அவதானிக்கவந்த அரக்கர்கள் சிவபெருமான் அங்கிருப்பதைக் கண்டு அதைத் தாருக்கனுக்குச் சொன்னார்கள். அதனால் அங்கு வந்த தாருக்கன், “நீ எப்படிச் சிவபூசை செய்கிறாய்” என்பதைச் சொல் என்று கேட்கச் சுப்பிரியன் அதைச் சொல்லவில்லை. அதனால் கோபங்கொண்ட தாருக்கன் அவர்களைக் கொல்லும்படி கட்டளையிட்டான். அரக்கர்கள் அவர்களைக் கொல்ல ஆயுதங்களுடன் வந்தபோது சுப்பிரியன் சிவபெருமானைத் தியானிக்க, உடனே ஒரு ஆலயம் நான்கு வாயில்களுடன் தோன்றியது. அதன் நடுவே சிவபெருமான் ஒளிமயமாகத் தோன்றி பாசுபதம் என்ற ஆயுதத்தைக் கொடுத்தார். அவ்வாயுதத்தால்

சுப்பிரியன் எல்லா அரக்கர்களையும் அழித்தான். அதைக் கண்ட தாருகை பார்வதிதேவியைப் பூசிக்கப் பார்வதிதேவி அவள் முன் தோன்றி, "உனக்கு என்ன வரம் வேண்டும்" என்று கேட்டாள். அதற்கு தாருகை, "தேவி, எனது வம்சம் அழியாதிருக்க வேண்டும்" என்றாள். அவ்வரத்தைக் கொடுத்துவிட்டுப் பார்வதிதேவி சிவபெருமானிடம் சென்றாள்.

"சிவபெருமான் மிகவும் மகிழ்வுடன் அவளை வரவேற்றார்; "சுவாமி, நான் அசுர வம்சத்தை இரட்சிப்பதாக வரம் கொடுத்துள்ளேன். தாங்களும் அதைச் செய்தல் வேண்டும்" என்றாள். எல்லாவற்றையும் அறிந்த சிவபெருமான், "நான் இங்கேயே இருந்து அசுரர்களால் தீமைகள் உண்டாகா வண்ணம் காப்பேன். மகாசேனராசனின் மகன் வீரசேனன் என்பவன் கலியுகம் முடிந்து கிருதயுகம் ஆரம்பமாகும் காலத்தில் என்னைப் பூசித்ததன் பயனாக சக்கரவர்த்தியானான். அவனுக்குப் பல்வேறுவிதமான தர்மங்களை உபதேசிக்க வேண்டும்" என்றார். அதன்பின் போகேஸ்வரன் என்ற பெயரில் அங்கு எழுந்தருளியிருந்தார்" என்றார் சூதமுனிவர்.

அப்போது, முனிவர்கள், "சுவாமி, வீரசேனன் என்ன காரணமாக அங்கு போனான்" என்று கேட்கச் சூதமுனிவர் சொல்லத் தொடங்கினார். "முனிவர்களே, தைசதம் என்ற பட்டணத்தில் மகாசேனராசனுக்கு வீரசேனன் புத்திரனாகப் பிறந்தான். அவன் பார்த்திபலிங்கப் பூசையைப் பன்னிரண்டு ஆண்டுகள் செய்து சிவபெருமானை வணங்கி மரத்தால் ஒரு மீனைச் செய்து, அதை ஈயத்தால் அலங்கரித்து, அதற்கு மாயாசக்தியை உண்டாக்கினான். அவ்வேளை சிவபெருமான் வீரசேனனிடம் வந்து, "வீர சேனா, நீ தாருகை வனத்திற்குச் சென்று அங்கு என்னால் பிரதிட்டடை செய்யப்பட்ட போகேஸ்வர லிங்கத்தை வணங்கி, அவரிடம் பாசுபதம் என்ற ஆயுதத்தைப் பெற்று பார்வதிதேவியின் பூரண ஆசியுடன் தாரகை தாருகன் போன்ற கொடிய அரக்கர்களையும் அவர்களது அரக்கப் படைகளையும் சங்காரம் செய். உன்னைக் கண்டதும் அவர்கள் தமது வலிமையை இழப்பர்" என்றார். அதன்படி வீரசேனன் அங்கு சென்று அரக்கர்களை அழித்து அந்நாட்டை அரசாண்டான்" இதுதான் போகேஸ்வர சோதிலிங்கத்தின் வரலாறாகும்" என்றார் சூதமுனிவர்.

ஸ்ரீ ராமர் பெற்ற வரம்

`"சௌனகாதி முனிவர்களே, இப்போது நான் உங்களுக்கு இராமேஸ்வரத்தில் அருள்பாலிக்கும் இராமேஸ்வர சோதிலிங்கத்தின் மகிமையைச் சொல்கிறேன்" என்று சூதமுனிவர் சொல்லத் தொடங்கினார்.

"அயோத்தியை ஆண்ட தசரதச் சக்கரவர்த்தியின் மகனான ஸ்ரீ ராமன் தனது மனைவியான சீதையை இராவணன் கவர்ந்து சென்றமையால் வானரச் சேனையுடன் தெற்குக்

கடற்கரைக்கு வந்தார். அப்போது அவருக்குத் தாகமேற்பட்டதால் தனது தம்பியான இலக்குமணனிடம் தண்ணீர் கொண்டு வரும்படி கேட்க இலக்குமணன் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தான். அப்போதுதான் அவருக்குத் தான் அன்று சிவபூசை செய்யாதது நினைவுக்கு வந்தது. அதனால் நீரைப் பருகாது சிவபூசை செய்தார். அவரது மனதில் இராவணன் பெரும் சிவபக்தன். அதனால் சிவன் அவனுக்கு உதவி செய்வர் என்ற எண்ணமே இருந்தது.

அப்போது சிவபெருமான் ஸ்ரீராமனின் பூசையால் மகிழ்ந்து அவர் முன்தோன்றி, "இராமா, உனது பூசையால் நான் மிகவும் மகிழ்ந்தேன். சிவபக்தரானாலும் அக்கிரமங்களைச் செய்தால் நான் உதவமாட்டேன். உனக்குக் கட்டாயமாக வெற்றி உண்டாகும்" என்று சொல்லச் ஸ்ரீ ராமன் மிக மகிழ்ந்து, "தேவதேவா, இக்கோலத்துடன் இங்கு எழுந்தருளியிருந்து கடலைக் கடக்கவரும் சிவனடியார்களுக்கு உதவ வேண்டும்." என்று கேட்டுக் கொண்டார். அதற்கிணங்கிய சிவபெருமான் இராமேஸ்வரத்தில் சோதிலிங்கமாக எழுந்தருளியிருந்து அடியவர்களுக்கு அருள்கின்றார்.

குசுமேஸ்வரர் மகிமை

"தவ முனிவர்களே, தென்னாட்டில் தேவகிரி என்ற மலை உண்டு. அதன் அடிவாரத்தில் சுதன்மன் என்றொரு பிராமணன் வாழ்ந்து வந்தான். அவன் பெரும் சிவபக்தன். முறைப்படி சிவபூசை செய்பவன். அவனது மனைவி சுதேகை. இளமையான அழகி. சுதன்மன் சிவபூசை செய்வதில் அக்கறையுடையவனாக எப்போதும் இருப்பான். அவனுக்குச் சிவனை அடைய வேண்டும் என்பதே இலட்சியமாக இருந்தது. அவனுக்குப் பிள்ளை இல்லாதது பெருங்கவலையைக் கொடுத்தபோதும் சுதன்மன் அதைப்பற்றி அக்கறை கொள்வதில்லை. சுதேகை பிள்ளை ஒன்றைப் பெற்றுத் தரும்படி அவனை வற்புறுத்திக் கொண்டிருந்தாள். சுதன்மன் அதைக் கவனிக்கவில்லை. ஒருநாள் சுதேகை தனது சகோதரனின் மகளான குசுமையை மணம் செய்யும்படி வற்புறுத்தினாள். அதைச் சுதன்மன் மறுத்தான். இருப்பினும் சுதேகை வற்புறுத்தித் திருமணம் செய்து வைத்தாள். அதன்பின் கணவனின் வேண்டுகோளுக்கிணங்க குசுமை தினந்தோறும் நூற்றியொரு பார்வதி லிங்கங்களைப் பூசித்து அவற்றை அருகில் உள்ள ஒரு குளத்தில் விட்டுவிடுவாள். நாளடைவில் அவள் பூசித்த லிங்கங்களின் தொகை லட்சக்கணக்காயிற்று. அப்போது குசுமை கர்ப்பம் தரித்துச் சுப்பிரியன் என்ற புதல்வனைப் பெற்றாள். பிள்ளை பிறந்ததும் சுதன்மன் பிள்ளையின் மீதும், குசுமையின் மீதும் பேரன்பு கொண்டான். இது சுதேகைக்குப் பிடிக்கவில்லை. நாளாக நாளாகப் பகை வளர்ந்து பெரும் பகையானது. குசுமை இரக்கமுள்ளவள். அயலவரை அன்புடன் நேசிப்பவள். அதனால் எல்லோரும் அவளை விரும்பினர். இது சுதேகைக்குப் பொறாமையை உண்டு

பண்ணியது. அதனால் அவள் குசுமையின் மகனான சுப்பிரியனைக் கொல்லவேண்டும் என்று நினைத்தாள். சுப்பிரியனுக்குத் திருமணமாகியது.

"ஒரு நாள் இரவு சுப்பிரியன் உறங்கிக் கொண்டிருக்கும்போது சுதேகை அவனை வாளால் வெட்டிக் கொன்றுவிட்டு அவனது உடலைக் குசுமை சிவபூசை செய்துவிட்டுச் சிவலிங்கத்தை விடுத்த அத்திருக்குளத்தில் போட்டாள். பின்பு எதுவும் நடக்காததுபோல வீட்டிற்கு வந்து உறங்கிவிட்டாள். குசுமை அதிகாலையில் எழுந்து சிவபூசை செய்தாள். அதுபோலச் சுதன்மனும் சிவபூசை செய்தான். சுப்பிரியனின் மனைவி எழுந்து தனது கணவனைக் காணாது தேடினாள். அவன் உறங்கிய இடத்தில் இரத்தமும், உடலின் சில பாகங்களும் இருந்தன. அதைக்கண்டு பதறிய சுதன்மனின் மனைவி அதைக் குசுமைக்குச் சொன்னாள். அவள் அதைக்கண்டுவிட்டுக் கவலை கொள்ளாது, "எம்பெருமானான சிவபெருமான் எனது மகனைத் தருவார்" என்று நினைத்துச் சிவபூசை செய்தாள். அப்போது சிவபெருமான் அவளின் முன் தோன்றி, "குசுமையே, உனது மகனைச் சுதேகையே கொன்றாள். நான் அவனை உயிர்ப்பித்துத் தந்துவிட்டு அவளை எனது சூலாயுதத்தால் கொல்வேன்" என்றார்.

அதற்கு குசுமை, "சர்வேஸ்வரா, அவள் எனது அத்தை. எனது கணவனின் பத்தினி. எனக்கு மூத்தவள். தங்களது தரிசனத்தால் எனது கோரிக்கை நிறைவேறிவிட்டது. அவளைத் தண்டிக்க வேண்டாம்" என்று இரந்தாள். அதை ஏற்றுக்கொண்ட சிவபெருமான்; "உனக்குத் தேவையான வரத்தைக் கேள்" என்றார். பரம்பொருளே தாங்கள் இந்தச் சுந்தரவடிவுடன் இங்கு எழுந்தருளி இருக்க வேண்டும்" என்றாள். அதனைச் சிவபெருமான் ஏற்று, "உனது பெயரால் குசுமேஸ்வரன் என்ற பெயரில் இங்கு எழுந்தருளுகின்றேன்" என்று கூறி மறைந்தார்" என்று சூதமுனிவர் கூறச் சௌனகாதி முனிவர்கள், "மேலும் சிவதரிசனங்களைக் கூறுங்கள்" என்றனர்.

இரணியன், இரணியகசிபுவின் கதைகள்

"முனிவர்களே, முன்பு ஒரு காலத்தில் மகாவிஷ்ணு நரசிம்ம வடிவமெடுத்து இரணிய கசிபைச் சங்கரித்தபோதும், அவரது கோபம் தணியாததால் தேவர்களும், முனிவர்களும் சிவபெருமானை வணங்க நரசிம்மம் சிவபெருமானிடத்தில் ஐக்கியமடைந்தது" என்றபோது முனிவர்கள் குறுக்கிட்டு "ஞான மூர்த்தியே, நரசிம்ம அவதாரத்தைப்பற்றி விளக்கமாகக் கூறுங்கள்" என்றனர். சூதமாமுனிவர் அதைச் சொல்லத் தொடங்கினார்.

"ஒரு சமயம் மகா விஷ்ணுவின் துவாரகா பாலகர்களான ஜெய, விஜயர் என்னும் இருவர் சனத்குமார முனிவரோடு போராடியபோது, மகாவிஷ்ணு அங்கு சென்று துவாரகாபாலர்களைப் பார்த்து, "நீங்கள் முனிவரோடு போராடியது தவறு" என்று சொல்லி சனத்குமார முனிவரைப் பார்த்து, "முனிவரே, நீங்கள் அவர்களைச் சபிக்க வேண்டாம். அவர்களுக்கு நீங்கள் அனுக்கிரகம் செய்யுங்கள்" என்றார். அதற்கு முனிவர்; "பரமாத்மாவே, இவர்கள் உன்னைப் பக்தி செய்வதற்காகப் பிறவிகள் எடுத்தால் மூன்று பிறவிகளில் மீண்டும் தங்கள் பதவியை அடைந்து உன்னிடம் வந்து சேர்வார்கள்" என்றார். அதனால் அவ்விருவரும் காசிப முனிவரது வம்சத்தில் இரணியனாகவும், இரணியகசிபு ஆகவும் பிறந்தனர். சனகாதி முனிவர் பிரகலனாதனாகப் பிறந்தார். பின் அவர்களே இராவணனாகவும், கும்பகர்ணனாகவும் பிறந்தனர். சனகாதி முனிவர் விபீசனனாகப் பிறந்தார். மூன்றாவது பிறவியில் அவர்கள் சிசுபாலனாகவும் தூமகேசனாகவும் பிறந்தனர். மூன்று பிறப்புக்களிலும் நாராயணனே மூன்று வடிவமெடுத்து அவர்களைச் சங்கரித்தார். இனி நரசிங்கமூர்த்தியின் வரலாற்றைச் சொல்கிறேன்"

"முனிவர்களே, இரணியாசுரன் இளைஞனாக இருக்கும்போது சூரியனை விளையாட அழைப்பான். காட்டில் உள்ள சிங்கங்களையும், யானைகளையும் பிடித்து அதில் சவாரி செய்வான். அவன் உலகத்தை ஒரு பாயைப்போலச் சுருட்டி வாயில் கௌவிக்கொண்டு கடலுள் மூழ்கினான். அதனால் பிரம்மதேவர் மிக்க வருத்தமடைந்து மகாவிஷ்ணுவைத் துதித்தார். மகாவிஷ்ணு வெளிப்பட்டு உலகை மீட்கச் சென்றார். உலகம் முழுவதும் நீர் மயமாக இருப்பதைக்கண்டு அதனுள்ச் செல்ல நினைத்தபோது நாரதர் சந்தியாவந்தனம் செய்து கொண்டிருந்தார். அதைக்கண்ட மகாவிஷ்ணு, "நாரதரே, நான் இரணியாசுரனுடன் போர்செய்து, அவனைச் சங்கரிக்கும் வரைக்கும் உமது வாயிலிட்ட நீரைக் கொப்பளிக்கக்கூடாது" என்று கேட்டார். அதற்கு நாரதர் ஒப்புக் கொண்டார். இருவருக்கிடையிலும் ஐந்நூறு ஆண்டுகள் போர் நடைபெற்றது. பின் இரணியாசுரனைச் சங்கரித்த மகாவிஷ்ணு உலகை மீட்டுக் கொண்டு வந்தபின்பே நாரதர் வாயில் இருந்த நீரை உமிழ்ந்தார்".

இரணியாசுரனை மகாவிஷ்ணு கொன்றதை அறிந்த இரணியகசிவு விஷ்ணுவைப் பழிவாங்க எண்ணிப் பிரமதேவரைக் குறித்து பத்தாயிரம் ஆண்டுகள் கடுந்தவம் செய்தான். அதனால் அவனுக்கு வரங்கொடுக்க எண்ணிய பிரமதேவர் அவன் முன்தோன்றி, "உனக்கு வேண்டிய வரம் யாது"? என்று கேட்டார். அதற்கு இரணியகசிவு, "தேவரே, உமது படைப்புக்கள் எவையும் ஆயுதத்தால் இரவிலோ, பகலிலோ என்னைக் கொல்லக்கூடாது" என்று கேட்டான். பிரமதேவர் வரத்தை அளித்துவிட்டுத் தனது இருப்பிடம் சென்றார்.

அதன்பின் எல்லா உலகங்களையும் கைப்பற்றிய இரணியகசிபு முனிவர்களையும், யாகம் செய்வோரையும் அழித்து வந்தான். இந்நிலையில் பிரகலாதன் என்னும் புத்திரன் அவனுக்குப் பிள்ளையாகப் பிறந்தான். அவனுக்கு ஐந்து வயது வந்ததும் வித்தியாரம்பம் செய்யும்பொருட்டு அவனை குருவிடம் அழைத்துச் சென்றார்கள். குரு வழக்கம் போல "இரணியாய நம" என்று சொல்லிப் பாடத்தை ஆரம்பிக்கப் பிரகலாதன்; "ஓம் நமோ நாராயணய" என்றான். குரு அவ்வாறு சொல்லக்கூடாது என்றபோதும் அவன் திரும்பத் திரும்ப "ஓம் நமோ நாராயணய நம" என்றே சொன்னான். ஒருவாரம் செல்ல இரணியகசிவு மகனை அணைத்து முத்தமிட்டு, "நீ என்ன படித்தாய்?" என்று கேட்க அவன் "ஓம் நமோ நாராயணய நம" என்று சொல்லித் தான் கற்றவற்றைச் சொன்னான். அதனால் கோபங்கொண்ட இரணியகசிவு குருவை அழைத்து; "நாட்டில் உள்ள அனைவரும் இரணியாய நம என்று சொல்லும்போது நீர் எப்படி நாராயணனின் பெயரைச் சொல்லச் சொல்வீர்" என வெகுண்டான்.

குரு சொன்னார்; "நான் அவ்வாறுதான் கற்பித்தேன். உங்கள் மகன் பிள்ளைகளை அவ்வாறு கூறக்கூடாது என்று சொல்லி, "நமோ நாராயணய நம" என்று சொல்லுமாறு சொல்லி அவர்களையும் அவ்வாறு கூறச் சொல்கிறான்".

அதன்பின் அவனது தாய் எவ்வளவோ எடுத்துச் சொன்னபோதும் அவன் கேட்கவில்லை. அதனால் கோபங்கொண்ட இரணியகசிபு அமைச்சர்களை அழைத்துப் பிரகலாதனைக் கொல்லுமாறு கட்டளையிட அவர்கள் அவனை அழைத்துச் சென்று புத்திமதி கூறினர். பின் பயமுறுத்தினர். அதன்பின் தண்டித்தனர். கொலை செய்ய முயன்றனர். அவற்றைக் கவனியாது சிரித்த பிரகலாதன், "நீங்கள் என்னைக் கொல்லலாம். கொல்லும்வரை நான் நாராயணனின் நாமத்தைச் சொல்வேன்" என்றான்.

அதனால் அமைச்சர்கள் அதை இரணியக்கசிபுக்குக்கூற அவன் அரச குருவை அழைத்து அவரிடம் பிரகலாதனை ஒப்படைத்து அவனை எவ்வழியிலாவது திருத்துமாறு கூறினான். அரசகுரு கொடுமையான தண்டனைகள் பலவற்றை வழங்கினார். பிரகலாதன் சிரித்தான்; "குருவே, நாராயணனின் கிருபை எனக்கிருக்கிறது. என்னை உங்களால் தண்டிக்க முடியாது. கொல்லவும் முடியாது. நீங்கள்தான் தண்டிக்கப்-படுவீர்கள்" என்றான். அதனால் மிகக் கவலையும் ஆத்திரமும் கொண்ட இரணிய கசிபு செய்வதறியாது திகைத்தான்".

பின் மகனை அழைத்துப் புத்திமதிகள் சொன்னான். அதற்குப் பிரகலாதன்; "தந்தையே உலகத்தில் காணப்படும் பொருட்கள் எல்லாவற்றிலும் நிறைந்து காணப்படுபவன் நாராயணன். அவன் இல்லாத இடமே இல்லை". என்றபோது, "பிரகலாதா, நீ கூறுவதுபோல நாராயணன் எல்லாப் பொருட்களிலும் இருப்பவன் என்றால் இத்தூணிலும் இருப்பான் தானே. அப்படி இருந்தால் நான் அவனைப் பூசிக்கிறேன். இல்லாவிட்டால் உன்னைக் கொல்வேன்" என்று கூறித் தனது உடைவாளை எடுத்து அந்தத் தூணை வெட்டினான். அப்போது இடி

இடிப்பது போன்றதொரு பெருஞ்சத்தம் எழுந்தது. அந்தத் தூணில் இருந்து நாராயணன் பாதி வடிவம் சிங்கவடிவமாகவும், பாதி வடிவம் மனிதவடிவனாகவும் உருவெடுத்து வெளியே வந்தார். அப்பயங்கரமான உருவத்தைக் கண்ட அசுரர்கள் பயங்கரமான ஆயுதங்களை ஏந்தி அந்த நரசிம்மத்துடன் போரிட்டனர். நரசிம்மர் மூச்சு விட்டார். அம் மூச்சுக்காற்றின் கோரத்தால் அசுரர்கள் அழிந்து போனார்கள். இரணியகசிபு நரசிம்மருடன் போர் செய்தான். பிரம்மதேவர் இரணியகசிபுக்குக் கொடுத்த வரத்தின்படி நரசிம்மர் இரணியகசிபைத் தனது தொடைமீது இருத்தி இரவும் பகலும் இல்லாத சாயங்கால வேளையில் தனது திருவிரல் நகங்களால் அவனது மார்பை பிழந்து கொன்றார். அவனைக் கொன்றபின்பும் நரசிம்மரது கோபம் தணியவில்லை. அவர் தனது உக்கிரவடிவுடன் உலாவினார். அவரது கோபத்தைத் தணிக்க தேவர்கள் பலரும் முயன்றனர். அதனால் அவரது கோபம் அதிகரித்தது. அதனால் அவர்கள் விநாயகரிடம் சென்று நரசிம்மரின் கோபத்தைத் தணிக்குமாறு வேண்ட விநாயகர் தனது வாகனமான எலியின்மீது ஏறி நரசிம்மத்திற்கு முன்வந்தபோது எலி அவரைத் தள்ளிவிட்டு ஓட விநாயகர் நிலத்தில் விழுந்தார். அதைக்கண்ட நரசிம்மர் பலமாகச் சிரித்தார். அதனால் அவரது கோபம் தணிந்தது. அப்போது சிவபெருமான் அவர்கள் முன்தோன்ற நரசிம்மர், "ஜெயஜெய சங்கரா" என்று கூறி அவரை வணங்கினார். பின் நாராயணனை நோக்கி, "நாராயணா, உனது துவாரபாலகர்களான ஜய, விஜயர்கள் மூன்று பிறவிகள் எடுத்து விஷ்ணுவைப் பகைத்து அவரால் சங்கரிக்கப்பட்டு வைகுண்டத்தை அடைந்து விட்டனர். அவர்களை ஏற்றுக்கொள்" என்றார். என்று சூதமுனிவர் நைமிசாரண்ய வாசிகளுக்குச் சொன்னார்.

நளமகாராசனின் பூர்வீகக் கதைகள்

அவற்றைக் கேட்டு மகிழ்ந்த நைமிசாரண்ய முனிவர்கள், "சூதமுனிவரே, பூர்வகாலத்தில் தேவர்களும், அசுரர்களும் யாரைப் பூசித்துச் சகல வளங்களையும் பெற்றனர்" என்று கேட்டார்கள்.

"முனிவர்களே, பிரம்மதேவரும் அவரது புத்திரர்களாகிய மரீசி முதலிய பிரமரிசிகளையும் பார்த்திவ லிங்கத்தை அர்ச்சித்தே நற்கதி அடைந்தனர். நாரதமுனிவர், வசிட்டர், காசிபர் போன்றோர் லிங்கபூசை செய்தே தாம் விரும்பியவற்றைச் சிவபெருமானிடமிருந்து பெற்றனர். சுயம்பு, மனு, இஸ்வாரு மாந்தாதா, நகுலன், தசரதன், ஸ்ரீ ராமர், பரதன், பஞ்சபாண்டவர்கள், அர்ச்சுனன், கண்ணன், நளன் போன்றோர் சிவபூசை செய்தனர். நான்முகன் ஜென்மத்தில் வேடுவனாக இருந்து சிவபூசை செய்து அரசனானான்" என்று சூதமுனிவர் கூறிக்கொண்டிருக்கும்போது, முனிவர்கள் அவரை நோக்கி, "வேத புருடரே, அந்த வேடனும் அர்ச்சுனனும் செய்த சிவபூசை பற்றிக் கூறுங்கள்" என்று கேட்டனர்.

“முனிவர்களே, அற்புதம் என்ற மலைச்சாரலில் வேடர் குலத்தில் ஆகுகன் என்பவன் பிறந்தான். அவன் தனது மனைவியான ஆகுகையுடன் அம்மலைச்சாரலிலிருந்த சிவாலயத்திற்குச் சென்று சிவனை மெய்யன்புடன் வழிபட்டு வந்தனர். ஒரு நாள் இருட்டும்வேளையில் அங்கு வந்த முனிவர் ஒருவர் அச் சிவன்கோயிலுக்கு வந்தார். அவரைக்கண்ட ஆகுகன் அவரை வணங்கி, “சுவாமி, இருட்டும் வேளை இங்கு ஏன் வந்தீர்கள். இது கொடிய மிருகங்கள் வாழும் காடு. இரவில் பயணம் செய்தால் மிருகங்கள் உங்களைக் கொன்று தின்றுவிடும். ஆகையால் எனது வீட்டுக்கு வாருங்கள் என்று அழைத்துச் சென்றான். அது ஒரு சிறிய கற்குகை. அதில் இருவர் மட்டுமே தங்கலாம். அதனால் நீங்களும் எனது மனைவியும் உள்ளே தங்குங்கள். நான் வெளியே காவல் காக்கிறேன்” என்றான். அதன்படி முனிவரும் அவனது மனைவியும் உள்ளே தங்க வேடன் அவர்களுக்குக் காவலாக வெளியே அம்பு வில்லுடன் நின்றான். நடுச்சாம வேளை அங்கு வந்த புலியொன்று அவனைக் கொன்று தின்றுவிட்டது. விடிந்ததும் எழுந்த இருவரும் வேடனின் உடற்பாகங்கள் சில சிதறிக் கிடப்பதைக்கண்டு அதிர்ந்தனர். பின் ஆகுகி தனது கணவனின் உடற்பாகங்களைச் சேகரித்துத் தீ மூட்டி அதை அதில் இட்டுவிட்டு தீயில் குதித்தாள். அப்போது சிவபெருமான் அவள் முன்தோன்றி, “பெண்ணே உனது சிவபக்தியைக்கண்டு மகிழ்ந்தேன். நீ அடுத்த பிறப்பில் விதர்ப்பதேசத்து அரசனான வீமராசனின் மகளாய்த் தமயந்தி என்ற பெயருடன் பிறப்பாய். உனது கணவன் நிடதநாட்டு மன்னன் வீரசேனனின் மகனாய் நளன் என்ற பெயருடன் பிறப்பான். இந்த முனிவர் அன்னப்பட்சியாகப் பிறந்து உங்களிருவரையும் சேர்த்து வைப்பார்” எனக்கூறி மறைந்தார். சில நாட்களின் பின் சிவபெருமான் கூறியபடி மூவரும் பிறந்தனர். சிவபெருமான் அவன் இறந்த இடத்தில் கோவில் கொண்டு அசுவேசுவரர் என்ற பெயருடன் வீற்றிருக்கிறார்” என்றார் சூதமுனிவர்.

அர்ச்சுனன் செய்த சிவபூசை

“முனிவர்களே, பஞ்சபாண்டவர்கள் வனவாசம் சென்ற பின்பும், பாண்டவர்கள் மீது வஞ்சம் தீர்க்க விரும்பிய துரியோதனன் துர்வாசமுனிவருக்குப் பாண்டவர்களுக்கு அருளாசி வழங்கும்படி கூறத் துர்வாசக முனிவரும் அவரது பதினாயிரம் சீடர்களும், பாண்டவர்கள் தங்கியிருந்த வனத்திற்குச் சென்று தருமனைச் சந்தித்து அன்று தமக்கு உணவளிக்கும்படி கேட்டனர். அதற்குத் தருமன் சம்மதித்தான். முனிவரும் சீடர்களும் நீராடச் சென்றனர். அதை அறிந்த திரௌபதி கலங்காது கிருஷ்ணனைத் தியானித்தாள். உடனே அங்கு வந்த கிருஷ்ணன் அட்சயபாத்திரத்தை எடுத்து முனிவருக்கும் சீடர்களுக்கும் போதுமான உணவை உருவாக்கினார். சிறிது நேரத்தில் அங்கு வந்த முனிவரும் சீடர்களும் ரசித்துச் சுவைத்து உண்டுவிட்டுச் சென்றனர். அப்போது கிருஷ்ணன் தருமனுக்குச் சொன்னார்; “தருமா, துன்பங்கள் வராதிருக்கச் சிவபெருமானை வேண்டு. நான் துவாரகையில் இருக்கும்போது

பகைவரை வெல்ல எண்ணி உபமன்யு முனிவரிடம் சிவபூசையைச் செய்யும் முறையைக் கேட்டறிந்து செய்தேன். சிவபெருமான் எழுந்தருளி நான் கேட்ட வரங்களைத் தந்தருளினார். அதனால் நீங்களும் சிவபூசை செய்யுங்கள் என்று கூறிச் சிவபூசை செய்யும் முறைகளைக் கூறிச் சென்றார். அவர்கள் சென்றபின் வேதவியாசர் பாண்டவர்களைச் சந்திப்பதற்காக அங்கே வந்தார். அவரைப் பாண்டவர்கள் வரவேற்று வணங்கி ஆசனத்தில் இருத்தினர்".

வேதவியாசர் மகிழ்ந்து, "உங்கள் துன்பங்கள் யாவும் நீங்கும்" என்றபோது தருமன் சொன்னான்; "மகாத்மாவே, சில தினங்களுக்கு முன் இங்கு வந்த கிருஷ்ணன் எமது துன்பம் அகலச் சிவபூசை செய்யுமாறு கூறிச் சென்றான். எமது துன்பங்கள் நீங்க நாம் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள்" என்று கேட்டான்.

"தருமா, நானும் சிவபூசை செய்கிறேன். அதனால் வரும் பயனைச் சொல்லிமுடிக்க முடியாது. உங்களில் அர்ச்சுனனே முதலில் சிவபூசை செய்தல் வேண்டும். அத்துடன் தவமும் செய்தல் வேண்டும். கண்ணுக்குப் புலப்படுபவை யாவும் சிவரூபமே. சிவரூபம் தான் மகாவிஷ்ணு. அவரரை ஆராதித்தால் சிவன் எளிதில் தோன்றுவான். அதற்குமுன் அரசர்கள் இந்திரனை ஆராதிக்க வேண்டும். அதனால் இந்திரனுக்குரிய மந்திரங்களை உபதேசிக்கிறேன் என்ற வேதவியாசர் இந்திரனது மந்திரத்தை உபதேசித்துப் பின் பார்த்திபலிங்க பூசை செய்யும் முறையையும் உபதேசித்தார். பின்; "அர்ச்சுனா, நீ இங்கிருந்து புறப்பட்டு, கிருஷ்ணா நதிக்கரையில் இருக்கும். இந்திரகீல மலையிலிருந்து தவம் செய். தவம் செய்யும்போது கணக்கில் அடங்காத இடையூறுகள் வரும். அவற்றை நீ கருத்தில் கொள்ளாது காரியத்தில் கண்ணாக இரு" என்று கூறி யாருக்கும் புலப்படாதிருக்கத்தக்க வித்தையை உபதேசித்துவிட்டுச் சென்றார்.

வேதவியாசர் சொன்னதும் அர்ச்சுனன் தவம் செய்யப் பறப்பட்டான். மிகுதியாக இருந்த ஐவரும் பெரும் துன்பத்துடன் அர்சுனனுக்கு விடை கொடுத்தனர். அதன் பின்பு வேதவியாசர் திரும்பிவந்து தான் சில நாட்கள் அங்கு தங்கியிருக்கப் போவதாகத் தெரிவித்தார். அதனால் அவர்கள் மகிழ்ந்தனர். அவர்களை மகிழ்சிப்படுத்துவதற்காக வேதவியாசர் முன்பு நடந்த கதைகளைச் சொன்னார், அன்பானவர்களே, "துன்பங்கள் உயிர்கள் எல்லாவற்றிற்கும் வரும். அதனால் அதைத் தாங்கப் பழகுதல் வேண்டும். நளன் என்ற மன்னன், அரிச்சந்திரன் என்ற மன்னன், ஸ்ரீராமன் போன்றோர் பெரும் துன்பப்பட்டனர். அவர்களோடு ஒப்பிடுகையில் உங்கள் துன்பம் பெரிதல்ல என்றும் இன்பத்தைத் தரும் சிவபெருமானைத் துதித்தால் வரும் துன்பம் இன்பமாக மாறிவிடும்" என்றார்.

தவம் செய்யச் சென்ற அர்ச்சுனன் இந்திரகீல மலையை அடைந்து கிருஷ்ணா நதிக்கரையில் வியாசர் சொன்னபடி தவம் செய்ய ஆரம்பித்தான். அவன் முக்காலமும் நீராடிப் பார்த்திப லிங்கத்திற்குப் பக்தியோடு பூசை செய்து வந்தான். இவ்வாறு கடுமையான தவம் செய்தபோது அந்த லிங்கத்தில் இருந்து ஓர் ஒளி கிளம்பியது. அதைக்கண்ட தேவர்கள்

இந்திரனிடம் முறையிட, இந்திரன் ஒரு கிழவடிவெடுத்து அர்ச்சுனன் தவம் செய்யும் இடத்திற்கு வந்தான். அவரைக் கண்ட அர்ச்சுனன் அவரை மகிழ்வுடன் வரவேற்று, "சுவாமி, தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்" என்று கேட்டான். இந்திரன் அதைக் கேளாதது போல, "நீ இந்த இளவயதில் முத்தியைக் குறித்துத் தவம் செய்கிறாயா? அல்லது வெற்றிபெற வேண்டுமென்று தவம் செய்கிறாயா?" என்று கேட்டான். அதற்கு அர்ச்சுனன் தனது வரலாறு முழுவதையும் கூறினான். இருப்பினும் இந்திரன், "நீ முத்தியைக் குறித்தே தவம் செய்" என்றான். அதனால் கோபமடைந்த அர்ச்சுனன் இந்திரனை ஏச இந்திரன் தனது சுய உருவத்தைக்காட்டி "அர்ச்சுனா, என்னால் உனக்கு உதவ முடியாது. ஏனென்றால் உனது எதிரிகளான பீஷ்மன், துரோணன், கர்ணன் முதலியோர் மகா பராக்கிரமசாலிகள். அதனால் சிவபெருமானை நினைத்துத் துதி செய். அவரின் உதவி இருந்தால்தான் அவர்களை வெல்லலாம். அதனால் மனத்திடத்துடன் செய். அப்படிச் செய்தால் சிவபெருமான் உனக்கு அழிக்க முடியாத வரங்களை தருவார்" என்று கூறி மறைந்தான்.

அதன்பின் அர்ச்சுனன் ஒற்றைக் காலில் நின்று தவம் செய்தான். அவனின் தவத்தின் மகிமையைக் கண்ட தேவர்கள் மகிழ்ந்து எல்லோருமாகச் சென்று சிவபெருமானிடத்தில் சென்று அர்ச்சுனனுக்கு வரமளிக்கும்படி வேண்டினர். அதற்குச் சிவபெருமான் ஒப்புக் கொண்டார். அப்போது மூகன் என்ற அசுரன் பன்றி உருவெடுத்து வந்து அர்ச்சுனனின் தவத்தைக் கலைக்க முயன்றான். அப் பன்றியுருவில் வந்தவன் துரியோதனனது கையாள் என்றுணர்ந்த அர்ச்சுனன் வேதவியாசர் சொன்னவற்றை நினைத்தான்; "அர்ச்சுனா, நீ தவம் செய்வதைப் பலர் குழப்புவார்கள். அப்படிக் குழப்பினால் குழப்புபவர்களைச் சங்கரித்துவிடு" என்றவர். அதனால் அவன் தனது வில்லான காண்டீபத்தை எடுத்து பாணத்தை ஏற்றிக் கொண்டிருக்கும்போது சிவபெருமான் வரமளிப்பதற்காக அங்கே தனது கணங்களுடன் ஒரு வேட்டுவ உருவெடுத்து வந்தார். பன்றியைக் கண்ட இருவரும் அம்புகளை எய்தனர். சிவபெருமான் எய்த அம்பு பன்றியின் வாலில் பட்டு அதன் வயிற்றைக் கிழித்தது. அர்ச்சுனன் எய்த அம்பு பன்றியின் முகத்தில் பட்டு அதன் வயிற்றைக் கிழித்துக் கொண்டு சென்றது. வாயிற் பட்ட அம்பும் வயிற்றைக் கிழித்துக்கொண்டு வெளியேறியது. பன்றி இறந்து விழுந்தது. அது இறந்ததும் அசுரனான மூகனின் வடிவமெடுத்தது. அப்போது இருவருக்கும் பன்றியை யார் கொன்றது என்ற வாய்த்தர்க்கம் ஏற்பட்டு அது போராக மாறியது. இருவரும் மிகக் கடுமையாகப் போரிட்டனர். சிவபெருமான், அர்ச்சுனனின் பலத்தை அதிகரிக்கப் பண்ணுவதற்காக பல்வேறு வகையில் யுத்தம் செய்தார். அர்ச்சுனனது அம்பையும், வில்லையும் சிவபெருமான் உடைக்க, அர்ச்சுனன் அவரோடு மல்யுத்தம் செய்தான். அர்ச்சுனன் சிவபெருமானின் தலையில் அடித்தான். அந்த அடி தேவர்கள் அனைவருக்கும், சகல உயிரினங்களுக்கும் பட்டது. அதன்பின் சிவன் திருப்பி அடிக்காது தனது வேட உருவைக் களைத்துவிட்டுக் காட்சி கொடுத்தார். அவரைக் கண்டு திகைத்த அர்ச்சுனன் சிவனை வணங்கித் தனது பிழையைப் பொறுத்தருளும்படி வேண்டினான். சிவபெருமான் அவனை

ஆசீர்வதித்துவிட்டுப் பாசுபதம் என்ற வலிமைமிக்க ஆயுதத்தைக் கொடுத்துவிட்டு மறைந்தருளினார்" என்று சூதமாமுனிவர் கூறினார்.

கண்ணன் செய்த சிவபூசை

"சூதமுனிவரே, கண்ணன் தினமும் சிவபூசை செய்ததாகக் கூறினீர்கள். அதைப் பற்றிக் கூறுங்கள்" என்று முனிவர்கள் கேட்டனர்.

"முனிவர்களே, கண்ணன் பிருந்தாவனத்தில் இருந்து வடமதுரையை அடைந்து, கம்சனைக் கொன்றுவிட்டு மதுரைக்குச் சென்றார். அங்கு தைத்திரிய வீரர்கள் அவரை எதிர்த்துப் போரிட்டனர். அசுரர்கள் மேலும் மேலும் வந்து குவிந்து போர் செய்தமையால் கண்ணன் ரைவத்கிரிக்குச் சென்று உபமன்யு முனிவரைச் சந்தித்து அசுரர்களை அழிக்கும் வழியைக் கேட்டார். அதற்கு உபமன்யு முனிவர், "எதை அடைய வேண்டுமானாலும் சிவபூசை செய்தல் வேண்டும் என்று கூறிச் சிவமந்திரத்தை உபதேசித்தார். அதன்படி கண்ணன் சிவபூசை செய்யச் சிவபெருமான் அவன் முன் தோன்றி, "கிருஷ்ணா, நீ விரும்பிய வரத்தைக் கேள்" என்றார். அதற்குக் கிருஷ்ணன், "சிவபெருமானே, உமது கிருபை எனக்குண்டு. இருப்பினும் தைத்திரியர்களது தொல்லைகளைத் தாங்க முடியவில்லை. அவர்களை அழிக்க வழி சொல்லுங்கள்" என்றான்.

அதற்குச் சிவபெருமான், "கிருஷ்ணா, உனக்குத் தனதானிய சம்பத்துக்களும், புத்திரர்களும், அனேக பெண்களும், எதிரிகளை வெல்லும் தன்மையையும் தந்தேன்" என்றார். சிவபெருமானுக்கு அருகில் இருந்த பார்வதியும் பல வரங்களை அருளினாள். பின் சிவபெருமான் விஸ்வேஸ்வரர் என்ற பெயரில் அங்கு எழுந்தருளி இருக்கிறார்" என்றார் சூதமுனிவர்.

திருமால் சக்கராயுதம் பெற்ற கதை

"சூதமுனிவரே, முன்பு விஷ்ணுவுக்குச் சிவபெருமான் சக்கராயுதத்தைக் கொடுத்ததாகக் கூறினீர்கள். அதன் வரலாற்றைக் கூறுங்கள்" என்று முனிவர்கள் கேட்டார்கள்.

"முன்பு ஒரு காலத்தில் அரக்கர்கள் அதிகமாகி உலகங்களைக் கைப்பற்றித் தேவர்களையும், மக்களையும் துன்புறுத்தினர். அதனால் துன்பப்பட்ட தேவர்கள் திருமாலிடம் சென்று தம்மைக் காக்குமாறு இரந்தனர். அப்போது திருமால், "தேவர்களே அஞ்சாதீர்கள். நான் சிவபெருமானை ஆராதித்து உங்களைக் காப்பேன்" என்றார். அதன்பின் திருமால் கைலாயமலைக்குச் சென்று சிவபெருமானைக் குறித்துக் கடும் தவம் செய்தார். காலம்

கழிந்ததே தவிரச் சிவபெருமான் பிரசன்னமாகவில்லை. அதனால் மிக்க துயரங் கொண்ட திருமால் ஆயிரம் தாமரைப் பூக்களைப் பறித்துச் சிவநாமத்தைச் சொல்லி ஒவ்வொரு சிவநாமத்திற்கும் ஒவ்வொரு தாமரைப் பூவை வைத்து அர்ச்சித்தார். அப்போது அவரது பக்தியைப் பரீட்சிக்க நினைத்த சிவபெருமான் ஒரு தாமரை மலரைத் திருமாலுக்குத் தெரியாது மறைத்து விட்டார். அதனால் கவலைப்பட்ட திருமால் தனது கண்களில் ஒன்றைப் பிடுங்கி அர்ச்சிக்க நினைத்தார். அப்போது சிவபெருமான் அவர் முன் காட்சியளித்து, "திருமாலே, உனது கண்ணைப் பறிக்க வேண்டாம். உனது பக்திக்கு மகிழ்ந்தேன். அதனால் வேண்டிய வரத்தைக் கேள்" என்றார். அதற்குத் திருமால்; "சங்கரா, நீ அறியாதது எதுவும் இல்லை. அசுரர்களது கொடுமையைத் தாங்க முடியவில்லை. அவர்களை அழிக்கக்கூடிய சக்திமிக்க ஓர் ஆயுதத்தைத் தந்தருள்" என்றார். அதைக்கேட்ட சிவபெருமான்; "வலிமைமிக்க சக்கராயுதத்தைத் தருகிறேன். அது உனது பலத்தை மேம்படுத்தும்" என்று கூறிச் சுதர்சனம் என்ற சக்கராயுதத்தைக் கொடுத்தருளினார். அதைப் பெற்றுக் கொண்ட திருமால் சகல அசுரர்களையும் சங்கரித்தார்" என்றார் சூதமுனிவர்.

சிவராத்திரி விரதம் அனுட்டிக்கும் முறை

"சூதமுனிவரே, சிவனைப்பற்றி பூரணமாக அறிந்து வைத்துள்ள தாங்கள் எந்த விரதத்தை அனுட்டிப்பதன் மூலம் சிவகடாட்சத்தைப் பெறலாம் என்று கூறுங்கள்" என்று முனிவர்கள் கேட்கச் சூதமுனிவர் சொன்னார்.

"முனிவர்களே, இந்தக் கேள்வியை ஒருமுறை விஷ்ணு சிவபெருமானிடம் கேட்டபோது அவர் சொன்னார்; "மகா விஷ்ணுவே, உலகத்தில் முத்தியளிக்கக் கூடியவை நான்கு. அவை சிவார்ச்சனை, உருத்திரபாராயணம், அட்டமி, சோமவாரம் சதுர்த்தசி என்ற மூன்று நாள் உபவாசம். காசிஷேத்திரத்தில் மரணம் என்பவையாகும். இவற்றுள்ச் சிவராத்திரி விரதமே உத்தமமானது. இதைவிடச் சிறந்த விரதம் எதுவுமில்லை" என்றார்.

அதைக்கேட்ட மகாவிஷ்ணு கேட்டார்; "பிறைசூடிய பெருமானே, சிவராத்திரி விரதத்தைப் பற்றியும், அதை எப்படி அனுட்டிக்க வேண்டும் என்பதையும் கூறுங்கள்" என்று கேட்டார்.

"நாராயணா, இவ்விரதத்தைச் சகல அண்டங்களிலுமுள்ள அனைவரும் அனுட்டிக்கலாம். வர்ணவேறுபாடோ, பால் வேறுபாடோ இதற்கில்லை. மாசி மாதத்தில் வருகின்ற கிருஷ்ணபக்கச் சதுர்த்தியின் நள்ளிரவு பதின்நான்காவது நாளிகையானது கோடிக்கணக்கான பாவங்களை அழிக்கும் சக்தி வாய்ந்தது. அன்று விடியற்காலையில் எழுந்து, "மானிடப் பிறவியை இவ் விரதத்தால் பயனடைவேன்" என்று நினைத்து வீட்டில்

உள்ள அனைவரையும் இவ் விரதத்தை அனுடடிக்கச் செய்தல் வேண்டும். பின் பல்துலக்கி, புண்ணிய தீர்த்தத்தில் நீராடி நித்திய கருமங்களை முடித்து விரதத்தை ஆரம்பித்தல் வேண்டும். பின் சிவபூசையை முடித்துவிட்டு, மகாதேவா உனது அருளால் சிவராத்திரி விரதத்தை அனுட்டிக்க வேண்டும் என்று விருப்பம் கொண்டேன். இந்த விரதம் முடியும்வரை உன் நினைவைத் தவிர வேறெந்த நினைவுகளும் வராதிருக்கச் செய்தல் வேண்டும் என்று எண்ணி பின் பூசைப் பொருட்களை எடுத்துக் கொண்டு பார்த்திப இலிங்கம் இருக்கும் இடத்திற்குச் சென்று அதற்கு தென்திசையில் அல்லது மேற்குத்திசையில் அமர்ந்து கொண்டு தோய்த்துலர்ந்த உடையை அணிந்து கொண்டு பூசையை ஆரம்பிக்க வேண்டும். மந்திரம் சொல்லாது பூசை செய்யக்கூடாது. அதன்பின் சிவத் தோத்திரங்களைத் தியானிக்க வேண்டும். சிவனின் மகிமையைப் பிறருக்குக் கூறுதல் வேண்டும். பிறர் சொல்லவும் கேட்கலாம். பிறகு கீதம், நிருத்தம், வாத்தியம் இவற்றைப் பக்தியுடன் சமர்ப்பிக்க வேண்டும். பின் நித்திரையில்லாமல் இரவைக் கழித்து விடியுமுன் ஸ்தாபித்த லிங்கத்திற்குப் பூசை செய்து நீராடிச் சந்தியாவந்தனம் முதலியவற்றைடி முடித்துப்பின், "எம்பெருமானே, உனது அருளால் சிவராத்திரி விரதத்தை முடித்தேன். எனது சக்திக்கேற்ப நான் செய்த தவத்திற்குப் பயன்தர வேண்டும்" என்று மலர்கள் சாத்தி பார்வதிதேவியையும் வணங்கி, தான் செய்த பூசைப்பயனைச் சிவனுக்கு அர்ப்பணித்து நீர் தெளித்து விரதத்தை முடித்தல் வேண்டும்.

நான்கு சாமங்களிலும் செய்த பூசைகளை நினைத்து தனது மனதில் அதைப் பார்த்திப லிங்கத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும். பால், தயிர், நெய், தேன், சர்க்கரை முதலியவற்றால் அவ்வவற்றிற்குரிய மந்திரங்களைச் சொல்லிச் சமர்ப்பிக்க வேண்டும். பின் உலர்ந்த துணியால் சிவலிங்கத்தைத் துடைத்தல் வேண்டும். சந்தணம் சாத்தி முதல் சாமத்தில் அரிசி அட்சதையையும், இரண்டாம் சாமத்தில் யவை அட்சதையையும், மூன்றாம் சாமத்தில் கோதுமை அட்சதையையும், நான்காம் சாமத்தில் அரிசி, உழுந்து, பயறு, தினை முதலியவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன் முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் சாமங்களில் முறையே தாமரையும் வில்வப்பழம் அன்னமும், வில்வமும், லட்டு பலாப்பழம் முதலிய பலகார வகைகளும், அறுகும் ஆத்தியும் நெய்யால் செய்த பலகாரங்களும், நறுமணமலர்களும், கோதுமை நெய் சர்க்கரை சேர்த்த பலகார வகைகளும், தாம்பூலமும் சமர்ப்பித்தல் வேண்டும்.

பின், "நான் செய்த பூசையால் நீ மகிழ்ந்து குறைகளை நிறைவாக்கு என்று சொல்லிப் பூக்களைச் சமர்ப்பித்து பிராமணர்களுக்கு உணவிட்டுத் திரும்பவும் நான் பூசை செய்யும்போது எழுந்தருள வேண்டும்" என்று கேட்டுப் பூசையை முடிக்க வேண்டும். இவ்விரதப் பயனைப் பதினாயிரம் ஆண்டுகள் சொன்னாலும் முடியாது. இவ்விரதத்தை வருடாவருடம் அனுட்டிப்பவன் பெரும் பயனடைந்து முத்தியடைவான்" என்றார் சூதமுனிவர்.

சிவராத்திரியன்று வேடன் பெற்ற பலன்

“சிவஞானச் செல்வரே, இந்த விரதத்தைக் கடைப்பிடிப்பதால் உண்டாகும் பயன்களைச் சொல்லுங்கள்” என்று முனிவர்கள் கேட்கச் சூதமுனிவர் சொல்லத் தொடங்கினார்.

“முனிவர்களே, ஒரு வனத்தில் மிகவும் கொடிய வேடன் ஒருவன் குடும்பத்துடன் வாழ்ந்து வந்தான். அவன் மிருகங்களை வேட்டையாடுவதோடு, வழிப்பறியும் செய்து வந்தான். அன்று சிவராத்திரி தினம். அது அவனுக்குத் தெரியாது. மது அருந்திய அவனது தந்தை நல்லதொரு மிருகமாகப் பார்த்து வேட்டையாடி வரும்படி பணித்தார்.

அந்த வேடன் பகல் முழுவதும் அலைந்து திரிந்து மிக்க களைப்படைந்தான். மிருகங்கள் எவையும் அகப்படாததால் அவன் குளக்கரைக்கு வந்து நெடுநேரம் காத்திருந்தான். அன்று நீர் குடிக்க எந்த மிருகமும் வரவில்லை. இருள்பரவி வெகுநேரமாகி விட்டதால் இருளில் வீட்டுக்குச் செல்லப் பயந்து குளத்தில் இருந்த நீரைக் குடித்துவிட்டு முன்பு நீர் கொண்டு வந்து குடித்த பாத்திரத்தில் நீரை நிரப்பி எடுத்துக் கொண்டு குளக்கரையில் நின்ற வில்வமரத்தில் ஏறி இருந்தான். அந்த வில்வமரத்தின் கீழ் ஒரு சிவலிங்கம் இருந்தது.

அவன் அன்று முழுவதும் உணவு கிடைக்காமையால் உண்ணவில்லை. முதல் சாமத்தில் ஒரு பெண்மான் குளக்கரைக்கு வந்தது. வேடன் மிக்க மகிழ்வுடன் அம்பை வில்லில் பூட்டினான். அவன் அசைந்ததால் பாத்திரத்தில் இருந்த நீரும், சில வில்வம் இலைகளும் சிவலிங்கத்தின் மீது விழுந்தன. இதனால் அந்த வேடன் முதல் சாமப் பூசை செய்த பயனைப் பெற்றான்.

அம்பை வேடன் பூட்டிய சத்தத்தைக் கேட்ட பெண்மான் திகைப்புடன் மேலே பார்த்தது. அங்கே வேடன் தன்னைக் குறிபார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது. அத்துடன் அவனிடமிருந்து தப்ப முடியாதென்றும் தெரிந்தது. அதனால் அது “வேடனே, உமது தொழில் வேட்டையாடுவது என்று எனக்குத் தெரியும். நீர் என்னைக் கொல்வதைப்பற்றி நான் கவலை கொள்ளவில்லை. எனக்குச் சில குட்டிகள் இருக்கின்றன. அவற்றைப் பாதுகாக்கும்படி ஒரு பெண்மானை நியமித்துவிட்டு வருகிறேன்” என்றது. அதை நம்பாத வேடன் “நீ சந்தர்ப்பத்திற்கேற்றவாறு கதைத்துத் தப்பப் பார்க்கிறாய். உன்னை விடமாட்டேன். எனது குடும்பத்தினர் இன்று முழுவதும் உண்ணாமல் இருக்கிறார்கள். அதனால் விடமாட்டேன்” என்றான்.

“மான் அழுதது. பின் நான் கட்டாயம் வருவேன். இது சிவபெருமான் மீது ஆணை” என்றது. வேடன் அதை நம்பி அதைப் போகுமாறு சொன்னான். அவ்வாறு இருக்கும்போது தண்ணீர் குடிப்பதற்காகச் சென்ற தனது சகோதரியைக் காணாத அதன் சகோதரியான மான் அதைத் தேடிக் குளக்கரைக்கு வந்தது. ‘அக்கா’ என்று அழைத்தது. மானின் சத்தம் கேட்ட

வேடன் அவசரமாக வில்லை எடுக்கும்போது பாத்திரத்தில் இருந்த நீர் தழும்பிச் சிவலிங்கத்தின் மீது பட்டது. வில்லு அசைந்ததால் வில்வம் இலைகள் சிவலிங்கத்தின் மீது விழுந்தன. அப்போது இரண்டாம் சாமப் பூசை நேரம். வில்வமிலையும், நீரும் சிவலிங்கத்தின் மீது விழுந்தமையால் இரண்டாம் சாமப்பூசைப் பலனும் வேடனுக்குக் கிடைத்தது.

வில்லில் நாண் ஏற்றியதைக் கண்ட மான் வேடனைப் பார்த்து முதல் மான் சொன்னதையே சொன்னது. அதனால் கோபங் கொண்ட வேடன், "இன்று முழுவதும் எனது குடும்பம் பட்டினியால் இருக்கிறது. அதனால் உன்னை விட மாட்டேன்" என்றான். மான் கெஞ்சி மன்றாடியது. "தான் பிள்ளைகளைப் பாதுகாப்பில் வைத்துவிட்டுக் கட்டாயம் வருவேன்" என்று மான் கூறியமையால் வேறுவழியின்றி அதைச் செல்ல விட்டான். அப்போது இரண்டாம் சாமம் நித்திரையின்றிக் கழிந்தது. பின் வேடன் மான்கள் வரும்வரை நித்திரை வராதிருக்க வில்வம் இலைகளைப் பறித்துப் போட்டுக் கொண்டிருந்தான். அவை சிவலிங்கத்தின் மீது விழுந்து கொண்டிருந்தது.

சிறிது நேரத்தில் தனது மனைவியையும், மனைவியின் சகோதரியையும் காணாமையால் கவலை கொண்ட ஆண்மான் மிக்க கவலையோடு அவற்றைத் தேடிக் குளக்கரைக்கு வந்தது. அதைக் கண்ட வேடன் ஆண்மானின் செழுமையைக் கண்டு மிக்க மகிழ்வடைந்து, "நல்ல கொழுத்தமான்" என்று நினைத்து அதைக் குறி பார்த்து வேட்டையாட அம்பையும் வில்லையும் எடுத்தான். அந்த நேரம் முன்புபோல நீளமானவில் அவனது தண்ணீர்ப் பாத்திரத்துடனும் வில்வக் கிளையுடனும் மோத தண்ணீர் சிந்திச் சிவலிங்கத்தின் மேல் விழுந்தது. வில்வம் இலைகளும் விழுந்தன. அப்போது மூன்றாம் சாமம் முடிவடையும் நேரம். அதனால் மூன்றாம் சாமம் சிவலிங்கப் பூசை செய்த பயன் அவ் வேடனுக்குக் கிடைத்தது.

வேடன் நாணேற்றும் சத்தம் கேட்டுத் திடுக்கிட்ட ஆண்மான் வேடன் தன்னைக் குறிபார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு துர்க்கித்து, "வேடரே, எனது மனைவியும் அவளது சகோதரியும் நீர் குடிக்கவென்று இங்கு வந்தனர். வெகுநேரமாகியும் அவர்களைக் காணவில்லை. எனது பிள்ளைகளும், எனது மனைவியின் சகோதரியின் பிள்ளைகளும் அவர்களைக் காணாமல் தவிப்பர். அதனால் அவர்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்களிடம் பிள்ளைகளை ஒப்படைத்துவிட்டு வருகிறேன். அது வரை பொறுத்திரு" என்றது. ஆண்மானின் வார்த்தைகளை நம்பிய வேடன் அதைப் போக அனுமதித்தான். அப்போது இரண்டு பெண் மான்களும் அங்கு வந்தன. அதனால் மிக்க மகிழ்ச்சியடைந்த வேடன் வில்லை எடுத்து நாணைப் பூட்டியபோது முன்புபோல நீரும், வில்வம் இலைகளும் சிவலிங்கத்தின் மீது விழுந்தன. அதனால் அவன் சிவராத்திரியன்று நான்காம் சாமப் பூசையைச் செய்த பயனைப் பெற்றான். அதனால் அவனது மனதில் இருந்த கொலைவெறி அகன்று ஞானம் உண்டானது. அதனால் அம்பையும் வில்லையும் வீசிவிட்டுக் கீழே இறங்கிவந்து மூன்று மான்களையும்

அணைத்து முத்தமிட்டுவிட்டு, “ஏனோ தெரியவில்லை உங்கள் மீது இரக்கம் உண்டாகி விட்டது. அதனால் சென்று உங்கள் குடும்பத்துடன் மகிழ்ந்திருங்கள்” என்றான். அப்போது சிவபெருமான் ஐந்து திருமுகங்களோடு அவனுக்குத் தரிசனம் கொடுத்து; “உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்” என்றார். உடனே வேடன் சிவபெருமானைப் பணிந்து, “எம்பெருமானே, என்னால் பல பாவங்கள் செய்யப்பட்டன. அவற்றை மன்னித்தருளுங்கள்” என்றான்.

சிவபெருமான் மகிழ்ந்து அவனுக்குக் குகன் என்ற பெயரை அளித்து, “நீ விரும்பிய யாவற்றையும் அடைவாய். அயோத்திய மன்னனான தசரதனின் புதல்வன் ஸ்ரீ ராமன் உன்னிடத்தில் வந்து உனது உதவியைப் பெறுவார். தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் கிடைக்கப் பெறாத முத்தி உனக்குக் கிடைக்கும். உனது வம்சத்தினருக்குத் தலைவனாகி எல்லோராலும் மேலானவனாக மதிக்கப்படுவாய்” என்று அருளி மறைந்தார்.

தாயைப் பிரிந்த மான்குட்டிகள் தமக்கும் இந்நிலை வருமென்று உணர்ந்து தாய் சென்ற இடத்திற்கு வந்து சிவதரிசனத்தைப் பெற்று அங்கு வந்திறங்கிய விமானத்தில் ஏறிச் சுவர்க்கத்தை அடைந்தன. சிவபெருமான் அவ்விடத்தில் வியாதனன் என்ற வேடுவனால் பூசிக்கப்பட்டமையால் வியாதேசுவரர் என்ற பெயரைப் பெற்று அங்கேயே எழுந்தருளியிருக்கிறார்” என்றார் சூதமுனிவர்.

வேதநிதியின் கதை

“சௌனகாதி முனிவர்களே, இன்னொரு கொடியவன் தனக்குத் தெரியாது சிவராத்திரியன்று உபவாசம் இருந்து நற்பேறு அடைந்த கதையைக் கூறுகிறேன் கேளுங்கள். அவந்தி நகரில் சிவபெருமான் மீது அளவில்லாத பக்தி கொண்டு முறைப்படி சிவபூசை செய்யும் தீட்சிதர் இருந்தார். அவர் எந்த நிலையிலும் தீய செயல்களைச் செய்யாத உத்தமர். அவருக்கு இரு பிள்ளைகள் இருந்தனர். சுநிதி என்ற மகன் முறைப்படி ஒழுக்கமாக வாழ்பவன். வேதநிதியென்பவன் வேதங்களைப் படித்து வல்லவனானவன். அவன் ஒரு வேசியின் வீட்டுக்குச் சென்று அங்கேயே தங்கியிருந்தான். பணம், பொருள் தேவையானால் வீட்டுக்கு வந்து களவெடுத்துச் செல்வான். தீட்சிரது பெருமையை அறிந்த அவ்வூர் மன்னன் தீட்சிதரை அரண்மனைக்கு அழைத்து அவரைக் கௌரவித்து விலை உயர்ந்த இரத்தின மோதிரம் ஒன்றைக் கொடுத்தான். அத வேதநிதி திருடிச் சென்று அந்த வேசிக்குக் கொடுத்துவிட்டான். அவள் அரண்மனையில் நடனமாடுபவள். அன்று அவள் மன்னன் கொடுத்த மோதிரத்தை அணிந்து நடனமாடினாள். அதனால் கோபங் கொண்ட அரசன் தீட்சிகரை அழைத்து விசாரிக்க, அவர் நடந்தவற்றைச் சொன்னார்”.

மன்னன் அவனைத் தண்டித்தமையால் தீட்சிகர் அவனை வீட்டில் இருக்க அனுமதிக்கவில்லை. பொருள் கொடாமையால் அவ்வேசி அவனைத் துரத்திவிட்டாள். அதனால்

அவன் ஆதரிக்க யாருமின்றி அலைந்து திரிந்தான். பசி வாட்டியது. அன்று சிவராத்திரி. அன்றையநாள் மக்கள் சாமப்பூசை செய்வதற்கான பலகாரங்களுடன் சிவன்கோவிலுக்குச் சென்றனர். அதைப் பார்த்த வேதநிதி அவர்களின் பின்னால் சென்றால் உணவு கிடைக்கும் என்று நம்பி அவர்களின் பின் சென்று சிவன் கோவில் மண்டபத்தில் இருந்தான். பூசை முடிந்ததும் மக்கள் தமது வீடுகளுக்குச் செல்ல வேதநிதி சிவனுக்குப் படைத்த உணவு வகைகளை எடுப்பதற்காகச் சிவனின் அருகே சென்றான். பூசை முடிந்தமையால் விளக்குகள் மங்கலாக எரிந்தன. அதனால் உணவு இருக்கும் இடம் தெரியாததால் வேதநிதி தான் உடுத்திருந்த வேட்டியில் ஒரு துண்டைக் கிழித்து திரியாக்கி எரியும் தீபத்தில் வைத்தான். அதனால் சிவபெருமானைச் சூழ்ந்திருந்த இருள் விலகியது. வேதநிதி அங்கு படைக்கப்பட்டிருந்த உணவுப் பண்டங்களை எடுத்துக் கொண்டு வெளியே வந்தான். அப்போது கோவிலுக்கு வந்த சிலர் அவனைத் திருடன் என நினைத்துக் கூச்சலிட்டனர். வேதநிதி அதனால் பயந்து ஓடினான். வீதியில் காவலுக்கு நின்ற அரசனின் வீரர்கள் அவனை நிற்குமாறு பணித்தும் நிற்காததால் அவர்கள் பாணப் பிரயோகம் செய்தார்கள். அவர்கள் விட்ட அம்பு தேவநிதியின் நெஞ்சில் பாய அவன் விழுந்து மரணமானான். இரவு முழுவதும் கண் விழித்து உணவு உண்ணாது சிவபூசையை அவன் பார்த்தமையால் சிவபெருமான் மகிழ்ந்து சிவராத்திரி விரதத்தைப் பூர்த்தி செய்தவனாக அங்கீகரித்தார்".

"அதனால் வேதநிதி மறுபிறவியில் கலிங்க தேசத்திற்கு மன்னனாகி வருடந்தோறும் சிவராத்திரியன்று நோன்பிருந்து சிவபூசை செய்தான். அதனால் முனிவர்களே, அறியாமல் செயற்பட்டவர்களுக்கே மேலான பதவிகள் கிடைக்குமென்றால் அதன் மகிமையை அறிந்து செய்பவர்களுக்கு எப்படியான பலன் கிடைக்குமென்று நினைத்துப் பாருங்கள்" என்றார் சூதமுனிவர்.

முத்தி இலக்கணமும் சிவரூபமும்

நைமிசாரணிய முனிவர்கள் சூதமுனிவரைப் பார்த்து, "ஞானவித்தகரே, முத்தியைப் பற்றி எமக்கு விபரமாகச் சொல்ல வேண்டும்" என்றனர்.

"நீங்கள் கேட்கும் முத்தி என்பது நான்கு வகைப்படும். அவை சாரூப்யம் என்பது இறைவன் உருப்பெறும் பேறு. சாலோக்கியம் என்பது இறைவன் உலகம் அடையும் பேறு. சாந்நித்தியம் என்பது இறைவனின் அருகில் இருக்கும் பேறு. சாயுச்சியம் என்பது இறைவனோடு இரண்டறக் கலத்தல் எனப் பொருள்படும். அந்த முத்தி இந்த விரதத்தினாலே கிடைக்கும். அதைச் சிவபெருமானே தருதல் வேண்டும். யாரும் அறியாத சிவத்தை வேதங்கள் சச்சிதானந்த ரூபம் என்று சொல்கின்றன. குணங்களுக்கும், நிறங்களுக்கும் அப்பாற்பட்டு மனம், வாக்கு, காயங்களுக்கு அப்பாற்பட்டது சிவப்பரம்பொருள். அது ஆகாயத்தைப்போல

வியாபித்துள்ளது. நிர்விகாரமானது. இவ் உலகத்திலும், பரலோகத்திலும் அந்தப் பரம்பொருளை அர்ச்சனை செய்வதால் அதன் பயனாக முத்தி கிடைக்கும். இதை விபரமாகச் சொல்ல ஆதிசேடனாலும் முடியாது" என்றார் சூதமுனிவர்.

சிவபெருமானின் நித்யத்துவம்

முனிவர்கள் சூதரை நோக்கி, மகாத்மாவே, சிவபெருமான் என்பவர் யார்? உருத்திரன் என்பவர் யார்? இவ்வுலகத்தின் கர்த்தா யார்? நிர்க்குணராக இருந்தும் ஐந்தொழில்கள் காரணமாக குணசொரூபியாக உலகச் செயல்களைச் செய்பவர் யார்?" என்று கேட்டார்கள்.

"ஞானசீலர்களே, எந்தப் பரமாத்மாவினால் இறந்த உலகங்கள் தோன்றினவோ, அந்தப் பரமாத்மா சிவபெருமான் என்று உபநிடதங்கள் கூறுகின்றன. அந்தப் பரமாத்மாவால் இருவர் படைக்கப்பட்டனர். அவர்கள் விஷ்ணு என்ற நாராயணனும், பிரகிருதி என்ற நாராயணியுமாவர். நாராயணன் நீரின்மீது போகநித்திரையில் இருந்தபோது அவரது உந்திக்கமலத்தில் இருந்து பிரமன் தோன்றினான். திருமால் பல காலம் தவம்செய்து தான் தோன்றக் காரணனாக இருந்த விஷ்ணுவைக் கண்டான். அந்த விஷ்ணு வைகுண்டத்தில் இருந்து மகா பிரளயத்தின்போது சிவபெருமானை (முத்தி) அடைவர். இத்தகைய விஷ்ணுவும் பிரமனும் தாம் தாம் உலகத்திறந்குப் பெரியவர்கள் என்று விவாதம் செய்தபோது பரமேஸ்வரன் அவர்களுக்குக் காட்டிய உருவமே மகாதேவவுரு. இந்த மகாதேவனின் கபாலத்தால் தோன்றியவரே உருத்திரன். அந்த உருவம் தான் தியான யோக்கியமான சிவசொரூபம். ஏனைய தேவர்கள் பிரகிருதி சம்பந்தப்பட்டவர்கள். இவர்கள் காலக்கிரமத்தில் அழியத்தக்கவரும், தவம் செய்து முத்தியடைய வேண்டியவருமாவர். உருத்திரன் அழியாமல் சிவபெருமானிடத்தில் ஐக்கியமாவான். பிரமனில் இருந்து தேவர்கள், ரிஷிகள் அனைவரும் உருத்திரனை வணங்கவேண்டியவர்களாவர்".

"சர்வேஸ்வரனுக்குச் சதாசிவன் என்ற பெயர் எவ்வாறு உண்டானது என்பதைக் கூறுகிறேன். படைப்புக்கு முற்பட்டவர் சிவபெருமான். அவர் பிரளயத்திற்குப் பின்பும், படைப்புக்கு முன்பும் பின்பும் இருப்பவர். அதனால் தான் சதாசிவம் என்ற பெயர் உண்டாயிற்று. சகல மந்திரங்களையும், சர்வ வித்தைகளையும் விஷ்ணுவுக்குக் கொடுத்தார். ஐந்தொழில்களும் உண்மையில் சிவபெருமானிடத்தில் உள்ளனவேயன்றிப் பிறரிடத்தில் இல்லை. விஷ்ணு தொடக்கம் ஏனைய தேவர்களுக்கு காலவரையறை உள்ளது. ஆனால் சிவனுக்கு இல்லை. அதனால் தான் மகாகாலன் என்று சிவபெருமானைச் சொல்வர்" என்றார் சூதமுனிவர்.

அதைக்கேட்டு விளங்கிக் கொண்ட சௌனகாதி முனிவர்கள், “சிவபெருமானே பிரபஞ்சம் என்றும், பிரபஞ்சமே சிவபெருமான் என்றும் சொன்னீர்கள். அதை விளக்கமாக எமக்குக் கூறுங்கள்” என்றனர்.

ஞானப் பிரகரணம்

சூதமுனிவர் சௌனகாதி முனிவர்களுக்குச் சொன்னார்; “ஒரு காலத்தில் பிரமதேவர், நாரதர், சனத்குமாரர், வியாசர், கபிலர் முதலியவர்கள் ஒன்று கூடி இவ் உலகம் முழுவதும் சிவரூபமே அன்றி பிறிதில்லை. இச்சை ஏற்படும்போது உலகம் படைக்கப்படுகிறது. சகல உலகங்களையும் சிவபெருமான் காத்துக் கொண்டிருக்கிறார். அத்துடன் பார்த்துக் கொண்டும் இருக்கிறார். ஆன்மாக்கள் சிவபெருமானின் அம்சம். அவை மலத்துடன் கலப்பதால் சீவன் எனப்படுகிறது. சிவபெருமான் ஆன்மாவைவிட்டுப் பிரியாதவர். அவர் அனேக வடிவமெடுத்து எங்கும் வீற்றிருக்கிறார். மாயை தான் விதை என்றும், உலகம் மாயையின் வடிவம் என்றும் உணர வேண்டும். ஆன்மா, உலகப் பந்தத்தால் ஏற்பட்ட பசு என்ற பெயரைச் சர்வேஸ்வரனான சிவபெருமானை முறைப்படி வணங்கி அதை நீக்கி இறுதியில் சிவசாயுச்சிய நிலையை அடையும்”.

“முனிவர்களே, சிவபெருமானே கடவுள். அவரை அடைந்தவர்கள் பிறவியெடுக்கமாட்டார்கள். இறைவனிடத்தில் பக்தி உண்டாவதற்கு ஆயிரம் பிறவிகளில் முறைப்படி தவம், தானம், விரதம் முதலியவற்றைச் செய்து சிவபக்தனாக வேண்டும். பின் அவன் சீவன்முத்தனாவான். இதையே அவர்கள் நிட்சயித்துக் கூறினர். இதைச் சிவபெருமான் லிங்கரூபத்துடன் விஷ்ணுவுக்கும் பிரமனுக்கும் சொல்ல அவர்கள் சனத்குமாரருக்குச் சொல்ல, சனத்குமாரர் நாரதருக்குச் சொல்ல, நாரதர் வியாச முனிவருக்குச் சொல்ல, அவர் எனக்குச் சொன்னார். அதை நான் உங்களுக்குச் சொல்கிறேன்” என்றார் சூதமுனிவர். அதைக்கேட்ட முனிவர்கள் சூதமுனிவரைப் பாராட்டி விலையுயர்ந்த பட்டு பீதாம்பரம் முதலிய ஆடைகளையும், ஆபரணங்களையும் அவரது பாதத்தில் வைத்து வணங்கினர்.

2. தர்ம சங்கிதை

காப்பு

நாராயணம் நமஸ்க்ருத்ய நரஞ்சைவ ரோத்தமம்
தேவீம் சரஸ்வதீம் வ்யாஸம் ததோ ஜயமுதீரயேத்.

ஸ்ரீ மஹாவிஷ்ணுவையும் மனிதரில் சிறந்த உத்தமச் சைவரையும் சரஸ்வதி தேவியையும் வியாச பகவானையும் வணங்கிய பிறகு ஜெய சப்தத்தைச் சொல்லக் கடவன்.

உபமன்யு முனிவர் கண்ட சிவபெருமான்

நைமிசாரண்ய வாசிகளைப் பார்த்துச் சூதமுனிவர் சொன்னார்; "முனிவர்களே, முன்பொரு காலத்தில் கிருஷ்ண பரமாத்மா தனக்குப் புத்திர பாக்கியம் இல்லாமையால் அதை எப்படி அடைவது என்று கவலைப்பட்டார். அப்போது உபமன்யு முனிவர் வந்தார். அவரை வரவேற்று உபசரித்து ஆசனத்தில் அமர்த்திய கிருஷ்ணன்; "முனிவரே, தாங்கள் யாரை வணங்குகிறீர்கள்" என்று கேட்டார்.

"கிருஷ்ணா, நான் முன்பு கடும் தவம் செய்தபோது சிவபெருமான் பெருமகிழ்வுடன் என்முன்தோன்றினார். அப்போது முத்தலையுடன் விளங்கும் சூலத்தைக் கண்டேன். அந்தச் சூலம் பெருமை வாய்ந்தது. அதன் சிறப்பைக் கூறி முடிக்க இயலாது. அது சமுத்திர நீரை வற்றப்பண்ணும். அண்டங்களையெல்லாம் சங்காரிக்கும். அதைவிட வலிமையான ஆயுதம் எதுவும் உலகில் இல்லை. அத்துடன் மழுவையும் வைத்திருந்தார். அத்துடன் ஆயிரம் முகங்களையும், இரண்டாயிரம் புலங்களையும், ஆயிரம் கால்களை உடையதுமான சுதர்சனம்

என்னும் சக்கரம் அவரின் அருகில் இருக்கக் கண்டேன். இவை தவிர வச்சுராயுதம், சுக்கியாயுதம், தூனீயம், கட்கம், பாசம், அங்குசம்கள் முதலிய ஆயுதங்களையும் அங்கு கண்டேன். அவ்வாயுதங்களுடன் கோர உருவில் எனக்கு அவர் காட்சி தந்தார்.

அவை மட்டுமா? அவனின் அருகில் அன்னம் நின்றது. பிரமதேவன் அவரது இடதுபுறத்திலும், அவனுடன் சங்கு சக்கரம் கதை முதலியவற்றையும் கண்டேன். கருடவாகனத்தில் இருக்கும் விஷ்ணுவையும், பார்வதியையும், சுப்பிரமணியரையும், நந்திதேவரையும், விநாயகரையும், பூதகணங்களையும், சப்தமாதர்களையும் கண்டேன். அவர்கள் சிவபெருமானைத் துதித்துக்கொண்டு நின்றனர். அவற்றைக்கண்ட நான் மகிழ்ச்சியுடனும், திகைப்புடனும் அவரை வணங்கினேன்.

சிவபெருமான் என்னைப் பார்த்து மகிழ்வுடன் சிரித்தார். பின் "வேதியனே, எனது கோர உருவைக் கண்டும் பயப்படாத நீ என்னை நன்றாக அறிந்தவனாகிவிட்டாய். அதனால் விரும்பிய வரத்தைக் கேள்" என்றார்.

"பகவானே, நீர் மகிழ்வுடன் இருப்பதால் எப்போதும் என்னைவிட்டு நீங்காது இருத்தல் வேண்டும். அத்துடன் எனது ஆச்சிரமத்தில் தங்கியிருந்து தரிசனம் தரல் வேண்டும். எமது வம்சத்தினரும் நானும் எப்போதும் பாலும் அன்னமும் குறைவின்றிப் பெற வேண்டும்" என்று கேட்டேன்.

"வேதியனே, உனக்கு நரை, திரை, மூப்பு ஏற்படாது. முனிவர்கள் எல்லோரிலும் மேலானவனாகப் போற்றப்படுகிறாய். பால் தேவையானபோது உன்னருகே பாற்கடல் வரும். நீ கேட்டது போல நான் உனது ஆச்சிரமத்தில் அமர்ந்திருந்து உனக்கு வேண்டியவற்றைத் தருவேன்" என்று கூறி மறைந்தார். அவரின் சொற்படி நான் நினைத்த போதெல்லாம் நினைத்தவாறு நடைபெறுகின்றன" என்றார் உபமன்யு முனிவர்.

உபமன்யு முனிவரின் உபதேசம்

"கிருஷ்ணா, சிவபெருமானைப் பற்றற்று வணங்கி அவரின் அருளால் மேல்நிலையை அடைந்தவர்கள் சிலரது வரலாற்றைக் கூறுகிறேன் கேள்" என்று உபமன்யு அவர்களின் வரலாற்றைக் கூறத் தொடங்கினார்.

"கிருஷ்ணா, இரணியகசிபு பத்து இலட்சம் வருடங்கள் தேவர்கள் அனுபவிக்கும் இன்பங்களையெல்லாம் சிவபெருமானிடம் பெற்ற வரத்தின் மகிமையால் அனுபவித்தான். அதனால் பிரகலனாதனைப் புத்திரனாகவும் பெற்றான். அதனால் எந்த ஆயுதங்களும் அவனைத் தாக்காத வரத்தை அவனுக்குச் சிவபெருமான் கொடுத்தார். சதமகன் என்ற தைத்திரியன் சிவபெருமானைக் குறித்துக் கடும்தவம் செய்து ஆயிரம் நகரங்களைப் பெற்றான்.

மகரிசி என்பவர் சிவபெருமானை ஆராதித்து ஞானம் பெற்றார். வேதவியாசர் புகழையும் ஞானத்தையும் அடைந்தார். வாலகில்லியர் என்பார் சிவனை ஆராதித்து யாராலும் வெல்ல முடியாத கருடனை வென்றார். இவ்விதமாகப் பலர் சிவபெருமானைத் தரிசித்துப் பெரும் பெரும் வரங்களைப் பெற்றனர். அதனாதல் நீயும் சிவனை வணங்கி உனது விருப்பங்களைப் பூர்த்தி செய். சிவனின் மகிமையைச் சொல்ல யுகங்கள் செல்லும்" என்றார்.

அதைக்கேட்ட கிருஷ்ணர் மிக்க மகிழ்வடைந்து, "அப்படியே செய்கிறேன்" என்றார்.

கிருஷ்ணா, நீ விரைவில் சிவபெருமானைக் காண்பாய். அவர் உனக்கு இருபத்து நான்கு வரங்களை அருளுவார். அதற்குரிய மந்திரத்தை நான் உபதேசிக்கிறேன்" என்று அந்த மந்திரத்தை உபதேசித்தார்.

உபமன்யு முனிவர் உபதேசித்த மந்திரத்தைச் சொல்லியவாறு கிருஷ்ணன் சிவனை நினைத்து பதினைந்து மாதங்கள் தவம் செய்தான் பதினாறாவது மாதம் சிவபெருமான் அவனுக்குத் தரிசனம் கொடுத்தார். கிருஷ்ணன் மகிழ்ந்து அவரை வணங்கினான். அப்போது சிவபெருமான் மகிழ்ந்து; "கிருஷ்ணா, நான் உனது மேலான பக்தியை அறிவேன். ஆகையால் நீ விரும்பிய எட்டு வரங்களைக் கேள்" என்றார்.

"மகேஸ்வரா, நான் எப்பொழுதும் தர்மநெறியைப் பின்பற்ற வேண்டும். எனது கீர்த்தி மேலோங்க வேண்டும். நான் பெரும் பலசாலியாக இருத்தல் வேண்டும். எப்போதும் நீர் எனக்கருகில் இருத்தல் வேண்டும். உம்மீது எனக்குத் திடமான பக்தி உருவாதல் வேண்டும். பத்துப் புத்திரர்கள் எனக்குப் பிறக்க வேண்டும். என்னை எதிர்க்கும் பகைவர்கள் அழிய வேண்டும். யோகிகளுக்கெல்லாம் நான் தலைவனாக இருத்தல் வேண்டும்" என்று கேட்டார்.

சிவபெருமான் அவற்றை அருளிவிட்டுக், "கிருஷ்ணா, சாம்பன் என்ற மகாபராக்கிரமசாலி, ஒரு முனிவரின் சாபத்தால் உனக்கு மகனாகப் பிறப்பான். இவ்வரங்களைவிட நீ நினைப்பவை யாவும் நடக்கும்" என்று கூறி மறைந்தார்.

அவரின் அருகில் இருந்த பார்வதிதேவி, "கிருஷ்ணா, என்னிடமிருந்து வரங்களை எதிர்பார்க்கிறாயா?" என்று கேட்க கிருஷ்ணர், "ஒரு போதும் எனக்கு எதிரிகள் இருக்கக் கூடாது. என்னை எதிர்ப்போரை நான் வெல்ல வேண்டும். நூறு யாகங்களைச் செய்தல் வேண்டும். நான் தினமும் ஆயிரக்கணக்கான அதிதிகளுக்கு உணவளிக்க வேண்டும். ஆயிரம் மனைவியர் எனக்கிருக்க வேண்டும்" என்று கேட்கப் பார்வதிதேவி அவற்றைக் கிருஷ்ணனுக்கு வழங்கினார்".

அதன்பின் உபமன்யு முனிவர் கிருஷ்ணனுக்குச் சொன்னார்; "கிருஷ்ணா, தண்டி என்னும் மகரிசி சகஸ்ர நாமங்களால் தோத்திரம் செய்தார். அத்தோத்திரங்கள் சாங்கிய மதத்தினரால் படனஞ் செய்யப்படுகிறது. மனிதர்கள் அதை தோத்திரம் செய்வதில்லை. ஒரு

சிலர் மட்டும் அதைத் தோத்திரம் செய்து பெரும் நன்மை பெற்றுள்ளனர். அப்படி வரம் பெற்றவர்களின் வரலாற்றை உனக்குச் சொல்கிறேன்.

அத்திரி முனிவர் சிவபெருமானை நோக்கி நூறு வருடங்கள் தவஞ்செய்து நூறு புத்திரர்களையும், அழியாத கீர்த்திகளையும் பெற்றார். அப்புத்திரர்களில் ஒருவன் நிலவிடயத்தில் அநியாயம் செய்து பிரமகத்தி அடைந்தான். அவனை எல்லோரும் ஒதுக்கச் சிவபெருமான் அவனுக்கு மேலான கல்வியும், பெருஞ் செல்வமும் கொடுத்தவர். பரசுராமர் அத்தோத்திரங்களைச் சொல்லிப் பரசு என்ற ஆயுதத்தைப் பெற்று அசுரர்களையும், அரக்கர்களையும் அழித்தவர். தேவலன் என்னும் முனிவன் இந்திரனால் பெரும் சாபத்தைப் பெற்றவன். அவன் சிவலிங்க பூசை செய்து இந்திரனையும் வென்றவன். கிருத்சமன் வசிட்டரின் சாபத்தால் நீரில்லாத காட்டில் மிருகமாக மாறி அலைந்தவன். அவன் சிவபூசை செய்தமையால் மிருகமுகமுடைய ஒரு கணநாதனாகிச் சிவபெருமானை அடைந்தவன். யௌகீஷ்வயன் என்ற முனிவன் சிவபூசை செய்து அனிமாதி அட்டசித்திகளையும் பெற்று பெருவாழ்வு பெற்றான். தன்னை நினைத்துத் தவம் செய்த கர்க்கிய முனிவருக்குச் சிவபெருமான் மோட்சவரம் கொடுத்து நான்கு ஸ்கந்தங்களையுடைய சோதிட சாத்திரம் என்னும் கணித சூத்திரத்தையும் நிலையான எல்லா வித்தைகளையும் அருளியவர். அத்துடன் அவரைப்போன்ற வாண்மையுள்ள ஆயிரம் புத்திரர்களையும் கொடுத்தவர். பரராச முனிவர் சிவலிங்கபூசை செய்து வேதவியாசர் என்ற மகாமேதையைப் புத்திரராகக் கொடுத்தவர். மிகவும் ஏழையாக இருந்த ஒரு பிராமணன் தனது புத்திரனான காவலன் என்ற புத்திரனைத் தனது குருவின் வீட்டில் விட்டுவிட்டு அதிதிகள் வந்தால் கொடுக்க எதுவும் இல்லை என்பதால் தனது மனைவியிடம் தான் வெளியே சென்றுவிட்டதாகக் கூறும்படி சொன்னான். அதன் பின் ஒரு அதிதி மிக்க பசியுடன் வந்து உணவு கேட்கத் தனது கணவன் எங்கோ சென்றுவிட்டான் என்று கூற, வந்த அதிதி தனது ஞானத்தால் உண்மையை அறிந்து, "அவன் அப்படியே ஆகுக" என்று சொல்ல, யாகசாலையில் மறைந்திருந்த பிராமணன் மரணமானான். அதை அறிந்த காவலன் என்ற புதல்வன் சிவபூசை செய்து சிவனை ஆராதித்தபோது சிவனருளால் அவனது தந்தை உயிர்த்து வந்தார்" என்று சூதமுனிவர் கூறினார்.

திரிபுர சங்காரம்

"மகாஞானியே, இனிச் சிவபெருமான் முப்புரங்களையும் சங்காரம் செய்த வரலாறைக் கூறுங்கள்" என்று கேட்டார்கள்.

"முனிவர்களே, சிவனின் சரித்திரங்களை எனக்கு வேதவியாச முனிவரே கூறினார். அவர் கூறியவற்றை நான் உங்களுக்குக் கூறுகிறேன். திரிபுர அசுரர்களில் தாரகாசுரன் மூத்தவன். கமலாசுரன் இரண்டாமவன். வித்தியுன் மாலி இளையவன். மூவரும் மேருமலையை

அடைந்து பிரமனை நினைத்து நூறாயிரம் வருடங்கள் கடுந்தவம் செய்தனர். அவர்களின் தவத்தால் மகிழ்ந்த பிரமதேவர் தனது கணங்களுடன் அவர்கள் முன்தோன்றி, "தைத்திரியர்களே, நீங்கள் எதைக்கருதி இக் கொடிய தவத்தைச் செய்தீர்கள். உங்களுக்கு வேண்டிய வரங்களைக் கேளுங்கள்" என்றார். பிரமதேவனை வணங்கிய அம்மூவரும் மிக்க மகிழ்ந்து எமக்குத் தக்கவீடு ஒன்று வேண்டும். எனக்குப் பொன்னலான யாரும் அழிக்க முடியாத நினைத்த நேரம் நினைத்த இடத்திற்குச் செல்லும் வீடு வேண்டும்" என்று தாரகாசுரன் கேட்டான். அதுபோன்ற வெள்ளியாலான வீடு எனக்கு வேண்டுமென்று கமலாசுரன் கேட்டான். அதுபோன்ற இரும்பாலான வீடு எனக்கு வேண்டும் என்று வித்தியுன்மாலி கேட்டான்.

அதன்பின் அம்மூவரும் நினைத்த இடங்களுக்கெல்லாம் சென்று தேவர்களையும், மனிதர்களையும் அழித்து வந்தனர். அதனால் தேவர்கள் பிரம்மாவிடம் சென்று முறையிட்டனர். பிரமா தான் வரம் கொடுத்தமையால் அவர்களைத் தன்னால் அழிக்க முடியாதெனக்கூறி அவர்களைச் சிவபெருமானிடத்துச் செல்லச் சொன்னார். அவர்கள் சிவபெருமானிடம் சென்று வணங்கினர்; "மகாதேவா, முப்புர அசுரர்களின் கொடுமை எல்லை மீறிவிட்டது. அதனால் அவர்களைச் சங்காரம் செய்யுங்கள்" என்றான். அதைக்கேட்ட சிவபெருமான் அதற்கான முன்னாயத்தங்களைச் செய்யுங்கள் என்றுகூற விஷ்ணு இரதம், வில், அம்பு, குதிரை முதலியவற்றுடன் சிவபெருமானிடம் வந்தார். சிவபெருமானும் பார்வதிதேவியும் தேரில் ஏறி அமர்ந்தனர். தேவர்கள் தமது வாகனங்களில் ஏறிச் சிவபெருமானைப் பின்தொடர்ந்து சென்றனர். அப்படைகள் திரிபுரத்தை அடைந்தன. அவ்வேளை முப்புரங்களும் ஒன்றாகின. சிவப்படையை முப்புரங்களையும் சூழ்ந்து நின்றன. சிவபெருமான் மேருவாகிய வில்லை வளைத்து வாசுகியாகிய நாணை ஏற்றி அக்கினியைக் கூர்வாயாகவும், வாயுவைச் சிறகாகவும் கொண்டு திருமாலான அம்பைக் கையிலெடுத்தார். முப்புரங்களையும் அழிக்க இதுவே நல்லநேரம் என்று தேவர்கள் சொன்னார்கள். போர்க்கருவிகளாக அமைந்திருந்த தேவர்கள் யாவரும் தம்மாலேதான் திரிபுரதகனம் நடைபெறப்போகிறதென நினைத்து இறுமாந்திருந்தனர். அதை உணர்ந்த சிவபெருமான் முப்புரங்களைப் பார்த்துப் புன்னகைத்தார். அதனால் அம் முப்புரங்களும் எரிந்து சாம்பராகின. முனிவர்களே நீங்கள் கேட்ட விசயங்களை மிகவும் சுருக்கமாகச் சொன்னேன்" என்றார் சூதமனிவர்.

அந்தகாசுரன் கதை

நைமிசாரண்ய முனிவர்கள் சூதமுனிவரை வணங்கி, "சுவாமி, எமக்கு அந்தகாசுரனின் வரலாற்றைச் சொல்லுங்கள்" என்று கேட்டனர்.

"முனிவர்களே, மந்தரகிரியில் சிவபெருமானும், பார்வதிதேவியும் மிகவும் மகிழ்வாக இருந்தபோது பார்வதிதேவி, சிவபெருமானின் கண்களைத் தனது மெய்மையான கைகளால்

வேடிக்கையாக மூடினாள். அப்போது ஒரு கோர உருவம் அவர்கள் முன் தோன்றியது. அதனால் பயந்த பார்வதி சிவபெருமானிடம், "சுவாமி, இவன் யார்? குருடனாகவும், குரூபியாகவும் இருக்கிறான்" என்று கேட்டாள். அதற்குச் சிவபெருமான்; "பார்வதி இவன் மகாபராக்கிரமசாலி எனது கண்களை நீ உனது கைகளால் மூடியமையால், அப்போது உனது கையிலிருந்த வியர்வையில் உண்டாகியவன். இவனது பெயர் அந்தகன். இவனுக்குத் தந்தை நான். தாய் நீ. இவனை ஒரு வருடம் காக்க வேண்டும்" என்றார். அதன்படி பார்வதி தேவி அவனைத் தனது மகனாக நினைத்து வளர்தாள்.

சிலநாட்கள் கழிய இரணியாசுரன் என்ற அசுரன் பெருந்தவம் செய்தான். அவனது தவத்தால் மகிழ்ந்த சிவபெருமான், "நீ மிகக் கடுமையான தவத்தை எதற்காகச் செய்கிறாய்" என்று கேட்டார். இரணியாசுரன், "சர்வேஸ்வரா, எனக்குப் பராக்கிரமசாலியும், அசுர குலத்தை மேம்படுத்தக்கூடியவனுமான ஒரு புத்திரன் வேண்டும்" என்றான். அதற்குச் சிவபெருமான், "இரணியனே, உனக்குப் புத்திரபாக்கியம் இல்லை. அதனால் உனது பலத்தைவிடப் பெரும் பலமுடையவனாகவும், அசுர குலத்தைக் காகக்கூடிய வீரனாகவும், யாராலும் வெல்லமுடியாதவனுமான அந்தகன் என்ற புத்திரனைத் தருகிறேன் பெற்றுக் கொள்" என்றார்.

இரணியாசுரன் சிவபெருமானுக்கு நன்றி கூறிவிட்டு அப்புதல்வனைப் பெற்றுச் சென்றான். சில வருடங்களில் அவன் வளர்ந்து பெரும் பலசாலியானான். அவன் தேவர்களையெல்லாம் வென்றான். இரணியாசுரன் பூமியைப் பாயைப்போலச் சுருட்டிக்கொண்டு பாதாளத்திற்குச் சென்றான். அதனால் தேவர்களும், முனிவர்களும் பிரமாவிடம் சென்று அதை முறையிட்டனர். அதைக்கேட்ட பிரமதேவர் பாதாள உலகம் சென்று இரணியாசுரனையும், பல்லாயிரம் அசுரர்களையும் அழித்துவிட்டு அந்தகனைப் பாதாள உலக அரசனாக முடிசூட்டிவிட்டு பூமியை மீட்டுக் கொண்டு வந்தார்.

அதன்பின் அந்தகன் பிரமதேவனை நோக்கிக் கடுந்தவம் செய்தான். அதனால் பிரமதேவர் அவன்முன் தோன்றி, "உனக்கு என்ன வரம் வேண்டும்" என்று கேட்டார். அதற்கு அந்தகன்; "பிதாமகரே, எவ்வகையான ஆயுதங்களினாலும் மலை, நீர், அக்கினி, சத்துருக்களாலும், இரவிலும் பகலிலும், வேறு எவ்வேளைகளிலும் எனக்கு மரணம் ஏற்படக்கூடாது" என்று கேட்டான். அதைக் கேட்ட பிரமதேவர், "அந்தகா, நீ கேட்ட வரத்தைக் கொடுக்கிறேன். நீ எட்டுக்கோடி வருடங்கள் அசுர இராட்சியத்தைப் பரிபாலிப்பாய்" என்று கூறி மறைந்தார்.

"முனிவர்களே, பிரகலாதனின் தந்தையான இரணியகசிபுவின் சகோதரனின் மகன்தான் அந்தகன். பிரகலாதன் விஷ்ணுவின் பக்தன். அவனிடம் நாடாளும் விருப்பம் இல்லாததால் அவனது நாட்டுப் பொறுப்பை அந்தகன் ஏற்றுக் கொண்டான். பின்பு அவன் தேவர்களையும், அண்டங்களின் அசுரர்களையும் வென்று உலகம் முழுவதற்கும் அரசனானான்.

அந்தகன் தனது கோரமான உருவத்தை நீக்குவதற்காகவும், தனது இராட்சியப் பலத்தை மேம்படுத்துவதற்காகவும், பிரமதேவரை நோக்கித் தவம் செய்தான். அவன் கடுமையான தவம் செய்தும், பிரமதேவர் அவன்முன் தோன்றவில்லை. அதனால் அவன் தனது தசையை வெட்டி வெட்டி ஓம குண்டத்தில் இட்டுக் கொண்டிருந்தான். அப்போதும் பிரமதேவர் தோன்றாமையால் அவன் தனது எலும்புகளை வெட்டத் தொடங்கினான். அப்போது தேவர்கள் பிரமதேவரிடம் சென்று "தந்தையே, அந்தகன் செய்யும் கொடுமைகளை எம்மால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அதனால் அவனுக்கு வரம் கொடுக்க வேண்டாம்" என்று தடுத்தனர். அவற்றைக் கேளாத பிரமா அந்தகன் தவம் செய்யுமிடத்திற்கு வந்து, "அந்தகா, நீ விரும்பிய வரங்களைக் கேள்" என்றார்.

பிரமதேவரை வணங்கிய அந்தகன், "எதிரிகளால் எனது இராச்சியத்திற்கு பங்கமேற்படக்கூடாது. எதிரிகள் எல்லோரும் எனது சேவகர்களாதல் வேண்டும். என்னை யாரும் கொல்லக்கூடாது. எனக்குச் சாகா வரம் வேண்டும்" என்று கேட்டான். அதற்குப் பிரமதேவர், "சாகா வரத்தைத் தவிர நீ கேட்ட அனைத்தையும் தந்தேன். உலகில் இறவாதவர்கள் யாரும் இல்லை" என்றார்.

அதனால் அந்தகன், "எனது கோர உருவம் மறைந்து அழகான உருவம் தோன்ற வேண்டும். அத்துடன் எனக்குப் பார்வையும் கிடைத்தல் வேண்டும். நான் அழகான மங்கையர்களுக்கிடையில் பெரும் அழகியும், மனம் வாக்குக் காயங்களாலும் களங்கப்படாத பெண்ணை நான் போகிக்கும்போது எனக்கு மரணம் உண்டாகட்டும்" என்று கேட்டான். பிரமதேவர் புன்சிரிப்புடன் அவன் கேட்ட வரங்களைக் கொடுத்துவிட்டுச் சென்றார். உடனே அந்தகன் அழகிய தேகத்தைப் பெற்றான். கண்களும் தெரிய ஆரம்பித்தன.

அதன்பின் அவன் அழகிய பெண்களுடன் உறவாடி மகிழ்ந்தான். அவர்களை பூந்தோட்டங்களிலும், கடற்கரைகளிலும், விமானங்களிலும், வேறு அழகிய இடங்களிலும் அழைத்துச் சென்று மகிழ்ந்திருந்தான். அந்தகன் அழகிய பெண்களைத்தேடி அவர்களுடன் மகிழ்ந்திருக்கும் வேளையில் அவனது மந்திரிகளான துர்யோகதனன், வைபவசன், கஸ்தி என்னும் மூவரும் பேரழகியான ஒரு பெண்ணைக் கண்டு அதிசயித்து அவளின் அழகைப்பற்றி அந்தகனிடம் வந்து போற்றிப் புகழ்ந்து கூறினர். அவளது ஒவ்வொரு அங்கங்களது அழகையும் மணிக்கணக்கில் விபரித்தனர். இறுதியாக அவர்கள், "மன்னரே, அவளோடு ஒரு முனிவர் இருக்கிறார். அவரின் மனைவியாகத்தான் அவள் இருத்தல் வேண்டும்" என்றார்கள்.

தினமும் பலர் அந்த முனிவர் தவம் செய்யும் குகைக்குச் சென்று அவரின் மனைவியைப் பார்த்துவிட்டு வந்து அந்தகாசுரனுக்கு அவளின் அழகைப்பற்றி விபரித்துக் கூறுவார்கள். அப்படிக் கூறுவோருக்கு அந்தகாசுரன் பொன்னும் பொருளும் அள்ளிக் கொடுப்பான். அதனால் பலர் அவளைப் பார்க்காமலே அவளது அழகைப் பற்றிப் பொருளுக்காகப் புகழ்ந்து கூறுவர். அதைக் கேட்டுக் காமம் தலைக்கேறிய அந்தகாசுரன்

மோகப்பித்துப் பிடித்து மந்திரிமாரை அழைத்து அம் முனிவரிடம் சென்று அப் பெண்ணைத் தனக்குத் திருமணம் செய்து வைக்கும்படி கேட்கச் சொன்னான்.

தாம் அவளை அந்தகாசுரனுக்குத் திருமணம் செய்து வைத்தால் அவன் கணக்கின்றிப் பொன்னும் பொருளும் தருவானென நினைத்து மகிழ்ந்து முனிவர் தவம் செய்யும் குகைக்குச் சென்றனர்.

அப் பெண் முனிவருக்குச் சேவை செய்து கொண்டிருந்தாள். அவரின் அருகே சென்ற மந்திரி சொன்னான்; "முனிவனே, இங்கு உனக்குச் சேவை செய்யும் பெண்ணை எமது அரசனனான அந்தகாசுரன் திருமணம் செய்ய விரும்புகிறான். பேரழகனும், பலவானும், யாராலும் வெல்ல முடியாதவனும், அண்டங்கள் எல்லாவற்றிற்கும் அரசனுமான அவனுக்குத் தான் இந்த அழகான பெண் மனைவியாதல் வேண்டும். நீ உனது உடல் முழுவதற்கும் சாம்பல் பூசியிருக்கிறாய். எலும்பு மாலையை அணிந்திருக்கிறாய். உனது தலையில் ஒரு நதி ஓடுகிறது. சந்திரன் பிரகாசிக்கிறான். பாம்புகள் உனது தேகமெங்கும் ஊர்ந்து திரிகின்றன. எருது ஒன்றை அருகில் வைத்திருக்கிறாய். அப்படியான உனக்கு ஏன் இந்தப் பேரழகி. உன்னைக் கண்டாலே அவளுக்கு அருவருப்பு உண்டாகும். உன்னுடன் எப்படி அவள் கூடியிருப்பாள். ஏ அசிங்கமான முனிவனே, அவளை மரியாதையாக எமது அரசனிடம் ஒப்படைத்துவிடு" என்றார்கள்.

அப்போது முனிவனின் வடிவில் இருந்த சிவபெருமான், "அசுரர்களே, சிவபெருமான் என்னுடன் இருக்கிறார். இக் குகையில் இருந்து தவம் செய்கிறேன். நீங்கள் சொன்ன பேரழகி எனது மனைவி. மனைவியை யாருக்காவது கணவன் விட்டுக்கொடுப்பானா? பலமிருந்தால் அவளைக் கவர்ந்து செல்லுங்கள்" என்றார் முனிவர் வடிவிலிருந்த சிவபெருமான்.

அதைக்கேட்ட மந்திரிகள் அந்தகாசுரனிடம் சென்று அப்படியே சொன்னார்கள். அதைக்கேட்டுச் சினங்கொண்ட அந்தகாசுரன் சிவபெருமான் தவம் செய்யும் குகைக்கு வந்தான். முனிவரையும், அவரது மனைவியையும், நந்திதேவரையும் அவன் கண்டான். இந்த கிழட்டு முனிவனா தனது பலத்தைப் பற்றிக் கூறியது. மூவரையும் ஒரு கைப்பிடியாகப் பிடித்துச் சென்றுவிடுவேன்" என்று நினைத்துக் கொண்டு அவர்களைப் பிடிக்கச் சென்றான். அவனைச் செல்ல நந்திதேவர் விடாமையால் பெருங்கோபங் கொண்டு நந்திதேவரைத் தாக்கினான். அதனால் வெகுண்டெழுந்த நந்திதேவர் அந்தகாசுரனையும் அசுரர்களையும் மூர்க்கத்தனமாகத் தாக்கினார். அசுரர்கள் பலர் மாண்டனர். அப்போது சிவபெருமான் பார்வதிதேவியின் அருகில் வந்து, "பார்வதி, எனது பாசுபதவிரதம் இன்னும் முடியவில்லை. அதனால் நான் வேறொரு வனத்திற்குச் சென்று பாசுபத விரதத்தை முடித்துவிட்டு வரும்வரை நீ இக்குகையில் இரு. நந்திதேவரும் பூதகணங்களும் உனக்குப் பாதுகாப்பாக இருப்பார்கள்" என்று கூறிச் சென்றார்.

சிவபெருமான் சென்றதும் அந்தகாசுரன் நூற்றைம்பது வருடங்கள் அக்குகைக்கு வந்து நந்திதேவரோடு பெரும் போர் செய்தான். அதனால் கோபங் கொண்ட பார்வதிதேவி பிரமாவையும், விஷ்ணுவையும், பூதகணங்களையும் நினைக்க அவர்கள் தம்மை யாரென்று காட்டாது பெரும் படையுடன் வந்தனர். அவர்களோடு சேர்ந்து பார்வதி அந்தகாசுரனோடு போரிட்டாள். பிரமனிடத்தில் தோன்றிய பிராமி என்னும் சக்தியும், விஷ்ணுவிடமிருந்து தோன்றிய நாராயணி என்ற சக்தியும் கதை, சங்கு, சக்கரம், வில் போன்ற ஆயுதங்களுடன் உக்கிரமாகப் போராடினர். இந்திரனின் சக்தி வச்சிராயுதத்துடன் ஆயிரம் கண்களுடனும், ஆயிரம் கைகளுடனும் தோன்றினாள். இவ்வாறு தேவர்களின் சக்திகள் கோர உருவத்துடன் ஆயுதமேந்தி அசுரர்களுடன் உக்கிரமாகப் போராடின. அவர்களுக்கு நந்திதேவரும் பார்வதியும் தலைமை வகித்தனர். அப்போது சிவபெருமான் நிகழும் சம்பவங்களை உணர்ந்து தம் விரதத்தை நிறுத்திவிட்டு அங்கு வந்தார். சிவபெருமானின் வருகையைக் கண்ட அனைவரும் பெருமகிழ்வுற்றனர்.

பல நாட்களாகக் காணாதிருந்த முனிவரைக் கண்ட அசுரர்கள் அதை அந்தகாசுரனிடம் சொல்ல அவன் பெரும் படை திரட்டிக்கொண்டு முனிவர் வசித்த குகைக்கு வந்தான். அதை அறிந்த தேவர்கள் தத்தமது வாகனங்களில் வந்தனர். அவர்களை அன்புடன் வரவேற்ற சிவபெருமான், நந்திதேவரைப் படைத்தளபதியாக்கி அசுரர்களுடன் போரிடுமாறு பணித்தார். அந்தகாசுரனின் படையில் இருந்த விகசன் என்ற அசுரன் திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்களையும், பூதகணங்கள் முழுவதையும் விழுங்கிவிட்டான். விகசனால் நந்திதேவரைத் தவிர அனைத்துத் தேவர்களும் விழுங்கப்பட்டமையால் தனித்து நின்ற நந்திதேவர் அச் செய்தியை விரைந்து சென்று சிவபெருமானுக்குச் சொன்னார். அத்துடன், “எம்பெருமானே, சுக்கிரபகவான் அசுரர்களுக்குச் சார்பாக இருந்து அவர்களை எம்மை அழிக்கும்படி தூண்டுகிறார்” என்றார். அதைக் கேட்ட சிவபெருமான், மூன்று உலகங்களையும் உண்டாகச் செய்யும் கோடி சூரிய கிரணங்களின் சக்தியைப்போல சோம் என்னும் பெயருடைய சாமகானத்தைப் பாடினார். அப்போது அந்தகாசுரன் தனது வலிமையை இழந்துவிட்டான். அவர் அதை நிறுத்த அந்தகாசுரன் மீண்டும் பலமுள்ளவனாகி விட்டான். அதனால் விகசகன் நந்தியெம்பெருமானையும் பிடித்து விழுங்கி விட்டான்.

அதை அறிந்த சிவபெருமான் விகசனால் விழுங்கப்பட்டவர்கள் அனைவரும் வெளிவரும்படி ஒரு மந்திரத்தை உச்சரித்து அவனுடன் போரிட்டார். அதனால் விகசனால் விழுங்கப்பட்ட பிரமா, விஷ்ணு, இந்திரன், தேவர்கள் அனைவரும் வெளியே வந்தனர். லட்சக்கணக்கான அசுரர்கள் இறந்தனர். இறந்த அசுரர்கள் அனைவரையும் சுக்கிரன் உயிர்த்தெழச் செய்தார். அதைக்கண்ட நந்திதேவர் சுக்கிரனைக் கைதுசெய்து சிவபெருமானின் முன் நிறுத்தச் சிவபெருமான் சுக்கிரனைப் பிடித்து விழுங்கிவிட்டார். அதனால் அசுரர்கள் பலர் மாண்டனர். அந்தகாசுரன் சிவபெருமானை எதிர்த்தான். அவனை எதிர்த்த பூதகணங்கள் புறமுதுகிட்டு ஓடி மறைந்தன. நந்திதேவர் அந்தகாசுரனைக் கதையால் அடித்தார். அவனின்

உடலில் இருந்து வெளிப்பட்ட இரத்தத்தில் இருந்து இராட்சத மாயையால் விஷ்ணு, பிரமன், இந்திரன், அந்தகன் முதலிய அனேக ரூபங்கள் வெளிப்பட்டன. அவர்களைச் சிவபெருமான் தனது சூலத்தால் தாக்கி அழித்தார். அழிக்க அழிக்க அவர்கள் தோன்றிக் கொண்டிருந்தனர். அப்போது சிவபெருமானின் வலது தோளில் இருந்து நான்கு கால்களையுடைய ஒரு சக்தி தோன்றி பெரும்பசியோடு அந்தகனின் உடலில் இருந்து வெளியேறிய இரத்தத்தைக் குடித்துக் கொண்டிருந்தது. அதனால் அந்தகன் பலமற்றும் போனான். அப்போது சிவபெருமான் தனது சூலத்தால் அவனைக் குத்தியபோதும் அவன் உயிர் போகவில்லை. பின் சிவபெருமான் அந்தக் குகைக்குச் சென்று பார்வதிதேவியை அழைத்துக் கொண்டு திருக்கைலாயம் சென்றார்".

"முனிவர்களே, சிவபெருமானால் விழுங்கப்பட்ட சுக்கிரன் ம்ருத்யுஞ்சய என்ற மந்திரத்தை ஓதினார். சிவநாமரூபமான அந்த மந்திரத்தின் மகிமையால் சிவபெருமானது லிங்கக்குறி வழியாக, சுக்கிலக் குறி ஊடாக, சுக்கிரரூபமாகச் சிவபெருமானது கர்ப்பத்தில் மூவாயிரம் வருடங்கள் தங்கியிருந்து சுக்கிர முனி பார்வதிதேவிக்கு புத்திரராகப் பரமேஸ்வரனால் படைக்கப்பட்டவர் போலப் பிறந்தார். சிவபெருமானின் சூலாயுதத்தின் நுனியில் தனது தைரியத்தை விடாது தொங்கிக் கொண்டிருந்த அந்தகாசுரன் அட்டோத்தர சத நாமங்களையும் நூற்றெட்டு மூர்த்திகளாகத் தியானித்துக் கொண்டிருந்தான். சிவபெருமான் அதனால் மகிழ்ந்து அந்தகாசுரனைச் சூலத்தில் இருந்து இறக்கி, அவனுக்குப் புத்திமதிகள் சொல்லி அவனது தேகத்தைத் தடவி நீ விரும்பிய வரங்களைக் கேள்" என்றார்.

அதனால் மகிழ்ந்த அந்தகாசுரன்; "எம்பெருமானே நான் அறியாமையால் செய்த அனைத்துத் தவறுகளையும் பொறுத்தருளல் வேண்டும். தங்களைத் தவிர எனக்கு வேறு யாரும் இலர்" என்று கூறிப் பார்வதியைப் பார்த்து , "தாயே என்னைத் தங்கள் புதல்வனாக ஏற்றருளல் வேண்டும். இனி எனக்குப் பிறப்புக்கள் வேண்டாம். சிவகணங்களுள் ஒருவராக இருக்க அருளுங்கள்" என்றான். அதை மகிழ்வுடன் சிவபெருமான் ஏற்றுக் கொண்டார்.

ருதுவின் மோகக்கதை

நைமிசாரண்ய முனிவர்கள் சூதமுனிவரை வணங்கி, "மகாத்மாவே, பதிவிரதையாகவும், உலகங்களின் தாயாகவும் இருக்கும் பார்வதிதேவியின் உக்கிரப் பிரவாகம் எத்தகையது. அதையும் கூறுங்கள்" என்று கேட்டனர்.

"முனிவர்களே, உலகின் தாயான பார்வதிதேவியைப் பொதிகை மலையில் ருது என்ற அரசன் கண்டான். உடனே அவன் காமவசப்பட்டு, மோகங் கொண்டான். எப்பாடுபட்டாவது பார்வதிதேவியைத் திருமணம் செய்ய வேண்டும் என்று நினைத்துப் பலகோடி வருடங்கள் பிரமாவை நினைத்து மிகக் கொடுமையான தவம் செய்தான். அதனால் அவன்முன்

பிரமதேவர் தோன்றி, “இத்தகைய கடும்தவத்தை எதற்காகச் செய்கிறாய்?” என்று கேட்டார். அதற்கு அரைக்கண்ணை மூடிக்கொண்டு தவம் செய்த குரு, “பிதாவே, பேரழகியான பார்வதிதேவி எனக்கு மனைவியாக வரல் வேண்டும். சிவன் என்னை விரும்ப வேண்டும். பெண்களால் எனக்கு மரணம் வராதிருத்தல் வேண்டும். அத்துடன் பருவமங்கையர் பலர் எனக்கு ஆசைநாயகிகளாகவும் இருத்தல் வேண்டும். என்னை எதிர்ப்போர் பலவீனமடைய வேண்டும்” என்று கேட்டான். “ருது, பார்வதிதேவி ஒருபோதும் உனக்கு மனைவியாகக் கிடைக்கமாட்டாள். அதனால் நீ அழகிய தேவமகளிருடன் கூடி மகிழ்ந்து உனது உயிரைக் காத்துக்கொள். நான் சொல்வது உனக்குப் புரியாவிட்டால் நீ பார்வதிதேவியிடம் சென்று நேரில் கேள்” என்று கூறி மறைந்தார்.

அதன்பின் ருது சிவபெருமானை நோக்கி கடும் தவம் செய்தான். அவனது தவத்தின் வலிமையால் தோன்றிய அக்கினி தேவருலகைத் தாக்கியது. அதனால் சிவபெருமான் பார்வதியை அழைத்துக்கொண்டு வேறு இடத்திற்குச் சென்றார். அதைக் கண்ட பார்வதி, “இவ் அக்கினிக்காக நாம் வேறிடம் செல்லலாமா..? இவ் அக்கினி ஏன் உண்டானது” என்று கேட்டாள்.

“அம்மையே ருது என்ற அசுரன் உன்னை மனைவியாக அடையவேண்டும் என்று கடும்தவம் செய்கின்றான். அதனால் நீ வேறு உருவெடுத்துச் சென்று அவனை அழிக்க வேண்டும்” என்றார்.

அதைக்கேட்ட பார்வதிதேவி உக்கிரவடிவமெடுத்து ருது தவம் செய்யும் மலைக்குச் சென்று ஒரு யானையின் மத்தகத்தைத் தனது கை முட்டியால் உடைத்து அதன் தோலை உரித்துப் போர்த்தினாள். பல யானைகளைக் கொன்று தின்ற சிங்கமொன்றைக் கொன்று அதன் ரத்தத்தைத் தனது கூந்தலில் பூசிக்கொண்டு குரு தவம் செய்யும் குகையைப் பிரித்துக்கொண்டு அட்காசமாகச் சிரித்தபடி குகைக்குள் நுழைந்தாள். அவளின் மிகக் கொடூரமான கோர உருவைக்கண்ட ருது மயங்கி விழுந்தான். பின் எழுந்து தனது கதாயுதத்தால் பார்வதிதேவியை அடித்தான். அதனால் கோபங்கொண்ட பார்வதிதேவி பாறைகளாலும், மரங்களாலும் அவனைத் தாக்க அவனின் உடலில் இருந்து இரத்தம் பெருகியது. அவ் இரத்தத்தின் ஒவ்வொரு துளியும் ஒவ்வொரு ருதுவாக உருவெடுத்து ஆயிரக்கணக்கான ருதுக்கள் தோன்றினர். அதனால் பார்வதிதேவி சண்டிகா உருவெடுத்து தரையில் விழுந்த இரத்தத்தையெல்லாம் குடித்தாள். பின் விஸ்வரூபமெடுத்து நின்றாள். அதைக்கண்ட ருது அச்சப்படாமல் அவள்மீது பாய்ந்தான்.

பார்வதிதேவி தனது கை நகத்தால் அவனது தலையைக் கிள்ளிப் போட்டுவிட்டு அவனது தோலை உரித்துப் போர்த்திக் கொண்டாள். பின் அவனது உடலைக் கிழித்து அந்த மாமிசத்தை உண்டாள். அவனது தலையை உடைத்து மண்டை ஓட்டை எடுத்து அதில் மாமிசமிட்டுக் கொண்டு உக்கிர வடிவுடன் சிவபெருமானிடம் சென்றாள். அவளைச்

சாந்தப்படுத்தி சிவபெருமான் அவள் கொண்டு வந்த கபாலத்தில் மீதமாக இருந்த மாமிசத்தில் சிறிதை எடுத்து உண்டார். சிங்கத் தோலுடனும், யானைத் தோலுடனும் வந்த பார்வதியை அவர் அணைத்தார். அப்பொழுது அவ்விரண்டு தோல்களையும் பார்வதிதேவி சிவபெருமானுக்குப் போர்த்தி விட்டாள். அதை அறிந்த தேவர்கள் அவ்விடம் வந்து, பார்வதிதேவியை வணங்கி, "தாயே, தங்களது உக்கிர வடிவத்தைக் கலைத்துச் சாந்தவடிவம் பெறுங்கள்" என்று கூறப் பார்வதிதேவி தனது திவ்விய வடிவத்தை எடுத்துத் தேவர்களை ஆசீர்வதித்தாள்" என்றார் சூதமுனிவர்.

அப்சரஸ்களின் கன்னியரின் நடனமும் நழப்பும்

நைமிசாரண்ய முனிவர்கள் சூதமுனிவரை வணங்கி, "இப் பிரபஞ்சத்திற்குக் காரணபூதமாக உள்ளவர் சிவபெருமானா? சக்தியா? இவ் இருவரில் சிறந்தவர் யார்? என்று கேட்டார்கள். சூதமுனிவர் சொல்லத் தொடங்கினார்; "தவசீலர்களே, பூர்வகாலத்தில் காணாசுரனது சோணியபுரியை அடுத்த நதிக்கரையில் எழுந்தருளியிருந்த சிவபெருமான் தேவர்களுடனும், அசுரர்களுடனும் கூடிக் களியாட்டத்தில் ஈடுபட்டிருந்தார். காந்தர்வர் கானம் இசைத்தனர். தேவகன்னிகளான அப்சரஸ் முதலியோர் நடனம் ஆடினார்கள். அவர்களின் நளினமான நாட்டியத்தைப் பார்வதிதேவியுடன் கண்டு மகிழ விரும்பிய சிவபெருமான் நந்தியை அழைத்துப் பார்வதிதேவியை மிக்க அலங்காரத்துடன் அழைத்து வருமாறு கூறினார். நந்திதேவர் கைலையங்கிரிக்குச் சென்று அதைப் பார்வதிக்குச் சொல்ல பார்வதிதேவி மிக்க மகிழ்வுடன் தன்னை அலங்கரிக்கத் தொடங்கினாள்.

இதற்கிடையில் அவ் அப்சரஸ்கள் தம்மில் யார் அழகானவர்கள் என்று வாதித்து முடிவு காணாமையால் அதைச் சிவபெருமானிடம் கேட்கலாமென்று நினைத்தனர். எனினும் கேட்க அவர்களுக்குத் தைரியம் வரவில்லை. பாணாசுரனின் மந்திரியான குபாண்டன் என்பவனது மகளான சித்திரலேகை, "நான் சிவபெருமானைக் கேட்கிறேன்" என்று கூறிவிட்டு அப்சரஸ்களை அழைத்து "உங்களில் ஒருவர் நந்திதேவரின் உருவத்தையும் ஏனையோர் பார்வதிதேவியின் தோழிகளின் உருவத்தையும் எடுங்கள். நான் பார்வதியின் உருவத்தை எடுக்கிறேன்" என்று கூறி அவ்வவ் வடிவங்களை எடுத்தனர்.

சிறிது நேரத்தில் பாவதிதேவியும் நந்திதேவரும் திருக்கைலாயத்தில் இருந்து வந்தனர். இவற்றையெல்லாம் தெரிந்து கொண்ட சிவபெருமான் எதுவும் தெரியாதவர் போல வீற்றிருந்தார். பார்வதிதேவி தன்னைப்போல ஒருத்தி சிவபெருமானுக்கு அருகில் இருப்பதை உணர்ந்து ஆச்சரியப்பட்டாள். நந்திதேவரும் பார்வதிதேவியாரின் தோழியரும் தம்மைப்போல ஒவ்வொருவரும் வீற்றிருப்பதைக்கண்டு அதிர்ச்சியடைந்தனர். அவர்களுக்குப் பயம் அதிகரித்ததால் தமது சுயரூபத்தை எடுத்தனர். பார்வதிதேவியும் சிவபெருமானும் அவர்களது

செயலை ரசித்துச் சிரித்தனர். பார்வதிதேவியும் சிவபெருமானும் என்றுமில்லாத ஆனந்தத்துடன் விளையாடியதைக் கண்ட வாணாசுரனின் புதல்வியாகிய உசை என்பவள் தானும் இந்த நதிக்கரையில் அவர்களைப் போலக் குதூகலித்திருக்க விரும்பிப் பார்வதியிடம் சென்று வணங்கித் தனது கருத்தை வெளியிட்டாள்.

காமவசப்பட்ட உசையின் கருத்தை உணர்ந்த பார்வதிதேவி, "மகளே, இந்த நதிக்கரையில் அதிவிரைவில் உனது கணவனுடன் கூடி இன்புறுவாய்" இப்போது கார்த்திகை மாதம் நடைபெறுகிறது. அடுத்த வைகாசி மாதம் நள்ளிரவில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கும் உன்னை எவன் கூடுகிறானோ அவன்தான் உனது கணவன். நீ விஷ்ணுவை வழிபடுவதால் அவரின் அருளால் யாவும் சிறப்பாக நடைபெறும்" என்றாள்.

வைகாசி மாதம் பிறந்தது. உசை விஷ்ணுவைத் தியானித்துக்கொண்டு உப்பரிகையில் படுத்திருந்தாள். வைகாசி மாதமாகையால் அவள் தன்னோடு கூட இருக்கும் ஆடவன் யார்? என்று நினைத்தவாறு உறங்கிவிட்டாள். அப்போது கிருஷ்ண பரமாத்மாவின் பேரனான அநிருத்தன் என்பவன் பார்வதியின் அருளால் சோணிபுரத்தை அடைந்து அங்கு உப்பரிகையில் உறங்கிக் கொண்டிருந்த உசையைப் பலவந்தமாகப் புணர்ந்தான். அதன்பின் அவனுக்கு நடந்தவை தெரியாமையால் திகைப்புற்றான். அப்போது பார்வதிதேவியின் யோகமாயை அவனைக் கொண்டு சென்று துவாரகையில் விட்டது. உசை தன்னை அறியாமல் தன்னுடன் கூடி மகிழ்ந்துவிட்டு மறைந்தவன் யாரென எண்ணிக் கவலைப்பட்டாள்.

உசையின் தோழியான சித்திரலேகை தனது தோழியின் துயரத்தைப் போக்குவதற்காக அவளோடுகூடியிருந்தவன் யாரென அறிய முயன்றான். அவ்வாறு கூடியவன் அநிருத்தன் என அறிந்து அவனைப் பற்றிய விடயங்களையெல்லாம் தெரிந்து கொண்டாள். பின்பு துவாரகையை அடைந்து பூஞ்சோலையில் தனது நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தான். அவனையும், தோழர்களையும் தனது மாயசக்தியினால் மயக்கி உசை இருக்குமிடத்திற்கு கொண்டு வந்தாள். அதன்பின் அநிருத்தனும் உசையும் அந்தப்புரத்தில் யாரும் காணாது இன்பம் அனுபவித்தனர். ஒருநாள் அந்தப்புரத்தில் தங்கியிருந்த அநிருத்தனை அசுரவீரன் ஒருவன் கண்டுவிட்டு வாணாசுரனிடம் ஓடிச்சென்று அதைத் தெரிவித்தான்.

அதனால் வாணாசுரன் பெரும் கோபங்கொண்டு பல அசுரவீரர்களுடன் அந்தப்புரத்திற்குச் சென்றான். அங்கே அநிருத்தன் தனது மகளின் அறையில் இருப்பதைக்கண்டு பெரும் கோபம் கொண்டு அவனைக் கைது செய்யுமாறு கட்டளையிட்டான். கைதுசெய்ய வந்தவர்களையெல்லாம் அநிருத்தன் தாக்கி அழித்தான். அதனால் வாணாசுரன் தனது மந்திரியான குபாண்டனை அழைத்து உடனடியாக அநிருத்தனைக் கைதுசெய்யுமாறு உத்தரவிட்டான். பெரும்போர் செய்தும் அநிருத்தனைக் கைதுசெய்ய முடியாததால் அசுரர்கள் தமது மாயவித்தையைப் பிரயோகித்து அவனைக் கட்டிப் போட்டனர். அதைக் கண்ட பாணாசுரன் அவனைச் சிரச்சேதம் செய்யுமாறு பணித்தான். அப்போது மந்திரியான குபாண்டன்

பாணாசுரனிடம் வந்து; "அரசே, அவன் மிகப்பெரிய பலசாலியாகவும், சிவபக்தனாகவும் இருக்கிறான். சிவபெருமான் எமது மாயக்கட்டை அறுத்துவிட்டால் மீண்டும் பெரும்போர் உண்டாகும். அவன் யாரென்று அறிவோம்" என்றான்.

அதைக்கேட்ட பாணாசுரன் அநிருத்தனுக்கு ஏற்பட்ட நிலையை அறிந்த விஷ்ணு பிரதியும்மன், பலராமன் முதலிய பலசாலிகளையும், லட்சக்கணக்கான படைவீரர்களையும் அழைத்துக்கொண்டு சோணிபுரத்தை அடைந்து உக்கிரமாகப் போர் செய்தார். பாணாசுரனின் சேனைகள் யாவும் அழிய அவன் விஷ்ணுவுடன் போர் செய்தான். விஷ்ணு, பாணாசுரனைக் கொல்ல முயன்றபோது, சிவபெருமான் தோன்றி அவனைக் கொல்ல வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டார். அதைக்கேட்ட விஷ்ணு தனது கோபந்தணிந்து தனது பேரனான அநிருத்தனையும் உசையையும் ஆசீர்வதித்துவிட்டு சித்திரலேகையை அழைத்துக்கொண்டு துவாரகைக்குப் புறப்பட்டார். அதன்பின் வாணாசுரனைச் சிவபெருமான் சிவகணங்களுக்குத் தலைவராக்கினார். உசைக்கு விஸ்வயித் என்ற மகன் பிறந்தான். அவன்பின் அந்நாட்டின் அரசனானான்.

"முனிவர்களே, இச் சரிதத்தில் சிவபெருமான் சக்தி சம்பந்தமாகவே நின்று எல்லாக்கருமங்களையும் நடத்தினார். சிவமும் சக்தியும், பூவும் மணமும், மணியும் ஒலியும், தீயும் உஷ்ணமும் போல அபேதமாக விளங்குபவர்" என்றார் சூதமுனிவர்.

காமனின் கதை

சௌனகாதி முனிவர்கள் சூதமுனிவரை நோக்கி, "சிவபெருமானையும் மோகிக்க வைத்த காமம் எத்தகையது? காமனின் செயல்களெவை என்பதை விபரமாகக் கூறுங்கள்" என்று கேட்கச் சூதமுனிவர் சொல்லத் தொடங்கினார்.

"முனிவர்களே, காமத்தின் சொரூபமானது பிரம்ம, விஷ்ணு, ருத்திரன் ஆகியோரின் சொரூபமாக இருப்பதும், எல்லாச் சீவன்களுக்கும் ஆத்மரூபமாகவும் இருப்பது. அது தன்னைக் காட்டிலும் விரும்பத்தக்கது. பிறிதொன்றுமில்லாதவாறு விளங்குவது. இதைப் புத்தியினால் மட்டும் உணரலாம். ஸ்பரிசத்தினால் உணரலாம். பரம்பொருளாலேயே உண்டாகும் விகாரம் தான் காமம். உலகில் உளள்ள யாவும் சர்வேஸ்வரனது ரூபமாகும். காமமும் நாணமும் சர்வேஸ்வரனால்தான் பிறப்பிக்கப்பட்டன. இலக்குமியுடன் ஆதிசேடன் மிது திருப்பாற்கடலில் போக நித்திரை கொள்ளும் விஷ்ணுமூர்த்திக்குப் புத்திரனாகப் பிறந்தவன் தான் காமன். அக்காமனே உலகங்களுக்கெல்லாம் மிகப் பிரியமுள்ளவனாகத் திகழ்கிறான். அவன் கைலாயத்தில் யோகநிட்டடையில் இருந்த சிவபெருமானை எவ்வகையிலும் காமமுறச் செய்ய வேண்டும் என்று தேவர்கள் வேண்ட மன்மதன் மலரம்புகளைக் கொண்டு சிவபெருமான் தவம் செய்யுமிடத்தை அடைந்தான். அவன் சிவபெருமானைப் பார்த்து, "நீ யார்?" என்று கேட்டான். "நான் மன்மதன். தங்களை மோகமூட்ட வந்துள்ளேன்" என்று கூறிக் காமத்தைப் பெருக்கும்

அம்புகளைத் தொடுத்தான். சிவபெருமான் பெரும் கோபங் கொள்ள, அவரின் நெற்றிக் கண்ணில் இருந்து புறப்பட்ட அக்கினி அவனை எரித்துச் சாம்பலாக்கியது.

எரிந்து சாம்பலான மன்மதன் சிவனின் வரப்படி துவாரகையில் கிருஷ்ணனுக்கு பிரத்யும்னன் என்ற மகனாகப் பிறந்தான். இரதிமயனின் புத்திரி மாயாவதியாகப் பிறந்தாள். இருவரும் திருமண வயதை அடைந்தனர். மாயாவதியின் அழகில் மயங்கிய சம்பரன் என்ற அசுரன் அவளைத் திருமணம் செய்வதற்காகத் தனது நகரத்திற்கு அவளைப் பலவந்தமாகத் தூக்கிச் சென்றான். சிவனின் வரப்படி பிரத்யும்னன் சம்பரன் என்ற அசுரனைக் கொன்று மாயாவதியைத் திருமணம் செய்தான்" என்றார் சூதமுனிவர்.

பாற்கடலில் பிறந்த பாவையர்

"முனிவர்களே, காமதேவனான மன்மதனால் மகாவிஷ்ணு பல்வேறு வழிகளால் பாதிப்படைந்தார். பாற்கடலில் பிறந்த இலட்சுமியை தனது திருமார்பில் வைத்திருக்கிறார்" என்று கூறும்போது இலட்சுமிதேவியின் வரலாற்றைச் சொல்லுங்கள்" என்று முனிவர்கள் கேட்டார்கள்.

"மாகரிசிகளே, தேவர்களும் அரக்கர்களும் பெரும்போர் செய்தமையால் பலர் இறக்க நேர்ந்தது. அதனால் தேவர்களும் அசுரர்களும் பிரமதேவரிடம் சென்றுநாம் போரிட்டமையால் மிகவும் களைப்படைந்து விட்டோம். அதனால் அக்களைப்பு நீங்கப் பாற்கடலைக் கடைந்து அமுதத்தை எடுத்துண்ண விரும்புகிறோம்" என்றனர். அதைக்கேட்ட பிரமதேவர், "உங்கள் எண்ணத்தைத் திருமாலிடம் கூறி அதை முடிப்பேன்" என்றார்.

பாற்கடலில் பள்ளிகொண்டிருந்த திருமால் அதற்குச் சம்மதிக்க அசுரர்களும், தேவர்களும் மேரு மலையை மத்தாகவும், வாசுகி என்ற பாம்பைக் கயிறாகவும் கொண்டு பாற்கடலைக் கடைந்தனர். நெடுநேரம் வரை அமிர்தம் தோன்றாமையால் அசுரர்களும் தேவர்களும் தம் பலம் முழுவதையும் திரட்டிக் கடைந்தனர். அதனால் சோர்வுற்ற வாசுகி என்னும் ஆயிரம் தலைகளையுடைய நாகம் நஞ்சைக் கக்கியது. அந்த நஞ்சு தேவர்களையும் அசுரர்களையும் தாக்க விரைந்து வந்தது. அதற்கஞ்சிய தேவர்களும் அசுரர்களும் திருக்கைலாயத்திற்குச் சென்று தம்மைக் காப்பாற்றுமாறு சிவபெருமானை இரந்தனர். சிவபெருமான் அந்த நஞ்சைக் கையிலெடுத்து, "இதை என்ன செய்வது?" என்று தேவர்களைக் கேட்கத் தேவர்கள், "எம்பெருமானே, அதை வெளியே விட்டால் உலகங்களை ஒரு நொடியில் அழித்துவிடும். அதனால் அதைத் தாங்கள் உண்ணுதல் வேண்டும். அதைத் தங்கள் தொண்டைக்குள்த் தங்கும்படி செய்யுங்கள் என்று கூறச் சிவபெருமான் அந்த நஞ்சை உண்டார். அந்த நஞ்சு தேவர்களின் விருப்பப்படி தொண்டைக்குள் தங்கியது. அதன்பின்பாற்கடலில் பாற்கடலில் அமிர்தத்துடன், லட்சுமிதேவியும், தன்வந்திரியும், சந்திர

சூரியரும், கற்பகதருவும், காமதேனு போன்றனவும் பிறந்தன. அமிர்தம் பிறந்ததும், அமிர்தத்துகழ்கள் வெளியே சிந்தியதால் மிக்க பேரழகு வாய்ந்த அப்சரஸ்களும் தோன்றினர். அமிர்தம் தங்களுக்கென்று அசுரர்களும் தேவர்களும் சண்டையிட்டனர். மகாவிஷ்ணு பாற்கடலில் தோன்றிய இலட்சுமியைத் தனது மனைவியாக்கிக் கொண்டார். அமிர்தத்திற்காகச் சண்டையிட்ட அசுரர்கள் அழகான பெண்களைக் கண்டதும் சண்டையை விட்டுவிட்டு அவர்களை அழைத்துக்கொண்டு தமது நகரங்களுக்குச் சென்றனர். தமது தேசங்களுக்குச் சென்ற அசுரர்கள் தாம் விஷ்ணுவால் ஏமாற்றப்பட்டதை உணர்ந்து திரும்பிவந்து தேவர்களுடன் சண்டையிட்டனர்.

அப்சரசுகள் பயந்து பாதாளத்திற்குச் சென்றனர். விஷ்ணு அசுரர்களை அழித்துக்கொண்டு பாதாளத்திற்குச் சென்றார். அங்கு இருந்த அப்சரசுகளைக் கண்டு மோகங் கொண்டு அவர்களுடனேயே இன்பமாகப் பலகாலம் வாழ்ந்தார். அவர் தனது கடமைகளை மறந்து அப்சரஸ்சுகளின் அழகை மோகித்து அவர்களுடன் கூடியிருந்தார். அதனால் அவருக்குப் பல புத்திரர்கள் பிறந்தார்கள்.

இவ்வாறிருக்கையில் பிரமதேவன் கைலையங்கிரியை அடைந்து சிவபெருமானை வணங்கி, "சுவாமி, காத்தல் தொழிலைச் செய்யவேண்டிய விஷ்ணு பாதாள உலகம் சென்று அங்குள்ள பெண்களுடன் கூடிக்குலாவிக் காமலீலைகளில் ஈடுபட்டுள்ளார். அதை அவருக்கு உணர்த்த வேண்டும்" என்றார். சிவபெருமான் காளை உருவெடுத்துக்கொண்டு பாதாளத்திற்குச் சென்று பலவிதமான பயங்கரத் தொனிகளை எழுப்பினார்.

அச் சத்தத்தால் கோபங்கொண்ட விஷ்ணுவின் புதல்வர்கள் காளையை அடக்க முற்பட்டனர். காளை தனது கூரிய கொம்புகளாலும், பலமான கால்களாலும் அவர்களில் பலரைக் கொன்றது. அதனால் கோபங்கொண்ட விஷ்ணு காளையைக் கொல்ல ஆயுதங்களுடன் வந்தார். வந்தபின் காளையாக வந்தவர் சிவபெருமான் என உணர்ந்து மன்னிப்புக் கோரினார். பின்பு பாதாளத்தைவிட்டு வெளியே வந்து தனது இருப்பிடத்திற்குச் சென்றார்.

தான் பாதாளத்தில் அனுபவித்த இன்பங்களை விஷ்ணு தேவர்களுக்குச் சொன்னார். அதைக்கேட்ட தேவர்கள் பாதாளத்திற்குச் சென்று அங்குள்ள பெண்களோடு உறவு கொள்ள நினைத்தனர். அதை உணர்ந்த சிவபெருமான், "பாதாளத்திற்குச் செல்லும் தேவர்கள் அங்கேயே மரணம் அடைவர்" என்று கூறியதால் யாரும் செல்லவில்லை.

அதனால் சிவபெருமான் கவலையோடு இருந்தார். அவரது கவலையை உணர்ந்த பார்வதிதேவி, "சுவாமி, சகலவற்றையும் படைத்துக் காக்கின்ற தங்களுக்கு என்ன கவலை" என்று கேட்டார்.

“பிரியையே, பாதாளத்தில் வசிக்கும் பெண்களைப் பற்றிச் சிந்தித்தேன். அழகான பெண்கள் துணையின்றி வாடுகின்றனர்” என்றார்.

அதைக்கேட்ட பார்வதிதேவி சிவபெருமானிடம் அனுமதி பெற்று பாதாளத்திற்கு வந்து அப் பெண்களைச் சந்தித்துக் கூறினாள்; “நீங்கள் புனிதமான பாற்கடலில் தோன்றியவர்கள். ஆண்துணையின்றி வாழ்வதால் சிவபெருமான் மிக்க கவலை கொண்டுள்ளார். தேவ உலகில் இருக்கும் பலர் இங்கு வந்து உங்களை மணம்புரிய விரும்பியபோது சிவபெருமான் அவர்கள் பாதாள உலகத்திற்கு வந்தால் இறப்பர் என்று சொன்னமையால் யாரும் வரவில்லை. நீங்கள் தேவ உலகிற்கு வந்து தேவர்களைத் திருமணம் செய்து இன்பமாக வாழுங்கள்” என்றாள் பார்வதிதேவி.

“முனிவர்களே, மன்மதனது பானங்கள் மிகமிகக் கொடுமையாகத் தாக்கும். பிரமதேவன் ஒரு காலத்தில் திருமணக் கோலங் கொண்டிருந்த பார்வதிதேவியின் அழகிய பாதங்களைக் கண்டு அவற்றை மோகித்துப் பின் மனம் வருந்திப் பல விரதங்கள் இருந்து பார்வதிதேவியைப் பிரார்த்தித்து மன்னிப்புக் கேட்டவர். மன்மத பாணங்கள் பெரும் முனிவர்களையும் தன் வசப்படுத்தும்” என்றார் சூதமுனிவர்.

மன்மதனது சக்தியும் மகேஸ்வரனும்

“முனிவர்களே, பிரமா, தனது படைப்புத் தொழிலை முடித்த பின்பு நாராயணன் துயிலெழுந்து, நான் யோக நித்திரையில் இருந்தமையால் இவற்றையெல்லாம் யார் படைத்தது என்று ஆலோசித்தார். அப்போது ஓர் அக்கினி மயமான தாணுலிங்கம் தோன்றியது. அது பெரும் பிரகாசமாக இருந்தது. பிரமாவும் விட்டுணுவும் ஒருவரையொருவர் சந்தித்து, “நான் தான் பரம், நான் தான் பரம்” என்று வாதாடினர். பின் தாணுலிங்கத்தைக் கண்டு இது எம்மால் படைக்கப்படவில்லை என்று நினைத்துக் கர்வம் நீங்கி ஒருவரையொருவர் கட்டித் தழுவினர். பின் இத் தாணுலிங்கத்தின் வரலாற்றைக் கண்டறிய வேண்டும் என்று நினைத்தபோது வானில் இருந்து ஒரு வாக்கு எழுந்தது. “பிரம்ம விஷ்ணுக்களே, இதன் வரலாற்றை அறிவதை விடுத்து இதைப் பூசை செய்து நற்பலன்களை அடையுங்கள்” என்றது. அதன்படி இருவரும் பூசை செய்தனர்.

ஒரு சமயம் சிவபெருமான் பார்வதிதேவியைத் திருமணம் செய்து இமயமலையில் உள்ள ஒரு குகையில் தங்கியிருந்து இன்பமாக விளையாடினர். பார்வதிதேவி தனது காளவடிவம் நீங்கிக் கௌரவவடிவம் பெறுவதற்காகத் தவம் செய்ய விரும்பினார். சிவபெருமான் ஏற்கெனவே கங்கை என்ற பெண்ணை விரும்பித் தனது தலையில் வைத்திருப்பதால், தான் தவம் செய்துமுடித்து வரும்வரை வேறெந்தப் பெண்ணும் குகைக்குள்

வராவண்ணம் தனது தோழியையும், தனது புதல்வனான வீரகனகனையும் காவல் வைத்துவிட்டுச் சென்றார்.

பார்வதிதேவி தவம் செய்து கொண்டிருக்கும்போது ஆடி என்றொரு அசுரன் பிரமதேவரை நினைத்துத் தவம் செய்தான். அதனால் பிரமதேவர் அவன் முன்வந்து, "என்ன வரம் தேவை?" என்று கேட்டார். அதற்கு அவ் அசுரன் தான் எவ்வேளையிலும் மரணமடையக்கூடாது என்று வேண்டினான். அந்த வரத்தைக் கொடுக்க மறுத்த பிரமதேவர், "வேறு வரம் கேள்" என்றார். அதற்கு அவ்வசுரன், "சுவாமி, சந்திரதேவதாகமான முகூர்த்தத்தில் இந்திரன் பெருமழை பெய்யும்போது நான் மகாகபடியாய் வேற்றுருவவம் எப்போது எடுப்பேனோ, அப்பொழுது நான் மரணமடைய வேண்டும்" என்று கேட்டான். பிரமதேவர் அவன் கேட்ட வரத்தைக் கொடுத்துவிட்டு மறைந்தார்.

வரத்தைப் பெற்ற அசுரன் பெரும் கர்வமடைந்து சிவபெருமான் தங்கியிருக்கும் குகைக்கு வந்தான். அங்கு காவல் பலமாக இருந்ததால் ஒரு பாம்பின் உருவமெடுத்து உள்ளே சென்று பின் ஒரு அழகிய பெண்ணுருக்கொண்டு, சிவபெருமானின் அருகில் சென்று, "சுவாமி, நான் தவம் செய்தமையால் பொன்னிறமாகிவிட்டேன். பல நாட்கள் பிரிந்திருந்தமையால் நான் காமங் கொண்டுள்ளேன். அதனால் என்னோடு கூடியிருங்கள்" என்றான்.

சிவபெருமான் அவனைக் கட்டியணைத்தபோது, அவன் அவரைக் கொல்ல முயன்றான். கோபங்கொண்ட சிவபெருமான், "ஏய் அறியாமைமிக்க அசுரனே, உலகில் நடப்பையாவும், எனக்குத் தெரியாமல் நடைபெறாது. அதனல் நீ இங்கு வருமுன்பே உன்னை அறிந்து கொண்டேன்" என்று கூறித் தனது சூலத்தால் அவனைக் கொன்றார். அப்போது அவன், "எனது சகோதரன் உன்னைச் சங்கரிப்பான்" என்று சொன்னான்.

தவத்தை முடித்துவிட்டு அழகிய உருவுடன் வந்த பார்வதிதேவியைக் கண்ட தோழி பார்வதியின் அழகைப் பார்த்து மெய்மறந்து போனாள். பின், "தாயே, நீங்கள் சென்றபின், ஓர் அழகான பெண்ணுடன் சிவபெருமான் சல்லாபம் புரிந்தார். அதை என்னால் பார்க்க முடியவில்லை" என்றாள். அதைக்கேட்ட பார்வதிதேவி, தனது மகனான வீரகன் மீது கடுங்கோபங் கொண்டு, "எனது புதல்வனான நீ எனது கட்டளையை நிறைவேற்றாததால், நீ மானிட தேகத்துடன் ஒரு பிராமணனுக்கு மகனாகக் கடவாய்" என்று சபித்தார். வீரகன் தாயின் திருவடிகளில் விழுந்து வணங்கி, "தாயே, ஆடியென்ற அசுரன் மாயையால் பெண்ணுரு எடுத்துத் தந்தையைக் காமமூட்டி மயக்கிக் கொல்ல வந்தான். அவனை என் தந்தை கொன்று விட்டார்" என்றான். அதனால் மனம் வருந்திய பார்வதிதேவி, "மகனே, நீ பன்னிரண்டு ஆண்டுகள் அப் பிராமணனுக்கு மகனாக இருந்தபின் மீண்டும் என்னை வந்தடைவாய்" என்றார். அதன்படி பார்வதிதேவியின் மகனான வீரகன் பன்னிரண்டு வருடங்களின் பின் தாயை

வந்தடைந்தான்" என்று சூதமுனிவர் கூறியபோது சௌனகாதி முனிவர்கள் அவரை நோக்கி, "சுவாமி, எமக்கு வீரகனின் வரலாற்றைக் கூறுங்கள்" என்றனர்.

"முனிவர்களே, சிலாதர் என்ற சிறுவன் தனது வீட்டுக்குப் பிச்சைபெற வந்த பிராமணர் ஒருவரின் உணவில் ஒரு சிறு கல்லை அவர் அறியாது போட்டான். அவர் அதை உண்டு விட்டார். சிலாதர் பெரும் ஞானியாகித் தனது தவத்தின் பயனாக சகல லோகங்களுக்கும் சென்று வரும்போது யமலோகத்திற்குச் சென்றார். அவர் சென்றபோது யமனது சிங்காசனத்தில் பெரியதொரு கல் இருந்தது. சிலாதர் அதைப் பார்த்து அதிசயித்து, "இச் சிங்காசனத்தில் ஏன் பெரியதொரு பாறை வைக்கப்பட்டுள்ளது." என்று கேட்க யமகிங்கரர்கள், "இது ஒரு பிராமணன் யாசிக்க வந்தபோது, ஒருவன் அவரது உணவில் போட்டகல். இன்று இவ்வளவு பெரிதாக வளர்ந்துள்ளது" என்றார்கள்.

அது தன்னால் போடப்பட்ட கல் என்று உணர்ந்த சிலாதர், "இதற்கு ஏதாவது பரிகாரம் சொல்லுங்கள்" என்று கேட்டான். அதற்கு யமகிங்கரர்; "இவ்வளவு பாறையையும் கரைத்துக் குடித்தால் இப் பாவம் தீரும்" என்றான். சிலாதர் பூமிக்குத் திரும்பி வந்து வினையான பாறையைக் கண்டுபிடித்து, சிவனை எண்ணி அதில் சிறுபகுதியை உடைத்து கரைத்துக் குடித்தார். இவ்வாறு தினமும் குடித்து அப்பாறை முழுவதையும் கரைத்துக் குடித்து முடித்தார். அதனால் சிலாதர் என்ற பெயர் உண்டானது.

சிலாதர் திருமணம் செய்து பல ஆண்டுகள் கழிந்தும் பிள்ளை பிறக்கவில்லை. அதனால் அவர் திருவையாற்றிற்குச் சென்று ஒற்றைக்காலில் நின்று தவம் செய்தார். அத்தவத்தால் மகிழ்ந்த சிவபெருமானும் பார்வதிதேவியும் இடபவாகனத்தில் அவர் முன் எழுந்தருளி, "முனிவனே, நீ விரும்பிய வரத்தைக் கேள்" என்றார். முனிவர் மகிழ்வுடன், "அடியேனுக்கு ஒரு சற்புத்திரன் தந்தருள வேண்டும்" என்றார்.

"முனிவனே, சகல நற்குணங்களும் நிரம்பிய சற்புத்திரன் ஒருவன் உனக்குக் கிடைப்பான். அவனது வயது பதினாறு. நீ யாகம் செய்வதற்காக யாகசாலையை உழும்போது அங்கு கிடைப்பான்" என்று கூறி மறைந்தார். பின் சிலாதமுனிவர் யாகம் செய்வதற்காக நிலத்தை உழுதபோது கலப்பையில் ஒரு மாணிக்கப்பெட்டி அகப்பட்டு மேலே வந்தது. அதைத் திறந்து பார்த்தபோது அதற்குள் நெற்றிக்கண்ணுடனும், பிறைதவழும் சடையும், நான்கு தோள்களையும் உடைய ஒரு பிள்ளை இருந்தது. அப்போது சிவபெருமான் அசரீரியாக, "முனிவனே, அபபெட்டியை மூடித்திற" என்று கூறினார். அவ்வாறு முனிவர் பெட்டியை மூடித்திறந்தபோது பெட்டிக்குள் ஓர் குழந்தை இருந்து அழுதது. அதை எடுத்து முனிவர் அதற்குச் செப்பேசுவரன் எனப் பெயரிட்டு வளர்த்து வந்தார்.

செப்பேஸ்வரருக்குப் பதினாறு வயது வந்தபோது தாய் தந்தையர் தனக்கு பதினாறு வயது வந்ததையிட்டு துன்பப்பட்டபோது, "அஞ்சாதீர்கள், நான் அழியாத வரம் பெறுகிறேன்" என்று கூறிச் செம்பேஸ்வரர் கோவிலை அடைந்து அருந்தவம் செய்தார். அப்போது சிவபெருமானும் பார்வதிதேவியும் அவர் தவம் செய்யும் இடத்திற்கு வந்து செம்பேஸ்வரனுக்கு அழியாத நித்திய தேகம் கொடுத்து அவரது திருமுடியில் கைவைத்து தீட்சை புரிந்து, திருநந்திதேவர் என்ற திருப்பெயரிட்டுவிட்டுச் சனத்குமார முனிவரை அழைத்து அவருக்கு வேத உபநிடதங்களைக் கற்பிப்புமாறு கூறி, அதன்பின் சுயசை என்ற பெண்ணைத் திருமணம் செய்து வைத்தார். பின் சிவகணங்களுக்குத் தலைவராக இருந்து அதிகாரம் செலுத்தும்படி சுரிகையும், பிரம்பும் கொடுத்தார்.

சிறிது காலம் சென்றபின் தாருகாவன முனி பத்தினிகள் பேரழிகளாக தாம் இருப்பதாகவும் தம்மிற் பார்க்கக் கற்பாசித்திரிகள் யாரும் இல்லை என்று கூறி இறுமாப்படைந்திருந்தனர். அவர்களது கற்பை அழித்து கர்வத்தைர ஒழிக்க எண்ணிய சிவபெருமான் பேரழகுமிக்க திடமான இளைஞனின் உருவெடுத்துத் தாருகாவனத்திற்குச் சென்றார். அவரைக் கண்டு அவரின் அழகிலும், உடற்கட்டிலும் மோகங்கொண்ட முனிபத்தினிகள் அவரைப் பின்தொடர்ந்து சென்றார்கள்.

அதனைக்கண்டு மிக்க கோபங்கொண்ட முனிவர்கள் சிவபெருமானைச் சபித்தனர். அவர்களின் சாபம் நிறைவேறாமல் அவர்களைத் தாக்கியதால் அவர்கள் பெருந் துன்பங்களை அடைந்தனர். அதனால் வருந்திய முனிவர்கள் வசிட்ட முனிவரையும், பிரமதேவரையும் வணங்கித் தமது நிலையை எடுத்துரைத்தனர். பிரமதேவர்; "முனிவர்களே, இளைஞனாக வந்தவர் சிவபெருமான். நீங்கள் சிவநிந்தனை செய்ததாலும், கர்வம் கொண்டதாலும் இந்நிலை ஏற்பட்டது. சிவபூசை செய்யுங்கள்" என்றார். அதன்படி முனிவர்கள் சிவபூசை செய்து சிவபெருமானின் அனுக்கிரகத்தைப் பெற்றார்கள்.

முனிவர்களே, இதனால் சிவபெருமான் காமம் கொண்டாரென்று நினைத்தலாகாது. சிவபெருமானை எந்தத் தோசமும் பாதிக்காது. தாருகாவனத்தில் வாழ்ந்த முனிபத்தினிகளில் வசிட்டரின் மனைவி மட்டும் சிவபெருமான் மீது மோகங் கொள்ளவில்லை. அதற்குக் காரணம் வசிட்டரும், வசிட்டரின் மனைவியான அகலிகையும் சிவபெருமானை மெய்யன்புடன் பூசித்தமையேயாகும். ஏனைய முனிவர்கள் தமது பத்தினிகளின் உடலில் கொண்ட மோகத்தால் சிவனை நிந்தித்தார்கள்.

இப்பொழுதும் உலகத்தில் விவாக காலத்தில் மணமக்களை அருந்ததியைப் பார்க்கும்படி பெரியவர்கள் சொல்லி அருந்ததியைக் காட்டுவர். அருந்ததியைத் தரிசித்தால் பாக்கியம் உண்டாகும். வைரமாக நெஞ்சம் உருவாகி வேறு இடத்தில் காமம் கொள்ளும் தன்மை ஏற்படாது. எனது கணவன் வேறு பெண்கள் மீது இச்சை கொள்ளாது என்மீது அன்பு கொள்ள வேண்டும். என்று பெண்ணும், எனது மனைவி அருந்ததியைப் போலக்

கற்பாசித்திரியாக என்றும் வாழவேண்டும் என்று ஆணும் அருந்ததியைப் பிரார்த்தித்தல் வேண்டும். தேவர்களது காம விகாரங்களை இதுவரை உங்களுக்குச் சொன்னேன். இன்னும் சிலவற்றை உங்களுக்குச் சொல்கிறேன்" என்றார் சூதமுனிவர்.

காமவசப்பட்டவர்களின் கதை

"முனிவர்களே, இந்திரன், புலோமசை என்ற பெண்ணை விவாகம் செய்தவன். அத்துடன் எண்ணிறைந்த அப்சரஸ் கன்னிகளோடு இன்பம் அனுபவித்து மூவுலகையும் அரசாண்டவன். அவன் காமம் அதிகரித்தமையால் கௌதமமுனிவரின் பத்தினிமீது காமங்கொண்டு அவள் தங்கியிருக்கும் பன்னசாலைக்குக் கௌதமமுனிவரின் உருவெடுத்துச் சென்றவன். கௌதமமுனிவரின் மனைவியோடு அவன் மாயம் செய்து கூடியிருக்கையில் கௌதமமுனிவர் அதைக்கண்டு பெருங் கோபங்கொண்டு எனது மனைவியான அகல்யாவை மாயம் செய்து கூடியமையால் உனது ஆண்மை நிலத்தின்மீது விழக்கடவை எனச் சபித்தார். அதனால் அவன் ஆண்மையற்றவனாவான். அதை அறிந்த தேவர்கள் அவனது வீரியத்தை வருவித்துக் கொடுத்தனர். அதை அறிந்த கௌதமமுனிவர் இவன் பெண் பித்தனாக இருப்பதனால் இவனது உடலெங்கும் பெண்ணுறுப்பு வந்து சேரட்டும். அத்துடன் இராவணன் முதலிய அரக்கர்களால் கைது செய்யப்பட்டு இலட்ச வருசங்கள் சிறையிருப்பும் பெறட்டும்" எனச் சபித்தார். பின் தனது மனைவியான அகலிகையைப் பார்த்து, "பெண்ணே, நீ கல்லைப் போலப் பிற புரிசனோடு உணர்வின்றிக் கூடியிருந்தமையால் கல்லாகக் கடவாய்" என்றும் சபித்தார். அப்போது அகலிகை நடுநடுங்கி, "இந்திரனது மாயத்தால் ஏமாற்றப்பட்ட எனக்கு எப்போது இச்சாபம் நீங்கும்" என்று கேட்டாள். "திருமால், இராம அவதாரம் பெற்று இவ்வழியால் வரும்போது அவரது பாதம் பட்டதும் நீ சாபவிமோசனம் பெறுவாய்" என்றார். அதனால் அகல்யா கல்லாகி அங்கே கிடந்தாள். உடலெங்கும் பெண்ணுறுப்பைப் பெற்ற இந்திரன், விஷ்ணுவை ஆராதித்தான். அதனால் அப்பெண் உறுப்பு மற்றவர்களுக்குக் கண்களாகவும் இந்திரனுக்குப் பெண்ணுறுப்பாகவும் தென்பட்டது. இவ்வாறு இந்திரன் காமவசப்பட்டதால் பெருந்துன்பங்களை அடைந்த போதும் தனது இயல்பை மாற்றாது பரிசிதன் என்றும் அரசனின் மனைவியான வபுஸ்டமை என்றும் பேரழகியைக் கண்டு அவனது அழகில் மயங்கி அவளை எவ்வகையிலும் அடைந்தே தீரவேண்டும் என்ற எண்ணங் கொண்டு பல வழிகளில் முயன்று பார்த்தான். அவள் அதற்கு இடங் கொடுக்கவில்லை. அதனால் மனித வடிவெடுத்து அவளது அந்தப்புரத்திற்குச் சென்று தக்க சமயம் வரும்வரை காத்திருந்தான்.

அப்போது வபுஸ்டமையின் கணவன் அசுவமேதயாகம் செய்து குதிரையைப் பலியிடுவதைக் கண்ட இந்திரன் உயிர்நீத்த அக்குதிரையின் உடலினுள்ப் புகுந்து நின்றான். யாக முறைப்படி பலியிடப்பட்ட குதிரை யாகம் செய்தவனின் மனைவியிடம் ஒப்படைக்கப்படும். அப்போது அக்குதிரைக்குள் மறைந்திருந்த இந்திரன் வபுஸ்டமையுடன் கூடிப் பெரும்

இன்பமடைந்தான். அதனால் அந்த யாகம் பயனற்றதாகி விட்டது. இந்திரன் இவ்வாறு நடந்து கொண்டது பெருங்குற்றமாகும்.

முனிவர்களே, இந்திரனைப் போலப் பல தேவர்கள் காமவசப்பட்டு செய்த செயல்களையும் கூறுகிறேன் கேளுங்கள். அக்கினிதேவன் சப்தரிஷிகளின் மனைவிமார் மீது மோகங் கொண்டு அதை வெளிப்படுத்தினான். அதற்கு அவர்கள் இடங் கொடாமையால் விரத்தியுற்று வானத்தை அடைந்து தவித்துக் கொண்டிருந்தான். அப்போது அங்கே வந்த கார்த்திகைப் பெண்களில் மகாபதி விரதையாகிய அருந்ததி நீங்களாக ஏனைய முனிபத்தினிகள் அக்கினிதேவனுடன் கூடி அவனது காம இச்சையைத் தீர்த்தார்கள். அக்கினி தனது மனைவியாகிய ஸ்வகாதேவியுடன் கூடியிருந்தபோது இவ்வளவு இன்பத்தை அனுபவிக்கவில்லை. அதன் பின் அக்கினிதேவன் பிரமண வடிவம் பூண்டு மாகிஸ்மதி என்ற நாட்டை அடைந்து அந்நாட்டின் அரசனான நீலன் என்பவனது மனைவியுடன் கூடி மகிழ நினைத்தான். அதைக் கேள்விப்பட்ட நீலன் அக்கினிதேவனைச் சிறைப்பிடித்து வைத்தான். பல வருடங்கள் சிறைப்பட்டிருந்த அக்கினிதேவன் சுவாலை வடிவில் தப்பித்துச் சென்றான்.

முனிவர்களே இனி வாயுதேவனின் காமத்தைப் பற்றிக் கூறுகிறேன் கேளுங்கள். வாயுதேவன் பிரமாவின் பௌத்திரனான குசநாபன் என்பவனின் புத்திரிகள் நூறுபேரைக் கண்டு அவர்களை மோகித்தான். அதனால் அவன் பல உபாயங்களைக் கைக்கொண்டான். பேரழகிகளான அவர்கள் அதற்கு இடங்கொடுக்கவில்லை. அதனால் அவன் அப்பெண்களிடம் சென்று தனது காதலை வெளிப்படுத்தினான்.

அப்பெண்கள் அவனது காதலை ஏற்காது ஏளனம் செய்தனர். பின்; "நீ எத்தகைய வல்லமைகள் உள்ளவனாலும் சரி, நாங்கள் எமது தந்தையின் கட்டளைப்படியே வாழ்ந்து வருகிறோம். அவர் எமக்குப் பொருத்தமான கணவன்மார்களைத் தேடித் தருவார்" என்றனர். அதைக்கேட்ட வாயுதேவன் மிக்க கோபம் கொண்டு அவர்களைக் குள்ளர்களாகவும், விகாரப்பட்டவர்களாகவும் நோயாளிகளாகவும் மாற்றிவிட்டான். அதை அறிந்த அப்பெண்களின் பிதாமகனான குசமுனிவர் தனது தவ வலிமையால் அவர்களை முன்பை விட அழகிகளாக்கி அவர்களை வாயுதேவனுக்கே திருமணம் செய்து கொடுத்தார்.

முனிவர்களே, இனி நான் சூரியபகவான் காமம் கொண்ட கதையைக் கூறுகிறேன். சூரியன் துவட்டா என்பவனின் புத்திரியான சஞ்சியைக் கண்டு காமவசப்பட்டு அவளையே மனைவியாக்கிக் கொள்ள வேண்டுமென்ற ஆசையால் அவளைப் போற்றிப் புகழ்ந்து தனது எண்ணத்தை வெளியிட்டான். அதை ஏற்க மறுத்த சஞ்சியை, " உனது உருவத்தை எனக்குப் பிடிக்கவில்லை" என்று மறுத்தாள். ஆனால் சூரியன் அவள் விதிக்கும் நிபந்தனைகளை ஏற்கச் சித்தமாக இருந்தான். அதனால் சஞ்சியை சொன்னாள்; "நான் உன்னை மணப்பதானால் நீ எனது தந்தையால் செய்யப்படும் சாணையில் ஏறவேண்டும். எனது தந்தையும், தேவர்களும் சாணை பிடித்து உன்னுடைய அகன்ற தேகத்தை

அழகுபடுத்துவார்கள். அப்போது நீ அழகனாகி விடுவாய். அதன் பின் திருமணம் செய்கிறேன்" என்றாள். காமம் கொண்ட சூரியன் அதற்கு ஒப்புக் கொண்டான்.

சூரியன் சாணையில் ஏறத் துவட்டாவும் தேவர்களும் சாணை பிடித்து அவனது உடலை அழகாக்கினார்கள். அப்போது சூரியனின் உடலில் இருந்து விழுந்த பொடிகளைக் கொண்டு தேவர்கள் சுதர்சனம் முதலான ஆயுதங்களைச் செய்து கொண்டனர். பிறகு சஞ்சிகை சூரியனைத் திருமணம் செய்து சில காலம் இன்பமாக வாழ்ந்தாள். அதன்பின் சூரியனின் வெப்பத்தைத் தாங்கமுடியாது பெண் குதிரை வடிவெடுத்து ஓடினாள். அதனால் சூரியன் ஆண் குதிரை வடிவெடுத்து அவளைப் பின் தொடர்ந்தான். இடைநடுவில் தனது பெண் அம்சத்தை மறைத்துக் கொண்டு எதிர்முகமாகச் சஞ்சிகை நின்றாள். அப்பொழுது சூரியனது காமம் பெண் குதிரையின் முகத்தில் விழ அவள் அதைத் தனது நாசி வழியாக ஏற்றுக் கொண்டாள். அதனால் அவளுக்கு நாசி வழியாக இரண்டு புத்திரர்கள் பிறந்தார்கள். அவர்கள் தான் தேவர்களின் வைத்தியர்களான அஸ்வினி தேவர்கள். அதன்பின் சஞ்சிகை, வைவஸ் வதமனு, யமன், யமுனை ஆகிய பிள்ளைகளைப் பெற்றெடுத்தாள். பின்பு சூரியனது உடற்சூட்டைத் தாங்கமுடியாது தனது சாயையைத் தந்திரமாக நிறுத்தினாள். சூரியன் காமமேலீட்டால் சாயையைக் கூடி அதனால் சர்வணிமனு, சனி என்பவர்களையும் பத்திரை என்ற பெண்ணையும் பெற்றாள். அதன் பின் சூரியன் குந்திதேவியால் பிரார்த்திக்கப்பட்டுக் கர்ணனைப் புத்திரனாக அடைந்தான்.

இனிச் சந்திரனின் காமமோகம் பற்றிக் கூறுகிறேன். முனிவர்களேஇ பாற்கடலைக் கடையும்போது அத்திரி முனிவரின் மனைவியான அனுசூயாவின் கர்ப்பத்தில் தோன்றியவன் சந்திரன். அவன் தக்கனுடைய பெண்பிள்ளைகள் இருபத்தேழு பேரைத் திருமணம் செய்தவன். இருப்பினும் அவ் இருபத்தேழு பெண்களிடமும் சமமாக நடக்காது ரோகிணி என்ற பெண்ணை அளவுக்கதிகமாக விரும்பி அவளுடனேயே எப்போதும் கூடி மகிழ்வான். அதனால் அப்பெண்களின் தந்தை சபிக்கச் சந்திரன் தேய்வதும் வளர்வதுமாக இருந்தான். அவன் வாலிப வயதில் கல்வி கற்பதற்காகச் குருவான பிரகஸ்பதியின் வீட்டுக்குச் சென்றபோது அவரின் மனைவி மீது காமங் கொண்டு அவளைக் கவர்ந்து சென்றான். அதனால் கோபங் கொண்ட தேவர்கள் சந்திரனோடு யுத்தம் செய்து குருபத்தினியான தாரையை மீட்டுப் பிரகஸ்பதியிடம் ஒப்படைத்தனர். அவர்களுக்குப் பிறந்தவனே புதன்.

முனிவர்களே; "இனி நான் உங்களுக்கு மிகவும் கடுமையான தவம் செய்த மித்திரா, வருணர் என்ற இரு ரிசிகளின் கதைகளைக் கூறுகிறேன். ஊர்வசி என்ற அப்சரஸ் பெண் விஷ்ணுவின் தொடையில் இருந்து தோன்றி யாகங்களுக்கு உதவியாக இருந்து வந்தாள். அவளின் மீது மோகங் கொண்ட மித்திரா வருணர் அளவில்லாத காமத்தால் தமது வீரியத்தை கும்பத்திலும, மற்றவர் நீரிலும் விட்டனர். கும்பத்தில் இருந்து அகத்தியர் தோன்றினார். நீரில் இருந்து வசிட்டர் தோன்றினார். இதுவரை தேவர்களது காமக்கதைகளைக் கூறிய நான் இனி முனிவர்களது காமக் கதைகளைக் கூறுகிறேன்" என்றார்.

முனிவர்களின் மோகக்கதைகள்

முனிவர்களே, பிரம்மச்சாரிய விரதத்தை மிகவும் கடுமையாகக கடைப் பிடித்த தசப்பிரசாபதி, வித்யுத்பரனை என்ற பரஸ்திரியை (விபச்சாரியை) விரும்பினார். அதேவேளை நாரத முனிவரும் அவளை மோகித்தார். பிரமதேவனும் அவளைக் கண்டு காமுற்றான். அதனால் வித்யுத்பரனை கபில நிறமுடைய பசுவின் வடிவமெடுத்தாள். அப்பொழுது நான்முகன் அவளின் மீது கொண்ட காமத்தால் அவளைத் துன்புறுத்தினான். அதன் பின் அவர் படைத்த சரஸ்வதியை மனைவியாக்கிக் கொண்டார்.

காசிபர் வம்சத்தில் பிறந்த மரீசி என்ற மாமுனிவர் காமவசப்பட்டு தசப்பிரசாபதியிடம் சென்று, அவரது புதல்வியைத் தனக்குத் திருமணம் செய்து தருமாறு கேட்டார். தசப்பிரசாபதி தனது பதின்மூன்று புத்திரிகளையும் அவருக்குத் திருமணம் செய்து வைத்தார். குறுமுனியாகிய அகத்தியர் விதர்ப்பராசனின் மகளான உலோபாமுத்திரை மீது காமங் கொண்டு அவளை மணந்து, அவளின் சொற்படி வாழ்ந்தார். சகேரிசி என்ற முனிவர் ஒரு சமயம் ஆகாயத்தில் இருந்து; "நீ எனக்குப் பிரியமானவன். அதனால் உன் உயிரைக் கொடுத்து என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று ஒலித்த மதுரமான பெண்ணின் இனிய வார்த்தைகளைக் கேட்டு அதில் மயங்கி அவள் மீது காமம் கொண்டமையால் அவரது வீரியம் வெளிப்பட அதை ஒரு சருகில் விட்டார். அதனால் மகாமுனிவரான பிருங்கி என்பவர் ரிசப முகத்துடன் தோன்றினார்.

ருது என்ற முனிவர் பிரமத்வரை என்ற பெண்ணை மோகித்துத் திருமணம் செய்தார். அவரது மனைவி விஷம் தீண்டி இறக்க, அவள் கொடுத்த காம இன்பத்தைப் பெரிதாக மதித்த குரு முனிவர் தற்கொலை செய்ய முயன்றார். அதைத் தேவர்கள் தடுத்து உனது ஆயுளின் ஒரு பகுதியை அவளுக்குக் கொடுத்தால் அவள் உயிர் பெறுவாள் என்று கூற குரு முனிவர் தனது ஆயுளின் ஒரு பகுதியைக் கொடுத்து அவளை உயிர்பித்து அவளுடன் கூடி மகிழ்ந்தார்.

அந்தகரான சவனமாமுனிவர் நெடுங்காலம் தவமிருந்ததால் அவர் மீது பெரும் புற்று வளர்ந்தது. ஒரு நாள் ஒரு வேடுவப்பெண் அப்புற்றைக் தோண்ட சவனமாமுனிவர் அதிலிருந்து வெளிப்பட்ட சவனமாமுனிவரை அப்பெண் அரசசபைக்கு அழைத்துச் சென்றாள். அவரது பெருமையை உணர்ந்த அரசன் அஸ்வினி தேவர்களை வணங்கி அவருக்குக் கண்களைக் கொடுக்குமாறு வேண்ட அவர்கள் கொடுத்தனர். அந்த வேடுவப் பெண்ணின் அழகில் மயங்கிய முனிவர் அவளைத் திருமணம் செய்து கொண்டார்.

இனிப் பகீஸ்வரன் என்ற பெரும் தவஞானியின் கதையைக் கூறுகிறேன் கேளுங்கள். பாற்கடலின் அருகில் அவர் தவம் செய்ததால் பாற்கடலின் நீர்த்துளிகள் சிலவற்றைப் பருகியே அவர் தவம் செய்தார். பாற்கடலில் வாழ்ந்த மீன், நண்டு, தவளை என்பன கலவியில் ஈடுபடுவதைக் கண்டு காமங் கொண்ட பகீஸ்வரன் தானும் ஒரு

பெண்ணோடு கூட வேண்டும் என்ற விருப்பத்தை அரசனிடம் சொல்லவிரும்பி அரச சபைக்குச் சென்றார். அவரைக் கண்ட அரசன் அவரை வரவேற்று உபசரித்து அவர் வந்த விசயத்தை விசாரித்தான். முனிவர் சொன்னார்; "அரசே நான் காசிபமகரிசியின் புதல்வன். எனக்குத் திருமணம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் வந்துவிட்டது. உமக்குப் புத்திரி இருந்தால் எனக்குத் திருமணம் செய்துவை" என்று கேட்டார்.

அவரின் கோலத்தைக் கண்டு மனம் குழம்பிய அரசன் மறுத்தால் சபித்து விடுவார் என்ற பயத்தில், "முனிவரே, எனக்குப் பதினைந்து பெண்கள் இருக்கிறார்கள். அதனால் தாங்கள் அந்தப்புரத்திற்குச் செல்லுங்கள் அவர்களில் யாராவது உங்களை விரும்பினால் அவளை உங்களுக்கு மணம் முடித்து வைக்கிறேன்" என்றான்.

உடனே முனிவர் அழகிய வாலிபரின் உருவமெடுத்து அந்தப்புரத்திற்குச் சென்றார். அவரின் அழகில் மயங்கிய அரசனின் பதினைந்து புத்திரிகளும் அவரைத் திருமணம் செய்ய விரும்பினர். அதனால் அரசன் அவர்களை முனிவருக்குத் திருமணம் செய்து கொடுத்தான். முனிவர் பல காலம் அரசபோகங்களை முழுமையாக அனுபவித்துத் தன்னைப் போன்ற பல புத்திரர்களைப் பெற்று ஆயுள் முடிவில் சொர்க்கத்தை அடைந்தார்.

"முனிவர்களே அக்கினி தேவனின் புத்திரியான சாண்டிலீயைக் கருடன் தீவிரமாக மோகித்தான். அவள் நல்ல அழகி. அவளது அழகு கருடனைக் பைத்தியகாரனாக்கியது. அதனால் அவளைத் தூக்கிக் கொண்டு சொர்க்கலோகத்திற்குக் கொண்டு செல்ல நினைத்தான். அதைத் தெரிந்து கொண்ட சாண்டிலீ வெறுப்புடன் அவனது இறகுகள் அழிக எனச் சபித்தாள். அதனால் கருடனின் சிறகுகள் உதிர்ந்தன. எனினும் அவளில் உள்ள மோகம் குறையாத கருடன் கெஞ்சி மன்றாடினான். அதனால் இரங்கிய காண்டிலீ கருடனைத் திருமணம் செய்யச் சம்மதித்தாள். அதன்பின் கருடனின் சிறகுகள் பொன் நிறமாயின.

"முனிவர்களே, விபாண்டகமுனிவர் ஒருநாள் நதியில் நீராடும்போது சிறிது தூரத்தில் வந்து கொண்டிருந்த அழகான பெண்ணைக் கண்டு அவளது அழகை மோகித்து மெய்மறந்தபோது அவரை அறியாது வீரியம் ஒழிகி நீரில் சென்றது. அந்த வீரியத்தை ஒரு மான் தண்ணீரோடு சேர்ந்து குடித்தமையால் கருவுற்று ரிஷ்ய சிருங்க முனிவரைப் பெற்றது. அப்புத்திரனை உரிய முறைப்படி முனிவர் வளர்த்தார். அவன் வளர்ந்ததும் பெண்ணுணர்வில்லாத பிரமச்சாரியாக இருந்தான். அப்போது அந்நாட்டில் மழை பெய்யாததால் ரிஷ்சிய சிருங்க முனிவரை அரண்மனைக்கு வரும்படி அரசன் அழைத்தான். முனிவர் வந்தபோது அவரை வரவேற்ற ஆடல் மகளிரின் அழகை ரசித்து மகிழ்ந்தார். அதன்பின் அவர் பெண்களின் பின் பேயாக அலைந்தார்.

"முனிவர்களே, ஒரு சமயம் கௌதம முனிவர் பெருந்தவம் செய்தார். அதைக் கண்ட இந்திரன் அவர் இந்திரப்பதவியடையத்தான் தவம் செய்கிறாரென நினைத்து அவரது

தவத்தைக் குழப்ப அப்சரஸ் மங்கையை அனுப்பினார். அவளின் அழகில் மெய்மறந்த கௌத்தமர் மோகமுற்றுத் தனது வீரியத்தை அடக்கமுடியாது வில்லில் விட்டார். அப்போது வில்லைப் பிடித்தவர்களெல்லாம் பிள்ளைகள் துரோணராகப் பிறந்தனர்.

"முனிவர்களே, பிரமதேவர் சூரியனைக் கண்டு, பூமியில் சிலகாலம் அரசனாக இருந்து நீதியாக அரசு செய்" என்றார். ஒருநாள் அவன் காட்டுக்குச் சென்றபோது அவனுக்கு மனைவியின் நினைவு வந்ததால் அவன் தனக்குள் உருவான வீரியத்தை ஒரு தொன்னையில் விட்டுவிட்டு இது மனைவியின் கர்ப்பத்தை அடைந்தால் எனக்கொரு மகன் பிறப்பான் என்று நினைத்தான். அதைச் சேணம் (ஆந்தை) என்ற பறவை உணர்ந்து அந்தத் தொன்னையைத் தூக்கிச் சென்றபோது இன்னொரு பறவை அது இரை என்று நினைத்து அதைக் கவர நினைத்தது. அதனால் அத்தொன்னை யமுனை ஆற்றில் விழுந்தது. அதற்குள் இருந்த வீரியம்சாபத்தால் யமுனை ஆற்றில் மீனாக இருந்த ஓர் அப்சரஸ் பெண்ணின் வாயில் விழ அவள் அதைக் குடித்து விட்டாள் . அதனால் பெண்ணுருவில் இருந்த மீன் கர்ப்பமானது. அதை ஒரு வலைஞன் பிடித்து வெட்டிய போது அதற்குள் ஓர் ஆண்குழந்தையும் ஒரு பெண்குழந்தையும் இருந்தது. பொதுவான சொத்தை மக்கள் கண்டெடுத்தால் அதில் அரைப்பங்கை அரசனுக்கு கொடுக்கும் வழக்கம் இருந்தது. அதனால் அந்த வலைஞன் ஆண்குழந்தையை அரசனான சூரியனிடம் கொடுத்து, அதைப் பெற்ற வரலாற்றையும் சொன்னான். அக்குழந்தைதான் பறவையிடம் கொடுத்தனுப்பிய வீரியத்தால் பிறந்ததென நினைத்த சூரியன் அக்குழந்தையை மிக்க அன்போடு வளர்த்து மச்சதேசத்திற்கு அவனை மன்னனாக முடிசூட்டி வைத்தான்.

வலைஞன் தான் வளர்த்த பெண்குழந்தைக்கு சத்தியவதி எனப் பெயரிட்டு வளர்த்து வந்தான். அவள் வளர்ந்ததும் யமுனை நதியில் தந்தைக்குச் சொந்தமான ஒரு படகை ஓட்டிக் கொண்டிருந்தாள். ஒரு நாள் பரராச முனிவர் அப்படகில் பிரயாணம் செய்தபோது அவளின் அழகில் மயங்கி அவளை மோகித்தார். அவளைப் பிரிய முடியாததால் அவளின் உடலில் இருந்து வீசிய மச்ச வாடையைப் போக்கி நறுமணம் மிக்கவளாக மாற்றி, அவளுக்கு பரிமளகெத்தி என்ற பெயரிட்டுக் கூடி மகிழ்ந்தார். அதனால் சத்தியவதி கர்ப்பமானாள். அவள் பெற்றெடுத்த ஆண்குழந்தைக்கு வியாசர் எனப் பெயரிட்டார். அதன் பின் விசித்திர வீரியன் என்பவனும், சித்திராங்கன் என்பவனும் இறந்த பின்பு அவனது மனைவியைக் கூடி திருதராட்டினன் பாண்டு விதுரன் என்னும் மூன்று பிள்ளைகளைப் பெற்றார். அதன்பின் ஆரணியை மணந்து சுகர் என்ற பிரமஞானியை மகனாகப் பெற்றார். அந்தச் சுகமாமுனிவர் கௌரவம், கபிலம், கிருஷ்ணம், நீலம் என்னும் பெயர்களை உடைய நான்கு புத்திரர்களையும் யோகசாலியான ஒரு பெண்ணையும் பெற்றார்.

முனிவர்களே, உடல் முழுவதும் கபாலமான மண்டை ஓடுகளைக் கோர்த்து மாலையாக அணிந்த வாசிரமமுனிவர் என்பவர் நாகலோகத்தில் இருந்து ஒரு கட்சத்தைக் கொண்டு வருவதற்காக பாதாளத்தை அடைந்து பெரும் யாகம் செய்தார். அதனால் அங்கு

வசித்த நாகங்கள் மனம் வருந்தி அங்கிருந்த கட்சத்தை அவருக்குக் கொடுத்தன. அப்போது அங்கு வசித்த ஒரு வேசி ஆடையின்றி அங்கு வந்தாள். அவளைப் பார்த்த முனிவர் அவளின் மீது தீராத மோகம் கொண்டு யாகம் செய்வதை விட்டு விட்டு அவளோடு கூடி மகிழ்ந்தார். அதனால் நாகங்கள் கொடுத்த கட்சத்தைப் திரும்பப் பெற்றன. காமத்தால் முனிவர்களும் தேவர்களும் செய்த தீமைகள் கணக்கில் அடங்காதவை" என்று சொன்ன சூதமுனிவர் இனியும் சிலவற்றைச் சொல்கிறேன் என்று சொல்லத் தொடங்கினார்.

இராவணனின் மோகப்பித்து

முனிவர்களே, விச்சிரவசுவுக்கும் கேசி என்பவளுக்கும் புத்திரனாகப் பிறந்தவன் இராவணன். இந்திரனைச் சிறைப்பிடித்து, மூவுலகங்களையும் ஆட்சி செலுத்தியவன். அவன் அனேக தேவமகளிரைச் சிறைப்பிடித்து, மூவுலகங்களையும் ஆட்சி செலுத்தியவன். அவன் அனேக தேவமகளிரைச் சிறைப்பிடித்துத் தனது மோகத்தைத் தீத்தவன். அவன் மயனின் மகளாகிய மண்டோதரியைத் திருமணம் செய்தான்.

மன்மதன் சிவபெருமானது நெற்றிக்கண் நெருப்பால் எரிந்து சாம்பலான பின்பு, சிவபெருமானின் வரப்படி இரதிதேவி மயனின் வீட்டில் பிறந்து வளர்ந்தாள். அவளின் அழகில் மோகங் கொண்ட சம்பரன் என்ற அசுரன் அவளைப் பலவந்தமாகத் தூக்கிச் சென்றான். இரதி மரத்தினால் பொம்மை ஒன்றைச் செய்து, அதனை நன்றாக அலங்கரித்து தனது யோகமாயையால் தன்னைப் போன்ற அழகிய பெண்ணாக்கி அதற்கு உயிர் கொடுத்து விட்டுத் தனது கணவன் பிறந்திருக்கும் இடத்திற்குச் சென்றாள். இரதி செய்து மயனின் வீட்டில் வைத்துச் சென்ற மாய உருவான பெண்ணை மயனின் புத்திரியான மாயாவதி என்று கருதிய சம்பரன் மிக்க காமங் கொண்டு அதோடு இரவும் பகலும் கூடியிருந்தான்.

சாம்பரனுடைய மாணவியாகிய மாயப்பொம்மையின் அழகை மோகித்த இராவணன் அவளைக் கவர்வதற்காகப் பாதாளத்திற்குச் சென்று, சம்பரனது இரத்தின மாளிகைக்குள்ச் சென்றான். அங்கு மாயனால் நிர்மாணிக்கப்பட்ட பாசங்களால் கட்டப்பட்டான். அங்கு அவன் சிறைப்பட்டுப் பெருந் துன்பமடைந்தான். அதைக் கேள்விப்பட்ட மண்டோதரி பாதாள உலகிற்குச் சென்று தனது தந்தையைச் சமாதானப்படுத்தி இராவணனை விடுவித்தாள். இருப்பினும் மயன் அவனை எச்சரித்து அனுப்பினான். பெரும் துன்பங்களை அனுபவித்தும் பிற பெண்களை மோகிக்கும் குணம் இராவணனுக்கு மாறவில்லை.

முனிவர்களே, ஆங்கிரச முனிவரின் புத்திரியான வேதவதி பேரழகி. இருந்தும் அவள் மரவுரி தரித்துத் தவக்கோலம் பூண்டு விஷ்ணுவைப் பிரார்த்தித்து வந்தாள். அவளைத் தற்செயலாகக் கண்ட இராவணன் அவளின் மீது பெரும் மோகங் கொண்டு அவளை அடைய முற்பட்டபோது அவள் அக்னியில் பாய்ந்து உயிரை விட்டாள். உயிரை விடுமுன் "பாவியே,

என்னை நீ பலாத்காரமாக அடைய நினைத்ததால் என் உயிரை மாய்க்கிறேன். அடுத்த பிறவியில் உன்னைக் கொல்வேன்'' என்று சபதமிட்டாள். அதன்படி அவள் மிதிலாபுரியின் அரசனான ஜனகனுக்கு மகளாகப் பிறந்தாள். பின் இராமனை மணம் செய்து அவன் மூலம் இராவணனைக் கொன்றுவிட்டு, இரண்டு பிள்ளைகளைப் பெற்ற பின்பு இனித் திருப்பாற்கடலுக்குச் சென்று நாராயணனோடு கூடியிருக்க வேண்டும் என்று எண்ணி மறைந்தாள்.

ஒருநாள் கயிலை மலைக்கு அருகில் குபேரனின் மகனான களகூபரனைச் சந்திக்கவென்று பேரழகியான அரம்பை தன்னை அழகாக அலங்கரித்துக் கொண்டு சென்றாள். அவனைக் கண்ட இராவணன் அவளை மோகித்துப் பலாத்காரமாக அவளுடன் கூடி மகிழ்ந்தான். அதனால் கோபங் கொண்ட களகூபரன் இனி இராவணன் பலாத்கரமாக ஒரு பெண்ணைப் புனர்ந்தால் அவளது தலை சுக்கு நூறாக வெடிக்கக் கடவது என்று சபித்தான்.

அதன் பின் இராவணன் பாதாள உலகிற்குச் சென்று மகாவிஷ்ணுவைச் சந்தித்தான். அவரின் அருகில் மிக்க அலங்காரத்துடன் வீற்றிருந்த மகாலட்சுமியைக் கண்டு மெய்மறந்தான். அவளை அபகரித்துச்செல்ல வேண்டுமென நினைத்தபோது மகாவிஷ்ணுவின் மூச்சுக் காற்றுப்பட்டு இராவணன் நூறு காத தூரத்திற்குத் தூக்கி வீசபபட்டுச் செயலற்றுக் கிடந்தான். பின் எழுந்து விஷ்ணுவை வணங்கி, "பகவானே, அடியேனுக்குத் தங்களின் கையாலே மரணம் சம்பவிக்கவேண்டும்" என்று வேண்டத் திருமால் அதற்குச் சம்மதித்தார்.

அதன்பின் மகாவிஷ்ணு இராமனாக அவதாரமெடுத்துச் சீதையை மணந்தார். பின் தந்தையாரின் வேண்டுதலுக்காக வனவாசம் சென்ற சீதையை இராவணன் கவர்ந்து சென்றான். அதனால் பெரும்போர் மூண்டது. இராவணனது சேனைகள் பலவும் அழிந்தபோது வேறு வழியின்றி நித்திரையாக இருந்த கும்பகர்ணனை எழுப்ப முயன்றனர். யானை, குதிரை போன்றவற்றால் மிதித்தும் அவன் எழாததால் இராவணன் பெண்களை அழைத்து அவனுக்கு மோகமூட்டச் சொல்ல ஆயிரக்கணக்கான பெண்கள் அவன் மீது விழுந்து புரண்டு ஸ்பரிக்க அவன் எழுந்தான். பின் பெண்களுடன் கூடி இருந்துவிட்டு போருக்கு சென்று இறந்தான். இராமன் அதன்பின் இராவணனைக் கொன்று சீதையை மீட்டார். முனிவர்களே, சிவபெருமானின் கட்டளைப்படி மன்மதன் சகல சீவராசிகளுக்கும் காமத்தைக் கொடுத்து அவர்களை துன்புறுத்துவதில் வல்லவன். அவனின் செயலால் தான் சிவபெருமான் காதலுற்றுப் பார்வதிதேவியை மணந்து இலிங்க ரூபமானார். அதனால் இலிங்கத்தைப் பூசிப்போர் தமக்குத் தேவையானவற்றை அடைவார்கள்" என்றார் சூதமுனிவர்.

பூசை விதிகள்

நைமிசாரணிய முனிவர்கள் சூதமுனிவரை நோக்கி, "மகாத்மாவே எமக்கு நித்திய, நைமித்திய பூசை விதிகளைச் சொல்லுங்கள்" என்று கேட்டபோது சூதமுனிவர் சொன்னார்; "முனிவர்களே, நித்திய, நைமித்திய பூசைகளை சிரத்தையுடன் செய்தல் வேண்டும். சிரத்தையே சிவதர்மத்திற்கு ஆதாரமாகும். சிரத்தை தான் பிரதிஷ்டை. சிவதர்மங்கள் யாவும் சிரத்தை மயமாகவே உள்ளன. பதி, பசு, பாசம் என்பவையும் சிரத்தை மயமானவை. சிரத்தையில்லாவிட்டால் எதையும் கிரகிக்க முடியாது. தேவர்களாலும் சிரத்தை இன்றிக் கிரகிக்க முடியாது. சிரத்தையே பரமதர்மமும், சூட்சும தத்துவமும், தானமும், தவமும், சுவர்க்கமும், மோட்சமும், உலகமுமாகும். சிரத்தையின்றிச் செய்யும் செயல்கள் ஒருபோதும் பயனளிப்பதில்லை. சிரத்தையால் தான் சிவனையும் அடைய முடியும். சர்வேஸ்வரனை தேக்சிரமம், யாகம், தானம், பெருஞ்செல்வம், அரச அதிகாரம் என்பவற்றால் அடைய முடியாது. பதிணென் புராணங்களும் இதிகாசங்களும் வேதங்களும் சாத்திரங்களும் அறநெறியை முன்னிட்டு முனிவர்களால் கர்ண பரம்பரையாகச் சொல்லப்படுகின்றன. இவையும் மோட்சத்திற்கு உதவி செய்ய மாட்டாது.

அதனால் முனிவர்களே, சிவஞானத்தை அடைவதற்கு முக்கிய சாதனமாக இருப்பது சிவலிங்க அர்ச்சனையாகும். அவ் அர்ச்சனை, நித்தியம், நைமித்தியம், காமியம் என மூவகைப்படும். பஞ்சாமிர்தத்தாலும், ஸ்நானம், பாத்தியம் ஆகியவற்றாலும் அர்ச்சிப்பவர்கள் விரைவில் அனுக்கிரகப்படுவர். பாற்கடலைக் கடைந்தபோது நந்தை, பத்திரை, சுசீலை, சுரபி, சுமணை என்ற ஐவகைப் பசுக்கள் தோன்றின. அவை பூவுலகை அடைந்து சிவபெருமானின் திருமஞ்சனத்திற்குப் பயன்படுத்துவதற்காக அங்கேயே தங்கிவிட்டன. அப்பசுக்களின் கோமயமும், கோரோசனையும், கோசலமும், பாலும், நெய்யும் சிவபூசைக்குரியன. இதில் கோமயத்திலிருந்து வில்வமரமும், பத்மத்தின் விதைகளும் தோன்றின. கோரோசனை அபிடேகத்திற்கு உகந்தது. உயிர்களுக்கு வீரியத்தை வழங்குவது தயிர். தயிரிலிருந்து நெய்யும், நெய்யில் இருந்து அமிழ்தமும் தோன்றியது.

ஆகையால் நெய், பால், தயிர் முதலியவற்றால் லிங்கத்திற்கு அபிஷேகம் செய்து, பின் மலர்களை வைத்து பூசிக்க வேண்டும். அப்போது ஓம் ஹர ஹர நமசிவாய, சர்வேஸ்வர சங்கர மகாதேவா என்று வாழ்த்த வேண்டும். இவ்வாறு செய்தால் பக்தர்களின் கோரிக்கைகள் நிறைவேறும். இவ்வாறு தினமும் பூசிக்க வேண்டும். அத்துடன் சதுர்த்தசி அட்டமி தினங்களில் பூசித்து வந்தால் நரகத்தில் விழுந்து கிடக்கும் இருபத்தொரு தலைமுறைகள் சொர்க்கத்தை அடைவர். பின் கைலாயத்தை அடைவர்.

சிவபெருமானுக்குத் தினமும் பல்வேறுபட்ட மலர்களால் மாலைகள் தொடுத்து அணிவித்தால், அவன் உலகத்தில் ஏகச் சக்கரவர்த்தியாகி ஆயுள் முடிவில்

சிவசாயுச்சியத்தை அடைவான். பஞ்சாட்சரத்தை முறைப்படி தினமும் ஓதுபவன் பெரும் சிவபக்தனாகித் தனது பிதிர்களுடன் மோட்சமடைவான். சிவபூசையைப் பார்த்துக் கொண்டிருப்பவன் யாகம் செய்த பயனை அடைவான். சிவசரிதங்களை வாசிப்பவனும், கேட்டுக் கொண்டிருப்பவனும் சிவ ஆராதனை செய்யும் பயனை அடைவான். சிவ, ருத்ர, ஹர என்னும் சிவநாமங்களை உச்சரிப்பவன் ருத்திர லோகத்தை அடைவான். முனிவர்களே, இவற்றைச் சிவபெருமானே திருவாய் மலர்ந்தருளியுள்ளார்" என்றார் சூதமுனிவர்.

சிவலிங்கப் பூசையின் பயன்

முனிவர்களே, இனிச் சிவலிங்கப் பூசையின் பயன்களைக் கூறுகிறேன் கேளுங்கள். சிவபெருமானுக்குக் கல்லாலோ அல்லது மரத்தாலோ அல்லது பொன் வெள்ளி போன்ற உலோகங்களாலோ அல்லது மண்ணாலோ கோவில் கட்டியவன் தினமும் சிவனைப் பூசித்த பயனை அடைவான். அவனது நூறு தலைமுறைப்பிதிர்கள் சிவலோகத்தை அடைவர். சிவனுக்குக் கோவில் கட்ட வேண்டும் என்று நினைத்தால் அவன் ஏழு பிறவிகளில் செய்த பாவங்கள் அனைத்தும் அகலும். கருங்கல்லால் கோவில் கட்டியவன் ஒவ்வொரு கல்லுக்கும் ஒவ்வோர் ஆயிரம் ஆண்டுகள் சிவலோகத்தில் வசிப்பான். சிவலிங்க மூர்த்தத்தைச் செய்வித்தவன் அறுபதினாயிரம் ஆண்டுகள் சுகபோகத்தை அனுபவிப்பான். சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்பவனைக் கண்டு, தானும் அவ்வாறு செய்தால் செய்பவன் பரம புண்ணியனாகி விடுவான். செய்த பாவங்கள் யாவும் நீங்கி முத்தியடைவான்.

வேறு தெய்வங்களை வணங்காது சிவபெருமானை மட்டும் வணங்கி, மனதில் அவனையே தியானிப்பவர்களும், பூப்போட்டு வணங்குபவர்களும், எவ்வேளையிலும் சிவநினைவாக இருப்பவர்களும் நித்திய நைமித்திய பூசை செய்பவர்களும் சிவாலயத்தைத் துப்பரவு செய்து தீப தூபம் காட்டுபவர்களையும், சிவாலயத்தைக் கட்டுவிப்போரையும், அவர்களது வம்சத்தினையும் பகைவர்களால் தண்டிக்க முடியாது. அவர்கள் மேலான நிலையைக் கட்டாயம் அடைவார்கள். சிவலிங்கத்தைத் தேன், பால், நெய், தயிர் முதலியவற்றால் அபிசேகம் செய்பவன் ஆயிரம் பசுக்களை அந்தணர்களுக்குத் தானமாக வழங்கிய பயனைப் பெறுவான். பூரணை நாளிலும், அமாவாசை தினங்களிலும் சிவலிங்கத்தை அர்ச்சித்தவன் சகல பாவங்களில் இருந்தும் விலக்கப்படுவான். லிங்கத்தைப் பாலால் அபிஷேகம் செய்தவன் உயிர் துறக்கும்போது பாலாற்றில் நீந்தியபடி பாற்சோறு உண்டவாறு சிவலோகத்தை அடைந்து மகிழ்வுடன் வாழ்வான் என்றும் மகிழ்வுடனும் ஆரோக்கியத்துடனும் இருப்பான். அத்துடன் ஞான விருத்தியையும் பெறுவான். அதனால் நவக்கிரகங்களின் செயற்பாடுகள் எதுவும் இராது. இதற்கு உதாரணமாக ஒரு கதை உள்ளது என்ற சூதமுனிவர் அதைச் சொல்லத் தொடங்கினார்.

பூர்வகாலத்தில் பூஷ்ணன் என்பவனும் அவனது மனைவியாகிய சுமதி என்பவளும் சுவர்க்கலோகத்தை அடைந்து அங்கு மிகவும் மகிழ்வாகச் சகல போகங்களையும் அனுபவித்துக் கொண்டிருந்தனர். அதைக் கண்ட கௌதமி என்ற பெண் கேட்டாள், "சுமதி நீயும் உனது கணவனும் தேவருலகில் மிகவும் மகிழ்வாக இருக்கிறீர்கள். இந்திரன், பிரமா, விஷ்ணு கூட உங்களைப்போல வசதியாகவும் மகிழ்வாகவும் வாழவில்லை. இப்படியான பேரின்பவாழ்வு உங்களுக்கு எப்படிக் கிடைத்தது" என்று வியப்புடன் கேட்டாள். அதற்குச் சுமதி சொன்னாள், "கௌதமி, எனது கணவனின் மூதாதையர் அனைவரும் சிவபெருமானைப் பரம்பரை பரம்பரையாக நெய்யாலும், பாலாலும், தயிராலும் அபிஷேகம் செய்து வழிபட்டவர்கள். அவர்களைப் பார்த்து நாமும் அவ்வாறு வழிபட்டோம். அதன் பயன் தான் இது" என்றாள்.

மனதிற்கு ரம்மியமில்லாத பூக்களால் மாலை கட்டக்கூடாது. வாசமுள்ள அழகிய மலர்களையும் தாமரை, வில்வம், நீலோத்பலம், மல்லிகை, ஆத்தி, முல்லை, இருவாட்சி போன்ற மலர்கள் உகந்தவை. சிவந்த மலர்களும் கறுப்பு மலர்களும் சமர்ப்பிக்கலாம். சிவந்த மலரால் பூசிப்பவன் சித்தர், வித்தியாதரர், அப்சரஸ், கணங்கள் முதலியவர்களுடன் பல காலம் வாழ்வான். முள்ளை உடையதும், உக்கிர கந்தமுடையதுமான மலர்களால் அர்ச்சிக்கப்படுபவனைக் கணங்கள் விரும்புவார்கள்.

மலர்கள் கிடைக்காதவிடத்து அறுகு கரசராங்கண்ணி, தாமாலம் முதலியவற்றால் பூசிக்கலாம். தாழை மலர்களைச் சிவபூசைக்கு எடுக்கலாகாது. சங்கராந்தி, தட்சணாயணம், உத்தராயணயங்கள், கிரகணம் ஏற்படும் காலம், பூரணை, அமாவாசை, சதுர்த்தசி, அட்டமி முதலிய காலங்களில் செய்யப்படும் பூசை நைமித்திய பூசையாகும். அவ்வேளையில் சிவபூசை செய்வோர் வேறு தினங்களில் சிவபூசை செய்வோரை விட ஆயிரம் பங்கு அதிகமான பயனை அடைவார்கள்" என்று சூதமுனிவர் சொன்னார்.

யாகம், ஞானம், தியானம், தானம்

"முனிவர்களே; சிவபக்தர்களுக்கு தன்னால் இயன்றவரை பணிவிடை செய்தவன் அடையும் பயனைச் சொல்கிறேன்,"

முனிவர்களே, சூரியனைப் போன்ற ஒளியுடைய விமானத்தில் அவனுடன் அவனது எட்டு தலைமுறையினரும் ஏறிச் சிவபுரத்தை அடைவர். பின்பு அங்குள்ளவர்களால் ஆயிரம் வருடங்கள் போற்றப்பட்டுப் பின் விஷ்ணுவின் பதவியை அடைவர். முனிவர்களே, யாகம், கர்மயாகம், ஞானயாகம் என்று இருவகைப்படும். கர்மயாகம் என்பது தானம், பூசை, அக்கினிகாரியம் என்பனவாகும். தியானம் என்பது சிவபெருமானை அடையவேண்டும் என்ற நம்பிக்கையுடன் சாந்திராயணா சரணமும், சுவாத்தியானமும், ஜெபமுமாகும். ஜெபம் என்பது

எப்போதும் சிவநினைவுடன் இருத்தலால் அது ஞானயாகம் எனப்படும். ஞானயாகம், அத்தியாயனம், சிரவணம், சிந்தித்தல் என ஐந்து வகைப்படும். ஞானம் என்பது தாமச குணமின்மையும், தியான மனத்தையும் அவா இன்மையையும் உடையது.

அஞ்ஞானத்தால் கட்டப்பட்ட புருசன் அமுக்கன் எனப்படுவான். அவன் அஞ்ஞானத்தை அகற்றிய பின்பு முத்தன் ஆவான். தேகம் உள்ள வரையில் கிலேசங்கள் இருக்கும். அதை ஒழிக்க மீண்டும் பிறவாத தன்மையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கு ஞானம் உண்டாக வேண்டும். ஞானத்தை விட ஆன்மாவைப் பரிசுத்தமாக்குவது வேறு எதுவும் இல்லை. ஞானத்தால் உலகநினைவை ஒழித்துப் பிறவியை அகற்றியவன் முத்தியடைவான். தியான யாகமே பிற யாகங்களைக் காட்டிலும் சிறந்தது. தியான யாகத்தால் எப்போதும் சிவபெருமானைப் பூசை செய்பவன் உயர்வான நிலையை அடைவான். மனதை அடக்கி எல்லாத் திசைகளிலும் சிவபெருமான் இருக்கிறார் என்று நினைப்பவன் பரமயோகி. கர்ம யாகத்திலும் தபோ யாகம் பத்து மடங்கு உயர்ந்தது. தபோ யாகத்தை விட தியான யாகம் நூறு மடங்கு உயர்ந்தது. ஞானத் தியானச் செரூபமான சிவயோகமே சிறந்த மகாயாகமாகும்.

சிவபூசை செய்தவன் ராஜயோகமும், அக்கினி காரியம் செய்தவன் சம்பத்தும், ஜெபம் செய்தவன் பாவநிவாரணமும், ஞானத்தியானம் செய்பவன் முத்தியும் பெறுவான். எல்லாப் பொருட்களிலும் சிவபெருமான் இருக்கிறான் என்பதை உணர்ந்த சிவயோகிகள் வசித்த இடம் ஒரு நாளாக இருந்தாலும் அது பாக்கியம் செய்த இடம். அதுவே தீர்த்தம். அதுவே தபோவனம். தியான யோகம் செய்யாதவர்கள் சிவபெருமானுக்குப் பிரியமானவர்களாக இருக்கமாட்டார்கள். தியானயோகத்தால் மனதை அடக்கும் தன்மை உண்டாகி அது ஞானமாகப் பரிமளிக்கும். அத்தகைய ஞானயோகத்தை சிவார்ச்சனையாகச் செய்தல் வேண்டும்.

கன்ம யாகத்தாலும் பயன் உண்டு. அது எப்படியென்றால் பழகிய யானையைக் கொண்டு முரட்டுக் காட்டுயானையைப் பிடிப்பது போன்றது. ஞானயாகத்தை நெடுநாள் பழகிய கர்மயாகத்தினால் அடையலாம். சிவசாயுச்சியத்தை அடைய விரும்புபவன் கர்மயாகத்தினால் உண்டான தியான யாகத்தின் உதவியால் அடைய வேண்டும்.

தியான யாகத்தால் சிவபெருமானை அர்ச்சனை செய்தவன் பெறும் பயனை அளவிட்டுக் கூறமுடியாது. தியான யாகம் செய்யும்போது அனேகமான துன்பங்கள் வரும். இருப்பினும் சிரத்தையும் குருபக்தியும் அவற்றை நீக்கி வைக்கும். இவர்கள் உருத்திரலோகத்தை அடைந்து அங்குள்ள சகல இன்பங்களையும் அனுபவிப்பர். பக்தியோடு சிவபெருமானைத் தியானிப்பவன் தான் விரும்பியவற்றைப் பெற்று ஞானமடைந்து முத்தியைப் பெறுவான்.

முனிவர்களே, இனித் தானம் செய்தவர்கள் பெறும் பேற்றினைச் சொல்கிறேன். கர்மயோகம் செய்வோருக்கு ஒரு தரம் தானம் கொடுத்தால் அது பத்து பிறவிகள் பிராமணருக்குத் தானம் கொடுத்த பலனைத் தரும். தவோநிஷ்டர்களுக்குத் தானம் செய்தால் நூறு பிறவிகளில் தானம் செய்த பலனும், கர்மயாக தபோயாகமுடையவர்களுக்குத் தானம் செய்தால் இலட்சம் பிறவிகளில் தானம் செய்த பலனும் கிடைக்கும். தனது வசதிக்கேற்றளவு சிவபக்தனுக்குத் தானம் செய்தால் அட்சயமான பதவியைக் கொடுக்கும். சிவயோகி ஒருவன் ஒரு வீட்டில் தானம் பெற்றால் தானம் கொடுத்தவனது பரம்பரை முத்தியடையும். அத்துடன் யாகம் செய்த பலனும், தீர்த்த யாத்திரை செய்த பலனும் கிடைக்கும். சிவத்தியானம் செய்பவனுக்கு உணவு கொடுப்பவன் தனது பாவங்களை ஒழித்து விடுவான். சிரார்த்த காலங்களில் சிவ பக்தர்களுக்கு அன்னமளித்தவன், தனது பரம்பரையினருடன் சிவலோகம் அடைவான். சிவநினைவுடன் "சிவா, சங்கரா" என்று நினைத்தவாறு உண்பவன் பெரும் பயனடைவான். முறைப்படி விருந்தினர், குரு, சிவனடியார்க்கு உணவளித்த பின் உண்ண வேண்டும். அப்படிச் செய்யாதவன் பாவங்களை உண்பவனாவான். உடை, உணவு, நீர் போன்றவற்றைச் சிவனடியார்களுக்கு கொடுப்பவன் பிரம விஷ்ணு உருத்திரர்களை பூசித்த பயனை அடைவான். சிரார்த்ததினத்தில் சிவனை வணங்கிச் சிவனடியார்களை அழைத்து உணவு கொடுக்கவேண்டும் என்று நினைப்பவன், அப்படி நினைத்தவுடன் பிதிர்கள் மகிழ்ந்து அவனை ஆசீர்வதிப்பர்.

முனிவர்களே; வீபூதியும், உருத்திராக்கரும் அணிந்து சிவ நாமங்களை உச்சரித்தபடி ஒரு சிவயோகி வீட்டு வாசலில் வந்து நின்றால், அவன் வந்து நின்றவுடன் அவ்வீட்டாருக்குச் சகல போகங்களும் கிடைக்கும். அவனை அன்புடன் அழைத்து உபசரித்து உணவுகள் கொடுத்துத் தானமும் கொடுத்து உபசரித்தல் வேண்டும். அப்படிக் கொடுக்காது அவனை இகழ்ந்து ஏசினால், அது சிவபெருமானையும், தேவர்களையும், வேதங்களையும், ஆகமங்களையும் இகழ்ந்ததை ஒக்கும். அத்துடன் மீளமுடியாத நரக வாழ்வு கிட்டும்.

சிவநிந்தனை செய்வோர்க்குக் கொடுத்தவனும், அதை வாங்கியவனும் பெரும் பாவத்தை அடைவான். அவ்விருவரும் இரும்புப் படகில் ஏறிப் பயணம் செய்பவராவர். குருடர், தரித்திரர், முடவர், திக்கற்றவர், பாலகர், விருத்தகர், யோகிகள் இவர்களை இகழாது முடிந்தவரை உதவிகள் செய்தல் வேண்டும். தானம் செய்ய விரும்புபவன் சொர்க்க வாசியாவான். அன்புடன் செய்யும் தானமே சிறந்தது. தானம், விரதம், நியமம், யாகம், தியானம், தவம் இவை யாவும் மனமகிழ்வுடன் செய்ய வேண்டியவை. வற்புறுத்தலுக்காகவோ, புண்ணியம் சேரும் என்று நினைத்துச் செய்தால் அது பயன் தராது. சிவத்தலங்கள், புண்ணிய தீர்த்தங்கள், மடங்கள் போன்ற இடங்களில் அற்பமாகத் தானம் செய்தாலும் அது சிவனின் அருளால் எண்ணற்ற பயன்களைத் தரும்" இவ்வாறு சூதமுனிவர் கூறினார்.

பாபவிவரணம்

சூதமுனிவர். சௌனகாதிமுனிவர்களை நோக்கிக் கூறினார்; "முனிவர்களே, மனம், வாக்கு, காயம் ஆகியவ்றறால் செய்யப்படும் பாவங்களைப் பற்றிக் கூறுகிறேன். "தீய நடத்தையுடைய பெண்களை விரும்புதல், பிறரின் பொருளைக் கவர எண்ணல், செய்யத்தகாத செயல்களைச்செய்ய விரும்புதல் ஆகிய நான்கும் மானசீகமான பாவங்களாகும். சம்பந்தமில்லாத பேச்சு, பிரியமில்லாத பேச்சு, பொய் கூறுதல், புறங் கூறுதல் இந்நான்கும் வாசிக பாவங்களாகும். உண்ணத் தகாதவற்றை உண்ணல், உயிர்களைத் துன்புறுத்தல், நிசத்த காரிய சரணம், பிறரின் பொருளை அதிகரித்தல் ஆகிய நான்கும் காயிக பாவங்களாகும். இப் பாவங்கள் பண்ணிரண்டும் மனிதர்களுக்கு நரகத்தை உண்டு பண்ணும். சிவபெருமானத் துதிப்பவர்கள் மகாபாவிகள். சாத்திரங்களையும், ஞானத்தையும் நிந்திப்போர் மகாபாதகர்கள். இவர்கள் நரகத்தை அடைந்து அனுபவிக்கும் துன்பத்தை அளவிட்டுச் சொல்ல முடியாது. சிவனடி- யார்களையும் குருவையும் நிந்திப்போர் அதோகதியை அடைவர். தேவரின் பொருளை அபகரித்தல், வேதியரின் பொருளை அபகரித்தல் ஆகியன மகாபாதங்களாகும். சிவஞானத்தை உணர்த்தும் நூல்களை அவமதித்தல், சிவபெருமானை வணங்குவோரை அவமதித்தல், குரு சந்நிதியையும் அக்கினி சந்நிதியையும் அவமதித்தல், விதிப்படி திருத்தொண்டும், சிவபூசையும் செய்யாதவர்கள், குருபூசை செய்யாதவர்கள் ஆகியோர் மகாவிகளாவர்.

சிவபக்தரை நிந்தனை செய்தல், இவர்களை மதியாமை, தீயவற்றைக் கேட்டல், பேசுதல், பொருளாசையால் செய்யத்தகாதவற்றைச் செய்தல், பரிசுத்தமில்லாத இடத்தில் வேதமோதல், சமயக்கதைகளை கேலி செய்தல், பொய் பேசுதல், பொருளிருந்தும் தானம் செய்யாமை, வீண் கதைகள் பேசுதல், குருவை எதிர்த்துப் பேசுதல், குருபூசை செய்யும்போது அதைக் கேலி செய்தல், தீயவர்களுடன் சேர்ந்து தீய செயல்களைச் செய்தல், குரு, குருவின் பத்தினி ஆகியோரைக் கேலி செய்தல் ஆகியன சிவ நிந்தையாகும். அதனால் சிவ நிந்தை செய்ததற்கான பாவத்தை அடைவர்.

பிரமகத்தி பிடித்தவனும், திருடனும், மது மாமிசம் உண்பவனும், குரு பத்தினி மேல் இச்சைப்பட்டவனும், இவர்களோடு சேர்ந்தவனும் பஞ்சமா பாதகர்களாவர். வேதியனைத் தீய வார்த்தையால் ஏசியவனும், அவனைக் கொடுமைப்படுத்தியவன், பொருள் தருவதாகக் கூறிக் கொடாதவன், இறுமாப்புடன் வாழ்பவன், பிறரை அச்சறுத்துபவன், கோள் சொல்லிக் கெடுப்பவன், பசியால் வருந்தும் பசு, பிராமணன், ஏழை போன்றோருக்கு உணவளியாதவன் ஆகியோர் பிரமகத்தி பிடித்தவர்களாவர். புத்திரனின் மனைவி, நண்பனின் மனைவி, உடன் பிறந்த சகோதரி, புஸ்பதிவதியாகாத பெண், சண்டாளப்பெண் ஆகியவர்களுடன் கூட நினைப்பதும், கூடி மகிழ்வதும் குரு பத்தினியைக் கூடியதற்கான பாவத்தை உண்டுபண்ணும். பதிவிரதைகளைத் தூசித்தல், மூத்தவன் திருமணம் செய்யுமுன் இளையவன் திருமணம் செய்தல் போன்றன பெரும் பாவங்களாகும். நந்தவனத்தை அழித்தல், இழிகுலப் பெண்களை

விரும்புதல், பொய்யான நூல்களைக் கற்றல் ஆகியவற்றைச் செய்வோர் உப பாதகர்கள் எனப்படுவர். யாரின் கண்ணுக்கும் புலப்படாது வஞ்சனையாகப் பாவங்களைச் செய்தால் யமனே அதற்குத் தண்டனை அளிப்பான். அதனால் செய்யப்பட்ட பாவத்திற்குப் பிராயச்சித்தம் செய்தல் வேண்டும். பிராயச்சித்தம் செய்யாதவனது பாவம் எத்தனை பிறவிகள் எடுத்தாலும் நீங்காது தொடர்ந்து வரும். பாவம் செய்பவனும், பாவம் செய்விப்போனும், அதற்கு அனுசரணையாக இருப்பவனும் பாவ பயனை அனுபவிப்பர்" என்றார் சூதமுனிவர்.

பாவிகள் பெறும் தண்டனைகள்

"மாமுனிவர்களே, மேலே சொல்லப்பட்ட நால்வகைப் பாவிகளையும் யம தூதுவர்கள் அடித்துப் பிடித்துக் கட்டிக் கொண்டு போவார்கள். யாராக இருந்தாலும் நல்வினைப் பயனையும், தீவினைப் பயனையும் அனுபவித்தே தீர வேண்டும். சித்தர்களும், புண்ணியவான்களும் கிழக்கு வாசலால் அழைத்துச் செல்லப்படுவர். பாவம் செய்தவர்கள் புதர்கள், முட்கள், கூரிய கற்களும், சேறும் சகதியுமாகவுள்ள தெற்கு வாசலால் யமலோகத்திற்கு அழைத்துச் செல்லப்படுவர். செல்லும் வழி மிக மிக அபாயகரமானது. மலைகளும், தீயும், மாயாயாலம் மிக்கதாகவும் இருக்கும். அத்துடன் பயங்கரமான பாம்புகளும், பூச்சி புழுக்களும் செல்வோரைத் தாக்கும். அப்போது யமதூதுவர்கள் செய்த பாவத்தை அனுபவி அனுபவி என்று சொல்வர். பெரும் துன்பங்களைத் தாங்கிக் கொண்டு யமபுரத்திற்குச் சென்றால் அங்கே இரும்புச் சங்கிலியால் கட்டி, ஆயுதங்களால் கொடுமையாகத் தாக்கி, நெற்றியில் அங்குசத்தால் குத்தி, நெருப்பாற்றுள்ளால் இழுத்து, கனமான இரும்புக் குண்டுகளைத் தூக்கச் செய்து, சவுக்கால் அடித்தடித்துக் கொண்டு செல்வர்.

தான தருமங்களையும், சிவபூசையையும் செய்த புண்ணியர்கள் பெரும் வரவேற்புடன் அழைத்துச் செல்லப்படுவது. வழியில் தேவையான சுவை மிகுந்த உணவுகள் வழங்கப்படும். யமன் வந்து புண்ணியவான்களைத் தரிசித்து அவர்களுக்கு ஏற்ற இருப்பிடங்களை வழங்கி உபசரித்து வாழ்த்திப் பின் திவ்வியமான விமானங்களில் ஏற்றிச் சொர்க்கத்துக்கு அனுப்பி வைப்பார்.

பாவம் செய்தவர்களை யமன் சந்தித்து, "பிறரின் பொருளை அபகரித்தவர்களே, பெண்களை மானபங்கம் செய்தவர்களே, பாவிகளே, நீங்கள் செய்த பாவத்திற்காக தண்டனை தரப்படும்" என்று கூறிவிட்டு தன் தூதர்களாகிய துண்டன், மகாசண்டன் என்பவர்களை அழைத்து, "இவர்களை அழைத்துச் சென்று நரகாக்கினியில் விழுத்திச் பரிசுத்தப்படுத்துங்கள்" என்று கட்டளையிடுவான். அவர்களை யமதூதர்கள் காலைப் பிடித்துத்

தரதரவென்று இழுத்துச் சென்று மேலே தூக்கி பந்துபோல விளையாடிய பின் அவர்கள் பாவ நீக்கம் பெறுவதற்காக நரகத்திற்கு அனுப்புவார்கள்.

முனிவர்களே, இருபத்தெட்டு வகையான நரகங்கள் உண்டு. ஒன்றை விட ஒன்று மாறுபட்டதாகவும், கொடியவையாகவும் இருக்கும். இவை யாதனா சரீதத்துடன் பாவிகள் தங்கள் பாவத்தின் பயனை அனுபவிக்கும் இடங்களாகும். இந்த இருபத்தெட்டு நரகங்களும் இருபத்தெட்டு கோடிகளாகப் பெருகியுள்ளது. இந்த நரகங்களிலே பாவிகள் பதைபதைப்பார்கள். அவர்களது கர்மங்களில் நீங்கும்வரை நானாவிதத் துன்பங்களை அனுபவித்துக் கொண்டு அங்கேயே இருப்பர். தண்டனைகள் கொடுக்கும்போது அவரவர் செய்த பாவங்கள் அவர்களின் நினைவுகளுக்கு வரும். இரும்புச்சங்கிலியால் கட்டி வெப்பப்படுத்தவது. இரும்பாலான ஆயுதங்களைப் பழுக்கக் காய்ச்சி அங்கங்களை வெட்டுதல், பொடிகள் பூசி நெருப்பு மூட்டல், உடலை இரும்புக் கிடாரங்களில் போட்டு நெருப்பிட்டு வறுத்தல், பெருங்குழிகளில் தள்ளி விழுத்துதல், பயங்கரமான மிருகங்களை ஏவிக் கடிப்பித்தல், மீன் பொரிப்பதுபோல பொரித்தல், கொதிக்கும் எண்ணெய்யை உடலில் ஊற்றுதல் போன்ற தண்டனைகள் வழங்கப்படும். விபச்சாரிகளை விரும்பிக் கூடியவர்களுக்கு இரும்பைப் பொடியாக்கி அவற்றைச் சூடாக்கி மேல் முழுவதும் போடுவார்கள். பெற்றோரைத் துன்புறுத்தியவர்களின் கண்களை அக்கினி மயமான ஊசிகளால் குத்துவார்கள். தேவர்கள், குரு, அந்தணர்களுக்குச் சமர்ப்பிக்காமல் உண்டவர்களின் நாக்கை நெருப்பால் சுடுவர். நந்தவனத்தில் மலர்களைத் திருடியவர்களின் தலையில் பழுக்கக் காய்ச்சிய இரும்பு ஊசிகளை ஏற்றுவார்கள்" என்றார் சூதமுனிவர்.

புண்ணியவான்கள் பெறும் பதவிகள்

சூதமுனிவர் நைமிசாரண்ய முனிவர்களுக்குச் சொன்னார்; "புண்ணியம் செய்தவர்கள் இயமபுரத்தை அடைவர். அந்தணர்களுக்கு தானம் செய்தவன். குதிரையில் சென்றடைவான். குடையைத் தானம் செய்தவன் பட்டுக் குடையைப் பிடித்துச்செல்வான். பல்லக்கு தானம் செய்தவன் இரதத்தில் ஏறிச் செல்வான். வீதிகளில் மரங்களை நட்டு வளர்த்தவனும், நந்தவனம் அமைத்தவனும், தோப்புக்களை உண்டாக்கியவனும் புஷ்பக விமானத்தில் சென்றடைவான். பெற்றோரை அன்புடன் பராமரித்தவன் மகிழ்வுடன் இயமவழியைத் தாண்டுவான்.. அன்னதானம் செய்தவன் எல்லாத் தானங்களையும் செய்த பலனை அடைவான். அவன் இந்திரனைப் போலச் சொர்க்கத்தில் வாழ்வான். சிவதீட்சை பெறுவதால் நற்குடியில் பெறும் வாயப்பு உண்டாகும்.

பழங்களைப் புசித்துச் சிவபூசை செய்தால் அரசுரிமை கிடைக்கும். இவைகளை உண்டு சிவபூசை செய்வோருக்கு சுவர்க்கம் கைகூடும். பாலைக் குடித்து சிவபூசை செய்பவர்களுக்கு உயர் பதவி கிடைக்கும். புல்லை உண்டு தவம் செய்தால் இன்பம் கிடைக்கும். காலை, உச்சி, மாலை ஆகியவேளைகளில் ஜெபம் செய்பவனுக்கு இராச்சிய சம்பத்து உண்டாகும். பசுக்களைத் தானம் செய்தவனுக்கு மோட்சம் கிடைக்கும். வெள்ளி, பொன் தானம் செய்தவர் சுவர்க்கத்தை அடைவர். வஸ்திர தானம் செய்பவர்கள் திவ்விய தேகத்தை அடைவர். யாத்திரை செய்வோரைப் பேணியவனுக்கு விசேசமான உணவுகள் கிடைக்கும். பிராணிகளைத் துன்புறுத்துவோரைத் தடுப்பவர்களுக்குச் சுவர்க்கம் கிடைக்கும்" என்றார் சூதமுனிவர்.

புராணம் கேட்பதின் பலன்

"முனிவர்களே, புராணம் படிப்பதனால் என்னென்ன பயன் உண்டாகும் என்று சனத்குமாரமுனிவர் தனது தந்தையான பிரமதேவரைக் கேட்டபோது, பிரமதேவர் சொன்னதை நான் உங்களுக்குச் சொல்கிறேன், என்று சொல்லத் தொடங்கினார். பிரமதேவர் ஒரு சமயம் யமலோகம் சென்றபோது யமதர்மன் என்னை மகிக்க மகிழ்வுடன் வரவேற்றான். அப்போது இருவர் விமானங்களில் அங்கு வந்து இறங்கினர். அவர்களைப் பிரமதேவன் வணங்கி வரவேற்றான். அவர்கள் சென்ற பின் நான் யமதர்மனை, "இவர்கள் யார்?" என்று கேட்டேன்.

"பிரமதேவரே, பூவுலகில் வைதிகம் என்ற நகரத்தை தனபாலன் என்ற அரசன் ஆண்டு வந்தான். ஒருமுறை பார்வதிதேவி தனக்குத் துன்பம் செய்த தனது தோழியைப் பன்னிரண்டு ஆண்டுகள் நரியாகத் திரியும்படி சாபமிட்டாள். அச்சாபம் விதஸ்தா நதிக்கரையில் தீரும் என்றாள். அதன்படி அவள் நரியாக அலைந்து திரிந்து விதஸ்தா நதிக்கரையை அடைந்து அங்கு உணவு கிடையாமையால் உயிர் நீத்து தேவர்களின் விமானத்திலேறிப் பார்வதிதேவியை அடைந்தாள். அதைத் தற்செயலாகக் கண்ட தரா பாலன் அவ்விடத்தில் ஒரு சிவ ஆலயம் அமைத்தான். பின் புராணங்களையும் வேதங்களையும் ஓதுவதுற்கு வேதியர் ஒருவரை நியமித்தான். அவர் ஓதும்போது அந்த நகர மக்களும் ஓதி வந்தனர். அந்த இருவரையும் நான் சென்று விமானத்தில் ஏற்றி வந்தேன். புராணம் ஓதுவதும் அதைக் கேட்பதும் பெரும் பயன்களைத் தரும். அவர்கள் பிரமனின் பதவியை அடைவார்கள். புராணம் ஓதுபானைப் பூசித்தால் பிரமவிஷ்ணுக்களைப் பூசித்த பயன் கிடைக்கும். புராணப் பிரசங்கியை ஒருமுறை திருப்திப்படுத்தினால் பல ஆண்டுகள் நான் திருப்பதியடைவேன். அத்துடன் தேவர்களும் சிவபெருமானும் மகிழ்வர். புண்ணிய காலங்களில் புராணம் செல்வோரும் அதைக் கேட்போரும் புண்ணியவான்கள். இப்போது நீ அவர்கள் இருவரையும் கண்டதால் நீயும் புண்ணியனானாய்" என்று இயமன் கூறினான்.

மகனே, எனக்கு ஐந்து முகங்கள் இருந்தன. அவற்றில் இருந்து தான் புராணங்கள் வெளிப்பட்டன. புராணங்களைக் கேட்போர் விரும்பிய உத்தமமான பதவியை அடைவர். தட்சணை கொடுத்துப் புராணத்தைக் கேட்பவன் பரம்பொருளோடு ஐக்கியமாவான். புராணங்களைச் சொல்லிப் பூசை செய்பவனும் பரம்பொருளோடு ஐக்கியமாவான். விசேட தினங்களில் புராணம் படிப்பதும், கேட்பதும் பெரும் பயனைத் தரும். புராணங்கள், வேதங்களை இலகுபடுத்திக் கூறுவதால் அவை சக்தி மிக்கவை. சிவத்தலத்தில் இருந்து புராணம் கேட்பவன் சிவசாயுச்சியத்தை நிட்சயமாக அடைவான்" என்றார் சூதமுனிவர்.

தானம் செய்தவரின் கதைகள்

சனத்குமார முனிவர் மேலும் சொன்னார்;"வியாச முனிவரே, நல்லவர்களுக்கு மட்டும் தான் தானம் கொடுக்க வேண்டும். பொன், பசு, நிலம் போன்றவற்றைத் தானமாகப் பெறுவோர், கொடுப்பவர்களை புனிதர்களாக்குவதோடு தாமும் புனிதராகின்றனர். இத்தானங்களைச் செய்தோர் எல்லாப் பாவங்களில் இருந்தும் நீங்கியவர்களாவர். முன் சொன்ன மூன்று தானங்களுடன் வித்தியாதானமும் மிகச் சிறந்தது. வித்தியாதானத்தை விட உயர்ந்த தானம் வேறு எதுவும் இல்லை.

எருது, பசு, குடை, பாதுகை, நீர், அன்னம் போன்றவற்றைத் தானம் செய்தால் யாகம் செய்த பயன் கிடைக்கும். செத்தவனின் படுக்கை, மான்தோல், சண்டாளனது பொருள், மிலேச்சனது பொருள், உபயகோமுகி, தராசில் ஏறிய பொருள், குருசேத்திரத்தில் பெறும் தானம், எள், பதியின் கைப்பொருள் இவை கெட்ட தானங்களாகும். இவற்றில் ஒன்றை வாங்கினாலும் வாங்குபவன் நரகத்தை அடைவான்.

பொன், வெள்ளைஎள், யானை, கன்னிகை, பணிமகள், வீடு, இரதம், குதிரை, பூமி, காராம்பசு இவற்றைக் கொடுப்போனும் வாங்குவோனும் பரிசுத்தனாவான். அதனால் அவனது இருபத்தொரு தலைமுறையினரின் பாவம் நீங்கும். தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் பொன்னே பிரியமானது. அதனால் பொன்னைத் தானம் செய்பவன் தேவர்களுக்கு பிரியமானவனாவான். அத்துடன் யாகம் செய்த பயனையும் அடைவான். அவனை அப்சரஸ் மங்கையர் விரும்பி ஏற்பர்.

முன்பு சித்திராதன் என்ற அரசன் இருந்தான். அவன் மண்ணுலக அரசர்களையும், விண்ணுலக அரசர்களையும் வென்று பெரும் செல்வத்தைச் சேர்த்தான். அவனுக்கு எந்தக் குறையும் இருக்கவில்லை. இப்பெருஞ்செல்வம் எப்படி வந்தது என்று யோசித்த அவன் வசிட்ட முனிவரிடம் சென்று அவரை வணங்கி, "சுவாமி என்னிடம் குபேரனிடமுள்ளளவு பொருட்கள் உண்டு. நினைத்தவுடன் நினைத்தவையெல்லாம் கிடைக்கின்றன. இது எதனால் என்று எனக்குக் கூறுதல் வேண்டும்" என்றான்.

“சித்திராதரா, நீ முற்பிறவியில் தாழ்ந்த குலத்தில் பிறந்திருந்தாய். நெடுங்காலமாக மழை பெய்யாததால் மக்கள் பசியால் வருந்தினர். நீயும் உனது மனைவியும் காட்டுக்குச் சென்று அங்குள்ள கனிகளை உண்டு வாழ்ந்தீர்கள், அப்போது நீ காட்டில் உள்ள மரங்களை வெட்டி விற்று வந்தாய். ஒரு நாள் நீ விற்கக் கொண்டு சென்ற விறகு விற்பனையாகவில்லை. அன்று மாசி மாதப் பூரணையும் இராகு கிரஸ்த சந்திரகிரகணமுமாக இருந்தது. அதனால் வேதியர்கள் ஒரு வைசிகனது வீட்டில் ஓமம் செய்து கொண்டிருந்தனர். அப்போது உனது விறகை வேதியர்கள் வாங்கி ஓம குண்டத்தில் இட்டனர்.

ஓமம் முடிய அந்த வைசிகன் நூறு பொன்னை வேதியர்களுக்கு தானமாகக் கொடுத்தான். அதைக் கண்ட நீ அந்த வேதியருக்கு என்னிடம் பொன்னிருந்தால் கொடுத்திருப்பேன் என்று நினைத்தாய். அதனால் தான் இப்பிறவியில் உனக்குப் பொருள் சேர்கிறது. இப்போது நீ பூதானம் (நிலம்) செய்து கொண்டிருக்கிறாய். தொடர்ந்து செய். அதனால் நீ இந்திரப்பதவியை அடைவாய்” என்று கூறினார்.

“முன்னொரு காலத்திலே தேவர், மனிதர், அரக்கர் எல்லோரையும் வென்று உலகம் முழுவதையும் ஆண்டவன் பிருது என்ற மன்னன். அவனிடம் எல்லாப் பொருட்களும் குவிந்து கிடந்தன. அதனால் தனது ஆட்சிக்குட்பட்டவர்களுக்குப் பொருட்களை அள்ளிக் கொடுத்தான். அதைக் கண்டு வியப்புற்ற அவனது மனைவி இவ்வளவு புகழும், கீர்த்தியும். பொருட்களும் எப்படி எனது கணவருக்குக் கிடைத்தன என்று எண்ணி அச்சபையில் உள்ள வேதியரைச் சந்தித்து கேட்டாள். அவர் இதற்கு விடையளிக்கக் கூடியவர் மரீசி முனிவர் என்று கூறி அரசனையும் அரசியையும் மரீசி முனிவரிடம் அழைத்துச் சென்று அரசி கேட்டவற்றையும் கூறினார்.

மரீசி முனிவர்; “சக்கரவர்த்தியே, நீ பூர்வஜென்மத்தில் உனது மனைவியுடன் கூடிச் செய்த புண்ணியங்களேயாகும். நீ முற்பிறப்பில் சீவன்களைத் துன்புறுத்தும் ஒரு சூத்திரனாக வாழ்ந்தாய். உனது மனைவி பதிவிரதை. நீ வறுமை காரணமாக உனது மனைவியை விட்டுப் பிரிந்து சென்றபோதும் அவள் உன் மீது பெரும் பக்தி கொண்டு உன்னைக் கண்டு பணிவிடை செய்து வந்தாள். அப்போது அவ்வூர் அரசன் விஷ்ணுவுக்கு ஒரு கோவில் கட்டினான். அதைப் பொன்னால் அழகுபடுத்தினான். நீயும் உனது மனைவியும் அக்கோவிலை இரசித்து மகிழ்ந்ததோடு அங்கேயே தங்கித் தொண்டு செய்து வந்தீர்கள். அதனால் பாவம் அழிந்தது. பொன்னால் செய்த பசுவைத் தானமாகக் கொடுத்த பயன் உங்களை வந்தடைந்தது. அதனால் தான் இவ்வளவும் கிடைத்தது. இப்போது பல வகையான தானங்கள் செய்து வருகிறாய். அதைத் தொடர்ந்து செய். முக்கியமாக நிலத்தைத் தானம் செய். எவன் நிலத்தைத் தானமாகக் கொடுக்கிறானோ, அவன் தனது முழுப் பிதிர்களையும், இனிமேல் பிறந்து இறந்து பிதிர்களாவோனையும் சுவர்க்கத்திற்கு அழைத்துச் செல்வான். அறம், பொருள், இன்பம், வீடு என்பன நிலத்தை தானம் செய்பவனை வந்து சேரும். நிலத்தை தானம் செய்ய

வேண்டும் என்று நினைப்பவனும் சொர்க்கத்தை அடைவான்" என்று பிரமதேவரின் புத்திரராகிய மரீசி முனிவர் சொன்னார்.

சதுர்த்தி விரத மகிமை

சனத்குமார முனிவரிடம் வியாச முனிவர் கேட்டார், "எல்லா விரதங்களையும் அனுட்டித்து எல்லாத் தானங்களையும் செய்த பயனைத் தரத்தக்க ஒரு விரதத்தைச் சொல்லுங்கள்"

"வியாசரே, சிவபெருமானை முறைப்படி ஒரு தரம் ஆராதித்து அவருடைய அருளைப் பெறலாம். எல்லா விரதப் பயன்களையும் சுக்கிலபட்சச் சதுர்த்தியன்று சிவார்ச்சனை செய்வதன் மூலம் பெறலாம். வியாசரே, யம்புத்தீவில் ஒரு மாமன்னன் இருந்தான். அவன் மாவீரன். தான தர்மம் செய்வதில் வல்லவன். ஏழைகளுக்கு உதவுபவன். பெரும்படைகளை உடையவன். அவனுக்கு ஒரு மகன் இருந்தான். தந்தையைப் போல அவன் பலசாலியாக இருந்தாலும் தானம் செய்வதில்லை. அதனால் துயரமடைந்த பிராமணர்கள் அவனிடம் சென்று, "உங்கள் தந்தை தினமும் தானம் செய்ததால் நாமும் ஏழைகளும் உணவைத் தாராளமாக உண்டு வாழ்ந்தோம். இப்போ நீங்கள் தானம் செய்யாமையால் நாடும் ஏழைகளும் துன்பப்படுகிறோம்" என்றனர்.

அதற்கு மன்னன் சொன்னான்; "வேதியர்களே, தானம் செய்பவன் சுவர்க்கத்தில் சகல யோகங்களையும் அனுபவித்துக் கொண்டு இன்பமாக இருப்பதாகச் சொல்கிறீர்கள். அதனால் எனது தந்தை எப்படி இருக்கிறாரென்று அறிந்து சொல்லுங்கள்" என்றான்.

அதனால் வேதியர்கள் குழம்பிப் போனார்கள். அவர்களால் மன்னன் கூறியவற்றை அறிய முடியவில்லை. அதனால் மன்னன் உதவிகள் செய்யவில்லை. அதனால் அவர்கள் யாகங்களையும், பூசைகளையும் செய்யவில்லை. அதனால் மழை பெய்யவில்லை. மக்கள் துன்பப்பட்டனர். அதைக் கண்ட சூரியன் அதைப் பற்றி அறிந்து கொள்வதற்காக ஒரு கிழப் பிராமண வேடமெடுத்துப் பூலோகத்திற்கு வந்து வேதியர்களிடம் சென்று, "நீங்கள் ஏன் மிகுந்த துன்பத்துடன் காணப்படுகறீர்கள் ஏன் பூசைகளையும், யாகங்களையும் கைவிட்டீர்கள். பயன் கருதிச் செய்யும் பூசைகளோ, யாகங்களோ சித்திக்காதென்று உங்களுக்குத் தெரியாதா? தானம் செய்யாத அரசன் உயிரில்லாதவன் என்று நினைத்துத் தவம் செய்யும் அந்தணன் மிகவும் சிறந்த பயனைப் பெறுவான். அவனுக்கு எல்லாப் பேறுகளும் கிடைக்கும்" என்றான்.

அதைக் கேட்ட வேதியர்கள் சூரிய பகவானை வணங்கினார்கள். பின் தானம் பெற்று தவம் செய்யும் முனிவன் ஒருவனைத் தேடியலைந்தனர். இறுதியில் பார்கவ முனிவரைக் கண்டு அவரை வணங்கினார்கள். பின் அரசன் தமக்கிட்ட கட்டளையைச்

சொன்னார்கள். பார்கவமுனிவர் அவ்வேதியர்களுக்குண்டான துன்பத்தை நீக்கக் கருதி அந்த மன்னனின் தந்தை இருக்குமிடத்தை நோக்கிப் புறப்பட்டார்.

சூரிய பகவான் வேதியரின் வடிவத்தில் முனிவருக்கு வழிகாட்ட முன்னே சென்றார். அப்போது ஒரு வேதியன் தன் கையில் பெரியதொரு தண்டத்தைத் தாங்கி, "நான் முன்பு உனக்குக் கொடுத்தவற்றை இப்போது கொடுத்துவிட்டுப் போ" என்றான்.

"நீ யார்? எனக்கு எப்போது என்ன கொடுத்தாய் என்று சொல்" என்றார் பார்கவமுனிவர்.

"நான் முற்பிறப்பில் உனக்கு ஒரு புராணம் உபதேசித்தேன். அதற்குத் தட்சணையாக நீ எதையும் கொடுக்கவில்லை. நான் கேட்டதற்கு நீ எதுவும் கொடுக்கவில்லை. நான் கேட்டதற்கு நீ வீட்டுக்குச் சென்று எடுத்து வருகிறேன் என்று கூறிச் சென்றாய். ஆனால் திரும்பி வரவில்லை" என்றபோது பார்கவமுனிவர், "இப்போது என்னிடம் எதுவும் இல்லை; திரும்பி வரும்போது தருகிறேன்" என்றார்.

"அதற்கு நான் சம்மதிக்கமாட்டேன். உன்னிடம் எதுவும் இல்லையானால் நீ செய்த புண்ணியத்தில் பாதியைக்கொடு" என்றபோது பார்கவமுனிவர் அதற்கு மறுத்தார்.

அவர்களின் உரையாடலைக் கேட்ட பிராமண வடிவில் இருந்த சூரிய பகவான் அவர்களுக்கு அருகில் வந்து, "முனிவரே பாதியைக் கொடுக்க வேண்டாம். அதின் ஒரு பகுதியைக் கொடும்" என்றார். அதற்கு இருவரும் சம்மதித்தனர். அதைக் கொடுத்துவிட்டு அப்பாற் சென்றபோது ஒரு யாதவன் அவரைத் தடுத்து, "நான் முற்பிறப்பில் உனது பசுக்களை மேய்த்தேன். நீ அதற்கு கூலி தருவதாகச் சொன்னாய். ஆனால் தரவில்லை. இப்போது தந்துவிட்டுப்போ: என்றான். அதனால் கவலைப்பட்ட பார்கவர் தான் செய்த புண்ணியத்தில் ஆறில் ஒரு பங்கைக் கொடுத்து விட்டுச் சென்றார். அதன்பின் துணிவிற்கும் வியாபாரி அவரை மறித்து, "நீ உடைகள் வாங்கிவிட்டு எனக்குப் பணம் தரவில்லை. அதைத் தந்து விட்டுப் போ" என்றார். அதனால் கவலைப்பட்ட பார்கவர் மிச்சமாக இருந்த புண்ணியத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றபோது அவரால் நடக்க முடியவில்லை. அதனால் சூரியன் அவரின் கையைப் பிடித்துக் கொண்டு அந்த மன்னனின் தந்தை இருந்த இடத்திற்குச் சென்றார். அப்போது அந்த அரசனை யமகிங்கரர்கள் ஒரு பாணையிலிட்டு அவித்துக் கொண்டிருந்தனர். அதைக் கண்டு, "புண்ணியவானான அரசனுக்கு ஏன் இந்தக் கொடிய தண்டனை வழங்கப்படுகிறது என்று நினைத்தார்".

அதை உணர்ந்த அந்த அரசன் சொன்னார்;"வேதியரே, நான் தான தர்மங்கள் யாவற்றையும் செய்த பின்பு அநியாயமாக மக்களை வருந்திப் பொருள் சேர்த்தேன். அதனால்

தான் எனக்கு இத்தண்டனை வழங்கப்படுகிறது. தயவு செய்து இதை எனது மகனுக்குக் கூறுங்கள். நான் புண்ணியவானவதற்கான விரதங்களை அனுட்டிக்கச் சொல்லுங்கள்" என்றான்.

அதன்பின் பார்கவ முனிவர் வேதியர்களுடன் அம்மன்னனின் புத்திரனைச் சந்தித்துச் சொன்னார்; "மன்னா, உனது தந்தை நரகலோகத்தில் பெரும் துன்பங்களை அனுபவிக்கிறார். அது தீரவேண்டுமானால் நீ சித்திரை மாதத்தில் பூர்வ பட்சத்தில் அல்லது அபரபட்சத்தில் வரும் சதுர்த்தசியில் உபவாசமிருந்து சிவபெருமானைக் குறித்துக் கோ தானம் செய்து, தீப தானமும் செய்தல் வேண்டும். அப்படிச் செய்பவன் எல்லாப் பாவங்களையும் அழித்து சுவர்க்க பதவியை அடைவான்" என்றார்.

பார்கவர் சொன்னதும் மன்னனின் மகன் உடனே புறப்பட்டுச் சென்று அருகில் உள்ள புண்ணியத்தலம் ஒன்றில் தடாகம் அமைத்து கோதானமும் பூமி தானமும் செய்து பார்கவி சொன்னபடி விரதமிருந்து சிவபெருமானைப் பூசித்தான். அதன்பின் அதன் பயனாக அவனும் அவனது தந்தையும் பிதிர்களாக இருந்த உறவினர்களும் மோட்சத்தை அடைந்தனர்.

முன்பு குமுதன் என்ற அரசன் இந்த விரதத்தை அனுட்டித்து தனது பாவங்களை ஒழித்துச் சுவர்க்கத்தை அடைந்தான். அதனால் இந்த விரதத்தை அனுட்டிப்பவன் அடையும் புண்ணியத்தைக் கணக்கிட்டுச் சொல்ல முடியாது. மன அடக்கத்துடன் சிவபெருமானின் ஆயிரம் நாமங்களைச் சொல்லி கொண்டிருப்பவன் சிவலோகத்தை அடைவான்" என்றார் சனத்குமாரமுனிவர்.

பரசுராமரின் கதை

சனத்குமாரமுனிவர் வியாசரை நோக்கி, "தவஞானியே பரசுராமருக்கு இவ்விரத மகிமையைச் சிவபெருமான் உபதேசித்த வரலாற்றைக் கூறுங்கள்" என்று கேட்டார்.

முன்பொரு காலத்தில் குசிகன் என்றோர் அரசன் இருந்தான். அவன் கடுந் தவம் செய்து இந்திரனைத் தனது புதல்வனாகப் பெற்றான். அவனுக்குக் காதி என்ற பெயரை வைத்தான். காதிக்கு சத்தியவதி என்றொரு மகள் பிறந்தாள். அவளை ரிசபமுனிவர் திருமணம் செய்தார்.

ரிசபமுனிவர் ஒரு யாகம் செய்து இரண்டு கருக்களைப் பெற்றார். இரண்டையும் தனது மனைவியிடம் கொடுத்து உனது தாயின் கர்ப்பத்தில் இருந்து யாராலும் வெல்லமுடியாத ஒரு சத்திரியன் பிறப்பான். அதற்காக இதை உன் தாயிடம் கொடு. இதை நீ உண். உனக்கு என்னைப் போன்ற சிறந்த பிராமணன் பிறப்பான்: என்று கூறிக் கொடுத்தார். தாய் தானுண்ண வேண்டியதை மகளுக்கும், மகள் உண்ண வேண்டியதை தானும் உண்டாள். அதனால் சத்தியவதி சத்திரிய குலத்தைச் சேர்ந்த குரூரமான ஒரு புத்திரனைக் கருவில்

சுமந்தாள். இதை தனது ஞான திருஷ்டியால் அறிந்த முனிவர் தனது மனைவிக்குச் சொன்னார்; "பெண்ணே நீ உன் தாயால் வஞ்சிக்கப்பட்டு விட்டாய். மகாதபசியாக உனக்கு ஒரு தம்பி பிறக்கப் போகிறான். அவன் தனது வேதியத்தால் உலகப் புகழ் பெறுவான்" என்று சொன்னார்.

அதைக் கேட்டுத் துக்கமடைந்த சத்தியவதி , "புதிது புதிதாக உலகத்தைப் படைக்கவல்ல நீங்கள் எனக்கு ஒழுக்கமான பிள்ளை பிறக்க அருள வேண்டும்" என்றாள்.

"சத்தியவதி, அது என்னால் முடியாத காரியம். நான் உச்சரித்த மந்திரம் வலிமையானது. அதை மாற்ற முடியாது" என்றார். அதைக் கேட்ட சத்தியவதி,"மாற்ற முடியாவிட்டால் எமக்குப் பிறக்கும் பேரனோ அல்லது பௌத்திரனோ ஒழுக்கமுள்ள வல்லவனாக பிறக்க அருளுங்கள்" என்றாள். அதை ரிஷிக முனிவர் ஏற்றுக் கொண்டார்.

அதனால் அவர்களுக்குப் பௌத்திரனாக யமதக்கினி முனிவருக்குப் பரசுராமர் பிறந்தார். அவளது தாய்க்கு தவத்தில் மேம்பட்ட விசுவாமித்திரர் பிறந்தார். பரசுராமர் மிக்க பராக்கிரமசாலி. வில்வித்தையில் அவரை யாராலும் வெல்ல முடியாது. இருந்தும் அவர் சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்து கொண்டிருந்தார். அவர் வாழுங்காலத்தில் கார்த்தவீரியார்ச்சுனன் என்னும் அசுரன் இருந்து முனிவர்களுக்குக் கொடுமைகள் பலவும் செய்து கொண்டிருந்தான். அதனால் கோபங் கொண்ட ஆபஸ்தம்ப முனிவர், "நீ விரைவில் பரசுராமனால் கொல்லப்படுவாய்" என்று சபித்தார்.

அதன்பின் அவன் யமதன்கனி முனிவரின் ஆச்சிரமத்திற்குச் சென்று அவரிடம் நின்ற காமதேனு என்னும் பசுவைக் கேட்டான். அவர் கொடுக்க மறுத்ததால் அவன் கோபங் கொண்டு போர் செய்தான். அதைக் கண்ட பரசுராமர் அவனுடன் உக்கிரமாகப் போர் செய்து அவனது ஆயிரம் கைகளையும் துண்டித்தார். அப்போது யமதக்கினி முனிவர் மகேந்திரபுரியில் தவம் செய்து கொண்டிருந்தார். அதை அறிந்த கார்த்தவீரியார்சுனனின் புத்திரர்கள் அங்கு சென்று யமதக்கினி முனிவரைக் கொன்றார்கள். அதை அறிந்த பரசுராமர் கார்த்தவீரியார்சுனனின் பிள்ளைகளையும், அவர்களது வாரிசுகளையும் கொன்றார். இவ்வாறு சத்திரிய வம்சத்தினரின் இருபத்தொரு தலைமுறையினரைப் பரசுராமர் கொன்றார். சில சத்திரியப் பெண்கள் பிராமணரின் கிருபையால் தமது பிள்ளைகளைக் காப்பாற்றினார்கள். அதன்பின் தான் செய்த பாவம் தீரப் பசுக்களையும், குதிரைகளையும் தானமாகக் கொடுத்தார். பின் அஸ்வமேத யாகம் செய்தார். அதனாலும் அப் பாவம் தீராமையால் சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்தார். அவரின் கடுந்தவத்தால் மகிழ்ந்த சிவபெருமான் அவர் முன் தோன்றினார். அவரை வணங்கிய பரசுராமர், "நான் செய்த பாவம் எவ்வாறு நீங்கும்" என்று கேட்டார். சிவபெருமான் அவரை நோக்கித் துலாபுருஷதானம் செய்யும்படி கூறினார். அதன்படி பரசுராமர் துலாபுருஷதானம் செய்தார். இத்தானத்தை தொடர்ந்து பாவம் செய்தவன், பலரைச் சிறையில் அடைத்தவனும், பலரைக் கொன்றவனும், பிறன் மனைவியோடு உறவு

வைத்தவனும், மது அருந்துபவனும், மாமிசம் உண்டவனும், குரு பத்தினியைக் கூடியவனும், குழந்தைகளை வதைத்தவனும், யாகம் செய்ய அருகதையில்லாதவனும் செய்த பாவத்தைப் போக்கலாம். இதைச் செய்ய ஒரு உபவாசம் இருத்தல் வேண்டும்.

இத்தானத்தைச் செய்பவன் முதலில் இந்திரன், வருணன், வாயு, நிருதி, புதன், அக்கினி முதலிய தேவர்களுக்கு கோமம் செய்தல் வேண்டும். கிரக தேவதைக்கு இஷ்ட தேவதைக்கும் ஓமம் செய்தல் வேண்டும். இவ்வாறு கோமம் செய்து இரண்டு யக்ஞ தம்பங்களை நிறுவி அதில் கணபதியையும், கந்தனையும் ஆவாணம் செய்து தூபதீபம் காட்டி அனுக்கிரகத்தைப் பெற்ற பின்பு சிவபெருமானை உரிய முறைப்படி வணங்க வேண்டும். இவ்வாறு பரசுராமர் துலாபுருசதானம் செய்பவன் தராசில் ஒரு பக்கத்தில் ஏறி இருப்பான். அவளது நிறைக்குச் சமமான பொன்னைத் தராசில் வைத்தல் வேண்டும் பொன்னை வைக்க முடியாதவர்கள் வெள்ளியை வைக்கலாம். அதனால் அவன் செய்த பாவம் தீரும்" என்று சனத்குமாரமுனிவர் வியாசருக்குக் கூறினார்.

பாதாளலோக வர்ணனை

வியாசர், சனத்குமாரமுனிவரை நோக்கி, "எந்தத் தானத்தைச் செய்தால் சகல தானங்களையும் செய்த பலன் கிடைக்கும்" என்று கேட்டார்.

"எல்லாத் தானங்களையும் செய்தபயனை அடையக்கூடிய தானம் பிரமாண்ட தானமாகும். அதைச் செய்வதால் நினைத்தவை யாவும் கிடைக்கும். சிவபெருமானே, சகல அண்டங்களையும், படைத்துக் காத்து அழிக்கும் ஆற்றலுடையவன் என்று தனது ஞானத்தால் உணர்ந்து, பற்றற்று யாவும் சிவன் செயலென உணர்ந்து சிவபெருமான் மீது மனதைப் பதியவைத்திருத்தல் பிரமாண்டதானம் எனப்படும். அந்தப் பிரமாண்டம் உருவானது எப்படியென்று கூறுகிறேன். சிவபெருமானிடமிருந்து ஆகாயம் உண்டானது. ஆகாயத்திலிருந்து வாயுவும், வாயுவில் இருந்து அக்கினியும், அக்கினியில் இருந்து நீரும், நீரிலிருந்து நிலமும் தோன்றின. பிரமாண்டத்துக்குள் பாதாள லோகங்கள் ஏழு. இவைக்கு ஆதாரமாக இருப்பவனாக ஆதிசேடன் விளங்குகிறான்.

பாதாள லோகங்கள் ஏழும் தனித்தனியாகப் பதினாயிரம் போசனை பரப்பும், இருபதாயிரம் போசனை உயரமும் உடையன. அதன் பூமி இரத்தினத்தாலானது. இரத்தினங்களால்தான் உப்பரிகைகள் உருவாக்கப்பட்டுள்ளன. பூமியில் தங்கம் விளைகிறது. அங்கு தைத்திரியர்களும், நாகராசாக்களும், இராட்சதர்களும் வசிக்கின்றனர். இரத்தினங்கள் நிறைந்த பாதாளலோகம் ஆனந்தத்தை அளவின்றி ஏற்படுத்தும். தேவதாவைக் கன்னிகளால் உண்டாகும் மோகத்தை விடுத்த விரக்தனுக்கும் பாதாள லோகத்தில் விருப்பம் உண்டாகத் தடை இராது. அங்கு சூரிய சந்திரர்களின் ஒளி கிடையாது. குளிரும் வெப்பமும் இல்லை.

இரத்தினங்களின் ஒளிமட்டும் உண்டு. அங்கு தேவாமிர்தத்திற்கு ஒப்பான உணவுகளும், பானவகைகளும் உண்டு. அழகான பூக்களும், அப்பூக்களில் தேனுண்ணும் பொன்வண்டுகளும் உண்டு. வைரத்தைப் போன்ற மரங்களும், அவற்றின் தளிர்களை உண்டு மகிழும் குயில்களின் இனிய ஓசையும், எப்போதும் கேட்கும். அமிர்தம் போன்ற நீரைத்தரும் ஆறுகளும், பல்வேறு விலையுயர்ந்த மணிவகைகளைக் கொண்ட மலைகளும், சுகந்தமான வாசனை வீசும், மலர்களும், சந்தண மரங்களும் உண்டு. நாகமங்கையர் எவ்வேளையிலும், இனிய இசைக் கருவிகளை மீட்டிக்கொண்டிருப்பர். பாதாள உலகவாசிகள் எப்போதும் இன்பமாக இருப்பதால் அவர்களுக்குக் காலம் கழிவது தெரியாது" என்றார் சனத்குமாரர்.

நரகலோக வர்ணனை

"வியாசரே, பாதாள லோகத்திற்கு மேலேயுள்ள நரகலோகத்தைப் பற்றிக் கூறுகிறேன். பொய்ச்சாட்சி சொன்னவன் ரௌரவம் என்னும் நரகத்தை அடைவான். பிறரின் பொருளை அபகரித்தவனும், பிரமகத்தி பிடித்தவனும் அவர்களுடன் சேர்ந்தவனும் சூரகம் என்னும் நரகத்தை அடைவர். குருவைக் கொன்றவனும், தாய், சகோதரியைக் கூடியவன் தத்தகும்பம் என்னும் நரகத்தை அடைவர். பதிவிரதையைப் பலவந்தமாகக் கூடியவனும், தனது மனைவியைப் பிற ஆடவனோடு சேரவிட்டவனும் தப்தலோகம் என்ற நரகத்தை அடைவர். ஆசிரியனையும், பெற்றோரையும் வருத்தியவனும், தெய்வ நிந்தனை செய்தவனும், சேரத் தகாத பெண்ணைச் சேர்ந்தவனும் தப்தகலம் என்ற நரகத்தை அடைவர். இங்கு இவர்கள் கொடுமையாகத் தண்டிக்கப்படுவர்.

நரக உலகங்கள் அநேகம் உள்ளன. அவர்கள் எல்லோரும் தலைகீழாகத் தொங்குவர். நரகத்தில் தண்டனைகளை அனுபவித்த பின்பு மரம், பறவை, மிருகங்களாகப் பிறப்பர். ஒழுக்கமாக வாழ்ந்தோர் சுவர்க்கத்தில் இன்பமாக இருந்து பின் முத்தியடைவர். தாம் செய்த பாவங்களுக்கான பரிகாரங்களைச் செய்யாதவர்களே நரகலோகத்திற்குச் செல்வர். பரிகாரம் செய்ய முடியாதவர்கள் சிவனை வணங்கிச் சிவபூசை செய்தால் பாவம் படிப்படியாக அழியும். இனி அதற்கு மேலுள்ள பூவுலகைப் பற்றிச் சொல்கிறேன்" என்றார் சநத்குமாரர்.

பூமண்டல வர்ணனை

"வியாசரே, பூமண்டலம் ஏழுசமுத்திரங்களால் சூழப்பட்டுள்ளது. யம்புத்தீவின் மத்தியில் பொன்மயமான பேருமலை உள்ளது. அது பூமியான தாமரை மலருக்கு ஒரு மொட்டுப் போன்றது.

இமர்சலம், கேமகூடம், நிசதம் என்ற மலைகள் மேருவின் தென்திசையிலும், நீலம், ஸ்வேதம், சிருங்கி என்ற மலைகள் மேருவின் வடதிசையிலும் உண்டு. மேருவின் தெற்கே பாரதம், கிம்புருசம், கரிவர்சம் என்னும் மூன்று நாடுகள் உண்டு. வடக்கே ரம்யகம், கிரன்மயம், உத்தரகுழு என்னும் மூன்று நாடுகள் உண்டு. மேருமலையின் கிழக்கே மந்திரமும், தெற்கே கந்தமாதனமும், மேற்கில் விபுலமும், வடக்கில் சுபார்ஸ்வமும் ஆக நான்கு மலைகள் நான்கு புறங்களிலும் உள்ளன.

இம்மலைகளுள் மந்திரகிரியில் கடம்பமரமும், கத்தமானகிரியில் யம்பு மரமும், சுபார்சுவகிரியில் ஆலமரமும் உள்ளன. அங்குள்ள மண் பொன்னிறமானது.

சீதை என்னும் நதி கிழக்கிலும், அலகநந்தா நதி தெற்கிலும், சுகசாக என்னும் நதி மேற்கிலும், பத்திரா நதி வடக்கிலும் உருவாகிக் கடலை அடைக்கின்றன. அங்கு சைலத்து ரோணி என்ற ஓர் ஓடையுண்டு. அதனைச் சுற்றி மலர்கள் மலர்ந்துள்ளன. அயலில் நந்தவனங்களும், காடுகளும் உண்டு. அக்காடுகளில் யக்சர்களும், கின்னர்களும், காந்தர்வர்களும் விளையாடிக் கொண்டிருப்பர். இதற்குப் பூலோகசுவர்க்கம் என்ற பெயருண்டு. தர்மம் செய்தோர் அந்த லோகத்தில் சுகத்தை அனுபவிப்பர். இவர்களுக்குக் கோபம், துக்கம், அயர்வு, துவேசம், பசி, தாகம், பயம், சோம்பல் முதலியன கிடையாது. கிருதம், திரேதம் என்ற நதி பாய்வதால் அங்கு மழை பெய்வதில்லை. அங்குள்ளவர்கள் விளையாடிப் பொழுதைப் போக்குவர்.

பாரத வர்சம்

“வியாசரே, இனி இமயமலையின் தென்பாகத்திலுள்ள பாரத தேசத்தைப் பற்றிக் கூறுகிறேன். இது ஒன்பதாயிரம் போசனை பரப்புடையது. இதற்கு கர்மபூமி என்றொரு பெயர் உண்டு. இங்கு புண்ணியம் செய்தவர்கள் தேவலோகத்தையும், பாவம் செய்தவர்கள் நரகலோகத்தையும் அடைவர். ஞானிகள் மோட்சமடைவர். இது ஒன்பது கண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் ஒன்பதாவது பிரிவே பாரத நாடாகும். பாரதநாடு நான்கு சமுத்திரங்களால் சூழப்பட்டுள்ளது. பாரத தேசத்தின் கிழக்கே திராதர்களும், மேற்கே யவனர்களும், தெற்கில் ஆந்திரர்களும், வடக்கில் துருஷ்கரும் வசிக்கின்றனர். இக்கண்டத்தின் நடுவில் பிராமணரும், சத்திரியரும், வைசிகரும், சூத்திரர்களும் வசிக்கின்றனர். இவர்கள் அஸ்வமேதயாகங்கள் செய்தும், புண்ணிய தீர்த்தங்களில் நீராடியும், சிவலிங்கப் பிரதிட்டை செய்தும், கோதானம் புரிந்தும் நற்கதியடைகின்றனர்.

இங்கு ஏழுமலைகளும், நான்கு நதிகளும் உண்டு. விந்தியமலையில் இருந்து பாயும் நதிகளில் மூழ்கி நீராடுவோரின் பாவங்கள் போக்கப்படுகின்றன. புண்ணியம் செய்தவர்களே இங்கு பிறப்பெடுக்கின்றனர்.

அங்கு வாழ்பவர்கள் தர்மவான்கள். அவர்கள் சூரியனை வழிபடுவார்கள். அவர்கள் பேதமின்றி சத்தியவான்களாக பொன்மயமான அலங்காரத்துடன் வாழ்வார்கள். அங்கு பிரமதேவர் எழுந்தருளியிருக்கிறார். இவர்கள் அறுசுவையான உணவு வகைகளை உண்பார்கள்" என்றார் சநத்குமார முனிவர்.

சத்திரிய தர்மம்

வியாச முனிவர் சநத்குமார முனிவரை நோக்கி, "சுவாமி, பிரமதேவரின் முகத்திலிருந்தும், தோள்களில் இருந்தும், தொடையில் இருந்தும், பாதத்தில் இருந்தும் தோன்றிய பிராமணர்களும், சத்திரியர்களும், வைசிகரும், சூத்திரருமே நான்கு வர்ணத்தவராக இருக்கின்றனர். அவர்களுள் உயர்குலத்தோர், இழி குலத்தவராகவும், இழி குலத்தோர், உயர் குலத்தவராகவும் மாறுவதற்கு காரணம் என்ன?" என்று கேட்டார்.

"வியாசரே, உயர்ந்த பிறவிகளை அடைந்தவர்கள் அந்தக் குலத்துக்குரிய விதிமுறைகளைப் பேணாமையினால் தாழ்வடைகின்றனர். அந்தணன் சத்திரியப் பெண்ணை மணந்தால் அவனது பிராமணத்துவம் நீங்கிச் சத்திரியனாகி விடுவான். இவ்வாறு வர்ணங்கள் மாறித் திருமணம் செய்வதால் பல சாதிகள் உண்டாகின்றன.

அந்தணன் மாமிச வகையை உண்டால் சத்திரியனாகி விடுவான். சூத்திரன் நல்ல செயல்களைச் செய்தானேயானால் அவன் வைசிகளாவான். பிராமணன் தன் குல விதிமுறைகளைப் பேணாது போனால் அவனது குலப் பெருமை இழுக்கடையும்.

"யாகத்தின்போது பெரும் பொருள் கொடுப்பதால் வருகின்ற பயனை விட யுத்தகளத்தில் உயிரை விட்டவன் பெறும் பயன் மேலானது. போரில் வெற்றியடையும் அரசனுக்கு அறம், பொருள, இன்பம் ஆகிய மூன்றும் கைகூடும். மேலும் யாகம் செய்த பலன் அவனை வந்து சேரும். அவன் விஷ்ணுவின் பதவியை அடைவான். அவனது உடலை மிருகங்கள் உண்டால் பெரும் பதவியை அடையும்.

"வியாசரே, வீட்டைத் தீயிட்டுக் கொழுத்தியவன், நஞ்சு கொடுத்தவன், ஆயுதத்தால் அடித்தவன், திட்டமிட்டு மோசம் செய்தவன், அவர்கள் பிராமணராக இருந்தாலும் கொல்லலாம். இதனால் பிரமகத்தி தோசம் ஏற்படாது. யுத்த பூமியில் நீர் கொடாமல் விட்டவன், நோயாளி, பலவீனன், பெண், வில் ஒடிந்தவன், ஆயுதமில்லாதவன், ஆகியோரைக் கொன்றவன் பிரமகத்தி தோசத்தால் பீடிக்கப்படுவன்" என்று சநத்குமார முனிவர் கூறினார்.

கர்ப்பவாசம்

வியாச முனிவர் சனத்குமாரரிடம்; "மாதவரே கர்ப்பவாசத்தில் சீவன்கள் அடையும் துன்பங்கள் எவை?" என்று கேட்டார்.

"முனிவரே, நாகவாதனையில் இருந்து சீவன்கள் கர்ப்பவாசத்தை அடைகின்றன. அவை செய்த புண்ணிய பாவ பயனுக்கேற்ப நான்கு வகையான யோனிகளில் பிறக்கின்றார்கள். ஆகாய சம்பந்தமாக ஒரு விதை உண்டாக்கப்பட்டு மழையினால் நனைக்கப்பட்டு. அதில் இருந்து முளையுண்டாகி, அந்த முளையிலிருந்து இலை, காம்பு, கிளை உண்டாகிப் பின் மலர், காய், கனி முதலியன உண்டாகின்றன. யவை முதலிய பதினேழு வகைப்பட்ட திருமணங்களில் இருந்து தோன்றும் ஒசதிகள் யாவும் பலனையே முக்கியமாகக் கொண்டவை. இவற்றை அறுத்தல், இடித்தல், அமைத்தல் முதலியவற்றைச் செய்து அறுசுவையோடு உண்டு ஆன்மாக்கள் விருத்தியடைகின்றன.

இத்தகைய அன்னமானது தன்னை உண்டவர்களின் உயிரைப் பாதுகாக்கும். அவ்வாறு உண்ணும்போது பிராண வாயு, அன்னம் வேறாகவும், நீர் வேறாகவும் பிரிக்கும். அதனால் சடாக்கினியின் மேல் நீரும், நீருக்கு மேல் அன்னமுமாக நிற்கும் பின் நீரின் உஷ்ணத்தினால் அன்னரசம் வேறாகவும், கழிவுகள் வேறாகவும் பிரிக்கப்படும். கழிவுகள் வெளியேறும். அன்னரசம் இதயத்தை அடைந்து உடலின் எல்லாப் பாகங்களுக்கும் கொண்டு செல்லப்படும். மாமிசத்திலிருந்து நரம்புகளும் தலைமயிரும் உண்டாகும். எலும்புகளிலிருந்து கொழுப்பு உண்டாகும். கொழுப்பிலிருந்து சுக்கிலம் உண்டாகும். இதுதான் பிரசவத்திற்கு காரணமாகும். சுக்கிலம் பெண்ணின் ருதுகாலத்தில் அவளின் குறியில் சுரோணிதத்தோடு கலந்து அந்தப் பெண்ணினது இரத்த சம்பந்தத்தால் சீவன் தன் கர்மத்தின்படி குழந்தை உருவை அடையும். பின் பிரசூதவாயு வெளியே தள்ள குழந்தை வெளிப்பட்டு பூமியை அடைந்தவுடன், அது தனது கர்ப்பகால வாசத்தின் எண்ணங்களையெல்லாம் மறந்துவிடும்".

"வியாசரே, சிவபெருமானால் ஆன்மாக்களின் வினைக்கீடாகச் சுக்கில சுரோணியங்களால் இத்தேகம் ஆக்கப்படுகிறது. அதனால் இத்தேகம் எப்போதும் கழிவுகளால் அசுத்தப்பட்டுக் கொண்டே இருக்கும். அதைச் சுத்தம் செய்து வாசனைத் திரவியங்களாலும் நறுமணத்திரவியங்களாலும் நறுமணமூட்டினாலும் அது அசுத்தமாகி விடும். புனித தீர்த்தங்களில் மூழ்கினாலும் தேகம் சுத்தமாகாது. அதனால் மனதைச் சுத்தமாக்கினால் தான் மோட்சம் கிடைக்கும். மனம் சுத்தமடைவதற்காகத் தான் தானம், யோகம், யாத்திரை முதலியவற்றைச் செய்கிறார்கள். ஞானத்தாலும், வைராக்கியத்தாலும் மலங்களை அகற்றிச் சுத்தம் செய்பவனே பிரமஞானியாவான். நான் என்ற அகங்காரம் கொள்வது பெரும் குற்றமாகும். அதை ஒழிப்பது பெரும் இன்பமாகும். கர்ப்பவாசம் செய்யும்போது உண்டாகும் ஞானமும், பெண்ணோடு கலவி செய்யும்போது உண்டாகும் ஞானமும், புராணம்

கேட்கும்போது உண்டாகும் ஞானமும் ஒருவனுக்கு நீங்காது இருக்க வேண்டுமானால், அவன் உலகத்தை வெறுத்து மோட்சத்தை அடைவான்.

"பிறவியை எடுத்தவன் நல்ல வழியில் இருந்து நீங்கி உலக விடயங்களை பெரிதாக நினைக்கிறான். வாலிபத்தில் வலிமையுடையவர்களாக இருப்பதால் பலர் செய்யக்கூடாதவற்றைச் செய்து அல்லற்படுகின்றனர். பகற் பொழுதில் பொருள் தேடுவதிலும், இரவுப் பொழுதில் பெண் மயக்கத்திலும், காலங் கழிப்பதிலும் இன்பம் காண்பவன் அதுதான் பேரின்பமெனக் கருதுகின்றான். பலம் உள்ளவரை இப்படித்தான் பலர் காலத்தைக் கழித்து வயோதிபமடைந்து எதுவும் செய்ய முடியாதவர்களாகி விடுகின்றனர். இளமைக் காலத்தில் அறம், பொருள், இன்பங்களை முறைப்படி செய்து மோட்சத்துக்குரிய வழியை தேடிக் கொள்ள வேண்டும். வயோதிபத்தில் எதுவும் செய்ய இயலாது" என்றார் சநத்குமார முனிவர்.

அருந்ததியின் அன்பு

"வியாசரே, முன்பு வசிட்ட முனிவரின் மனைவியான அருந்ததி பெண்களின் இயல்பு பற்றிக் கூறியதைச் சொல்கிறேன்."

ஒரு காலத்தில் இந்திரனும் சூரியனும், அக்கினியும், வசிட்ட முனிவரின் ஆச்சிரமத்திற்குச் சென்றனர். அப்போது அருந்ததி தண்ணீர் எடுப்பதற்காகக் குடத்துடன் வந்தாள். அவளைக் கண்ட மூவரும் நின்றார்கள். அவர்களை இன்னாரென அறிந்து அருந்ததி அவர்களை வணங்கி, "நீங்கள் இங்கு வந்த காரணம் என்ன ...?"என்று பணிவுடன் கேட்டாள். அதற்கு அவர்கள், "நாங்கள் உன்னிடம் ஒரு விடயம் கேட்க வந்திருக்கிறோம்" என்றார்கள்.

"நீ, நீர் எடுக்கச் செல்ல வேண்டாம். நாம் உனது குடத்தில் நீரை நிரப்புகிறோம்" என்று சொல்லிய இந்திரன்; எனது பதவியை தவம், பிரமச்சாரியம், யாகம் போன்ற அனுட்டானங்களால் அடைய முடியுமென்றால் இக் குடத்தின் காலப்பங்கு நீர் நிரம்பக்கடவது" என்றதும் குடத்தின் காற்பங்கு நீரால் நிரம்பியது.

அக்கினி "யாகம், பிதிர் சிரார்த்தம் இவற்றை விட அதிதியை வழிபட்டு அன்னமளிப்பதில் நான் திருப்தியடைவது சத்தியமானால், அதனால் இக்குடம் இன்னொரு காற்பங்கு நீரால் நிரப்பப்பட்டும்" என்றான். அதனால் அக்குடத்தில் மீண்டும் நீர் வந்து சேர்ந்தது.

அதன்பின் "சூரியன் தினமும் எனது உதயத்தினால் வேதியர் செய்யும் அர்ச்யபிரதான்னியமாகிய பிரமாஸ்திரம் நீங்குவது சத்தியமானால் இன்னும் காற்பற்கு நீரால் நிரம்பக்கடவது" என்றான். அதைக்கேட்ட அருந்ததி, "பெண்களை மிகவும் கவனமாகக்

காக்கவேண்டும். இது சத்தியமானால் எனது குடம் நிரம்பட்டும்": என்றாள். அதனால் குடம் நிரம்பியது.

அதைக்கண்ட தேவர்கள், "பதிவிரதையே, உனது மனோபாவம் எப்படியானது என அறிய வந்தோம்" பெண்களில் உத்தமர். மத்திமர், அதிமர் என மூவகையினர் இருக்கிறார்கள் என்று கூறிவிட்டுச் சென்றனர்.

"முன்பு ஒரு காலத்தில் அக்கினிதேவன் சப்தரிசிகளின் மனைவிமார்மீது மோகம் கொண்டான். அதை உணர்ந்த அவனது மனைவியான ஸ்வகாதேவி தனது கற்பின் சக்தியால், சப்தரிகளில் ஆறுபேரின் மனைவியரைப்போல் உருவெடுத்துத் தனது கணவனோடு சேர்ந்திருந்தாள். ஆனால் அருந்ததியின் உருவத்தை எடுக்க முடியவில்லை. அதனால் ஆச்சரியமடைந்த அவள் அருந்ததியிடம் சென்று, "கற்புக்கரசியே, உன்னைப் போன்ற கற்புக்கரசியை நான் பார்த்ததில்லை, கேள்விப்பட்டதுமில்லை. நான் அக்கினிதேவனுக்கு மனைவியாக இருந்தும் விதம் விதமான மோக உருவங்களை நினைத்தமாத்திரத்தில் எடுக்கக்கூடியவளாக இருந்தும் உன்னுடைய வடிவத்தை மட்டும் எடுக்க முடியவில்லை. நீ உத்தமி. அதனால் எந்தப் பெண்ணும் கல்யாண காலத்தில் அக்கினி, அந்தணர், உற்றார், உறவினர் முன்னிலையில் அருந்ததியான உன்னைப் பார்த்து வணங்கினால், அவர்கள் சகல சௌபாக்கியங்களையும் பெறுவார்கள்" என்று வாழ்த்திச் சென்றவள். இதனாலேயே தான் அருந்ததி போற்றப்படுகிறாள். அருந்ததியைப்போல பதிவிரதா தர்மத்தைக் கடைப்பிடித்து வாழும் பெண்கள் பெரும் புகழடைந்து முத்தியடைவர்" என்றார் சனத்குமாரமுனிவர்.

சாவித்திரியின் கற்பு

"வியாச முனிவரே, கற்பின் சிறப்பைப்பற்றி இன்னொரு பெண்ணின் கதையைக் கூறுகிறேன்" கேளும்.

"பெரும் செல்வந்த நாடான மந்திரதேசத்தின் மன்னன் அஸ்வபதி. அவன் நீதியாக நாட்டை ஆண்டு வந்தமையால் அவனது நாடு செல்வச் செழிப்புள்ளதாக இருந்தது. மக்கள் மிக்க மகிழ்வுடன் வாழ்ந்து வந்தனர். அதனால் கோவில்களில் சிறப்பாகப் பூசைகள் நடைபெற்றன. வேள்விகள், யாகங்கள் யாவும் சிறப்புற நடைபெற்றபோதும் மன்னனுக்குப் பிள்ளைகள் பிறக்கவில்லை. அதனால் மனம் வருந்திய மன்னன் சரஸ்வதிதேவியைத் துதித்து அவளின் அருளால் ஒரு பெண்குழந்தையைப் பெற்று, சாவித்திரி என்று பெயரிட்டு மிகவும் அன்புடன் வளர்த்து வந்தான்.

சாவித்திரிக்கு மன்னன் திருமணம் செய்து வைக்க எண்ணி மணமகனைத் தேடிக் கொண்டிருந்தான். அப்போது மன்னனின் அரசசபைக்கு நாரதமுனிவர் வந்தார். அவரை

வணங்கி வரவேற்று உபசரித்து ஆசனத்தில் அமர்த்திய மன்னன், தனது மகளுக்குப் பொருத்தமான வரன் கிடைக்கவில்லை என்று கூறித் துயரப்பட்டான்.

"மன்னா, உனது மகள்தான் விரும்பிய ஓர் ஆடவனையே மணப்பாள்" என்று கூறிவிட்டுச் சாவித்திரியை அழைத்து, "மகளே, நீ விரும்பும் மணாளன் யார்?" என்று கேட்டார். அதற்கு அவள், "நான் சாலவதேச மன்னனான சத்தியவானையே திருமணம் செய்ய விரும்புகிறேன்" என்றாள்.

அதைக்கேட்ட மன்னன் நாரதமுனிவரைப் பார்த்து, "சுவாமி, சத்தியவானின் விபரங்களைத் தயவுசெய்து கூறுங்கள்" என்றான். அதைக்கேட்ட நாரதமுனிவர் சிறிது நேரம் யோசித்துவிட்டுச் சொன்னார்; "மன்னா, சத்தியவான் வீரன், சத்தியம் தவறாதவன், தூய்மையானவன், மன்மதனைப் போன்ற அழகன், எல்லா வகையிலும் உனது மகளுக்குப் பொருத்தமானவன். ஆயினும் அவனது ஆயுள்க்காலம் இன்னும் ஓர் ஆண்டு மட்டுமே" என்றார்.

அதைக் கேட்ட மன்னன் பெரும்துயரடைந்தான். அவன் சாவித்திரியைப் பார்த்து; "மகளே, திரிகாலத்தையும் உணர்ந்த ஞானியான நாரதமுனிவரின் வாக்குப் பொய்க்காது. சத்தியவானின் தந்தையின் நாட்டை எதிரிகள் கைப்பற்றியமையால் அவன் காட்டில் வாழ்கிறான். அவருக்குப் பணிவிடை செய்வதற்காகச் சத்தியவான் அவருடன் இருக்கிறான். அதைவிட ஒரு வருடம் மட்டுமே வாழக்கூடியவன் என்று அறிந்த பின்பு எப்படி நான் உன்னை அவனுக்குத் திருமணம் செய்து வைப்பது. அதனால் வேறொருவனைத் தேடுவதுதான் உனது வாழ்விற்குச் சிறப்பைத் தரும்" என்று அழுதார்.

"தந்தையே, எனது தோழிகள் அந்த அரசகுமாரனின் சிறப்பைச் சொன்னதால் அவர்மீது காதல் கொண்டு, அவரையே நினைத்து வாழ்கிறேன். அதனால் இன்னொருவனை என்னால் திருமணம் செய்துகொள்ள முடியாது." என்றாள் சாவித்திரி.

அப்போது நாரதர் சொன்னார்; "மன்னா, சாவித்திரி கற்பில் சிறந்தவள். அதனால் யமனுடன் போராடித் தனது கணவனை மீட்பாள். அதனால் அவளின் புகழ் இப்பூவுலகுள்ளவரை நிலைத்திருக்கும். ஆகையால் சத்தியவானுக்கு அவளைத் திருமணம் செய்து கொடு. பயப்படாதே. அவன் இறக்கமாட்டான். இறக்கச் சாவித்திரி விடவும் மாட்டாள்" என்றார். அதனால் திருப்தியடைந்த மன்னன் சாவித்திரியை அழைத்துக்கொண்டு இரதத்தில் ஏறிச் சத்தியவானின் தந்தை இருக்கும் காட்டிற்குச் சென்றார். அங்கு சத்தியவானின் தந்தையான சாலவதேச மன்னனைச் சந்தித்துத் தனது மகளின் விருப்பத்தைக் கூறினார். அதைக்கேட்டு மகிழ்ந்த சாலவதேச மன்னன் தனது மகனுக்குச்....

சாவித்திரியைத் திருமணம் செய்து வைக்கச் சம்மதித்தான். பிராணமர்கள் குறித்துக்கொடுத்த சுப முகூர்த்த நாளில் சாவித்திரிக்கும் சத்தியவானுக்கும் திருமணம் நடைபெற்றது. சாவித்திரி கணவனுடன் தங்கியிருந்து தனது கணவனுக்கும் அவனது பெற்றோருக்கும் பணிவிடை செய்து வந்தாள். நாரதமுனிவர் கூறியதுபோல் அவர்கள் திருமணம் செய்து ஒரு வருடம் கழித்தது. சத்திவானின் ஆயுள்க்காலம் முடிவடையப் போவதை உணர்ந்த சாவித்திரி தனது கணவனின் ஆயுள் விருத்திக்காக உமாதேவியாரை நோக்கி விரதமிருந்தாள்.

அன்று சத்தியவான் காட்டுக்குச் செல்லப் புறப்பட்டான். அன்று அவனது ஆயுள் முடியும் நாளென்று தெரிந்து கொண்ட சாவித்திரி தானும் அவனுடன் புறப்பட்டாள். சத்தியவான் தருப்பைப் புற்களை வெட்டி எடுத்தான். பின் காய்களையும், கனிகளையும் பறித்தான். அவனின் பின்னால் நிழல் போலச் சாவித்திரி அவன் செல்லுமிடமெங்கும் சென்றாள். அப்போது சத்தியவான் மனைவியை அழைத்து, "அன்பானவளே, எனது கைகளும், கால்களும் நடுங்குகின்றன. கண்கள் மங்கலாக இருக்கின்றன. உடல் சோர்கிறது" என்று சொல்லித் தனது தலையை அவளின் மடி மீது வைத்துப்படுத்தான்.

அப்போது மலர்மாலைகளை மார்பில் அணிந்து பாசமும் தண்டும் கரத்தில் கொண்டு யமதர்மராசன் சத்தியவானின் உயிரைக் கவர முயன்றான். அதைக்கண்ட சாவித்திரி அவனை வணங்கி, "தயவு செய்து எனது கணவனின் உயிரைக் கவராதீர்கள்" என்றாள்.

"தாயே உனது கணவனின் ஆயுள்க்காலம் முடிவடைந்து விட்டது. சத்தியவான் நற்குணமுடையவன், தர்மவான். அதனால் அவனது உயிரை நானே நேரில் வந்து கவர்ந்து செல்கிறேன். பிறந்தவையெல்லாம் அழியும் தன்மை வாய்ந்தன. அதனால் பேசாமல் செல்" என்றான் யமதர்மராசன்.

சாவித்திரி அதைக் கேளாது அவனின் பின்னே சென்றாள். அதனால் வியப்புற்ற யமன், அவளது கற்பின் பெருமையை உணர்ந்து, "பெண்ணே, நீ கற்பிற் சிறந்தவளென்பதால் உனக்கு ஒரு வரம் தர விரும்புகிறேன். உனது கணவனின் உயிரைத்தவிர வேறு எதையாவது கேள்" என்றான்.

"காலதேவனே, குருடரான எனது மாமனார் கண்பார்வை பெற வேண்டும்" என்றாள். யமன் மனம் மகிழ்ந்து "அதைத் தந்தேன்" என்று கூறி விட்டுச் சென்றான். அவன் சென்ற பின்பு அவனின் பின்னால் சென்றாள் சாவித்திரி. அதைக் கண்ட யமன் வியப்புற்று, "பெண்ணே இது வரை நீ பெரும் கற்பரசி என்பதால் எனது உருவம் உனக்குத் தெரிகிறது அதற்காக ஒரு வரம் மட்டும் கேள். ஆனால் உனது கணவனின் உயிரைக் கேளாதே" என்றான்.

அதைக் கேட்ட சாவித்திரி "எனது தந்தைக்குப் புதல்வர்கள் பிறக்க வேண்டும்" என்று கேட்டாள். உடனே யமதர்மன் "நூற்றுவர் உனது தந்தைக்குப் புதல்வராகப் பிறப்பார்கள்" என்று கூறிவிட்டுச் சென்றான். சாவித்திரி அதன் பின்பும் அவனைத் தொடர்ந்து சென்றாள். அதைக் கண்ட யமதர்மராசன் அவளின் கற்பின் மகிமையால் தான் என்னைப் பின் தொடர்கிறாள் என நினைத்து வியப்படைந்து, "பெண்ணே, உனது கணவனின் உயிரைத் தவிர இன்னும் ஒரு வரம் கேள்" என்றான்.

உடனே சாவித்திரி, "எனது மாமனார் இழந்த நாட்டைப் பெற வேண்டும்" என்று கேட்டாள். யமதர்மராசன் அந்த வரத்தையும் கொடுத்துவிட்டுச் சென்றான். மீண்டும் சாவித்திரி யமதர்மராசனைப் பின்தொடர்ந்து சென்றாள்.

அதைக் கண்ட யமதர்மராசன், "பெண்ணே, இப்பயங்கரமான காட்டுள் நீ தனித்து வருவது தர்மம் அல்ல. அதனால் திரும்பிச் சென்று விடு" என்றான்.

அதைக் கேளாது அவனைப் பின்தொடர்ந்து செல்ல யமதர்மராசன் அவளது பதிவிரத தன்மைக்குப் பயந்து "பெண்ணே, உனது கற்பு என்ற தீ என்னைச் செல்லவிடாது தடுக்கிறது. அதனால் இன்னொரு வரத்தைக் கேள்" என்றான்.

அதைக் கேட்ட சாவித்திரி, "எனது கற்பிற்குப் பங்கமேற்படாத வகையில் பல புதல்வர்களைப் பெற வேண்டும். அப்பிள்ளைகள் எனது மாமனாருடனும் மாமியாருடனும் மகிழ்ந்து விளையாட வேண்டும்" என்று கேட்டாள். அதை யமதர்மராசன் கொடுத்துவிட்டு மறைந்தான்.

சாவித்திரி, சத்தியவான் இருந்த இடத்திற்கு வந்தபோது சத்தியவான் உயிர்பெற்று எழுந்திருந்தான். அதன்பின் சாவித்திரி பல புத்திரர்களைப் பெற்று நெடுங்காலம் மிக்க மகிழ்வுடன் வாழ்ந்தாள்.

மரணத்தை உணர்த்தும் குறிகள்

"வியாசரே, முன்பொரு சமயம் பார்வதிதேவியும் பரமசிவனும் உரையாடும்போது பார்வதிதேவி, "எம் பெருமானே, அழியக் கூடிய மனித உடலின் முடிவு காலத்தையும், முத்தியடையும் வழியையும் விளக்குங்கள்" என்று கேட்டாள்.

அதற்குச் சிவபெருமான் சொன்னார், "பார்வதி ஐம்பெரும் பூதங்களின் அம்சமான உடலை எடுத்த மனிதர்கள் மரணக் குறிப்பை உணர்ந்து புகழைச் சம்பாதிக்கும் வழியைச் சொல்கிறேன். தேகம் முழுவதும் வெளுத்து, காதுகள், கண்கள், மூக்கு முதலியன ஓசை, ஒளி நாற்றங்களை அறியச் சக்தியற்று இருக்கும் மனிதன் ஆறு மாதத்தில் இறப்பான்.

எந்தச்சத்தத்தைக் கேட்டாலும் அது மிருகத்தின் சப்தத்தைப் போலக் கேட்டாலும் அவன் ஆறு மாதத்தில் மரணமடைவான். இடது கை ஏழு நாட்கள் துடித்தாலும், சகல அங்கங்களும் ஏழு நாட்கள் துடித்து நாவு உலர்ந்தால் அவன் ஒரு மாதத்தில் இறப்பான். நெஞ்சும் வாயும் உலரப் பெற்றவன் ஆறுமாதத்தில் இறப்பான். நா தடித்துப் பல்லீறுகள் விறைப்படைந்தவனும், தண்ணீர், நெய், எண்ணெய், கண்ணாடி முதலியவற்றில் தனது உருவத்தைக் காணாதவரும் ஆறு மாதகாலத்துள் இறப்பான்''

''சந்திர சூரியர் ஆடையால் மூடப்பட்டது போலக் காண்பவன் பதினைந்து நாட்களில் இறப்பான். அருந்ததி ஆகாயத்தில் வாகனமில்லாமலும், சந்திரன் களங்கமின்றியும், இரவில் நட்சத்திரங்கள் பிரகாசமின்றியும், மேகமின்றி மின்னலைக் கண்டவனும் ஆறு மாதத்தில் இறப்பான், இரவில் வானவில்லைக் காண்பவன், பகலில் விண்மீன் விழக் காண்பவனும், காகம், கழுகு முதலியன தன் தலைக்கு மேல் வட்டமிடக் கண்டவனும் ஆறு மாதத்தில் இறப்பான்''

''பறுவம், அமாவாசையின்றியே சந்திர சூரிய மண்டலத்தை ராகு மறைப்பது போலக் காண்பவனும், திக்குகள் சூழலக் காண்பவனும் ஆறு மாதத்தில் இறப்பான். நீல நிறமுடைய ஈக்கள் உடம்பில் மொய்ப்பதைக் காண்பவனும், தனது தலையில் கழுகு, காகம், மாடப்புறா முதலியன இருக்கக் கண்டவன் ஒரு மாதத்தில் இறப்பான், ஆகாயத்தில் கரியயானையைக் கண்டவனும், ஐந்து நிறங்களும், சுவை ஆறும் பிறழ்வுற்றுக் காண்பவன் ஆறு மாதத்தில் இறப்பான். நாவின் முனையும், மூக்கின் முனையும், புருவநடுவும் காணாவிடில் மூன்று மாதத்தில் இறப்பான், சேற்றில் மிதித்த பாதச் சுவடு சிதைவுற்றால் அவன் மரணம் நெருங்கியவனாவான், நான்கு புறத்திலும் வானவில் தோன்றினாலும், பகலில் பேய் ஆடினாலும், பூரித்த தேகமுடையோர் மெலிந்தாலும், இளைத்ததேகமுடையோர் பூரித்தாலும் ஒரு மாதத்தில் மரணம் நேரிடும், பேய், பூதம், நரி, கழுதை, அசுரர், கருங்காக்கை, புலி செந்நாய், பருந்து, குரங்கு முதலியன தன் மேல் ஏறவும், அவை தன்னைத் தின்னவும், அவற்றைத் தான் தின்னவும் கண்டவன் பதினைந்து நாளில் மரணமடைவான்''.

ஒருவன் தனது மரணநாளை அறிய வேண்டுமாயின், நீராடி, புனிதமான ஆடை அணிந்து, நித்திய கர்மத்தை முடித்து, வலது கையையும், இடது கைகையும் கழுவி, பின் துடைத்துப் பின் சந்தனத்தை இருகைகளிலும் எடுத்து குழைத்து கைகூப்பி உமாபதியை நினைத்து வணங்கி, நூற்றெட்டுத்தரம் தேவிமந்திரத்தை உச்சரித்து, கைகளைப் பிரித்து நோக்க, விரல்களின் கணுக்காள் ஒன்றில் கருமை நிறம் காணப்படும். சிறு விரல் முதல் பெருவிரல் இறுதியாகக் கணுக்காள் ஒவ்வொன்றிற்கும் பதினைந்து துதிகள் ஆகையால் எந்தக் கையில் கருமை நிறம் தோன்றியதோ அந்தப்பட்சத்தில் அவன் இறப்பான். எனினும் கட்டைவிரலின் அடிக் கணு முதல் மேல்நோக்கி பிரதமையாதி திதிகள் குறி காணப்படுகிறதோ அந்தத் திதியில் அவன் இறப்பான்.

"நாடி வழியில் ஓடும் சுவாசமானது பிங்கலை வழியாக ஐந்து தினங்கள் செல்லுமாயின் ஒரு வருடத்தில் உடல் நீப்பான், இரண்டு நாசிகளிலும் இருபது நாட்கள் சுவாசம் ஓடுமாயின் ஆறு மாதங்களிலும், இருபத்தைந்து தினங்கள் ஓடுமாயின் மூன்று மாதங்களிலும், இருபத்தேழு நாட்கள் ஓடுமாயின் ஒரு மாதத்திலும் உயிர் விடுவான். வலது நாடிவழியாக ஆறு தினங்கள் சுவாசம் சென்றால் இரண்டு வருடம் ஏழு மாதம், பதினெட்டு நாட்கள் சீவிப்பான். எட்டுத்தினங்கள் சென்றால் இரண்டு வருடம், ஐந்து மாதங்கள் சீவிப்பான். ஒன்பது தினங்கள் சென்றால் ஒரு வருடம் ஏழு மாதம் பன்னிரண்டு தினங்கள் பிழைத்திருப்பான், பதினொரு தினங்கள் சென்றால் ஏழுமாதம் பன்னிரண்டு தினங்கள் உயிரோடிருப்பான், இருபத்து மூன்று தினங்கள் சென்றால் நான்குமாதம் ஆறு நாட்கள் வாழ்வான், முப்பது தினங்கள் சென்றால் ஒரு மாதம் பத்து நாள் வாழ்வான், முப்பத்தொரு தினம் சென்றால் ஐந்து தினங்கள் உயிர் வாழ்வான், வாய்வழியே சுவாசம் செல்லுமாயின் மூன்று தினங்கள் உயிர் வாழ்வான். இதுதான் காலச் சக்கரக்கிரமம்" என்று சிவபெருமான் பார்வதிதேவிக்குச் சொன்னதை சனத்குமார முனிவர் வியாசருக்குக் கூறினார்.

மரணத்தை வெல்லும் யோக நிலை

அவற்றைக் கேட்ட பார்வதிதேவி, "நாரதா, மரணகாலக் குறியை நீங்கள் சொல்லக் கேட்டேன் இனி யமன் எவ்வாறு உயிர்களை வஞ்சித்துப் பிடிக்கிறானென்றும், அவனிடமிருந்து தப்புவதற்கான வழி ஏதும் இருப்பின் சொல்லுங்கள்" என்று கேட்டாள்.

"உமையே, பஞ்சபூதங்களினால் ஆனது உடல் அத்தகைய உடலை ஞானிகள் பெற்றாலும் அது அழியக் கூடியது. தேவர்கள், அசுரர்கள், யக்சகர்கள், ராட்சதர்கள், உரகர்கள், மானிடர்கள் முதலியோராலும் வெல்ல முடியாத யமனைத் தியானத்தால் தங்கள் உடம்புடனேயே வென்று விடுவார்கள்" என்று கூறிய போது வியப்படைந்த பார்வதி தேவி இடைமறித்து, "அப்படியா சுவாமி, அத்தகைய ஞானிகளின் சரித்திரத்தை எனக்குக் கூறுங்கள்" என்றாள்.

"தேவி பூதங்கள் தத்தமது குணங்களை நீக்கும் போது உடல் அழிவடையும். யமனை வெல்ல வேண்டும் என்று நினைப்பவன், அவனது பூ தேகத்தில் விளங்கும் ஆகாயத்தை தன்னுள்ளே கண்டு, அதனிடத்தில் எல்லாக் குணங்களும் இருப்பதாக உணர்ந்து மனதைப் புறஞ்செல்லாமல் ஒடுக்கிப் யோகத்தில் இருத்தல் வேண்டும்".

"அந்த யோகத்தைப் பற்றிப் பக்தி சிரத்தை உள்ளவர்களுக்கன்றி வேறு யாருக்கும் சொல்லக் கூடாது. நீ என் மீது பற்றற்ற பற்றுக் கொண்டவள். சரிபாதியானவள். அதனால் உனக்குச் சொல்கிறேன் கேள்".

“மிகவும் சுகமான ஆசனத்தில் அமர்ந்து கொண்டு, யோகம் செய்ய வேண்டும். இரண்டு நாழிகைக் காலம் காதுகளை மூடிக்கொண்டு பரமசிவனைத் தியானித்தால் வயிற்றில் இருந்து ஒரு சப்தம் உண்டாகி, அவனுக்குக் கேட்கும். அந்த ஓசை, ஊதுவது போலக் கேட்டு வயிற்றில் உள்ள உணவையெல்லாம் எரித்துவிடும். உபத்திரங்களையும் நீக்கிவிடும். இவ்வாறு தினமும் இரண்டு நாழிகை செய்பவன் மரணத்தை வென்று சர்வசித்திகளையும் அடைவான்”.

“மழைக்காலத்தில் மேககர்ச்சனையைப் போன்ற சப்தத்தைக் கேட்டுக்கிரகித்தவன், யோகியாகி ஜனன மரணங்களை நீக்கிப் பிரமத்தைத் தரிசித்து, சம்சாரம் முதலான துக்கங்களை ஒழித்து பிரமஞானத்தை அடைவான். இது சப்த பிரம யோகம் எனப்படும். இவர்கள் தாம் விரும்பியவற்றை அடைவார்கள். இதுவே முத்திக்குக் காரணமாகும். உடம்பில் உண்டாகும் உறக்கம் சோம்பல் தாமசம் காமகுரோதங்கள் முதலியவற்றை நீக்கிச் சுகமான ஆசனத்தில் இருந்து நூறு வயதுடைய கிழவனேயானாலும் இந்த யோகத்தைப் பயில்வானேயானால் மிரும்யுஞ்சர சரீரத்தையும் ஆரோக்கியத்தையும், தீர்க்காயுளையும் பெறுவான்”.

“இதைப் பயின்றவன் சர்வேஸ்வரனின் நம்பிக்கைக்குரியவனாவான். இந்தயோகத்திற்கு மந்திரங்கள் ஓதத் தேவையில்லை. பயிற்சியினாலே இதை அடையலாம். இந்தச் சப்தத்தில் ஒன்பது வகையான வேதங்கள் உள்ளன. அவை கோசம்காமஸ்யம், ஸ்ருங்கம், கண்டா வீணை, புல்லாங்குழல், துந்தூபி, அங்கம், மோகம் என்ற ஒன்பது சப்தங்களாகும். விவேகி இத்தகைய ஒலிகளைக் கேளாது விட்டால் ஓங்காரத்தின் ஓசை உண்டாகும். அதை அவன் கேட்க வேண்டும். அதுவே சிறந்தது”.

“அந்த ஓங்கார சப்தத்தை கேட்டு அனுபவித்தவன் மகாயோகியாய் எல்லா உலகங்களிலும் சஞ்சரிப்பான். கோசம் என்ற சப்தத்தைப் பயின்றவன் ஆத்ம சுத்தியடைந்து நோய் நீங்கி வசீகரம் பெறுவான். காம்ஸ்யம் என்னும் சப்தத்தைப் பயில்பவன் எல்லாப் பிராணிகளினதும் கமனத்தைத் தடுக்கக் கூடியவனாவான். அத்துடன் பேய், பூதங்களை அடக்கக்கூடியவனாவான். ஸ்ருங்கம் என்ற சப்தத்தைப் பயின்றவன் பகைவரை அடக்கி அவர்களைத் தனது விருப்பப்படி நடக்கச் செய்வான். காண்டா என்னும் சப்தத்தைப் பயின்றவன் தேவர்கள் அனைவரையும் தன்னிடம் வரவழைக்கும் திறன்களைப் பெறுவான். அத்துடன் யசர், இன்னரர், கிம்புருடர், மானுடர் முதலியோரையும் வசப்படுத்துவான். வீணை என்னும் சப்தத்தைப் பயின்றவன் தூரதிருஷ்டியை அடைவான். புல்லாங்குழல் என்னும் சப்தத்தைப் பயின்றவன் எல்லாம் அறிந்தவனாவான். தூந்தூபி என்ற சப்தத்தைப் பயின்றவன் நினைத்தபோது நினைத்த உருவம் எடுப்பான். மேக நாதத்தைப் பயின்றவன் ஆகாயத்தில் சஞ்சரித்துச் சர்வத்தையும் அறிந்து கொள்வான்” என்றார் சிவபெருமான்.

“நாதா, எல்லாவற்றிற்கும் பிறப்பிடமான ஆகாயத்தில் இருந்து வாயு தோன்றும் என்றீர்கள். அப்படியானால் வாயு மயமான தேகத்தினால் ஆகாய சொரூபமான பிரமத்தை எவ்வாறு அறியலாம்” என்று பார்வதி கேட்டார்.

“தேவி, வாயுமயமான உடல் அழியத் தக்கது என்று தெரிந்து கொண்டவன் பிரயாணாமம் என்னும் யோகத்தைப் பயில்வானேயானால் தனக்கு நேரும் மரணத்தைப் பதினைந்து நாட்களில் விலக்கி விடுவான்”.

வாயு உடலெங்கும் பரவியுள்ளது அத்தகைய வாயுவை புறஞ்செல்ல விடாது தன்னுள் அடக்கும் யோகி உலகத்தை வெல்வான். பிராணவாயு உள்ளே அடங்கியிருந்தால் அத்தகையவன் யோகியாவான். பிராணவாயுவைத் தனக்குள் அடக்கிக் கொள்பவன் மகத்தாகிறான். அத்துடன் அவன் விராட்டின் சொரூபமாகிறான். காயத்திரி மந்திரத்தைச் சிரத்தோடு கூட்டி வியாகூதி பூர்வமாய் பிராண வாயுவை அடக்கி ரேசகாதி நிலையில் இருந்து மும்முறை சாவதானமாக ஜெயிப்பதே பிராணயாமமாகும். அதைவிடச் சிறந்த யோகமில்லை. காலையில் எழுந்து ஒரு முறை பிராணயாமத்தைச் செய்பவர் பிரமலோகத்தை அடைவர். இவ்வாறு சிவபெருமான் பார்வதி தேவிக்குக் கூறியதைச் சனத்குமாரர் வியாசருக்குக் கூறினார்.

புராண படலம் கேட்டல்

“வியாசரே, உமாதேவி உலக நாதரை நோக்கி, நாதா இன்னும் இது போன்ற விடயங்களைக் கூற வேண்டும்” என்று கேட்டாள். அதற்குச் சிவபெருமான் கூறினார்.

“தேவி பகலில் சூரியனையோ அல்லது இரவில் சந்திரனையோ தனக்குப் பின்புறமாக்கி நீராடித் தூய ஆடை அணிந்து நீறு பூசி பஞ்சாட்சரமந்திரத்தையும் நவாகயி மந்திரத்தையும் உச்சரித்துக் கொண்டு தனது தேகத்தின் சாயையை பூமியில் பார்க்க வேண்டும். பின் ஆகாயத்தைப் பார்க்க வேண்டும். ஆகாயத்தில் தோன்றும் சாயை என்னுடையது அதைத்தரிசித்தால் பாவங்கள் யாவும் ஒழியும். யோகம் பயிலத் தேவையானது ஞானம். ஞானம் உண்டாவதற்குப் பாவங்கள் ஒழிய வேண்டும். பாவம் ஒழியப் புராணங்களைப் படித்தல் வேண்டும். புராணங்களாகக் கேட்பதன் மூலம் பிறவி அகலும் அதனால் ஞானம் கைகூடி மோட்சத்தைத் தரும்”.

“அதனால் மனிதப் பிறவியெடுத்தோர் புராணங்களைப் படித்தும் கேட்டும் பயனடைய வேண்டும். தானம், தவம், தீர்த்த யாத்திரை என்பவற்றால் வரும் பயன் புராணம் கேட்பதினாலும் வரும். இத்தகைய புராணங்கள் முப்பத்தாறு உண்டு. அவற்றில் ஒன்றையாவது முழுமையாகக் கேட்டால் நான்கு வேதங்களையும் ஒரு முறை பாராயணம் செய்த பயனை அடையலாம்” இவ்வாறு சிவபெருமான் பார்வதிதேவிக்குக் கூறியதைக் கூறியபடியே

சனத்குமாரர் வியாசருக்குக் கூற, வியாசர் எனக்குச் சொன்னபடி உங்களுக்குக் கூறினேன் என்றார் சூத முனிவர்.

மும்மூர்த்திகளின் தோற்றம்

நைமிசாரணிய முனிவர்கள் சூதரைக் கேட்டார்கள், "மகானே, சிவபெருமானை இலிங்கமாகவும், ஏனைய தேவர்களை விக்கிரக வடிவிலும் உலகத்தவர்கள் வணங்கக் காரணம் என்ன?"

"முனிவர்களே, முன்பு பூமி முழுவதும் தண்ணீரினால் மூடப்பட்டு இருந்தது. பிரமாவும் விட்டுணுவும் ருத்திரனும் அந்தத் தண்ணீரில் இருந்து தான் தோன்றினார்கள். பின் வாயு தோன்றி அதை உலர வைத்தது. அத்துடன் துவாதச ஆதித்தர்கள் நால்வரும் நான்குதிக்குகளில் நால்வரும் ஆகாயத்தில் எண் மருமாகப் பிரகாசித்துப் பூமியை உலரச் செய்தனர்".

அப்போது பாதாள உலகத்திலிருந்து காலாக்கிணியான ருத்திரர் பிரகாசமாகத் தோன்றிப் பூமியை உலர்த்தி விட்டுப் பாதாள உலகத்திற்குச் சென்றார். அதன்பின் மழை பொழிந்து எங்கும் நீர்மயமாகின. இப்படி மாறி மாறி நிகழ்ந்து இயற்கையாயிற்று அதன் பின் மும்மூர்த்திகளும் உருத்திரனை வணங்கி உலகைப் படைக்குமாறு வேண்டினார். "அவ்வாறே ஆகுக" என்று உருத்திரர் சொல்லி, நீருள் மறைந்தார். பிரமாவும் விட்டுணுவும் அவர் திரும்பிவருவாராரென நினைத்து ஓராயிரம் ஆண்டுகள் தவம் செய்தனர். அவர் திரும்பி வரவில்லை எனவே பிரமதேவர் விஷ்ணுவை நோக்கி, "சிருஷ்டி எவ்வாறு நடக்கப்போகிறது" என்று கேட்டார்.

"காலதாமதம் செய்யாது உலகைப் படை. அதற்கான ஆற்றலை நான் கொடுக்கிறேன்" என்றார். உடனே தனது படைப்புத் தொழிலைத் தொடங்கி, அண்டயம், ஸ்வேதசம், உற்பீசம், சாரயுயம் என்னும் நால் வகையோனிகளை உடைய கந்தர்வயச, ராட்சத, லைசாச, மானுட, மிருக, பசு, பட்சி, தாவதங்களைப் படைத்தார் அப்போது நீருள் மறைந்திருந்த உருத்திரர் தோன்றிக் கோபங் கொண்டு பிரமனால் படைக்கப்பட்ட அனைத்தையும் அழித்தார்.

அதைக் கண்ட பிரமதேவர் சிவபெருமானை வணங்கினார். பின் தோத்திரம் செய்தார் அதனால் கோபந் தணிந்த சிவபெருமான், "நீ விரும்பியதைக் கேள்" என்றார்.

அதனால் மகிழ்ந்த பிரமதேவர், "நான் படைத்த பிரபஞ்சம் முன்பு போலக் காட்சியளிக்க வேண்டும்" என்றார் பிரமதேவர்.

“என்னில் இருந்து எழுத்த ஒளியை எங்கே ஒடுக்கலாம்” என்று சிவபெருமான் கேட்கப் பிரமதேவர், “நாதனே, ஒளி பொருந்தியவனாக இருக்கும் சூரியனிடம் ஒடுக்குங்கள். அதன்பின் நீரே சூரியனாக இருந்து சிருஷ்டி முதலான தொழில்களைச் செய்து பிரபஞ்சத்தில் உள்ள நான்கு வர்ணத்திராலும் பூசிக்கப்பெற்று, பிரளயத்தின் போது நீரே அழித்தல் தொழிலையும் செய்யும்படி கேட்கிறேன்” என்றார்.

“என்னை லிங்க வடிவில் பூசித்தாலன்றி உனது படைப்புத் தொழில் பூரணமாகாது” என்று கூறிச் சிவபெருமான் லிங்க வடிவானார். அப்போது ஆகாயத்தில் இருந்து, “சர்வமாகிய பரமேஸ்வரனினை லிங்க வடிவில் பூசிப்பவர்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பேறுகளையும், அட்டமா சித்திகளையும் அனைத்துலகிலும் சஞ்சரிக்கும் ஆற்றலையும், படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களையும் செய்வதற்கான தகுதியையும் பெறுவார்கள். ஒருவன் மேன்மையடைய வேண்டுமாயின் லிங்கத்தை அர்ச்சித்தல் வேண்டும்” என்று ஓர் அசரீதி வாக்கு ஒலித்தது.

“முனிவர்கள் அவ்வாறு தோன்றிய லிங்கத்தை, பிரமாவும் திருமாலும் முறைப்படி அர்ச்சித்து வணங்கினர். அதனால் லிங்கத்தில் தோன்றிய சிவபெருமான், “நீங்கள் செய்த துதியால் மிக்க மகிழ்ந்தேன். விஷ்ணுவே எல்லா அண்டங்களிலும் உள்ளவர்களாலும் நீ பூசிக்கப்படுவாய். பகைவர்கள் அனைவரையும் வெல்வாய். என்னைக் கூட வெல்லக் கூடிய வல்லமையை உனக்குத் தந்தேன்” என்ற சிவபெருமான் பிரமதேவரைப் பார்த்து, பிரமனே, யாராலும் அழிக்க முடியாத படைத்தல் தொழிலையும், நான்கு வேதங்களையும் உனது நான்கு முகத்தாலும் உச்சரிக்கும் வல்லமையையும் உனக்குத் தந்தேன்” என்று கூறி மறைந்தார். என்றார் சூத முனிவர்.

அதைக் கேட்ட முனிவர்கள், “மகாத்மாவே, பிரமதேவரால் உலகம் எப்படிப் படைக்கப்பட்டது என்பதைக் கூறுங்கள்” என்றனர்.

“முனிவர்களே, பிரமதேவர் முதலில் நீரைப்படைத்து அதில் தனது வீரியத்தை விட அது பொன்மயமான ஓர் அண்டமாயிற்று. பின் அதை இரு கூறுகளாக்கி ஒன்றைச் சுவர்க்கமாகவும் மற்றதைப் பூமியாகவும் பதின்நான்கு உலகங்களாகவும் படைத்துப் பின் பூமிக்கும் சுவர்க்கத்துக்கும் இடையில் ஆகாயத்தையும் படைத்தார். பூமி பத்துத்திக்குகளை உடையதாகி நீரின் மீது மிதந்து கொண்டிருந்தது. அதன் பின் காலம், மனம், வாக்கு, காமம், குரோதம், ஆசை ஆகியவற்றை உண்டாக்கினார். அதன் பின் மரீசி, அத்திரி, ஆங்கிரசர், புலஸ்தியர், கிருது, உசிட்டர் என்ற எழுவரை பிரமா தனது மானசீகப் புத்திரர்களாகப் படைத்தார். அவர்கள் சப்த பிரமாக்கள் என வழக்கப்படுகின்றனர். அதன்பின் சனத்குமாரரைப் படைத்தார். மானசீகப் புதல்வர்களிடமிருந்து பல வம்சங்கள் உண்டாகின. அதன்பின் மின்னல்,

இடி, மேகம், வானவில், பர்யன்பசன், முதலானவற்றைப் படைத்தார். அதன்பின் நான்கு வேதங்களையும் யாகங்களையும் படைத்தார்".

"மீண்டும் பிரமதேவர், தன் முகத்தில் இருந்து தேவர்களையும், மார்பிலிருந்து பிதுர் தேவர்களையும், புட்டத்தில் இருந்து அசுரனையும், பிறஅவயங்களில் இருந்து பலவிதமான பூதங்களையும் படைத்தார். அவர் படைத்தவை நலிவுற்றிருப்பதைக் கண்ட பிரமதேவர் தனது தேகத்தை இரண்டாக்கி ஆண், பெண் வடிவங்களாக்கிப் படைப்புத் தொழிலைச் செய்ய மனுவைப் படைத்தார். அந்த மனு பல்வேறுபட்ட சீவன்களை உருவாக்கினார்" இவ்வாறு சூத முனிவர் சொன்னார்.

உலக விருத்தி

சூதர் தொடர்ந்து சொன்னார். "பிரமதேவரின் மகிமையால் சதரூபை என்ற பெண்ணொருத்தி படைக்கப்பட்டாள். பின் அவள் அனேக காலம் தவம் செய் மனுவைத் திருமணம் செய்து பிரியவிரதன், உத்தானபாதன் என்னும் இரண்டு புதல்வர்களைப் பெற்றாள். மனுவுக்கும் சதரூபைக்கும் பல பெண்கள் பிறந்தார்கள். கர்தம பிரஜாபதிக்கு காம்பை என்ற பெண் தோன்றினாள். அவளுக்கு சாம்ராட், அசி, விராட், பிரபு என்ற நான்கு புதல்வர்கள் தோன்றினார்கள். உத்தானபாதன் இந்திரனுக்குச் சமமான குமாரர்களைப் பெற்றான். தர்மத்தின் கன்னிகை அதீதியின் கர்ப்பத்தில் உத்தானபாதனுக்கு புதல்வனாகத் துருவன் தோன்றினான். துருவனுக்கு புஷ்டி என்னும் கன்னிகையும் தான்யன் என்னும் குமரனும் பிறந்தார்கள். புஷ்டி என்பவருக்கு ரிபு, ரிபுஞ்சயன், விப்பிரன், விரகலன், விருகசேரசன் என்னும் ஐந்து புத்திரர்கள் பிறந்தார்கள். ரிபு புஷ்கரினியை மணந்து சாசசன் என்ற மனுவைப் பெற்றான். வைராசமனு அனுட்வலை என்பவளை மணந்து பத்துப்பிள்ளைகளைப் பெற்றான். ருரு என்பவன் ஆக்யி என்ற பெண்ணை மணந்து ஆறு பிள்ளைகளைப் பெற்றாள். அங்கன் சுநீதி என்பவளை மணந்து வேன ராசனைப் பெற்றாள்".

வேணராசனின் ஆட்சியில் ஏற்பட்ட குறையினால் வேணனுக்குப் பிள்ளைகள் பிறக்கவில்லை. அதனால் வேதியர் அவனது கையை மதனஞ் செய்ய அவனது வலது கையில் இருந்து பிருதுச் சக்கரவர்த்தி வில்லும் அம்பும் ஒளியும் சகல சாத்திர அறிவும் கொண்டு பிறந்து உலகைச் சிறப்பாக ஆட்சி செய்தார். பிருது தான் பல விதமான தானியங்களையும், பயிர்களையும் விருத்தி செய்து பூமி முதுவதற்கும் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்தான். பிருதுவுக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள் அவர்களைத் தன் படைகளுக்குத் தலைவர்களாக்கினான்.

பிருதுவின் வம்சவிருத்தி

“முனிவர்களே, பிருதுவுக்கு கவிர்த்தாமன், கவிர்த்தானி என்ற இரு பிள்ளைகள் அதன்பின் பிறந்தனர். கவிர்த்தாமன் சிகண்டியை மணந்து பிராசினபர்கி என்ற கன்னிகையையும், பிரதோஸ் என்ற பெயருடைய பத்துப் புதல்வர்களையும் பெற்றான். பிரசீனபர்கவத் சமுத்திரகுமாரி. அவளுக்குத் தோன்றிய பத்துப்பேரும் பத்தாயிரம் ஆண்டுகள் கடலில் மூழ்கித் தவம் செய்தனர். அதனால் உலகம் அரசனின்றி காடானது. மக்கள் தொகை குறைந்து வந்தது. இதை அறிந்த தச பிரதேசுக்கள், தமது கோபாக்கிணியால் காடுகளையும், சனங்களையும் அழிக்கத்தொடங்கினர்”.

அதைக் கண்ட சோமராசன், அவர்களைத் தடுத்து தான் வளர்த்து வந்த பெண்ணை தசப்பிரசேத தக்களுக்குத். திருமணம் செய்து வைத்து விட்டு, “இனிப்பிரபஞ்சம் விருத்தியடையும். உங்களுக்குத் தசப்பிரசாபதி என்பவன் பெரும் சக்தியோடு பிறப்பான். அவன் பிரபஞ்சத்தை மேலோங்கச் செய்வான்” என்றார்.

“அதற்கு இணந்த பதின்மரும் அவளைத் திருமணம் செய்தனர். அவளிடம் தசப்பிரசாபதி சந்திரனது அம்சமாகப் பிறந்தான். தசன் சராசரங்களையும், பிராணிகளையும் சிருஷ்டிக்க எண்ணி சிவ கண்ணியரை உண்டாக்கி அக்கன்னிகளில் பதின் மூவரை காசிபருக்குத் திருமணம் செய்து வைத்துவிட்டுப் பத்துப் பேரைத் தான் மணந்தான். ஏனைய பெண்களை நட்சத்திரங்களுக்கும் கொடுத்தான். அக்கன்னிகளிடமிருந்தே தேவர்களும், அசுரர்களும், பட்சிகளும், நாகங்களும் வேறும் பலவும் உண்டாயின. அதன்பின் அவையவையின் உறவுகள் மூலம் உற்பத்தியாகின்றன” என்றார் சூதமுனிவர்.

காசிபரின் பரம்பரை

“முனிவர்களே, தசப்பிரசாபதி, வீரணப் பிரசாபதியின் மகளைத் திருமணம் செய்து ஐயாயிரம் புத்திரர்களைப் பெற்றான். அவர்களைச் சந்தித்த நாரதர், “பிள்ளைகளே, உங்களுக்குப் படைப்புத் தொழில் சரியாகத் தெரியாது. பூமியின் திக்குகளையும் பிரதேசங்களையும் முழுமையாகத் தெரிந்தபின் படைப்பைத் தொடங்குங்கள்” என்றார். அதனால் அவர்கள் அதைத் தெரிந்து கொள்ளச் சென்றார்கள். அதன்பின் தசப்பிரசாபதி, மீண்டும் கரியஸ்வர் என்னும் பெயரை உடைய ஐந்நூறு பிள்ளைகளைப் பெற்று அவர்களையும் சிருஷ்டி செய்யும் படி கூறினான். அவர்களையும் நாரதர் சந்தித்து முன் சொன்னவற்றைச் சொல்ல அவர்கள் எங்கும் அலைந்து காணாமல் போனார்கள்”.

தனது புதல்வர்கள் திரும்பிவராததை அறிந்த தசப்பிரசாபதி வீரணி என்ற பெண் மூலம் அறுபது பெண்களைப் பெற்று அவர்களில் பத்துப்பேரை தர்மப்பிரசாபதிக்கும், பதின்மூன்று பெண்களை காசிபருக்கும், இருபத்தேழு பெண்களைச் சந்திரனுக்கும், நான்கு பெண்களை அரிட்டநேமிக்கும், இரண்டு பெண்களை பிரம்ம புத்திரர்களுக்கும், இருவரை ஆக்திரிசுக்கும், இருவரைக் கிமுகாசுவர்க்கும் மணம் செய்து வைத்தார்.

காசிபரின் மனைவியரில் திதி என்பவளுக்கு இரண்ணிய கசிபு, இரண்ணியாசன் என்ற இரு பராக்கிரம சாலிகளும், சிம்சிகை என்னும் பெண்ணும் பிறந்தார்கள். காசிபமுனிவர் தனு என்ற தனது மனைவியோடு கூடி நூறு புதல்வர்களைப் பெற்றாள். விஸ்பிரசித்து என்பவன் சிம்சிகையை மணந்து இரண்டு சல்லியன், சுபலி, பலன், மகாபலன், வாதாபி வில்லன், நமுச்சி முதலிய பதின்மூன்று பிள்ளைகளைப் பெற்றான். அவர்கள் மூலம் அனேக புத்திரர்கள் பிறந்தனர். இவ்வாறாக ஆயிரக்கணக்கான பிள்ளைகள் காசிபருக்கும் அவரது பிள்ளைகளுக்கு பேரப்பிள்ளைகளுக்கும் பிறந்தனர்.

இந்திரனால் அசுரர்கள் அழிந்துபோவதைக் கண்ட திதி என்ற காசிபரின் மனைவி காசிபரை அடைந்து இந்திரனைக் கொல்லக் கூடிய ஒரு புத்திரன் வேண்டும் என்று கேட்டாள். அதற்குக் காசிபர், "நீ ஆயிரம் ஆண்டுகள்புண்ணிய பூமியில் விரதத்தை அனுட்டித்தால் இந்திரனைக் கொல்லக்கூடிய புத்திரனைப் பெறுவாய்" என்றார். அதைக் கேட்டு மகிழ்ந்த திதி பூமிக்கு வந்து தவம் செய்தாள்.

அதை அறிந்த இந்திரன் திதியின் தாயின் உருவத்தை எடுத்து வந்து அவனுக்கு உதவிகள் செய்தான். ஒரு நாள் திதி சோர்வடைந்து உறங்கியபோது இந்திரன் தனது வச்சராயுதத்துடன் அவளின் குறியினுடாக உள்ளே சென்று கர்ப்பத்தில் இருந்த கருவை வெட்டும் போது கருவாக இருந்த குழந்தை வீரிட்டு அழ "அழாதே, அழாதே" என்று கூறியபடி இந்திரன் அதை ஏழாக வெட்டி விட்டு வெளியே வந்தான். இந்திரன் திதியைக் கண்டு, "தாயே, நீதியமம் தவறியமையால் தான் நான் உனது குழந்தையை அழித்தேன். அதனால் என் மீது கோபம் கொள்ள வேண்டாம்" என்றான்.

அதைக் கேட்ட திதி, "என்னுடைய குற்றத்தால் அழிந்த எனது கரு பலவாகும். அவற்றை உனது உலகத்திலேயே வைத்திருக்கக் கடவாய்" என்றாள்.

"அதற்கு உடன்பட்ட இந்திரன் ஏழு உலகங்களிலும் மாருதான் என்னும் பெயரோடு அவர்களை வசிக்கும் படி வரம் கொடுத்துவிட்டுச் சென்றான். இவ்வாறு பிரபஞ்சத்தைப் படைத்து பிருது முதலான கச்சரவர்த்திகளையும், இந்திரன், பிரசாபதிகள், பர்வன்யன், குபேரன் முதலிய சுவர்க்க வாசிகளையும் உண்டாக்கினார். பேணனின் மகனான பிருதுவை அகண்ட பிரபஞ்சத்தைப் பல்வேறு பாகங்களாகப் பிரிக்கும்படி காசிபர் கட்டளையிட்டார்" என்றார் சூதமுனிவர்.

உலக நாயகர்கள்

"ஞானியே, பிரபஞ்சம் உருவானதைப் பற்றிச் சொன்னீர்கள். இனி அவர்களுள் எவ்வெவ் வகையாயாக எவரெவருக்குத் தலைவர்களாக இருந்தார்களோ அதையும் நாம் அறிய விரும்புகிறோம்" என்று சூதரிடம் முனிவர்கள் கேட்டனர்.

"முனிவர்களே, பிராமணர், நட்சத்திரம், நவக்கிரகம், ஞசதிகள் யக்ஞும், தவம் முதலியவற்றிற்கு அதிபதி சந்திரன். நீருக்கதிபதி வருணன், அரசர்களுக்குக் குபேரன். ஆதித்தர்களுக்கு விஷ்ணு, அட்டவசுக்களுக்கு அக்கினியும், பிரஜாபதி, மருத்துக்களுக்கு இந்திரன், தைத்தியதானவர்க்கும் பிதிர்களுக்கும் யமன், விரதங்கள், மாதாக்கள் மந்திரம், பசு, யச ராசசா, அரசர்கள், சர்வபூதபைசாசங்கள் என்பனவற்றிற்குப் பரமேஸ்வரன் மலைகளுக்கு இமவான். நதி, கடல், மிருகங்களுக்கு சார்த்தூலத்தையும், அட்டதிக்குகளில் கிழக்கிற்கு சுதர்மன், தெற்கிற்கு நெய்வதன், மேற்கிற்கு கோதுமான். வடக்கிற்கு கிரண்ணிய ரோமன் என்பவர்களை அரசர்களாக நியமித்தார். வைவஸ்வத மனுவின் படைப்பை இதுவரை சொன்னேன்" என்றார் சூத முனிவர்.

பிருதுச் சக்கரவர்த்தியின் பிரபாகம்

முனிவர்களே, பூர்வகாலத்தில் அத்தியி என்னும் பிரசாபதிக்கு இணையான வல்லமைகளோடு அங்கப்பிரசாபதி என்பவன் தோன்றினான். அவன் மித்யுவின் மகளான சுனிதியை மணந்து வேணன், என்னும் புத்திரனைப் பெற்றான். அவன் தர்மம் செய்யாது காம இச்சை கொண்டு அதர்மமாக வாழ்ந்தான். அவனது ஆட்சியில் யாகங்கள் நடைபெறவில்லை. வேதம் ஓதப்படவில்லை. கோவிற் பூசைகள் குறைவடைந்தன. யாகம் செய்பவர்களைத் தண்டித்தான். அவ் அக்கிராமத்தைக் கண்டு மரீசி முதலிய முனிவர்கள் அவனைக் கண்டு வேத முறைப்படி வாழ வேண்டும் என்று உபதேசித்தனர். அதை வேணான் கேட்கவில்லை. அவர்களைப் பரிசுசித்துத்தர்மமில்லாத மூடர்கள் நீங்கள் தான் நான் அல்ல என்று இகழ்ந்தான். அதனால் கோபம் கொண்ட முனிவர்கள் அவனது வலது தொடையைக் கடைந்தனர். அத் தொடையில் இருந்து குள்ளமான ஒருவன் தோன்றினான். அவனின் மூலமாக புனினர் என்போர் தோன்றினர். அவனும் வேணனைப் போலக் கொடியவனாகவே நடந்து கொண்டான்.

அதனால் மீண்டும் வேணனின் வலது கையை முனிவர்கள் கடைந்தனர். அதிலிருந்து கோடிச் சூரியப் பிரகாசமும், அக்கினிக்கு ஒப்பான வலிமையும், சுயசுவம் என்ற வில்லோடும், பலவிதமான அஸ்திரங்களோடும் பிருது என்ற மன்னன் தோன்றினான். அவனைப் பிரமதேவர் நாட்டின் சக்கரவர்த்தியாக்கினார்.

சக்கரவர்த்தியான பிருது தகப்பனான வேணனுக்கு எதிர்மாறாகவே நடந்தான். அதனால் வேதம் ஓதப்பட்டது. யாகங்கள் சிறப்பாக நடைபெற்றன. பூசைகள் நடைபெற்றன மக்கள் மிகவும் மகிழ்வுடன் வாழ்ந்தனர். பிருதுச் சக்கரவர்த்தியின் காலத்தில் பிரமதேவர் ஒரு யாகம் செய்தார். யாக குண்டத்தில் இருந்து சூதன், மாகதன் என்ற இருவர் தோன்றினர். அவர்களைப் பிருதுச் சக்கரவர்த்திக்கு உதவியாளர்களாகப் பிரமதேவர் அனுப்பப் பிருதச் சக்கரவர்த்தி சூதனுக்கு அனுபதேசம் என்ற நாட்டையும், மாகதனுக்கு மகர நாட்டையும் கொடுத்தார்.

அப்போது அங்கிருந்த தேவர்கள், "இவ்வரசன் உங்கள் இருவருக்கும் உலகத்தவர்களுக்கும் நன்மை செய்வான்" என்றார்கள். அதைக் கேட்ட சூதமாகதரும் வேறு சிலரும் பிருகுச் சக்கரவர்த்தியிடம் சென்று, "எமக்கு சீவனோபாயத்தைக் கற்பிக்க வேண்டும்" என்றனர். அதைக்கேட்ட பிருகுச்சக்கரவர்த்தி பூமியில் இருந்து அவர்களுக்கு உணவுவகைகளை வழங்க வேண்டும் என்று நினைத்து வில்லையும் அம்பையும் எடுத்தான். அதனால் பயந்த பூமாதேவி ஒரு பசுவின் வடிவமெடுத்து உலகெங்கும் திரியலானாள். அதைக் கண்ட பிருது பசுவைத் துரத்தப் பசு இந்திரனிடம் சரணடைந்து தன்னைக் காப்பாற்றுமாறு கெஞ்சியது.

யாரும் அதற்குச் சம்மதிக்காமையால் அது பிருதுச் சக்கரவர்த்தியிடம் சென்று, "அரசே, நானில்லாமல் நீ எதைப் பரியாயனம் செய்யப் போகிறாய். எல்லோரும் என்னிடமும் வசிக்கின்றனர். சகலவற்றிற்கும் நானே ஆதாரமாக இருக்கிறேன். நீ புகழ் பெறவேண்டுமானால் என்னை வருந்தாதே. நீ தந்திரத்துடன் முயற்சிசெய். அதனால் உனது எண்ணங்கள் நிறைவேறும். நான் பெண் என் மீது கோபங் கொள்ளாதே. நீ விரைவில் பிருத்வி பாலன் என்ற மேலாண பெயரை அடையப் போகிறாய். அதற்கு விரோதமாக நடந்து தர்மத்தை அழிக்காதே" என்றது.

அதைக் கேட்ட பிருது தனது கோபத்தை அடக்கிப், "பூ தேவியே ஒருவரது துன்பத்தில் பலரது வாழ்வு சிறக்குமானால் அவர் பெண்ணாக இருந்தாலும் இம்சிப்பது பாவமல்ல. நீதான் எனது மக்களைக் காக்க வேண்டும்" என்றான்.

பூதேவி பசுவான கதை

அதைக் கேட்ட பூமா தேவி கனிவுடன் அவனைப் பார்த்து, "மன்னா நான் பசுவின் வடிவில் இருப்பதால், எனக்கேற்ற ஒரு கன்றைத் தேட வேண்டும். நீ மேடு பள்ளங்களைச் சமப்படுத்தினால், எனது பாலை எல்லா இடங்களுக்கும் பரவச் செய்கிறேன்" என்றது. அதைக்கேட்ட பிருது தனது வில்லின் முனையால் மலைகளை உடைத்துப் பூமியைத் திருத்தினான். மூன்பு மேடுபள்ளமாகவும், கிராமம், நகரம், பட்டிணம் தேசம் என்பன

இல்லாமலும் இருந்தன. அத்துடன் பயிர்கள், மிருகங்கள், வர்த்தகம் என்பன இல்லாமலும் இருந்தன.

அதன்பின் பூமியில் மக்கள் குடியேறினர். சகல ஜீவராசிகளும் உருவாகிக் குடியேறின. பிருதுச் சக்கரவர்த்தியின் வேண்டுதலுக்கிணங்க சுயம்பு மனு ஒரு பசுக்கன்றாக வந்து பூமாதேவியான பசுவின் பாலை பருக, அதிலிருந்து பால்பெருகிப் பூமியெங்கும் பரவியது. அதனால் பயிர்கள் உண்டாயின. அவற்றை உயிர்கள் ஆகாரமாக்கிக் கொண்டன. அதன்பின் முனிவர்கள் சந்திரனைக் கன்றாகக் கொண்டு வேதம், தவம், விரதம் முதலியவற்றை உண்டு பண்ணினர். தேவர்கள் இந்திரனைக் கன்றாக்கி தமக்கு வேண்டியவற்றை அடைந்தார்கள். சூரியன் தனது பிரகாசத்தை அதிகரித்தான்.

அதன்பின் தேவர்கள் யமனைக் கன்றாக்கித் தமக்குத் தேவையாவற்றைப் பெற்றனர். நாகர்கள் தசனைக் கன்றாக்கி விசத்தைக் கறந்து கொண்டனர். அதனால்தான் பாம்புகள் காற்றைப் பூசிக்கின்றன. அசுரர்கள் விரோசனைக் கன்றாக்கி மாயை என்ற பாலைக் கறந்தனர். அப்சரசுகளும் கந்தர்வர்களும் சித்ராதரனைக் கன்றாக்கித் தமக்கு வேண்டிய பாலைக் கறந்தனர். யக்சர்கள் குபேரனைக் கன்றாக்கி மறைதலாகிய பாலைக் கறந்தனர். இராட்சதர்கள் மாலியைக் கன்றாக்கி இரத்தமயமான பாலைக் கறந்தனர். இவ்வாறு ஒவ்வொருவரும் பூமி என்ற பசுவில் இருந்து தமக்குத் தேவையானவற்றைப் பால் என்ற பெயரில் பெற்றுக் கொண்டனர். இந்த உலகம் இவ்வாறு பிருதுவிச் சக்கரவர்த்தியால் பாகுபாடு செய்யப்பட்டமையால் இதற்கு பிருத்வி என்ற பெயர் உண்டானது.

சஞ்ஞிகை தேவி சாயா தேவியின் சரித்திரம்

நைமிசாரணிய முனிவர்கள், சூத முனிவரை நோக்கி "மகா ஞானியே, வைவகவத மந்வந்தரத்தின் முறையைச் சொல்லுங்கள்" என்று கேட்டார்கள்.

"முனிவர்களே, காசிப முனிவர் தசப்பிரசாபதியின் புதல்வியைத் திருமணம் செய்து விவசுவான் என்ற சூரியனைப் பெற்றார். துவட்டா என்னும் முனிவரின் புதல்வியான சஞ்ஞிகையைத் திருமணம் செய்தான். சஞ்ஞிகையால் சூரியனது வெப்பத்தைத் தாங்க முடியவில்லை அதனால் அவள் பெருந்துன்பப்பட்டாள். அவளுக்கு மனுவென்ற பிரசாபதியும், யமனும் யமுனை என்ற பெண்ணும் இரட்டைப் பேறாகப் பிறந்தார்கள்". சஞ்ஞிகை தனது சக்தியால் தன்னைப் போன்ற சாய என்ற பெண்ணை உருவாக்கி அவளுக்குச் சாயை என்று பெயரிட்டாள். சாயை சஞ்ஞிகையைப் பார்த்து, "என்னை உருவாக்கியதன் காரணம் என்ன?" என்று கேட்டாள்.

“நான் எனது தந்தையின் வீட்டுக்குச் செல்லப் போகிறேன் போய்வரும்வரையும் நீ எனது கணவனோடு வாழ். அத்துடன் எனது பிள்ளைகளையும் பராமரி” என்றாள்.

“என்னால் முடிந்தவரை செய்கிறேன். எனது மாறு வேடம் வெளிப்பட்டால் உண்மையைச் சொல்லிவிடுவேன்” என்றாள். அதற்குச் சம்மதித்து விட்டுச் சஞ்ஞிகை தனது தந்தையின் வீட்டுக்குச் சென்றாள். தனது மகளைக் கண்ட துவட்டா மிகவும் கோபித்து, “உனது கணவனுக்குத் தெரியாது நீ இங்க வந்ததால் நீ ஒரு பெண் குதிரயாகக் கடவாய்” என்று சபித்தார். அதனால் அவள் உத்தர குரு என்னும் இடத்தில் பெண் குதிரையாக மாறி வாழ்ந்து வந்தாள்.

சஞ்ஞிகை உருவாக்கிய சாயையின் வேறுபாட்டை உணராத சூரியன் அவளோடு கூடி இருந்து சாவர்னி மனு, சனி என்ற இரு புத்திரர்களையும், பத்திரை என்ற பெண்ணையும் பெற்றான். சாயை தனது பிள்ளைகளை அன்பாகவும், சஞ்ஞிகையில் பிள்ளைகளாகக் கொடுமைப்படுத்தியும் வந்தாள். அதைச் சாயாவின் புத்திரனான யமன் சகிச்ச முடியாது காலால் உதைத்தான். அதனால் அவள், “உனது கால் புழுக்கக் கடவது” என்று சபித்தாள்.

அதனால் மனம் வருந்திய யமன் அதைத் தந்தையான சூரியனிடம் முறையிட்டான். அதைக் கேட்ட சூரியன் “மகனே, தாயின் சாபத்தை விலக்குவது அரிது. அதனால் அவளுடன் கதைத்துச் சரி செய்கிறேன்” என்று கூறிவிட்டுச் சாயா தேவியிடம் சென்று கோபிக்க அவள் அதைப் பொறுக்க முடியாது உண்மையை வெளிப்படுத்தினாள். அதனால் பெருங்கோபம் கொண்ட சூரியன், அதைத்துவட்டாவிடம் முறையிடத்துவட்டா அவனைச் சமாதானம் செய்து அவள் தனது சாபப்படி உத்தர குரு என்ற காட்டில் பெண்குதிரையாக மாறி உனது வருகைக்காகக் காத்திருக்கிறாள் என்று சொன்னார்.

அதனால் கோபம் நீங்கிய சூரியன் தனது வெப்பத்தால் தான் அவள் நீங்கினாள் என்பதை அறிந்து துயரப்பட்டான். அதைக் கண்ட துவட்டா “நீங்கள் விரும்பினால் நான் சாணை பிடித்து உனது வெப்பத்தைக் குறைப்பேன்” என்றார். அதற்குச் சூரியன் ஒப்புக் கொண்டமையால் அவனைச் சாணையில் ஏற்றிச் சாணை பிடித்து அவனை ரம்மியம் மிக்கவனாக்கினார்.

“அழகே உருவான சூரியன், ஓர் ஆண் குதிரையின் வடிவமெடுத்து உத்தர குருவை அடைந்தான். அங்கு அவனின் மனைவியான பெண்குதிரையைக் கண்டு மனம் மகிழ்ந்து அதனுடன் கூடிக் கழிக்க விரும்பினான். பதிவரதையான அவள் அதற்குச் சம்மதிக்கவில்லை. அதனால் சூரியனான ஆண் குதிரை நாசி வழியாகத் தனது வீரியத்தை விட்டது. அவ் வீரியத்தின் மூலம் அஸ்வினி தேவதைகள் நசத்தியர் என்ற தசரர் பிறந்து தேவர்களின் வைத்தியர்களானார்கள். பெண்குதிரை, ஆண்குதிரையாக வந்தது தனது கணவனான சூரியன் என்பதை அறிந்து மகிழ்ந்தாள்.

யமன் தென்திசைக்கு அதிபதியாகவும் பிதிர்களுக்குத் தலைவனுமானான். சனி மிகவும் கோரமாகத் தவம் செய்து நவக்கிகரங்களில் ஒருவனானான். யமனின் தங்கையான யமுனை வெகுகாலம் தவம் செய்து புனிதமான நதியாகி யாவரையும் சுத்தம் செய்து காளிந்தி என்னும் நதியாகிப் பிரபாகித்து ஓடி வருகிறாள்" என்றார் சூத முனிவர்.

வைவஸ்தவத மனுவின் மரபு

"முனிவர்களே, சூரியனின் புத்திரனான வைவஸ்தவத மனுவுக்கு ஒன்பது புத்திரர்கள் பிறந்தனர். அதன்பின் வைவஸ்தவத மனு யாகம் செய்ய இடை என்ற பெண் தோன்றினாள். அவளைக் கண்டு அவளின் அழகில் மயங்கிய மனு அவளைத் திருமணம் செய்ய முயன்றான். அவள் அதை மறுந்து மித்திரா வருணர்களிடம் சென்று தன்னைத் திருமணம் செய்யுமாறு கூறினாள்". அதை ஏற்க மறுத்த அவர்கள், "பெண்ணே, நீ மகத்தான கீர்த்தியைப் பெற்று, மனுச்சக்கரவர்த்தியின் குலத்தை விருத்தி செய்யக் கூடிய கத்தியும் நன் என்னும் பெயரை உடைய புத்திரன் ஆகப்போகிறாய்" என்றார்.

அதைக் கேட்டுக் கொண்டு இடை திரும்பி வரும் போது சந்திரனுடைய புத்திரனாகிய புதன் அவளைக் கண்டு காதல் கொண்டான். இடையும் அவனை விரும்பி அங்கேயே கூடிக்குலாவினர். அதனால் புரூரச் சக்கரவர்த்தி பிறந்தார். உடனே இடை தனது பெண் உருவை இழந்து சுத்தியும் நன் என்னும் ஆண் வடிவத்தைப் பெற்றாள். அவளே சுத்தியும் நன் என்னும் புருசனாகவும் இடையென்னும் பெண்ணாகவும் தோன்றி இருவரும் கூடி உத்கலன் , கயன், விந்தாசுவன் என்ற மூன்று புத்திரர்களைப் பெற்றனர். உத்கலன் தென்திசையையும், விந்தாசுவனுக்கு மேல் திசையையும், கயனுக்குக் கய நாட்டையும் இடை கொடுத்தாள்.

"வைவசுவதமனு பிரபஞ்சத்தைப் பத்துப் பிரிவுகளாகப் பிரித்துத் தமது புத்திரர்களுக்குக் கொடுத்தான். அவனின் புத்திரரான குசஸ்தலி, ரேவதி என்ற பெண்ணைப் பெற்று அவளைப் பலராமனுக்குத் திருமணம் செய்து வைத்தான். அதே நேரம் ஆட்சியை தானவர் கைப்பற்றியதால் அவனது புதல்வர்கள் நூறு பேரும் பல நாடுகளுக்கும் சென்றனர். இவ்வாறு மனுவின் வம்சம் பெருகியது".

பிதுர்தேவர் சிறப்பு

நைமிசாரணிய முனிவர்கள் சூதமுனிவரை நோக்கி, "மாமுனிவரே, சிரார்த்த தேவர்கள் யார்? பிதுர்கள் யார்? அவர்களை எவ்வாறு வழிபட வேண்டும். அவ்வழிபாட்டால் உண்டாகும் பயன்கள் என்ன?" என்று கேட்டார்கள்.

“முனிவர்களே அருமையான விசயத்தைக் கேட்டீர்கள் பிதிர்கள், சிரார்த்த கருமங்களில் மகிழ்ச்சியடைவார்கள் அவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுத்துப் பூசித்தல் வேண்டும் அவ்வாறு செய்தவர்கள் பிதிர்களால் விரும்பியவற்றை அடைவார்கள். சில பிதிர்கள் புண்ணியம் செய்தமையால் சுவர்க்கத்தை அடைவர். சில பிதிர்கள் பாவம் செய்தமையால் நரகலோகத்தை அடைவர்”.

“தேவர்களும் பிதிர்களுக்கான சிரார்த்தங்களைச் செய்கிறார்கள். பீஷ்மர் தர்மராசனுக்குச் சொன்னார், “தர்மநந்தனா, நான் எனது தந்தையான சந்தது மாமன்னருக்குச் சிரார்த்தம் கொடுத்தபோது ஆவாகனஞ் செய்த இடத்தில் இருந்து எனது தந்தை தோன்றி பிண்டத்தைக் கை நீட்டிக் கேட்டார். நான் அதைக் கொடுக்காது தர்ப்பையின் மீது வைத்தேன். அதை எடுத்து அவர் மகிழ்வுடன் உண்டார். பின்பு சொன்னார், “நீ தர்மவான் உன்னால் நான் பல பேறுகளை அடைந்தேன். அரசன் செய்யும் காரியத்தைப் பின்பற்றியே குடிகளும் வாழ்கிறார்கள். நீ எனக்குப் பிண்டத்தைக் கையில் தராது தர்ப்பையில் வைத்தாய். அதனால் உலகில் தர்மநெறி வளரப்போகிறது. நான் மிக்க மகிழ்ந்தேன்.”

“நீ விரும்பியபோது தான் உனது உயிர்போகும்” என்ற போது நான் கேட்டேன், “நாகலோகத்தை அடைந்த பிதிர்கள் சிரார்த்தத்தால் எவ்வாறு திருப்தியடைகிறார்கள்”.

“மகனே, ஆதி தேவனுடைய புத்திரர்களான பிதுர்கள் தேவர், அசுரர், மானுடர், பசர், ராட்சதர், கந்தர்வர், இன்னரர், உரகர்கள்லேயும் பூசிக்கத்தக்கவர்கள் எந்த வர்ணாச்சிரமத்தில் பிறந்தவர்களானாலும் பிதுர்களுக்குச் சிரார்த்தபூசை செய்தல் வேண்டும். தங்கள் பிதிர் கோத்திர நாமங்களைக் கூறி, சிரார்த்தங்களைச் செய்தால் பிரமனால் படைக்கப்பட் சிரார்த்ததேவர்கள் அதை அடைந்து பிதிர்கள் எங்கிருந்தாலும் எங்களை அவர்கள் திருப்தி செய்கிறார்கள்” என்று கூறிவிட்டுத் தந்தை மறைந்தார்.

அவர் மறைந்த பின்பு நான் மார்க்கண்டேய முனிவரிடம் சென்று பிதிர்களைப் பற்றிக் கேட்டேன். அவர், “பீஷ்மா, நானும் நீயும் பிறரும் பிதுர்களின் அனுக்கிரகத்தாலேயே எல்லாவற்றையும் பெறுகிறோம். நான் முன்பு மேரு மலையில் உச்சியில் தவம் செய்து கொண்டிருந்தேன். அப்போது திவ்வியமான விமானம் ஒன்று சுவர்க்கத்தில் இருந்து வரக்கண்டேன். அதில் பெரும் பிரகாசத்துடன் ஒருவர் அமர்ந்திருந்தார்” அவரைப் பணிந்து நீங்கள் யாரென்று கேட்டேன். அவர், “நான் பிரமதேவரின் மானச புதல்வனாகிய சனத்குமாரன். நான் நெடுங்காலத்துக்கு முன்பு தோன்றினாலும் இளமையான குமரனைப் போல இருப்பதால் சனத்குமாரன் என்று அழைக்கப்படுகிறேன். நீ பெரும் பக்தியுடன் தவம் செய்வதால் மகிழ்ந்து உன்னைக் காணவந்தேன். நீ விரும்பும் வரத்தைக் கேள்” என்றார்.

“மாதவரே, பிதுர்களின் உற்பத்தியைப் பற்றி விரிவாகச் சொல்லுங்கள்” என்று கேட்டேன்.

"முனிவனே, முன்பு பிரமதேவர் சில தேவர்களைப் படைத்துத் தன்னை வழிபடும் படி கூறினார். அவர்கள் பிரமதேவரைப் பூசிக்காது தம்மைத்தாமே பூசித்தனர். அதனால் கோபங்கொண்ட பிரமா தேவர்களை, "நீங்கள் ஞான வீனர்களாவீர்கள்" என்று சபித்தார். அதனால் நலிவடைந்த அத்தேவர்கள் பிரமதேவரை மன்னிக்குமாறு பணிந்து வேண்டப் பிரமதேவர், "எனது புத்திரர்களைச் சந்தித்து அதற்கான பரிகாரங்களைக் கேளுங்கள் என்றார். அதன்படி அவர்கள் பிரம புத்திரரை வேண்ட, அவர்கள், "உங்கள் விருப்பப்படி செல்லுங்கள் புத்திரரே" என்று அவர்களின் சாபத்தை விலக்கினார்கள். அப்போது பிரமதேவர் அவர்கள் முன்தோன்றி, "அமரர்களே, நீங்கள் எனது புத்திரர்களால் புத்திரர்களே, என்று அழைக்கப்பட்டதால் அவர்கள் பிதுர்களாகவும், நீங்கள் புத்திரர்களாகவும் விளங்குவீர்களாக" என்று அனுக்கிரகம் செய்தார். அத்தகைய பிதுர்களை அழைத்துத் தானம் செய்தால் அப்பிதுர்த் தேவர்கள் மகிழ்ந்து செய்பவனுக்கு விரும்பியவற்றைச் செய்வர்" என்று சனத்குமார முனிவர் கூறினார்.

பிதுர் பக்தியின் பயன்

சனத்குமார முனிவர் பீஷ்மருக்குச் சொன்னார், "இராஜசிரேஷ்டரே, கவ்வியவாகன், அலைன், சோமன், யாமன், அரியமான், அக்னி நிஷ்வாத்தன், பர்கிசிதன் என்ற பிதுர்தேவர்கள் ஏழுபேர் இருக்கிறார்கள். அவர்கள் சுவர்க்கத்தில் இருக்கிறார்கள். அவர்களுள் நால்வர் தேகத்தோடும், மூவர் தேகம் இல்லாமலும் இருக்கின்றனர்". இவர்களில் மூவரைத் தேவர்களும் ஏனைய நால்வரை மற்றய வர்ணமக்கள் வணங்குவர்

"பிதுர்களுக்குச் சிரார்த்த காலத்தில் வெள்ளிப் பாத்திரத்தினால் சிரார்த்தம் செய்தல் வேண்டும். மனைவியோடு கூடி அக்நிமானாயின் சுதா என்ற சப்தத்தினால் கோமம் செய்தல் வேண்டும். அல்லது நீரால் அல்லது பிராமனது கையினாலோ கோமம் செய்தல் வேண்டும். அப்படிச் செய்வோர் சிவயோக சௌக்கியத்தையும் பரலோக சௌக்கியத்தையும் அடைவர். தேவகாரியத்தைக் காட்டிலும் பிதுர்க்காரியம் சிறந்தது. பிதுர்க்காரியத்தினால் அடையும் கதியை யோக பலத்தினாலும் அடைய முடியாது." என்று கூறி உபதேசித்து விட்டு விண் வழியே சென்றார்.

"பீஷ்மரே, முன்பு நடந்த ஒரு சரித்திரத்தைச் சொல்கிறேன். பரத்வாஜ முனிவரின் மைந்தர்கள் ஏழு பேரும் துர்நடத்தையால் பிரஷ்டர்களானார்கள். அவர்கள் ஏழுபேரும் அப்பிறவியை ஒழித்து கௌசிக முனிவருக்குப் புதல்வர்களாகப் பிறந்து கர்க்க முனிவரின் சீடர்களாகி தங்களது ஆசிரியருக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தனர். அப்போது கர்க்க முனிவர் வேறு ஓர் ஆச்சிரமத்தில் நின்ற பசுவையும் கன்றையும் வாங்கி வரும்படி சொன்னார். அதன்படி சென்று பசுவையும் கன்றையும் அவ் ஏழு பேரும் வாங்கிக் கொண்டு வந்தனர்.

வழியில் அவர்களுக்குப் பசியினாலும், அறியாமையாலும், பாவத்தினாலும் அந்தப் பசுவைக் கொன்று தின்னலாம் என்ற நினைவு வந்தது".

அவர்கள் அதைக் கூற இருவர் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. அவர்களுள் பிதுர்வர்த்தி என்பவன் பிதுர்பக்தியுடையவனாக இருந்தமையால், "நீங்கள் இந்தப் பசுவைக் கொல்வதனால் பிதுர்ப்பிரீதி செய்து விட்டுக் கொன்று தின்னலாம்" என்றான். அதை ஒப்புக் கொண்ட ஏழு பேரும் அதைக் கொன்று சிரார்த்தத்துக்கு உபயோகித்து விட்டு அனைவரும் உண்டனர். பின்பு அவர்கள் கன்றை மட்டும் குருவிடம் கொடுத்து விட்டுப் பசுவைக் காட்டில் வரும்போது புலியொன்று கொன்று தின்று விட்டது என்றனர்.

குரு அவர்கள் சொன்னதை நம்பிவிட்டார். அவர்கள் ஏழு பேரும் பசுவைக் கொன்று தின்றதாலும், குருவுக்குப் பொய் சொன்னதாலும் தசார்கணம் என்னும் காட்டில் வேடுவர் குலத்தில் ஒரு தாய் பிள்ளைகளாகப் பிறந்தார்கள். அப்போது முற்பிறவியில் செய்த பாவங்கள் அவர்களின் நினைவுக்கு வந்து அவர்களைத் துன்பப்படுத்தியது. அதன்பின் காலஞ்சரம் என்ற மலையில் மிருகங்களாகப் பிறந்தார்கள். அதன் பின் இந்தப் பிறவியை ஒழித்து விட வேண்டும் என்ற நினைவுடன் சரத்தீபத்தில் சக்கரவாகப் பறவையாகப் பிறந்தார்கள். அப்போது நீல தேசத்து அரசன் வேட்டையாடக் காட்டுக்கு வந்தான்.

நீல தேசத்து அரசனைக் கண்ட சக்கரவாகப் பறவை ஒன்று அவனது செல்வத்தைக் கண்டு பொறாமைப்பட்டு, "நான் இவனைப் போல அரசனாவதற்குப் பூர்வ புண்ணிய பயன் இருக்குமா" என்று வாய்விட்டுச் சொன்னது. அதைக் கேட்ட அப்பறவையின் உடன் பிறப்பான இரு பறவைகள், "நீ அரசனாகப் பிறந்தால், நாம் அமைச்சராகலாம்" என்றன. அதைக்கேட்ட மற்றப் பறவை சொன்னது, "நீங்கள் ஞானத்தை விரும்பாது அரச பதவிகளை விரும்புகிறீர்கள். உங்கள் ஆசைப்படி அவன் அரசனாகவும், நீங்கள் மந்திரிகளாகவும் காப்பிலிய தேசத்தை அடைவீர்கள்" என்றது. அதற்கு அப்பறவை, "எமக்கு ஞானம் எப்போது தோன்றும்" என்றது. "நாம் பிதுர்பக்தியுடையவர்களாதலால், அடுத்த பிறவியில் நாம் மானிடப் பிறவியை அடைந்து ஞான வான்களாவோம்" என்றது.

கர்க்க முனிவரின் சீடர்கள்

ஏழு சக்கரவாகப் பறவைகளும் தவம் செய்தன. நீல தேச மன்னன் நாட்டுக்குச் சென்று சிலகாலம் கழித்து தனது புதல்வனான கநுகன் என்பவனுக்கு முடி சூட்டிவிட்டு காட்டுக்கு வந்து தவம் செய்தான். அவனது தவத்தினால் அந்த வனம் பிரகாச மடைந்தது அதனால் வைப்பிராஜம் என்னும் பெயரைப் பெற்றது.

சக்கரவாகப் பறவைகள் தவத்தை விருப்புடன் செய்தன. அதனால் ஒரு பறவை கநூகன் என்ற பெயரில் காம்பிலிய நாட்டின் அரசனாகப் பிறந்தது. இரு பறவைகள் அந்நகரில் உள்ள பிராமணனுக்குப் பிள்ளைகளாகப் பிறந்து வேதங்களைக் கற்று சாத்திரவான்களாக வாழ்ந்தனர். ஏனைய பறவைகளில் ஒன்று வேதியனாகப் பிறந்து. வேத ஆசிரியராக விளங்கியது. ஒரு பறவை சாமவேத விற்பன்னனாகவும், மறு பறவை யாகம் செய்விக்கும் ஆசிரியனாகவும் பிறந்தது.

பின் அவர்கள் எல்லோரும் மிகக் கடுமையாகத் தவம் செய்து முத்தியடைந்தனர். "பீஷ்மரே, அவர்கள் பசுவைக் கொன்று தின்றாலும் பிதுர்க்காரியம் செய்தமையால் பல பிறவிகளைக் கடந்த போதும் முற்பிறப்பின் உணர்வுகளை மறவாது இருந்தமையால் நல்ல நிலையை அடைந்தனர். அதனால் எல்லோரும் முறைப்படி பிதுர்க்கடனைச் செய்தல் வேண்டும். என்று மார்க்கண்டேய முனிவர் எனக்குச் சொன்னார் என்று பீஷ்மர் தர்மராசனுக்குச் சொன்னார்" என்று சூத முனிவர் நைமி சாரணிய முனிவர்களுக்குக் கூறினார்.

"சிவமகா புராணத்தைப் பக்தியோடு படிப்பவர்களும், கேட்பவர்களும் சிவனது பாதங்களை அடைவர். மகாதேவா என்று ஒரு முறை சொன்னால் பிமரகத்தி முதலான பாவங்கள் யாவும் அழிந்து போகும். சிவபொருமான் மகிழ்ந்து பெரும் பதவிகளைத் தருவார்" என்றார் சூத முனிவர்.

3. கைலாய சம்கிதை

காப்பு

நமஸ் ஸிவாய ஸாம்பாய ஸகணாயஸ ஸ்நவே

ப்ரதாந புருஷே ஸாய ஸர்கஸ்தித் யந்தஹேதவே!

சத்திரயாகமும் வியாசரின் கேள்வியும்

முன்பு ஒரு சமயம் இமயமலையில் தவம் செய்த முனிவர்கள் காசிக்கு வந்தனர். அங்கு வந்து முறைப்படி விஸ்வநாதருக்குப் பூசை செய்து அவரை தோத்திரங்களால் வணங்கினர். அப்போது அங்கு வந்த சூத முனிவர் இமயமலையில் தவம் செய்து விட்டு விஸ்வநாதரை வணங்கிய முனிவர்களைப் பார்த்து, "நலமாக இருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

"சிவபெருமானின் அருளால் நன்றாக இருக்கிறோம். வேதவியாச பகவானால் தங்களுக்கு உபதேசித்த மகா முனிவரே, எமக்குச் சிவசரிதத்தை உபதேசிக்க வேண்டும்" என்று கேட்டனர்.

“புண்ணியசீலர்களே, மிகவும் பயனுள்ள கேள்வியைக் கேட்டீர்கள். இதை எனது குருவான வியாச முனிவர் நைமி சாரணிய முனிவர்களுக்குச் சொன்னார். அதை உங்களுக்குச் சொல்கிறேன். புலன்களை அடக்கிக் கேளுங்கள்” என்றார்.

“முன்பு புண்ணிய பூமியாகிய நைமி சாரணியத்தில் முனிவர்கள் யாவரும் கூடி தீர்க்க சத்திரயாகம் செய்ய விரும்பி வியாச பகவானின் வருகைக்காகக் காத்திருந்தனர். அப்போது வந்த வியாசபகவானை வணங்கி அவரை வரவேற்று யாகசாலைக்கு அழைத்து சென்று பொன்னால் செய்யப்பட்ட ஆசனத்தில் அமர்த்தினர்” பின்.

“நாராயணினின் அம்சமாகத் தோன்றியவ எமது, நீரோ உலகம் அனைத்துக்கும் குருவானவர். அதனால், நீ பரமசிவனை நாம் அறிய வேண்டும் என்ற எண்ணம் நிறைவேறாமையால் அதைத் தாங்களே எமக்குக் கூறியருளல் வேண்டும். எமது சந்தேகங்களைப் போக்கக் கூடியவர் தங்களையன்றி வேறுயாரும் இலர். அதனால் நாம் முத்தியடைய அவற்றைக் கருணை கூர்ந்து எமக்குச் சொல்லல் வேண்டும்” என்றனர்.

வேதவியாசர், பரமேஸ்வரனைத் தியானித்து விட்டுச் சொல்லத் தொடங்கினார்.

பார்வதி பரமேஸ்வரன் உணரையாடல்

“அந்தணப் பெரியோரே, ஜகன் மாதாவான ஈஸ்வரி, இமாலய மன்னனுக்குப் புதல்வியாக உமை என்ற பெயரில் தோன்றினாள்” அவள் சிவபெருமானைத் திருமணம் செய்தபின் ஒரு நாள், “பகவானே, எனக்கு மந்திர தீட்சை செய்தருளல் வேண்டும்” என்று கேட்டாள்.

“தேவி உனக்கு மந்திர தீட்சை செய்து உன்னைப் பரிசுத்தமாக்க வேண்டுமாயின் நீ கைலாயங்கிரிக்கு வா” என்றார் சிவபெருமான். தேவி அங்கு செல்ல அவளுக்கு மந்திர தீட்சை செய்யும் பிரணவத்தை உபதேசித்தார். அப்போது உமை, “நாதா, நான் பிரணவ மந்திரத்தின் பொருளை அறிய விரும்புகிறேன். அது எப்படித் தோன்றியது, அதற்கு ஏன் அப்பெயர் உண்டானது? அதில் எத்தனை மந்திரங்கள் உள்ளன? அந்த மந்திரத்தின் தேவர் யார்? அதை எப்படி பூசிப்பது? அதை ஜெபிக்கத்தக்கவர்கள் யார்? அதனால் உண்டாகும் பயன்கள் எவை” என்று கேட்டாள் அவற்றைச் சிவபெருமான் சொல்லத் தொடங்கினார்.

பிரணவப் பொருள்

“பார்வதி, நீ கேட்டவற்றைச் சொல்கிறேன் பிரணவப் பொருளை உணர்வதே, எனது சொரூபத்தை உணர்வதாகும். அது எல்லாவித்தைகளுக்கும் வித்தையாக விளங்குவது. அதனால் சாதாரனமானவர்களால் விளங்கிக் கொள்ள முடியாது. “ஓம்” என்ற பிரணவத்திலேயே நான் பூரணமாக இருக்கிறேன். உலகில் உள்ள எல்லாவற்றிலும் பிரணவமே காணப்படுகிறது. அதுவே பரப்பிரமம். அதுவே ரகாசரம் என்ற அவதி மந்திரம். எல்லாவற்றிற்கும் ஆதியில் இருந்து அது உச்சரிக்கப்படுகிறது. நான் தான் பிரணவம். பிரணவம் தான் நான் இரண்டிற்கும் எதுவிதபேதமும் இல்லை. பிரணவமே வாச்சியம், நான் தான் அதன் வாசகம். மோட்சத்தை அடைய விரும்புவோர் பிரணவத்தை அறிய வேண்டும். அது பஞ்ச வர்ணாத்மகமானது. அகார உகார மகாரங்களாகிய மூன்றும் சேர்ந்து மூன்று மந்திரைகளை உடையதாக உச்சரிக்க அது பிரணவமாகும்”.

“மேலும் அதனோடு அரைமாத்திரை கூட்டி உச்சரித்து ஈசான மந்திரத்தை ஜெபித்தால் நாத பிந்துக்கள் மூலமாக என்னை அறியலாம். பிரணவ ரூபியான என்னிடமிருந்தே வேதங்கள் தோன்றின. அகாரமானது ராஜோ குணத்துடன் நான்கு முகங்களையுடைய பிரமனாக மாறிப் படைப்புத் தொழிலைச் செய்கிறது. உகாரமானது சத்வ குணத்துடன் பிரகிருதி என்னும் யோனியாகிய விஷ்ணு உருவமாகி உலகைக் காக்கிறது. மாகாரமானது தாமோ குணத்துடன் உருத்திரனாகிப் புரிசனாய் உலகைக் சங்கரிக்கிறது. பிந்துவானது மகேஸ்வர சொரூபமாகி எல்லாவற்றையும் அனுக்கிரகிக்கிறது”.

“வாமதேவ மூர்த்தியில் இருந்து பதின்மூன்று கலைகளும், அகோர மூர்த்தியில் இருந்து நான்கு கலைகளும், ஈசான மூர்த்தியில் இருந்து ஐந்து கலைகளும் தோன்றும். மந்திரம், யந்திரம், தேவதை, பிரபஞ்சம், குரு, சீடன் என்ற ஆறு வகைச் சாதனங்களால் என்னை அறிந்து கொள்ளல் வேண்டும்”.

“ஆறு ஆதாரங்களுக்கும் அப்பாற்பட்டிருக்கும் என்னை வைராக்கியத்துடன் தியானிக்க வேண்டும். என்னை உணர வேண்டுமானால் விரதம், சாந்தம், தவம், புலனடக்கம், சௌரம், ஆசாரம் வேத ஞானம், பிராமணத்துவம், விஷய விருத்தி என்பவற்றை உடையவன் உத்தம ஆசிரியரான பதியை வணங்கி மகிழச் செய்து அவரைச் சிவமாகப் பாவித்து, தனது மனநிலையை அறிந்து கொள்ளல் வேண்டும்”.

“குருவின் அனுமதியுடன் பன்னிரண்டு நாட்கள் பாலை மட்டும் உணவாக உண்டு கடற்கரை, நதி, மலை, சிவாலயம் முதலிய இடங்களில் சுக்கிரபட்ச பஞ்சமி அல்லது ஏகாதசியன்று காலைக் கருமங்களை முடித்துக் குருவை வணங்குதல் வேண்டும். பின் பிதுரரை அர்ச்சித்து நீராடிய இருபத்தைந்து நாழிகையின் பின் பொரிமாவை உண்டு,

மாலைக்கடன்களை முடித்து விட்டு ஔபாசனம் செய்து காணிக்கை கொடுத்துக் குருவை வணங்க வேண்டும். பின் கோம அக்கினியை ஆத்மரோபணம் செய்யும் மந்திரத்தைச் சொல்லி அன்னத்தை உண்டு புருஷசு மந்திரத்தினால் ஓமாந்தம் செய்தல் வேண்டும்".

"அந்த அக்கினியின் வடதிசையில் தர்ப்பையால் செய்த ஆசனத்தில் மரவுரி அல்லது மான் தோல் அணிந்து அமர்ந்து காயத்திரி மந்திரத்தை ஐந்து நாழிகை வரை ஓதுதல் வேண்டும். பின் பிரம முகூர்த்தத்தில் நீராடி விரசா கோமத்தை வாமதேவ மதத்தினாலாவது அல்லது சௌககாதி மதத்தினாலாவது செய்தல் வேண்டும். ஓமத்தை முடித்து காலைக் கடன்களை முடித்து நித்தியாக்கினியை வளர்த்து காயத்திரி மந்திரத்தைச் சொல்ல வேண்டும்".

"விரக்தி முற்றுப் பெற்றவுடன் ஆசிரியரை அடைந்து வணக்க வேண்டும். பின் புஸ்பத்தை எடுத்து உடல் முழுவதும் பூசி நெற்றியில் திரிபுண்டரம் தரித்து பிரணவ மந்திரத்தை ஓதுதல் வேண்டும்".

"தேவி இவ்வாறு செய்பவனுக்கு யதி என்ற பெயரும் என்னைப் பூசை செய்யும் யோக்கிதையும் உண்டாகும். ஓம் என்று உச்சரிப்பவன் எனது உலகத்தை அடைந்து சாயுச்சியத்தைப் பெறுவான்" என்று சிவபெருமான் கூறினார்.

வாமதேவர் முருகப் பெருமானை அடைதல்

"சூத முனிவரே, நீங்கள் பூர்வகாலத்தில் வாமதேவரால் சொல்லப்பட்ட விரஜாகோமத்தைப் பற்றிச் சுருக்கமாக எமக்குச் சொன்னீர்கள். அதை விரிவாகச் சொல்ல வேண்டும்" என்று முனிவர்கள் கேட்டார்கள்.

சூத முனிவர் அவர்களை நோக்கி, "பாமரகசியமாகவும், அதியற்புதமுமான விரஜா கோமத்தை எனது குரு எனக்குச் சொன்னார். அது பரம இரகசியம் வெளிப்படுத்தக் கூடாது. நீங்கள் சிவ பக்தியில் மேம்பட்டவர்கள் ஆகையால் அதை உங்களுக்கு உபதேசிக்கிறேன். சிவ நினைவுடன் கேட்பீராக".

"பூர்வத்தில் பிறவியை ஒழித்தவராகவும் உபநிடதங்களை முழுமையாக அறிந்தவராகவும், தேவர்களினதும் அசுரர்களினதும் மனிதர்களினதும் கர்மத்தின் பயனை உணர்ந்தவராகவும் திகழ்ந்தவர் வாசுதேவ முனிவர். அவர் உடலெங்கும் வீபூதி பூசியிருப்பார். உருத்திராட்சம் அணிந்திருப்பார். அவர் தனக்கு இணையான சீடர்களோடு எல்லா அண்டங்களுக்கும் எப்போதும் சென்று வருவார். அப்படிச் சென்று வரும் போது ஒரு நாள் மகாமேரு மலையின் தென்பாகத்தில் உள்ள குமார சிகரத்தை அடைந்தார். அப்போது

அவருக்கு சிவபெருமானது புத்திரராகிய சுப்பிரமணியரை வணங்க வேண்டும் என்ற எண்ணம் உருவானது".

அதனால் தனது சீடர்களுடன் சரவணப் பொய்கைக்குச் சென்று நீராடினார். பின்பு பிதுர்களுக்குத் தர்ப்பணம் செய்து நீறு பூசிக் கொண்டார். குமரகிரியில் நாரதர் முதலில் பல முனிவர்களுடன் மயில்வாகனத்தில் நான்கு கைகளோடும், மகுடம், கேயூரம். முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்ட சர்வ அவயவங்களோடும், சேவற்கொடி வரத அபய அஸ்தங்களோடும் குமர குருபரனான சுப்பிரமணியனைக் கண்டார். அதனால் பெரு மகிழ்வுடன் அட்டாங்கமாக விழுந்து வணங்கித் தோத்திரங்களைச் சொன்னார். பின் "செந்தாமரையை ஒத்த உனது திருவடியைப் பணிகிறேன். என்று பலமுறை சொல்லி, மும்முறை வலம் வந்து சுப்பிரமணிய யோகம் எனும் சாம வேதத்தைப் பாடிய படி கரங்குவித்து நின்றார். அதைக் கண்ட தேவசேனாதிபதியான சுப்பிரமணியர் மகிழ்ந்து அவரை நோக்கிச் சொன்னார".

"வாமதேவ முனிவனே, உனது தோத்திரத்தைக் கேட்டு மகிழ்ந்தேன். உனக்கு மங்களம் உண்டாகட்டும். நீ யோகசபையில் மிகவும் உயர்ந்தவன். அதனால் நீ விரும்பியவற்றைக் கேள்" என்றார்.

"பகவானே, மேருமலையில் வாழும் காகங்களும் பொன்நிறமானவை. அதுபோல உனது சந்நிதானத்தில் இருக்கும் நான் பெரும் பேறு பெற்றவனாவேன். எனக்குத் தாங்கள் பரமரகசியப் பொருளை உபதேசிக்க வேண்டும்" என்றார் வாமதேவ முனிவர்.

சந்நியாசக் கிரமம்

"முனிவர்களே, சுப்பிரமணியர் மிக்க மகிழ்வுடன் பரமேஸ்வரனை வணங்கி ஆசி பெற்று விட்டுக் கூறலானார். வாமதேவரே, நீர் சிவபெருமானின் பெரும் பக்தர்களில் ஒருவர். நீர் அறியாதது எதுவும் இல்லை. ஆயினும் உலகோர்க்கு அருள்வதற்காகச் சொல்கிறேன். இவ்வுலகத்தில் வாழ்வோர் பல்வேறு சாத்திரங்களைப் படித்துத் தடுமாறி அவாவுடையவர்களாக மாயை வசப்பட்டு சிவபெருமானை நினையாது அலைந்து திரிகின்றனர்".

"எல்லா உபநிடதங்களும் பரமசிவனே பிரணவம் என்று கூறுகின்றன. அவரிடமிருந்தே யாவும் பிறந்தன. அவ்வாறு அவரிடமிருந்து எல்லாம் தோன்றினாலும் அவர் எதிரிலிருந்தும் தோன்றவில்லை. அவரது பேரொளியாக சூரியனும் சந்திரனும் அக்கினியும் ஒளியிழக்கும் அவரால் தான் அவை பிரகாசிக்கும். சகல ஐஸ்வரியங்களையும் கொடுப்பதால் அவரைச் சர்வேஸ்வரர் என்பர். அவரது சக்தியில் இருந்தே இப் பிரபஞ்சம் தோன்றியது. அவருக்கு மூன்று விதமான உருவங்கள் உள்ளன. அவற்றைச் ஸ்தூவ, சூக்ரும, பரம உருவங்கள் என்கிறோம். அவரது பரமேஸ்வர மூசுர்த்தமே சதாசிவம் எனப்படும் சந்திரனைப்

போன்ற குளிர்ந்த பார்வையும், ஐந்து முகங்களும், பத்துக் கரங்களும் பதினைந்து கண்களும், ஈசானமகுடமும், சதுர்ப்புருசமும் அகோர இதயமும், வாமதேவ குக்யமும், சந்தியோ சர்வ சக்திகளை உடைய தேகமும் உடையவராகத் தன்னை முழுமனதுடன் வணங்குவோரின் இதயத்தில் மிக்க பிரகாசமாக திகழ்கிறார்".

"வாம தேவரே, இவ்வுலகில் நான்கு வர்ணத்தினர் வாழ்கின்றனர். அவர்களில் மூன்று வர்ணத்தினரே வேதத்தை ஓதத்தகுதியுள்ளவர்கள். நான்காவது வர்ணத்தினர் அதைக் கேட்கலாமே தவிர ஓதத் தகுதியில்லாதவர்கள். முதல் மூன்று வர்ணத்தினரும் வேதத்தில் உள்ள தர்மப்படி வாழ்ந்து பரமேஸ்வரனைப் பூசித்து அவர் கூறிய கடமைகளைச் சரியாகச் செய்து பரமேஸ்வரனை அடைதல் வேண்டும்".

அதற்காக ஒருவன் தனது மனைவியோடு வனத்தை அடைந்து புலனடக்கத்துடன் இருந்து, சுத்த ஆத்மாவாகி சர்வகர்மங்களையும் ஒழித்து ஞான பூசை செய்தல் வேண்டும். சீவன் முத்தியடையச் சிவஞானம் உண்டாகுதல் வேண்டும். அதற்காக உத்தமமான ஆசிரியரை அடைதல் வேண்டும். குருவைச் சிவபெருமானாக நினைத்து பன்னிரண்டு நாட்கள் பாலை மட்டும் பருகி சுக்கிரபட்சத்து சதுர்த்தியன்று நீராடி நித்திய கர்மங்களை முடித்துக் குருவை வணங்கி விசுவதேவர்களைப் பிரார்த்தித்தல் வேண்டும்.

"சிரார்த்ததினத்தில் அந்தணர்கள் இருவருக்குக் குறையாது வருவித்து அவர்களை உரிய முறைப்படி வணங்குதல் வேண்டும். பூசைகள் யாவும் முடிந்தபின் குருவிற்குத் தட்சணை கொடுத்தல் வேண்டும். அதன்பின் தர்மசாத்திரத்தின் அடியையும், வேதாந்த சூத்திரத்தின் அடியையும் சொல்லித் தேவர்களை வணங்கி பால், தயிர், நெய் ஆகியவற்றால் மூன்று முறை பிராசனம் செய்தும் இரு முறை ஆசமனியஞ் செய்து கிழக்கு முகமாகய் மூன்று பிரரணாயாமங்களைச் செய்தல் வேண்டும்".

சந்நியாசம்

இவ்வாறு முருகப்பெருமான் கூறியவற்றை வாமதேவர் மகிழ்டவுடன் கேட்டுக்கொண்டிருந்தார். முருகப்பெருமான் தொடர்ந்து சொன்னார்.

"வாமதேவரே, காலையில் கர்மங்களை முடித்துவிட்டு நீராடி விக்னேஸ்வரனை, கணநாயந்த்தர் என்ற மந்திரத்தால் ஆவாகனஞ் செய்து, தூபதீபங்களால் அர்ச்சித்து மோதகம், அவல் முதலியவற்றைப் படைத்து வணங்க வேண்டும்".

"பின்பு குருவின் கட்டளைப்படி ஓமஞ் செய்து காயத்திரி மந்திரத்தை உச்சரிக்க வேண்டும். அதன்பின் பிரஜாதிபதி, இந்திரன், விசுவதேவர், பிரமன் முதலியவர்களுக்கு ஓமம் செய்தல் வேண்டும்".

“இந்தத் தேகம் இருபத்தாறு தத்துவங்களால் ஆக்கப்பட்டது. இத் தத்துவங்களின் உள்ளே இருக்கும் ஆன்மாவைச் சுத்தீகரிக்கும் பொருட்டு மந்திரக்கிரமத்தால் நெய், அன்னம் முதலியநைவேத்தியங்களுடன் சிவனைத் தியானித்து ஓமம் செய்தல் வேண்டும். இதை வித்தியாதத்துவம் எனவும் சிவதத்துவம் எனவும் கூறுவர். இத்தத்துவங்களை ஞானத்தால் அறிந்து பரி சுத்தம் செய்தல் வேண்டும். பின் மந்திரங்களால் ஆகுதி செய்தல் வேண்டும்”.

அதன் பின் படைத்த அன்னத்தைப் பிரசாதமாக உட்கொண்டு பின் ஆசாரியாருக்குக் குருதட்சணை கொடுத்தல் வேண்டும். அதன்பின் விடியற்காலையில் எழுந்து காலைக்கடனை முடித்து அக்கினிக்கடனைச் செய்து முடித்தல் வேண்டும். பின் நதிக்கரையை அடைந்து நாரியளவு நீரில் இறங்கி காயத்திரி மந்திரத்தை ஓதுதல் வேண்டும். எவன் சிவசொரூபினியாகிய காயத்திரி மந்திரத்தை கிராமமாக ஜெபிக்கவில்லையோ அவன் பிரம கற்பபரியந்தம் பாவத்தை அனுபவிப்பான். பிரணவம் எப்போ வேதங்களுக்கும் ஆதியானது, அதுவே சிவ வாசக சப்தம் அது சிவமே பிரணவம்.

இத்தகைய மகிமை வாய்ந்த காயத்திரி யாகிய பிரணவத்தை அனுசந்தானம் செய்தல் வேண்டும். சதா சிவமூர்த்தத்தை மனதில் தியானித்து ஒன்றிய மனதுடன் எல்லாப் பிராணிகளுக்கும் என்னிடத்தில் அபயம் உண்டாகக்கடவது என நினைத்து தண்ணீரைக் கீழே விடுதல் வேண்டும். பின் பூ நூலைக் கழற்றிப் பிரணவத்தை உச்சரித்து நீரில் விடல் வேண்டும். அதன்பின் வடக்கு அல்லது கிழக்குத் திசையில் ஏழடி நடத்தல் வேண்டும். பின் கோவணத்தையும் தண்டத்தையும் பெற்றுக் காவியாடை தரித்தல் வேண்டும்.

“பின் ஆசாரியாரைப் பணிந்து, வணங்கவேண்டும். அப்போது ஆசாரியார் திருபுண்டரத்தைத் தரிப்பார். பின் சீடனது தலையில் தனது கையை வைத்துப் பிரணவத்தை அவனது வலது காதில் உபதேசிப்பார். அதன் பின் சீடன் ஆசாரியரைப் பன்னிருமுறை பணிதல் வேண்டும். அதன்பின் நாள்தோறும் அப்பூசையைத் தவறாது செய்தல் வேண்டும். அப்போது எவ்வேளையிலும் இலிங்கப் பெருமானை ஆராதிப்பேன் என்று சத்தியம் செய்தல் வேண்டும்”.

ஆச்சாரிய அபிஷேகம்

வாமதேவ முனிவர், முருகப்பெருமானை நோக்கி, “அறுகுணச்செல்வரே, சந்நியாசிகளுக்குக் குருத்துவம் எவ்வாறு கிடைக்கும். எத்தகைய குருவை அடைந்தவர்களுக்கு மோட்சம் விரைவாகக்கிட்டும். சந்நியாசிகள் சௌனஞ் செய்து கொள்ளும் விதி, அவர்கள் நீராட வேண்டிய முறைகள் என்பவற்றை விபரமாகக் கூறுதல் வேண்டும்” என்றார்.

"வாமதேவரே, ஆசாரியத் தன்மை சித்திப்பதற்குச் சாதனமாகவுள்ள யோகபட்டாபிசேகப் பற்றிச் சொல்கிறேன். வைகாசி, ஆவணி, மாசி, கார்த்திகை இம்மாதங்களில் ஒன்றில் பஞ்சமை பூரணை ஆகிய திதிகளில் ஒன்றில் சுபநேரத்தில் நீராடி பூநூல் பூண்டு திரிபுண்டரமாகத் திருநீற்றை அணிதல் வேண்டும். பின் குருவினது விருப்பப்படி அவர் சொல்வதைக் கேட்டு நடக்க வேண்டும். நறுமண மலர்கலால் அர்சித்து நல்ல பழங்களை நிவேதித்து நீலம், மாணிக்கம், பவளம், தங்கம், கோமேதகம் ஆகியவற்றைச் சமர்ப்பித்து மந்திரங்களால் அர்ச்சிக்க வேண்டும். பின் அபிசேகம் செய்து அதன்பின் வடக்குமுகமாக அமர வேண்டும். ஆசாரியார் வீபூதியை எடுத்துச் சிரசில் தனது கையை வத்து ஆசீர்வதிக்க வேண்டும். சீடனது வலது காதில் மந்திரங்களை உபதேசிக்க வேண்டும்".

பின்பு தீர்த்தத்தை எடுத்து, "சிவபெருமானை அடையும் ஞானம் கை கூடட்டும்" என்று நினைத்து ஆசீர்வதித்து அவன் மீது தெளிக்க வேண்டும். அதன்பின் சீடனைச் சிவபெருமானாகப் பாவித்து அவனது பாதம் முதல் சிரசு வரையில் ஆவாகனம் செய்து, சிவபெருமானை நிலை நிறுத்தி முத்திரைகளைக் காட்டி சோடச உப சரணையால் அர்ச்சிக்க வேண்டும்.

அதன் பின் ஜெபித்த மலர்களால் கட்டிய மாலைகளை அவனது கழுத்தில் சூடி, சூலக்குறியை அவனது நெற்றியில் இடவேண்டும். அதன்பின் அவன் பிறருக்குக் குருவாகக் கூடிய தகுதியைக் கொடுத்தல் வேண்டும். அதன் பின் சீடன் குருவையும் குருவின் குருவையும் வணங்கி ஆசி பெறல் வேண்டும்.

இனி தூய்மை செய்யும் முறைகளைக் கூறுகிறேன். சீடர் குருவை வணங்கித் தலையில் நீராடி மயிரைக்களைதல் வேண்டும். தூய நீரைக் கொண்டு மண்ணை எடுத்து சிவம் சிவம் என்று கூறியபடி கைகளையும் கத்தியையும் சுத்தம் செய்தல் வேண்டும். பின் மயிரையும் முகத்தில் உள்ள மயிர்களையும் களையவேண்டும். பின் துளசி, வில்வம், அரசு இவற்றில் ஒன்றின் அடியில் மண்ணெடுத்து ஆற்றுக்குச் சென்று நீராட வேண்டும். அப்போது பிரணவ மந்திரத்தை உச்சரித்தல் வேண்டும்.

நீராடியதும் சூரியனையும் ஆசாரியரையும் சிவ நினைவுடன் வணங்கித் திரிபுண்டரமாக வீபூதியைத் தரித்தல் வேண்டும். அதன் பின் வீட்டுக்குச் சென்று பிச்சை எடுத்து கிடைத்ததை உண்ண வேண்டும்.

தகன கனன விதி

"வாமதேவ முனிவரே, இன்னும் ஏதாவது கேட்கவிரும்பினால் கேளும்" என்றார் சுப்பிரமணியர்.

"சுவாமி முத்தர்களாகிய சந்நியாசிகளைத் தகனம் செய்வது பற்றியும் சாமாதியில் வைப்பது பற்றியும் கூறுங்கள்" என்று கேட்டார் வாமதேவ முனிவர்.

"சந்நியாசக் கிரமத்தையடைந்தவன், இடைவிடாது சமாதியில் இருந்து சிவோகம் பாவனையால் தேகத்தைத் தரித்திருப்பின் பரிபூரணனாவான். அவனே தீரன். அவனே சிவசொரூபியாவான். அப்படியானவன் தனது தேகத்தை நீத்தால் அவனை நந்தியெம் பெருமான் புண்ணிய லோகங்களிற் சேர்ப்பார்கள்.

மேலும் தட்சணாயத்தில் பிராணனை விடுவோர்களை இருளுக்கு, இரவுக்கு, கிருஷ்ணபட்சத்திற்கு, புகைக்கு அதிபர்களான ஐவரும் சேர்ந்து புண்ணிய லோகத்தில் சேர்ந்த பின் மானிடத் தேகமெடுக்க அனுப்புவர். மேற் சொன்ன தேவர்கள் திவ்விய தேகத்துடன் சதாசிவத்தில் சேர்த்து, தாங்களும் சதா சிவத்தை வழிபடுவர்.

அங்கு பாதார வித்தத்தை அடைந்தவர்கள் சதா சிவனின் பூரணகடாட்சத்தை அனுபவிப்பார். விருத்தனாக இருந்தால் மந்திர உபதேசம் செய்து சிவகணத்தில் ஒருவனாக இருக்க அபிசேகம் செய்வர். எங்கும் சென்று வர அவர்களுக்கு விமானம் வழங்கப்படும். சிலர் போகத்தை அனுபவிக்க விரும்பினால் தேவமகளிருடன் ஆடல் பாடலில் வெறுப்பேற்படும் வரை கல்லாபிக்க விடுவர். அவர்களுக்கு வெறுப்பேற்பட்டதும் அவர்களது அஞ்ஞானத்தை ஒழித்து அட்டமாசித்திகளையும், முப்பத்தெட்டுக் கலைகளையும், தொண்ணூற்றாறு தத்துவங்களையும் அழியாத முத்தியையும் கொடுப்பர்.

சந்நியாசி சரீரத்தை ஒழித்தால் அவருக்கு உரிய கிரியைகள் செய்யாவிட்டால் உறவினருக்கும், அரசருக்கும், நாட்டிற்கும் கேடு உண்டாகும். அவரின் உடலை தூய்மையான நதிக்கரை முதலிய புனித இடங்களில் பள்ளம் வெட்டி புத்திரர் இருந்தால் அவர்களால் முறைப்படி கிரியைகள் செய்யப்படல் வேண்டும். பிள்ளைகள் இல்லா விட்டால் உறவினர் அல்லது அவரது சீடர் செய்யலாம்.

சந்நியாசியின் உடலைச் சுத்த நீரால் கழுவி பின் பிரணவ மந்திரத்தை உச்சரித்து, உடுத்த உடைகளைக் களைந்து, புதிதாக உடுத்தி, நீற்றைத் திரிபுண்டரமாகத் தரித்து அதைக் கொண்டு செல்ல விமானம் அமைத்து அதைப் பூக்களால் அலங்கரித்து அதை விமானத்தில் இருத்தி வாத்தியங்கள் இசைக்க வேதமோதி உபநிடத படணத்துடன் கிராமத்தை வலம் வந்து முன்பு தோன்டிய பள்ளத்தின் அருகில் கொண்டு செல்ல வேண்டும்.

அக் குழியை வேத பராயணத்தால் சுத்தம் செய்து வன்னி இலைகளையும், தருப்பைப் புல்லையும், இட்டு நிரப்பிப் பின்பு மலர்களை மலர் மாலைகளாயிட்டு உருத்திராக்கத்தை நெற்றியில் தடவி மந்திரங்களை உச்சரித்துக் கொண்டு தேங்காயை உடைக்க வேண்டும். பின் உடலை பள்ளத்திலிட்டு அதை மூடுதல் வேண்டும். அதன் பின்

சதாசிவ மூர்த்தியைச் சாணளவு பீடத்தில் ஸ்தாபித்து மந்திரம் சொல்லி மலர்களிட்டு பூசை செய்தல் வேண்டும்.

இவ்வாறு பத்து நாட்களுக்குச் செய்தல் வேண்டும். பதினோராவது நாள் புண்ணிய தீர்த்தம் தெளித்துப் பூசை செய்தல் வேண்டும். அதன் பின் பிராணாயாமஞ் செய்து முன்பு கூறிய ஐந்து தேவதைகளையும் பூசித்து, கையில் வைத்திருக்கும் தர்ப்பையை வட புறத்தில் வைத்து விட்டுக் கைகளைக் கழுவி அறு கோணங்களிலும் பூக்களை வைத்து ஐவரையும் ஆவகணம் செய்தல் வேண்டும். முத்திரைகளைக் காட்டிப் பூரணாங்கங்களையும் பாவிக்க வேண்டும்.

"இவ் ஐந்து தேவர்களின் பாதம், கை, சிரசு ஆகிய இடங்களில் அபிசேகம் செய்து சிவப்பு ஆடையாலும் பொன்மயமான மகுடங்களினாலும் ஆபரணங்களாலும் அலங்கரித்து மலர்களால் அர்ச்சிக்க வேண்டும். தூபதீபங்காட்டி பாயசம், நெய், சக்கரை ஆகிய சேர்த்துச் செய்யப்பட்ட பலகார வகைகள், பழங்கள் முதலியவற்றை நிவேதித்தல் வேண்டும். அப்போது மூல மந்திரத்தை உச்சரித்தல் வேண்டும். பின் எனது பூசையை ஏற்றருளள் வேண்டும் என்று பிரார்த்தித்து நிவேதித்த உணவு வகைகளைப் பசுக்களுக்கு அல்லது கன்னிகளுக்குக் கொடுத்தல் வேண்டும்".

"வாமதேவரே, இனிப் பார்வண சிரார்த்த முறைகளைக் கூறுகிறேன். செய்பவன் முறைப்படி நீராடி, பிராணாயாமம் முடித்து தர்ப்பை அணிந்து, பரலோகம் அடைந்த யதிக்கான பார்வண சிரார்த்தம் செய்யப் போகிறேன்" என்று கூறிக் கையில் உள்ள தருப்பையை நீக்கி, நான்கு பிராமணரை அழைத்துத் தான் செய்யும் சிரார்த்தத்திற்கு சிரார்த்த தேவர்களாக இருபத்து அனுக்கிரகம் புரிய வேண்டும் என்று கூறி அவர்களை வணங்குதல் வேண்டும். பின் மலர்களால் அர்ச்சித்துத் தூபதீபங்காட்டி சிவரூபியாகப் பாவித்து உணவு கொடுத்து, இறங்கு முகமாகத் தருப்பையை இட்டு பிராணாயாமம் செய்து", சிவரூபியான பதிக்குப் பிண்டதானம் செய்கிறேன்" என்று கூறித் தட்சணை கொடுத்தல் வேண்டும்.

பன்னிரண்டாம் நாளன்று அதிகாலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்துப் பிராமணர்களை அழைத்து அவர்களுக்கு எண்ணெய் கொடுத்து நீராடச் செய்து பஞ்சாக்கிரமப்படி பூசை செய்தல் வேண்டும், "எனது குருவுக்கு பூசை செய்யப் போகிறேன்" என்று சங்கற்பம் செய்ய வேண்டும். பவுத்திர விரலுடன் பிராமணர்களுக்குப் பாதபூசை செய்து திரிபுண்டரம் அணிவித்தல் வேண்டும். பின் எட்டுப் பிராமணர்களை அழைத்து அவர்களைக் குருவாக நினைத்து பிரணவத்தால் ஒவ்வொரு நாமங்களையும் ஆவாகனம் செய்து வாழை இலையில் அறுசுவை உணவும் பழங்களும் படைத்து, "விஷ்ணுவே இதை இரச்சிக்கக்கடவன்" என்று கூறி ருத்திர சமகப் பஞ்சப்பிரம மந்திரங்களை ஓத வேண்டும்.

“குரு சொரூபிகளாகவும், சதா சிவசொரூபிகளாகவும் உள்ள பிராமணர்களே, நான் குரு பக்தி தவறாகதிருக்க அருள் புரியுங்கள்” என்று கூறி “பிராமணர்களை வாசல்வரை அழைத்துச் சென்று உபசாரஞ் செய்து திரும்ப வேண்டும்” என்று, சுப்பிரமணியப் பெருமான் வாமதேவ முனிவருக்கக் கூறினார். பின் “நான் உபதேசித்தவற்றை சனத்குமார முனிவருக்கும், தேவியாசருக்கும் கூறு, அவர்கள் தமது சீடர்களுக்குக் கூறுவார்கள். இனி இது வாமதேவ முறைப்படி சிவபூசை செய்வோர் பிறவிகள் தோறும் ஞானிகளாகத் தோன்றி மோட்சமடைவார்கள்” என்று கூறி முருகப்பெருமான் கந்த கிரியில் இருந்து கைலாயச் சிகரத்திற்குச் சென்றார்.அந்தக் காரணத்தினால் இந்த நூலின் இப் பகுதி கைலாய சம்கிதை என்ற பெயரைப் பெற்றது.

“குரு சொரூபிகளாகவும், சதா சிவசொரூபிகளாகவும் உள்ள பிராமணர்களே, நான் குரு பக்தி தவறாகதிருக்க அருள் புரியுங்கள்” என்று கூறி பிராமணர்களை வாசல்வரை அழைத்துச் சென்று உபசாரஞ் செய்து திரும்ப வேண்டும் என்று, சுப்பிரமணியப் பெருமான் வாமதேவ முனிவருக்கக் கூறினார். பின் “நான் உபதேசித்தவற்றை சனத்குமார முனிவருக்கும், தேவியாசருக்கும் கூறு, அவர்கள் தமது சீடர்களுக்குக் கூறுவார்கள். இனி இது வாமதேவ முறைப்படி சிவபூசை செய்வோர் பிறவிகள் தோறும் ஞானிகளாகத் தோன்றி மோட்சமடைவார்கள்” என்று கூறி முருகப்பெருமான் கந்த கிரியில் இருந்து கைலாயச் சிகரத்திற்குச் சென்றார்.அந்தக் காரணத்தினால் இந்த நூலின் இப் பகுதி கைலாய சம்கிதை என்ற பெயரைப் பெற்றது.

சூத முனிவர் விடை பெறல்

“நைமி சாரணிய வாசிகளே, இவ்வாறு உபதேசம் பெற்ற வாமதேவர் கைலாயத்தை அடைந்து சிவனின் அனுக்கிரகத்தைப் பெற்றார் இப்போது பிரணவத்தின் பொருளை நீங்கள் அறிந்து கொண்டீர்கள். அதனால் இந்தக் காசியில் வாழ்ந்த நீங்களும் சிவபெருமானின் அனுக்கிரகத்தைப் பெற்று சிவ சாயுச்சியத்தை. அடைவீர்களாக”. நான் எனது

குருவான வியாச பகவானுக்குச் சேவை செய்யப் போகிறேன். நான் சொன்னவற்றை எக்காரணங் கொண்டும் ஞானமற்றவர்களுக்கும், நாத்திகர்களுக்கும், கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களுக்கும் சொல்லாதீர்கள். சிவபெருமானின் பெருமைகளை உணர்ந்தவர்களுக்கு மட்டும் சொல்லுங்கள். குரு மூலம் ஒரு முறை கேட்டால் கேட்பவனின் பாவங்கள் அனைத்தும் நீங்கும். இருமறை கேட்டவன் சிவபக்தி முதிரப் பெறுவான். நான்கு

“முறைகேட்டவன் சிவஞானம் அடைவான். மேன்மை அடைய விரும்புபவன் இதை அடிக்கடி கேட்பான். எனது குரு இதை ஐந்து முறை கேட்க வேண்டும் என்று கூறினார். எவன் விரும்பி இதைப் படிக்கிறானோ, படிப்பவன் விரும்பியதை அடைவான்” என்றார்.

நைமிசாரணிய முனிவர்கள் சூதமுனிவரை வணங்கி அவருக்குப் பல பெறுமதியான பரிசுப் பொருட்களை வழங்கிக் கௌரவித்து அவருக்கு விடை கொடுத்தனர்.



4 சநத் குமார சஞ்சிகை

காப்பு

ப்ரபத்யே தேவமீஸாந: ஸர்வஜ்ஞ மபராஜிதம்!

ஸம்பவம் ஸர்வபூதாநாம் அநாதிம் விஸ்வதோமுகம்!

சநத்குமார முனிவர் நைமிசம் வரல்

சூத முனிவர் விடைபெற்றுச் சென்றதும், ஞானவித்தையைக் கரை கண்டவரும் மங்கள மூர்த்தியும் பிரமதேவரின் புத்திரருமான சநத்குமார முனிவர் நைமிசாரணியத்திற்கு வந்தார். அவரைக் கண்டதும் நைமிசாரணிய முனிவர்கள் எழுந்து வணங்கி மிக்க மகிழ்வுடன் வரவேற்றனர். பின் அவரை ஆசனத்தில் அமரச்செய்து மீண்டும் வணங்கிய பின்

“பிரமபுத்திரரே, லிங்க அர்ச்சனை விதிகளையும் தேவதேவனான சிவபெருமானின் பூசை முறைகளையும், அவரின் திருவருளால் உண்டாகும் பயன்களையும் சிவ மந்திர சொரூபத்தையும், அதன் அனுட்டான விதிகளையும் எமக்குச் சொல்ல வேண்டும்□ என்று கேட்டனர்.

உலக உற்பத்தி

“முனிவர்களே, நிலம் முதலான ஐம்பெரும் பூதங்களின் தோற்றமும், பிரம விஷ்ணுக்களின் தொடக்கமும், இன்னும் அவர்களைப் பற்றிய முழுமையான விடயங்களையும் உங்களுக்குச் சொல்கிறேன்”.

முனிவர்களே, மகாயோகியான உருத்திரமூர்த்தி தனது ஆன்ம இச்சையினால் மனதையும், அகங்காரத்தையும் படைத்தார். அகங்காரத்திலிருந்து பஞ்சபூதங்களும், மூலப்பிரகிருதியும், மகத், அலங்காரம், ஸ்பரிசம், ரூபம், ரகம், கந்தங்கள், பிராணன், அபர்ணன், வியாணன், சமாணன், உதானன், சத்வரஜ, தாமோ குணங்கள் உண்டாயின. இவற்றில் இருந்து தான் பிரமாவும், விஷ்ணுவும் பிறந்தார்கள்.

அதன் பின் பரமசிவன் தோன்றி தன் மாயையால் அவ்விருவரையும் மோகிக்கச் செய்தார். பிரமாவும், விஷ்ணுவும் பரமசிவனிடத்திலே ஜனித்து சிருஷ்டி யாதிகளைச் செய்கின்றனர். எழுபத்தொரு யுகங்கள் ஒரு மனுவந்தரமாரும். அது பதின்நான்கு முறை திரும்பி வந்தால் ஒரு கற்பமாகும். அக்கற்பம் ஒன்று பிரமதேவனுக்கு ஒரு பகற்பொழுதாகும். அவ்வளவு காலம் ஒரு இரவாகும். இவ்வாறு நூறு வருடங்கள் கழிந்த காலம் பரார்த்தமாகும். அப் பரார்த்தம் கரனுக்கு ஒரு நிமிடமாகும். அவர் பதின்நான்கு உலகங்களையும் படைத்து அதில் வியாபித்திருந்து அவற்றை இயக்கி வருகிறார்.

தாவரங்களைக் காட்டிலும் சங்கமம் ஆயிரம் மடங்காகும் சங்கமத்தைக் காட்டிலும் ஏனையவை ஆயிரம்மடங்கு அதிகமாகும். அதனால் தேகமெடுத்த ஒவ்வொரு சீவனும் அவர் மீது பக்தி செலுத்தல் வேண்டும். அவரே விளையாட்டாகச் சத்தியுடன் சேர்ந்து உலகங்களைப் படைக்கிறார். அவரிடமிருந்து தான் மூலப் பிரகிருதியும் தோன்றும்.

பிரமதேவர் சிவனின் கட்டளைப் படி தனது முகத்தில் இருந்து பிராமணர்களையும், புயத்தில் இருந்து சத்திரியர்களையும், தொடையில் இருந்து வைசியர்களையும், பாதத்தில் இருந்து சூத்திரர்களையும் படைத்தார். படைப்பின் போதும் உயிர்கள் பெருகும் போதும் உருத்திரர் தோன்றிச் சங்கரிப்பார் என்று சநத்குமாரர் கூறினார்.

அதைக் கேட்ட வியாச முனிவர், “பிரமோற்பத்தியையும், இவ் உலகின் படைப்பையும், உலகைப் பரிபாலிக்கும் முறையையும், அதனால் பிரமத்துவம் கிடைத்ததைப் பற்றியும் சொல்லுங்கள்” என்றார்.

“முனிவர்களே, ஆரம்பத்தில் உலகம் இருளாகவே இருந்தது. மகேஸ்வரன் தனது யோகத்தால் அவ் இருளை நீக்கி ஒளியை உண்டாக்கினார். அவ் ஒளி செந்நிறமாக ராஜோ குணமடைந்து அக்னியாக உருவாகியது. அந்த அக்கினி சத்துவ குணத்துடன் சேர்ந்து

தாமோ குணத்தினால் நிலத்தை உருவாக்கியது. அவற்றில் இருந்து நீர் தோன்றியது, அதிலிருந்து காலங்கள் தோன்றின, அவற்றியிலிருந்து சூரியாதிகள் உண்டாகின, அச் சூரியன் இருளை நீக்கி நீரை வற்றச் செய்தான். அப்போது நீரில் இருந்து சங்கரன் தோன்றினார். அந்த நீரில் இருந்து அட்டம் தோன்றியது, அண்டத்திலிருந்தே நாராயணன் தோன்றினார், அவரிடம் பிரமன் தோன்றுவான், பிரமனிடமிருந்தே காலங்கள், திக்குகள் தோன்றின".

பிரமாண்ட வரலாறு

"அவ்வியக்கத்தில் இருந்து மகத்துவம், அதிலிருந்து பிரமனும் தோன்றியமையால் இதற்குப் பிரமாண்டம் என்ற பெயர் உண்டானது. அண்டத்திற்கு சமுத்திரங்கள் உதிரமாகும், ஆகாயம் வயிறாகும், வாயு சுவாசமாகும், அக்கினியே பலமாகும், நதிகள் ரசங்களாகும், ஆகாயம் காதுகளாகும் சூரிய சந்திரர்கள் கண்களாகும், மேருமலை தொடையாகவும், மேதினி மார்பாகவும் விளங்குகிறது. பூமியின் எல்லை சமுத்திரமாகும், சமுத்திரத்தின் எல்லை பாதாளமாகும், பாதாளத்தின் கீழ் நீர் உண்டு. அந்த நீரின் எல்லையில் நாகராசாக்களின் வசிப்பிடம் இருக்கும். அதன் எல்லையில் அக்கினியும் அதன் இறுதியில் நிலமும் உள்ளது".

பூமியிலும், சமுத்திரத்திலும் பல வகைப்பட்ட உயிரினங்கள் வாழும் இப்புவனமானது ஆதியில் சிவபெருமானால் ஒன்றாகவே தோன்றிய போதும் மனிதர்களாலும், தேவர்களாலும் சுவர்க்கம், பூலோகம், பாதாளம் என்ற மூவகைப் பெயர்களால் அழைக்கப்படுகிறது. மூவுலகிலும் உருத்திரமூர்த்தியே உபாசிக்கப்படுகிறார். மூன்றிற்கும் காரணமாக இருப்பவர் உருத்திரன். உருத்திரனை உபாசித்த பின்பே தொழில்களைச் செய்கின்றனர். மூவுலகவாசிகளின் எண்ணங்களை நிறைவேற்றுபவர் சிவபெருமான். இவர் பல பெயர்களுடன் எழுந்தருளியிருக்கிறார்.

ஐம்புத்தீவில் கோமேதகம் என்ற தலத்தில் கிரிஜேஸ்வரர் என்ற பெயருடனும், சான்மதித்தீவில் பசுபதி என்ற பெயரோடும், குறுத்தீவில் அரன் எனவும், கிரவுன் சத்தீவில் விருஷ பத்வயன் எனவும், சானத்தீவில் சங்கரன் எனவும் வீற்றிருக்கிறார். அவர் வீற்றிருக்கும் இடங்களில் தல விருட்சங்களும் உள்ளன. ஐம்புத்தீவில் ஐம்புவிருச்சம் மிகவும் உயர்ந்து பருத்துள்ளது. அமுதம் போன்ற பழங்களை அது கொடுக்கும். அது ஏழுவகைவர்சங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் பாரத வருசம் என்பது ஒன்பது கண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதன் வட திசையில் மகாமேருமலை உள்ளது. அதன் உச்சியில் கைலாயமலை உள்ளது. அங்கே நான்கு மலைகள் உண்டு. அம்மலையில் இருந்து அங்கு மூன்று நதிகள் பாய்கின்றன. அதைவிடப் பல புண்ணிய தீர்த்தங்களும் அத்தீவில் உண்டு.

“அத்தீவில் பொற்குன்றுகள் பல உண்டு. அங்கு புண்ணியபுரிசர்கள் பலர் வாழ்கின்றனர். அவர்கள் மரணமடைவதில்லை. ஊழியின் முடிவில் உருத்திரனால் சங்கரிக்கப்படுவர்” என்றார் சநத்குமார முனிவர்.

பாதாள வர்ணனை

சநத்குமார முனிவர் மேலும் தொடர்ந்து சொன்னார், “முனிவர்களே, இனிப் பாதாள உலகைப்பற்றிக் கூறுகிறேன். போகவதி என்ற நகரம், நவரத்தினமயமான உப்பரிகைகளுடன் விளங்குகிறது. இங்கு நாகராசாக்கள் வசிக்கின்றனர். இவர்களைத்தவிர பாதாதி சித்த முனிவர்களும், அனந்தாதி மகா நாகங்களும் அங்கு மகிழ்வுடன் வாழ்கின்றன. அங்குள்ளவர்கள் விலையுயர்ந்த பட்டுக்களை உடுத்தி அப்ஸரஸ்கள் ஆடும் நடனங்களையும், பாடல்களையும் இரசித்துக் கொண்டிருப்பர்.

அந்த நகரின் நடுவில் வைர, வைடூரியங்களால் கட்டப்பட்ட ஆயிரம்கால் மண்டத்தில் கோமேதகத்தினால் செய்யப்பட்ட சிம்மாசனத்தில் இருந்து நாகராசாக்கள் அரசாள்வர். அங்கு இல்லாத மாணிக்கங்கள் எவையும் இல்லை. அவற்றால் மண்டபங்கள் அலங்கரிப்பட்டிருக்கும். பாயாசம், நெய், பால், மது என்பன நிறைந்த பல கிணறுகள் அங்குண்டு. நறு மலர்ச்சோலைகளும், மூப்படையாத இளமையான கவர்ச்சிக் கன்னிகளும் அங்கு உள்ளனர்.

சுரபி என்ற அசுரன், நாராயணனது அருளால் பூமியைத் தாக்கிக் கொண்டிருக்கிறான். புண்ணிய பூமியான அங்கு புண்ணிய புரிசர்களே சகல யோகங்களுடனும் வசிக்கின்றனர். அங்கு வீடுகள் யாவும் நவரத்தினம் இழைத்த மாளிகைகளாகக் காணப்படுகின்றன. அங்கு வசிப்போர் தத்தமது கர்மங்களுக்கேற்ப தத்தமது பலன்களை அனுபவிப்பர். அந்த நகரத்தில் உடல்களை வெட்டியும், அறுத்தும், சமைத்தும், செக்கில் இட்டு ஆட்டியும் தண்டனைகள் கொடுப்பர். பாவம் செய்தவர்கள் யமபுரத்தில் அநேக காலங்கழித்து அங்கிருந்து வெளியேறுவர். புண்ணியம் செய்தோர் யம புரத்திலிருந்து வாகனம், பல்லக்கு, குடை முதலியவற்றுடன் நந்தவனத்தின் வழியாக பெரும் வரவேற்புடன் அழைத்துச் செல்லப்படுவர். ஞானத்தை அடைந்தவர்கள் துக்க நிவாரணம் அடைவர் அந்த ஞானம் சிவனின் சரித்திரங்களைக் கேட்பதால் உண்டாக வேண்டும். புண்ணியம் செய்ததால் சுவர்க்கத்திற்குச் சென்றவர்கள் அப்புண்ணியம் கழிந்த பிறகு கர்மப்படி மீண்டும் துன்பங்களை அனுபவிக்க வேண்டி வரும். அதனால் ஒருவன் சிவலோக பாவனையில் இருந்தால் எந்தத் துன்பமும் வராது. சிவ ஞானம் அடைந்தவன் ஞானத்தின் வல்லமையால் எல்லாத் துன்பங்களையும் நீக்கி விட்டு மகேஸ்வரனுக்குப் பிரியவனாகி விடுவான். ஞானமாகிய அக்கினி அவனது பிறப்புக்களை எரித்துச் சாம்பலாக்கி விடும்” என்றார் சநத்குமார முனிவர்.

மேல் உலக வர்ணனை

“முனிவர்களே, இனிமேல் உலகங்களின் பெருமைகளைக் கூறுகிறேன். பூவுலகிற்கு மேலுள்ள புவர்லோகத்தில் பைசாசர் முதல் மேகக் கூட்டத்தினர் வரை வசிப்பார்கள். அதற்குமேல் இலட்சம் யோசனை தூரத்தில் சூரிய மண்டலம் இருக்கிறது. அவற்றுள் அறுபதினாயிரம் ரிசிகள் வேத சாத்திரம் பயின்றபடி இருக்கிறார்கள். அவர்களுடன், அறுபதினாயிரம் அப்ஸரஸ் மங்கையரும், இரண்டு காந்தர்வர்களும், இராசரிஷிகள், புண்ணி புரிசர்களும் இருக்கிறார்கள்.

அந்த லோகத்தில் புண்ணிய புரிசர்கள் விமானங்களில் அப்ஸரஸ் மங்கைகளுடன் சேர்ந்து இன்புற்றுத்திரிவர். அதற்கு மேலே சந்திரலோகம் இருக்கிறது. அங்கு உத்தமமான பிராமணர்களும், சோமபாணம் செய்த தேவர்களும், யாகங்கள் செய்த உத்தமரிஷிகளும், பூதானம் செய்த புண்ணியவான்களும், தானங்கள் செய்தவர்களும் வசிக்கின்றனர். அதன் மேல் அங்காரகன் முதலிய கிரகலோகங்கள் இருக்கின்றன, அங்கு ஆகாய கங்கை பாய்கிறது, அதற்கு மேல் மகரிஷிகள் வாழும் ஒளி பொருந்திய மகரிஷிகளின் லோகம் இருக்கிறது, அதற்கு மேல் போரில் வெற்றியடைந்தோர், புறமுதுகு காட்டாதோர் வாழும் லோகம் இருக்கிறது, அதற்கு மேல் தேவலோகத்தை விட நான்கு மடங்கு விசாலமுடைய துருவலோகம் இருக்கிறது. அங்கு கோடிக்கணக்கான சாத்தியர்கள் போகங்களை அனுபவித்துக் கொண்டு வாழ்கின்றனர்.

சூரிய லோகம் முதல் துருவலோகம் வரையில் பல வேறுபாடுகள் இருந்தாலும் அவை சுவர்க்கலோகம் என்றே வழங்கப்பட்டுவருகின்றன. அதற்கு மேல் மகர்லோகம் என்ற புண்ணியநாடு உண்டு. இங்கு புண்ணியர்களும், சித்தர்களும் வாழ்கின்றனர். அதற்கு மேல ஜனோலோகம் என்ற லோகத்தில் முனிவர்களும், சித்தர்களும் தத்தம் புண்ணிய பலன்களை அனுபவித்துக் கொண்டிருப்பர். அதற்கு மேல் தபோலோகம் என்ற லோகம் உள்ளது அதில் விரத உபவாசங்களைக் கொண்ட புண்ணியவான்கள் புண்ணியத்தை அனுபவித்துக் கொண்டிருப்பர். அதற்கு மேல் சப்தரிஷிகள் வாழும் சத்திலோகம் உள்ளது. இந்த சத்திய லோகத்தின் ஒரு பகுதியில் பிரமதேவர் வசிக்கிறார். அதற்கு மேல் விஷ்ணு வசிக்கும் வைகுண்டம் உள்ளது. வைகுண்டத்தில் ஒரு பகுதி கோலோகம் இங்கு விஷ்ணுவின் பக்தர்கள் வாழ்கின்றனர்.

ஒருமுறை பிரமதேவரிடம் வந்த தேவர்கள், அவரை வணங்கி வாழ்த்திவிட்டு, “சுவாமி, எல்லா வேதாங்கங்களின் இரகசிய அர்த்தமாகவும், சுருதிக்குவெளியில் விளங்கும் ஒளியாகவும் இருப்பதை நாம் அறிதல் வேண்டும்” என்றனர்.

“தேவர்களே, எல்லாவற்றிற்கும் காரணமாக இருப்பவர் சிவபெருமான். அவரிலும் அன்னியமானது எதுமில்லை. அவரே பல மூர்த்திகளாகப் பிரிந்து ஐந்தொழில்களையும் செய்து வருகிறார். அவரே அது பற்றிக் கூற வேண்டும். அதை அவர் எனக்குக் கூறியுள்ளார். அதை நான் உங்களுக்குக் கூறுகிறேன்” என்றார் சநத்குமார முனிவர்.

ருத்திர மூர்த்தியின் பிரபாவம்

“முனிவர்களே, உருத்திரமான்மியத்தை இப்போது நான் உங்களுக்குக் கூறுகிறேன். அந்தக்காலத்தில் உருத்திர மூர்த்தியைத் தவிர வேறு எதுவும் உலகில் இல்லாமையால் எல்லாவற்றையும் உருத்திரமூர்த்தியே செய்து வந்தார். அத்தகையை நிலையில் சநத்குமாரரான நான் அஞ்ஞானத்தால் கைகால்களை அசைக்கச் சக்தியற்றவனாக பிரபஞ்சம் ஒடுங்கிவிட்டதோ என்ற எண்ணத்துடன் அதை அறியவேண்டும் என்பதற்காக அலைந்து கொண்டிருந்தேன்.

அவ்வாறு அலையும் போது கோரமான் பற்களுடன் மிகப்பயங்கரமான ஓர் உருவத்தைக் கண்டேன். அது மிகவும் சாந்தமாக தெரிந்தமையால் அதன் அருகில் செல்ல முற்பட்டபோது, அந்த முகத்திற்குரியவரான உருத்திரமூர்த்தி, “சநத்குமாரரே, இவ்வுலகைப் படைத்துக் காத்து அழிப்பவன் நான். எல்லாம் என்னுள்ளேயே அடங்கியுள்ளன. எனது மாயையை அறியாதவர்களே, என்னைப் பஞ்சகிருத்திய சொரூபி என்று அறிவர்” என்று கூறி மறைந்தார். அதனால் அவரது பெருமைகளை இவ்வாறானது என்று சொல்ல முடியாது.

அவ் உருத்திரமூர்த்தியே பிரமதேவரைத் தோற்றுவித்தார். பிரமதேவர் முதலில் அன்னத்தைப் படைத்தார். அவ் அன்னத்தில் இருந்தே பிராணனைப் பிரதிஷ்டை செய்து பூதங்களை விருத்தி செய்தார். அதிலிருந்து தான் யாவும் தோன்றின. வேதத்தின் தாயான காயத்திரிக்குப் பிரணவமே காரணமாக இருக்கிறது. அதனால் சிருஷ்டிக்குக் காரணமாவது யஞ்ஞமேயாகும். என்று உருத்திரமூர்த்தியே கூறியுள்ளார்.

இவற்றையெல்லாம் காண்பிப்பதற்கும், சொல்வதற்கும் யாராலும் முடியாது. அவரது தரிசனத்தைத் தவிர ஆனந்தம் தரக்கூடியது எதுவும் இல்லை. எல்லாத் தேவர்களுக்கும் அவரே தேவராவர். அவரது பெருமைகளை அறிந்து பக்தியுடன் தியானிப்பவர்கள், உருத்திரமூர்த்தியின் கிருபையால் எல்லாச் சம்பத்துக்களையும் அடைந்து சிவஞானம் ஓங்கப் பெறுவர்.

விருபாசாரிடம் பக்தி

“முனிவர்களே, எல்லாப் பேதமுடைய சராசரங்களும் விருயாசாரிடமிருந்தே தோன்றின. அவர் இலிங்கரூபமாக விளங்குகிறார். அவரைத் திரிகரண சுத்தியுடன் சரணடைந்து வணங்குவோர், உருத்திரலோகத்தில் என்றும் வசிப்பர். பஞ்சமா பாவங்களைச் செய்தவர்களும் அவரது நாமங்களை உச்சரித்தால் அந்தப் பாவங்களில் இருந்து நீங்குவர். நூறு அஸ்வமேத யாகம் செய்தவர்கள் கூட உருத்திர ஜெபம் செய்த பயனை அடைய மாட்டார்கள். அவரை உபாசித்து விஷ்ணுவின் பதவிகளையும் அடையலாம். பிற பதவிகளை ஏனைய தெய்வங்களை வணங்கிப்பெற்றால் அவை சில காலங்களின் பின் அழிந்துவிடும். ஆதிதேவரான அவரை வணங்கிப் பெறும் பதவி ஒரு போதும் அழியாது. எல்லாத் தர்மங்களையும் மீறியவனாக இருந்தாலும் “சிவ சிவ” என்ற சொல்லை உள்ளன்புடன் உச்சரித்தால் செய்த பாவங்கள் யாவும் அழிந்து விடும். மங்களங்களுக்குள் மங்களமாகவும் பரிசுத்தமானவற்றுள் பரிசுத்தராகவும் உள்ளவர் பரமேஸ்வரன். அவர் உலகெங்கும் தீயில் வெப்பம் போலவும், பாலில் நெய் போலவும் வியாபித்திருப்பார்.

இத்தகைய அரும்பெருமைகள் வாய்ந்த உருத்திர மூர்த்தியைத் தினமும் வணங்குவோர் யமனை வென்று எல்லா உலகங்களுக்கும் விமானங்களில் ஏறித் தேவர்கள் வழிபட உருத்திரலோகத்திற்குச் சென்று வாழ்வார்கள்.

சநத்குமாரர் வரம் பெறல்

இவ்வாறு கூறிய பிரமதேவரை முனிவர்கள் பார்த்து, “சிவபெருமானை எவ்வாறு பூசிக்க வேண்டும். அவருக்கு எத்தகைய பூசை பிரியமானது? அவரைப் பூசித்து யார்யார் எண்னென்ன பயன்களை அடைந்தனர்?” என்று கேட்டார்கள்.

“முனிவர்களே, மகாவிஷ்ணு சிவனைப் பூசித்துச் சக்கராயுதத்தையும், தேவர்களுக்குத் தலைமைப் பதவியையும், போரில் ஒருவராலும் வெல்ல முடியாத வல்லமையையும் பெற்றார்.

நான் சிவபெருமானைப் பூசித்து நான்கு வேதங்களையும் நான்கு முகங்களையும் பெற்றேன். அத்துடன் என்னைப் பூசிப்பவர்களுக்கு வேண்டிய வரம் கொடுக்கும் வல்லமையையும் பெற்றேன். அத்துடன் சகலவற்றையும் படைக்கும் அருளையும் பெற்றேன். ஆறு சாத்திரங்களையும், அறுபத்து நான்கு கலைகளையும், தொண்ணூற்றாறு தத்துவங்களையும், சத்தியலோகப் பட்டாபிசேகத்தையும் பெற்றேன்.

இந்திரன் பரமேஸ்வரனைக் குறித்துத் தவமிருந்து தேவர்களுக்குத் தலைமையும், வச்சிராயுதமும், யாகம் செய்வோருக்கு உண்டாகும் பயன்களைக் கொடுக்கும் சக்தியையும்

பெற்றான். எனது மனதில் இருந்து தோன்றிய சநத்குமார முனிவன் பரமேஸ்வரனை நினைத்துத் தவம் செய்து பல பேறுகளைப் பெற்றார். கையாலயத்தில் அனேகம் அப்ஸரஸ் கன்னிகள் சூழ்ந்து நின்று வெண்சாமரை வீசிக் கொண்டிருந்தனர். தேவர் சென்ற விமனத்தில் அப் பெண்கள் இனிமையாகப் பாடியாடி அவரை மகிழ்வித்தனர். அப்போது அவரைப் பல முனிவர்களும், ரிஷிகளும் சூழ்ந்திருந்தனர். அவ்வேளையில் சநத்குமார முனிவர் உருத்திரமூர்த்தியை வணங்கிக் கொண்டிருந்தார்.

"முனிவர்களே, நானும் எனது பிதாவாகிய நாராயணனும் சிவபெருமானுடைய நெற்றிக்கண்ணைத் தரிசித்தமையால் தான் பிரமத்துவத்தையும், விஷ்ணுத்துவத்தையும் அடைந்தோம். பெருமைகள்மிக்க உருத்திர மூர்த்தியின் சந்நிதானத்தில் நின்ற சநத்குமாரைச் சந்தித்தேன். அவர் சொன்னார், "வருக என் தந்தையே. எல்லா உலகங்களுக்கும் சென்று வரும் நான் இந்த உருத்திரலோகத்தில் சிசுவைக்கூட ஜபிக்கச் சக்தியற்றிருக்கிறேன். அதனால் இந்தத் தேகத்தை விட்டு விட விரும்புகிறேன்" என்றார்.

அப்படி ஏன் செய்கிறாரென நான் யோசித்தேன். உருத்திரமூர்த்தியின் சொரூபமே, அங்குள்ள யாவுமாகும். மகாதேவரின் மகிமையினால் தான் சநத்குமாரர் புறக்கணிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்று நினைத்து, சிவபெருமானைத் தரிசித்து வணங்கிவிட்டு, சநத்குமாரரைச் சந்தித்துச் சொன்னேன், "மகனே, எல்லா உலகங்களுக்கும் தலைவரான மகாதேவரை விட உயர்ந்தவர்கள் யாரும் இல்லை. அவருடைய மாயையை யாராலும் அறியமுடியாது. அதனால் இந்த விடயத்தில் மனம் கலங்கித் தேகத்தை விட வேண்டாம் அகண்ட சாம்பிராச்சியத்தை அடைய விரும்பிய நந்திதேவர் பல காலம் தவம் செய்தும் அது கிட்டாமல் போனதால் தனது தேகத்தைத் துறக்கத்தீர்மானித்தார். அப்போது சிவபெருமான் அவர் முன் தோன்றி, "கவலைப்படாதே யாரும் என்மயமாக முடியாது. அதனால் எனது தத்துவங்களையெல்லாம் உனக்கு உபதேசிக்கிறேன். நீ காணாதிபத்தியத்தை அடைந்து எனது சேவையைச் செய்து கொண்டு இரு சில காலம் செல்ல, எனது சொரூபத்தை உணர்வாய்" என்று ஆசீர்வதித்தவர்.

நந்திமுகன் என்னும் கணன் சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்தான். அவன் சிவபெருமானைத் தரிசித்தபோது, "ஐயனே தங்களது ஆத்மசொரூபத்தை உபதேசிக்க வேண்டும்" என்று கேட்டான். அதற்குச் சிவபெருமான், "நீ, ஈசானன் என்னும் உருத்திரனிடம் யோக சாத்திரத்தைப்பயில், அவர் மூலம் நீ அறிவாய் என்றவர். அதனால் நீ துன்பப்படாது சிவத்தியானம் செய்து கொண்டிரு அதன் மூலம் நீ நினைத்ததை அடைவாய்□ என்று கூறினார். அன் பின் சநத்குமாரர் வேதங்கள் நான்காலும் உபநிடதங்களாலும் சிவனைத் தோத்திரம் செய்யத் தொடங்கினார்.

அனேக காலம் சநத்குமார் விடாது தோத்திரம் செய்யச் சிவபெருமான் அவரின் முன் தோன்றி, "திடமான பக்தியுடைய சநத்குமரமுனிவரே, நீ விரும்பியதைக் கேள்" என்றார்.

“பரமேஸ்வரா எந்தக்காலத்திலும் நான் தங்களது திருவடிகளை மறக்காது தொழல் வேண்டும். நான் தவம் செய்யும் போது காமகுரோத விரோத எண்ணங்கள் உண்டாகாது காத்தல் வேண்டும்” என்று வேண்டினார்.

அதைக் கேட்ட சிவபெருமான், “சநத்குமாரமுனிவனே, எனது பக்தர்களுள் நீயே சிறந்தவன். முனிவர்களுள் நீயே சிவாக்கியன் நீ எப்பொழுதும் இளமையானவனாகவும், ஒரு போதும் அழியாத உடலை உடையவனாகவும், எனது கிருபை உள்ளவனாகவும் சகல வளங்களும் கொண்ட திவ்விய விமானத்தில் அண்டங்கள்தோறும் சென்று வருவாய். விஷ்ணுவின் அம்சமாகத் தோன்றவிருக்கும் வியாசனுக்குக் கருவாகி அவனுக்குச் சிவதத்துவங்களை உபதேசம் செய்வாயாக” என்று அருளி மறைந்தார்.

மும் மூர்த்தி திருநகர்கள்

வியாச முனிவர் சநத்குமாரரை நோக்கிக் கேட்டார், “சுவாமி, பிரமலோகம், விஷ்ணுலோகம் உருத்திரலோகங்களின் சிறப்புக்களை அறிய விரும்புகிறேன்” என்றதும் சநத்குமாரமுனிவர் சொல்லத் தொடங்கினார்.

எண்பத்து நாலாயிரம் யோசனை நீள அகலங்களைக் கொண்டதும், அனேக நதிகளையும், இரத்தினமயமானதுமான மலை மேரு மலையாகும். அங்கு நதிகளும், பூந்தோட்டங்களும், சக்கிரவாகம் போன்ற பறவைகளும் உள்ளன. யானைகள், புலிகள், கரடிகள், சிங்கங்களும் அங்கு வாழ்கின்றன. குபேரன், இந்திர சேனன், வித்தியாதர கணங்களும், காய்காளும், விசுவா வசுவும், தும்புரு நாரதரும் அங்குத் தமது நாயகியரோடு வாழ்கின்றனர்.

அங்கு மயில்கள் நடமாடும்கங்காநதி பொங்கிப் பிரவகிக்கும். அந்த அழகிய காட்சிகளைத் தேவர்களும் தேவமகளிர்களும் கண்டு களிப்பர். அங்கு தேவாதி தேவனின் நகரம் இருக்கிறது. அங்கு ஆயிரக்கணக்கான அழகிய மாளிகைகள் உள்ளன.

அவை சூரியப் பிரகாசமும், இரத்தினமயமான பீடங்களையும், முத்துத்திரையிட்ட சாரணங்களையும், வாடாத மலர்களையும் உடையன. அவற்றைத் துவாரகாபாலகர் காவல் செய்வர். நகரத்தின் நடுவே சிவஸ்தானம் இருக்கிறது. அங்கு நவரத்தினங்களால் செய்யப்பட்ட ஏழாயிரம் தூண்களைக் கொண்ட மண்டபம் ஒன்று உண்டு.

அதன் கிழக்கு வாசல் ஸ்ரீதுவாரம் என்ற பெயரை உடையது. கோபுரத்தின் உச்சியில் மகாசித்தன் என்ற பெயருடையவன் வாயிலைக் காத்துக் கொண்டிருக்கிறான், தென்திசை வாசலை மகாகாயன் என்ற பெயருடையவன் காத்துக் கொண்டிருக்கிறான், வடக்குத்திசை வாசலை பீமநாதன் என்பவன் காத்துக் கொண்டிருக்கிறான், மேற்குத்திசை வாசலை நந்தீஸ்வர

கணங்கள் காவல் செய்கின்றன. அதை விட ஏனைய நான்குதிசை வாயில்களையும் கணங்கள் காவல் செய்கின்றன. இங்கு முறைப்படி சிவனை வழிபட்டவர்களும், புண்ணியம் செய்தவர்களும் சிவபக்தர்களான ஒழுக்கம்மிக்க அரசர்களும், யுத்தத்தில் முறைப்படி போர் செய்து தன்னுலை நீத்தவர்களும், அநியாயம் செய்யாது ஒழுக்கமாக வாழ்ந்த வணிகர்களும் வாழ்கின்றனர். அத்துடன் உருத்திரன், இந்திரன், விஷ்ணு முதலியோர்க்குச் சிறப்பாக யாகம் செய்தவர்களும் முறைப்படி சிவனை வணங்கித் தான தர்மம் செய்த சிவபக்தர்களும் வாழ்கின்றனர்.

"மேருவின் மற்றொரு பகுதியில் பிரமதேவனுடைய நகரம் உள்ளது. இதுவும் விஷ்ணுவின் நகரைப் போன்று செழிப்பும் அழகும் வாய்ந்தது. அங்கு பொன்னால் மதில்கள் கட்டப்பட்டுள்ளன. ஆயிரம் கால்களை உடைய வைடூரியத்தால் கட்டப்பட்ட மண்டபம் அது. அங்கு பிரஜாபதி வாழ்கிறார். அங்கு அமிர்தா என்ற நதி பாய்கிறது. அந்நீரைக் குடித்தால் நரை திரை மூப்பு ஏற்படாது. அங்கு பல்வேறுவிதமான புண்ணியங்களைச் செய்து ஒழுக்கமாக வாழ்ந்தோர் இன்பமாகச் சகல வசதிகளோடும் வாழ்கின்றனர். மேரு பருவத்தின் உச்சியில் இந்த மூன்று திரு நகர்களிலும் வாழ்வோரில் சிலர் மேகரூபிகளாகியும், மின்னல்களாகப் பிரகாசித்தும், நட்சத்திரங்களாக மின்னியும் அனேககாலம் வாழ்வர்" என்று சநத்குமர முனிவர் சொன்னார்.

சிவத் தலங்கள்

"சுவாமி, சிவபெருமானுக்கு எத்தகைய பூசை மகிழ்ச்சியை உண்டாக்கும்" என்று சநத்குமார முனிவரை வியாசர் கேட்டார்.

"வியாசரே, ஒரு சமயம் வீபூசணன் மேருமலையின் உச்சியை அடைந்து சிவபெருமானை வணங்கி, "மகாதேவா, எத்தகைய சிவபூசை செய்தால் இஷ்ட சித்திகள் கைகூடும் என்பதை எனக்குச் சொல்லி அருளுங்கள்" என்றான்.

"விபூசணா, இது மிகவும் இரகசியமானது. இதை யாரும் அறியமாட்டார்கள். எனது விருப்பத்துக்குரிய பக்தனான உனக்கு அதை நான் கூறுகிறேன். எனக்கு விருப்பமான தலங்கள் நிறைய உள்ளன. அதிலும் லிங்கத்தைப் பூசிப்பதையே நான் அதிகம் விரும்புகிறேன். விரைவாக விரும்பிய பயன்களை அளிக்கும் தலங்கள் ஐந்தாகும். அவை சகலாங்கம், பத்திரகர்ணம், கோகர்ணம், அவிமுக்தம், ஓங்காரம் என்ற ஐந்து இடங்களையும் பஞ்சாயதனம் என்று அழைப்பர். இங்கு என்னைத்தரிசித்தோர் நிட்சயமாக மோட்சமடைவர். இவற்றைத்தவிர அரிச்சந்திர பதத்தில் ருத்திர மூர்த்தியாக இருக்கிறேன். சுவர்ணாசலத்தில் யோகீஸ்வரன் என்ற பெயருடன் இருக்கிறேன். இங்கு என்னைப் பூசிப்போர் சித்திகளைப் பெறுவர். அத்துடன் விஷ்ணு பதவியையும் அடைந்திருக்கின்றனர். தாருவனத்தில் பத்ததண்டி

என்றும், மகாகாளன் என்றும் வசிக்கிறேன். கமலாயத்தில் பைரவ மூர்த்தமாகவும், காளஞ்சரத்தில் கற்கடேஸ்வரன் என்றும், வாமகூட்டத்தில் பூதேசுவரன் என்றும், கேதாரத்தில் மகேஸ்வரனென்றும், தேவதாருவனத்தில் சுந்தரேசன் என்றும் வசிக்கிறேன். இந்த எட்டுத் திருத்தலங்களும் எனது விருப்புக்குரியன. இத்தலங்களில் என்னை ஆராதிப்பவர்கள் நெற்றிக்கண்ணும் நீலகண்டமும் பெற்று ருத்திரராகிவிடுவர். அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த தலங்கள் இவை'' என்று சிவபெருமான் விபூசணனுக்குக் கூறினார்.

மேலும் அவர் விபூசணனுக்குப் பலவற்றைக் கூறினார், ''நானே உலகின் கர்த்தா. அதனால் ஐந்தொழில்களையும் நானே செய்கிறேன். பிரமன், விஷ்ணு, சந்திரன், சூரியன் மற்றும் சகல தேவர்களும் நானே மற்றும் கண்களுக்குத் தென்படுபவையெல்லாம் நானே''.

தவம் செய்வதாலும், யாகங்கள் செய்வதாலும் பெறும் பயன்களை விடச் சிவ பூசை செய்வதால் பெரும் பயனடையலாம். நினைத்தவற்றைப் பெறலாம். எனது நாமங்களை உச்சரித்தாலும், என்னைப்பற்றிப் படித்தாலும் எல்லாப் பாவங்களும் ஒழிந்து ருத்திரலோகத்தை அடைவார்கள். அவர்கள் சந்திர சூரியர்கள் இல்லாத இடங்களில் ஒளியை உண்டுபண்ணுவார்கள். நாமார்ச்சனை செய்பவனைக் கண்டாலே எல்லாப் பாவங்களும் நடுங்கி அழியும்.

அதைக் கேட்ட விபூசணன், ''மகாதேவா, எனக்கு அட்டமா சித்திகள் கை கூடவேண்டும்'' என்று வேண்டினான்.

அதனால் மகிழ்ந்த சிவபெருமான், ''விபூசணா, இலிங்கார்சனை தான் அட்டமாசித்திகளையும் கொடுக்க வல்லது. அது கைகூடச் சதுர்த்தசி, அட்டமி ஆகிய இரு தினங்களிலும் எட்டு யாமங்களில் இடைவிடாமல் பூசித்தவன் அட்டமாசித்திகளையும் பெறுவான். இது பரம இரகசியம் ஆகையால் பக்தியில்லாதவர்களுக்கு இதைச் சொல்லக்கூடாது'' என்று கூறி மறைந்தான். அதன்பின் விபூசணின் இலங்கைக்குச் சென்று சிவபெருமான் கூறியவாறு இலிங்கபூசை செய்து அட்டமா சித்திகளையும் பெற்றான்'' என்று சநத்குமார முனிவர் கூறினார்.

சிவ பூசைப் பயன்

சநத்குமார முனிவர், வியாசருக்குச் சொன்னார், ''முனிவரே, புண்ணிய நதிகளான கங்கை, யமுனை போன்ற புண்ணிய தீர்த்தங்கள் பல உள. அவற்றில் நீராடுவதால் பெரும் பயன் உண்டாகமாட்டாது. சிவலிங்க பூசை செய்யும் போது உண்டாகும் பயனில் பதினாறில் ஒரு பங்குகூடப் புனித தீர்த்தங்களில் நீராடுவதால் ஏற்படாது. உலகெங்கும் அறுபத்தெட்டுக் கோடி புண்ணிய தீர்த்தங்கள் உள்ளன. நீராடும் பயனை, ஒரு மாத காலம் சாந்திபெற்ற

மனதுடன் சிவலிங்கபூசை செய்தவன் அடைவான். நான்கு வேதங்களையும் ஒருமுறை பராயணம் செய்தபயனை ஒரு முகூர்த்தம் சிவலிங்க பூசை செய்தவன் அடைவான்.

வியாசரே, மகேஸ்வரர் முதலில் பிரகிருதியையே சிருஷ்ட்டித்தார். பிரகிருதியில் இருந்து வாயுவும், வாயுவில் இருந்து அக்கினியும், அக்கினியில் இருந்து லிங்கமும் தோன்றின. அந்த லிங்கம் பேரொளிப் பிழம்பாகத் தோன்றியது. அதனால் ஏனைய ஒளிகள் யாவும் தம்மொளியை இழந்தன. அதனால் மகேஸ்வரர் லிங்கத்தில் இருந்து அனைத்தையும் படைத்துவிட்டு ஐந்தொழில்களையும் ஐவரையும் செய்யுமாறு பணித்துவிட்டு மறைந்தார்.

பிரளய காலத்தில் நீர்மயமாகிப் பல்லாயிரம் ஆண்டுகள் அவ்வாறே இருந்து சிவனது ஒளியால் நீர் வற்றியது. அப்போது வைரவ நாதம் ஒன்று உருவாகி மீண்டும் லிங்கமயமாயிற்று

பாகயாகம், அவிர்யாகம் என்ற இரண்டின் பயனையும் ஒரு நாள்ச் சிவ பூசை செய்து அடையலாம். புலஸ்திய முனிவர் மரீசி, சுக்கிரன் போன்ற பலர் இவ்வாறு ஒரு நாள்ச் சிவ பூசை செய்தே பெரும் சித்திகளைப் பெற்றனர். புற்று மண்ணில் சிவலிங்கம் செய்து ஒரு வருடம் பூசித்தவன் காணாபத்தியமடைவான். இவற்றை விடச் சிவன் கோவில்களில் சரியைத்தொண்டு செய்பவன் பெரும்பயனைப் பெறுவான். சிவலிங்கத்தை ஒருமுறை நீரால் அபிசேகம் செய்தவன் பத்துக் குற்றங்களையும், பாலினால் அபிசேகித்தவன் நூறு குற்றங்களையும், நெய்யால் அபிசேகித்தவன் ஆயிரம் குற்றங்களையும், தேனினால் அபிசேகித்தவன் பதினாயிரம் குற்றங்களில் இருந்தும் மன்னிக்கப்படுவான், மலர்களால் அர்ச்சிப்பவன் இருபதினாயிரம் குற்றங்களை ஒழித்தவனாவான், தீபதூபத்தால் அர்ச்சிப்பவன் முறையே முப்பதினாயிரம் குற்றங்களையும், நாற்பதினாயிரம் குற்றங்களையும் நீக்கியவானாவான். ருத்திராட்ச மாலைகளால் அலங்கரித்தவன் எண்ணற்ற பயன்களை அடைவான். எல்லாவற்றையும் விடச் சிவமந்திரத்தை ஜெபிப்பவன் பெரும் பயனடைவான்.

பூசைக்குரிய பொருட்களைக் கொடுப்பவனும் பெரும் பயனடைவான். பூசைக்கு உபயோகித்த பொருட்களைக் காலில் மிதிபடாது தகுந்த இடத்தில் அகற்றிப்போடுபவன் ஆயிரம் பசுக்களைத் தானம் கொடுத்த பயனை அடைவான்.

“சிவனுக்குப் பிரியமான உணவு வகைகளைப் படைப்பவன் நூறு வருடங்கள் சிவபூசை செய்த பயனை அடைவான். பெண்கள், மிலேச்சர் பிரணவ மந்திரத்தை உச்சாடனம் செய்யாது நூறு பிரதட்சணம் செய்தால் சிவபூசை செய்த பயனை அடைவார்கள். நம்பிக்கையுடனும், பக்தியுடனும் செய்யும் பூசையே பயனைத் தரும். வியாசரே, லிங்க வழிபாடு சகல பாவங்களையும் போக்கும். சிவனின் சரித்திரத்தைக் கேட்பதும், சிவ மந்திரத்தை ஜெபிப்பதும் அசுவமேத யாகம் செய்த பயனைத் தரும். இதைச் சிவபெருமான் பிரமதேவருக்கு உபதேசித்தார்” என்று சநத்குமார முனிவர் கூறினார்.

புண்ணிய தலங்கள்

இவ்வாறு சநத்குமார முனிவர் கூற, வியாசர் அவரைப் பணிந்து கேட்டார், "சுவாமி சிவத்தலங்கள் எவை? அவரது மூர்த்தங்கள் எத்தனை?" என்று கேட்டார்.

"வியாசரே, எண்குணத்தவனான சிவபெருமானே சூரியனாகி உலகெங்கும் பிரகாசிக்கிறார். அவரே தச அவதாரங்களையும் எடுக்கிறார். அவர் சூரிய அவதாரம் எடுக்கும் போது திரிமூர்த்தி எனப்படுகிறார். தச அவதாரத்தின் போது விஷ்ணு எனப் பெயர் பெறுகிறார். அவரே சுப்பிரமணியராகத் தோன்றித் தேவ சேனாதிபதியாகி அரக்கர்களை அழித்துச் சோமாஸ்கந்தராக உருவெடுத்தார். அத்துடன் சந்திரன், குபேரன், வருணன், சப்த மருத்துக்கள், உமாபதி முதலிய மூர்த்திகளாகவும் விளங்குகிறார். இவற்றில் யாரை வணங்கிணாலும் அந்தந்த மூர்த்தத்தில் இருந்து அருளுவார்.

ஆகையால் அவர் வசிக்கும் இடங்களைக் கூறி முடிக்க முடியாது. அதனால் மிகச் சுருக்கமாகக் கூறுகிறேன். உருத்திரபதம், சிலேஷமாதகம், அவிமுக்தம், மகாலயம், கோகர்ணம், பத்திரகர்ணம், சுவர்ணாசலம், மாகேஸ்வரம் ஆகிய தலங்களில் சிவபெருமான் எப்போதும் எழுந்தருளியிருப்பார். மாகேஸ்வரத்தில் உயிர்துறந்தால் அவர்களுக்கு உமாதேவியார் உருத்திர தேகத்தைக் கொடுப்பார். சிலேஷ மாதகம் என்ற தலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை வணங்கியோர் விரும்பியவற்றை அடைவர். விஷ்ணு, சந்திரன், இந்திரன் போன்றோர் அங்கு சென்று பூசித்தனர்.

மேரு மலையில் உள்ளது சுவர்ணாசலம். அங்கு சென்று பூசித்த முனிவர்கள் போக பாக்கியங்களைப் பெற்றுள்ளனர். அவிமுக்தமாகிய காசித்தலத்தில் சிவபெருமான் விக்னேஸ்வரன் என்ற பெயரோடு இருக்கிறார். தேவர்கள் இங்கு சென்று வணங்கிப் பெரும்பேறுகளைப் பெற்றுள்ளனர்.

"காசியிலே கார்த்தமேஸ்வரம், பீமசண்டேஸ்வரம், இராமேஸ்வரம், விருஷபத்துவஜேஸ்வரம், மணிகர்ணிகை என்ற ஐந்து தலங்களிலும் பஞ்சாயதனமாக விளங்குகிறார். அங்கு இறப்பவர்களுக்கு வாசாமகோரசமான அனந்த ரூபம் கிடைக்கும். பத்திரகர்ணம் என்னும் தலத்தில் வணங்குவோரின் கோரிக்கைகள் உடனே நிறைவேறும். உஜ்வலம், சுபுண்யம் என்ற இரு தலங்களும் அதி புண்ணியமானவை. அங்கு களங்கமற்ற தூய்மையான மனமுடையவர்களே செல்ல முடியும். அங்கு விரைவில் சித்திகள் உண்டாகும். இவை தான் சிவபெருமானின் புண்ணிய தலங்களாகும்" என்றார் சநத்குமார முனிவர்.

பரமனுக்குப் பிரயமான தலங்கள்

“வியாசனே, சிவபெருமானுக்கு மிகவும் பிரியமான தலங்களைப் பற்றிச் சொல்கிறேன் கேட்பாயாக

சாகலாண்டம், குருண்டம், முகுண்டம், மண்டலேஸ்வரம், காலஞ்சரம், கதகண்டம், பலேசுவரம் என்ற தலங்களில் சிவபெருமான் மிகுந்த மகிழ்வுடன் சிவ கணங்களோடும் தேவர்கள், முனிவர்கள், காந்தர்வர், சித்தர்களுடன் கூடியிருப்பார். சிவனடியார்கள் இத்தலங்களை ஒரு முறையாவது தரிசித்தல் வேண்டும். இங்கு முறைப்படி ஒரு நாள் வாழ்ந்தாலும் ராஜசூரிய அஸ்வமேத யாகங்களைச் செய்தபயனை அடைவர். இங்கு உயிர் நீப்பவர்கள் மகாதேவனின் பாதத்தை அடைவர்” என்றார் சநத்குமார முனிவர்.

தல மான்மியம்

“குருவே, நீங்கள் கூறிய தலங்களுக்குச் சென்று கோரிக்கைகளோடு பூசை செய்தால் சிவபெருமான் கொடுக்கும் வரங்களைப் பற்றி விபரமாகக் கூறுங்கள்” என்று வியாசர் கேட்டார்.

வியாசனே, ஒரு காலத்தில் பல முனிவர்கள் ஒன்று கூடிப் பூசை செய்ய அப் பூசையால் மகிழ்ந்த சிவபெருமான் பெரு மகிழ்வுடன் அவர்கள் முன் தோன்றி, “உங்களுக்கு வேண்டியவற்றைக் கேளுங்கள்” என்றார்.

“எம்பெருமானே, எம் மீது கருணை காட்டி நீர்வசிக்கும் தலங்களையும், அந்தத்தலங்களின் மகிமைகளையும் அங்கு சென்று வணங்குவதால் பெறக்கூடிய பயன்களையும் கூறியருளுங்கள்” என்றார்.

“முனிவர்களே, எனக்குப் பிரியமான தலங்கள் பல உள்ளன. அவை மகாபுரம், சக்தாபுரம், ஸ்ரீபர்தம், ஜாப்பியேசுவரம், ஆம்ராடிகேசுவரம், மகாகள்புரம், மத்தியமேஸ்வரம், தேவதாருவனம் இவையாவும் எனக்குப் பிரியமான தலங்களாகும். இங்கு யார் தரிசித்தாலும் இஷ்ட சித்திகளை அடைவர். பாவிகள் மிலேச்சர்கள், பெண்கள் என யார் பூசித்தாலும் இந்திரலோகத்தில் பலகாலம் வசித்துப் பின் பூலோகத்தில் பிரபுக்களாகப் பிறந்து காணாபந்தியத்தை அடைவார்கள்.

இத்தலங்களில் பிதுர்களுக்குரிய சிரார்த்தத்தைச் செய்தவர்கள் பிதுர்களுடன் சுவர்க்கத்தில் இன்பமாக வாழ்வர். இங்கு உயிரை விடுவோர் உருத்திர சாரூபத்தை அடைவார்கள். இவையெல்லாவற்றிலும் குஷ்யஸ்தானமே சிறப்பானது. இதை மாணவனுக்கும்

புத்திரர்களுக்குச் சமமானவர்களான சிவபக்தர்களுக்கு மட்டுமே சொல்லுதல் வேண்டும்" என்று சநத்குமார முனிவர் கூறினார்.

சிவபெருமானின் பிரபாவம்

"குருவே, மகாதேவன், விஷ்ணு, பிரமன் இவர்களில் தொழிலில் சிறந்தவர் யார்?" என்று கேட்டார் வியாசர்.

"வியாசரே முன்பு மாபலிச் சக்கரவர்த்தியிடம் மூன்று அடி மண் வேண்டி, மூன்றாவது அடிவைக்க இடமின்னையால் மாபலியின் தலைமீது தனது அடியை வைத்து அவனைப் பாதாள உலகிற்கு அனுப்பிய விஷ்ணு பாற்கடலில் யோகநித்திரையில் இருந்தார். அப்போது அசுரர்கள் விஷ்ணுவைத் தரிசிப்பதற்காகப் பாற்கடலுக்குச் சென்றனர். அப்போது தேவர்களும், பிரம்மரிஷிகளும், அப்ஸரஸ்களும் அங்கு வந்திருந்தனர். அவர்கள் விஷ்ணுவைப் பணிந்தனர்.

அவர்களுக்கு விஷ்ணு சொன்னார், "சர்வ உலகங்களுக்கும் காரணனான சிவபெருமானது மகிமைகளைக் கூறுகிறேன் கேளுங்கள். சிவனை வணங்கியே அவரது கருணையால் நானும் பிரமனும் இத்தகைய உயர் பதவிகளை அடைந்தோம். ஒரு சமயம் நானும் பிரமனும் எமக்குள் பெரியவர் யாரென்று ஆணவங் கொண்டு போரிட்டோம். அப்பொழுது சிவபெருமான் சோதி வடிவில் தோன்றி, "மைந்தர்களே, நீங்கள் இருவரும் விவாதம் செய்ய வேண்டாம். பிரமனே நீ எனது வலப்புறம் தோன்றியவன். விஷ்ணு இடப்புறம் தோன்றியவன். உங்கள் இருவருக்கும் எனது அருள் பரிபூரணமாக விளங்கும். பிரமனே நீ படைத்தல் தொழிலையும், விஷ்ணுவே நீ காத்தல் தொழிலையும் செய்யுங்கள் என்று கூறி மறைந்தார். அதனால் நீங்கள் எல்லோரும் சிவபெருமானை அன்புடன் தொழுங்கள். அவரைத் துதிப்பதன் மூலம் உங்கள் விருப்பங்கள் யாவும் பூர்த்தியாகும்" என்று கூறினார்.

அதனால் வியாசனே, சிவபெருமானே, எல்லாவற்றிற்கும் மேலானவன் என்று உணர்வாயாக என்றார் சநத்குமார முனிவர்.

மலர்களின் மகிமை

"சுவாமி, சிவபூசையின் போது மலர்களால் அர்ச்சனை செய்வதால் வரும் பயன்களைக் கூறுங்கள்" என்று சநத்குமார முனிவரை வியாசர் கேட்டார்.

"வியாசனே, யாகங்களை முறைப்படி முடித்தவர்கள் எந்தப் பயனை அடைவார்களோ அந்தப் பயனை ஒரு சிவலிங்கப் பிரதிட்டை செய்வதன் அடைவான். அவன்

உருத்திர பதவியில் பல காலம் வாழ்வான். கங்கை முதலான புண்ணிய நதிகளில் நீராடி அடையும் பயனைச் சிவபூசைக்குச் சந்தன தானம் கொடுத்தவன் அடைவான். சிவபூசைக்காகப் பூ தானம் செய்தவர்கள் உருத்திர சாரூப்பியத்தை அடைவர். சிவபூசைக்குத் தைல வகைகளைத் தானம் செய்தவன் பெரும்பயனை அடைவான். நெய்யைத் தானம் கொடுத்தவன் அறுபது கோடி வருடமும், பாலைத் தானம் கொடுத்தவன் எண்பது கோடி வருடங்களும் உருத்திரப் பதவியில் வாழ்வர்.

தினமும் நீராடி மூன்று வேளைகளிலும் மாசோபவாச பாசோபங்களைத் தனது ஆயுள்க் காலம் வரை செய்தவர்கள் அடையும் பயனைச் சிவலிங்கத்திற்கு ஒரு முறை பாலாபிசேகம் செய்தவன் அடைவான். நூறு பசுக்களைத் தானம் செய்த பயனை லிங்கத்திற்கு ஒரு பூவைச் சாத்துவதன் மூலம் பெறலாம். சிவபெருமானை ஆடல், பாடல்களால் மகிழ்விப்பவன் தான் செய்த நூறு குற்றங்களில் இருந்து விடுபடுவான். கரு நெய்தல் மலரால் சிரவண மாதத்திலும், தாமரையால் புரட்டாதி மாதத்திலும், நாயுருவி, தர்ப்பை முதலியவற்றால் ஐப்பசி மாதத்திலும் பூசிக்க வேண்டும். வில்வை, அறுகு முதலியவற்றால் எக்காலத்திலும் பூசிக்கலாம். சிவபெருமானுக்கு வெள்ளை மலரிலேயே அதிகம் விருப்பம் உண்டு. கொக்கு மந்தாரை, கரவீரம், வெள்ளெருக்கு, ஊமத்தம் என்ற நான்கு மலர்களின் வாசத்தைச் சிவபெருமான் மிகவும் விரும்புவார். ஒரு வெள்ளெருக்கு ஆயிரம் உற்பலத்திற்குச் சமமாகும். ஒரு சரபுன்னை ஆயிரம் சிந்து புஷ்பங்களுக்கு சமமாகும். கர்ணிகாரம் ஒன்றிற்கு ஆயிரம் சுரபுன்னை சமமாகும்.

“சிந்து புஷ்பம் ஆயிரத்திற்கு ஒரு கண்டங்கத்தரி மலர் சமமாகும். எல்லாவற்றையும் விட வில்வம் இலையே சிறப்பானது. வில்வம் இலைக்கு மகிழ்வது போலச் சிவன் வேறெந்த மலருக்கும் மகிழ்வதில்லை. ஏனையவற்றைச் சூட்டுவதை விட வில்வம் இலையைச் சூட்டினால் அறுபத்து நான்கு மடங்கு பயன் கிடைக்கும். அட்டமி, திரியோதசி, சதுர்த்தி முதலிய தினங்களில் சிவபெருமானுக்கு விருப்பமான மலர்களை வைத்து அர்ச்சனை செய்தவன் துன்பங்களை ஒரு போதும் அனுபவிக்கமாட்டான். திருவிளக்கிட்டவன் உருத்திரசாரூப்யம் அடைவான்” என்று சநத்குமார முனிவர் சொன்னார்.

சிவ புண்ணியம்

“வியாசரே, இனிச் சிவபெருமானை எவ்வாறு ஆராதனை செய்ய வேண்டும் என்று கூறுகிறேன்” என்ற சநத்குமார முனிவர் சொல்லத் தொடங்கினார்.

“வியாசரே, முன்பு இதே கேள்வியை நந்திதேவர் சிவபெருமானைக் கேட்டபோது சிவபெருமான் அவருக்குக் கூறினார். அதை அப்படியே நந்திதேவர் எனக்குக் கூறினார். அவர் கூறியதை உமக்குச் சொல்கிறேன்”.

எனது சந்ததிக்குப் பொற்கலசம் வைத்தவன் அத்தகைய பல கலசங்கள் வைக்கப்பட்ட மாளிகையில் வசிப்பான். என்னை நினைத்துப் பசு, பொன், வஸ்திரம் ஆகியவற்றைத் தானம் செய்தவன் உலகம் முழுவதற்கும் ஏகச் சக்கரவர்த்தியாவான். எனக்கு ரிஷபவாகனம் செய்து தந்தவன் என்னோடு வசிப்பான். தீப தூபம் காட்டி வாத்தியங்கள் இசைத்தவன் பிரமலோகத்தில் வசிப்பான். சிவ நாமங்களைச் சொல்லி சுரதானம் செய்தோர், பிரம ஞானிகளாகவர். அக்கினி ஷ்டோமதி யாகம் செய்து பூசித்தவர்கள் இந்திரப் பதவியடைவர்.

அட்டமி, சதுர்த்தசித் தினங்களில் சிவார்ச்சனை செய்து பிராமணர்களையும், சுமங்கலிகளையும் வணங்கியவன் இந்திரப் பதவி வகிப்பான். இடையூறுகள் நோய்கள் வந்தபோதும் சிவார்ச்சனை செய்தவன் சிவப்பதவியை அடைவான். அதனால் பிறப்புக்கள் உண்டாகாது. பிரளயத்தின் போதும் நானே நிலைத்திருப்பேன். எந்த முகூர்த்தத்தில் எப்படிப் பூசித்தாலும் நான் அப் பூசையை ஏற்றுக் கொள்வேன். நான் சர்வசக்தி படைத்தவன் என்றுணர்ந்த உண்மையான ஞானியும் நானுமே அழிவற்றவர்களாக விளங்குவோம். சுவர்ண புஷ்பங்களால் அர்ச்சித்த பயனை ஒரு கொக்கு மந்தாரை கொடுக்கவல்லது. அத்தகைய கொக்கு மந்தாரை மலர் ஆயிரத்தால் என்னை அர்ச்சித்தவன் எனக்குச் சமமான தேகத்தை அடைவான். காளகண்டமும், நான்கு தோள்களும், மூன்று கண்களும், ரிசப வாகனமும் பெற்று அனேக கோடிக்கணக்கான காலம் வாழ்வான். தேவர்கள், முனிவர்கள், ரிஷிகள் ஆகிய எல்லோரும் என்னைப் பூசித்தே தத்தமது பதவிகளை அடைந்தனர். இதைச் சொன்னவரும் கேட்பவர்களும் உருத்திரயோகத்தை அடைவார்கள் என்று சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளினார்'' என்றார் சநத்குமார முனிவர்.

சுவர்ண புஷ்ப சமானம்

''சுவாமி மலர்கள் எப்படிப்பட்டவை, மலர்கள் கிடைக்காதவிடத்து எதைக் கொண்டு சிவபூசை செய்வது'' என்று சநத்குமார முனிவரை வியாசர் கேட்டார்.

''வியாசரே, சிவபெருமான் சொல்லியதை அப்படியே நான் சொல்கிறேன், □நந்தி செந்நிற மலர்கள் பொன்நிற மலர்கள், வெண்ணிற மலர்கள் என்பவற்றுடன் முட்கள் நிறைந்த செடிகளில் உள்ள மலர்களும் எனக்கு விருப்பமானவை. தேவர்களுக்கு வெள்ளை மலர்களும், அசுரர்களுக்குத் துர்வாசனையுள்ள மலர்களும், இராக்தர்களுக்கு முட்களை உடைய மலர்களும் மகிழ்வைக் கொடுக்கும். எல்லாப் பொருட்களையும் விடத் தங்கமே பெறுமதியானது. அதனால் தங்கப்புஷ்பத்தால் அர்ச்சிப்பவன் எனது சாரூப்யத்தை அடைந்து அப்ஸரஸ்களுடன் கூடி, அகேன காலம் வாழ்வான். சுவர்ணபுஷ்பமானது எண்பது குன்றிமணி எடையுள்ளதாகவும் அல்லது பதினொரு உளுந்தின் எடை கொண்டதாகவும் இருத்தல் வேண்டும். குருந்த மலர்கள் சுவர்ண புஷ்பங்களுக்குச் சமமாகும், செவ்வரத்தை, நரகேசரம்

இவற்றின் மலர்கள் இரண்டு சுவர்ண புஷ்கங்களுக்கும், சிறு சண்பகம், மல்லிகை ஐந்து சுவர்ண புஷ்பங்களுக்குச் சமமாகும், ஜாதி மல்லிகை, முல்லை மலர்கள் ஆறு சுவர்ண புஷ்பங்களுக்குச் சமமாகும், செந்தாமரை மலர் ஏழு சுவர்ண மலர்களுக்கும், அசோகமலர் பத்துச் சுவர்ண புஷ்பங்களுக்கும் சமமாகும். நூறு இதழ்த் தாமரை எண்ணாயிரம் சுவர்ண புஷ்பங்களுக்குச் சமமாகும். பூமத்தை ஐயாயிரம் சுவர்ண புஷ்பங்களுக்கும், வில்வம் இலட்சம் சுவர்ண மலர்களுக்குச் சமமாகும். மேற்சொன்ன மலர்களால் அர்ச்சிப்பவர்களுக்கு நானே சிவமூர்த்தியாகிறேன். இவர்கள் வேறு பூசை அனுட்டாணங்கள் செய்ய வேண்டியதில்லை. மேற்சொன்னவற்றுள் ஏதாவது ஒன்றால் கிருஷ்ணபட்ச அட்டமியில் சகஸ்ர நாம அர்ச்சனை செய்தவன் அனேக கோடி காலம் என்னுடன் சேர்ந்திருப்பான். அகர், தேவநாரு முதலியவற்றால் தீபமேற்றியவன் முப்பத்திரண்டு சுவர்ணங்களைத் தானம் கொடுத்த பயனை அடைவான். ஓர் ஆண்டு எனது சந்நிதியில் தீபம் வைத்தவன் அறுபதாயிரம் ஆண்டுகள் எனது உலகில் என்னுடன் கூடியிருப்பான்'' என்று சிவபெருமான் கூறியதாக சநத்குமார முனிவர் வியாசருக்குச் சொன்னார்.

மாத உபவாச மகிமை

வியாசர், சநத்குமார முனிவரை நோக்கி, ''சுவாமி எந்தெந்த மாதத்தில் சிவபெருமானுக்கு விரதம் இருக்க வேண்டும்'' என்று கேட்டார். அதற்குச் சநத்குமார முனிவர் சொல்லலானார். சிவபெருமான் உமாதேவிக்குக் கூறியதை நான் உனக்குக் கூறுகிறேன். பஞ்சமி, சஷ்டி பூர்ணிமை ஆகிய தினங்களில் என்னை அர்ச்சித்தால் அழகிய ரூபனாகவும், பாக்கியவானாகவும் இருப்பான். கிருஷ்ணபட்ச அட்டமி சதுர்த்தசியில் விரதமிருந்து நான்கு யாமங்களிலும் என்னைப் பூசித்தவன் குபேர சம்பத்துடன் வாழ்வான்.

துவாதசியில் ஒரு நேர உணவுடன் என்னைப் பூசித்தவன் தனவானாகப் பிறப்பான். ஒரு வருடம் அமாவாசைத் தினங்களில் பூசித்தவனும் மாதம் தோறும் மூன்று நாட்கள் இலட்ச ஆண்டுகள் சுவர்க்கத்தில் வாழ்வர். கார்த்திகை மாதம் சிவனுக்குரிய தினங்களில் என்னை முறைப்படி பூசித்தவனும் சக்கரவர்த்தியாவான். ஒரு மாதகாலம் என்னைப் பூசித்தவன் அன்னங்களால் அலங்கரிக்கப்பட்ட விமானத்தில் சர்வஅண்டங்களுக்கும் சென்று வருவான்.

தைமாதம் முழுவதும் ஒரு நேர உணவுடன் முறைப்படி விரதமிருப்பவன் அறுபதினாயிரம் ஆண்டுகள் சுவர்க்கத்தில் வசிப்பான். மாசிமாதத்தில் தினமும் ஒருமுறை உண்டு மூன்று நாட்கள் முறைப்படி உபவாசம் இருப்பவன் தொண்நூறாயிரம் ஆண்டுகள் தான் விரும்பிய உலகில் வசித்துப் பின் பூமியை அடைந்து பிரமஞானியாவான். பங்குனிமாதத்தில் ஒருவேளை உண்டு அந்த மாதம் முழுவதும் முறைப்படி விரதம் அனுட்டிப்பவன் பிரமலோகத்தில் வசித்துப் பின் பூவுலகில் பிராமணனாகப் பிறந்து வேதங்களைக் கற்று

முறைப்படி யாகங்களைச் செய்து மோட்சமடைவான். சித்திரை மாதத்தில் முறைப்படி என்னைப் பூசிப்பவன் எண்பதினாயிரம் ஆண்டுகள் வருணலோகத்தில் வசிப்பான்.

வைகாசிமாதத்தில் ஒருவேளை உண்டு என்னை முறைப்படி பூசிப்பவன் முப்பதினாயிரம் ஆண்டுகள் சுவர்க்கத்தில் வாழ்ந்து விட்டுப் பூமியை அடைந்து அங்கு அரசனாவான். ஆனிமாதத்தில் முறைப்படி என்னைப் பூசிப்பவன் கொடிய பாவங்கள் செய்தாலும் அவற்றில் இருந்து நீக்கப்பட்டு நற்கதியடைவான். ஒழுக்கமாக வேதங்களைக் கற்று முறைப்படி வாழும் பிராமணனுக்கு காராம் பசுவைக் கன்றுடன் தானம் செய்தவன் சூரியனுக்குச் சமமான விமானத்தில் தனது திவ்விய தேகத்துடன் அப்ஸரஸ்கள் பணிவிடை செய்யப் பதினாயிரம் ஆண்டுகள் சுவர்க்கத்தில் வசித்த பின் புவியில் பிறந்து நாட்டை ஆழ்வான். ஆடிமாதத்தில் முறைப்படி எனக்குப் பூசை செய்பவன் எக்குலத்தில் பிறந்தாலும் அவன் குபேரனைப் போல் வாழ்வான்.

ஆவணி மாதத்தில் ஒரு வேளை உண்டு, அட்டமி தினத்தில் உபவாசமிருந்து பிராமணர்களைப் பூசித்தவன் வாயு வேகமாகச் செல்லும் விமானத்தில் ஏறித் தனது பிதுர்களின் கூட்டத்துடன் பத்தாயிரம் ஆண்டுகள் சுவர்க்கத்தில் வசித்துப் பின் பூலோகத்தில் பிறந்து சிவஞானியாவான். ஐப்பசி மாதம் முறைப்படி விரதமிருந்து என்னைப் பூசித்தவன் அறுபதினாயிரம் ஆண்டுகள் சுவர்க்கத்தில் குபேர சம்பத்துடன் வாழ்வான்.

எட்டு ஆண்டுகள் நான் சொன்ன நியமப்படி என்னை அர்ச்சித்தவன், நூறு அசுவமேதயாகம் செய்த பயனை அடைவான். ஒருநாள் உண்டும், மறுநாள் உபவாசமிருந்தும் ஐந்து ஆண்டுகள் என்னைப் பூசித்தவன் ஆயிரம் அசுவமேதயாகம் செய்த பயனை அடைவான். ஒருபட்சம் உபவாரமிருந்து முறைப்படி பூசித்தவன் பத்து அக்கினிகோமம் செய்த பயனை அடைவான். கந்தமூல பலங்களைப் பூசித்து என்னையும் பூசித்தவன் வாஜபேயஞ் செய்த பயனை அடைவான். ஜலபானஞ் செய்து கொண்டு என்னைப் பூசித்தவன் அப்தோலியாகம் செய்த பயனை அடைவான். ஓராண்டு காலம் தினமும் இருபத்தைந்து நாழிகைகள் என்னைப் பூசித்து மாலைவேளை உண்டவன் சத்திரயாகம் செய்த பயனை அடைவான்.

காலையில் தினமும் பூசித்து ஒருமுறை உண்டு மறுநாள் வரை நீர் கூட அருந்தாமல் ஆறு மாதங்கள் விரதமிருந்தவன் அதிராந்திரம் என்ற யாகத்தைச் செய்த பயனை அடைவான். பன்னிரு ஆண்டுகள் இரவில் மட்டும் உண்டு ஒழுக்கமாக வாழ்ந்தவன் எல்லா யாகங்களையும் செய்த பயனைப் பெற்று, விமானத்தில் ஏறித் தான் விரும்பும் லோகங்களுக்குச் சென்று நூறாயிரம் ஆண்டுகள் அங்கு தங்கிப் பின் பூமியில் சக்கரவர்த்தியாகத் தோன்றுவான்.

பஞ்சாட்சர மந்திரத்தை நாள்தோறும் இருவேளை ஆயிரத்தெட்டு முறை ஜபித்தவன் பெருஞ் செல்வத்துக்கு அதிபதியாகி அப்ஸ்சரஸ் மங்கையருடன் இன்பமாக வாழ்வான்.

வேதியர்க்குத் தானம் செய்தவனும், தண்ணீர்ப்பந்தல் அமைத்தவனும் சிவலோகத்தில் வாழ்வார்கள். வேதியரைச் சந்தனத்தால் அலங்கரித்துப் பூசித்தவன் சந்திர மண்டலத்திற்குச் சமமான விமானத்தில் பயணம் செய்வான்.

பிராமணருக்குப் பசுவைத் தானமாகக் கொடுத்தவன், அதிலுள்ள ரோமங்களின் எண்ணிக்கைக்குரிய ஆண்டுகள் தேவலோகத்தில் வாழ்ந்து பின்னர் பெரும்பண்டிதனாக விளங்குவான் என்று சிவபெருமான் கூறியருளினார்.

வியாசரே, உம்மிடமுள்ள அன்பின் மிகுதியால் இவற்றைச் சொன்னேன். இதைச் சொல்பவர்களும், கேட்பவர்களும் துன்பங்கள் யாவும் நீங்கிச் சிவஞானம் பெறுவர்'' என்று சநத்குமார முனிவர் சொன்னார்.

நாமாட்டமி விதி

வியாரரே, எத்தகைய பூசைகளால் சிவபெருமான் திருப்தியடைவார் என்பதைக் கூறுகிறேன் என்று சொல்லிச் சநத்குமார முனிவர் சொல்லத் தொடங்கினார். பூர்வ காலத்தில் இதைச் சிவபெருமான் பார்வதிதேவிக்குக் கூறினார்.

''பார்வதி, அட்டமித்திதியில் முறைப்படி உபவாசமிருந்து, பாலாபிசேகம் செய்து தூபதீபங்காட்டி, பழங்களை வைத்து என்னை நிவேதித்தவன் மந்திரசித்தியை அடைவான். சிலை, உலோகம், தரு, பிரு விதி இவற்றில் ஒன்றினால் லிங்கம் செய்து முறைப்படி வணங்கினால் நான் மகிழ்வேன். கார்த்தியபதார்தங்கள் எனக்கு விருப்பமானது.

உரிய மந்திரத்தைச் சொல்லி நெல்லிக் கனியைப் படைத்துப் பூசித்தல் வேண்டும். சதுர்த்தசி தினத்தன்று உரிய முறைப்படி நீராடி நித்திய கருமங்களை முடித்துச் சிவப்புச் சந்தனத்தையும், கரவீரம், கதம்பம் முதலிய மலர்களையும் படைத்துப் புண்ணிய நதிகளின் நீரால் அபிசேகம் செய்தல் வேண்டும். வேத மந்திரங்களால் அர்ச்சிக்க வேண்டும். வேதமந்திரம் தெரியாதவர்கள் நாம அர்ச்சனை செய்யலாம்.

சிவபெருமான் இமயமலையில் தன்னருகே இருந்த பார்வதியைப் பார்த்து, ''பார்வதி மார்கழி மாதத்தில் வரும் கிருஷ்ணபட்ச அட்டமியில் கோ மூத்திரத்தைப் பூசித்து என்னை நினைத்து விரதமிருந்து சகஸ் நாம அர்ச்சனை செய்து மறு நாள் பாராயணம் செய்தவன் சர்வபாவங்களில் இருந்தும் விடுபட்டு மோட்சத்தை அடைவான். தை மாதத்தில் பசு நெய்யை உண்டு விரதமிருப்பவன், பிரமகத்தி முதலான பாவங்களை ஒழித்து அட்சயலோகத்தை அடைவான். மாசி மாதத்தில் வரும் அட்டமித்திதியில் பசுப்பாலில் பாயாசம் செய்து தட்சணா மூர்த்திக்கு நிவேதிப்பவன் சுவர்க்கத்தை அடைவான். பங்குனிமாத அட்டமியில் எள்ளை உண்டு விரதமிருப்பவன் சிறந்த தர்மங்களைச் செய்தவனாகக் கருதப்படுவான். சித்திரை

மாதத்தில் யவையைப் படைத்து உண்டு விரதமிருப்பவன் உயர்ந்த தருமங்களைச் செய்தவன் பெறும் பயனை அடைவான். வைகாசி மாதத்தில் நீரை குடித்தும், ஆனி மாதம் கோமயம் புசித்தும், ஆடி மாதத்தில் பழங்களை உண்டும், ஆவணி மாதத்தில் உப்பு நீரைக் குடித்தும், புரட்டாதி மாதத்தில் தயிரைக் குடித்தும், ஐப்பசி மாதத்தில் வெந்நீர் குடித்தும், கார்த்திகை மாதம் தேனைப் பருகியும் என்னைப் பூசித்தோர் பெரு புண்ணியர்களாகி மோட்சத்தை அடைவர். அந்தந்த மாதங்களில் வரும் அட்டமி தினத்தன்று தட்சணாமூர்த்தியின் ஆலயத்தில் பூசை செய்வது சிறப்பானது.

"பன்னிருமாத அட்டமிகளுக்கும் தனித்தனிப் பெயர்கள் உண்டு. தைமாதத்தில் தேவதே அட்டமியும், மாசியில் மகேஸ்வர அட்டமியும், பங்குனியில் திரியம்பகா அட்டமியும், சித்திரையில் சநாதனா அட்டமியும், வைகாசியில் சதாசிவா அட்டமியும், ஆனியில் பகவதா அட்டமியும், ஆடியில் நீலகண்ட அட்டமியும், ஆவணியில் ஸ்தாணு அட்டமியும், புரட்டாதியில் தும்பு அட்டமியும், ஐப்பசியில் ஈஸ்வர அட்டமியும், கார்த்திகையில் உருத்திர அட்டமியும் வரும். இவ் அட்டமிதினங்களில் உரிய முறைப்படி பூசை செய்து விரதமிருப்பவர்களின் பலன்களை முன்பு சொன்னேன். இவ்வாறு பன்னிரு அட்டமிகளிலும் முறைப்படி விரதமிருந்தோர் நீலகண்டமும், சதுர்ப்புயமும், மான்மழுவும் தரித்து உருத்திர சாரூபத்துடன் நெடுங்காலம் வாழ்ந்து பூவுலகில் மேலாண பதவிகளை அடைந்து பின் முத்தியடைவர்" என்று சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளினார்.

லட்சணாட்டமி விதிமுறை

பார்வதிதேவி பரமசிவனை நோக்கி, "நாதா உலகில் பலர் கூன், குருடு, நொண்டி, செவிடு முதலிய அங்கக் குறைவுடன் பிறக்கிறார்கள். சிலர் அழகான குறைபாடில்லாத மேனியுடன் பிறக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன?" என்று கேட்டாள் சிவபெருமான் கூறலானார்.

"உமையே கார்த்திகை மாதம் முதல் வரும் அட்டமி தோறும் என்னை நினைத்து உபவாசமிருந்து முறைப்படி அர்ச்சனை செய்தவன் இந்திரபோகம் முதலாகவுள்ள சகல போகங்களையும் பூமியிலேயே அனுபவிப்பான். என்னைப் பாதாதி கேசமாக அங்கங்களை முறைப்படி பூசித்தவன் மன்மதனுக்கு ஒப்பான வடிவத்துடன் அங்கக் குறைவுகளின்றி பெருஞ்செல்வத்துடன் வாழ்வான். அவ்வாறு பூசிக்காதவர்கள்தான் அங்கக்குறைவுகளுடன் பிறக்கிறார்கள்.

பன்னிரு மாதங்களில் வரும் அட்டமிகளில் அங்க பூசை செய்து, உபவாசம் இருந்து விரதமுடிவில் இருபத்து நான்கு பிராமணர்களை அழைத்து கும்பம் வைத்து சிவாய என்று எனது நாமத்தால் ஆவாகனம் செய்து, சோட உபகாரம் செய்து திரியம்பக

மந்திரத்தால் அமித்து அக்கம் நிலங் கூட்டி ஆயிரத்தெட்டு பிராமணருக்குத் தானம் கொடுத்து விரதத்தை முடித்தவன் சுவர்க்கத்தை அடைந்து பெரும் யோகங்களை அனுபவித்து சிவனுருவை அடைவான்.

தானப்பயன்

"உமையவளே, இனி உனக்கு நான் தானதர்மங்களின் பயனை உலக நன்மைக்காகச் சொல்கிறேன். எல்லாத் தானங்களையும் விட அன்னதானமே மிகச் சிறந்தது. அன்னத்தை அந்தணர்களுக்குத் தானம் கொடுப்பவன் திவ்விய விமானத்தில் ஏறி சகல லோகங்களுக்கும் சென்று பின் பூவுலகை அடைந்து குபேரனைப் போல வாழ்வான். குளிர்ந்த நீரைத் தானம் செய்தவன் பெரும் பதவியை அடைந்து மகிழ்வுடன் வாழ்வான்.

நீர் நிலைகளைக் கட்டிக் கொடுத்தவன் தனது பிதுர்களுடன் பதினாயிரம் தேவ வருடங்கள் சுவர்க்கத்தில் வாழ்ந்து பின் பூமியில் அரசனாகப் பிறந்து மன்னனாயிருந்து இந்திர உலகத்தில் ஐம்பதினாயிரம் ஆண்டுகள் அப்ஸ்சரஸ் மங்கைகளுடன் வாழ்ந்து இன்பம் அனுபவிப்பான். பொன்னைத் தானமாகக் கொடுத்தவன் அக்கிலோகத்திலும், வெள்ளியைத் தானம் செய்தவன் குபேர உலகிலும் வாழ்வான். பூமியைத் தானம் செய்தவன் பிரமலோகத்தில் வாழ்ந்து பின் பூலோகத்தில் சக்கரவர்த்தியாவான்.

மரங்களை நட்டு பூமியைச் சோலையாக்கியவன் சுவர்க்கத்தில் வாழ்வான். நோயாளர்களுக்கு மருந்து வகைகளைக் கொடுத்தவன் சந்திரலோகத்தில் ஆயிரம் ஆண்டுகள் வசித்துப் பின் யோகியாகப் பிறப்பான். பசுவைக் கன்றுடன் தானம் செய்தவன் கோலோகத்தில் சகல போகங்களுடனும் வாழ்வான். தண்ணீர் பந்தல் அமைத்தவன் தனது பிதுர்களுடன் பிதுர்லோகத்தில் வாழ்வான். அத்துடன் எண்ணற்ற காந்தர்வர்களோடு ஆடிப்பாடி மகிழ்ந்து பின் பாரத சாத்திரத்தில் வல்லவனாவான். நறுமலர் மாலைகளை எனக்குச் சூடியவன் சுவர்க்கத்தை அடைவான். சிரார்த்த காலத்தில் பிதுர்களுக்கு முறைப்படி தர்பணம் செய்தவன் மகாதாதாவாகப் பிறந்து சகல இன்பங்களையும் அனுபவிப்பான். நெய் விளக்கேற்றியவன் யம உலகில் தர்ம விசாரணை செய்பவனாக விளங்குவான்.

திரவங்களில் சிறந்தது நெய். தேவர்கள் அனைவரும் பசுவின் தேகத்தில் வந்து உறைந்துள்ளனர். பிரமன் அதன் தலையிலும், இந்திரன் நெற்றியிலும், சந்திர சூரியர்கள் கண்களிலும், அக்கினி முகத்திலும் மற்ற தேவர்கள் பசுவின் ஒவ்வொரு அங்கங்களிலும் வந்தமர்ந்திருப்பதால் தேவர்களின் வாசல்தலமாக பசு விளங்குகிறது. பசுவை உரிய மந்திரங்களைச் சொல்லி முறைப்படி தானம் செய்தால் அவன் விரும்பிய உலகங்களில் விரும்பிய காலம் வாழ்ந்து பின் பூவுலகில் சக்கரவர்த்தியாகப் பிறப்பான்.

ஆதரவற்றவனை ஆதரித்து அவனது நோயை நீக்கிக் காப்பாற்றியவன் பிரமகத்தியால் வந்த பாவங்களை ஒழிப்பான். தானங்களைச் செய்ய முடியாதவன் தானம் செய்வோர்க்குத் துணையாக இருந்தால் சுவர்க்கத்தை அடைவான்.

உபவாசப் பயன்

"உமையவளே, தானம் செய்யச் சக்தியில்லாதவர்கள், விரதங்களை அனுட்டித்து அத்தகைய புண்ணியங்களை அடையலாம். மார்கழி மாதத்தில் விரதமிருந்து என்னை உபாசித்தவன் இந்திரலோகத்தை அடைவான். தைமாதத்தில் விரதமிருப்பவன் ஞானியாவான். மாசிமாதத்தில் விரதமிருந்தவன் சம்பத்தையும், பங்குனியில் விரதமிருந்தவன் உத்தமமான பெண்ணையும், சித்திரை மாதத்தில் விரதமிருந்தவன் உயர்ந்த பிறப்பையும், வைகாசி மாதத்தில் விரதமிருந்தவன் எல்லோராலும் போற்றி வணங்கப்படுதலையும், ஆனியில் விரதமிருந்தவன் அரசரின் மேம்பாட்டையும், ஆடிமாதம் விரதம் இருந்தவன் இஷ்டசித்திகளையும், ஆவணி மாதம் விரதமிருந்தவன் சேனாதிபதியாகவும், புரட்டாதிமாதம் விரதம் இருந்தவன் நவரத்தினங்களையும், ஐப்பசி மாதம் விரதம் இருந்தவன் வாணிய இலாபத்தையும், கார்த்திகை மாதத்தில் விரதம் இருந்தவன் அசுவமேதயாகப் பயனையும் அடைவான்.

ஒரு வருடம் ஒருவேளை உணவுடன் விரதம் மேற்கொண்டவன் சக்கரவர்த்தியாகிப் பல சிவாலயங்களைக் கட்டுவிப்பான். ஒரு நாள் உபவாசமிருந்தவன் பத்துப் பொன்னைத் தானம் செய்தவன் அடையும் பயனை அடைவான். தீட்சை பெற்று உபவாசமிருப்பவன் சொர்க்கத்திற்குச் செல்வான். உருத்திர காயத்திரியை ஜெபித்து விரதமிருந்து பிராமணருக்குத் தானம் கொடுத்தவன் கைலாயத்தில் வசிப்பான். கோமயம், பால், தயிர், நெய், நீர் இவற்றை நாளுக்கு ஒன்றாக அருந்தி இறுதி நாளில் உபவாசம் இருந்தவன் பூர்வ ஞானத்துடன் பிரமலோகத்தை அடைவான்.

பார்வதி, தானங்களை விதிப்படி செய்யச் சக்தியற்றவர்கள் இவ்வாறான விரதங்களை அனுட்டித்தால் தானங்கள் செய்தபயனை அடைவர். அவர்கள் பூவுலகம் சென்று பெரும்பதவிகளை அடைந்து மிக்க மகிழ்வுடன் வாழ்ந்து முத்தியடைவார்கள்□ என்று சிவபெருமான் கூறியருளினார்.

நியமப் பிரவாகவும் காமுகன் கதையும்

சிவபெருமானைப் பார்வதி நோக்கி, "சுவாமி, பிராமண, சத்திரிய, வைசிய, சூத்திரர்கள் எவ்வித நியம அணுட்டானங்களால் நற்கதியை அடையலாம். நியமம் என்பது என்ன? இவற்றைச் சொல்லுங்கள்" என்றாள்.

"பார்வதி, நியமத்தில் பலவகை உண்டு. அவற்றுள் இந்திரிய நிக்கிரகஞ் செய்வதே முக்கியமானது. மானிட உடல் நீர்க்குமிழியைப் போன்றது. உடலில் காகக்குரோதலோப மோகங்களும், இச்சையும் நீங்காது எப்போதும் குடி கொண்டிருக்கும். அத்தீய குணங்களை நீக்கி ஒழுக்கமாக வாழ்வேன் என்று தன்னுள்த் திட்டமிட்டுக் கொண்டு நேர்மையான வழியில் வாழ்பவர்களே தெய்வத்தன்மையை அடைந்து நட்சத்திரமாகிப் பிரகாசிக்கின்றனர். ஒரு ஆண்டுகாலம் நியமத்தை அனுட்டித்தவர்களைப் பிரமதேவன் என்று சொல்ல வேண்டும். இது விசயமாக ஆச்சரியகரமான இதிகாசம் ஒன்றைச் சொல்கிறேன்.

முன்பு காசியில் பிறப்பினால் மட்டும் பிராமணனாகவுள்ள ஒருவன் இருந்தான். அவன் மிகவும் விகாரமான உருவத்தை உடையவன். அவன் பிறர் மனைவியை விரும்புதலும், செய்யத்தகாத தீய செயல்களைச் செய்வதும், மதுமாமிசம் அருந்துவதும், வேதங்களை நிந்தித்தலும், பலரும் அஞ்சத்தக்க செயல்களைச் செய்வதுமாக வாழ்ந்து வந்தான்.

அவன் தெருவில் வருவதைக் கண்டால் வியாபாரிகள் தங்கள் கடைகளை மூடிவிடுவார்கள், பெண்கள் மறைந்துவிடுவார்கள். அப்படி இருக்கும் போது காசிநகரில் உள்ள சிவன்கோயிலில் அமர்ந்திருந்த ஓங்காரேசுவரரை ஒரு சித்தர் தினமும் பூசை செய்து கொண்டிருந்தார். அவரைக் கண்ட அந்தப் பிராமணன், "நீ யார்? இந்த ஊரவனைப் போலத் தெரியவில்லை. உனது தோற்றத்தையும், நடைமுறைகளையும் பார்த்தால் நீ சுவர்க்கத்தில் இருந்து வந்தவனைப் போல உள்ளாய்" என்றான்.

"பிராமணா, நீ பெரும் ஞானி. அதனால் தான் நான் சுவர்க்கத்தில் இருந்து வந்ததைக் கண்டு பிடித்தாய்" என்றார்.

"சுவர்க்கம் என்று ஒன்று உண்டா? ரம்பை என்ற அப்சரஸ் பெண்ணை நீ அறிவாயா...? அறிந்தால் அவளைப் பற்றிக் கூறு" என்றான்.

"அங்கே ரம்பை முதலிய அப்ஸ்சரசுகள் பலர் இருக்கிறார்கள்" என்றார் சித்தர்.

அதைக் கேட்ட பிராமணன், "இனி நீ சுவர்க்கத்திற்குச் சென்றால் ரம்பையிட நான் சுகம் விசாரித்ததாகச் சொல்" என்றான் பிராமணன்.

உடனே அச் சித்தர் சுவர்க்கத்திற்குச் சென்றார். அங்கு ரம்பை தேவர்களை மகிழ்விக்க வீணை வாசித்துக் கொண்டிருந்தாள். அவளின் அருகே சென்ற சித்தர், "ரம்பையே நான் காசிமாநகரில் வாழ்ந்து கொண்டிருந்த போது ஒரு பிராமணன் உனது நலத்தை விசாரிக்கச் சொன்னான். அவனை நீ அறிவாயா?" என்று கேட்டார். ரம்பை அவனைத் தனக்குத் தெரியாது என்றாள்.

சுவர்க்கத்தில் இருந்து திரும்பி வந்த சித்தர் காசிநகருக்கு வந்து சிவனைப் பூசித்துக்கொண்டிருந்தார். அவரிடம் வந்த அந்தப் பிராமணன், "சித்தரே சுவர்க்கத்திற்குச் சென்றீரா? சென்றால் ரம்பையைக் கண்டு கதைத்தாயா...? நான் சுகம் விசாரித்ததைச் சொன்னாயா..? அதற்கு அவள் என்ன சொன்னாள்...?" என்று கேட்டான்.

"சுவர்க்கத்தில் நான் ரம்பையைக் கண்டு உன்னைப் பற்றிச் சொன்னேன் அவள் உன்னைத் தெரியாது என்று சொன்னாள்" என்றார் சித்தர்.

"நீ மறுபடியும் சுவர்க்கத்திற்குச் செல்லும்போது, உன்னை அந்தப் பிராமணன் தினமும் விசாரிக்கிறான். அவன் என்னை அறிந்திருக்கும் போது, நீ அவனை அறியமாட்டாயா? என்று கேள்" என்றான் பிராமணன்.

சித்தர் தனது பூசையை முடித்துவிட்டு மீண்டும் சுவர்க்கத்திற்குச் சென்று ரம்பையைச் சந்தித்து, "காசிக்குத் தினமும் நான் சென்று பூசை செய்வது வழக்கம். அப்படிப் பூசை செய்யச் சென்றால் அப்பிராமணன் உன்னைப் பற்றி விசாரித்துத் தொல்லை தருகிறான்" என்றார் சித்தர்.

"ரம்பை சிரித்து விட்டு அவன் என்னைக் காண விரும்பினால் முறைப்படி தவம் செய்து என்னை வந்தடையச் சொல்" என்று கூறிவிட்டு ரம்பை சென்றுவிட்டாள்.

அதன் பின் காசிக்கு வந்த சித்தர் அப்பிராமணைச் சந்தித்து ரம்பை சொன்னவற்றைச் சொன்னார். அதனால் மனம் திருந்தி ஒழுக்கமாக வாழ்ந்து நியமம்படி தவம் செய்த அந்தப் பிராமணன் சில காலங்களின் பின் சிவனின் அருளைப் பெற்று நியமத்தை மேற்கொண்டமையால் பிரமலோகத்தை அடைந்து ரம்பையுடனும் தேவதாசிகளுடனும் கூடி மகிழ்ந்து முத்தியடைந்தான். பார்வதி, சாமானியமாக நியமமே இத்தகைய பயனைக் கொடுத்தது என்றால் முழுமையாக நியமத்தைக் கடைப்பிடிப்பவன் பலவகையான கோரிக்கைகளையும் கைகூடப் பெறுவான்" என்று சிவபெருமான் கூறினார்.

பிறைநிலா சூடுதலும், நஞ்சுண்ட கதையும்

அதைக் கேட்டு மகிழ்ந்த பார்வதி, "நாதா, தங்களின் பாதி உருவை எனக்குத் தந்தது போல நிலவைச் சடையில் சூடியதும், விஷத்தைக் குடித்ததற்கும் காரணம் என்னவென்று எனக்குக் கூறுங்கள்" என்றாள்.

"தேவி, தக்கனின் வேள்வித்தீயில் நீ குதித்த பின்பு நான் மகாவிரத்தனாக எங்கும் அலைந்து திரிந்தேன். அப்போது நான் செல்லும் இடங்களெல்லாம் பெரும் தீயுண்டாகி அவையாவும் அழிந்து போயின. அதனால் துன்பப்பட்ட தேவர்கள் பிரமதேவரோடு மந்திரமலையில் கூடினர். அப்போது இந்திரன், "இந்த விபரீதம் ஏன் உண்டானது. இதன் வெம்மையைத் தாங்க முடியவில்லை. இதற்கு என்ன செய்வது" என்று பிரமதேவரைக் கேட்டான்.

"இந்திரா, சிவப்பிரபாகத்தை அறியும் சக்தியாருக்கும் இல்லை. அவரது வெம்மையால் மூவுலகங்களும் கொளுத்தப்படுகின்றன. அதனால் அமுதமான குளிர்த்த ஒளியை உடைய சந்திரனைச் சிவனின் தலையில் இருத்தினால் வெம்மை குறையும்" என்றார். அதைக் கேட்ட தேவர்கள் சந்திரனிடம் சென்று சிவபெருமானின் சிரசில் சென்று வசிக்குமாறு இரந்து கேட்கச் சந்திரன் ஒப்புக் கொண்டான். தேவர்கள் சந்திரனை அழைத்து வரும் போது ஆலகால விஷத்தையும் கொண்டு வந்து எனக்குத் தந்தனர். நான் சந்திரனைச் சடையில் சூடி விட்டு, விஷத்தை உண்டு கண்டத்தில் நிறுத்தினேன். அதனால் சந்திரசேகரன் என்றும் நீலகண்டன் என்றும் பெயர்பெற்றேன்" என்றார் சிவபெருமான்.

பர்ணாதன் தவமும் திருநீற்றின் பெருமையும்

அதைக் கேட்டுத் தெரிந்து கொண்ட பார்வதி, "நாதா, உலகில் எத்தனையோ நறுமணப் பொருட்கள் இருக்க நீங்கள் ஏன் திருநீற்றை விரும்பி அணிகிறீர்கள். எனது தழுவலைவிட வீபூதிப்பூச்சையே அதிகம் நேகிக்கிறீர்கள். அத்துடன் பூதங்களுடன் கூடி ஏன் சுடுகாட்டில் கூத்தாடுகிறீர்கள் என்பதை எனக்குக் கூறுங்கள்" என்றாள்.

"உமையே, முன்பு பிருகுவம்சத்தில் பிறந்த வேதியர் ஒருவர் தீவிரமாக நிமயத்தைக் கடைப்பிடித்து பஞ்சாக்கினி மத்தியிலும், தண்ணீரிலும், வானத்தை நோக்கியும் நின்று தவம் செய்தார். அவர் உண்ணாமல் தவம் செய்ததால் அங்கு வாழ்ந்த பறவைகள் நல்ல பழங்களைக் கொண்டு வந்து அவருக்கு உண்ணக் கொடுத்தன. கொடிய துட்ட மிருகங்களும் அவருடன் அன்புடன் பழகி வந்தன.

அவர் ஒரு நாள் தருப்பைப் புற்களைக் கொய்தபோது அது அவரது கையைக் குத்தியதால் இரத்தம் வழிந்தது. அப்படி இருந்த போது அவர் கூத்தாடினார். அதைக் கண்ட நான் ஒரு கிழப்பிராமண வடிவமெடுத்து, "நீ ஏன் இப்படிக் குதித்து ஆனந்தப்படுகிறாய். தவம் செய்கிறேன் என்ற இறுமாப்பா?" என்று கூறியும் அவர் நான் கூறியவற்றைக் கவனியாது கூத்தாடிக் கொண்டிருந்தார்.

அதைக் கண்டு பொறுக்க முடியாத நான் அவனது கையைப் பற்றிப் பிடிக்கக் காயத்தில் இருந்து பால் ஒழுகியது. பின் திரு நீறு வெளிப்பட்டது. அதைக்கண்ட அந்தப் பிராமணன் என்னைப் பணிந்து, "நீ யார் என்பதைச் சொல்" என்றான்.

உடனே நான் எனது சுய உருவத்தைக்காட்டி, "உனது கையில் இருந்து இரத்தம் ஓடியதால் பாலையும் திருநீற்றையும் ஒழுக விட்டேன். நீ மேருமலைக்கு வந்து காணாபத்தியத்தை அடைவாயாக" என்று வரங்கொடுத்தேன். பார்வதி, என்னை நிவேதிக்கும் பொருட்களில் திருநீற்றையே எனக்குப் பிடிக்கும். திருநீற்றை உடலில் அணிபவன், பிரயாகை, புஷ்கரம், உருத்திரவாசம், துவாரகை, கரித்வாரம், பிரபாசம் முதலிய இடங்களில் நீராடுவதைவிடச் சிறப்பான பயனை அடைவான். பிரமன் திருநீற்றைப் பூசிய பின்பு தான் படைப்புத் தொழிலைச் செய்கிறான். தேவர்கள் தமது பாவங்களைத் திருநீற்றைப் பூசியே அகற்றுகின்றனர். திருநீற்றை அணிவதால் மோட்சம் அண்மைப்படுகிறது. திருநீறு அணிந்தவர்களைக் கண்டால் பேய், பிசாசு, இராட்சதர்கள், மோகினிகள், கிரகங்கள் யாவும் அஞ்சி விலகிச் செல்லும்.

திருநீற்றை அணிவோர் கைலாயத்தில் வசிப்பர். திருநீற்றை ஒரு தட்டிலும், சுவர்க்க இன்பங்களை இன்னொரு தட்டிலும் இட்டுத் தராசில் நிறுத்தால் திருநீறு உள்ள தட்டே திருநீற்றுக்கு ஒப்பானது எதுவுமில்லை. அசுத்தமாக இருப்பவர்களும், நோய்களால் பீடிக்கப்பட்டாலும், வெறிபிடித்திருந்தாலும் திருநீறு அணிந்தால் புனிதமாவர். எனக்கு உன்னிடமும், சூரியன், சந்திரன் அக்கினியான மூன்று கண்களிலும் உள்ள விருப்பத்தை விடத் திருநீற்றிலேயே அதிகம் விருப்பம் உண்டு" என்றார் சிவபெருமான்.

சுடலையில் கூத்தாடும் காரணம்

பார்வதி சிவபெருமானை நோக்கி, "சுவாமி, உலகில் எத்தனையோ அழகான இடங்களைப் படைத்த தாங்கள் அகோரமான மயானத்தில் எவ்வேளையிலும் துர்நாற்றம் வீசும், பிணங்கள் எரிக்கப்படும், காகம், கழுகு, நாய், நரி போன்ற மிருகங்கள் வாழும். அத்துடன் யானைத் தோலையும், புலித்தோலையும் உடுத்தி மண்டை ஓடுகளைக் கோர்த்து மாலையாக அணிந்து, கூத்தாடிக் கொண்டு, பித்துப்பிடித்தவரைப் போல வாழ்வது ஏன்? வேதங்களுக்கும்

எட்டாத தாங்களுக்குச் சுடுகாட்டில் பிரியமேற்பட்டது ஏன்? அதனால் எனது மனம் துன்பப்படுகிறது" என்றாள்.

"உமாதேவியே, உலகில் உள்ள உயிர்களுக்குப் பிரளயம் நான்கு வகைப்படும். அவை நித்தியம், நைமித்தியம், பிராகிருதம், ஆத்தியந்தம் என்பனவாகும். நித்தியம் என்பது தமக்கு அளவிட்ட காலம் கழிந்தும் இருத்தலாகும். நைமித்தியம் என்பது சிற்சில காரணங்களால் பலர் கூடியிருப்பதாகும். பிராகிருதம் என்பது பிரமகற்பத்தில் ஒழிதலாகும். ஆத்தியக்கம் என்பது இவ்வாறு அழிந்தழிந்து தோன்றுவதாகும். பிரளய காலத்தில் யாவும் அழியும்படி தனித்து நின்று சங்காரம் செய்வேன். அத்தருணத்தில் நான் நடனமாடுவேன். நீ கைத்தாளமிடுவாய். அப்போது பற்பல பூதங்களும் வேதாளங்களும், தாளம் போட்டுக் கொண்டும் பாடிக்கொண்டும் இருந்தன. அச்சமயம் விஷ்ணு பல தேவர்களுடன் கூடி அங்கு வந்து எனது நடனத்தைக் கண்டு மகிழ்ந்து, "ஐயனே, தாங்கள் இங்கு நடனமாடும்போது, பூதபிரேதப்பை சாசடாகினி சாகினிகள் பாடவும், தாளம் போடவும், கூத்தாடவும் செய்வது மிகவும் சிறந்தது. அவ்வாறு செய்யாவிட்டால் இக்கணங்கள் பூவுலகெங்கும் பரவிப் பலரையும் துன்புறுத்தும் அவை துன்புறுத்தாது எம்மோடு சேர்ந்து ஆடிப்பாடுவது உத்தமான செயலாகும்" என்று கூறினர்.

ஆனால் விஷ்ணு, "சிவமூர்த்தியே, எல்லாப் பாவங்களையும் விலக்கி வைப்பதாலும் எல்லோரையும் பயப்படுத்துகின்ற பூதப் பிரேத பைசாசாதிகளையும் அழச் செய்வதாலும் உருத்திரன் என்றும், சங்கரன் என்றும், கால ரூபியாக இருந்து உலகை இயக்குவதால் காலன் என்றும், பிரளயத்தை உருவாக்குவதால் சர்வன் என்றும், உற்பத்திக் காலத்தில் சகல லோகங்களையும் படைப்பதால் பஜன் என்றும், உக்கிரமான யாகங்களிலும் திருப்தியடைவதால் உக்கிரன் என்றும், யோகங்கள் முழுவதற்கும் தலைவனாக இருப்பதால் மகாதேவன் என்றும் விளங்குகின்ற விமலரே, ஐந் தொழில்களையும் இயற்றுவிக்கும் மகாதேவரே, நீர் எப்பொழுதும் மயானத்தில் கூத்தாடிக் கொண்டிருக்க வேண்டும் என்றார். அதனால் தான் மயானத்தை எனது இருப்பிடமாகக் கொண்டேன்.

"பார்வதி, விஷ்ணு சொன்ன பெயர்களில் எனக்கு அதிக பிரியம் உண்டு. அப்பெயர்களைக் கொண்டு என்னைப் பூசித்தவர்கள் உயர்வடைவார்கள். இப்பெயர்களை மனப்பாடம் செய்தோரை எனக்குப் பிடிக்கும். நான் காலரூபி, நீ காளராத்திரி எனது ரூபத்தை நீயும், உனது சொரூபத்தை நானும் அறிவோம். நீயே நாராயணனாக விளங்குகிறாய். புண்ணியத்தலங்களை விட எனக்கு பிரியமானது மாயானமாகும். இதை உணர்ந்தவர்கள் சகல பாவங்களும் நீங்கப் பெற்று இன்பமாக வாழ்வர். இதை வாசித்தவர்களும், கேட்டவர்களும் பிறருக்குச் சொன்னவர்களும் எனது அருளால் மேன்மையடைவார்கள்" என்று சிவபெருமான் பார்வதிக்குக் கூறினார்" என்று சநத்குமார முனிவர் வியாசருக்குக் கூறினார்.

அறுபத்தெட்டு திருத்தலங்கள்

வியாசமுனிவர், சனத்குமார முனிவரை நோக்கி, "மகாத்மாவே, சிவபெருமான் அறுபத்தெட்டு தலங்களில் கோவில் கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன், ஆகையால் அவ்விசயத்தை விளக்கிக் கூற வேண்டும்" என்று கேட்டார். சனத்குமார முனிவர் கூறத்தொடங்கினார்.

முன்னொரு சமயம் சிவபெருமான் கைலைமலையில் திருவோலக்கம் கொண்டு எழுந்தருளியிருக்கும் போது பிரம்மதேவர் அவரைப் பணிந்து, "சுவாமி, எவ்வெவ்விடங்களில் எவ்வெப்பெயர்களுடன் வாழ்கிறீர் என்பதைத் தெரிவிக்க வேண்டும்" என்று கேட்கவே சிவபெருமான் பின்வருமாறு சொன்னார்.

"வாரணாசியில் (காசிமா நகரில்) மகாதேவனும், பிரியாகையில் மகேஸ்வரனும், நைமிசவனத்தில் தேவதேவனும், கயையில் பிதாமகனும், குருக்ஷேத்திரத்தில் காலேசனும், பிரபாசத்தில் சசி பூஷணேசன், புஷ்கரத்தில் கந்தேசனும், விமலேஸ்வரத்தில் விசுவேசனும், அட்டகாசத்தில் மஹா நாதேசனும், மருகோடத்தில் மகோற்கடேசனும், சங்குகர்ணத்தில் மகாதேஜசனும், கோகர்ணத்தில் மஹாபலேசனும், உருத்திர கோடியில் மஹாயோகீசனும், ஸ்தலேசத்தில் மகாலிங்கேசனும், அவந்தியில் மஹாகாளேசனும், மத்திய தேசத்தில் ஸர்வேஸ்வரனும் கேதாரத்தில் ஈசரனேசனும், இமாசலத்தில் உருத்திரேசனும், சுவர்ணாக்ஷத்தில் காக்ஷராஷசனும், விருக்ஷத்தில் இடபத்துவ ஜேசனும், பைரவத்தில் பைரவேசனும், பத்திரபதத்தில் பத்திரேசனும், கனகலையில் உக்கிரேசனும், பத்திரகர்ணத்தில் இருதபேசனும், தேவதாருவனத்தில் பின்னேசனும், கபிஜங்கலத்தில் கண்டேசனும், சுரண்டத்தில் ஊர்த்வகேதுவும், மங்களாண்டத்தில் கபர்த்தீசனும், கிருத்திவாசத்தில் வரதேசனும், ஆமிராடிகத்தில் சூக்குமேசனும், காளஞ்சுரத்தில் நீல கண்டேசனும், மண்டலேசுரத்தில் ஸ்ரீகண்டேசனும், சித்தேசத்தில் தியானசித்தேசனும், உத்தரேசத்தில் ஜயேசனும், யமசசியாங்கத்தில் தாணேசனும், கரவீரகத்தில் சூபிலேசனும், காயாவதாரத்தில் விலகுடீசனும், தேவிகாவில் உமாபதியும், ஹரிச்சந்தீரத்தில் ஈஸ்வரனும், புரகந்திரத்தில் சங்கரனும், காலேசுவரத்தில் ஜடேசனும், குக்குடேசத்தில் சௌமியேசனும், சந்தியாக்ஷேத்திரத்தில் தாமிரேசனும், எவதிரியில் திரிலோசனேசனும், ஜலேசத்தில் திரிசூலியும், ஸ்ரீசைலத்தில் திரிபுராந்தகேசனும், லேபனத்தில் பசுபதியும், அங்கேசத்தில் தீப்தேசனும், கங்காசாகர சங்கமத்தில் அமருகேசனும், அமரகண்டத்தில் ஓங்காரேசனும், சப்தகோதாவரியில் பீமேசனும், பாதாளத்தில் ஆடகேசனும், கர்ணிகாரத்தில் கணாத்தியக்ஷனும், கைலாசத்தில் திரிபுராந்தகேசனும், ஏமகூடத்தில் விருபாக்ஷனும், கந்தமாதனத்தில் பூர்புவஸ்ஸுவஸ்வேசனும், தீடிசத்தில் அனலேசனும், த்லேசத்தில் ஜ்வலலிங்கேசனும், பூதேசத்தில் கணத்தியக்ஷினும், கிராதத்தில் கைரோதேசனும், விந்தகிரியில் அசுரநாசஞ் செய்யவராகேசனும்,

கங்காஹ்ருதத்தில் ஹிமஸ்தானேசனும், வடவாமுகத்தில் மானவேசனும், தீர்த்தத்தில் சிதுரஷ்டி கோடீசனும், இஷ்டா பதத்தில் விசிஷ்டேசனும், குசுமபுரத்தில் பிரகாகேசனும், இலங்கையில் அலகேசனும் என அறுபத்தெட்டு திருநாமங்களுடன் விளங்குகிறேன்.

இந்தத் திருநாமங்கள் அறுபத்தெட்டையும் பக்தியுடன் ஒரே மனதாகப் பாராயணம் செய்தவர்கள் பத்து அஸ்வமேதயாகம் செய்த பயனை அடைவார்கள் என்று சிவபெருமான் கூறியுள்ளார். இதை உமக்கு உரைத்தேன். அன்றியும் அவ்விறைவருடைய மகிமையை முன்பு சிவபெருமானே, மந்திரகிரியில் நந்திதேவருக்குக் கூறிய விதமாகச் சொல்லுகிறேன், கேளும்.

சிவபெருமான், உலகனைத்திலும் அக்கினி போலப் பிரகாசித்தும் காற்று போலச் சஞ்சரித்தும் உயர்ந்த மலைகளில் வசிக்கிறார். அத்தகைய மலைகளை வலம் வந்தவர்கள் (பிரதட்சணம் செய்தவர்கள்) நூறு கோதானம் செய்த பயனை அடைவார்கள். பசுக்களிடமும் சந்திரனிடமும் சந்தோஷமும், வருணனிடம் சீதளத்தன்மையும், பூமியில் பரிமளமும், மத்தியான்னத்தில் கரகமும், மிருத்யுவுக்கு காலமும், நவக்கிரகங்களையுஞ் சுழற்றத் துருவனும், வேதங்களில் சந்தஸ்ஸும், கண் முதலான இந்திரியங்களில் கிரகிக்கும் சக்தியும், உலகங்களுக்கு விருத்தியும், யுத்தத்தில் வெற்றியுமாக அவர் விளங்குவார். அவரே சிருஷ்டிஸ்திதி. ஸம்ஹாரங்களுக்குக் கர்த்தர். அவரே தர்மங்களை நிலை நிறுத்துகிறவர். தாரகன் முதலான தைத்தியர்களை நாசஞ்செய்தவர். எல்லாப் பூதங்களுக்கும் பிறப்பிடம். ஆத்மஸ்வரூபி. இதிகாச புராணங்களின் உட்பொருள் வடிவம். மலர்மரங்களில் வாசனையாகவும் மங்கையரிடம் உருவ இளமையாகவும் இரத்தினங்களில் காந்தியுமாக விளங்குபவர். சிவபிரான் இல்லாத இடமே இல்லை. அவ்வாறு அறிந்தவன், எல்லாத் தீர்த்தங்களிலும் நீராடி, உபவாசம் இருந்த பலனை அடைந்து, காமக்குரோதாதிகளை ஒழிப்பான். இந்த மகிமையை வாசித்தவர்கள் பிரமசாரியம் அனுஷ்டித்த பலனை அடைவார்கள். சிவபெருமானைத் தியான யோகத்தினால் அறிய வேண்டும். அஸ்வமேதாதி யாகங்கள் பற்பல செய்வதைவிட தியானயோகம் செய்வதே சிறந்தது. தியானயோகி ஒருவனுக்கு அன்னங்கொடுத்தால் பலகோடி வேதியருக்கு அன்னம் அளித்த பலன் விளையும். ஆயிரம் கிரகஸ்தர்கள், ஆயிரம் வானப்பிரஸ்தர்கள், நூறு பிரமச்சாரிகள் இவர்களைவிட தியானயோகம் உணர்ந்த ஒருவன், சிறப்பானவன் அவனுக்குக் கொடுத்த அன்னம் யாகத்திலிட்ட அவிசுக்கு ஒப்பாகும். தியான யோகியைக் கோபிக்கச் செய்கிறவன் நாசமாவான் யோகியை மகிழ்வித்தவனின் குலம்பெருகி வளரும்" என்று சனத்குமார முனிவர் கூறினார்.

பிரம நாடி

வியாசர், சநத்குமார முனிவரை வணங்கி, "மகாத்மாவே, யோக நாடியைப் பற்றி அடியேனுக்கு விபரமாகச் சொல்ல வேண்டும். அது மனித உடலில் எங்கே இருக்கிறது?"

என்று கேட்டார். அதற்கு சநத்குமார முனிவர் சிவசக்தியைத் தியானித்து விட்டுச் சொல்லத் தொடங்கினார்.

“வியாசரே, இதைப்பற்றி கரிகர, இரண்ணிய கர்ப்பர்களால் சொல்ல முடியுமே தவிர என்னால் சொல்ல முடியாது. அந்த யோக நாடியை அறிந்தவர்கள்களே தூய்மையான ஞானிகளாவர். சிவபெருமான் பாலில் நெய் இருப்பது போல தேகத்தில் கண்ணுக்குப் புலப்படாது. தேகத்தைச் சார்ந்திருக்கிறார். அவரது கிரணகங்கள் கணக்கிட முடியாதவை. அவை சூரியனின் கிரகங்களைப் போல உலகையும் தேகத்தையும் சார்ந்திருப்பவை. இருதயத்தில் தான் சகல நாடிகளும் இருக்கின்றன. அதில் பூர்வ பாகத்தில் உள்ள நாடிகள் வெண்மையாகவும், தட்சணபாகத்தில் உள்ள நாடிகள் கறுப்பும், பிங்கலமாகவும் கீழ்ப்பாகத்து நாடிகள் மஞ்சளும் கறுப்பும் பிங்கலமும் கலந்துள்ளவையாகவும், மேலுள்ள நாடிகள் கறுப்பாகவும் இருக்கின்றன.

பத்து வாயுக்களும் இதயத்தைச் சார்ந்துள்ளன. இதயமே அவற்றின் பிறப்பிடம் சில சாங்கிய யோகிகள் நூற்றியொரு நாடிகள் உள்ளனவென்றும் அவற்றை ஆஸ்ரயிக்க வேண்டும் என்றும் கூறுவார்கள். அவற்றை விடுத்து பிரம நாடியையே ஆஸ்ரயிக்க வேண்டும். பரமான்மா பிரம நாடியில் இருந்து யாவற்றையும் சீவனுக்கு அறிவிக்கிறார். நாபி நாடியினால் உடல் அஞ்ஞானங்கதைத் தவிர்த்து பரம்பொருளிடம் ஆனந்தத்தை அனுபவிக்கிறது. சிலர் தொண்ணூற்று ஆறாயிரம் நாடிகள் இதயத்தில் உள்ளன என்று சொல்வார்கள். அவற்றை அறிவது கஷ்டம். பிராணாப நாடிகள் பத்தையுமே அறிய முடியும். அந்தப் பத்து நாடிகளை அடக்குவதன் மூலம் பிரம நாடியை அறியலாம். பிரம நாடியைக் கண்டபின் பத்து நாடிகளும் சிரசைப் பிளந்து கொண்டு வெளிப்படுகின்ற தன்மையும் கேசர சஞ்சார வல்லமையும் உண்டாகும். இந்த நாட்களில் பத்து, சுக்கிலம், சிறுநீர், மலம் ஆகியவற்றைத் தனித்தனியே பிரித்துவிடும். இவற்றை விடுத்துப் பிரம நாடியை அடைதல் வேண்டும். அழுக்கடைந்த உடலில் பரமாத்மாவின் இருப்பிடத்தை அறிந்தவனே மனம் தெளிந்தவன். பரமாத்மா மிக்க பிரகாசத்தோடு இதயத்தில் இருக்கிறார். இந்த யோக முறையைப் பிரமதேவர், முனிவர்களுக்குச் சொல்லியிருக்கிறார். உத்தராயணத்தில் பிராணவாயுவை விட்டவன் பிறவியை ஒழிப்பான். நாவின் மத்தியில் இருந்து சிரம் ஈறாக வியாபித்துள்ள யோக நாடியை உணர்ந்தவன் மோட்சத்தை அடைவான்.

கரிகேசனின் கதை

சநத்குமார முனிவர் வியாசருக்குச் சொன்னார், “வியாசரே, முன்னொரு காலத்தில் பூர்ணபத்திரன் என்ற யக்சனுக்குக் கரிகேசன் என்ற மகன் இருந்தான். அவன் பிறந்தது முதல் தர்மசிந்தையும் அந்தணர்கள் மீது அன்பும், சிவபக்தியும் உடையவனாக இருந்து தினமும் சிவநாமப் பராயணம் செய்தவண்ணம் இருந்தான். அது பூர்ணபத்திரனுக்குப் பிடிக்காததால்

மகனை அழைத்து, "மகனே, நீ எனக்கு மகனாகப் பிறந்த போதும் எமது குல வழக்கங்களைப் பின்பற்றாது சிவபராயணம் செய்கிறாய். சிவன் எமது குலவிரோதி. அதனால் நீ செய்பவை எவையும் எமது குலப் பண்புக்கு ஏற்றவை அல்ல. அதனால் உனது செயல்களை மாற்று இல்லாவிட்டால் இந்த இடத்தை விட்டு எங்காவது செல்" என்றான். அதனால் மனம் வருந்திய கரிகேசன் காசிக்குச் சென்று தவம் செய்தான். நெடுங்காலம் அவன் தவம் செய்தமையால் அவனது உடலைப் புற்று மூடியது. அப்புற்றில் பாம்பு போன்ற கொடிய விலங்குகள் குடிகொண்டன.

அப்போது பார்வதி பரமேஸ்வரனை நோக்கி, "நாதா, உத்தியான வனத்தை நான் பார்க்க விரும்புகிறேன்" என்று வேண்டச் சிவபெருமான் பார்வதிதேவியை அழைத்துக் கொண்டு உத்தியான வனத்திற்கு வந்தார். அந்த வனத்தின் அழகைச் சிவபெருமான் வர்ணிக்கப் பார்வதிதேவி அதை ரசித்துக் கொண்டிருந்தாள். வனத்தின் அழகை ரசித்து மகிழ்ந்த பார்வதிதேவி மிக்க மகிழ்வுடன் சிவபெருமானைப் பார்த்து, "காடு மிக்க அழகுடையதாக இருக்கிறது. தினமும் இங்கிருந்து அதன் அழகைப் பார்த்து ரசிக்க வேண்டும் போன்றுள்ளது. இனி எனக்கு இத்தலத்தின் சிறப்பைச் சொல்லுங்கள்" என்று கேட்கச் சிவபெருமான் சொல்லத் தொடங்கினார்.

"தேவி இந்தக் காசித்தலம் எல்லோருக்கும் மோட்சத்தைக் கொடுப்பது. சித்தர்கள் இங்கு என்னை நினைத்துத் தவம் செய்து பல்வேறு விதமான சித்திகளை அடைந்தனர். ஏனைய தலங்களில் கைகூடாதவை இங்கு எளிதில் கைகூடும். இந்த வனத்தில் வசிப்போர் மனதை எண்ணிடத்தில் நிறுத்தித் தமது செயல்கள் யாவற்றையும் எனக்கு அர்ப்பணித்து என்னுள்ச் சங்கமமானவர்கள். எத்தகைய பாவி இத்தலத்தில் இறந்தாலும் அவன் முத்தியடைவான். குபேரன் இங்கு தவம் செய்து எனது தோழனானான். கம்வர்த்தர் இங்கு தவமிருந்து சிவஞானமடைந்து, சிவாகமங்களைக் கூறிப் புகழடைந்தார். வியாச முனிவன் இங்கு தவம் செய்து வேதங்களையும், புராணங்களையும், இதிகாசத்தையும் இயற்றி உலகுக்கு அளித்தார். இத் தலத்தின் மகிமையை உனக்குக் காட்டுகிறேன் என்று கூறிக் கரிகேசன் என்ற இயக்கன் தவம் செய்யும் இடத்திற்கு அழைத்துச் சென்றார். அவனை மூடி இருந்த புற்றைத் தனது கையால் அகற்றினார். பின், கரிகேசா, உனக்கருள நான் வந்துள்ளேன். உனது தவத்தை முடித்துக் கொள்" என்றார்.

கரிகேசன் தவம் நீங்கி எழுந்தபோது, காளை வாகனத்தில் சிவபெருமானும் பார்வதிதேவியும் தன்னெதிரே நிற்பதைக் கண்டு மிக்க மகிழ்வுடன் இருவரையும் தொழுதான். அவன் தன்னை முழுமையாகப் பார்ப்பதற்காக அவனுக்கு ஞானக் கண்ணைக் கொடுத்து விட்டு, "உனக்கு விரும்பிய வரங்களைக் கேள்" என்றார்.

கரிகேசன் மிக்க மகிழ்வுடன் மீண்டும் மீண்டும் வணங்கி, "பெருமானே, எனக்கு அழியாத உடலும், தங்களைப் பிரியாத பக்தியும், யாவருக்கும் அன்னதானம் செய்யும்

வல்லமையும், காணாபத்தியமும், இந்தத் தலத்தில் உங்களோடு நானும் வசித்திருக்கவும் அருளல் வேண்டும்" என்றான். "நீ கேட்ட வரங்களுடன் எனக்குப் பிரியவனாகி முக்கண்களுடன் தண்டாயுதபாணியாகத் திகழக்கடவாய். உன்னைத் தரிசித்தவர்களே என்னிடம் வரம் பெறத் தகுதியுள்ளவர்களாவர். காசியில் கங்கையில் நீராடும் போது உன்னைத் தியானித்துத் தான் நீராட வேண்டும். உத்பிரமன், சம்பிரமன் என்பவர்களை உனக்குத் தொண்டர்களாகத் தருகிறேன். இவர்கள் உனது கட்டளைப்படி குணங்கனாகி, உலகில் உள்ளவர்களை அடைந்து விளங்குவார்கள்" என்று அருளி மறைந்தார். என்று சநத்குமார முனிவர் கூறினார்.

பிரதாபமகுடன் சரிதம்

"வியாசரே, காசித்தலத்தில் நடைபெற்ற ஓர் அதிசயத்தைக் கூறுகிறேன் கேளும். காசித்தலத்தில் அபிசேகம் செய்யும் நீர் செல்லும் தொட்டியில் ஒரு தவளை வசித்து வந்தது. அதனால் அது அபிசேக நீரைக் குடித்து வாழ்ந்தது. அதனால் அது சுவர்க்கத்தை அடைந்து யோகங்களை அனுபவித்து விட்டு, மீண்டும் பூலோகத்திற்கு சுமனசு என்ற அரசனுக்கு மகனாகப் பிறந்தபோது முற்பிறப்பு ஞாபகம் வர, சுமனசு காசித்ததலத்திற்குச் சென்று தவம் செய்து மோட்சத்தை அடைந்தான்.

அத்தலத்தின் மான்மியம் பற்றி இன்னுமொரு கதை சொல்கிறேன். பிரதாப மகுடன் என்பவன் தர்மவானாகவும், சிவபக்தனாகவும் இருந்தபோதும் பல ஆண்டுகளாக மகப்பேறு இல்லாதிருந்து சிவபெருமானின் திருவருளால் ஒரு மகன் பிறந்தான். அவன் இளம் பராயத்தில் வேதஉபநிடதங்களைக் கற்றுப் பண்டிதனானான். அதைக்கண்ட தந்தை அவனைத் தனது வாரிசாக மாற்ற நினைத்து அவனைத் தவம் செய்ய வேண்டாமென்று மன்றாடினான்.

அதைக் கேளாத அவன், "தந்தையே, நான் எண்ணற்ற பிறவிகளை எடுத்து விட்டேன். உங்களைப் போன்று பல தந்தைகளையும் கண்டுள்ளேன். நீங்கள் கூறிய படி பல திருமணங்களையும் செய்துள்ளேன். எல்லா வகையான யோனிகளிலும் அனேகப்பிறவிகளை எடுத்துள்ளேன். ஆதலால் மனைவிக்காகவோ, வம்சவிருத்திக்காகவோ நான் திருமணம் செய்ய மாட்டேன். நான் மோட்சத்தையே விரும்புகிறேன். அதனால் இன்றே நான் காசிக்குப் புறப்படுகிறேன். காசித்தலத்தில் எனக்கு விருப்பமுண்டானதற்குக் காரணம் உண்டு அதைச் சொல்கிறேன்.

தந்தையே, இதற்கு முன் எனது மூன்றாவது பிறவியில் நான் வைசிகன், தர்மவான், சிவபக்தன். நான் தீர்த்தயாத்திரை செய்து வரும் போது, ஒரு நாள் காசித்தலத்தை அடைந்து ஓங்காரேசுவரைத் துதித்துக் கொண்டு சிலகாலம் அங்கேயே தங்கியிருந்தேன். ஒரு நாள் இரவு வேளை வந்தபோது தேவர்களும், காந்தர்வர்களும், யக்சர்களும் சிவனைத் தரிசிக்க அங்கு

வந்தனர். அவர்களை நான் கண்டேன். அதனால் இதற்கு முந்திய பிறவியிலும் அரசனாகப் பிறந்தேன். நற்காரியங்களைச் செய்து சிவனை ஆராதித்தமையால் இன்று உமக்கு மகனாகப் பிறந்தேன். நான் ஓங்காரேசுவரரைத் தரிசிக்கச் செல்கிறேன்'' என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டான். அதன்பின் அரசன் தனது இளைய மகனுக்கு முடி சூட்டிவிட்டு மூத்த மகனுடன் காசித்தலத்தை அடைந்தார். அப்போது அரசன் தனது மூத்த மகனின் அருளால் தனது முற்பிறவியை உணர்ந்தான். அப்போது அவன் முற்பிறவியில் காசித்தலத்தில் ஒரு புறாவாக வாழ்ந்தது நினைவுக்கு வந்தது. பின் இருவரும் தவம் செய்து முத்தியடைந்தனர். இச் சம்பவத்தைப் பற்றிக் கேட்பவர்களும், சொல்பவர்களும், எழுதுபவர்களும், வாசிப்பவர்களும் சிவபெருமானின் திருவடியை அடைவார்கள்'' என்றார் சநத்குமார முனிவர்.

கைலாய நாதரின் காசிவாசம்

வியாசரே முனிவர், சநத்குமார முனிவரைப் பணிந்தபின் கேட்டார், ''சுவாமி ஓங்காரேஸ்வரரின் மகிமைகளைக் கூறுங்கள்'' சநத்குமாரர் சொல்லத் தொடங்கினார்.

''வேதம் கூறுகின்ற ஒரு கதையைச் சொல்கிறேன். ஒரு சமயம் பார்வதிதேவி காளி என்ற பெயருடன் சிவபெருமானோடு காசியில் கூடியிருந்தாள். அப்போது காந்தர்வர்களும் வித்தியாதரர்களும் அங்கு வந்து சிவபெருமானை வணங்குவார்கள். அப்போது சிவபெருமான் அவர்களுக்கு நடனமாடி அந்திருக்கோலத்தில் தரிசனம் கொடுப்பார். ஒரு நாள் அவர் நடனமாடும் போது அவரது உடல் வியர்த்தது. அந்த வியர்வையில் இருந்து அனேக கணங்கள் தோன்றின. அவையும் சிவனோடு சேர்ந்து நடனமாடின.

அப்போது பார்வதி சிவபெருமானை நோக்கி, ''நாம் இருவரும் மந்தரம், காளாஞ்சரம், பாருண்டம், கைலாயம் போன்ற தலங்களுக்குச் சென்றபோது அவ்விடங்களில் ஆடாத நடனத்தை இங்கு ஆடியுள்ளீர்கள். ஏன் அப்படி ஆடினீர்கள்? காரணம் இருந்தால் சொல்லுங்கள்'' என்றாள், ''தேவி, நாதப் பிரமஸ்வரூபமாக நான் இத்திருத்தலத்தில் இருக்கிறேன். ஆகார, உகார, மாகார, நாத, பிந்துக்களாகிய ஐந்துமான சொரூபங்களுடன் இங்கு இருக்கிறேன். வேறு திருத்தலங்களில் நான் இருந்த போதும் இங்கு இருந்து அருளுவதில் தான் மிக்க விருப்பம் கொண்டுள்ளேன்.

புஷ்பவாகனின் சரிதம்

''வியாச முனிவரே, அங்கே நிகழ்ந்த விந்தையான சரிதம் ஒன்றைக் கூறுகிறேன். முன்பு புஷ்பவாகனன் என்ற அரசன் ஓங்காரேஸ்வரத்தை அடைந்து மிகவும் கடுமையாகத்

தவம் செய்து சிவபெருமானிடம் ஒரு தாமரைப் பூவைப் பெற்றான். அதில் ஏறி அவன் சர்வலோகங்களுக்கும் சென்று வந்தான்.

அவ்வாறு அவன் சென்று வருவதைக் கண்ட பிரமதேவர், அவனை புஷ்காரதீபத்தின் அரசனாக்கினார். அவன் அந்த நாட்டில் வாழ்ந்த லாவண்ணியவதி என்பவளை மணந்தான், அவளின் மூலம் பதினாயிரம் சுத்த வீரர்கள் பிள்ளைகளாகப் பிறந்தனர். அவர்களுக்குக் கல்வி கற்பிப்பதற்காக பிரசேதன முனிவரை அமர்த்தினான்.

அவர் கற்பித்துக் கொண்டிருக்கும் ஒரு நாளில் அவரை வணங்கிய புஷ்பவாகணன், "எனக்கு இவ்வளவு செல்வமும், பராக்கிரமம்மிக்க பிள்ளைகளும், சிறந்த மனைவியும் எவ்வாறு என்னை வந்தடைந்தன" என்று கேட்டான்.

அதைக் கேட்ட முனிவர், "அரசே, முற்பிறப்பில் நீ முரட்டுத்தனமும், கோர உருவையும் கொண்ட வேடனாக இருந்தாய் நீ முனிவர்கள் தவம் செய்தால் அதைக் குழப்புவாய். உனக்கு ஒரு மனைவி இருந்தாள். அதை விட வேறு உறவினர்கள் உனக்கு இருக்கவில்லை. அப்போது பல காலம் மழை பெய்யாததால் காடு வரண்டு அழிந்துவிட்டது. உனக்கும் மனைவிக்கும் உணவு கிடையாமையால் இருவரும் உணவுதேடிக் காடு முழுவதும் அலைந்தீர்கள். அக்காட்டின் எல்லையில் ஒரு குளம் இருந்தது அக் குளத்தில் ஏராளமான தாமரைப் பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றைப் பறித்துக் கொண்டு காசிக்குச் சென்று ஓங்காரேசுவரர் கோவிலில் தாமரைப் பூக்களை விற்பதற்காக அங்கு இருந்தீர்கள். யாரும் அதை வாங்கவில்லை. ஓங்காரேஸ்வரரின் சந்நிதியில் கூடிய மக்கள் பூசைகளைக் கண்டு மகிழ்ந்தனர், வணங்கினர். மந்திரங்களைச் சொன்னார்கள். நீங்களும் அவர்களுடன் அவற்றைச் செய்துவிட்டுத் தாமரைப் பூக்களை ஓங்காரேஸ்வரருக்குப் படைத்து வணங்கினீர்கள். அன்று இரவு முழுவதும் ஓங்காரேசுவரரின் சந்நிதியில் கண்விழித்திருந்தீர்கள். அன்று இரவு சிவபெருமான் உனக்கும் உனது மனைவிக்கும் காட்சி தந்தார். அதனால் நீங்கள் இருவரும் அங்கேயே தங்கிச் சரியைத் தொண்டுகளைச் செய்து வந்தீர்கள். நீ சில காலம் செல்ல இறந்துவிட்டாய். உனது மனைவி கற்புக்கரசியாக இருந்தமையால் அவள் உனது சிதையில் வீழ்ந்து மரணமானாள். அதனால் தான் இன்று சுகபோக வழ்வை அனுபவிக்கிறாய். இனி நீ ஓங்காரேசுவரத்தை அடைந்து தவம் செய்து முத்தியடைவாயாக" என்றார்.

அதன்பின் புஷ்கவாகனனும் மனைவியும் ஓங்காரேசுவரர் சந்நிதானத்தை அடைந்து அவரை வணங்கி, அர்ச்சனை செய்து வேதகீதங்கள் பாடிச் சிவபூசை செய்தனர். அதனால் அவர்கள் முத்தியடைந்தனர்.

சிலாத முனிவர் செய்த தவம்

வியாச முனிவர், சநத்குமார முனிவரை வணங்கி, "சுவாமி, நந்திதேவர் என்பவர் யார்? அவர் யாருடைய புத்திரர்? அவர் எவ்வாறு உயர் பதவியை அடைந்தார்? என்று கூறுங்கள்" என்று கேட்டார்.

"வியாசனே, முன்பு சிலாதர் என்றொரு மா முனிவர் இருந்தார். அவர் சிவலோகத்திற்குச் சென்ற போது அவரது பிதுர்கள் துன்பப்படுவதைக் கண்டார். அப்போது அப்பிதுர்கள், "நீ மகா தேவனை ஆராதித்து ஒரு புதல்வனைப் பெற்றால் எமது துன்பங்கள் நீங்கும்" என்றன. அதனால் சிலாதர் சிவபெருமானை நினைத்து ஆயிரம் தேவ வருடங்கள் தவம் செய்தார்.

சிவபெருமான், அவரது தவத்திற்கு இரங்கி, அவர் முன் காட்சி கொடுத்து, "முனிவனே, உனக்கு வேண்டும் வரம் யாது?" என்று கேட்டார். அதற்குச் சிலாதர், "தேவனே, அடியேனுக்கு ஒரு சற் புத்திரனைத் தந்தருளல் வேண்டும். அவன் தங்களது பக்தனாகவும், மரணமற்றவனாகவும், தங்களைத் தரிசிப்பவர்களால் தரிசிக்கத் தக்கவனாகவும் இருக்க வேண்டும்" என்று கேட்டார்.

சிவபெருமான் மகிழ்ச்சியடைந்து, "நீ கேட்ட வரத்தைத் தந்தேன்" என்று கூறி மறைந்தார். அதன் பின் ஒரு வேள்வி செய்ய விரும்பிய சிலாதர் பூமியை உழுதபோது கலப்பையின் படைக்காலில் ஒரு குழந்தை இருப்பதைக் கண்டார். அருகில் இருந்த முனிவர்கள் அது அசுரர் செய்யும் மாயம் என்று நினைத்த போது ஓர் அசரீதி கேட்டது, "சிலாதனே, இது நீ கேட்டுப் பெற்ற குழந்தை. இக் குழந்தையால் உனது பிதுர்களுக்கு மகிழ்ச்சியுண்டாகும். அதனால் இவனுக்கு நந்தி என்று நாமமிடு" என்றது. அதைக் கேட்ட சிலாத முனிவர் பெரு மகிழ்வுடன் அக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு தனது ஆச்சிரமத்திற்கு வந்தார். அந்தக் குழந்தையான நந்தி சிலாத முனிவரிடம் அனைத்தையும் ஐந்து நாட்களில் கற்றுப் பாண்டித்தியம் பெற்றார். அவர் ஏழு வயதை அடைந்த போது தேவர்கள் சிலாதரது ஆச்சிரமத்திற்கு வந்து சிலாதரைப் பார்த்து, "இவ் ஆச்சிரம வாசிகள் எல்லோரும் சுகமாக இருக்கிறார்களா? உனது மகன் வேதத்தியானத்தை உரிய முறையில் செய்கிறானா? உனது சொற்படி வாழ்கிறானா?" என்று கேட்டனர்.

அதற்குச் சிலாத முனிவர், "எல்லாவற்றையும் மிகமிகச் சிறப்பாகச் செய்கிறான்" என்று கூறித் தனது மகனான நந்தியை அழைத்து வந்து அவர்களை ஆசீர்வதிக்குமாறு கூற அவர்கள், "குருவுக்குப் பணிவிடை செய்து அழியாத பதவியை அடைவாயாக" என்று வாழ்த்தினர். அதனால் மனவேதனை அடைந்த சிலாத முனிவர் அவர்களை நோக்கி, "மகா

தவசிகளே, நீங்கள் எனது மகனைத் தீர்க்காயுள் உள்ளவனாக இருப்பாயாக என்று வாழ்த்தாதது ஏன்?" என்று பணிவுடன் கேட்டார்.

"சிலாதனே, உனது மகனின் ஆயுட்காலம் எட்டு ஆண்டுகள் தான்" என்றதும் சிலாதர் மயங்கிக் கீழே விழுந்தார். அதன்பின் எழுந்து கூக்குரலிட்டு அழுதார். அவரால் துக்கத்தைத் தாங்க முடியவில்லை. அவர் அழுவதைப் பார்த்த நந்தி, "நீங்கள் அழுவதற்கான காரணம் என்ன என்று கேட்டார். அதற்குச் சிலாதர், "மகனே, இங்கு வந்த முனிவர்கள் உனக்கு இன்னும் ஓர் ஆண்டுதான் ஆயுள் என்று கூறிச் சென்றனர். அதை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை" என்றார்.

"அப்பா, யமனே தேரில் வந்தாலும் என்னைக் கொண்டு போக முடியாது இதற்காக நீங்கள் அழ வேண்டாம்" என்றார். எனினும் சிலாதருக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. அதை உணர்ந்த நந்தி சொன்னார், "தந்தையே, சிவபெருமான் தானம், தவம், வித்தை முதலியவற்றால் சந்தோசப்படுவரல்ல நிர்மலமான பக்தியையே அவர் விரும்புவார். அதனால் கவலைப்படாதிருங்கள் தைரியமாக இருங்கள். யமனும் அவனது படை வீரர்களும் ஒன்று சேர்ந்து வந்து எனது உரோமத்தில் ஒன்றைக் கூட அசைக்கமாட்டார்கள். அவர்களால் எனக்கு எந்த ஆபத்தும் வராது. நான் இங்கிருந்து சென்றதும் நீங்கள் செய்ய வேண்டியவற்றைக் கூறுகிறேன். அதைச் செய்யுங்கள். நீங்கள் நீரில் இறங்கி பாவசக்தியுடன் சதருத்திரீயத்தை ஜெபித்து மகாதேவனைப் பிரார்த்தித்துக் கொண்டிருங்கள்" என்று நந்தி கூறச் சிலாத முனிவர் நம்பிக்கையுடன் நந்தியைத் தவம் செய்ய அனுப்பினார்.

நந்திதேவர் வரம் பெறல்

நந்திதேவர் புவனை நதியில் நீராடி ருத்திர மந்திரத்தை ஜெபித்து சிவபெருமானின் நினைவோடு இருந்தார். ருத்திர மந்திரத்தை நந்தி ஒரு கோடி தரம் உச்சரித்ததும் சிவபெருமான் அவர் முன் காட்சியளித்தார். நந்தி சிவபெருமானை வணங்கி, "நான் மீண்டும் ஒரு கோடிதரம் ருத்திர மந்திரத்தை ஜெபிக்க அருளல் வேண்டும்" என்று கேட்டார். அதற்குச் சம்மதித்த சிவபெருமான் மறைந்து போனார். அதன்பின் நந்தி ஒரு கோடி முறை ருத்திர ஜெபம் செய்ததும் சிவபெருமான் இடபவாகனத்தில் எழுந்தருளி, "நந்தி, உனக்கு என்ன வரம் வேண்டும்" என்று கேட்டார். அதற்கு நந்தி, "எம்பெருமானே, நான் இன்னும் ஒரு கோடி முறை ருத்திர மந்திரத்தை ஜெபிக்க அருளல் வேண்டும்" என்றார். அதற்கு அருளிய சிவபெருமான் மறைந்து போனார்.

நந்திதேவர் இவ்வாறு ஏழுகோடி மந்திரங்களை ஜெபித்து முடித்து விட்டு, எட்டாவது கோடி மந்திரங்களை ஜெபிக்க ஆரம்பித்தார். அதைக் கண்டு இந்திரன் முதலிய தேவர்களும்

யமனும் பயந்து நடுங்கினார்கள். சிவபெருமான் பெருமகிழ்வுற்று அவர் முன்தோன்றி, "சிலாதரின் புத்திரனே, நீ செய்த தவம் போதும். இது வரை நீ செய்த கடுந்தவத்திற்காக உனக்கு எல்லாப் பதவிகளையும் கொடுத்திருக்க வேண்டும். அதனால் நீ விரும்பி எதைக் கேட்டாலும் தருவேன்" என்றார்.

"சுவாமி, எனக்குப் பிறப்பும் இறப்பும் இல்லாதிருக்க வேண்டும். மேலும் தாங்கள் குடும்பசமேதராக இருக்கும் போது அந்தப்புரத்தில் நானும் இருத்தல் வேண்டும். அத்துடன் எனது பிதுர்வர்க்கத்திற்கு அழியாத சிவப்பதவியும், என்னால் துதிக்கப்பட்ட தோத்திரத்தை வாசித்தவர்களுக்கு கைலாய வாசமும், சதுர்த்தசித்திதியில் இந்நாமங்களை அர்ச்சித்தவர்களுக்குக் காணாபத்தியமும் தந்தருளல் வேண்டும்" என்று கேட்டார்.

அவரை சிவபெருமான் அணைத்தெடுத்து இவனுக்கு இரண்டு அபிசேகங்களைச் செய்ய வேண்டும் என்று கூறிப் பார்வையாலும், வாக்காலும் அபிசேகம் செய்தார். பின்பு, "மகனே, என்னைத் தரிசித்தவர்களுக்கு யம பயம் உண்டாகமாட்டாது. நீ கேட்டவாறு மூப்பு, சாக்காடு, தாபத்திரயங்கள் ஆகியவற்றை ஒழித்து உன்னுடைய பிதுர்களுடன் என்னுடைய பாதார விந்தத்தில் வாழக்கடவாய். நீ எனது கணங்களுக்குத் தலைவனாகவும், எனக்கு இணையான பராக்கிரமமும், யோகவலிமையும் பெற்று என்னுடனே வாழ்வாயாக" என்று கூறி அவருக்கு வெண்பட்டு ஆடை கொடுத்து, அதை அவர் உடுத்திய பின்பு மாலையைப் போட்டு ஆசீர்வதித்தார். உன்னால் பூசிக்கப்பட்ட இத்தலம் ஜாப்பேஸ்வரம் என்ற பெயரால் வழங்கப்படும். இந்நதி இன்று முதல் நந்திபுவனை என்ற பெயரைப் பெற்று விளங்கும். என்று கூற அந்த நதியில் இருந்து ஒரு பெண் தோன்றி வந்து சிவபெருமானை வணங்கினாள். அப்போது சிவபெருமான் அப் பெண்ணைப் பார்த்து, "நந்தி என்னைக் குறித்துத் தவம் செய்யும் போது உனது நீரில் நீராடியமையால் உனக்கு யக்ஞோதயம் என்ற பெயர் உண்டாகும்" என்றார்.

அதற்கு அப்பெண், "சுவாமி நந்தி எனது கரையில் இருந்து தவம் செய்தமையால் அவர் எனக்குப் புதல்வன். நான் அவருக்குத் தாய் அதனால் நந்திமாதா என்ற பெயர் எனக்கு வழங்க வேண்டும்" என்றாள். சிவபெருமான், "அவ் வண்ணமே ஆகுக" என்றார். அதன்பின் நந்தியைப் பார்த்து "ஜாப்பேஸ்வரம், பஞ்ச நதம் என்ற தலங்களில் உடலை நீப்பவர்கள் உனக்குக் கீழ்ப்பட்ட கணநாதர்களாகவும், உனக்கு இணையான தேகமும், உன்னோடு வாழ்ந்தும், இடைவிடாமல் என்னைத் தரிசிக்கும் பாக்கியத்தையும் அடைவார்கள்" என்று அருளினார் என்றார் வியாச முனிவர்.

நந்திதேவர் பட்டாபிசேகம்

சநத்குமார முனிவர் சொன்னார், "வியாசரே, சிவபெருமானின் அழைப்பின் பேரில் எல்லாத்திசைகளிலுமுள்ள கணங்களும் தேவர்களும் வந்து கூடினர். எனினும் எதற்காகத் தாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் என்று தெரியாது அவதிப்பட்டனர். அவர்களை நோக்கிப் புன்னகை செய்த சிவபெருமான், "பிரதம கணாதியர்களே, அதாவது இந்த நந்திதேவனை கணாதியர் அனைவருக்கும் தலைவனாக்க விரும்பினேன். அதைத் தேவர்கள் எல்லோரும் ஒத்துக் கொண்டனர். அதனால் நீங்கள் எல்லோரும் அவனைச் சேனாதிபதியாக ஏற்றுக் கொள்ளுங்கள்" என்றார்.

அதன்பின் பெரியதொரு மண்டபம் அமைத்து அதை முத்துக்களாலும், வைரங்களாலும், நவரத்தினங்களாலும் அலங்கரித்து மண்டபத்தின் நடுவே பெரியதொரு அழகிய சிங்காசனம் அமைத்தனர். அதில் நந்திதேவரை அமர்த்திப் பட்டாபிசேகம் செய்தனர். அப்போது மங்கள வாத்தியங்கள் இசைக்கப்பட்டன. தேவ மகளிர் நடனமாடினர். தேவர்கள், "நமோ நந்தீஸ்வராய நம" என்று சொன்னார்கள். மிகவும் கோலாகலமாக அவ் வைபவம் நடைபெற்றது என்றார் சநத்குமார முனிவர்.

நந்திதேவர் திருமணம்

"வியாசரே, அதன் பின் சிவபெருமான் இந்திராதி தேவர்களைப் பார்த்து, "அமரர்களே நந்திதேவருக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும். அதனால் பொருத்தமான பெண்ணைச் சொல்லுங்கள்" என்றார்.

அதனால் தேவர்கள் அனைவரும் ஒன்றுகூடி ஆலோசித்து மிகுத்தின் மகளாகிய சுயசை என்ற பெண்ணை நந்திதேவருக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பினர். அதை ஏற்றுக் கொண்ட சிவபெருமான் பிரமதேவரைப் புரோகிதராகவும், காந்தர்வர்களை வாத்தியம் இசைப்போராகவும், கணங்களை வாத்தியக் கருவிகளை இசைப்போராகவும் நியமித்தார். அப்ஸ்சரசுகள் நடனமாட சுயசையைத் திருமணம் செய்த நந்திதேவர் சிவபெருமானையும், பார்வதிதேவியையும் வணங்கி ஆசிபெற்றார். சிவபெருமான், நினைத்தபோது நினைத்த இடத்திற்குச் செல்லக் கூடிய அனைத்தும் நிறைந்த ஒரு மலையை நந்திதேவருக்கு வழங்கினார். பின்பு தம் அருகே நின்ற பிரமாவையும் விஷ்ணுவையும் பார்த்து, "உங்களைப் போல நந்தியும் எனது புத்திரனாவான்" என்றார்.

அதன்பின் தேவர்கள் சிவபெருமானை வணங்கி விடைபெற்றுத் தமது இருப்பிடங்களுக்குச் சென்றனர். சிவபெருமானும் உமைஅம்மையும் கைலயங்கிரியை அடைந்தனர். நந்திதேவர் சிவபெருமானின் திருக்கோவில் வாசலில் பொற்பிரம்பும் கத்தியும்

கையிலேந்தி தனது பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டார். இந்தச் சரித்திரத்தை கேட்டவர்களும், வாசித்தவர்களும், சொன்னவர்களும் நந்தீச சமனம் அடைவர்'' என்று சநத்குமார முனிவர் வியாசருக்குக் கூறினார்.

பாவருசியின் சரித்திரம்

வியாச முனிவர் சநத்குமாரரை நோக்கி, ''மாதவரே, சிவபெருமான் உமாதேவியாருடன் கையால மலையை அடைந்தபின் என்ன செய்தார்'' என்று கேட்கச் சநத்குமார முனிவர் சொன்னார், ''வியாசரே, உமாதேவியார் சிவபெருமானைப் பணிந்து, ''மகாதேவரே தாங்கள் பிச்சை எடுத்து உண்டு வருகையில் கிரணியன் என்ற பிராமணனின் வீட்டுக்குச் சென்று அவனது பூசையை ஏற்றுப் பிச்சை பெற்று உண்டீர்கள் அத்தகைய வேதியரின் சிறப்பை எனக்குக் கூறுங்கள்'' என்றாள்.

''தேவி கங்கைக் கரையில் உள்ள ஒரு பிராமணக் குடியிருப்பில் வசித்து வந்த பாவருசி என்ற அந்தணன் சாத்வீக குணமுடையவன். அஞ்ஞானத்தை ஒழித்தவன். நியாய வழியில் நடப்பவன். தானம் வித்தையை விட ஒழுக்கமாக வாழ்வதே சிறந்தது. மமதையானது மோகத்தால் உண்டாகும் பல வித அசாத்தியமான பாதங்களையும், பாவங்களையும் நிர்மூலமாக்குவது அந்த இரு குணங்களும் வேதியர்களுக்கு இருத்தல் வேண்டும்''

பாவருசி சகல தர்ம சாத்திரங்களையும், வேத வேதாங்கங்களையும் கற்றுத் தனது மனைவியுடன் வயல்களில் சிந்திய தானியங்களை எடுத்து வாழ்ந்து வந்தான். அதிதிகளுக்குக் கொடுக்காது அவன் உண்பதில்லை. ஒரு மழை நாளில் அதிதி எவரும் வரவில்லை. அதனால் அவன் மழையில் நனைந்தவாறு அதிதியைத் தேடிச் சென்றான் யாரையும் காணவில்லை.

பாவருசியின் நிலையைக் கண்டு வருந்திய அக்கினி வேதன் அசிங்கமான தோற்றத்துடன் ஒரு மரத்தின் கீழ் மழையில் நனைந்து நடுங்கியவாறு இருந்தார். அவரைக் கண்டு மகிழ்ந்த பாவருசி அவரின் அருகில் சென்று உணவருந்த வருமாறு அழைத்தார். அதற்கு அக்கினி தேவன், ''அந்தணரே, நான் சண்டாளன், பிராமணரது வீட்டுக்குச் செல்வது பாவம். அதனால் இங்கே உணவைக் கொண்டுவாரும்'' என்றான். பாவருசி தனது ஞானத்தால் வந்திருப்பவன் அக்கினிதேவன் என்று உணர்ந்து அவரைக் கையில் பிடித்து வீட்டுக்கு அழைத்துச் சென்று முறைப்படி உணவு கொடுத்தார். அதனால் மகிழ்ந்த அக்கினிதேவன் அவருக்கு உத்தமமான யோக ஐஸ்வரியத்தைக் கொடுத்தான். தர்ம முறைப்படி வாழ்ந்த அவனும் மனைவியும் முத்தியடைந்தனர்'' என்று சிவபெருமான் கூறினார் என்று சநத்குமார முனிவர் வியாசருக்குச் சொன்னார்.

சிவயோக வீபூதி மகிமை

வியாச முனிவர், சநத்குமார முனிவரை நோக்கி, "சுவாமி, முன்பு பிரமன் முதலிய தேவர்கள் பாசுபத யோகத்தை அனுசரித்துச் சிவபெருமானின் அருளைப் பெற்றதாகக் கூறினீர்கள். அதைப் பற்றிக் கூறுங்கள்" என்றார்.

"வியாசரே, தக்கனின் யாகத்தில் வீரபத்திர மூர்த்தியால் பிரமன் முதலிய தேவர்கள் அழிக்கப்பட்டனர். அதனால் மனம் வருந்திய உமாதேவி சிவபெருமானிடம், "அத் தேவர்களை எனக்காக உயிர்ப்பியுங்கள்" என்று வேண்டச் சிவபெருமான் அவர்களை உயிர்ப்பித்தார். உயிர்பெற்ற தேவர்கள் திருநீறு பூசிச் சிவபெருமானைச் சரணடைந்து தியானம் செய்து கொண்டிருந்தனர். அதைக் கண்டு மகிழ்ந்த மகாதேவன், அவர்களுக்குப் பாசுபத யோகத்தை உபதேசித்தார்.

வியாசரே திருநீற்றைத் தொட்டவுடனேயே அறியாமை அகலும், அதனால் சீவன் முத்தனாகிறான். வீபூதியைத் தரித்த பிரமா முதலான தேவர்கள் அதன் மகிமையால் வீரியவான்களாகிச் சங்கரனை வணங்கி எல்லாப் பாவங்களையும் ஒழித்துப் பாசுபத யோகம் செய்து முத்தியடைவார்கள்.

ஆசாரங்களையெல்லாம் விட்டவர்களானாலும், தீயவற்றைச் செய்தாலும், அவாவுடையவர்களானாலும் வீபூதியைப் பூசியவுடன் சிவபெருமானின் நினைவு உண்டாகும். காலப்போக்கில் அந்நினைவு மாறி முத்திக்கு வழிவகுக்கும். ஞாதுரு, ஞானம், ஞயம் ஆகிய மூன்றும் உடலில் பரமாத்மா உருவில் நாடிகளில் வியாபித்துள்ளன. அதனால் தன்னில் வீற்றிருக்கும் பரமாத்மாவை உணர்ந்தால் முத்தி கைகூடும். அதை ஞானத்தால் அன்றிப் பிறிதொரு வகையாலும் அடைய முடியாது.

வியாசரே, சிவபெருமானுடைய குணாபவங்களை அறியும் ஓர் உபாயத்தை உமக்குக் கூறுகிறேன். இந்த உலகம் முன்பு சூன்யமாக இருந்தது. சூரிய சந்திரர்கள் கூட இருக்கவில்லை பரம்பெருள் மட்டுமே இருந்தது. அதில் இருந்து ஓம் என்ற ஓங்காரம் பிறந்தது. அது மூன்று மாத்திரைகளின் அளவும், மூன்று எழுத்துக்களின் வடிவமுமாக இருந்தது. அதிலிருந்து பிரமாவையும் விட்டுணுவையும் மாயையாகிய பிரகிருதியையும் சிவபெருமான் தன்னுள் ஒடுக்கியும் மீண்டும் படைத்தும் அவர்களால் உலக காரியங்களை நடத்தியும் வருகிறார்.

மகாயோகிகளான கபில முனிவர் முதலானவர்கள் பாசுபதத்தை அனுசரித்து நிற்விகர்ப்ப சமாதியில் இருக்கிறார்கள். பிரகிருதிக்கு ஈஸ்வரனைக் கட்டுப்படுத்தும் சக்தி கிடையாது என்று தியான யோகத்தால் உணர்ந்தவனே மோட்சமடைவான்" என்றார் சநத்குமார முனிவர்.

சிவபுரத்தின் சிறப்பு

“வியாசரே, சத்திய லோகம், மகர் லோகம் ஆகியவற்றிற்கு மேலே அமைந்திருக்கும் பிரமாண்டம் முழுவதும் சிவலோகத்திலேயே உண்டு. அது எப்போதும் அழியாது நிலைத்திருப்பது. அங்கு ஜனகர், பிரமன், பிதாமகன், வாலகில்லியாதிகள், கபிலர் முதலிய முனிவர்கள் பலர் சிவபெருமானின் நினைவோடு வாழ்கின்றனர். அவர்களுக்குச் சிவபெருமான் தரிசனம் கொடுப்பார். அங்கு அன்பர்களுக்கான ஒரு மண்டபம் உண்டு. அந்த மண்டபத்திற்கு விக்கிர ரூபியாக இருக்கும் பெருமானே நாதன். அவரிடமிருந்து வைஷ்ணவி என்ற பிரகிருதி தோன்றியது. அப்பிரகிருதியால் உண்டான நகரத்திற்குப் பிரமலோகம் எனப்பெயர். அதற்கு எதிரில் சிவ மண்டபம் ஒன்று உண்டு. அங்கு சித்த முனிவர்கள் தியானத்தில் இருப்பர்.

நல்ல மனமும் இடைவிடாத பக்தியும் கொண்டு சிவனைத் தொழுதவர்கள் அங்கு மகிழ்ச்சியாக இருப்பர். அந்த மண்டபம் இரத்தினங்களாலும், மாணிக்கங்களாலும், பவளங்களாலும் ஆன அழகிய மண்டபமாகும். மேருமலை போல அந்த மகாமண்டபம் இருக்கும்.

அந்த மகா மண்டபத்தில் சிவபெருமான் பார்வதிதேவியுடனும், பூத கணங்களுடனும் வீற்றிருக்கிறார். பார்வதி தேவியின் தோழியர் பலர் அவருக்குச் சேவை செய்து கொண்டிருக்கின்றனர். அத்துடன் தேவர்களும், கணங்களும் சேவை செய்து கொண்டிருப்பர். பொற்பிரம்பும், கத்தியும் கையில் கொண்டு நந்தி தேவரும் அங்கிருப்பர். ஜயை, விஜயைகள் சாகன், விசாகன், நைசுமி முதலியோரும் அங்கு அமர்ந்திருப்பர்.

அங்கு பொன்மயமானதும், சூரியப்பிரகாசத்தையும் விஞ்சிய ஒளியை உடையதும், இரத்தினங்களால் அமைக்கப்பட்ட சிங்கங்கள் காட்டப்பட்டதும், நவரத்தினங்களால் ஆன அனேக பொற்தூண்களைக் கொண்டதும், இரத்தினமயமான தளங்களைக் கொண்டதுமான திவ்வியமான தேர் ஒன்று சர்வலோக நாயகனான சிவபெருமான் பயணம் செய்ய அமைக்கப்பட்டுள்ளது.

வியாசரே, இப்புராணம் எக் காலத்திலும் தமது மனம், வாக்கு, காயம் ஆகியவற்றைச் சிவபெருமானுக்கு அர்ப்பணம் செய்தவர்கள், எத்தயைக துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருந்தாலும் மேன்மை அடையச் செய்யும். இதன்படி வாழ்ந்தவர்கள் சிவபுரத்தை அடைந்து சகல இன்பங்களுடனும் வாழ்வர். பக்தி சிரத்தையுடன் இப் புராணத்தை வாசித்தவர்கள், கேட்டவர்கள், சொன்னவர்கள் எல்லோரும் இம்மையிலும் மறுமையிலும் மிக்க மகிழ்வுடன் வாழ்வர். இதன் ஓர் அத்தியாயத்தை அல்லது ஒரு சுலோகத்தையாவது மனதில் நினைத்தவர்கள் சிவபெருமானின் திருவருளால் சிவபுரத்திற்குச் சென்று அவருடன் கூடி வாழ்வர்” என்றார் சநத்குமார முனிவர்.

5. வாயு சம்கீதை

(பூர்வ பாகம்)

காப்பு

நமஸ் மைஸ்த ஸம்ஸார சக்ரபர்ரமண ஹேதவே

கௌரீ குசதடத்வந்த்வ குங் குமாங்கீத வக்ஷஸே

வித்தியாவதார விளக்கம்

சூத முனிவர், நைமிசாரணிய வாசிகளை நோக்கிக் கூறலானார்.

"முனிவர்களே, சிவபெருமானின் திருவருளால் உபமந்யு முனிவர் உணர்ந்த அநேக நியமங்களை, வாயுதேவனுக்குச் சொல்ல, வாயுதேவன் அவற்றை அனுட்டித்தார். ஒருநாள் அவர் நடுப்பகலில் வந்து கொண்டிருக்கும்போது அவரைக் கண்ட முனிவர்கள் அவரால் தான் தமது சந்தேகங்களைத் தீர்க்க முடியுமென்று உணர்ந்து அவரிடம் சென்று, அவரை வணங்கித் தமது எண்ணங்களை வெளிப்படுத்தி அவரை அழைத்து வந்து ஆசனத்தில் இருத்தினர். பின் வாயு தேவரே, சிவபெருமானின் மகிமைகளைக் கேட்க விரும்புகிறோம். முக்கியமாகப் பாசுபத விரதம் அனுட்டிக்கும் முறைகளைக் கூற வேண்டும்" என்று கேட்க, வாயுதேவன் சொல்லியவாறு சூத முனிவர் சொல்லத் தொடங்கினார்.

"உத்தமமான முனிவர்களால் சூழப்பட்டவரும், சிவனையே எப்போதும் தியானித்துக் கொண்டிருப்பவரும், முனிவர்கள் எல்லோரையும் விட உயர்ந்தவருமான உபமந்யு முனிவரை மும்முறை வலம் வந்து நின்ற போது அவரின் தரிசனத்தால் ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியின் சகல

விதமான தோசங்களும் மாயா சம்பந்தமான கர்மங்களும் நீங்கின. ஸ்ரீகிருஷ்ணர், தனக்கு உபதேசம் செய்ய வேண்டும், அத்துடன் சிவதீட்சையும் செய்து வைத்தல் வேண்டும் என்று கேட்டக உபமந்யு முனிவர் பாசுபத விரதம் உபதேசம் செய்து பன்னிரண்டு மாதங்கள் அனுட்டானம் செய்வித்து அற்புதமான ஞானத்தை அருளினார். அதன்பின் ஸ்ரீகிருஷ்ணர் தனக்கொரு புத்திரன் வேண்டுமென்று எண்ணி தவமிருந்தார். அதனால் ஸ்ரீகிருஷ்ணருடைய அஷ்ட பாரியைகளில் ஜாம்பவி என்பவளுக்கு ஒரு புத்திரன் பிறந்தான். அக்குழந்தைக்கு சாம்பன் எனப் பெயரிட்டனர். உத்தம குருவான வியாசபகவானின் கருணையால் இவற்றையெல்லாம் உணர்ந்தேன். அதனால் அவரை வணங்கி உங்களுக்கு இவற்றைச் சொல்கிறேன்'' என்ற சூத முனிவர் மேலும் சொல்லத் தொடங்கினார்.

முனிவர்கள் பிரமலோகம் செல்லல்

''நைமி சாரண்ய வாசிகளே ஆறு குலத்தில் உதித்த அந்தணர்கள் பரம்பொருளைப் பற்றித் தீர்மானிக்காது தம்முள் முரண்பட்டு அது பற்றி அறிய பிரமதேவரிடம் செல்வோம் என்று உடன்பட்டு மேருமலையை நோக்கிச் சென்றனர். மேருமலையின் சிகரத்தின் தான் பிரமநகரம் இருக்கிறது. அங்கு சென்ற முனிவர்கள் பிரமதேவனைத் தரிசித்து வணங்கினர். பின், ''தேவரீர், பரம்பொருளை அறியாத நாம் ஒருவருக்கொருவர் விவாதித்து முரண்பட்டுத் தீர்வில்லாததால் தங்களிடம் கேட்க வந்தோம். அவற்றைக் கூறுதல் வேண்டும்'' என்றனர்.

பிரமதேவர் உடனே தனது ஆசனத்தில் இருந்து எழுந்து, தனது இரு கைகளையும் சிரசின் மேல் கூப்பிக் கொண்டு ''ருத்திரா'' என்று சொல்லி ஆனந்தமயமாகி, ''எந்தப் பிரமா மனதுடன் கூடிய வாக்குக்கள் பிரமத்தை உணராது மயங்குகின்றனவோ, எந்தப் பரப்பிரம சொரூபத்தின் ஆனந்த சுகத்தைப் பிரமஞானி தெரிந்து, பயப்படாமல் இருக்கிறானோ, எந்தப் பரப்பிரம்ம சொரூபத்தில் எல்லாப் பூதேத்திரியங்களுடன் பிரமன், விட்டுணு, ருத்திரன், இந்திரன் முதலியோருடன் இந்தப் பிரபஞ்சம் முதலில் தோன்றியதோ, எவன் படைப்புக்குக் கார்த்தாவோ, எவன் எல்லா ஐஸ்வரியங்களையும் பெற்றுச் சர்வேஸ்வரன் என்ற பெயரைப் பெற்று முனிவர்களால் தியானிக்கப்படுகிறானோ, எவன் என்னைப் புத்திரனாகப் பெற்று எனக்கு ஞானத்தை வழங்கினானோ, எவனுடைய திருவருளினால் நான் உன்னத நிலையை அடைந்தேனோ, எவனின் மகத்மியத்தால் உலகம் நிலை பெற்று விளங்குகிறதோ, எவன் திவ்விய ஆகாயத்தில் தனியாக ஈஸ்வரனாக விளங்குகிறானோ, அவனே மகாதேவன். அவனே சர்வேஸ்வரன் என்று உணர்ந்து கொள்ளுங்கள். அவனுக்கு உயர்ந்தவர்கள் எவரும் இல்லை.

அந்தச் சதா சிவனுக்கு ஆதி அந்தங்கள் இல்லை. இயல்பாகவே அவன் நிர்க்குணன், சுதந்திரன், பரிபூரணன், திவ்விய தேகத்தை உடையவன். தன்னைப் பணிபவர்களின் மாயையை ஒழிப்பவன். முக்காலங்கள் இல்லாதவன். காலங்களை

நடத்துபவன். எல்லாவற்றிற்கும் காரணன். உத்தமர்களுக்கு உத்தமன். யாவும் அறிந்தவன். சர்வ அண்டங்களையும் சங்கரிப்பவன். ஒப்புயர்வற்றவன். வேதநாயகன் அவ்வாறான பரம்பொருளை பக்தி ஒன்றினாலன்றி வேறொன்றினாலும் காண முடியாது.

முனிவர்களே, நானும் விஷ்ணுவும் இந்திரனும், முனிவர்களும் ஈஸ்வரனது தரிசனத்துக்காக இப்போதும் தவம் செய்து வருகிறோம். பக்தி மான்களே அவனைத் தரிசிப்பவர்கள். ஈஸ்வரனின் அனுக்கிரகம் பக்தியால் மட்டும் உண்டாக்கப்படுவது.

"ஒவ்வொருவர் கருவில் இருந்தபடியாகவும், பிறந்தவுடனேயும், பிறக்கையிலேயும் பால, யௌவன, கௌமார விருத்தசையிலும் முத்தியடைவதன்றி திரியக்கு முதலிய யோனிகளில் பிறந்து முத்தியடைகின்றனர். மானிடர்களுக்கு முத்திமார்க்கம் ஒரே வகையாக அமைவதில்லை. அது பக்திஞானத்தால் வருவதாகும். அதனால் நீங்கள் அனைவரும் சர்வேஸ்வரனின் அருளைப் பெறுவதற்காக இல்லற தர்மத்தை அனுசரித்து அவருகுத் தொண்டுகள் செய்து சிவபெருமானே கதியென்று தீர்மானம் செய்து வழிபடுங்கள்" என்றார்.

"முனிவர்கள் பிரமதேவரைப் பணிந்து விடைபெற்ற போது அவர் ஒரு சக்கரத்தைக் காட்டி, இது உருண்டு சென்று விழும் இடம் தான் உங்களுக்குச் சித்தியைத் தரும்" என்று கூறி அச் சக்கரத்தை உருட்டிவிட்டார். அச்சக்கரத்தின் பின்னால் முனிவர்கள் சென்றனர். அது ஒரு புனிதமான இடத்தில் விழுந்தது. அதனால் அது விழுந்த இடம் நைமிச வனம் எனப்பெயர் பெற்றது. அது பின் நைமி சாரணியம் என்ற பெயரால் வழங்கப்படுகிறது. அதனால் அது புண்ணிய பூமியானது.

வாயு பகவான் நைமிச வனத்தை அடைந்த கதை

நைமி சாரணியத்தில் முனிவர்கள் அனைவர்களும் ஒன்று கூடி சிவபெருமானை ஆராதித்து சத்திரயாகம் செய்யத் தொடங்கினார்கள். அப்போது பிரமதேவர் வாயுதேவனை அழைத்தார். அதனால் வாயுதேவன் நைமிச வனத்தை அடைய, அங்கு நெடுங்காலம் தவம் செய்து கொண்டிருந்த முனிவர்கள் கண்டு வாயுதேவனை வணங்கி அவனை அழைத்துச் சென்று பொன்னால் செய்த ஆசனத்தில் அமர்த்தினர். வாயுதேவன் தமது யாகம் முடிவடையும் முனிவர்கள் பெருமகிழ்ச்சி கொண்டு "இனி நாங்கள் விரும்பத்தக்கது எதுவுமில்லை" என்றனர். அதைக் கேட்டு மகிழ்ந்த வாயுதேவன் சர்வேசனுடைய சிறப்புக்களைச் சொல்லத் தொடங்கினான்.

சிவஞான நிலை

நைமி சாரணிய முனிவர்கள் வாயு தேவனை நோக்கி, "சுவாமி, தாங்கள் எவ்வாறு சிவஞானத்தை அடைந்தீர்கள். பிரமதேவனுக்கு எப்படி மாணவரானீர்கள் என்பதைக் கூறுங்கள்" என்றனர். அதற்கு வாயு தேவன் சொல்லத்தொடங்கினான், "முனிவர்களே, பசு, பாசம், பதி என்பவற்றின் வியாபகமாகிய ஞானத்தை நான் பிரமதேவரிடமிருந்தே அறிந்தேன் சரம் என்பது பிரகிருதி, அசரம் என்பது புரிசன். இவை இரண்டையும் பிரேரணை செய்யும் மூன்றாவது பொருள் பரமேஸ்வரன். மாயை தான் பிரகிருதி. மாயையால் சூழப்பட்டவனே புரிசன். சிவபெருமான் தாமோ குணம் இல்லாத விசுத்தன். புரிசனுடைய ஞானத்தையும் கிரியையையும் காணச் செய்கின்ற சக்திகள் வித்தை என்றும் கலை என்றும் பெயரைப் பெறும். கர்மம் நாசமான பிறகு யாதொன்றும் இல்லாத நிலை உண்டாகும். புண்ணிய பாவ ரூபமாக உள்ளது கர்மம். அது சுக துக்கங்களைப் பயனாகக் கொண்டது. அதற்கு ஆதி இல்லை. புண்ணிய பாவநலிவே அதன் அந்தம். போகம் என்பது கர்மநாசமாகும். கண் முதலிய இந்திரியங்களும், மகம் என்ற அந்தக்கரணமும் பொருந்திட உடலே போகசாதனமாகும். சிவ சிந்தனையால் சர்வேஸ்வரனின் அனுக்கிரகம் உண்டாகும். அதனால் சிவ சம்பந்தம் ஏற்படும்.

அதைக் கேட்ட முனிவர்கள் வாயுதேவனைக் கேட்டார்கள் சுவாமி, "இந்திரியங்கங்கள், உடல் இவற்றில் ஆன்மா எங்கே உள்ளது?".

"புத்தி என்பது இந்திரியந்திற்கும் உடலுக்கும் வேறாகவும் சர்வவியாபகமாகவும் நித்தியமானதாகவும் விளங்கும் ஆன்மா என்ற ஒன்று உண்டு. அதை உணரலாமே தவிரக் காண முடியாது. புத்தி ஆத்மாவாகாது. இந்திரியங்கள் தமக்குட்பட்டவையை மட்டுமே கிரகிக்கும் தன்மையானவை. அதனால் இந்திரியங்கள் ஆன்மா அல்ல. பரம்பொருள் என்று ஒன்று இருப்பதால் தான் புண்ணிய பாவங்களை அனுபவிக்கிறோம். ஆன்மா எல்லாப் பொருட்களிலும் வியாபித்திருக்கிறது. எல்லாப் பொருட்களிலும் பரமாத்மா இருக்கிறார். அப்படியிருந்தும் அவற்றைக் கண்டவரில்லை. அவற்றை யோகப்பியாசத்தின் மூலம் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

அந்த ஆன்மா ஆணும் பெண்ணும் அலியும் அல்ல. அதை அப்பியாசத்தால் புரிசன் எப்போதும் தரிசித்துக் கொண்டிருக்கிறான். தேகம் தான் பரமாத்மா என்று நினைப்பவன் சரியான ஞானி அல்ல. புரிசனுக்குண்டான சரீரம் புனிதமில்லாதது. அநித்தியமானது. அத்துடன் புருசன் தனது காமக் குணத்தினால் சுக துக்கங்களையும் மூடத் தன்மையையும் உடையவனாகிறான்.

அஞ்ஞானத்தால் உண்டான கர்மமானது அழியும் தன்மையான தேகத்தை உண்டாக்குகிறது. அத்தகைய தேகங்கள் பல கழித்து விட்டன. எத்தனையோ இருக்கின்றன.

எத்தனையோ இனி வர இருக்கின்றன. அத்தேகங்களில் இருப்போர் அழிவற்ற பரம்பொருளை அறியாது இருக்கின்றனர். இப்புரிசன் மாயையால் மறைக்கப்பட்டு மாயைக்கும் தனக்கும் சம்பந்தமில்லாது மேகக் கூட்டத்தில் மறைந்த சந்திரனைக் போலவே இருக்கிறான். ஆன்மாவுக்கு மனைவி மக்களுடைய சம்பந்தம் கிடையாது. அச் சம்பந்தம் பல்வேறு நதிகளால் கடலில் வந்து சேரும் கழிவுகளைப் போன்றது. புரிசன் சரீரத்தைக் காண்பானே தவிர, சரீரம் புரிசனைக் காணமாட்டாது. இரண்டையும் பரம்பொருளே காண்பான். ஆனால் அவ்விரண்டும் பரம்பொருளைக் காணமாட்டாது.

இந்நிலையில் சீவன் வேறு என்றும், பரமாத்மா வேறு என்றும், தேகம் வேறு என்றும் உணர்ந்து ஈஸ்வரனால் சீவன் அனுங்கிரகிக்கப்பட வேண்டும் என்றும் ஞானமுடையவனே மோட்சத்தை அடைவான். அவனே பிரமவித்தனாகிறான். பிறப்பை ஒழிக்கிறான். பரமாத்மாவே உலகைப் படைத்துக் காத்து அழிப்பவன். இவற்றை அறிந்தவன் பதியாகிய சங்கரன் தான் ஒருவனாக நின்று தனது சக்தியால் பல்வேறு உருவ வேறுபாடுகளில் காணப்படுகிறான் என்பதை அறிவான். அந்தப் பகவான் உலகில் உள்ள எல்லா முகங்களும், எல்லாச் சிரசுகளும், எல்லாக் கிரிஜங்களும் தனதாகவுடையவன். எல்லாப் பூதங்களையும் தன்தனுள் அடக்கியதால் சர்வக்ஞன் எனப்படுவான். அதனால் அவனைப் பரமபுரிசன் என்று ஞானிகள் சொல்வார்கள்.

"பிறவியையும் மரணத்தையும் பெற்றுப் பல்வேறு துன்பப்படும் ஆன்மாக்கள் சிவதத்துவத்தை உணர்ந்தாலன்றி மோட்சத்தை அடையமாட்டார்கள். ஆகையால் இத்தத்துவங்களை சிவ உணர்வில்லாதவர்களுக்கு உபதேசிக்கக் கூடாது. உத்தமமான சிவபக்தனுக்கே உபதேசிக்க வேண்டும். அதனால் இன்னும் சிலவற்றைச் சொல்கிறேன். பரமசிவன் படைப்புக் காலத்தில் தானே எல்லாப் பொருட்களையும் படைத்து, சங்கார காலத்தில் யாவற்றையும் சங்கரிப்பவன் என்று உணர்வீர்களாக" என்று வாயுதேவன் சொன்னார்.

காலஸ்வ ரூபம்

முனிவர்கள் வாயு பகவானை நோக்கி, "சுவாமி, இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்ற பேதங்களை அடைந்த மக்களுக்கெல்லாம் வயோதிபத்தை உண்டாக்கி, எல்லாவற்றையும் நிகழ்த்தும் காலம் யாது? அந்தக் காலம் யாருடைய கட்டுப்பாட்டில் உள்ளது. அதில் எவன் அடங்கமாட்டான்" என்று கேட்டார்கள்.

"முனிவர்களே, காலம் என்பது சுலை, காஷ்டை, நிமிடம் முதலிய பேதங்களை உடைய கலைகளால், வியாபகமான தேகமுடையதும் காலஸ்வரூபம் என்னும் பெயரால் பிரசித்தி பெற்றதுமான மகேஸ்வர சம்பந்தமானது. அது சர்வேசனுடைய கட்டுப்பாட்டில்

உள்ளது. அநேக அம்சங்களில் இருந்து ஒரு சக்தி உண்டாயிற்று. காலத்தின் கட்டுப்பாட்டிலேயே இந்தப் பிரபஞ்சம் இயங்குகிறது. அது சிவபெருமானின் கட்டுப்பாட்டில் உள்ளது. சிவபெருமான் காலத்தின் கட்டுப்பாட்டில் இருப்பவன் அல்ல அதற்கு எல்லையும் இல்லை. கட்டுப்பாடும் இல்லை. காலத்தால் வரும் கர்மத்திலிருந்து யாரும் தப்பித்துக் கொள்ள முடியாது அதனால் யாரும் காலத்தை மீற முடியாது. எல்லோரையும் காலம் மீறும் மரணத்தையோ, காலம் தரும் கர்மங்களில் இருந்தோ தப்ப முடியாது. காலம் தன் செயற்பாட்டின் படி ஓடிக்கொண்ட இருக்கும். அத்துடன் அதன் போக்கையும் அறிந்து கொள்ள முடியாது. அக்காலத்தில் ஒருவன் இறக்கமாட்டான், பிறக்கமாட்டான், அறிவைப் பெறவும்மாட்டான். சுக துக்கங்களை அனுபவிக்கவும்மாட்டான். எதையும் அடையவும்மாட்டான். மழை, வெயில், அழிவு, ஆக்கம் யாவும் காலத்தின் விளையாட்டுக்கள். இதை உணர்ந்தவன் தான் மோட்சத்தை அடைவான் அத்தகைய ஞானிக்குக் காலம், பந்தம், பிரகிருதி போன்றன இல்லை" என்றான் வாயுதேவன்.

கால அளவும் தேவர் ஆயுளும்

முனிவர்கள் வாயுதேவனை நோக்கி, "சுவாமி, காலத்தின் பரிமாணம் எவ்வாறு நிர்மானிக்கப்பட்டது? காலத்தின் ஆதியும் அந்தமும் எவை?" என்று கேட்டனர்.

"முனிவர்களே, காலத்தைக் கணக்கிடுவது நிமிடம். சாந்தியாதீத பதவியே அதற்கு அந்தமாகும். நிமிசம் பதினைந்து கொண்டது காஷ்டை, காஷ்டை பதினைந்து கொண்டது கலை, கலை முப்பது கொண்டது முகூர்த்தம், மூகூர்த்தம் முப்பது கொண்டது ஒரு திதி, திதி முப்பது கொண்டது ஒரு மாதம். அது கிருஷ்ணபட்சம், சுக்கிரபட்சம் என்று தனித்தனியாகப் பதினைந்து திதிகளைக் கொண்டது ஒரு ருது, ருதுக்கள் மூன்று கொண்டது ஓர் அனயம், அனயம் இரண்டு கொண்டது ஒரு வருடம், இது மனிதர்களுடைய கால அளவாகும். இதில் மானிட மாதம் ஒன்று பிதுர்களுக்கு ஒரு நாள். மானிட வருடம் ஒன்று தேவர்களுக்கு ஒரு நாள். அத்தகைய தேவ வருடம் நாலாயிரம் கொண்டது. கிருதாயுகம். தேவ வருடங்கள் மூவாயிரம் கொண்டது. திரேதாயுகம். தேவ வருடங்கள் இரண்டாயிரம் கொண்டது. துவாபரயுகம். சதுர்யுகங்கள் ஆயிரம் கொண்டது. ஒரு கற்பகம், ஒரு கற்பகத்தில் பதின்நான்கு மந்வந்திரங்கள் உண்டு. இத்தகைய கண்டங்கள் ஆயிரம் பதினாயிரங்களாக இது வரை அநேகம் கடந்து விட்டன. அவற்றின் கணக்கை யாரும் அறிய மாட்டார்கள்.

ஒரு கற்பமானது பிரமனுக்கு ஒரு பகற்பொழுதாகும். அந்தகைய பகல் ஆயிரம் கொண்டது அவனுக்கு ஒரு வருடம். அத்தகைய வருடங்கள் எண்ணாயிரம் ஒரு யுகமாகும். பிரமயுகங்கள் ஆயிரம் கழிந்தால் ஒரு சவனம். அத்தகைய சவனம் ஒன்பதாயிரம் அழிந்தால் பிரமதேவனின் ஆயுள் முடிவடையும். பிரமன் ஒருவன் இறந்தால் விஷ்ணுக்கு அது ஒருதினமாகும். அவ்வாறு நூறு ஆண்டுகள் கழிந்தால் விஷ்ணு மறைவார். அவ்வாறு விஷ்ணு

மறைந்தால் அது உருத்திரனுக்கு ஒரு நாள். அத்தகைய உருத்திரன் மறைந்தால் மகேஸ்வரனுக்கு ஒரு நாள். இவ்வாறு காலங்கழிந்த பிறகு சதாசிவனுக்கு ஒரு நாள். சதாசிவன் சிவத்தின் ஒரு பகல் கழிய மறைவார்.

இவ்வாறு காலவரையறையைப் பரமேஸ்வரன் கணித்துள்ளார். காலம் அவரது கண்காணிப்பில் இருக்கிறது. பரமசிவனுக்கு ஆயுள்வரையறை கிடையாது. அவரது ஆயுளுக்கு வரையறை இல்லை. அவர் ஒரு போதும் இறப்பவரல்ல. சிவபெருமானின் பகற்காலத்தில் படைப்பும், இரவில் மகாபிரளயமும் நடைபெறும் அத்தகைய சங்கரனை, நான் வணங்குகிறேன் என்றார். வாயுபகவான்.

சத்தியாதி பிரளயாந்தம்

முனிவர்கள் வாயுதேவனை நோக்கி, "சுவாமி, சிவபெருமான் எவ்வாறு எல்லா உலகங்களையும் படைத்தார்? முதலில் பிறந்தது எது? எதனால் எனது பிரபஞ்சம் விரிந்தது? எதனிடம் இவை ஒடுங்கும்?" என்று கேட்டனர்.

"முனிவர்களே, சர்வேஸ்வரனிடமிருந்து மாயை பிறந்தது. மாயா சக்தியின் விசேடமே அவ்வியக்கம். அந்த மாயா சக்தியால் சாத்திய தீச பதமும் வியக்கத்தால் பிரதிஷ்ட பதமும் பிரதிஷ்ட பதத்தால் நிவ்விருத்தி பதமும் பிறந்தன. இவ்வகையான சிருஷ்டிக் கலை ஐந்தாகும். இவை தவறிய இடத்தில் முன்பு கூறிய படைப்புக்கள் யாவும் அழிந்து மகாதேவனே உலகங்களுக்குக் கர்தாவான். அவரின் கட்டளைப் படியே சர்வலோகங்களும் இயங்குகின்றன. இவ் உண்மை சிவபக்தர்களின் மனதில் எப்போதும் இருக்கும். அற்பர்கள் இதை அங்கீகரிக்க மாட்டார்கள். தாமே கர்த்தாக்கள் என்று இறுமாத்திருப்பர். மகாபிரளயத்தின் போது அவ்வியக்கமானது எல்லாவற்றையும் ஒடுக்கும். புரிசன் பிரகிருதி சம்பந்தம் இல்லாதவன் திரிபு இல்லாமல் இருப்பான். இவர்கள் பரமசிவனுடன் சங்கமமாவர். புரிசனுக்கு மேல் சிவனே ஏகனாக இருப்பான். மகாபிரளயம் முடிந்த பின்பு சிவபெருமான் தனது மாயையால் புரிசனைப் பிரகிருதியில் பொருந்தச் செய்து ஆக வேண்டியவற்றைச் செய்வார். இவ்வாறு பிரகிருதி எல்லாவற்றையும் உண்டாக்கும்" என்றார் வாயுதேவன்.

அண்ட உற்பத்தி

வாயுதேவன் சிவபெருமானைத் துதித்த பின்பு முனிவர்களை நோக்கிக் கூறலானார், "முனிவர்களே, அவ்வியக்கத்தில் இருந்து புத்தி, அகங்காரம், மனம், இந்திரியங்கள்,

தன்மாத்திரைகள், பூதாதிகள் யாவும் தோன்றும். பிரமன், விஷ்ணு, உருத்திரன் ஆகியோரும் பிறந்தனர். அவர்களைச் சிவபெருமான் முத் தொழில்களையும் செய்யுமாறு பணித்தார். அவர்கள் மூவரும் சிவபெருமானே சிருஷ்ட்டிக்கான கர்த்தா என்றும் யாவருக்கும் பிரமன் அவர் என்றும், அவர் நித்தியமானவர் என்றும் உணர்ந்தனர். பிரகிருதியில் இருந்து புத்தி, கியாதி, மதி என்ற மகத்துவம் பிறந்தது. மகத்துவத்தால் மூவகைப்பட்ட அகங்காரங்கள் பிறந்தன. இந்தப் பூத அகங்காரங்களின் பூத தன் மாத்திரைகளும் இந்திரியங்களும் பிறந்தன. சத்துவ குணத்துடன் கூடிய அகங்காரத்தை வைகாரியம் என அழைப்பர். வைகாரியத்தால் ஞானேந்திரியங்கள் ஐந்தும் கர்மேந்திரியங்கள் ஐந்தும் மனமும் பிறந்தன. அதன் பின் இவற்றுக்கான அட்டான தேவதைகள் பிறந்தன.

தாமோகுண அகங்காரத்தில் இருந்து சப்தம் பிறந்தது. அதனால் தாமோ குணத்திற்குப் பூதாதி என்ற பெயர் ஏற்பட்டது. சப்தத்தில் இருந்து ஆகாயமும் ஆகாயத்தில் இருந்து பரிசமும், பரிசத்தில் இருந்து வாயுவும், வாயுவில் இருந்து உருவமும், உருவத்தில் இருந்து தேஜசும், தேஜசில் இருந்து ரசமும், ரசத்தில் இருந்து நீரும், நீரில் இருந்து வாசனையும், வாசனையில் இருந்து பிருதுவியும், பிருதுவியிலிருந்து பூதங்களும், பூதங்களில் இருந்து பிரபஞ்சங்களும் பிறந்தன. புரிச தத்துவத்துடன் பிரகிருதி சேர்ந்து அதிலிருந்து மகான் முதலான தத்துவங்கள் பிரமாண்டத்தை உருவாக்கின. இதிலிருந்து பிரமன் தோன்றுவான், பிரமன் முற்பட்ட சீவன். அவனே பூதங்களுக்கெல்லாம் ஆதி கர்த்தாவுமாவான்.

பிரமன் தான் நினைத்த கர்மங்களை அவ்வியக்கத்தினால் உண்டான முக்குணங்களை உடைய உலகைப் படைத்துக் காத்து அழிக்கும் இயற்கையாகிறான். படைக்கும் காலத்தில் நான்கு முகங்களை உடையவன். பாவனத்தில் விஸ்ணு சங்கரித்தால் உருத்திரன் என விளங்குகிறான். இத்தகைய முக் குணங்களைக் கொண்டிருப்பதால் பிரமனைத் திரிகுணனன் என்றும் நால்வகை விபாகமுடையவனாகையால் சதுர்வியூகன் என்றும் முற்பட்டவனாகையால் ஆதிதேவன் என்றும் பிறவாதவனாகையால் அஜன் என்றும் பிரசைகளைப் பராமரிப்பதால் பிரஜாபதியென்றும் அழைக்கப்படுகிறான். முலைகள், கடல்கள் யாவும் பிரமனது கர்ப்பத்தில் இருந்தே வந்தன. சூரியர், சந்திரர், வாயு, கிரகங்கள், நட்சத்திரங்கள், வாயு என்பனவற்றுடன் கூடியது அண்டம். அண்டம் பதின்நான்கு உலகங்களைக் கொண்டது.

“இத்தகைய அண்டமானது ஏழு ஆவரணங்களால் மறைக்கப்பட்டுள்ளது. இதற்கு அதிபதியாக இருக்கும் பிரமன் சேத்திரக்ஞன் எனப்படுவான். இந்த அண்டங்களில் தத்தமது தொழில்களை ஐந்தொழில்களுக்கும் பொறுப்பானவர்கள் செய்து வருகின்றனர். இவ்வண்டத்திற்குத் தலைவனாக உள்ளவன் சிவபெருமான். அவனே மறைந்திருந்தது பிரபஞ்சத்தை இயக்குகிறான்” என்றான் வாயு தேவன்.

ஸ்வேத வராக கற்பம்

“முனிவர்களே, இப்போது நடக்கும் கற்பம் சுவேதவராக கற்பமாகும். இக் கற்பத்தில் மனுக்கள் பதின்நால்வர் உண்டு. சுயா யம்பு மனு முதலிய எழுவரும் சாவர்ணிகள் முதலிய எழுவருமாவர். இவர்களில் வைவ வேதன் ஏழாவான். ஒரு கற்பம் கழிய மற்றொரு கற்பம் வரும்போது அளவில்லாத பெரு மழையுடன் பெருங்காற்றும் வீசி மரஞ் செடி கொடிகளெல்லாம் அழியும். அக்கினி பகவான் மூவுலகையும் எரிப்பான் சமுத்திரங்கள் யாவும் ஒன்றாகச் சேர்ந்து கொந்தளிக்கும் அப்போது பிரமதேவன் நாராயணனாகிச் சிவயோக நித்திரை செய்து கொண்டு, நீரில் துயில் கொள்வான். சித்தர்கள் யாபேரும் பலவிதமாகத் தோத்திரம் செய்து நாராயணனை துயிலெழுப்புவர். துயிலெழுந்த நாராயணன் தன்னை முன்பு சுத்தியிருந்தவை எவற்றையும் காணாது வியப்படைந்தான். பின் சிவபெருமானைத் துதிக்க அவரது அருளால் பூமி நீருக்கடியில் சென்றது புரிந்தது. அதனால் நாராயணன் தான் பூமியை மீட்கவென பன்றி உருவம் எடுக்க வேண்டும் என்று தியானிக்க நாராயணனுக்குச் சிவபெருமானின் அருளால் வெண்பன்றி உருவம் கிடைத்தது.

நாராயணன், நீரில் மூழ்கியிருந்த பூமியைத் தனது கொம்புகளால் தோண்டி எடுத்துக் கொண்டு வரும் போது யனலோகத்தில் உள்ளவர்கள், பூமியுடன் வந்த விஷ்ணுவைக் கண்டு மிக்க மகிழ்வு கொண்டு ஆடிப்பாடி மலர்கள் தூவி வணங்கினர். அதன் பின் பூமியைக் கொண்டு வந்து நிலைநிறுத்திய பின் தனது பழைய உருவான பிரமரூபத்தை அடைந்தார். அதன் பின் சிவனின் கட்டளைப்படி படைப்புத் தொழிலை ஆரம்பித்தார்”.

பலவகைப் படைப்புக்கள்

“முனிவர்களே, பிரமதேவன் படைத்தல் தொழிலை ஆரம்பித்த போது, தமம், மோசம், மகாமோசம், தாமிசிரம், அந்ததாமிசம் என்னும் ஐந்து வகையான அவித்தைகள் பிரமனுள்த் தோன்றின. அவ் ஐந்தில் இருந்தும் ஐவகைப் படைப்புக்கள் தமத்தினால் மறைக்கப்பட்டிருந்தன. முதலில் படைக்கப்பட்ட மலைகளும், மரங்களும் சஞ்சரிக்கப்படாது இருப்பதைக் கண்ட பிரமன் கவலையுடன் மிருகங்களைப் படைத்தார். அவையும் பிரகாசமில்லாதிருந்தமையால் கவலையுடன் ஊத்துவ லோகத்தில் தேவர்களைப் படைத்தார். அதன் பின் அதே லோகத்தில் மனிதரைப் படைத்தார். அவர்களின் போக்கும் பிரமாவுக்கு மகிழ்ச்சியளிக்கவில்லை. அதன் பின் பேய் பூதம் முதலியவற்றைப் படைத்தார்.

முனிவர்களே, இனி குமார கிருஷ்டியைப் பற்றிக் கூறுகிறேன். பிரமதேவன் தனது மனதால் சனந்தனன், சனகன், சனாதனன், சநத்குமாரன், ரிபு இவர்களைச் சிருஷ்டியைச்

செய்யுங்கள் என்று கூறினார். அவர்கள் பிரமனது சொல்லைக் கேளாது சிவபெருமானை நினைத்துக் கடுந்தவம் செய்தனர்.

அதனால் கவலை கொண்ட பிரமதேவனின் கண்களால் கண்நீர் வழிய, அதிலிருந்து பூதங்கள், பைசாசங்கள் தோன்றின. அதனால் பெருங்கவலை கொண்ட பிரமதேவன், துக்கத்தால் மூர்ச்சித்து உயிர் துறந்தான். அப்போது சிவபெருமான் பிரமனின் முகத்தில் பதினொரு ருத்திரர்களைப் படைத்து, "நீங்கள் படைப்புத் தொழிலைச் செய்யுங்கள;" என்று அருள அவர்கள் படைப்புத் தொழில் மிகவும் கடினமானது என்று நினைத்து அவ்விடத்தை விட்டுச் சென்றனர். அதனால் தான் அவர்களுக்கு உருத்திரர்கள் என்ற பெயர் உண்டானது.

அதன்பின் இறந்து கிடந்த பிரமதேவனைச் சிவபெருமான் உயிர்பித்து, "நீ முன்பு போலப் படைப்புத் தொழிலைச் செய்" என்றார். அதன் பின் பிரமதேவர் சிவபெருமானை வணங்கி அவரின் அருளைப் பெற்றுப் படைப்புத் தொழிலைத் தொடங்கினான். அவன் தனது அவயங்களில் இருந்தே உயிர்களைப் படைத்தான். பிரமதேவனுக்கு ஆகாயமே தலை, சந்திர சூரியர்களே கண்கள், திசைகளே செவிகள், பூமியே கால்கள், வாயுவே முகம். இவ்வாறு விராட்ரூபமாக விளங்கும் பிரமதேவருடைய முகத்தில் இருந்து பிராமணரும், தோளில் இருந்து சத்திரியரும், தொடையில் இருந்து வைசிகரும், பாதத்தில் இருந்து சூத்திரரும் தோன்றினர். இந்த வகையில் பிரபஞ்சம் முழுவதும் பிரமதேவனால் படைக்கப்பட்டது" என்றார் வாயுதேவன்.

பிரம்ம, விஷ்ணு உற்பத்தி

முனிவர்கள் வாயு தேவனை வணங்கி, "சுவாமி, தாங்கள் கூறிய படைப்புக்கிரமம் பற்றி எமக்குச் சந்தேகமுள்ளது. அதனால் அதனை விபரமாகக் கூறுங்கள்" என்றனர்.

"முனிவர்களே, மகேஸ்வரனில் இருந்து தான் ருத்திரன், விஷ்ணு, பிரமா ஆகியோர் பிறந்தனர். அதன் பின் இவர்கள் மூவரும் பரமேஸ்வரனை நோக்கித் தவம் செய்தே தத்தமது தொழில்களைச் செய்து வருகின்றனர். உருத்திரன், பிரமாவையும், விஷ்ணுவையும் படைத்தான். மற்றொரு கற்பத்தில் பிரமதேவன் விஷ்ணுவையும், ருத்திரனையும் படைத்தான். இவ்வாறு ஒருவர் மற்றவரைப் படைத்தும் ஒருவரை ஒருவர் வெல்லக் கருதியும் வென்றும் அவர்கள் செய்த செயல்களைச் கண்ட முனிவர்கள் அவர்களது பிரபாவங்களைச் சொல்வார்கள். தற்புரிசகற்பத்தில் ஆயிரம் தேவ வருடங்கள் நாராயணன் மேக வடிவங் கொண்டு சாம்பவ மூர்த்தியைச் சுமந்தான்" அதனால் தான் அது மேகவாகன கற்பம் என்று வழங்கலாயிற்று.

அதனால் சிவபெருமான் விஷ்ணுவைப் பாராட்டிச் சிறந்தவரங்களைக் கொடுத்து, அந்த விஷ்ணுவால் உலகங்களைப் படைக்கச் செய்தபோது, பிரமதேவன் அதைக் கண்டு பொறாமை கொண்டு, "விஷ்ணுவே, உனக்கு இந்தப் பெருமை எப்படி வந்தது. நான் அந்தச் சர்வேசுவரனைக் குறித்துத் தவம் செய்து என்னைப் படைப்பேன்" என்று கூறிச் சிவபெருமானை நினைத்துக் கடுந்தவம் செய்து சிவபெருமானைத் தரிசித்து, "பகவானே, நானும் விஷ்ணுவும் சமமானவர்கள் அப்படியிருந்தும் உங்களிடம் பெற்ற வரத்தின் மகிமையால் அவன் என்னை அவமதிக்கிறான். அதனால் எனக்கும் அத்தகைய வரத்தை அளித்தல் வேண்டும்" என்று கேட்கச் சிவபெருமான் பிரமதேவனுக்கு சிறந்த சக்தியைக் கொடுத்தார்.

உடனே பிரமதேவன் கம்பீரமாக நடந்து, திருப்பாற்கடலை அடைந்து, விஷ்ணுவைக் கண்டு, "விஷ்ணுவே, நீ முன்பு என்னை விழுங்கிப் பின் என்னைப் படைத்ததைப் போல இப்போ நான், உன்னை விழுங்கிப் படைக்கப் போகிறேன்" என்று கூறி விஷ்ணுவை விழுங்கி, மீண்டும் தனது புருவங்களிடையே தோற்றுவித்தார். அப்போது அங்கே சிவபெருமான் தோன்ற இருவரும் சிவபெருமானை வணங்கினார்கள்" என்றார் வாயுதேவன்.

உருத்திரர் உற்பத்தி

"முனிவர்களே, இனி உங்களுக்கு நான், பிரமனின் படைப்பு நிறைவேறும் படி சிவபெருமான் அநுக்கிரகம் செய்ய உருத்திரன் தோன்றிய வரலாற்றைக் கூறுகிறேன்" என்று சொல்லிக் கூறத்தொடங்கினார்.

"அண்டங்களில் விளங்கும் பிரமன் கற்பகங்கள் தோறும் உயிர்களைப் படைத்து அவர்கள் விருத்தியடையாமையால் மிக்க கவலை அடைந்திருந்த போது உருத்திர பகவான் பிரமனிடத்தில் தோன்றினார். அந்த உருத்திரன் எல்லாப் பூதங்களையும் கற்பாத்திரத்தில் சங்கரிப்பவன் பரமேஸ்வர சம்பந்தமான சக்தியுடன் கூடியிருப்பவன். சிவ சின்னங்கள் உடையவன். சிவ ரூபமானவன். எல்லாத் தொழில்களிலும் சமர்த்தன் சிவாக்ஞையைப் பரிபாலிப்பவன். அவன் பிரமனுக்கு ஞானத்தை அளித்து, படைப்பதற்கு அனுக்கிரகித்தான். உருத்திரனின் அனுக்கிரகத்தினால் தான் பிரமன் படைப்பைச் செய்கிறான். அவன் எண்ணற்ற உருத்திரர்களை மனத்தால் சிருஷ்டி செய்தான்.

அந்த உருத்திரர்களைப் பிரமன் கண்டு வணங்கி, "சர்வேஸ்வரரான உருத்திரப் பெருமானே நான் இத்தகைய பிரசைகளைக் கண்டதில்லை. அதனால் இறக்கத்தக்கவர்களாகப் படைத்தருளல் வேண்டும்" என்று பிரமன் வேண்டப் பரமேஸ்வரன் சிரித்து விட்டு, "அப்படியானவர்களை நீயே படை" என்றார்.

பிரமன் உருத்திரனைத் துதித்தல்

“முனிவர்களே, பிரமதேவன் படைத்த படைப்புக்கள் யாவும் விருத்தியடையாததால் பிரமன் பெரும் துயரங் கொண்டு இனிப் பெண்களோடு கூடுவதால் உண்டாகும் படைப்புக்களைச் செய்ய வேண்டும் என்று நினைத்து, சிவபெருமானை ஒரு போதும் விட்டுப் பிரியாதிருக்கும் சக்தியான உமாதேவியைப் பாகமாகவுள்ள சிவபெருமானை நினைத்து உக்கிரமான தவத்தைப் பிரமதேவன் மேற்கொண்டார்”.

பெண்கள் படைப்பு

முனிவர்களே, உக்கிரமான தவத்தை மேற்கொண்ட பிரம தேவரின் முன் தோன்றிய சிவபெருமான், “மகனே, உனது விருப்பத்தை நிறைவேற்றுவேன்” என்று கூறித் தமது இடபவாகனத்தில் வீற்றிருக்கும் பார்வதியைத் தனது சரீரத்தில் இருந்து பிரித்தார்.

பார்வதியைக் கண்ட பிரமதேவர் அவளை வணங்கி, “தாயே, சிவபெருமானால் நான் தோன்றினேன் அவர் என்னைப் படைக்கும் படி கட்டளையிட்டார். அதனால் படைப்புத் தொழிலை மேற்கொண்டேன். என்னால் படைக்கப்பட்டவை விருத்தியடையவில்லை. ஆகையால் இனி ஆண், பெண் சங்கமத்தால் உலக விருத்தியை உண்டு பண்ணலாமென நினைக்கிறேன். முன்பு சிவபெருமானால் பெண் இனம் படைக்கப்படவில்லை. அதனால் அதைப் படைக்கும் சக்தி எனக்கில்லை. அதனால் தாயே நீ தக்கனுக்கு மகளாக அவதரிக்க வேண்டும்” என்றார். அதைக் கேட்ட பார்வதி தனது புருவ மத்தியில் ஒரு சக்தியை உருவாக்கினாள். அப்போது சிவபெருமான் அந்தச் சக்தியை நோக்கி, “நீ பிரமனது விருப்பத்தை நிறைவேற்று” என்று கூறிவிட்டுப் பார்வதியை அழைத்துக் கொண்டு கைலாய மலையை அடைந்தார்.

பார்வதிதேவியால் உருவாக்கப்பட்ட சக்தியை வணங்கிய பிரமதேவன், “நீ எனது மகனாகிய தக்களுக்கு மகளாகி உலக விருத்தியை உண்டாக்க வேண்டும்” என்றார். அதன்படி அச் சக்தி தக்கனின் மகளானாள். அன்றுமுதல் ஆண்களும் பெண்களும் கூடியிருந்து மக்களை பெறத் தொடங்கினர். முனிவர்களே, இச் சரித்திரத்தைப் படித்தவர்களும், கேட்டவர்களும், சொன்னவர்களும் நல்ல புத்திரர்களைப் பெற்று நெடுங்காலம் வாழ்வார்கள்” என்றார் வாயுதேவன்.

பிரம வம்ச உற்பத்தி

"முனிவர்களே, சிவபெருமானின் அருளைப் பெற்ற பிரமதேவன் தனக்குக் கிடைத்த வலிமையான சக்தியைப் பயன்படுத்தி தான் இரு கூறாகப் பிரிந்து விராஜன் என்ற ஆடவனாகவும், சதரூபை என்ற பெண்ணுமானார். விராஜனைச் சுவாயம்பு மனுவென்று கூறுவர். சதரூபை என்பவள் தவம் செய்து, சுயாம்புமனுவைத் திருமணம் செய்து பிரியவிரதன், உத்தானபாதன் என்ற இரு புதல்வர்களையும், ஆகுதி, பிரசூதி என்ற இரண்டு புத்திரிகளையும் பெற்றாள். அவர்கள் நால்வரும் தான் உலகில் உள்ள மக்களுக்கெல்லாம் காரணகர்த்தாக்களாவர். சுயம்புமனு ஆகுதியை உருசி என்ற பிரசாபதிக்கும், பிரசூதியை தக்சப்பிரசாபதிக்கும் திருமணம் செய்து வைத்தான். ஆகுதிக்கு யக்சன் என்ற புதல்வனும், தட்சணை என்ற பெண்ணும் மக்களாகப் பிறந்தனர். தசப்பிரசாபதிக்கும் பிரசூதிக்கும் இருபத்து நான்கு புத்திரிகள் பிறந்தனர். அவர்களுள் பதின்மூன்று பெண்களைத் தர்மன் என்பவன் திருமணம் செய்தான். மிகுதியான பதினொரு பெண்களையும் பிருகு, ருத்திரன், மரீசி, ஆங்கிரஸ், புலகன், கிருது, புலஸ்தியன், அத்திரி, வசிட்டன், அக்கினி, தென்புலத்தாருக்கும் திருமணம் செய்து கொடுத்தான். அதனால் அந்தவம்சம் அளவுக் கதிமாக பிள்ளைப் பேற்றால் பெருகியது.

"முனிவர்களே, இனி மன்னர்களின் மரபைச் சொல்கிறேன். இஷ்வாகு, அம்பரீசன், யயாதி, நகுஷன் முதலியோர் சூரிய வம்சத்தில் பிறந்து பெயர் பெற்றவர்கள். இம் மன்னர்களின் வரலாறுகளைச் செல்வதால் எனக்கும் பயனில்லை. கேட்கும் உங்களுக்கும் பயனில்லை. அதனால் அவற்றை விலக்கிவிட்டு நாம் மோட்சத்தை அடையும் படியாகவுள்ள சிவனின் சரிதங்களைச் சொல்லுகிறேன் கேளுங்கள்" என்று வாயுதேவன் கூறினான்.

தக்கன் முதலியோர் சாபமேற்றது

முனிவர்கள் வாயுதேவனை நோக்கி, "தேவரே, நாம் அரசர்களின் வீரதீரச் செயல்களைக் கேட்கவிரும்பவில்லை. அதனால் சிவபெருமானின் வரலாற்றையே அறிய விரும்புகிறோம். தக்கனின் மகளாகிய தாட்சாயிணியின் வரலாற்றைக் கூறுங்கள்" என்றனர்.

"முனிவர்களே, அப்ஸ்சரஸ்சுகளோடும் வேறு வகையிலும் அளவில்லாத இன்பத்தை அனுபவித்த இந்திரன் முதலான தேவர் அனைவரும் சேர்ந்து "நாம் இவ்வளவு காலமும் பெரும் இன்பங்களை அனுபவித்து பல வகையான பாவங்களைச் செய்துவிட்டோம். அவை எம்மைத் துன்புறுத்தப் போகின்றன." என்று எண்ணிக் கவலைப்பட்டு இமயமலைக்குச் சென்றார்கள்" சிவனிடம் தமது கவலையை வெளியிட்டு மனச்சாந்தி பெற்றுத் திரும்பினார்கள்.

அதே நேரம் தக்கன் தனது மகளான தாட்சாயிணியையும் மருமகனான சிவபெருமானையும் காண விரும்பி இமயமலைக்குத் தேவர்களுடன் வந்திருந்தான். தாட்சாயிணி அங்கு வந்திருந்த எல்லோரையும் சமமாக வரவேற்றாள். தக்கன் தனது அஞ்ஞானத்தால் தாட்சாயிணி உலக மாதா என்று உணராது தனது மகள் என்று நினைத்து அவள் தன்னை மேலான நிலையில் வரவேற்கவில்லை என்று நினைத்து அவளையும் சிவபெருமானையும் அவமதிக்க வேண்டும் என்று நினைத்து சிவபெருமானுக்கும் பார்வதிதேவிக்கும் அவிப்பாகம் கொடுக்காது பெரும் யாகம் ஒன்றைச் செய்தான். அதற்கு அவன் சிவபெருமானையும் பார்வதியையும் அழைக்கவில்லை. ஏனைய தேவர்கள் எல்லோரும் யாகத்திற்கு அழைப்பின் பேரில் வந்திருந்தனர். தாட்சாயிணி தனக்கு அறிவிக்காவிட்டாலும் தந்தை செய்யும் யாகத்திற்குச் செல்ல விரும்பி அதைச் சிவபெருமானிடம் சொல்ல முதலில் மறுத்த சிவபெருமான் பின்பு மனமிரங்கி அவளை யாகத்திற்குச் செல்ல அனுமதித்தார். தாட்சாயிணி யாகசாலைக்கு வந்தபோது தக்கன் அவளை மதியாது யாகத்துக்கு வருபவர்களை இனிய வார்த்தைகள் கூறி வரவேற்றுக் கொண்டிருந்தான்.

வா என்று கூடச் சொல்லாத தக்கன் மீது தாட்சாயிணிக்குச் கடுங்கோபம் உண்டானது. அதனால் தக்கனை நோக்கி, "என்னையும், எனது கணவரையும் யாகத்திற்கு அழைக்காமைக்கான காரணம் என்ன?" என்று கேட்டாள்.

அதற்குத் தக்கன் கடுங்கோபங் கொண்டு சொன்னான், "எனது தகுதிக்கு உனது கணவன் பொருத்தமில்லாதவன் உனது கணவன் பித்துப் பிடித்து மயானத்தில் பேய் பிசாசுகளுடன் கூத்தாடுபவன். உத்தமமான அழகுகள் எவையும் இல்லாதவன், எலும்பையும் மண்டையோட்டையும் கோர்த்து மாலையாக அணிந்தவன் எனக்குப் பகைவன். அதனால் தான் அழைக்கவில்லை. நான் அழைக்காத போது நீ ஏன் இங்கு வந்தாய்?" என்று கேட்டான்.

அதனால் கோபம் கொண்ட தாட்சாயிணி, "ஆணவத்தால் உண்மையைப் புரியாது வாழும் நீ செய்த குற்றத்திற்காகத் தண்டிக்கப்படுவாய்" என்று கூறித் தனது உடலை அழித்துவிட்டு நெங்காலமாகப் பார்வதி தனது மகளாகப் பிறக்க வேண்டும் என்று நினைத்துத் தவம் செய்து கொண்டிருந்த இமாலய மன்னனின் மகளானாள்.

முனிவர்களே, பார்வதி மறைந்ததும் ஓம குண்டத்தில் எரிந்த அக்கினி அணைந்தது. மந்திரங்கள் செயலற்றுப் போயின அதைக் கண்ட தேவர்களும் முனிவர்களும் இனி என்ன நடக்குமோ என்று அஞ்சினர். அப்போது அங்கு வந்த சிவபெருமான் பெருங்கோபங் கொண்டு, "தக்கா, நீ என்னையும் எனது மனைவியையும் அவமதித்து உனது பிற புத்திரிகளையும் மருமக்களையும் போற்றியமையால் நீ மானுடனாகப் பிறக்கக் கடவாய். அப்போது நீ யாகம் செய்வாய். அந்த யாகம் என்னால் அழிக்கப்படும். உன்னால் போற்றி வரவேற்கப்பட்ட உனது மருமக்கள் மானிடராவர். உனது செயல்கள் யாவும் தடைப்படும்"

என்று சபித்து, "அவ்வாறே அவர்கள் தோன்றிய காலத்தில் அவர்களை அழித்தார்" என்றார் வாயுதேவன்.

வீரபத்திர அவதாரம்

"முனிவர்களே, பார்வதிதேவியைப் புத்திரியாகப் பெறக் கருதி நெடுங்காலம் தவம் செய்த இமயமலை மன்னன் பர்வதராசனின் புத்தியாக அவதரித்த பார்வதியைச் சிவபெருமான் திருமணம் செய்து, இமயமலைச் சிகரத்தில் நெடுங்காலம் கூடி வாழ்ந்தார். அவ்வாறு அனேக யுகங்கள் கழிந்தன.

தக்கன் சிவபெருமானின் சாபப்படி பிரசேதன் என்பவனுக்குப் புத்திரனாகி மோட்சத்தை விரும்பி அஸ்வமேத யாகம் செய்ய விரும்பி, இமயமலையில் முனிவர்களும் சித்தர்களும் நிரம்பிய கங்காத்துவரம் என்ற இடத்தில் யாகம் செய்தான். அந்த யாகத்திற்கு இந்திரன் முதலான தேவர்களும் ஆதித்தர்களும், வசுக்களும், உருத்திரர்களும், மருத்துக்களும், பிதுர்களும், அஸ்வினிதேவர்களும், பிரமாவும், விஷ்ணுவும், முனிவர்களும் தத்தமது யாகபாகங்களை ஏற்க வந்திருந்தனர். அப்போது அங்கிருந்த தேவர்கள் தக்கனை நோக்கி, "தக்கனே, எல்லோரையும் அழைத்த நீ மகாதேவரை ஏன் அழைக்கவில்லை? அதனால் பெரும்விபரீதங்கள் நடைபெறும்" என்றனர்.

தசீசி முனிவர் கோபங் கொண்டு, "யாகங்களுக்குக் முதல்வன் சிவபெருமான் அவரை விடுத்து ஏனைய எல்லோரையும் அழைத்து அவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுத்துள்ளாய். இது நல்லதற்கல்ல. உலகின் தலைவனான சிவபெருமானை மதிக்காது உனது யாகம் ஒப்பேறாது இடையிலேயே அழியும்" என்று கூறினார்.

அதற்குத் தக்கன், "முனிசிரேஷ்டரே, இந்த யாகத்திற்குச் சிவபெருமானுக்குச் சமமான விஷ்ணு பகவானுக்கே ஆகுதியைக் கொடுக்கப் போகிறேன்" என்றான்.

அதைக் கேட்ட தசீசி முனிவர் முன்பை விடக் கடுங்கோபம் கொண்டு, "தக்கா, சர்வேசனை முன்நிலைப்படுத்தாத எந்த யாகமும் யாகமாகாது. அதனால் இது விரைவில் அழிந்து போகக் கடவது" என்று சபித்துவிட்டு யாகசாலையில் இருந்து வெளியேறினார். ஆனால் தேவர்கள் அவி உணவுக்காக வெளியேறாது காத்திருந்தனர்.

அதை அறிந்த பார்வதிதேவி சிவனிடஞ் சென்று, "நாதா, தங்களை மதியாது தக்கனால் செய்யப்படும் யாகத்தை அழிக்க வேண்டும்" என்று கூறச் சிவபெருமான் பார்வதிதேவியின் வேண்டுதலை ஏற்று வீரபத்திரனைப் படைத்தார். வீரபத்திரர் சிவபெருமானை வணங்கி நின்றார்.

அப்போது பார்வதிதேவி கோபங் கொண்டு ஆயிரம் சிரங்களும் கரங்களும் கொண்ட காளியைச் சிருஷ்டித்தாள். அப்போது வீரபத்திரன், "சுவாமி, எனக்குக் கட்டளையிடுங்கள்" என்றார்.

"வீரனே, தக்கன் கங்காதுவாரத்தில் அஸ்வமேத யாகம் செய்கிறான். நீ காளியுடன் சென்று அந்த யாகத்தை அழித்துவிடு. நான் பார்வதிதேவியுடன் ரைபிய முனிவரின் ஆச்சிரமத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருப்பேன்" என்று கட்டளையிட்டார்.

பார்வதிதேவி வீரபத்திரனையும், காளியையும் அணைத்து, "வீரபத்திரா எனக்குப் பிரியமுண்டாக்குவதற்காகவே பிறந்தாய். ஆகையால் நீ எனது கோபத்தை ஒழிக்க வேண்டும். அது என்னவென்றால், நீ காளியுடன் சென்று சிவபெருமானைப் பூசிக்காமல் தக்கன் செய்யும் யாகத்தை அழித்து அங்குள்ளவர்களைக் கொன்றுவிட்டு வா" என்றாள்.

அதைக்கேட்ட வீரபத்திரர் தனக்குத் துணையாகத் தனது உரோமங்களில் இருந்து உரோமஜர்கள் என்ற கணங்களையும் வலது புயத்தில் இருந்து நூறு கோடி கணங்களையும், இடது புயத்திலிருந்து மனைவியருடன் கூடிய அனே புத்திர கணங்களையும், பாதத்திலிருந்து கடுங்கோபமுள்ள அனேக ருத்திரர்களையும், தொடை, பிருஷ்டம், பக்கம், முகம், குய்யம் முதலிய அவயங்களில் இருந்து எண்ணற்ற கணங்களையும் சிருஷ்டித்தார். அவர்கள் அனைவரும் வீரபத்திரனைப் போலவே ஆயுதங்களை ஏந்தி நின்றனர். வீரபத்திரர் அவர்களை அழைத்துக் கொண்டு இடபவாகனத்தில் ஏறிக் காளியுடன் புறப்பட்டார்.

ஆயிரம் வாய்களை உடைய பானகம்பன் தனது ஆயிரம் வாய்களிலும் சங்குகளை வைத்து முழக்கமெழுப்பினான். துந்தூபிகள் முழங்கின. புத்தி கணங்களுடனும் காளியுடனும் சேர்ந்திருந்த வீரபத்திரன், உருத்திர கணங்களோடு சேர்ந்திருந்த உமாதேவியுடன் வீற்றிருந்த சிவபெருமானைப் போல இருந்தான். அனைவரும் தக்கன் யாகம் செய்யும் இடத்தை நோக்கி நகர்ந்தனர்" என்றார் வாயுதேவன்.

தக்கனது யாகத்தை அடைதல்

வாயுதேவன் தொடர்ந்து சொன்னான், "முனிவர்களே விஷ்ணு முதலிய தேவர் கூட்டத்தைத் தக்கன் இரத்தினங் கம்பளங்களில் இருந்தி அவர்களை வணங்கி மகிழ்வித்தான். முனிவர்கள் மந்திரங்களை ஓதினர். தேவ மங்கையரும் அப்ஸ்சரஸ் கன்னிகளும் யாழை மீட்டி இனிமையாகப் பாடி மகிழ்வுடன் நடனமாடிக் கொண்டிருந்தனர். அவற்றைக் கண்ட வீரபத்திரன் கோபங்கொண்டு சிங்கநாதம் செய்தான். அதைக் கேட்ட தேவர்கள் அஞ்சி நடுநடுங்கி கூச்சலிட்டனர். முனிவர்கள் தண்டம் கமண்டலம் வஸ்திரம் ஆகியவற்றை விட்டுவிட்டு ஓடினார்கள். வீரபத்திரனது வீரமுழக்கத்தால் பூமி நடுநடுங்கியது. மலைகள் ஆடின. கடல்

பொங்கியது. சூரியனும் சந்திரனும் அக்கினியும் ஒளியிழந்தன. அப்போது வீரபத்திரனும் காளியும் கணங்களும் தக்கனது யாகசாலைக்குள் நுழைந்தனர்.

தக்கன் கோபவேசத்துடன் வந்து நின்ற வீரபத்திரனைக் கண்டு உள்ளுரப் பயந்த போதும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாது, "நீ யார்? ஏன் இங்கு வந்தாய்?" என்று கேட்டான்.

"நாங்கள் சர்வேஸ்வரனான சிவபெருமானின் புத்திரர்கள், நீ செய்யும் யாகத்தில் எமக்குச் சேரவேண்டியவற்றைக் கொடுத்துவிடு இல்லாவிட்டால் என்னுடன் போர்புரிய வேண்டும்" என்றான்.

"வீரனே, உனக்கும் உனது தந்தையான சிவபெருமானுக்கும் அவிப்பாகம் கொடுக்க வேண்டுமென்று ஆதியான வேதங்கள் கூறியிருந்தால் அதன்படி கொடும்போம்" என்று தேவர்கள் கூறினார்கள்.

அப்போது அங்கிகிருந்த வேதங்கள் கலங்கி, "இப்படிச் சொல்வதா இனி நாம் இங்கு இருக்கக் கூடாது" என்று நான்கு வேதங்களும் கூறி பிரமலோகத்திற்குச் சென்றன. அதன்பின் வீரபத்திரனும் காளியும் கணங்களும் யாகசாலையை அழிக்கத் தொடங்கினர்.

வீரபத்திரன் யாகத்திற்கென வைத்திருந்த பொருட்களையெல்லாம் நாசம் செய்தான். அவனது விழியில் இருந்து புறப்பட்ட அக்கினி யாகசாலை உட்பட எல்லா இடங்களையும் தீயிட்டது. காளிதேவி தேவமாதர்களின் தோளையும் கூந்தலையும் வாளால் அரித்துவிட்டு அவர்களைக் காலால் உதைத்தாள். அதனால் அவர்கள் அழுது புலம்பினார்கள். தம்மைக் காப்பாற்றும்படி அலறினார்கள். தேவமங்கையரில் காயப்படாதவர்கள் யாருமில்லை. தவர்களது அலறல் சத்தம் எல்லாலோகங்களிலும் ஒலித்தது".

தக்கனது யாகத்தை அழித்தது

"முனிவர்களே, அந்தச் சமயத்தில் வீரபத்திரர் பெருங்கோபத்துடன் சூலம், வேல், வாள், தண்டம் ஆகிய ஆயுதங்களால் தேவர்களை ஓடஓட விரட்டி விரட்டித் தாக்கினார். இந்திரனை தண்டாயுதத்தால் அடித்து அவனது ஆயிரம் கண்களையும் சிதறிப் பூமியில் விழச் செய்தார். அக்கினி தேவனை நாவையும் கைகளையும் துண்டித்தார். யமனைப் பிடித்துத் தனது உள்ளங்கையில் வைத்துக் கசக்கிப் பிழிந்து தூர வீசினார். வருணனின் உந்தியைத் தோண்டி அவனது குடலை மாலையான அணிந்து கூத்தாடினார். வாயுவைக் கடலில் தூக்கி எறிந்தார். குபேரனைத் தூக்கிச் சுழற்றி வீசினார்.

தேவர்களைக் கொடுமையாகத் தாக்கினார். சூரியனின் பற்களை உடைத்தார். சந்திரனைத் தூக்கி அடித்து கால்களால் மிதித்தார். பேய்களும் பூதங்களும் தேவ மங்கையரையும் அப்ஸ்சரஸ் பெண்களையும் காமம் தலைக்கேறப் பலவாறு துன்புறுத்தித் தமது காம இச்சையைத் தீர்த்தன. இதைக் கண்டு சகிக்க முடியாத யக்ஞன் ஓட முயன்ற போது வீரபத்திரர் அவனது தலையைக் கொய்தார். தக்கனது புத்திரிகள் கடுமையாகத் தாக்கப்பட்டனர்.

இவற்றைக் கண்ட விஷ்ணு கருட வாகனத்தில் ஏறி அமர்ந்து தேவர் கூட்டத்தினருடன் போர் செய்ய வந்தார். அப்போது தேர் ஒன்று ஆகாயத்தில் இருந்து வந்து இறங்கியது. அதன் சாரதியான பிரமன் வீரபத்திரரின் அருகே வந்து வணங்கி, "இது சிவபெருமான் உங்களுக்கென அனுப்பியது. அவரும் உமையம்மையும் அருகில் உள்ள ரைபிய முனிவரது ஆச்சிரமத்தில் உள்ளனர். இத்தேரைத் தாங்கள் பயன்படுத்தலாம்" என்று பிரமதேவன் கூற வீரபத்திரர் தேரில் ஏறி அமர்ந்தார்.

பிரமன் தேரைச் செலுத்திவந்து விஷ்ணுவின் முன் நிறுத்தினான். உடனே விஷ்ணு தனது சாரங்கமாகிய வில்லை வளைத்து எண்ணற்ற அக்கினியிலான கணைகளை விடுத்தார். அவற்றை எதிர்த்து வீரபத்திரர் பாணங்களை விடுத்தார். விஷ்ணு மிக கோபங்கொண்டு ஓர் அம்பை வீரபத்திரரின் தோள்மீது எய்ய, வீரபத்திரர் ஆவேசத்துடன் வில்லால் விஷ்ணுவின் தோளில் அடித்தார்.

இவ்வாறு இருவரும் உக்கிரமாகப் போர் செய்தனர். அப்போது வீரபத்திரர் ஓர் அம்பைவிட அவ் அம்பு விஷ்ணுவின் மார்பைத் தாக்க விஷ்ணு மூர்ச்சித்து தரையில் விழுந்தார். சிறிது நேரத்தில் மூர்ச்சை தெளிந்த விஷ்ணு கருட வாகனத்தில் ஏறிப் போர் செய்தார். வீரபத்திரர் கருடனது செட்டைகளைத் துண்டித்தார். விஷ்ணு தனது மாயசக்தியைப் பிரயோகித்து தேவர்கள் பலரை உருவாக்கிப் போர் செய்ய அனுப்பினார். அவர்களை வீரபத்திரர் தனது நெற்றிக் கண்ணால் எரித்துச் சாம்பலாக்கினார். அதனால் கோபங் கொண்ட விஷ்ணு விசம் கலந்த சக்கராயுதத்துடன் வீரபத்திரரின் முன் வந்தார். அவரைக் கண்ட வீரபத்திரர் உரக்கக்கர்ச்சித்தார். அதனால் விஷ்ணு செயலற்று கற்சிலைபோல நின்றார். அதைக்கண்ட தேவர்கள் வீரபத்திரருடன் போர் செய்ய வந்தனர். மீண்டும் வீரபத்திரர் கர்ச்சனை செய்யப் போர் செய்ய வந்தவர்களெல்லாம் பதுமைகள் போல அசையாது நின்றனர். பலர் ஓடி மறைந்தனர். வீரபத்திரரின் சினத்தால் பூமி நடுங்கியது. கடல் கலங்கி இரத்த ஆறாகப் பாய்ந்தது.

"ஆகையால் முனிவர்களே வேதத்தில் விலக்கப்பட்டதும், சொல்லப்படாததும், சிவபெருமானுக்கு அவிப்பாகம் கொடாததுமாக யாகத்தை யாரும் செய்யக் கூடாது. செய்தால் அதற்கான புண்ணியபேறு கிடையாது. பெருந்தண்டனை தான் கிடைக்கும். செய்பவன் தீராத

பழியையும் பாவத்தையும் அனுபவிப்பான் ஈஸ்வர பக்தியில்லாதவன் செய்யும் தானம், தவம், கோமம் ஆகிய எதுவும் பயனளிக்காது" என்றார் வாயுதேவன்.

தேவர்களுக்கு அருள் செய்தல்

"முனிவர்களே, அங்கு தனது வீரவேசத்தால் அனைவரையும் கொடுமையாகத் தண்டித்த வீரபத்திரர், புத்திர கணங்களை நோக்கி, "இவர்கள் அனைவரையும் கைதுசெய்து விலங்கிடுங்கள்" என்றார். கணங்கள் அவர்களைக் கைது செய்து விலங்கிட்டுக் கொண்டிருந்தனர். அதைக் கவனித்த வீரபத்திரரின் தேர்ச் சாரதியாக இருந்த பிரமதேவர் வீரபத்திரரை வணங்கி, "சுவாமி, தேவர்கள் அறியாமையால் செய்த பிழைகளைத் தாங்கள் மன்னித்தருளல் வேண்டும்" என்று துதிக்க வீரபத்திரர் மனமிரங்கி அவர்களை விடுவித்தார்.

அப்போது சிவபெருமான் அங்கு வந்தார். அவர் மகிழ்வுடன் இருப்பதைக் கண்ட கமலாசனன், "சர்வேஸ்வரா, வீரபத்திரரால் கொல்லப்பட்ட அனைவரையும் உயிர்பெற்றெழும்பும்படி திருவருள் புரிய வேண்டும்" என்று இரந்து வேண்ட அதற்கு அவர் சம்மதித்து, "அப்படியே ஆகுக" என்றார்.

வீரபத்திரரால் கொல்லப்பட்ட அனைவரும் உயிர்த்தெழுந்தனர். அவர்கள் சிவபெருமானைப் போற்றித் துதித்து வாழ்த்தினர். அதன்பின் சிவபெருமான் அவர்களை வாழ்த்தினார். அவர்கள் வீரபத்திரரை வணங்கியபின் விடைபெற்றனர். உமாதேவி வீரபத்திரரையும் காளிதேவியையும் அணைத்துப் பல வரங்களைக் கொடுத்தார். சிவபெருமான் தான் தங்கியிருந்த ரைபிய முனிவரின் ஆச்சிரமத்திற்குச் சென்று அவருக்கு அனுக்கிரகம் செய்துவிட்டு மறைந்தார்.

தேவி கௌர நிறம் பெற்றது

"முனிவர்களே, மந்திரமலை, சிபெருமானையும் பார்வதிதேவியையும், அவர்களது பிள்ளைகளோடும், கணங்களோடும் தன்னுடன் வசிக்க வேண்டும் என்று நெடுங்காலம் தவமிருந்தமையால் அவர்கள் அனைவரும் மந்திரமலையில் வந்து குடியேறி மந்திரமலையை மகிழ்வித்தனர்.

அந்தவேளையில் சும்பன், நிசம்பன் என்ற அசுரர் இருவர் பஞ்சாக்கிணியின் நடுவேயிருந்து எதையும் உண்ணாது நெடுங்காலம் பிரமதேவரை நோக்கித் தவம் செய்தனர். அவர்களது தவத்தால் மகிழ்ந்த பிரமதேவர் மகிழ்ந்து வரமளிப்பதற்காக அவர்கள் முன் வந்த போது அவர்கள் பிரமதேவரைப் பலவாறு துதித்து அட்டாங்கமாக விழுந்து வணங்கி,

“பிரமதேவரே நாங்கள் இருவரும் இறவாதிருக்க வேண்டும் அப்படியான வரத்தைத் தந்தருள முடியாவிட்டால் உமாதேவியாரின் தேகத்தில் இருந்து ஒரு கன்னிகை தோன்றி எம்மை அழிக்க வேண்டும்” என்று கேட்டனர். பிரமதேவர் அவர்கள் கேட்ட வரத்தைக் கொடுத்துவிட்டு மறைந்தார். வரம் பெற்ற சும்பனும் நிசம்பதும் தேவலோகம் சென்று அதைக் கைப்பற்றி இந்திரனையும் ஏனைய தேவர்களையும் அடிமையாக்கினர்.

பிரமதேவர் தான் கொடுத்த வரத்தின் தன்மையால் தேவர்களும், மனிதர்களும் படும் துயரத்தைக் கண்டு பொறுக்க முடியாது சிவபெருமானிடம் சென்று அவரை வணங்கிய பின்பு சொன்னார், “மகாதேவனே, நான் கொடுத்த வரத்தின் மகிமையால் சும்பனும், நிசம்பதும் தேவர்களையும், மனிதர்களையும் கொடுமைப்படுத்துகிறனர். அவர்களை அழிப்பதானால் உமையம்மையின் தேகத்தில் இருந்து ஒரு கன்னிகை தோன்ற வேண்டும்” என்றார். பிரமதேவர் கூறிவிட்டுச் சென்ற பின் சிவபெருமான் உமாதேவியாரைப் பார்த்து, “ஏ காளி தேவியே கரு நிறமானவளே உடன் வருக” என்றதும் உமாதேவியார் கருமை நிறம் கொண்ட கன்னியாக மாறிச் சிவபெருமானை வலம் வந்து சொன்னாள், “இவ்வளவு காலமும் நான் அழகுடையவள் என்ற நீங்கள் இப்போது கருநிறமுடையவள் என்று இகழ்கிறீர்கள் தங்களுக்கு என்மீது வெறுப்பேற்பட்டதால் தான் இவ்வாறு அழைத்தீர்கள். அதனால் நான் தவம் செய்து பொன்நிறமாக மாறிய பின்பு தான் உங்களது மனைவியாவேன்” என்று அழுதாள்.

“உமையே, வெறுப்புக் காரணமாக உன்னை அவ்வாறு அழைக்கவில்லை. விளையாட்டாகவே அழைத்தேன். அதனால் நீ பயப்படத்தேவையில்லை. தவமும் செய்யத் தேவையில்லை” என்று கூறி உமாதேவியை அணைத்தார்.

“சுவாமி, நான் பொன்நிறமான தேகத்தை அடைய விரும்புகிறேன்” என்று கூறிச் சிவபெருமானை வணங்கி வலம் வந்து, ஆசி பெற்று இமயமலைக்குச் சென்று அங்குள்ள ஓர் ஏரிக்கரையில் தவம் செய்தாள். அவள் தவம் செய்த இடத்திற்கு அருகில் ஒரு பெரிய வேங்கைப் புலி நடக்கக்கூடச் சக்தியற்றுத் தரையில் படுத்திருந்தது அதை உமாதேவி பார்த்ததும் அந்தப் புலியின் ஆவணம் முதலிய மலங்கள் நீங்கிப் பேருணர்வுபெற்று பண்டைய ஞானத்தால் இவள் பரமேஸ்வரி என்று தெரிந்து கொண்டு, “தேவி இங்கு வந்தது எனது பாக்கியம்” என்று மகிழ்ந்தது.

“முனிவர்களே, தேவி இமயமலைக்குச் சென்றபின்பு சும்பனும், நிசம்பனும் தேவர்களை மிகக் கொடுமையாகத் தண்டித்தனர். அதனால் மிகத் துயரமடைந்த தேவர்கள் மீண்டும் பிரமதேவரிடம் முறையிட்டப் பிரமதேவர் அவர்களை அழைத்துக் கொண்டு இமயமலையில் உமாதேவியார் தவம் செய்யுமிடத்திற்கு வந்தார். பிரமதேவரும் தேவர்களும் உமாதேவியாரை வணங்கி, “தாயே, இத்தகைய கடுமையான தவத்தை எதற்காகச் செய்கிறீர்கள்?” என்று பிரமதேவர் கேட்டபோது உமாதேவியார், “பிரமதேவரே, எனது கரிய நிறத்தின் மீது எனக்கு

வெறுப்பேற்பட்டதால் நான் பொன்நிறத்தை அடைய வேண்டும் என்று தவம் செய்கிறேன்" என்றார்.

பிரமதேவன் உமாதேவியைப் பணிந்து, "தாயே, இதற்காகவா தவம் செய்கிறீர்கள் தாங்கள் தங்கள் சரீரத்தில் இருந்து நீங்கிப் பொன் உருவை அடைந்து முன்பிருந்த உருவால் ஒரு கன்னியைப் படைத்து, தேவர்களைத் துன்புறுத்தும் சும்ப நிசுப்பரை அழித்தல் வேண்டும்" என்று கூற, உமாதேவி தனது கரிய உருவை விடுத்துப் பொன்மயமான உருவை எடுத்தாள். உமாதேவி நீக்கிய கரிய உருவம் எட்டுக்கரங்களையும், பாசம், அங்குசம், தண்டம், சூலம், வாள், வேல், வச்சிராயுதம் முதலிய ஆயுதங்களையும் ஏந்தித் துர்க்கையாகி, உமாதேவியை பணிந்து நின்றது" துர்க்கையே நீ பிரமனுடைய கட்டளையை ஏற்று அசுரர்களை வதஞ் செய்வாயாக" என்றாள். அப்போது பிரமன் ஒரு சிங்கத்தை சிருட்டித்து, துர்க்கைக்கு வாகனமாகக் கொடுத்து, "தேவர்களுக்குத் துன்பஞ் செய்யும் சும்ப நிசம்பர்களை அழிப்பாயாக" என்றார். உடனே துர்க்கை சிங்கத்தில் ஏறி அமர்ந்து விந்திய மலையை அடைந்து அசுரர்களைக் கடும்போர் செய்து அழித்தாள்".

கௌரி மந்திரமலையை அடைதல்

"முனிவர்களே, உமாதேவியார் பிரமனை நோக்கி, "பிரமதேவரே, இப்புலி நான் தவம் செய்ய வந்த நாளில் இருந்து என்னுடனேயே இருந்து வருகிறது. அது பெரும் நோயுற்றிருந்ததால் அதன் நோயை நீக்கி விட்டேன்" என்று கூறினாள்.

பிரமன் உமாதேவியை வணங்கி "அன்னையே, இது உண்மையான புலியல்ல ஓர் அசுரன் புலியாக மாறி வந்துள்ளான். இவனால் பெரும் தீங்கு உண்டாகும்" என்றார்.

"பிரமதேவரே, அசுரர்களும் உமது படைப்பால் வந்தவர்கள் தானே. எதிரியானாலும் துன்பப்படும்போது அதை நீக்குவது எமது கடன். எனக்கு யாவும் தெரியும். அசுரர்கள் பணிவது தாக்குவதற்காக என்றும் தெரியும்" என்றாள்.

"தாயே, தங்களின் எண்ணத்தை அறியாது கூறியது எனது தவறாகும். அதனால் தாயே இப்புலிக்கு கடையேறும் வழியைக் காட்டியருள்க" என்றார். பின் உமாதேவியிடம் விடைபெற்றுத் தேவர்களையும் அழைத்துக் கொண்டு தேவலோகம் சென்றார். பின் உமாதேவி புலியையும் அழைத்துக் கொண்டு மந்திரமலையை அடைந்தார்.

சோம நந்தியின் சரிதம்

“முனிவர்களே, தேவிகௌரி மந்திரமலையை அடைந்ததும் சிவபெருமான் அவளை மகிழ்வுடன் வரவேற்றார். நந்திதேவர் முதற்கொண்டு சகல கணங்களும் ஆடிப்பாடி மங்கள வாத்தியங்களை இசைத்து கௌரியை வரவேற்றனர். இவ்வாறு தேவர்களும், கணங்களும் ஆடிப்பாடி மகிழ்ந்து வரவேற்கத் தேவி கௌரி சிவச் சந்நதிக்குள்ச் சென்று சிவனை வணங்கினாள்.

“தேவிகௌரி, இப்போது தான் உனது கோபம் தீர்த்ததா? கணவனான நான் விளையாட்டாகக் கூடப் பேசக் கூடாதா, நாம் மாறுபட்டால் உலகம் அக்கினிமயமாகிவிடும். எனது உருவம் அக்கினி. உனது உருவம் சந்திரன். அவற்றுள் நீ சொல்மயமானவள். நான் பொருள்மயமானவன். நீ வித்தை. நான் அவ்வித்தையை அடையும் ஞானம். நீதான் எனது ஆணை. அதனால் நீ ஆணையைக் கடந்தால் நான் ஈஸ்வரனாக முடியாது. தேவர்களின் துயரங்களை நீக்குவதற்காகவே கரியவளே காளி என்று அழைத்தேன். அதனால் உனக்குக் கோபம் உண்டானது. அது தேவர்களுக்கு நன்மையாக முடிந்தது” என்றார்.

“எம்பெருமானே, நான் தவம் செய்து கொண்டிருந்த போது இந்தப்புலி எனக்குக் காவலாக இருந்தது. அதனால் அதை இங்கு அழைத்து வந்தேன். அதனால் இதை நந்தியுடன் சேர்ந்து வாசலில் காவல் செய்ய அனுமதியுங்கள்” என்றாள்.

அதைக் கேட்டு மகிழ்ந்த சிவபெருமான் அதற்குச் சோமநந்தி என்று பெயரிட்டு நந்நிதேவருடன் சேர்ந்து காவல் செய்யும்படி பணித்தார் என்றார் வாயுதேவன்.

சிவ விஜயம்

“முனிவர்களே, சிவபெருமான் எந்தக் காலத்திலும் அனைவருக்கும் திருவருள் புரிந்து கொண்டிருப்பவன் அல்லன். முறை தவறி நடப்போரைத் தண்டிப்பவன். அவன் செய்த செயல்கள் சிலவற்றைச் சொல்கிறேன்” என்று வாயுதேவன் கூறினார்.

“முன்பு ஒரு காலத்தில் பிரமாவும் விஷ்ணுவும் போர் செய்து தங்களில் ஒருவரே பெரியவர் என்று கூறி உலகை அழிக்க முற்பட்டபோது சிவபெருமான் தோன்றிய போது பிரமனது நடுத்தலை சிவபெருமானைக் கேலி செய்தது. அதனால் கோபங்கொண்ட சிவபெருமான் கேலி செய்த பிரமனது நடுத்தலையைக் கிள்ளி எறிந்தார். அதன்பின் பிரமன் நான்முகனானான்

ஒரு காலத்தில் அசுரர்களின் தலைவனான இரணியகசிபு தேவர்களைத் துன்பப்படுத்திய போது திருமால் நரசிங்கமாக அவதாரம் எடுத்து அவனது வயிற்றைத் தனது நகங்களால் கிழித்துக் கொன்றார். அதன்பின் சினம் அடங்காத நரசிங்கம் அட்டகாசம் செய்யச் சிவபெருமான் சரபத் திருவுருவம் எடுத்து அந்தச் சிங்கத்தின் தோலை உரித்து ஆடையாக அணிந்தார். தக்கன், சிவபெருமான் தனது மகளின் கணவன் என்று நினைத்து அவரை மதியாது யாகம் செய்தமையால் யாகத்தை அழித்தார். பொன், வெள்ளி, இரும்பு ஆகியவற்றால் கோட்டைகள் கட்டிய தாரகனின் புதல்வர்கள் மூவர் அக்கோட்டைகளில் பறந்து சென்று மக்களையும், தேவர்களையும் துன்புறுத்த அவற்றை அழித்தார். தேவலோகத்தில் இருந்த சிவ பசுக்கள் ஓயாமல் பாலை ஒழுக்கிப் பயன்பெற நினைத்தபோது சிவபெருமான் அவற்றைப் பார்வையாலே எரித்தார்.

சலந்தரன் என்ற அசுரன் பிரமனையும் இந்திரனையும் வென்றபின் சிவபெருமானை வெல்வதற்கு வந்தபோது சிவபெருமான் ஒரு கிழப் பிராமண வடிவமெடுத்து அவனருகே வந்து நிலத்தில் தனது பெருவிரலால் ஒரு வளையத்தைக் கீறி இதைத்தூக்கி உனது தலைமீது வைத்தால் நீ பெரும் பலசாலி சிவனை வெல்லலாம் என்றார்.

"இது பெரிய வேலையா?" என்று கேட்டுச் சலந்திரன் அவ்வளையத்தைத் தூக்கி தோளில் போட அவ்வளயம் சக்கராயுதமாக மாறி அவனது தலையைத் துண்டித்தது. பின் மார்க்கண்டேயர் சிவபூசை செய்தபோது யமன் அவரைக் கவர வரச் சிவபெருமான் யமனை உதைத்துக் கொன்றார். இன்னொரு சமயம் விஷ்ணுவை ஆதிசேசனால் பிணைத்துக் கட்டித் தூர வீசினார். துர்க்காதேவி மூலம் சும்பர் நிசும்பரை அழிந்தார். முருகனைக் கொண்டு தாரகாசுரனை அழித்தார். அந்தகாசுரனின் மார்பில் சூலாயுதத்தால் குத்தி அவனைத் தோளின் மேல் தாங்கி அனேக காலம் வருத்தினார். கைலயங்கிரியைத் தூக்கிய இராவணனைத் தனது பெருவிரலால் நசித்தார். இவை சிலவாகும் மேலும் பல உள்ளன" என்றபோது முனிவர்கள், "வாயுதேவரே பெருமான் பக்தர்களுக்கு அருளிய வரலாற்றைக் கூறுங்கள்" என்றனர்.

சிவபெருமானின் அருளியல்

"முனிவர்களே, விறகில் எரியும் தீயைக் காணலாமே தவிர அந்த விறகில் உறைந்திருக்கும் அக்கினியைக் காண முடியாது. அதுபோல கருணா மூர்த்தியாகிய சிவபெருமான் ஒவ்வொருவரது பந்தங்களை அகற்றுவதற்காகத் தண்டனை கொடுத்து தனது கருணையை வெளிப்படுத்துவார். அவர் வினையை ஒழிப்பதற்காக வருத்திப் பின் அந்த வருத்தத்தை நீங்குவார். ஆனால் வினையை நீக்கும் ஈஸ்வரனுக்கு வினை இல்லை. அவர் சர்வவியாபியாக எல்லாவற்றிலும் விளங்குறார். அதனால் அவரை மண், கல், மரம், மணி முதலிய எல்லாப் பொருட்களிலும் பூசிக்கலாம். தத்தமக்கு இயன்ற பொருட்களால் அர்ச்சிக்கலாம். மலம் சம்பந்தப்பட்டவர்கள் மோட்சத்தை அடைய முடியாது. மலம்

ஆன்மாக்குரியதேயன்றிப் பரமசிவனுக்கு இல்லை. ஆன்மாவானது யாவருக்கும் சமமாக இருந்தாலும் சில பந்தம் உடையன. சில முத்தர்களும் சிலர் பரர்களுமாக இருக்கிறார்கள். சிலர் மூர்த்திகளாகின்றனர். இன்னும் சிலர் சிவசொரூபிகளாய் இருப்பார்கள். மகேஸ்வரர்களாக இருப்பார்கள். சிலர் உருத்திரர்களாக இருப்பார்கள். சிவ சந்நிதியில் இருப்பவர்களின் ஆன்மஸ்வரூபம் கீழேயும், அந்தராத்மஸ்வரூபம் இடையிலும் பரமாத்தஸ்வரூபம் மேலேயும் விளங்கிப் பிரம, விஷ்ணு, ருத்திரர்கள் என்று சொல்லப்படுகின்றனர். இம் மூன்று பதவிகளிலும் அனேகர் வசிக்கின்றனர். சாந்தியாதீதப் பதவியில் சைவர்களும் சாந்திபதத்தில் மகேசர்களும் வத்தியாபதத்தில் விஷ்ணு பக்தர்களும் நிவர்த்தி பதத்தில் பிரமபக்தர்களும் வாழ்வர். இவையே தேவயோனி அட்டகமாகும். இதுவே உத்தமமாகும்.

ஒன்பதாவது மானிடயோனி அது மத்திமம் ஆகும். விலங்கு யோனிகள் ஐந்து வகை. சீவனின் மலத்தில் உள்ள ஏற்றத்தாழ்வால் இத்தகைய யோனிகள் உண்டாகின்றன. சம்சாரகாரணமாக மலங்கள் ஆமம், பக்குவம் என இருவகைப்படும். ஆலமத்தால் சீவர்களுக்குத் தாழ்ந்த யோனியும் பக்குவத்தால் உத்தம யோனியும் கிடைக்கும். மூவகையான மலசம்பந்தத்தால் சீவர்களுக்குச் சம்சாரம் என்ற நோய் உண்டாகும். இந்த நோயை ஒழிப்பதற்குச் சிவஞானமே மருந்தாகும். சிவபெருமானின் அருள் இல்லாமல் எதுவும் நடைபெறாது. அதனால் சர்வேசனான சிவபெருமானைத் துதித்து மலசம்பந்தமான சம்சாரபந்தத்தை அறுத்தல் வேண்டும்" என்றார் வாயுதேவன்.

பாசுபதயோகமும் அட்ட நாமமும்

முனிவர்கள் வாயுதேவனை நோக்கி, "சுவாமி, எந்தவிதமான சிறந்த அனுட்டானத்தினால் அபரோச ஞானம் உண்டாகி முத்தியைத் தருமோ அந்த ஞானம் அடைவதற்கு சாதகமான அனுட்டானம் எது" என்று கேட்டார்கள்.

"முனிவர்களே, சைவ தர்மங்களே சிறந்த அனுட்டானங்களாகும். அதனால் தான் ஞாமுண்டாகி முத்தியைத் தரும் சிவபெருமானைக் காணமுடியும். சைவ தர்மம் கிரியை, தவம், ஜபம், தியானம், ஞானம் என ஐந்து வகைப்படும். ஞானங்களை ஏற்படுத்தும் சைவ தர்மங்களைப் பரம் என்றும் அபரம் என்றும் வேதங்கள் கூறுகின்றன. பரதர்மத்தை அனுட்டிப்பதற்கு உரியோர் அனைவரும் சாதாரணமாக அபரதர்மத்தை அனுட்டிக்கலாம். அந்தந்த யுகங்களில் ஆன்மாக்கள் உய்வடையப் பரமசிவனே ஆசாரியனாக இருந்து செயற்படுகிறார். ஆகமங்களை ருரு, ததீசி, அகத்தியர், உபன்யு என்ற நான்கு முனிவர்களே உலகில் பிரபலப்படுத்தினர். அந்த ஆகமங்களில் பரதர்மமானது சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு வகையாகப் பிரித்துரைக்கப்பட்டுள்ளது. புச பத யோகமானது சிவபெருமானைத் தரிசிக்கச் செய்யும் வல்லமை மிக்கது. அதனால் பசுபத யோகமே மிகச் சிறந்த அனுட்டானமாகும். அதுவே பரதர்மமும் ஆகும். அதனால் மாயை விலகும். அதனால்

சீவன் முத்தராகலாம். இருபத்து நான்காவது தத்துவத்திற்கும் பரமாக உள்ளவர் புரிசன். எவர் வேத ஆரம்ப காலத்தில் ஓம் என்ற பிரணவ ரூபமாகச் சொல்லப்படுகிறாரோ, அவரே பிரகிருதியின் லீனமாய் அதை அனுபவிப்பவராக இருந்து பிரகிருதி புரிசர்களைத் தம் சுவாதீனம் செய்து கொண்டதால் அவர் மகேசன் எனப்படுகிறார். அல்லது அநர்தியான மாயையே பிரகிருதி, அந்த மாயையை ஒழித்து அநந்தராக இருப்பவர் மகேசன். அவர் பக்தர்களின் துன்பத்தை அழித்து இன்பங் கொடுப்பதால் உருத்திரன் எனப்படுகிறார்.

சிவதத்துவம் முதல் பூமி வரையில் எல்லா இடங்களிலும் வியாபித்திருப்பதால் விஷ்ணு எனப்படுவார். உலகத்திற்கு பிதாவாகையால் பிதாமகன் எனப்படுகிறார். நோய் உள்ளவர்களைப் பரிசோதித்து மருந்துகள் கொடுத்துச் சுகப்படுத்துவதால் அவர் சமுசார வைத்தியன் எனப்படுகிறார். ஆன்மாவின் உண்மையான ரூபத்தைப் புரிந்து கொள்வதால் அவர் சர்வக்ஞன் எனப்படுகிறார். தன்னைவிட மேலான பொருள் இல்லாமையால் அவர் பரமாத்மா எனப்படுகிறார். இதை உணர்ந்தவர்கள் சகல இன்பங்களையும் பெறுவர். பசுபத யோகத்தைக் கடைப்பிடிப்பவர்களுக்குச் சிறந்த பசுபத ஞானம் உண்டாகும். அதனால் முத்திகைகூடும்" என்றார் வாயுதேவன்.

பாசுபத விரதம்

"முனிவர்களே, எல்லாப் பாவங்களையும் ஒழிக்கத்தக்கது பாசுபத விரதம். அது மிகவும் இரகசியமானது. சித்திரை மாதம் பூரணை நாளில் சிவத்தலத்தில் அனுட்டிக்க வேண்டும். திரயோதசியில் நிராடி அனுட்டானங்களை முடித்துவிட்டு ஆசாரியாரை அடைந்து அவரைப் பூசித்து வெள்ளை ஆடை தரித்து திருநீறும் சந்தனமும் இட்டு மாலை அணிந்து கிழக்கு அல்லது வடக்கு முகமாகத் தர்பாசனத்தில் இருந்து தர்ப்பையால் பவித்திரம் அணிந்து, மும்முறை பிராணாமம் செய்து சிவபெருமானையும், பார்வதிதேவியையும் தியானஞ் செய்து இந்தப் பெருமைமிக்க பாசுபதவிரதத்தை அனுட்டிக்கிறேன் என்று நினைத்து தீட்சை பெற்று ஆயுள் உள்ளவரை இவ்விரதத்தை அனுட்டிக்க வேண்டும்.

அதைச் செய்ய இயலாதோர் பன்னிரண்டு ஆண்டுகளாவது அல்லது மூன்று ஆண்டுகள், ஓராண்டு அல்லது ஆறு மாதங்கள், ஒருமாதமாவது இல்லாவிட்டால் ஒரு நாளாவது அனுட்டிக்க வேண்டும். தீமூட்டி நெய்யை ஓமம் செய்து பஞ்சாட்சர மந்திரத்தை உச்சரித்தல் வேண்டும். அதன்பின் இரவு முழுவதும் விழித்திருத்தல் வேண்டும். மறுநாள் காலைக்கடன்களை முடித்து அன்று முழுவதும் உபவாசம் இருந்து மறுநாள் பூரணையில் தனது கடமைகளை முடித்து அக்கினியை அணைத்து நீராடிக் காவிஉடை அணிந்து திருநீற்றைத் திரிபுண்டரமாகத் தரித்து மனதில் சிவனை நினைத்துச் சிவயோகத்தைச் செய்தல் வேண்டும்.

இவ்வாறு நாள் ஒன்றுக்கு மும்முறை பாசுபத விரதம் செய்து ஐந்து திருமுகங்களை உடைய பரமேஸ்வரனைத் தியானித்து பஞ்ச கவ்வியங்களால் அபிசேகம் செய்து வில்வம் செந்தாமரை போன்ற மலர்களைச் சாற்றி அறுகைச் சமர்ப்பித்து அன்னத்தை நிவேதித்து ஜெய ஜெய என்று பல முறை கூறியவனது பாவங்கள் நீங்கும்.

"முனிவர்களே, வில்வம், தாமரை மலர்கள் ஆயிரத்திற்குக் குறையாது கொண்டுவந்து அர்ச்சித்தல் வேண்டும். பசுப் பாலைப் பருகி பழம் முதலியவற்றை உண்ணலாம். இல்லாவிட்டால் பிச்சை எடுத்து உண்ணலாம். அன்று இரவு தரை அல்லது மரவுரியில் படுத்து உறங்க வேண்டும். திருவாதிரை, பூரணை அமாவாசை, அட்டமி, சதுர்த்தசி இத்திதிகளில் உபவாசம் இருத்தல் வேண்டும். அப்போது சண்டாளர், பதிதர்கள், ஆசூதை உடையவர்களைக் காணக்கூடாது. இவ்விரதத்தை அனுட்டிப்போர் குருவிடம் அதை அனுட்டிக்கும் முறைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும்" என்றார் வாயுதேவன்.

உபன்னியு முனிவர் பெற்றபேறு

"சுவாமி, உபன்யு முனிவர் எவ்வாறு சிவாகமங்களைக் கற்று, அவற்றின் பயனையும், திருநீற்றின் மகிமையையும் உணர்ந்து, பாசுபத விரதத்தை எப்படிப் பெற்றார் என்று கூறுங்கள்" என்று முனிவர்கள் வாயுதேவனைக் கேட்டனர்.

"முனிவர்களே, உபன்யு முனிவர் ஒரு ஞானி. ஆகாயத்தில் சஞ்சரித்த அவர் வியாக்தியபாத முனிவர் செய்த தவப் பயனாலும் சிவனின் அருளாலும் வியாக்கியபாத முனிவருக்கு மகனாகப் பிறந்தார். அவர் பிறந்த சில நாட்களின் பின் அவர் வசிட்ட முனிவரின் ஆச்சிரமத்திற்கு வந்து காமதேனுவில் பாலைப்பருகி வளர்ந்து வந்தார். ஒரு நாள் பால் கிடைக்காததால் உபன்யு சிவபெருமானை நினைத்து அழத் தாயார் "மகனே, பஞ்சாச்சர மந்திரத்தை ஜெபிப்பாயாக, இது விரஜாகோமத்தால் செய்த திருநீறு, இது உனது தந்தையாரால் உனக்குக் கொடுக்கப்பட்டது. இதை அணிந்தால் உனது வினைகள் யாவும் ஒழியும்" என்று கூறித் திருநீற்றைக் கொடுக்க அவர் அதை அணிந்து கொண்டு சிவலிங்கப் பெருமானை மலர்களால் அர்ச்சித்து வந்தார். அப்போது மரீசி முனிவரின் சாபத்தால் பேய் உருவம் பெற்ற சில முனிபுத்திரர்கள் அங்கு வந்து குழப்பம் செய்தபோது, உபன்யு முனிவர் பஞ்சாட்சர மந்திரத்தை உச்சரிக்க அந்தப் பேயுருவம் பெற்ற முனி புத்திரர்கள் சாபம் நீங்கப் பெற்றனர். அப்போது சிவபெருமான் இந்திரனின் உருவத்தை எடுத்து உபன்னியு முனிவரின் அருகே வந்து சிவபெருமானை நிந்தித்தார்.

அதைக் கேட்ட உபன்னியு முனிவர் பெருங்கோபங் கொண்டு அகோராய்திர மந்திரத்தை உச்சரித்துத் தனது கையில் திருநீற்றை எடுத்து, "இவனைக் கொல்" என்று எறிந்தார். அதைச் சிவபெருமானுக்கு அருகில் நின்ற நந்திதேவர் தடுத்தார். அதனால் மனம்

வருந்திய உபன்யு முனிவர், "இனி எனது உயிரை விடுவேன்" என்று தீர்மானித்து மூலாக்கினியை எழுப்பச் சிவபெருமான் அதை அணைத்து இடபவாகனத்தில் உமாதேவியாரோடு தோன்றினார். அதைக்கண்டு பரவசமான உபன்யு முனிவர் அவர்களை வணங்கினார். அப்போது அவரைத் தழுவி உச்சி மோந்த சிவபெருமான், "தேவி இவன் உனது மகன்" என்றார்.

உமாதேவி மகிழ்ந்து தனது கரத்தால் அவரது தலையைத் தடவி, "இறவாத பதவியை அடைவாயாக" என்று கூறித் திருப்பாற்கடலை அவருக்கக் கொடுத்தாள். சிவபெருமான் அவருக்குப் பாசுபத ஞானமும் பாசுபத விரதமும் பாசுபத யோகமும் அருளினார். அத்துடன் ஆகமங்கள், சம்கிதைகள், புராணங்கள் முதலியவற்றை இயற்றும் ஆற்றலையும் கொடுத்தார்" என்று வாயுதேவன் கூறினார்.

வாயு சம்கிதை

(உத்தரபாகம்)

கண்ணன் சிவதீட்சை பெற்றது

முனிவர்கள் வாயு தேவனைப் பணிந்து, "சுவாமி, உபன்யு முனிவரிடம் ஸ்ரீ கிருஷ்ணன் ஞானதீட்சை பெற்ற வரலாற்றைக் கூறுங்கள்" என்று கேட்டனர்.

"முனிவர்களே, கிருஷ்ணர், சிவஞானம் பெறவும் ஒரு சற்புத்திரனைப் பெறவும் விரும்பி உபன்யு முனிவரிடம் வந்து அவரை வணங்கினார். அப்போது உபன்யு முனிவர் திருநீற்றை எடுத்து அவரின் உடலில் பூசி, பாசுபத தீட்சை செய்து பன்னிரண்டு மாதகாலம் பாசுபத விரதத்தை அனுட்டிக்கச் செய்து சிவஞானத்தை உபதேசித்தார். அதன்பின் ஸ்ரீகிருஷ்ணன் சிவபெருமானை நினைத்துத் தவம் செய்தார். அதனால் மகிழ்ந்த சிவபெருமான் உமாதேவியாருடன் ஸ்ரீகிருஷ்ணரின் முன் தோன்றினார். அவரைக் கண்ட கிருஷ்ணர் அவரை வணங்கினார், "உனக்கு என்ன வரம் வேண்டும்" என்று சிவபெருமான் கேட்டார் அதற்குக் கிருஷ்ணன் எனக்கு வல்லமைமிக்க ஒரு மைந்தன் வேண்டும் என்று கேட்டார். அதற்குச் சிவபெருமான், "அவ்வறே ஆகுக" என்று அருளி மறைந்தார்.

வரத்தைப் பெற்ற கிருஷ்ணர் சாம்பவதி என்னும் மனைவியோடு கூடியிருந்து சாம்பன் என்ற புத்திரனைப் பெற்றார்.

சிவனே பசுபதி

முனிவர்கள் வாயுதேவனை நோக்கி, "சிவன் எங்ஙனம் பசுபதியானான் என்பதை எமக்குக் கூறவேண்டும்" என்றனர்.

முனிவர்களே, சிவபெருமான் முன்பு மந்திரகிரியில் உமாதேவிக்கு உபதேசித்த ஞானமே பாசுபத ஞானமாகும். அந்த ஞானத்தைக் கிருஷ்ண பகவானுக்கு உபதேசித்தவாறு நான் உங்களுக்குச் சொல்கிறேன். உபன்யு முனிவரிடம் சிவபெருமானையும் உமாதேவியாரையும் தியானித்துவிட்டுச் சொல்லத் தொடங்கினார்.

"கிருஷ்ணர், பிரமன் முதல் தாவரம் ஈறாகவுள்ள அணைத்தும் பசுக்களாகும். அவற்றிற்குத் தலைவனாக இருப்பதால் அவருக்குப் பசுபதி என்ற பெயர் உண்டானது. வேதங்கள் சிவபெருமானைப் பசுபதி என்று கூறுகின்றன. மயா மலங்களாகிய பாசத்தால் பசுக்களைப் பதியான சிவபெருமான் கட்டுகிறான். மாயாபோக்தர்கள் சிவபெருமானை உபாசித்தால், அவன் மலக்கட்டை அகற்றுவான் இவை சீவர்களைப் பந்தித்துள்ளன. பசுக்களை மகேஸ்வரன் பாசத்தால் கட்டி செய்யவேண்டியவற்றைச் செய்விக்கிறான். மகாதேவனின் கட்டளைப்படி பிரகிருதியும் புரிசனும் கூடி புத்தியை உண்டாக்கும். புத்தி அகங்காரத்தை உண்டாக்கும். அகங்காரம் மனத்தையும் ஞானேந்திரியத்தையும் கர்மேந்திரங்களையும் பஞ்சதன்மாத்திரைகளையும் படைக்கும். அணுபஞ்ச பூதங்களை உண்டாக்கும். பஞ்சபூதங்கள் பிரமன் முதல் எல்லா உயிர்களுக்கும் தேகத்தை உண்டாக்கும்.

சிவபெருமானது ஆணையை யாரும் மீறி முடியாது. "அவர் பஞ்ச பூதங்களையும் தொழிற்படுத்தி உலகை இயக்குகிறார். அவற்றைவிட ஒவ்வொரு தொழில்களுக்கும் ஒவ்வொரு தேவர்களை நியமித்துப் பின் அதைக் கண்காணித்து அவற்றில் தவறுகள் எதுவும் நடைபெறாது காத்து வருகிறார்".

யாவும் சிவன் செயல்

உபமன்யு முனிவர் கிருஷ்ணனுக்குச் சொன்னார், "கிருஷ்ணா வேதத்தில் சிவபெருமானைப் பற்றி ஒரு கதை இருக்கிறது அதைச் சொல்கிறேன் கேள், "முன்பு இந்திரன் முதலிய தேவர்கள் அசுரர்களோடு போர் செய்து வென்றனர் பின் ஒருவரோடு ஒருவர் நான்வென்றேன் நான்வென்றேன் எனக் சண்டையிட்டனர்.

அப்போது சிவபெருமான் ஒரு யச வடிவம் எடுத்து, "தேவர்களே, வீணாகச் சண்டை செய்யாதீர்கள். நான் ஒரு துரும்பை நிலத்தில் வைக்கிறேன். அதை அசைப்பவன் தான்

வென்றவனாவான்'' என்று சொல்ல, இந்திரன் திகைத்து அத்துரும்மை எடுக்க முயற்சித்தான் முடியவில்லை. அதனால் தனது வஜ்ராயுதத்தை எடுத்து அதனால் தூக்க முயன்றபோது அவ் ஆயுதம் மழுங்கியது. அதன்பின் அக்கினிதேவனும் வாயுதேவனும் வருணனும் முயன்று தோல்வியடைந்தனர். அதனால் வியப்புற்ற இந்திரன் யசரூபத்தில் இருந்த சிவபெருமானைப் பார்த்து, ''நீ யார்?'' என்று கேட்டான். சிவபெருமான் பதில் சொல்லாது மறைந்தார். அப்போது உலகமாதாவாகிய உமாதேவி ஆகாயத்தில் தோன்றினாள். உமையைக் கண்ட தேவர்கள் மகிழ்ந்து வணங்கித் தமக்கு ஏற்பட்ட நிகழ்வைக் கூறி, ''வந்தவர் யார்'' என்பதைச் சொல்லும் படி வேண்டினர்.

தேவி மகிழ்ந்து, ''உங்களுள் எழுந்த விரோதத்தைப் போக்கி, உண்மைநிலையை விளக்குவதற்காகச் சிவபெருமானே வந்து துரும்பை வைத்தவர்'' என்று கூறி மறைந்தாள். என்று கூறிய உபமன்யு முனிவர் கண்ணனை நோக்கி மேலும் சொல்லத் தொடங்கினார்'' என்று வாயுதேவன் கூறினார்.

சிவசக்தி மகிமை

''கிருஷ்ணா, பார்வதி பரமேஸ்வரருடைய வீபூதியையும் உண்மை நிலையையும் சுருக்கமாக யாராலும் சொல்ல முடியாது. உமாதேவி சக்தி, சிவபெருமானே சக்தியுடையவன். சக்தி சக்திமானின் வீபூதியே இந்தப் பிரபஞ்சம். சந்திரிகை இல்லாமல் சந்திரனும், பிரபை இல்லாமல் சூரியனும் பிரகாசிக்காதது போல சிவபெருமானும் சக்தியில்லாமல் பிரகாசிக்கமாட்டான். ஆகையால் சிவனைப் போலச் சக்தியும் சக்தியைப் போலச் சிவனும் ஆகும். சக்தியில்லாமல் சிவன் இல்லை. சிவன் இல்லாமல் சக்தி இல்லை. இருவரும் சேர்ந்தே ஆன்மாக்களுக்கு அருள்கின்றனர். சக்தி படைப்புக் காலத்தில் ஜனித்தும் அதனிடமாகக் கிரியா சக்தி தோன்றும். அந்தக் கிரியா சக்தி மூலப் பிரகிருதியோடு சேர்ந்து நாதத்துவத்தை உண்டாக்கும். நாதத்துவத்தில் விந்து ஜனிக்கும். இவ்விதமாகச் சுத்தத்துவங்கள் ஐந்தும் தோன்றும். இச்சா சக்தி, ஞானா சக்தி, கிரியா சக்திகளால் சிவன் இவ்வுலகைச் செயற்படுத்துகிறான்.

''சக்தியே மனோன்மணி, சிவனே மகேஸ்வரன். சக்தியே மாயை, சிவனே புரிசன், சக்தியே பிரகிருதி, சிவனும் சக்தியுமே உருத்திரனும் உருத்திராணியுமாவர். அதிபவன் சிவன், அதிபவை சக்தி, உயிர் சிவன், உடல் சக்தி, ஆகாயம் சிவன், பூமி சக்தி, சமுத்திரம் சிவன் அதன் கரை சக்தி. இவ் வகையாகச் சிவனும் சக்தியும் ஒருவரை ஒருவர் பிரியாது இருப்பர். இவற்றைச் சொல்லி முடிக்க முடியாது. இவையே நான்கு வேதங்களிலும் கூறப்பட்டுள்ளன. இவை பரம இரகசியமானவை. இதைக் கேட்வர்களும், சொன்னவர்களும் தமது உறவினர்களுடன் நெடுங்காலம் வாழ்ந்து உத்தம புத்திரர்களைப் பெற்று, சிவபக்தியில்

சிறந்தவர்களாகித் தமது பாவங்களை ஒழித்து இன்பமாக வாழ்வர்'' என்று கூறிய உபமன்யு முனிவர் தொடர்ந்து சொன்னார்.

உமாமகேஸ்வர உபாசனையும் ஆகம உற்பத்தியும்

''கண்ணா, பரமசிவன் பராசக்தி, இச்சா சக்தி, ஞானசக்தி, கிரியா சக்தி, மாயா சக்தி முதலிய சக்திகளாகப் பிரிந்து தானே விளங்குவன். அந்தச் சக்தி சர்வவியாபியாகி அணுமயமாய் ஞானமாய் ஒப்பற்று விளங்கும். சிவன் சக்தியோடு இருப்பதால் சிவனைச் சக்திமான் என்பர்.

''சிவபெருமானையும் உமாதேவியையும் மனதில் இருத்தித் தியானம் செய்பவர்களே மோட்சமடைவர். அதுவும் சங்கரனின் அனுக்கிரகத்தாலேயே முத்திகைகூடும். தேகத்தால் பணிவதே பக்தியாகும். உடலால் பணிதலும் வாக்கால் துதித்தலும் மனதால் தியானித்தலும் கையால் பூசித்தலும் ஒவ்வொரு அவயங்களாலும் பணிவிடை செய்தலும் சிவ தர்மங்களாகும்''.

தேவர்களுக்கு சிவாகமம் அளித்தல்

''தவசியே, சிவபெருமான் உமாதேவியாருக்கு சிவாகமங்களைக் கூறினார். அவற்றை எனக்கும் கூற வேண்டும்'' என்று கிருஷ்ணர் கேட்டார்.

''கிருஷ்ணா, பூர்வத்தில் சிவபெருமான் அவ்யக்தத்திலிருந்து தோன்றிப் பிரமனைப் படைத்தான். அந்தப் பிரமதேவன் பின் உலகைப் படைத்தான். அதன் பின் ஆகாயம் தோன்றியது. ஆகாயத்தில் இருந்து பிற பூதங்களும் அவற்றிலிருந்து எல்லாப் பொருட்களும் தோன்றின. தேவர்கள் உருத்திர மந்திரத்தினால் சிவபெருமானைத் துதிக்க, சிவபெருமான் தோன்றி அவர்களது அறிவை மயக்க அவர்கள் சிவனை உணராமல், ''நீ யார்?'' என்று கேட்க அதற்குச் சிவன், ''தேவர்களே நானே இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்றும் காலத்திரயங்களிலும் உள்ளவன். என்னை உணர்ந்து முழு மனதுடன் என்னை வணங்கியோர் மோட்சம் அடைவர்'' என்று கூறி மறைந்தார்.

அதன்பின் வந்தவர் சிவபெருமான் என்று உணர்ந்து பாசுபத விரதத்தை மேற்கொண்டார்கள். அவர்களது வழிபாட்டால் மகிழ்ந்த சிவபெருமான் அவர்களுக்குத் தரிசனம் கொடுத்தார். பின் உமாதேவியாருக்கு உபதேசித்த ஆகமங்களை அவர்களுக்கும் கூறி மறைந்தார். அவ்வாறு சிவபெருமான் உபதேசித்த ஆகமங்களில் சில மறைந்து விட்டன. அதைக் கண்ட உமாதேவியார் சிவனைப் பணிந்து மறைந்த ஆகமங்களை மீட்க வேண்டும் என்று கூறச் சிவபெருமான் ஓர் இரவில் அவற்றை மீண்டும் கூறினார். அவ் ஆகமங்களைச்

சிவனின் அருளால் அகத்தியரும், யானும் குருவும் தசீசி முனிவரும் கற்றுணர்ந்து உலகிற்கு வெளிப்படுத்தினோம். இதை உணந்தவர்களே முத்தியடைவர்" என்று உபமன்யு முனிவர் கூறினார்.

சிவபெருமான் மகாதேவிக்கு அருளியது

ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி உபமன்யு முனிவரைப் பார்த்து, "மானிட உருவம் தாங்கி வந்த தெய்வமே, சிவனிடம் உமாதேவியார் கேட்ட கேள்விகளையும் அதற்குச் சிவபெருமான் கூறிய பதில்களையும் கூறுங்கள்" என்றார்.

"கிருஷ்ணா, முன்பு மந்தாரமலைச் சாரலில் சிவபெருமானும் உமாதேவியாரும் இருந்தார்கள். அப்போது உமாதேவியின் தோழியாகிய சுபாவதி அழகான மாலை ஒன்றைக் கட்டி வந்து உமாதேவியின் கூந்தலில் சூடினாள். அப்போது சிவபெருமான் உமாதேவியை அணைத்தெடுத்துத் தொடையின் மீது இருத்தி விட்டுக் கணங்களை அவ்விடத்திற்கு வரவழைத்தார். அச்சமயம் உமாதேவி, "நாதா, அறியாமை மிக்க மானிடர்களுக்கு எவ்வகையாக எதனால் கிருபை செய்கிறீர்கள்" என்று கேட்டாள்.

சமாதி, ஞானம் செய்பவர்களுக்கு யாம் சுவாதீனமல்வோம். பிறருக்குத் தீமை செய்யாது எம்மை அன்போடு வழிபடுபவர்களுக்கு நாம் சுவாதீணமாக இருப்போம். அவர்களது மனதில் மகிழ்வுடன் இருப்போம். எமது பக்தர்கள் நாம் கூறியவற்றைக் கடைப்பிடித்து வாழ்ந்து வந்தால் மும்மலங்களும் பாச பந்தங்களும் ஒழியப் பெற்றுத் தேவரின் உலகை அடைந்து பின் எம்மை வந்தடைவர். ஆசாரியனிடத்தில் தீட்சை பெற்றுச் சிவதர்மத்தை அனுசரித்து வாழ்ந்து வந்தால், எம்மை வந்தடைவர். சிவ தீட்சை செய்தபின்பே வர்ணாச்சிரதர்மங்களை முறைப்படி பின்பற்ற வேண்டும். கலியுகத்தில் இவ் ஏற்பாடுகள் நிலை தவறுவதால் நாமே யோகாசிரியனாகி மாணவர்களுடன் வந்து சிவதர்மங்களை நிலை நிறுத்துவோம். முத்தியைத்தரவல்ல உத்தம வழியைப் பின்பற்றாதவர்கள் சிவபக்தர்களாகமாட்டார்கள். அவர்கள் கண்கள் இருந்தும் குருடர்களைப் போன்றவராவர். சிவதர்மமானது ஞானம், கிரியை, சரியை, யோகம் என்ற நான்கு பாதங்களை உடையது. பதி, பசு, பாச இலக்கணங்களை உணர்வதே ஞானம். தவம், ஜெபம் சடத்துவங்களைச் சுத்தம் செய்வதே கிரியை. வர்ணாச்சிர தர்மத்தைக் கடைப்பிடிப்பதே சரியை. என்னால் கூறப்பட்டவாறு என்னிடம் மட்டும் பக்திகொண்டு இருப்பது நூறு அஸ்வமேத யாகங்களைச் செய்த பயனை விட உயர்ந்த பயனைத் தரும்.

இத்திரிய நிக்கிரகஞ் செய்த விரத்தனானவனுக்கு இந்த யோகம் கைகூடும். வைராக்கியத்தால் ஞானமும், ஞானத்தால் யோகமும் உண்டாக வேண்டும். அவ்வாறு உணர்ந்தவன் பெரும் பாவியானாலும் எல்லாப் பாவங்களில் இருந்தும் விடுவிக்கப்படுவான்.

பற்றுக்கள் சிறிதளவிருந்தாலும் ஞான யோகம் சித்திக்காது. ஞானம் உண்டானால் அதன்பின் ஞானயோக சித்தி உண்டாகும். அத்தகைய ஞானி எனது அருளால் கர்மபந்தங்களை ஒழிப்பான். கர்மம் தான் முத்திக்குத் தடையாக இருப்பது. அதனால் புண்ணியவான் தனது யோகத்தால் செய்யத்தகாத கர்மங்களை நீக்கி பற்றற்ற கருமங்களை மட்டுமே செய்கிறான். கர்மங்களை அறவே ஒழிக்க முடியாது. பார்வதி, என்னை முதலில் கர்மயோகத்தாலேயே பூசிக்க வேண்டும். அதனால் ஞானயோகத்தில் விருப்பேற்படும். பிறகு யோகத்தைப் பயிலல் வேண்டும். தனது மனதில் என்னைப் பொருத்தியோர் ஞானயோகிகளாகி உனது சாயுச்சியத்தை அடைவார்கள் என்னை ஆராதித்து விரத்தர்களாக இருப்போர் ஞான சரியாகிரியைகளில் சிறந்து விளங்குவர்.

பார்வதி எனது பூசையானது பாய்ய பூசை என்றும், ஆப்யந்தர பூசை என்றும் இருவகைப்படும் அவற்றுள் மனதில் செய்யும் ஆப்யந்திர பூசையே சிறந்தது, அது மனம் வாக்குக் காயங்களால் மூவகைப்படும். சிலர் அதை ஐவகைப்படும் என்பர் வேறு எதையும் எண்ணாது என்னை மட்டும் தியானிப்பதே தியானமாகும். என்னால் சொல்லப்பட்ட சிவாகமங்களை உணர்வதே ஞானம். பூசைகளைப் பக்தி பூர்வமாகச் செய்வதே சேவை. பக்தியில்லாத பூசை வஞ்சகத்தனமான பூசை. மனிதர் என்மீது கொள்ளும் அன்பை மட்டுமே நான் பெற்று மகிழ்வேன்.

பக்தியை மனம் வாக்குக் காயங்களால் எதையும் விரும்பாமல் செய்தால் நான் மனம் மகிழ்ந்து அருள்வேன். பக்திகொள்பவன் எக்காலத்திலும் என்மீது பக்தி கொள்ளாவிட்டால் அந்தப் பக்தி பயனில்லாத பக்தியாகி விடும். அதனால் என்மீது என்றும் பக்தி செலுத்துபவனையே நான் அனுக்கிரகம் சொய்வேன். அதன் பயன் மிகவும் உயர்ந்த இன்பத்தைக் கொடுக்கும்.

மலைமகளே என்னை மட்டும் பூசிப்பவர்களுக்கு எட்டு வகையான லட்சணங்கள் உள்ளன. என்னை முழுமையாக நம்பி பலாபயன்களை எதிர்பாராது என்னை விரும்புவோர் எனக்குப் பிரியமானவர்கள். அவர்களுக்கு இன்பத்தைக் கொடுப்பதைத் தவிர வேறு எதுவும் எனக்கில்லை.

சந்நியாசிகளும் வானப்பிரஸ்தர்களும் பகல் காலத்தில் மட்டும் பிச்சை எடுத்து உண்ண வேண்டும். இவர்கள் நிலத்தில் உறங்கி, இரவில் உணவு உண்ணக் கூடாது. பிரமச்சாரிகள் விரும்பின் இரவிலும் உண்ணலாம். அரசர்கள் வேத ஆகமங்கள் வகுத்த வழியிலிருந்து தவறாது மக்களைக் காத்தல் வேண்டும். வைசிகர் தர்மப்படி வியாபாரத்தைச் செய்தல் வேண்டும். சூத்திரர் மூவர்ணத்தினருக்கும் பணி செய்தல் வேண்டும். பெண்கள் தம் கணவருக்குப் பணிவிடை செய்தல் வேண்டும். அவர்களின் அனுமதியுடனேயே என்னை வணங்குதல் வேண்டும். விதவைகள் விரதம், தானம், தவம், பரிசுத்தம், நிலத்தில் உறங்கல், சாந்தி, மௌனம், என்னைப் பூசித்தல், துட்டருடன் கலவாமை, ஒருவேளை பகலில் உண்ணல்,

அட்டமி, சதுர்த்தசி, பூரணை, ஏகாதசி தினங்களில் விரதமிருந்து சிவத்தலத்தில் வசித்தல் வேண்டும்.

எனது பக்தர்களது இலட்சணங்கள், உடல் நடுங்கல், வியர்வை, கண்ணீர், கண்டத்தில் ஸ்வரம் போதித்தல், பரமானந்தம் முதலியனவாகும். இவையாவும் இருந்தால் அவன் உத்தமமானவன். இரண்டு குறைந்தால் மத்திமன், ஒன்று அல்லது இரண்டிருந்தால் அவன் அதமன் இம்மூவகையினரும் சாதாரண மனிதர்கள் அல்ல. அவர்கள் காஞ்சிரம் முதலியவற்றுடன் மனித உடல் எடுத்துத் தோன்றிய உருத்திரர்கள். அவர்களை மனிதர் என்று நினைப்பவன் பண்டிதன் அல்லன்.

கிருஷ்ணா, பரமேஸ்வரன் அருளிய ஞானமார்க்கத்தை சுருக்கமாகக் கூறினேன் ஞானம் என்பது குருவால் உபதேசிக்கப்பட்டு உணர்வது. ஞேயம் என்பது பசு, பதி, பாசம் என்பன. அநுஷ்டேயம் என்பது சிவலிங்க அர்ச்சனை முதலியன. முதலில் பக்தியுடன் பற்றில்லாத சிவபெருமானை நினைத்து பாஹ்ய பூசை செய்தல் வேண்டும். சிவபக்தி உண்டாவதே ஆப்யந்தர பூசையாகும். அது பாஹ்ய பூசையை விடச் சிறப்பானது. அதைச் செய்பவன் பாஹ்யகர்மம் செய்ய வேண்டியதில்லை. அவனுக்கு பஹிர் பூசையும் அந்தர் பூசையும் தேவையில்லை. அதனால் ஞானத்தால் ஞேயத்தைக் கண்டு சிவனிடம் மனதைச் செலுத்தினால் அவன் கர்மத்தால் அனுபவிக்க வேண்டியது எதுவும் இல்லை. சிவனிடம் மனதைச் செலுத்திய பாமர புரிசர்களுக்கு இம்மை மறுமை சுகம் உண்டாகும். பஞ்சாட்சர மந்திர உபாசனையாலே சித்தராக இருப்போர் வீபூதிக்காகச் சிவபெருமானை ஆராதித்து பொருந்தியிருக்கிறார்கள்" என்றார் உபமன்யு முனிவர்.

பஞ்சாட்சர மந்திர மகிமை

"மா முனிவரே, பஞ்சாச்சர மந்திரத்தின் மகத்துவத்தை அறிய விரும்புகிறேன். அதை எனக்கு உபதேசித்தருளல் வேண்டும்" என்று உபமன்யு முனிவரைக் கேட்டார் கிருஷ்ணர்.

"யாதவ குலத்திலகனே, பஞ்சாச்சர மந்திரத்தின் மகிமையைச் சொல்லி முடிக்க முடியாது. நீ கேட்டதால் அதைச் சுருக்கமாகச் சொல்கிறேன். பஞ்சாச்சர மந்திரம் பிரணவத்துடன் கூடி அடாச்சரமாக இருக்கிறது என்று வேதங்களும் சிவாகமங்களும் கூறுகின்றன. இது மந்திரங்களின் அரசனாகும் இதைச் சிவபக்தர்கள் இரவில் உச்சரித்தால் முத்தி கிடைக்கும் இது சிவசொரூபமான ஆதி மந்திரமாகும். இது அனேகச் சித்திகளைத் தரவல்லது. மங்களகரமானது இலகுவாக உச்சரிக்கக் கூடியது. எண்ணிறைந்த பொருள்களைத் தருவது. சர்வேசுவரனான சிவபெருமானை முழுமையாக உணர்ந்து கொள்ளக் கூடியது இம்மந்திரம். இம்மந்திரப் பொருள் பரமேஸ்வரனே ஆகும். அம் மந்திரம் தான் பரமேஸ்வரன்

அதுவே சிவஞானம். இதுவே பரமபத பஞ்சாச்சரவாக்கியம். மந்திரங்கள் பல உண்டு. அனால் சிவபெருமானால் சொல்லப்பட்ட இம் மந்திரத்திற்கு ஒப்பான மந்திரம் வேறு எதுவும் இல்லை. வேதம், வேதாங்கம் முழுவதும் இந்த ஒரு மந்திரத்தினுள் அடங்கியுள்ளது. இதை உச்சரிப்பவன் எல்லாச் சாத்திரங்களையும் கேட்டவனாகிறான். சிவாய என்ற மூன்று எழுத்துக்கள் எவனது நாவில் எப்போதும் இருக்குமோ அவனே உயிர் வாழ்பவனாகிறான். அவன் மூர்க்கனாகவோ, நீசனாகவோ இருந்தாலும் பஞ்சாச்சர மந்திரத்தை உச்சரிப்பவன் அதிலிருந்து விடுபடுவான் என்று சிவபெருமான் உமாதேவியாருக்குச் சொல்லியருளினார்.

அப்போது உமாதேவி கேட்டார், "சுவாமி, கலியுகம் பாவமுடையது அக்காலத்தில் மனிதர்கள் அஞ்ஞானமும் பாவமும் அடைந்து வர்ணாச்சிரமதர்மங்களை விட்டு, சர்வசாதிகளும் சங்கமமாகி யாவரும் விரத அனுட்டானங்களில் இருந்து விலகி குரு சீஷ்யக்கிரமம் இல்லாமையால், உங்களது பக்தர்கள் எப்படி முத்தியடைவர்" என்று கேட்க சிவபெருமான் கூறலானார். "பார்வதி, பஞ்சாச்சர மந்திரத்தை உச்சரித்து என்னை வணங்கும் கலியுக பக்தர்கள் முத்தியடைவார்கள். பாவங்கள் செய்த தீயவர்களையும் பஞ்சாச்சர மந்திரம் தூய்மைப்படுத்தி அவர்களது பாவங்களை நீக்கும்" என்றபோது உமாதேவியார் கேட்டார், "சுவாமி தீயவர்களான பதித்தவர்கள் எப்போதும் அயோக்கியர்கள் அல்லவா? அவன் எத்தகைய கர்மத்தைச் செய்தாலும் நரகத்திற்கே செல்வான். அப்படியிருக்கத் தீயவனான பதித்தன் பஞ்சாச்சரமந்திரத்தைச் செபிப்பதன் மூலம் எவ்வாறு முத்தனாவான்"

"தேவி, பதித்தன் தன்னைப் புனிதனாகக் கருதி வேதமந்திரங்களால் பூசிப்பானேயானால் அவன் நிட்சயமாக நரகத்தையே அடைவான். அதை விடுத்துப் பஞ்சாச்சர மந்திரத்தால் என்னைப் பூசித்தால் கட்டாயமாக மோட்சமடைவான். பஞ்சாச்சர மந்திரத்தால் ஒருமுறை என்னைப் பூசித்தாலும் எனது லோகத்தை வந்தடைவான்.

ஆகையால் தவம், யாகம், நியமம் முதலியன பஞ்சாச்சர மந்திரத்திற்கு ஈடாகாது. எவன் என்னைப் பஞ்சாச்சர மந்திரத்தால் பூசித்தாலும் அவன் எனது பக்தனாகிவிடுவான். குரு மூலமன்றித் தானே பஞ்சாச்சர மந்திரத்தை ஜெபித்தாலும் அவன் முத்தனாகிவிடுவான். ஆனால் பஞ்சாச்சர மந்திரத்தைக் குரு மூலமாகப் பெற்று உபாசிக்க வேண்டும். சுருக்கமாகச் சொன்னால் என்னுடைய பக்தர்கள் அனைவரும் இந்த மந்திர உபாசனைக்கு அதிகாரிகளாவர். அவர்களுள் குருவின் உபதேசத்தைப் பெற்றவன் உயர்ந்தவன்.

பிரளயத்தின்போது யாவும் என்னிடத்தில் ஒடுங்கும். அப்போது வேதங்கள், சாத்திரங்கள், வித்தைகள் யாவற்றையும் நான் பஞ்சாச்சர மந்திரத்தில் இருக்கும்படி செய்வேன். பிரளயத்தின் பின் நாராயணன் நீரின் மீது பள்ளிகொள்ளப் பிரமதேவன் அவனது நாபியில் இருந்து தோன்றி சிருஷ்டி செய்யும் ஆற்றலைப் பெற என்னிடம் வந்து, "மகாதேவா எனக்குப் படைப்புத்திறன் உண்டாக அருளல் வேண்டும்" என்று கேட்டான்.

நான் ஐந்து திருமுகங்களுடன் அவனுக்குக் காட்சி கொடுத்து எனது ஐந்து முகங்களில் இருந்து ஐந்து எழுத்துக்களை உரைக்க, அவன் தனது ஐந்து முகங்களால் அவ் ஐந்து எழுத்துக்களையும் கிரகித்துக் கொண்டு, நான் தான் பரமாத்மா என்றும் உணர்ந்து முனிவர்களுடன் மேருமலையில் உள்ள முஞ்சவான் என்ற இடத்தை அடைந்து ஆயிரம் தேவ வருடங்கள் பஞ்சாச்சர மந்திரத்தை ஜெபித்துத் தவம் செய்தனர். அவர்களது தவத்தால் மகிழ்ந்து நான் அவர்களுக்குக் காட்சி கொடுத்து பஞ்சாச்சர மந்திரத்தின் மகிமையை உபதேசித்த பின் அவர்கள் தேவ, அசுர, மனிதர்களைப் படைக்கத் தொடங்கினர்.

"தேவி, பரமவித்தையான இந்தப் பஞ்சாச்சர மந்திர ரூபத்தைச் சொல்கிறேன் கேள், "முதலில் நம என்ற பதத்தை உச்சரிக்க வேண்டும். பிறகு சிவாய என்னும் பதத்தை உச்சரிக்க வேண்டும். இவ் ஐந்து எழுத்துக்களே சங்கரமாகவுள்ள பீஜமாகும். இவ் ஐந்து எழுத்துக்களும் வித்து நாதங்களுடன் கூடி உச்சரிக்கப்படல் வேண்டும். இவ் ஐந்து எழுத்துக்களும் எனது ஐந்து முகங்களிலும் பொருந்தியிருக்கும். கிழக்கு முகத்தில் நகாரமும், தெற்கு முகத்தில் மகாரமும், மேற்கு முகத்தில் சிகாரமும், வடக்கு முகத்தில் வகாரமும் ஊத்துவத்தில் உள்ள ஈசான முகத்தில் யகாரமும் இருக்கும். இவற்றில் முதல் எழுத்தும் நான்காவது எழுத்தும் உதாத்தம். இரண்டாம் எழுத்தும் ஐந்தாம் எழுத்தும் ஸ்வரிதம். மூன்றாவது எழுத்து அநுதாத்தம் இந்த ஐந்து எழுத்துக்களும் மங்களமானவை. நகாரம் சிவன், மகாரம் சிகை, சிகாரம் சகவம், வகாரம் நேத்திரம், யகாரம் அஸ்திரம்".

பெண்ணே, இப் பஞ்சாச்சரத்தின் ஐந்தாவது எழுத்தாகிய யகாரத்தை பன்னிரண்டாவது ஸ்வரமாகிய ஐகாரத்துடன் சேர்த்து உச்சரித்தால் சிவா என்ற எனது மூலமந்திரம் வெளிப்படும். இந்த மந்திரத்தை ஒருவன் எவ்விடத்திலாவது எந்தக் காலத்திலாவது பக்தியோடு எம்மைப் பூசிப்பானாகில் முத்தியடைவான். எனது பக்தர்கள் முத்தியடைய வேண்டும் என்பதற்காகவே இம்மந்திரம் என்னால் ஆக்கப்பட்டது. குருவின் உதவி இல்லாமலும், கிரியாபூர்வம் இல்லாமலும், சிரத்தை இல்லாமலும், குரு தட்சணை கொடாமலும் ஜெபிக்கப்படும் மந்திரத்தால் பயன் இராது.

உத்தமமான குருவை அடைந்து பக்தியுடன் அவரைப் பூசித்து தனது சக்திக்கேற்பக் குரு தட்சணை கொடுத்து மந்திர சித்தி உண்டாக வேண்டும் என்று தனது உடல் பொருள் ஆவி அனைத்தையும் ஒப்படைத்துக் குருவின் மூலம் மந்திரத்தையும், ஞானத்தையும் பெற வேண்டும். மாணவனது நடத்தையால் குரு மகிழ்ந்து மந்திரத்தை உரிய முறைப்படி கற்பிப்பார். இவ்வாறு குருவினால் மந்திரத்தையும் ஆக்ஞையையும் அடைந்தவர்கள், நாள்தோறும் சங்கற்பம் செய்து, உயிருள்ளவரையில் தினமும் ஆயிரத்தெட்டு முறை மந்திர உச்சாடனம் செய்தால் செய்பவன் உத்தம கதியை அடைவான். மானசமான மந்திர உச்சாடனம் உத்தமமான பயனைக் கொடுக்கும் மெல்லப் பிறர் கேளாதபடி உச்சரித்தால் அது மத்திம பயனையே கொடுக்கும். உரத்து உச்சரித்தால் அது அதமம்

உத்தமத்திற்குரிய தெய்வம் உருத்திரன். மத்திமத்திற்கு விஷ்ணுவும், அதமத்திற்குப் பிரமனுவாமர்.

பார்வதி, ஜெபம் செய்யும் போது விரலால் கணக்கிடுதல் அவ்வளவு பயனையே தரும். விரல்ரேகையால் கணக்கிடல் எட்டுப்பங்கு அதிகப் பயனைத் தரும். பவளத்தால் கணித்தால் ஆயிரம் மடங்கும், ஸ்படிகத்தால் கணித்தால் அதில் பதினாயிரம் மடங்கும், முத்தால் கணித்தால் இலட்சம் மடங்கும், தாமரை மணியால் கணித்தால் பத்துலட்சம் மடங்கும், உருத்திராட்சம், தர்ப்பைப்புல்லால் கணித்தால் பயனின் அளவைச் சொல்லவே முடியாது. கதைத்துக் கொண்டும், புனிதமில்லாமலும் தும்மல், இருமல், கொட்டாவிவிடுதலும், புலையர், நாய் முதலிய அசுத்தங்களைப் பாராமலும் ஜெபம் செய்தல் வேண்டும். சண்டாளன், தீயவன், புணலயன் யாராக இருந்தாலும் தன்னைக் காக்கும்படி என்னைப் பிரார்த்தித்து பஞ்சாச்சர மந்திரத்தை ஜெபத்தால் என்னை அடைவான். இம்மந்திரத்தை இருந்தும், நின்றும், நடந்து கொண்டும் எவ்வேளையிலும் முறைப்படி ஜெபிப்பவன் நன்மையடைவான். மன அடக்கத்துடன் என்னை நினைத்துக் குருவால் உபதேசிக்கப்படாவிட்டாலும் தனது விருப்பப்படி ஜெபிப்பவன் எல்லாத் தோசங்களை உடையவனாக இருந்தாலும் என்னை நினைத்தானேயானால் அவனுக்குக் கட்டாயம் மந்திரத்தின் பயன் கிடைக்கும். அவ்வகையான பக்தனுக்கு யோகம் நட்சத்திரம் சுப நேரம் என்பன இல்லை.

தேவர்கள் அனைவரும் சுயாதீனமானவர்கள். நான் சுயாதீனமானவன் அல்ல. இம் மந்திரத்திற்குத் தோசம் எதுவும் இல்லை. சாதிப்பாகுபாடுகளும் இல்லை. அகையால் சண்டாளன் முதற்கொண்டு அனைவரும் ஜெபிக்கலாம்" என்று சிவபெருமான் பார்வதிதேவிக்குக் கூறியதாக உபமன்யு முனிவர் கிருஷ்ணனுக்குக் கூறினார்.

குருதீட்சை விதி

"கிருஷ்ணா, பாசபந்தங்களை ஒழித்து, உண்மையான ஞானத்தைக் கொடுக்க வல்லதும் சிவபெருமானால் சொல்லப்பட்டுமான சம்ஸ்காரத்தைச் சொல்கிறேன் கேள். சம்ஸ்காரமென்பது தீட்சை. தீ ஞானத்தைக் கொடுக்கும். பாசபந்தங்களை அழிப்பது தீட்சை. தீட்சை சாம்பவி, சாக்தி, மாந்திரி என மூவகைப்படும். ஆசிரியனது பார்வையால் பாசபந்தங்கள் ஒழிந்து ஞானத்தை உண்டாக்குவது சாம்பவி தீட்சையாகும். அதில் தீவிரம், தீவிரதரம் என இருவகை உண்டு. சிவனின் பாவத்தை நீக்குவது தீவிரம், குரு தனது யோக சக்தியால் சீடனின் உடலில் பிரவேசித்து தனது ஞானத்தால் அவனின் மோகத்தை அகற்றுவது சுகதீட்சை என்றும் ஞானவதி தீட்சை என்றும் பெயர்பெறும்.

குரு கிரியைகளால் செய்யும் தீட்சை மந்திர தீட்சையாகும். குரு ஞானத்தைலும் கிரியைகளாலும் சோதித்தே தீட்சை வழங்குவார். குருவே சிவன். சிவனே குரு குருவும்

சிவனும் வித்தியாஸ்வரூபத்தால் விளங்குவர். சிவன் குரு வித்தை ஆகிய மூவருக்கும் பூசை செய்வதால் சமானமான பயனே கிடைக்கும் ஆகையால் கீர்த்தியை விரும்புவோர் குருவின் கட்டளையை மனதாலும் குறை கூறுதலாகாது. குருவின் கட்டளைப்படி நடப்பவன் ஞான சம்பத்தை அடைவான்.

எதைச் செய்தாலும் குருவின் விருப்பப்படி செய்தல் வேண்டும். குரு தான் சிவன். குருவின் வீடே கோவில். அதனால் குருவின் முன் ஆசனத்தில் இருக்கக் கூடாது. குருவின் அருட்பார்வையால் சகல பாவங்களும் ஒழியும். குருவிடம் மனதால் கூடக் கோபங்கொள்ளக் கூடாது. கோபம் கொண்டால் செல்வம், ஆயுள், ஞானம், புண்ணியம் யாவும் முற்றாக அழியும். குருவைச் சிவனென நினைத்து ஒழுக்கமுடன் வாழ்பவனே உத்தமமான சீடன். குரு என்பவன் குணவானாகவும் பண்டிதனாகவும் பரமானந்தம் உள்ளவனாகவும் எவ்வேளையிலும் இருப்பான். அவன் முத்தியைக் கொடுப்பவன் சிவதத்துவத்தை உணர்ந்தவன்.

உத்தமமான குருவுக்குப் பிறவிகள் இல்லை. குரு தனது சீடர்களில் பிராமணனை ஓர் ஆண்டும், சத்திரியனை இரண்டு ஆண்டுகளும், வைசியனை மூன்று ஆண்டுகளும் பரிசீலித்து அவர்களில் உயர்ந்தவனை இழிதொழிலிலும், இழிந்தவனை உயர் தொழிலிலும் விட்டுப் பரீட்சித்துத் தெளிய வேண்டும். பல்வேறு விதமான வழிகளால் அவர்களைத் துன்புறுத்தியும் அன்பு கொண்டும் சிவபக்தியுள்ளவர்களைத் தெரிந்த பின்பே தீட்சை கொடுத்தல் வேண்டும்.

பெண்களுக்குத் தீட்சை பெறும் விடயத்தில் சுயேச்சையான அதிகாரம் இல்லை. அவர்கள் கணவனின் அனுமதி பெற்றே தீட்சை பெறல் வேண்டும். விதவைகளாயின் மூத்தோரின் அனுமதியுடனே தீட்சை பெறலாம். சூத்திரர், பதிதர் முதலியோர் சடத்துவ சக்தியடைந்தால் குருவின் பாத தீர்த்தத்தைக் கொடுத்தே தீட்சை அளித்தல் வேண்டும். குருவின் பார்வை, ஸ்பரிசம், உரையாடல் முதலியவற்றால் சீடனுக்கு ஞானம் உண்டாகும். அது மனதின் யோகத்தால் செய்யப்படும் தீட்சை. கிருஷ்ணா இனிச் சிவதீட்சையின் விதிகளைச் சொல்கிறேன்" என்றார் உபமன்யு முனிவர்.

சமய தீட்சை விதி

"கிருஷ்ணா, மங்களமான சுபவேளையில் கடற்கரை, ஆற்றங்கரை, பசுமந்தை உள்ள இடம், தேவாலயம், வீடு ஆகிய இடங்களில் ஒன்றில் குரு நிலத்தை பரீட்சித்து சாத்திர முறைப்படி மண்டபத்தை அமைக்க வேண்டும். ஈசான திசை அல்லது மேற்குத் திசையில் குண்டம் அமைத்து அதை அலங்கரிக்க வேண்டும். எளியவனாக இருந்தால் செம்மண், அரிசிமா, மலர் மாலை முதலியவற்றால் அலங்கரிக்கலாம். பின் சிவ கும்பத்தை அமைத்தல் வேண்டும். அக் கும்பம் சக்திக்கு ஏற்ற வகையில் அமைக்கலாம். அதை அறுகு,

தர்ப்பை முதலியவற்றால் அலங்கரித்து, மேலே நூல் சுற்றி, அதற்குமேல் கிழிக்காத இரண்டு வஸ்திரம் சுற்றி அதனுள் நீர் விட்டுத் தர்ப்பையால் அதை மூடிப் பரிமளமான திரவியங்களையிட்டு மூடி மத்திய பாகத்தில் வைத்தல் வேண்டும். மண்டபத்தை முத்து, பளம், வைடூரியம், மாணிக்கம் போன்றவற்றாலும் அலங்கரிக்கலாம்.

மேற்சொன்ன வகையில் மண்டபம் அமைக்க வசதியில்லாதவர்கள் வேதிக மண்டபம், அக்கினி குண்டம் என்ற இரண்டையும் அமைக்கலாம். பின் குருவுடன் இணைந்து நித்திய அனுட்டானங்களை முடித்துக் கொண்டு சிவபூசை செய்தல் வேண்டும். மண்டபத்தின் மத்தியில் உள்ள கும்பத்தில் சிவபெருமானை ஆவாகானம் செய்து கிழக்கு நோக்கித் திரும்பிச் சிவபெருமானை வணங்க வேண்டும். பின் சிவ குண்டத்தில் அக்கினியை வளர்த்து ஓமம் செய்தல் வேண்டும். அப்போது சிவவேதியர்கள் வேதமோதுவர். அதன்பின் வேதியர்களை வணங்கி, "சுவாமி, எனது சீவனைக் காக்க வேண்டும்" என்று கூற வேண்டும். அதன்பின் சிவனைத் தியானித்தபடி இருத்தல் வேண்டும்.

பின் சீடனை வடக்கு நோக்கி உட்காரச் செய்து, குரு சீடனின் மேல் நீரைத் தெளித்து அவனது சிரசில் அஸ்திர முத்திரையைக் காட்டி பூப் போட்டு இரு விழிகளையும் பட்டாடையால் மறைத்து அவனை அழைத்துச் சென்று மண்டபத்தை மும்முறை வலஞ் செய்ய வேண்டும். பின் கும்பத்தை வணங்கி அவனது தலையில் நீர் தெளித்தல் வேண்டும். அதன்பின் கண்களில் கட்டிய பட்டை அவிழ்க்க வேண்டும்.

அதன்பின் சீடன் சிவபெருமானை வணங்க வேண்டும். குரு சிவ பூசை செய்து பூக்களைச் சிரசில் வைத்து சிவ மந்திரத்தை உச்சரித்து அவனது உடலைத் தடவ வேண்டும். அதன்பின் சீடன் குருவைச் சாட்டாங்கமாக விழுந்து வணங்கவேண்டும். சீடன் வைசிகனானால் அவனைச் சத்திரியாகனாவும் பின்பு பிராமணனாகவும் பின் உருத்திரனாகவும் செய்ய வேண்டும். சீடன் சத்திரியனானால் அவனைப் பிராமணனாக்கிப் பின் உருத்திரனாக்க வேண்டும்.

"அதன்பின் சீடன், "என் உயிர் உள்ள வரை எந்தத்துன்பம் வந்தாலும் சிவபூசை செய்யாது நான் உண்ண மாட்டேன்" என்று சத்தியம் செய்தல் வேண்டும். அதன்பின் சமய தீட்சை செய்து சிவமந்திரத்தால் அபிமந்திரமும் உருத்திராட்சமும் வீபூதியும் சிவலிங்கமும் கொடுத்தல் வேண்டும். சீடன் குருவிடம் அவற்றைப் பெற்றுத் தினமும் குரு சொன்னபடி சிவனை வழிபடல் வேண்டும்" என்றார் உபமன்யு முனிவர்.

ஆசாரிய அபிசேகம்

"கிருஷ்ணா, பாசுபத தீட்சை பெற்ற சீடன் ஆசாரிய அபிசேகம் செய்யத் தகுதியுடையவனா என்பதை ஆசிரியன் தெரிந்து கொண்டு ஆசாரிய அபிசேகத்தைச் செய்தல்

வேண்டும். அது எவ்வாறென்றால் முன்பு சொன்னது போல மண்டபம் முதலானவற்றை அமைத்துக் கொண்டு சிவபெருமானைப் பூசித்து, வேறொரு மண்டபம் அமைத்து ஐந்து கும்பங்களை வைத்தல் வேண்டும். அவ் ஐந்தையும் நிவ்ருத்திக்காக கிழக்கிலும் பிரதிஷ்டைக்காக மேற்கிலும் வித்தைக்காகத் தெற்கிலும் சாந்திக்காக வடக்கிலும் சாந்தியாதீதைக்காக நடுவிலும் வைத்தல் வேண்டும். அதன்பின் ஆவாகனஞ் செய்து பூசித்து, தேனுமுத்திரையைக் காட்டி, ஓமம் செய்துவிட்டுச் சீடனை அழைத்து முறைப்படி கிரியையைச் செய்து சிவபெருமானைப் பூசித்து, சீடனைப் பீடத்தில் இருத்தி ஐந்து கலைகளின் சொரூபமாக்கி, மந்திரம் ஓதி அவனைச் சிவபெருமானிடத்தில் ஒப்படைத்தல் வேண்டும். முன்பு வைத்த கும்பநீரை சிவகரமாக அவனின் தலையில் வைத்து, ‘‘சிவாச்சாரியனாகி விட்டார்’’ என்று கூறி அவனைச் சாட்டாங்கமாக வணங்கச் செய்து, ‘‘சுவாமி உமது திருவருளால் இவனை ஆச்சாரியனாக்கினேன் அவனைத் தேவரீர் ஏற்றுக் கொள்ள வேண்டும்’’ என்று விண்ணப்பம் செய்து சீடனோடு சிவனை வணங்கி அவனுக்குச் சிவாகமங்களைக் கொடுத்தல் வேண்டும்.

சீடன் அவற்றைப் பணிவுடன் வாங்கிப் பூசைத்தட்டில் வைத்து மலர்களால் பூசித்தல் வேண்டும். பின் வைத்த கும்பம் அக்கினி முதலியவற்றை நீக்கிவிட்டு அங்குள்ள பெரியவரைப் பூசித்தல் வேண்டும். தீட்சைகள் மூன்றையும் ஒரே காலத்தில் செய்யலாம். ஆச்சாரிய அபிசேகம் செய்யப்பட்டவர்கள் ஒருபோதும் விதிகளை மீறக் கூடாது’’ என்று உபமன்யு முனிவர் சொன்னார்.

நித்திய நைமித்திய கர்மங்கள்

’’சுவாமி, ஆச்சாரிய அபிசேகம் செய்தவர்கள் செய்ய வேண்டிய நித்திய நைமித்திய கர்மங்களைச் சொல்லுங்கள்’’ என்று உபமன்யு முனிவரைக் கிருஷ்ணர் கேட்டார்.

‘‘கிருஷ்ணா, அதிகாலையில் துயிலெழுந்து சிவனை நினைத்துக் கொண்டு காலைக் கடன்களை முறைப்படி முடித்தல் வேண்டும். முறைப்படி நீராட வசதியில்லாதவர்கள் ஈரத்துணியால் உடலைத் துடைக்கலாம். அதுவும் முடியாதவர்கள் உடல் முழுவதும் நீறு அணிதல் வேண்டும். சிவபெருமானை வணங்கியபின்பு தேவர்கள், ரிஷிகள், பிதுர்கள், பூதங்கள் ஆகியவற்றை முறைப்படி ஆராதித்தல் வேண்டும். அதன்பின் சூரியபகவானை ‘‘ககோல்காயா’’ என்ற மந்திரத்தால் பூசிக்க வேண்டும். அதன்பின் நீற்றை எடுத்து நீர் விட்டுக் குழைத்து பஞ்சாச்சர மந்திரத்தை ஓதியபடி முன்பு சொன்ன உடலின் பாகங்களில் திரிபுண்டரமாகத் தரித்தல் வேண்டும். அதன்பின் சந்தனத்தை இடவேண்டும். அதன்பின் சிரம், கண்டம், காது, கழுத்து முதலிய இடங்களில் உருத்திராக்கம் அணிதல் வேண்டும். பரிசுத்தமில்லாத காலங்களில் உருத்திராக்கத்தை அணியக்கூடாது.

உருத்திராக்கம் அணிபவர் நாள் ஒன்றுக்கு மூன்று முறை நீராடல் வேண்டும். உருத்திராக்க மணிந்து பூசை மண்டபத்துள்ச் செல்வோர் தமக்கு வசதியான ஆசனத்தில் அமர வேண்டும். அப்போது சிவனையும் உமாதேவியையும் சுவேதன் முதல் இலகுனீசன் இறுதியாக உள்ள ஆசிரியர்களைப் பணிந்து துதித்தல் வேண்டும். அப்போது சிவ என்னும் நாமத்தைப் பதினொரு முறைகளுக்கு அதிகமாக ஜெபிக்க வேண்டும். பின் கைகளை உரிய முறைப்படி சுத்தம் செய்ய வேண்டும். இதயம், கண்டம், புருவ நடு, தலமை, பிரமாந்திரம் ஆகியவற்றைச் சுத்தம் செய்வதற்காகப் பஞ்ச பூதங்களை நினைத்து பஞ்சாச்சர மந்திரத்தை ஜெபிக்க வேண்டும்.

பின்பு கழுகுமுனை நாடியால் சிவனை நினைத்து வாயு மந்திரத்தால் கலைகளை முன்பிருந்ததுபோல அமைத்துத் தேகமாகக் கொள்ளல் வேண்டும். பின் ஆன்மாவை இருதயத்தில் இருத்தல் வேண்டும். தேகம் முழுவதையும் சிவாகமப்படி சுத்தம் செய்து சிவபெருமானையும் உமாதேவியாரையும் பூசித்தல் வேண்டும்.

"திடமானவனும் விருப்பமானவனும் விதிப்படி நியாச கர்மங்களைச் செய்யலாம். இது பற்றிச் சிவாகமங்களில் சொல்லப்பட்டிருப்பதால் இவ்விடயம் சம்பந்தமாகச் சிவாகமங்களைக் கற்றுத்தேர்ந்த குரு யாவற்றையும் உணந்த பின்னே தீட்சை, நித்திய நைமித்திய கர்மங்களைச் செய்யும் படி கூறுவார். அவற்றை அவர் செயல் மூலம் உணர்த்துவார். சிவபெருமானை நோக்கி யாகம் செய்பவனை விட தியானம் செய்பவன் சிறப்பான பயனை அடைவான். கர்மயாகம் செய்வோர் சிலை, தருலோகம் முதலியவற்றால் செய்த மூர்த்தங்களைக் கண்டு மகிழ்வது போல தியானயாகம் செய்வோர் இதயத்தில் சிவசொரூபத்தைக் கண்டு மகிழ்கிறார்கள். அதனால் மேற்கூறியவற்றில் அவர்கள் கவனம் செலுத்தமாட்டார்கள். ஞானத்தால் தியானம் உண்டாகும். தியானத்தால் ஞானம் விருத்தியடையும். ஞானத்தியானத்தின் மூலம் இலகுவில் முத்தி கிடைக்கும். ஆகையால் மனிதர்கள் தியானத்தில் கவனம் செலுத்த வேண்டும். இவற்றைச் செய்ய முடியாதவர்கள் சிவபெருமானையும் பார்வதிதேவியையும் பூசை செய்ய வேண்டும் இல்லாவிட்டால் சிவலிங்கத்திலாவது விக்கிரகத்திலாவது அக்கினியிலாவது பூமியிலாவது நீரிலாவது பக்தியோடு தனது சக்திக்கேற்பப் பூசை செய்தல் வேண்டும்" என்று உபமன்யு முனிவர் கூறினார்.

மானச பூசை விதி

உபமன்யு முனிவர் தொடர்ந்து சொன்னார், "சிவபெருமான் உமாதேவியாருக்கு கூறிய சிவபூசை விதியைச் சொல்கிறேன் அக்கினி காரியத்தையும் இறுதியாகவுள்ள நித்திய கர்மங்கள் யாவற்றையும் செய்து அல்லது மனதால் முடித்துப் பூசைப் பொருட்களை மனதால் சேகரித்து சிவபெருமானையும் விநாயகரையும் நந்திதேவரையும் அவரது மனைவியான

சுயசையையும் சிந்தித்துச் சிவபெருமானையும் பார்வதிதேவியையும் வணங்கி மனதில் சேகரித்து வைத்திருக்கும் மலர்களால் அர்ச்சித்தல் வேண்டும். சிவனைத் தனது இதயத்தாமரையில் இருத்தித் தனது தேகத்தில் செய்த நியாசங்களை தேகத்தில் நியாசம் செய்து மானசீகமாகப் பூசை செய்தல் வேண்டும். பின் சமிதை நெய் முதலியவற்றால் நாபியில் ஓமம் செய்தல் வேண்டும். புருவ மத்தியில் இருக்கும் சிவபெருமானை தியானம் செய்தல் வேண்டும். பின் சிவபூசை செய்தல் வேண்டும்''

கிரியா பூசா விதி

''கிருஷ்ணா, சிவாகமத்தில் கூறியபடி பூசைப் பொருட்களைச் சேமித்தல் வேண்டும். அதன் செய்முறைகளையும் சிவாகமத்தைப் படித்து அறிதல் வேண்டும். குரு சிவாகமங்களைத் திரிபுறக் கற்றுக் கிரியை செய்யும் முறைகள் பற்றி விரிவாகக் கூறுவார் அதைச் சிவ நினைவுடன் கேட்டுத் தெரிந்து கொள்ளல் வேண்டும். ஒருவன் தனது உடல் உள்ளவரை முறைப்படி தினமும் செய்து முடித்தல் வேண்டும். அப்படிச் செய்யாது உணவு உண்ணக் கூடாது சிவபூசை செய்ய முடியாதவிடத்து நீராடி அன்று செய்யத்தவறிய பூசைக்கு அபராதமாகச் சிவபெருமானையும் பார்வதிதேவியையும் இருமுறை பூசித்து உண்ணாது அன்று முழுவதும் உபவாசமிருந்து பஞ்சாச்சர மந்திரத்தை பதினாயிரம் முறை ஜெபித்துச் சிவபெருமானுக்குப் பூசை செய்ய வேண்டும். பின் சிவனடியார்க்குத் தானம் வழங்குதல் வேண்டும்.

பிரமகத்தி, பொற்களவு, கள் அருந்துதல், குரு பத்திணியைக் கூடல், குரு, பெற்றோரைக் கொடுமைப்படுத்தல் போன்ற பாவங்களைச் செய்தவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் பக்தியுடன் சிவபூசை செய்தால் பாவத்தை ஒழித்துப் புனிதராகலாம். பல பிறவிகளுக்குப் பின் மனிதப் பிறவி எடுத்தவர்கள் சிவபெருமானைப் பூசிக்காவிட்டால் நரகத்தில் விழுந்து துன்பப்படுவர். மனிதர்கள் படைப்பின் புனிதத்தன்மையை உணர்ந்து சிவபெருமானை வணங்கி வாழுதல் வேண்டும்.

சிவாலயத்தில் சிவபூசை செய்யும் போது துவார பூசையை முதலில் செய்தல் வேண்டும். பின் திரைச்சீலையைப் பூசிக்க வேண்டும். அதன்பின் பரிவார தேவர்களுக்குப் பலியிட்டு விழாச் செய்வது முறையாகும். சிவபெருமானுக்கு நிவேதித்தவற்றைச் சண்டேஸ்வரருக்குக் கொடுத்து, பின் அக்கினி காரியம் செய்து, சிவ மந்திரத்தை ஜெபித்து செந்தாமரை மலரை இட்டு வெள்ளிக் கிண்ணத்தில் பாசுபத சாஸ்திரத்தை வைத்துப் பூசித்துத் திருக்கோவிலை வலம் வந்து சிவபெருமானுக்கு எட்டு மலர்களைச் சமர்ப்பித்து சிவ பூசையை முடித்தல் வேண்டும்.

சிவ கோமம்

“கிருஷ்ணா, சிவகோமம் செய்யும் முறைகளைக் கூறுகிறேன். இரும்பால் செய்த பாத்திரத்தில் தீயைக் கொளுத்தி, அதில் சிவபெருமானை ஆவாகானம் செய்து பக்தி பூர்வமாகச் சிவகோமத்தைச் செய்தல் வேண்டும். ஓம குண்டத்தைச் சதுரமாக அமைத்து அதனுள் அஷ்டதளங்களை அமைத்துச் செய்தல் வேண்டும்.

யானையின் தும்பிக்கை போலச் செய்யாது அரசிலை வட்டம் போலச் செய்தல் வேண்டும். அதற்குள் புனித கலசநீரைச் சொரிந்து தர்ப்பையிட வேண்டும். அதன்பின் குருவின் வீட்டிலிருந்து கொண்டுவந்த அக்கினியைக் குண்டத்திலிட வேண்டும். அதன்பின் சிவபெருமானை மூலமந்திரத்தால் அர்ச்சிக்க வேண்டும். அப்போது சிவநாமங்கள் எட்டையும் உச்சரித்து, அக்கினி தேவனுக்கு அவி கொடுத்தல் வேண்டும். அதன்பின் அக்கினி மீது நீரை ஊற்றுதல் வேண்டும். அப்போது அது சிவாக்கினியாகும். அந்தச் சிவாக்கினியில் சிவபெருமானும் உமாதேவியும் எழுந்தருளியிருப்பதாகக் கருதித் தூப தீபங்காட்டி ஆகுதி செய்யவென வைத்திருக்கும் நெய் முதலியவற்றை ஆகுதி செய்தல் வேண்டும்.

பின் இவ் ஓமத்தில் ஏதாவது குற்றங்கள் இருந்தால் பொறுத்தருள வேண்டும் என்று கோரி மலர்களையும் நெய்யையும் ஓமத்தில் இட வேண்டும். பின் மலர்கள் போன்ற கண்களை உடைய வாகீஸ்வரி உட்கொண்டாள் என நினைத்து கர்ப்பதானம், சீமந்தம் இவற்றிற்கு ஓமம் செய்தல் வேண்டும். அதனால் அக்கினி பிறந்ததாக நினைத்தல் வேண்டும்.

அதன்பின் வாகீஸ்வரியையும் வாகீஸ்வரனையும் நினைத்துப் பூசித்தல் வேண்டும். கபில நிறப் பசுவின் சாணத்தைக் கீழே விழவிடாமல் கையில் ஏந்தி யாக அக்கினியில் இட வேண்டும். அது நீறானதும் அதை அணிய வேண்டும். புனிதரல்லாதவர்களுக்கு நீறு கொடுத்தலாகாது. தாம் செல்லுமிடமெங்கும் நீரைக் கொண்டு செல்வது சிறப்பானது. அதன்பின் குருவையும் பெரியோரையும் வணங்கவேண்டும். ஆதன்பின் சிவன் சம்பந்தமான நூல்களைப் பாராயணம் செய்தல் வேண்டும். பூசை முடிந்த பின் நீராடி உரிய முறைப்படி சிவபெருமானையும் உமாதேவியாரையும் வணங்க வேண்டும். இவ்வாறு தினமும் சிவகோமம் செய்தல் வேண்டும்.

மாதப் பூசை விதிமுறைகள்

“கிருஷ்ணா, இத்தகையவர்கள் செய்யத்தகுந்த பூசைகள் இன்னும் சில உண்டு அவற்றைச் சொல்கிறேன்”.

மாதம் தோறும் வருகின்ற அட்டமா சதுர்த்தி, அமாவாசை, பூரணை உத்தரயண தட்சணாயனங்கள், சூரிய சந்திரகிரண காலங்கள், சித்திரை, ஐப்பசி சேர்க் காலங்கள் ஆகிய இந்தக் காலங்களில் சிவபெருமானைப் பூசித்த பின்பே உண்ண வேண்டும் தை மாதத்தில் வரும் பூச நட்சத்திரத்தில் நிராஜனமும், மாசிமகத்தில் கிருதகம்பளமும், பங்குனி உத்திரத்தில் திருவிழாவும், சித்திரையில் வரும் சித்திரையில் திருவூஞ்சலும், வைகாசி விசாகத்தில் மலர்ப்பந்தலும், ஆனி மூலத்தில் சீதகும்பமும், ஆடி உத்திராடத்தில் பவித்ரோத்சவமும், ஆவணி அவிட்டத்தில் மண்டப பூசையும், புரட்டாதிப் பூராடத்தில் தெப்ப உற்சவமும், ஐப்பசி அஸ்விணியில் பாற்சாத நிவேதனமும், கார்த்திகையில் வரும் கார்த்திகைத் தீபங்களும், மார்கழித்திருவாதிரையில் பசு நெய் முதலியவற்றால் திருமஞ்சனமும் சிவப்பிரீதியாகச் செய்தல் வேண்டும்.

"கிருஷ்ணா, இவ்வாறு செய்வோர் ஒரே பிறவியில் மோட்சத்தை அடைவர். இவ்வாறு செய்த சீகண்டன் நூறு கோடி கற்பகாலம் வாழ்ந்து அதன்பின் உமாதேவியாரின் உலகிலும், முருகக் கடவுளின் உலகிலும், உருத்திரன், விஷ்ணு, பிரமன் ஆகியோரது உலகிலும் வசித்துப் பின்பு இருமுறை பூமியில் பிறந்து சிவபெருமானின் திருவடியைச் சேர்தான். நான் சொன்னபடி பூசை செய்வோர் உருத்திரப் பதவியை அடைந்து அங்கு இன்பமாக வாழ்ந்து சிவஞானத்தைப் பெற்றுச் சிவபெருமானின் திருவடியை அடைவர். பற்றற்றுச் சிவனை வணங்குவோர். சிவனது திருவடியைச் சேர்வது சத்தியமாகும்" என்றார் உபமன்யு முனிவர்.

காமிய கர்ம பயன் உணர்த்தல்

"மகாத்மாவே, எனக்குக் கமியகர்மங்களையும் அவற்றின் பயன்களையும் கூறியருள வேண்டும்" என்று கிருஷ்ணன் உபமன்யு முனிவரைக் கேட்டான்.

"கிருஷ்ணா, காமியகர்மங்கள் பல பூமியிலேயே உரிய பயன்களைக் கொடுக்கும். சில தேவலோகத்தில் தான் பயன்கொடுக்கும். சில பூமியிலும் தேவலோகத்திலும் பயன்தரும் கர்மங்கள் ஐந்து வகைப்படும். அவை கிரியாமயம், தன்மயம், ஜபமயம், தியானமயம் ஐந்தாவது மேற்சொல்லப்பட்ட நான்கின் மய முகமாகும். அதனால் கடைசியாக நான் கூறிய நான்கின் மயத்தை விரிவாகக் கூறுகிறேன்.

பூமியைச் சாணத்தால் மெழுகி, அழகிய மலர்கள், பட்டு முதலியவற்றால் மேல் விதானங்கட்டி, எட்டுத்திசைகளையும் பூசித்து, மலர்களால் அர்ச்சித்துப் பக்தியுடன் பூசித்து மனதில் ஆசனமமைத்துச் சிவபெருமானை அதில் இருத்தல் வேண்டும். பின் அவர் அங்கு எழுந்தருளியிருப்பதாக நினைத்து மலர்தூவிப் பூசிக்க வேண்டும்.

இரண்டாவது ஆவணத்தில் அநந்தன் முதல் சீகண்டக் முதலானவர்களைச் சக்தியுடன் பூசை செய்தல் வேண்டும். மூன்றாவது ஆசனத்திலே பவனில் இருந்து மகாதேவன் முதலியோரை சக்தியுடன் பூசித்து மகாதேவன் முதல் கபாலீசன் வரையானோரையும் சக்தியுடன் பூசிக்க வேண்டும். பிறகு இடபத்திலிருந்து ரோகினிவரை உள்ளவரகளைப் பூசித்துத் தாம் செய்த பாவங்களை அகற்றும் படி வேண்டுதல் செய்தல் வேண்டும். அதன் பின் உருத்திரர்களையும் பிரதம கணங்களையும் பூதகணகங்களையும் சக்தியுடன் பூசை செய்து, பின் உமாதேவியின் தோழிகளைப் பூசிக்க வேண்டும். நான் காவது ஆவணத்தில் சூரியனையும், பிரமதேவரையும், உருத்திரனையும், விஷ்ணுவையும் ஆவரணத்துடன் சரீரத்தின் துயரை அகற்றுமாறு பூசிக்க வேண்டும்.

ஐந்தாவது ஆவரணத்தில் சூலம், வஜ்ஜிரம், மழு, கணை, வாள், பாசம், அஞ்குசம், பிநாகவில் ஆகியவற்றைப் பூசித்து பகர். வடுகக்கடவுள் இடபதேவரையும் பூசித்துப் பின் எல்லாக் கடவுள்களையும் சிவபெருமானாகத் தியானித்து வணங்க வேண்டும். அதன்பின் தேவதேவனே எமது குற்றங்களைப் பொறுத்தருளல் வேண்டும் என்று தியானித்து ஓமம் செய்து பூசையை முடித்துப் பஞ்சாச்சர ஜபம் செய்தல் வேண்டும்.

இத்தகைய பூசையை மகேஸ்வரம் என்று பெரியவர்கள் சொல்வார்கள். எண்ணியவற்றையெல்லாம் கொடுக்கக் கூடிய இப்பூசையை உயரிய பொருட்களை விரும்பியே செய்தல் வேண்டும். செய்தபின், "எந்தையே அதனைத் தரல் வேண்டும்" என்று உபமன்யு முனிவர் கூறக் கிருஷ்ணபகவான் அதைத் தனக்குக் கூறியருளல் வேண்டும் என்று வேண்ட உபமன்யு முனிவர் சொல்லத் தொடங்கினார்.

தோத்திரம்

ஸ்தோத்திரம்

எல்லாவுலகங்களுக்கும் தலைவனே! ஞான சொரூபியே! முதற்காரணனே! திரிகரணங்களுக்கும் எட்டாதவனே! உனக்கு வெற்றி உண்டாகுக! சமனான ரஹிதனே! எண்ணற்கரியவனே! முழுமங்கலஸ்வரூபியே! தாணுவே! காரண ரஹிதனே! பரமானந்த ஸ்வரூபியே! அனந்த காரணனே! ஈஸ்வரனே! தலைவனே! திருவருள் ஸ்வரூபனே! உனக்கு ஜயமுண்டாகும். சர்வாண்டங்களிலும் வியாபித்து விளங்குபவனே! யாவற்றுக்கும் மேலானவனே! உனக்கு மேலாக ஒன்று இல்லாதவனே! அழிவில்லாதவனே! உற்பத்தியில்லாதவனே! மாயா அதீதனே! இந்தப் பூஜையை அடியேன் செய்ததனால் உண்டாகும் பயனை எளியேன் அடையும்படித் திருவருள் செய்ய வேண்டும்.

உலகங்கள் யாவற்றுக்கும் தாயாகியுள்ளவளே! உலக ஸ்வரூபியானவளே! பேரழகுடையவளே! மனதில் உண்டாகும் அஞ்ஞானத்தை ஒழிப்பவளே! எல்லாச்

சமயங்களுக்கும் தலைவியே! குணஸ்வரூபியே! நிர்க்குண ஸ்வரூபியே! ஞானிகள் இதயத்தில் எழுந்தருளியிருப்பவளே! ஜயஜய! சர்வலோகங்களுக்கும் தலைவனாகிய சிவபெருமானுடைய மனைவியாக விளங்குபவளே! தேவர் முதலிய யாவரும் துதி செய்யப் பெற்றவளே! உலகத்தைப் படைப்பவளே! மங்களங்களையெல்லாம் உண்டாக்குபவளே! உன்னுடைய திருவடியை எனது இதயத்தில் இருத்தி என் நாவால் துதித்து, என் சிரத்தால் பணிகிறேன். தேவீ! உன்னிடத்திலேயே சர்வாண்டங்களும் லயமடைவன. சூலாயுதம் ஏந்திய எந்தையாகிய சிவபெருமான் உன்னையன்றிப் பயன் அளித்தது இல்லை. அதலின் அண்ட கோடிகளிலுள்ள ஆன்மாக்கள் யாவும் உன்னுடைய திருவடிகளுக்கே பணி செய்யும். உன்னுடைய திருவருளை எனக்கு அருள் செய்ய வேண்டும்.

ஐந்து திருமுகங்களும், பத்துத் திருக்கரங்களும் ஸ்படிக நிறமும் உடைய அகூர ரூபியும் பிரமரூபியும் காலரூபியும் ஆகிய சகல நிஷ்கள வடிவமைந்த சிவமாய், சாந்தியாதீதத்தில் அமர்ந்தருளிய சதாசிவமூர்த்தி நன்றாகத் திருவருள் புரிவார். ஆகையால் அப்பெருமானின் திருத் தொடையின் மேல் இச்சா சக்தி வடிவாகப் பொருந்தி யாவற்றுக்கும் தாயாகியுள்ளவளே! என்னைப் பாவங்கள் அணுகாதவாறு விலக்கி அழியாத உயர்பதவியைத் தந்தருள வேண்டும். ஜடா முடிடையுடைய சங்கரபகவானும் பர்வத ராஜபுத்திரியாகிய உமா பிராட்டியாரும் அன்புடையவர்களாய் திருவாய் மலர்ந்தருளும் சிவஞானம் ஆகிய இனிய அமுதத்தை யருந்தும் பிரமதேவனும் திருமாலும் பணிந்து துதி செய்ய விளங்கும் விநாயகக் கடவுளும் முருகக் கடவுளும் எனக்குத் திருவருள் புரியவேண்டும்.

ஒளிவீசும் ஸ்படிக நிறமுற்று, அடியார்கள் செய்யும் துதியையே ஆபரணமாக ஏற்கும் சதாசிவ வடிவமாய் பாலசூரியன் போன்ற நிறம் அமைந்த பகவன் சிரோமூர்த்தியாகக் கூறப்பட்டு, சாந்தியாதீதபதமாய் விண்ணிடைப் பொருத்தி அளவிடுவதற்கு அரிய பஞ்சாக்ஷரங்களில் இறுதியிலுள்ள யகாராக்ஷரமாகிய ஐந்து கலைகளுடன் கூடி அறிவதற்கு அரியதாய் விளங்கும் ஈசானப் பிரமம் உமாதேவியுடன் அடியேன் பூஜை செய்வதற்குத் திருவுளம் இரங்கி என் பாவங்களை அகற்றியருள வேண்டும்.

பாலசூரிய வடிவமாக விளங்கித் தன்னருள் புரியும் சிவபெருமானின் கீழ்முகமாகி சாந்தீபதமாக, ஆன்மாவாய் வாயுவில் வசிப்பதாய், பஞ்சாக்ஷரங்களில் நான்காவதாகிய வாகாராக்ஷரமாய் நான்கு கலைகளுடன் கூடியமர்வதுமாய் விளங்கும் தற்புருஷப் பிரமம் நெடிய கண்களையுடைய உமாதேவியுடன் கூடி அடியேன் மலர்தூவி அர்ச்சித்த பூஜைக்கு மனமகிழ்ந்து, என் மனமயக்கத்தை அறவே ஒழித்து, மகிழ்ச்சியுடன் திருவருள் செய்ய வேண்டும்.

அஞ்சனகிரி போன்ற ஆதாரம் உடையதாய் ஈஸ்வரனது தெற்கு முகமாகிக் கொடுமை வாய்ந்த அகோர மூர்த்தியாய் வித்தியாபதமாய் அக்கினியில் பொருந்தியதாய் பஞ்சாக்ஷரங்களில் மூன்றாவதாகிய சிகாராக்ஷரமாய் எட்டுத் தலைகளுடன் விளங்குவதாகவுள்ள

அகோரப் பிரம்மம் எளியேனுடைய அடைக்கலம் புகுந்தவர்களை வதைத்தவர்கள் முதலிய பெரும்பாவிகள் இந்த ஸ்தோத்திரத்தைப் பாராயணஞ் செய்தாலும் கேட்டாலும் தங்கள் பாவத்தை ஒழித்துப் பரிசுத்தர்களாவார்கள். இந்தத் தோத்திரத்தைப் படிப்பவர்கள் பூஜை செய்யாவிட்டாலும் தாம் அடையும் பயனை அளவிட்டுச் சொல்லி முடியாது. இந்த ஸ்தோத்திரத்தை வாயால் கூறும் போது, சிவபெருமான் உமாதேவியோடும் பிரமதகண சமேதராய் ஆகாயத்தில் இருந்து களிகூறுவாராகையால் இந்த ஸ்துதியை இடைவிடாமல் தியானஞ் செய்வது சிறந்ததாகும்.

அக்கினி காரியம்

"கிருஷ்ணா, கோமம், ஜெபம், தியானம் என்பன இஷ்டசித்திகளை தரவல்லன. இதைச் செய்பவன் பிரமச்சாரிய ஆஸ்ரமம் உடையவனாக இருத்தல் வேண்டும். பகல் முழுவதும் உண்ணாமல் இருந்து, இரவு வந்ததும் அவி உணவு அல்லது கனிகளை உண்ணல் வேண்டும் திருநீற்றை உடல் முழுவதும் பூசி, பூமியைக் கோமயத்தால் மெழுகி மலர்களால் அலங்கரித்துச் சிவலிங்கம் ஒன்றை அமைத்து அதில் சிவபெருமான் எழுந்தருளியிருப்பதாக நினைத்துத் தியானம் செய்தல் வேண்டும். கபிலைப் பசுவின் பஞ்ச கவ்வியத்தால் அபிசேகம் செய்தல் வேண்டும். பின் சிவலிங்கத்திற்கு அபிசேகம் செய்து சந்தனம், மலர்கள் சாத்தி தீபதூபம் காட்டி சக்கரை இட்டுச் சமைத்த பாற்சோற்றை நிவேதிக்க வேண்டும். தாம்பூலம் அளித்துப் பட்டுப்பிதாம்பரம் அணிவித்து கீதங்கள் பாடி, வாத்தியங்களை இசைத்து குறைந்தது மும்முறையாவது பூசை செய்தல் வேண்டும். அப்போது பஞ்சாச்சர மந்திரத்தை இலட்சம் தடைவை ஜபிப்பது சிறப்பானது.

அக்கினி காரியம் செய்யும்போது பகைவரை அழிக்க விரும்பினால் இரும்புச்சருவத்தைப் பயன்படுத்த வேண்டும். சாந்தி கர்மமானால் பொற்சருவத்தைப் பயன்படுத்தவும். மரணபயத்தைப் போக்க வேண்டுமானால் அறுகு அன்னம் பால் நெய் தேன் முதலியவற்றை அக்கினியில் ஓமம் செய்தல் வேண்டும். பிணியைத் தவிர்ப்பதற்கு எள்ளையும், வறுமையைப் போக்க நெய்யையும் பாலையும் அக்கினியில் இடல் வேண்டும்.

வசியம் செய்வதற்கு பிச்சிப் பூவால் ஓமம் செய்ய வேண்டும். எல்லோரும் மதிக்க வேண்டுமானால் அலரிப்பூவை ஆகுதி செய்தல் வேண்டும். சத்துருவை ஊரைவிட்டுத் துரத்த எள் எண்ணெய்யாலும், அவர்களை அடக்கக் கடுகினாலும் உள்ளியினாலும் அவர்களைச் சண்டையிடச் செய்ய வேண்டுமாயின் கழுதை ஒட்டகம் இவற்றின் இரத்தத்தை அக்கினிக்கு ஆகுதியாகக் கொடுத்தல் வேண்டும். நோய் அகலப் பாலினால் ஓமம் செய்தல் வேண்டும். பால், தயிர், நெய், தேன், யவை, அரிசி, சோறு முதலியவற்றால் ஓமம் செய்தால் சித்திகள் பலவும் உண்டாகும்.

"வில்வத்தால் கோமம் செய்தால் சரத்தியும் வசியமும் பொருட்சேர்க்கையும் உண்டாகும். அவ்வாறு பூசித்தவன் பொன் முதலிய பொருட்களை ஆசிரியனுக்கு அல்லது, சிவாலயத்திற்கு கொடுத்தல் வேண்டும். முறைப்படி ஓமம் செய்தவர்களுக்கு நினைத்தவையாவும் நினைத்தவுடன் வந்து சேரும். மிகுந்த புத்திசாலிகளாவர். விஷம் அவர்களுக்கு அமுதமாக மாறும். அட்டமா சித்திகள் உண்டாகும். சிவகடாச்சத்தால் அனைத்து இன்பங்களையும் அனுபவிப்பர்.

சிவ விரதம்

"கிருஷ்ணா, சிவ விரதத்திற்கு மேலான ஒரு கருமம் எந்தலோகத்திலும் இல்லை. நான்முகன் திருமால் ருத்திரன், பிற தேவர்கள், நவக்கிரகங்கள், வசிட்டர் உட்பட பல முனிவர்கள், சிவகணங்கள் பாதாள உலகில் வசிக்கும் அசுரர், நாகலோகத்தில் வசிக்கும் நாகங்கள், சித்தர்கள் காந்தர்வர்கள், யக்சர்கள், அரக்கர், பூதர்கள், பேய்கள் முதலின சிவ விரதத்தை மேற்கொண்டு மனக்களிப்புடன் வாழ்கின்றனர்".

உமாதேவியாருடன் கூடிய சிவபெருமானைச் சிவலிங்கத்தில் தியானித்து, வெண்சந்தனக் குழம்பால் அபிசேகம் செய்து, மலர்களால் அர்ச்சித்துச் சிவலிங்க மூர்த்தியை எழுந்தருளச் செய்து, மலர்களைச் சாத்தி, தூப தீபங்காட்டி, பால் சோற்றை நிவேதனம் செய்து, வணங்கி, பஞ்சாச்சர மந்திரத்தை ஜெபித்து பூசை செய்து விட்டு அந்தப் பூசைப்பொருட்களைக் குருவுக்கு அல்லது சிவாலயத்திற்குக் கொடுத்தல் வேண்டும்.

"இவ்வாறு சிவவிரதத்தை அனுட்டித்தவர்கள் தாம் செய்த கொடிய பாவங்களில் இருந்து விடுபட்டு, சிவலோகத்தை அடைந்து இன்பமாக வாழ்வர். நாம் அடையவேண்டியவற்றைச் சிவலிங்க வழிபாட்டின் மூலமாகவே அடையலாம்"

இலிங்கோற்பவம்

"கிருஷ்ணா, பிரமன், விஷ்ணு, ருத்திரன் போன்ற பெருந்தேவர்கள் எல்லோரும் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூசித்தமையால்தான் அப்பதவிகளை அடைந்தனர். சிவபெருமானும் ஒரு காலத்தில் காசித்தலத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து அதைப் பூசித்து, யாவரும் அவ்வாறு செய்ய வேண்டி அதன் மகிமையை உணர்த்தினார்" என்று உபமன்யு முனிவர் சொல்ல கிருஷ்ணன், "முனிவரே இலிங்கம் என்பது என்ன? அவ்விலிங்கத்தில் சர்வேஸ்வரன் எவ்வாறு பொருந்தியுள்ளான்? இலிங்க பூசையை எவ்வாறு செய்ய வேண்டும்?" என்று கேட்க, உபமன்யு முனிவர் சொல்லத் தொடங்கினார்.

"கிருஷ்ணா, அவ்யக்தம் என்பது மூலப்பிரகிருதி என்றும், மாயை என்றும் பல பெயர்களால் சொல்லப்படும். அதில் இருந்து சுத்தம், அசுத்தம், சுத்தாசுத்தம் என்று சொல்லப்படும் உலகம் தோன்றியது. சதாசிவன், மகேஸ்வரன், உருத்திரன், விஷ்ணு, பிரமன் ஆகியோர் தோன்றினர். பூதங்கள் இந்திரியங்கள் யாவுமே அவ்வியக்கத்தில் தோன்றி ஒடுங்கும். அதனால் சிவபெருமானே இலிங்கம் அவரது கட்டளையின்றி அவ்வியக்கமானது உலகைச் சிருஷ்டிக்கமாட்டாது. உலகம் அவ்வியக்கத்தில் ஒடுங்குவதால் அதை இலிங்கம் என்பார்கள். இலிங்கம் என்பதற்குப் படைப்பு காப்பு முதலியவற்றால் உலகத்தைச் சித்தரிப்பது என்று பொருள். இலிங்கத்திற்குத் தலைவராக உள்ளவள் ஈஸ்வரி. இதை அறிவதே ஞானமாகும். சிவாக்கிணையினாலேயே உலகங்கள்யாவும் நிலைபெறுவன. ஒரு காலத்தில் அவை சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பு சிவமாயையினால் மயங்கி ஏழு சழுத்திரங்களும் ஒன்றுபட்டு பிரளயப் பெருக்காக இருந்தது.

அந்தப் பெருக்கில் துயில் புரிந்து கொண்டிருந்த திருமாலைக் கண்ட பிரமதேவன், அவரை எழுப்பி, "நீ யார்?" என்று கேட்கத் திருமால் கண்விழித்து, "நீ எனது புதல்வன் எங்கிருந்து வருகிறாய்?" என்று கேட்கப் பிரமன் விஷ்ணுவை நோக்கி, "உனக்கு இன்னும் நித்திரை மயக்கம் தெளியவில்லை. இவ்வுலகத்தை நானே படைத்தேன். யானே முக்கூறுகளாகிப் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய தொழில்களைச் செய்கிறேன். நான் தான் கடவுள். என்னை விட வேறு கடவுள் யாரும் இல்லை" என்று சொன்னார்.

"பிரமனே, நான் தான் முத்தொழில்களின் கடவுள். நீ எனது மகன்" என்று சொல்லப் பிரமன் கோபம் கொண்டார். அதனால் இருவருக்குமிடையே யுத்தம் உண்டானது. நெடு நாட்களாக இருவரும் யுத்தம் செய்தபோது சிவபெருமான் சோதிலிங்கமாகி இந்தச் சோதியின் அடியையும், முடியையும் கண்டவரே தலைவர் என்று கூறப் பிரமன் அன்னமாகவும், விஷ்ணு பன்றியாகவும் உருவெடுத்து அடியையும் முடியையும் பல ஆயிரம் வருடங்கள் தேடியும் கண்டு கொள்ளாது திரும்பி வந்து அச்சோதியைப் பணிந்தபோது பிரணவ ஒலி உண்டானது. அதைக் கண்டு அவர்கள் திகைத்த போது அந்தப் பிரணவம் அகார, உகார, மகார, நாதங்களாகப் பிரிந்து இலிங்கத்தை அடைந்ததைக் கண்டனர். அப்போது அகரத்தில் இருந்து இருக்கு வேதமும், உகரத்தில் இருந்து யசுர்வேதமும், மகரத்தில் இருந்து சாமவேதமும், நாதத்திலிருந்து அதணர்வண வேதமும் பிறந்தன.

உலகத்தில் உள்ள பொருட்களெல்லாம் பிரணவத்தின் பொருளாகும். பிரணவத்தை உச்சரித்தே சிவபெருமான் உலகங்களைப் படைத்தார். சிவனே பிரணவம். பிரணவமே சிவம். எதனாலும் விளக்க முடியாத சிவபெருமானை பிரணவத்தால் விளங்கிக் கொள்ளலாம். அகர உகர மகரங்கள் முறையே பிரமா விஷ்ணு ருத்திரகளாகும். இவர்கள் சிவபெருமானின் வலம் இடம் இதயம் என்ற இடங்களில் தோன்றினார்கள். இவர்களுக்கெல்லாம் மேலானவனான சிவனை பரமகாரணன் என்று சொல்வார்கள். அப்போது பிரமன், "எந்தையே தேவரீர் நீரே என்னைப் படைத்தவர். அடியேன் மாயாவசத்தினால் எதையோ உழறிவிட்டேன். அதைப்

பொறுத்தருள வேண்டும்" என்றான். பின்னர் விஷ்ணு மாயாவசத்தால் தேவரீரைத் தேட முயன்றேன் அதைப் பொறுத்தருள்க என்று வேண்டினார். அதைக்கேட்டு மகிழ்ந்த சிவபெருமான் அவர்களுக்குப் பஞ்சாச்சர உபதேசம் செய்தார். பிரமனும் விஷ்ணுவும் அவரை வணங்கி விடை பெற்றனர். அன்று முதல் அவர்கள் சிவலிங்க ரூபம் செய்து அதை அர்ச்சனை செய்து வருகின்றனர்".

சிவலிங்கஸ்தான விதி

"மாதவரே, சிவபெருமான் எழுந்தருளியுள்ள சிவலிங்கத்தையும் விக்கிரகங்களையும் வேத விதிப்படி பிரதிஷ்டை செய்வது பற்றிச் சொல்லியருளுங்கள்" என்று கிருஷ்ணர் உபமன்யு முனிவரைக் கேட்டார்.

"கிருஷ்ணா, பூர்வபட்சத்தில் வரும் சுபநாளில் சிவலிங்க ரூபத்தைச் சிற்ப விதிப்படி செய்து விநாயகரைப் பூசித்துப் புனிதமான இடத்தில் வைத்துப் பொன்னால் செய்த சலாகையினால் நேத்திரம் எழுதி, எட்டு மண் அல்லது ஐந்து மண்ணிட்ட நீரினாலும் பஞ்ச கௌவியத்தாலும் ஆவுடையாளையும் லிங்கத்தையும் அபிசேகித்து மலர்களால் அர்ச்சித்து நல்ல நீரில் சில தினங்கள் இருத்தி, அவ்விடத்தில் தர்ப்பையைப் பரப்பி, மலர்மாலைகளைத் தொங்கவிட்டுப் பல கொடிகளை நட்டு, எட்டுத்திசைகளிலும் கும்பங்கள் வைத்து அவற்றுள் திக்குப் பாலகரைப் பூசித்து, தாமரை மலரை பொன் அல்லது மரத்தால் செய்து அதை இரண்டு பீடங்களில் அமர்த்தி, வாயில் காப்போரைப் பூசித்து, நீரால் அபிசேகம் செய்து, தர்ப்பையும் வஸ்திரமும் அணிவித்துச் சிவலிங்கத்தை முறைப்படி இருத்தி, மேல் பாலில் உள்ள பீடத்தில் ஆவுயடையாளை இருத்தி, ஐந்து தினங்கள் அல்லது மூன்று தினங்கள் பூசித்து அப்படியே இருக்கச் செய்து, மனதில் தியானித்துத் தேவர்களை அவ்அவ்விடத்தில் இருக்கவிட்டு, அவர்களை வணங்கி இலிங்கத்தையும் ஆவுடையாளையும் எடுத்து மலர்களால் அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் எழுந்தருளச் செய்தல் வேண்டும். அதன் பின் அபிசேகம் செய்து, மலர்களால் அர்ச்சித்து ஈசான திசையில் பதுமம் ஒன்றை அமைத்து அதில் கும்பம் வைத்து, அதில் சிவபெருமானை ஆவாகனம் செய்தல் வேண்டும். அதன்பின் மண்டபத்தின் மத்தியில் வெண்தாமரை மலரை வரைந்து அதற்குமேல் பட்டை விரித்து மலர்களால் அர்ச்சனை செய்து, அதன்மேல் சிவ கும்பத்தையும் கரகமும் வைத்து, எட்டு இதழ்களிலும் கும்பங்களை வைத்து, அதைச் சுற்றி எட்டுப்பேர் நின்று ஓமம் செய்தல் வேண்டும். ஆசிரியன் ஈசான திசையிலும் மேற்குத் திசையிலும் நின்று ஓமம் செய்தல் வேண்டும். இலிங்கத்திற்குச் சிவதத்தம் வைத்த பின் ஓமம் செய்து தேவியருக்கும் குருவுக்கும் தட்சணை கொடுத்தல் வேண்டும். பொன்னால் செய்யப்பட்ட ஆமை ஒன்றை வைத்து நவரத்தினங்களை இட்டுச் சிவலிங்கத்தை அதில் ஸ்தாபிக்க வேண்டும். அதன்பின் ஆவுடையாளை வைத்து அபிசேகம்

செய்து இரு கரங்களையும் குவித்துச் சிவபெருமான், உமாதேவி வணங்கிப் பிரதிஷ்டை செய்தல் வேண்டும்.

இனிச் சிவலிங்கத்தை வீட்டில் பிரதிஷ்டை செய்யும் முறையைக் கூறுகிறேன். முன்பு சொன்னது போலச் சிவலிங்கத்தைச் செய்வித்து உத்தராயணத்தில் பூர்வபட்சத்து உத்தமதினத்தில் எட்டுத்தளமுடைய தாமரைப் பூவின் வடிவில் தளமமைத்து மலர்களால் அர்ச்சித்து, அதன்மேல் கும்பம் வைத்துப் பஞ்சப்பிரம மந்திரத்தால் பூசை செய்து இலிங்கத்தை அபிசேகம் செய்து, ஆசனத்தில் வைத்து மலர்மாலை சூடி சிவ நாமத்தை உச்சரித்துப் பூசை செய்தல் வேண்டும்

வெந்த லிங்கத்தையும், உடைந்த லிங்கத்தையும் பூசிக்கக்கூடாது. ஒரு நாள் பூசை தடைப்பட்டால் இரண்டு முறை பூசை செய்தல் வேண்டும். இரு நாள் பூசை தடைப்பட்டால் கலச ஸ்தாபனம் முதலியனவும் ஓமம் செய்து விசேட பூசை செய்தல் வேண்டும். பின் முறைப்படி பூசை செய்யவும். பூசை முடிந்த பின் சிவமூர்த்தத்தைத் தனது ஆன்மாவிலே ஸ்தாபிக்க வேண்டும்.

"ஐந்து மண் அல்லது எட்டு மண் தருப்பை நீர் பஞ்ச கவ்வியம் முதலியவற்றால் அபிசேகம் செய்து தருப்பையால் சிவலிங்கத்தை மூடி நூற்றியெட்டு முறை மூலமந்திரத்தை உச்சரித்தல் வேண்டும்" என்று உபமன்யு முனிவர் கூறினார்.

ஞான யோகம் முதலியன

"மாதவரே, ஞானம், கிரியை, சரியை என்பவற்றின் சாரம் முழுவதையும் எனக்குச் சொல்லியருளல் வேண்டும்" என்று உபமன்யு முனிவரைக் கிருஷ்ணர் கேட்டார்.

"கிருஷ்ணா, மனதை ஐம்புலன்களில் செலுத்தாமல் சிவபெருமானை அன்புடன் மனதில் நினைத்திருந்தாலே யோகம் எனப்படும். அது மந்திரயோகம், ஸ்பரிசயோகம், பாவயோகம், அபாவயோகம், மகாயோகம் என்று ஐந்து வகைப்படும். அவற்றுள் மந்திரத்தை ஜபித்து, அதன் கருத்தை உணர்ந்து மனதை அதில் செலுத்தியிருப்பதே மந்திரயோகமாகும்.

பிராணாயாமத்துடன் கூடிச் சிந்தனை செய்யும் யோகம் ஸ்பரிச யோகம். மனதைத் தத்துவத்தில் ஒடுக்குவது பாவயோகமாகும். அவயங்களுடன் பிரபஞ்சம் ஒருங்கும்படி ஆகாயமாகக் கருதிப் பாவித்தல் அபாவயோகமாகும். எல்லாவற்றையும் மறந்து சிவபெருமானை மனதில் தியானிப்பது மகாயோகமாகும். பற்றுகள் அற்றவன் தான் யோகசாதனைக்குரியவன். இப்படியானவன் சிவபெருமானை நினைத்துக் கொண்டிருந்தால் அவனது ஆசைகள் முழுவதும் ஒழிந்து மனம் திடமாகிவிடும்.

“யோகம் ஆறு வகைப்படும். அதற்கு அங்கம் எட்டு என்று சிவாகமங்கள் கூறுகின்றன. இதில் பிராணாயாமத்தைச் செய்தால் இஷ்டசித்திகள் கைகூடும். சகர்ப்ப பிராணாயாமம் என்பது வேதமந்திரங்களை உச்சரித்து, அதன் பொருளை மனதில் தியானித்து உணர்ந்து செய்வது. மந்திரத்தையும் தியானத்தையும் விலக்கிச் செய்யும் பிராணாயம் அகர்ப்ப பிராணாயாணம் ஆகும். யோகிகள் இதையே செய்வார்கள். உடலில் பத்து வாயுக்கள் உண்டு. இந்தப் பத்து வாயுக்களையும் பிராணாயாமத்தால் வென்றால் இரு மலங்களும் பாசபந்தங்களும் குறையும். விரும்பியவற்றை உண்ணலாம். இதனால் வியாதிகள் அகலும், அழகு, வலிமை, அறிவு என்பன விருத்தியாகும். இவ்வாறான பிராணாயாமத்திற்குத் தவம், யாகம், தானம் முதலியன இணையாகமாட்டாது. இந்திரியங்களை அடக்குதல் பிரத்தியாகாரமாகும். மனதை இந்திரிய வழியில் செல்லாது தடுப்பது தாரணையாகும். மனதால் சிவபெருமானை வேறு நினைவுகளின்றித் தியானிப்பதே தியானமாகும். பன்னிரண்டு பிராணாயாமங்களைச் செய்தால் அது தாரணையாகும். பன்னிரண்டு தியானங்கள் சமாதியாகும்.

சமாதி என்பது பிறிதொன்றையும் அறியாதது, சிவபெருமானை மனதில் இருத்தித் தன்னை மறந்திருத்தலாகும். இவ்வாறு யோகம் செய்பவர்களை கேளாமல் ஒலிக்கும் ஒலியைக் கேட்டலாகிய சிரவணமும், மிருகம், பறவைகளின் உரையாடலைக் கேட்டுப் புரிதலும், தேவலோகம் பாதாளம் முதலிய உலகங்களுக்குச் சென்று வரும் தன்மையும் உண்டாகும். அத்துடன் பழங்களின் சுவைகளை அறியும் தன்மை, மலர்களின் வாசனையை அறிந்து கொள்ளல் மேலும் உடல் குறுகுதல், தடித்தல், இளமைபெறல், அழகுமேம்படுதல் ஆகிய எட்டுக்குணங்கள் உண்டாகும்.

எண்ணிய இடத்தில் நீரை உண்டாக்கல், சுவையில்லாத பொருட்களைச் சுவைபடச் செய்தல், மூன்று பூதங்களுடன் கூடித் தேகம் எடுத்தல், உடல் அழகு பெறல் ஆகிய தன்மைகள் உண்டாகும். நீரில் வாழல், உலகைச் சுட்டெரித்தல், அக்கினியைக் கையில் தாங்கல், அதை நீரில் எரித்தல், மனோவேகத்தால் செல்லல், காற்றைக் கையில் அடக்கல் ஆகிய முப்பத்திரண்டு குணங்களை வாயு பதம் உண்டாக்கும்.

உலக விருத்தியைக் கருதி யோகியானவன் போகத்தில் பொருந்தியிருந்தாலும் அழியாத முத்தியை அடையும் வழியைச் சொல்கிறேன். கிருஷ்ணா, சுபவேளையில் ஒரு சிவாலயத்தை அடைந்து யோகம் செய்தல் வேண்டும். புலித்தோல் அல்லது மான் தோலில் அமர்ந்து, ஆசிரியரைப் பணிந்து உரிய முறைப்படி அமருதல் வேண்டும். சிவபெருமானை உமாதேவியாருடன் தியானித்து அன்புடன் பூசை செய்தல் வேண்டும். சிவபெருமானைத் தியானம் செய்தால் எல்லாச்சித்திகளும் விரைவில் கைகூடும். ஏனையோரைத் தியானித்தால் கைகூடாது. பிராணாயாமத்தால் சாந்தி, பிரசாந்தி, தீத்தி, பிரசாதம் என்றும் நான்கு சித்திகள் உண்டாகும். தியானத்தால் தான் முத்தி உண்டாகும். ஞானத்தால் தியானமும் தியானத்தால் ஞானமும் உண்டாகும்.

சிவபெருமானைத் தியானம் செய்யும் தியானத்திற்கு அழிவில்லை. ஏனையவை தியானத்திற்கு சமமாகாது என்று தெரிந்த யோகிகள் தியானத்தைச் செய்தே சித்திகளைப் பெறுவர். யோகி ஒருவருக்கு உணவளித்தல் கோடிக்கணக்கான அந்தணர்களுக்கு உணவளித்த பயன் உண்டாகும். இவர்களது ஏழு பிறப்புக்களில் வந்த பாவங்கள் யாவும் இதனால் அழிந்து போகும். யோகி ஒருவன் உடல் நலம் குன்றி இறந்து போவேன் என்று எண்ணினால் ஒரு சிவத்தலத்தை அடைந்து ஆகாரத்தை விலக்கி விரதம் அனுட்டித்து இறக்க வேண்டும். அவன் இறந்தால் அவனின் உடலைத் தகனஞ் செய்யலாம். அல்லது புதைக்கலாம் அல்லது எங்கேயாவது விட்டெறியலாம். அதன் பின் அவனுக்கு கிரியைகள் செய்ய வேண்டியதில்லை. பின் சிவப்பிரீதி செய்தல் வேண்டும். என்று கூறிவிட்டு எதிரே நின்ற முனிவர்களுக்கு வாழ்த்துக் கூறிவிட்டுச் சென்று பிரமதேவரைச் சந்தித்து தாம் முனிவர்களுக்குச் கூறியதைச் சொல்லிவிட்டுச் சென்றார்.

முனிவர்கள் காசியை அடைதல்

அதன்பின் முனிவர்கள் தாம் செய்த யாகத்தை நிறைவு செய்துவிட்டு காசியை அடைந்தனர். அங்கு மணிகர்ணிகையில் நீராடிவிட்டுச் சிவபெருமானை வணங்கிய போது அப்போது மிகுந்த பிரகாசத்துடன் வானில் ஒரு சோதி தோன்றியது. பாசுபத விரதம் அனுஷ்டித்த பல முனிவர் அதில் சேர்ந்தனர். அதனால் ஆச்சரியமடைந்த முனிவர்கள் அதைப் பற்றி அறியப் பிரமதேவனிடம் சென்றனர். அப்போது நாரதரும் தும்புருவும் போட்டியாக வீணை வாசித்துக் கொண்டிருந்தனர். அதனால் வாயில் காவலர் அவர்களை உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. சிறிது நேரத்தில் வீணைப் போட்டி முடிய நாரதரும் தும்புருவும் அப்சரஸ்களும் காந்தர்வர்களும் பிரமதேவரின் வாசஸ்தலத்திற்கு வந்தனர். அதன்பின் வாசற் காவலர் அவர்களை உள்ளே செல்ல அனுமதித்தனர். அவர்கள் உள்ளே சென்று பிரமதேவரை வணங்கினர். பிரமதேவர், "முனிவர்களே, உங்களைப் பற்றிய அணைத்து விடயங்களையும் வாயுதேவன் எனக்குக் கூறினார். நீங்கள் ஆகாயத்தில் கண்டது சோதி சிவலிங்கமாகும். இனி மேருமலையில் சனத்குமார முனிவர் தவம் செய்கிறார். நீங்கள் அங்கே செல்லுங்கள். முன்பொரு காலத்தில் சிவபெருமான் சனத்குமார முனிவரிடம் வந்தபோது அவர் யோகத்தில் இருந்தமையால் சிவபெருமானைக் காணவில்லை. அதனால் கோபம் கொண்ட நந்திதேவர், சனத்குமாரரை ஒட்டகமாகும் படி சபித்தார். அதனால் அவர் ஒட்டகமாக மாறிவிட்டார் அதனால் கவலைப்பட்ட நான் நந்திதேவரை வணங்கி இரந்து கேட்டமையால் சனத்குமாரரின் சாபம் நீங்கியது அதனால் அங்கு செல்லுங்கள்" என்றார்.

முனிவர்கள் அங்கு சென்று சனத்குமார முனிவரை வணங்கியபோது ஒரு விமானத்தில் நந்திதேவரும் சுயாதேவியுடனும் கணங்களுடனும் அங்குவந்தார். அவரை முனிவர்கள் வணங்கி வரவேற்றனர். அப்போது சனத்குமார முனிவர் சொன்னார், "வேதப்பொருளை

விளக்கமாகச் சொல்லும் இந்தப் புராணத்தைப் படித்தவர்கள், கேட்டவர்கள், சொன்னவர்கள், எழுதியவர்கள் சகல இன்பங்களையும் அனுபவித்து பரமசிவனின் திருவடியை அடைவார்கள்'' அதன் பின் முனிவர்கள் காசிக்குச் சென்று விஸ்வநாதப் பெருமானை வணங்கி சிவயோகத்தில் அமர்ந்து சிவபதவியை அடைந்தனர்.

6 வித்தியேஸ்வர சம்கிதை

காப்பு

ஆத்மயந்த மங்கள மஜாதச மாநபாவ

மாத்யந்த விஸ்வமஜராமர மாத்மதேவம்

பஞ்சாந நம்ப்ரபலபஞ்ச விநோத ஸீலம்

ஸம்பாவயேமநஸி ஸவ்கரமம் பிகேஸம்

முனிவர்கள் பிரமதேவரை அடைதல்

சௌனகர் முதலிய முனிவர்கள் பிரயாகையில் ஒரு பெரிய யாகம் செய்தனர். வியாச முனிவரின் சீடரான சூதமா முனிவர் அதைக் கேள்விப்பட்டு அங்கு வந்தார். முனிவர்கள் அவரை வரவேற்று அழைத்து வந்து ஆசனத்தில் இருத்தி, ''மா முனிவரே, ஈஸ்வர

சொரூபத்தை விளக்கும் புராணத்தை எங்களுக்கு சொல்லியருளல் வேண்டும்" என்று கேட்டனர்.

"முனிவர்களே, சிவபெருமானைப் பக்தியுடன் வணங்க வேண்டும். சிவ பக்தியாலே அனுக்கிரகமும், அனுக்கிரகத்தால் பக்தியும் உண்டாகும். நீங்கள் பூமியை அடைந்து ஆயிரம் ஆண்டுகள் உக்கிரகமாகத் தவம் செய்தீர்களானால் சிவபெருமானின் அனுக்கிரக்தால் வேதசாரம் முழுவதையும் அறிவீர்கள்" என்று பிரமதேவர் கட்டளையிட்டார். அவர்கள் பிரமதேவரை நோக்கி, "சாதிக்கத்தக்கது எது? சாதனம் எது? சாதகம் எப்படியானது?" என்று கேட்டனர்.

"சிவபதத்தை அடைவதே சாதிக்கத்தக்கது. அவரைத் தரிசிப்பதே சாதனம். திருவருளே சாதகம். அவரவரது பக்திக்கேற்ற பயன்களைச் சிவபெருமான் கொடுத்தருள்வார். காதால் கேட்டால் பின் அதை பிரத்தியட்சமாக கண்களால் பார்த்து மோட்சத்தை அடையலாம். காதால் கேட்பதும், வாயால் துதிப்பதும், மனதால் தியானிப்பதுமே சாதனங்களாகும். குரு மூலமாகச் செவியால் ஏற்று, மனதால் தியானித்து, வாயால் துதித்து சிவசம்பத்தை அடைதல் வேண்டும். அவ்வாறு செய்தால் பாவங்கள் ஒழிந்து சகல சுகங்களும் வந்து சேரும்" என்று பிரமதேவர் கூறினார்.

சனத்குமாரர் வியாசருக்கு உபதேசம் செய்தல்

"சுவாமி, மனதால் தியானிப்பதும், செவியால் கேட்பதும், வாயால் துதிப்பதும் எப்படி?" என்று முனிவர்கள் பிரமதேவரைக் கேட்டனர்.

"பூசை, ஜெபம், ஈஸ்வர குணம், ரூபம், விலாசம் முதலியவற்றைப் பக்தியுடன் தியானம் செய்தால் அது மனனம் எனப்படும். கீதங்களால், வேதத்தால் சிவபெருமானது பராக்கிரமங்களைப் படிப்பது கீர்த்தனம் எனப்படும். எவ்வகையிலாவது சிவபரமான சத்த சமூகங்கள் கேட்கப்படுகின்றனவோ அந்த வஸ்துவை சிரவணம் என்பார்கள். சிரவணத்தாலேயே சிவபக்தி உண்டாகும். தியானத்தால் சிவகடாச்சமும் சிவபாக்கியமும் உண்டாகும்" என்று பிரமதேவர் கூறினார்.

அப்போது சூதமுனிவர் சொன்னார், "வியாச முனிவர் முன்பு ஒரு காலத்தில் சிவப்பிரமத்தை அடைய எண்ணிக் கடுந்தவம் செய்தார். அப்போது சனத்குமார முனிவர் வியாசர் தவம் செய்து கொண்டிருக்குப்பதைக் கண்டார். தனது குருவைக் கண்டுவிட்டதை உணர்ந்த வியாசர் தவத்தை விட்டெழுந்து அவரை வணங்கி வரவேற்றார்".

"வியாசரே, தியானயோகத்தை யாது கருதிச் செய்கிறாய்?" என்று சனத்குமார முனிவர் கேட்டார். அதற்கு வியாசர், "சுவாமி, அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு புருசார்த்தங்களையும் தங்களது கருணையால் யாவருக்கும் உரைத்தேன். இருப்பினும் முத்தியை தரத்தக்க ஞானம் உண்டாகவில்லை ஆகையால் நான் மோட்சம் கருதியே தவம் செய்கிறேன்" என்றார்.

"வியாசரே, நந்திதேவர் என்னிடம் வந்து, செவியால் கேட்பதும், வாயால் துதிப்பதும், மனதால் தியானிப்பதுமே வேதசம்பந்தமான மோட்ச சாதனங்கள் என்று கூறினார். அதை அவருக்குச் சிவபெருமான் உபதேசித்ததாகவும் கூறினார். அதனால் வியாச முனிவனே, அம் மூன்றையும் இடைவிடாமல் செய் மோட்சம் உன்னைத்தேடி வரும்" என்று கூறிவிட்டுச் சென்றார். என்று கூறிய சூதமா முனிவரைக் கேட்டார்கள், "சுவாமி, அம்மூன்றையும் செய்ய முடியாதவர்கள் என்ன செய்ய வேண்டும். அதையும் தாங்களே கூற வேண்டும்" என்றனர்.

இலிங்க விக்கிரகங்களின் வரலாறு

"முனிவர்களே, அவற்றைச் செய்ய முடியாதவர்கள் சிவலிங்கப் பெருமானைப் பிரதிஷ்டை செய்து பூசித்துச் சம்சாரமாகிய கடலைக் கடக்க வேண்டும். தனது சக்திக்கு ஏற்றவகையில் சிவார்ச்சனை செய்தல் வேண்டும். சக்திக்கேற்ப பிரதட்சணம் நமஸ்காரங்கள் செய்தல் வேண்டும். இவ்வாறு தினமும் செய்து வந்தால் சிவபெருமானது கிருபை உண்டாகிச் சிரவணம் முதலிய மூன்று சாதனங்களும் இல்லாமல் சிவனடியை அடையலாம்".

என்று சூத முனிவர் கூறியபோது முனிவர்கள் கேட்டார்கள், "முனிவரே, எல்லாத் தேவர்களும் விக்கிரக ரூபத்தில் பூசிக்கப்படும் போது சிவபெருமான் மட்டும் லிங்க ரூபத்திலும் விக்கிரக ரூபத்திலும் பூசிக்கப்படுகிறார் இதுரன்?"

"முனிவர்களே, இதற்கான பதிலைச் சிவபெருமான் தான் கூறவேண்டும். ஆயினும் எனது குருவான வியாச பகவான் எனக்குக் கூறியதை நான் உங்களுக்குச் சுருக்கமாகக் கூறுகிறேன், "சிவபெருமானே பரப்பிரம ரூபம். அவரே சகலவற்றிற்கும் தலைவராதலால் குணஸ்வரூபியாகவும் நிர்க்குணஸ்வரூபியாகவும் இருக்கிறார். நிர்க்குண ரூபியான சிவபெருமானுக்கு உருவமில்லாத லிங்க வடிவம் உண்டானது. குணஸ்வரூபியாகையால் உருவத்துடன் கூடிய விக்கிரக ரூபமும் உண்டானது. அதனால் சிவனுக்குப் பரமான பரப்பிரமம் என்ற பெயர் உண்டானது. சிவபெருமானை மட்டுமே லிங்க உருவிலும் விக்கிரக உருவிலும் வழிபடலாம். பிறதேவர்களுக்குப் பிரமஸ்ரூபம் இல்லாமையாலும் சிவனுடைமையாலும் சாமானியர்களுக்குத் தெய்வமாக இருப்பதாலும் அவர்களுக்கு லிங்க உருவம் இல்லை. அவர்கள் சகனமாதலால் விக்கிரகத்தில் மட்டும் பூசிக்கப்படுகின்றனர். இதுவே ஓங்காரத்தின் அர்த்தத்தாலும் உபநிடதங்களாலும் அறியப்படுகின்றது.

பிரம விஷ்ணுக்கள் போர்

சனத்குமார முனிவர் மந்திர கிரியில் சிவபெருமானுடன் இருந்த நந்திதேவரைக் கேட்டார், "அந்தலிங்க வடிவம், விக்கிரக வடிவம் இரண்டின் உற்பத்தியையும் சிவனின் ரூபலட்சணங்களையும் கூறுங்கள்".

"வியாசரே, முன்பு விஷ்ணு திருப்பாற்கடலில் சயனித்து இருந்த போது அங்கு வந்த திருமால், அவரை யார் என்று கேட்க அதனால் இருவருக்குமிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. அது போராக மாறியது. கொடுமையான ஆயுதங்களைப் பாவித்து இருவரும் போர் செய்தனர். அதனால் பயந்த தேவர்கள் கைலையில் பார்வதிதேவியுடன் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை வணங்கினர். அதனால் சிவபெருமான் மனமிரங்கித் தேவர்களைத் தனக்கருகில் அழைத்துச் சொன்னார், "நலமாக இருக்கிறீர்களா?..." என்று கேட்கத் தேவர்கள் மிக்க கவலையுடன் பரமாவினதும் விஷ்ணுவினதும் உக்கிரமான போரைப் பற்றிக் கூறினர்.

உடனே சிவபெருமான் போர் செய்யும் இடத்தை அடைந்து கண்களுக்குப் புலப்படாது ஆகாயத்தில் இருந்தார். அவர்களின் உக்கிரமான போரை நிறுத்தாவிட்டால் உலகம் அழிந்துவிடுமென்று நினைத்து அவர் இருவருக்குமிடையில் அக்கினித் தம்பமாக நின்றார் இருவரும் எய்த ஆயுதங்களை அவ் அக்கினித் தம்பம் விழுங்கியது. இருவரும் அடிமுடி தெரியாது நிற்கும் அக்கினித்தம்பத்தைப் பார்த்து வியந்து இதன் ஆதியும் அந்தத்தையும் காண வேண்டும் என்று நினைத்து விஷ்ணு பன்றி உருவம் எடுத்துப் பூமியைப் பிளந்து சென்றார். எங்கு தேடியும் அதன் அடியைக் காணாமையால் மிகவும் இளைத்துக் களைத்துத் தான் புறப்பட்ட இடத்தை வந்தடைந்தார்.

பிரமன் அன்ன வடிவம் எடுத்து ஆகாயத்திற்குச் சென்று மேலுள்ள ஏழு உலகையும் தாண்டி அந்த அக்கினித் தம்பம் நின்றதால் சோர்ந்து களைத்து திருமாலும் திரும்பி வந்தார். சிவபெருமானின் சடைமுடியிலிருந்து நெடு நாட்களாகப் பூமியை நோக்கி வந்து கொண்டிருந்த தாழம் பூவைப் பிரமதேவன் கண்டு, "நீ யார்?" என்று கேட்க அப் பூ, "நான் நெடு நாட்களாக இந்த அக்கினித் தம்பத்தின் முடியில் இருந்து வந்து கொண்டிருக்கிறேன்" என்று சொன்னது. அதற்குப் பிரமன், "நான் இந்தச் சோதியின் முடியைத் தேடியே வந்தேன் எனக்கும் விஷ்ணுவுக்கும் ஒரு போட்டி இருக்கிறது. அதனால் நான் இந்த அக்கினித் தம்பத்தின் முடியைக் கண்டேன் என்று நீ கூறவேண்டும்" என்றார்.

தாழம்பூ சம்மதித்துத் திருமாலுடன் வந்தது. பூமிக்கு வந்த பிரமா, "நான் இந்த அக்கினித் தம்பத்தின் முடியைக் கண்டேன். அதற்கு இந்தப் தாழம் பூ சாட்சி என்றார். அதை விஷ்ணு நம்பித் திருமாலை வணங்கிய பின் புகழ்ந்துரைத்தார். அதை கேட்டுக் கொண்டிருந்த சிவபெருமான் மிகக் கோபங் கொண்டு திருமாலைக் கொல்ல வந்தார். அதைக் கண்ட

விஷ்ணு சிவபெருமானைப் பணிந்து திருமாலைக் காக்குமாறு வேண்டினார். அதனால் மகிழ்ந்த சிவபெருமான் விஷ்ணுவைப் பாராட்டி, "நீ உண்மையைச் சொன்னமையால் உனது வேண்டுகோளை ஏற்றுக் கொள்கிறேன். ஆகையால் உன்னைத் தேவர்கள், முனிவர்கள், மனிதர்கள் அனைவரும் பூசிப்பார்கள். உன்னைத் திருக்கோவில்களில் விக்கிரக ரூபமாகப் பிரதிஷ்டை செய்து பூசை உற்சவம் முதலியவற்றைச் செய்வார்கள். உன்னை என்னைப் போலப் பூசிப்பார்கள்" என்றார்.

பிரமனின் சிரச்சேதமும் தாழம்பூவின் சாபமும்

இவ்வாறு விஷ்ணுவுக்கு வரங்களைக் கொடுத்த சிவபெருமான் பொய் பேசிய பிரமன் மீது கடுங்கோபங் கொண்டு வீரபத்திரரை அழைத்து பொய் பேசிய பிரமாவின் ஐந்தாவது முகத்தைத் துண்டித்து விடு என்றதும் வீரபத்திரர் பொய் பேசிய பிரமனது ஐந்தாவது முகத்தை அறுத்தெறிந்துவிட்டு ஏனையவற்றையும் அறுக்க முற்பட்டபோது பிரமன் கவலையோடு வீரபத்திரனை வணங்கித் தனது ஏனைய தலைகளை அறுக்க வேண்டாமென்று கெஞ்சினார். அதனால் இரங்கிய வீரபத்திரர் சிவபெருமானின் கட்டளைப்படி சென்று விட்டார். கவலையோடு நின்ற பிரமனைப் பார்ந்து இரக்கப்பட்ட சிவபெருமான், "பிரமனே நீ பொய் பேசியதால் உலகத்தில் உனக்குப் பூசைகளும் உற்சவமும் இல்லாது போகட்டும். நீ உலகங்களில் உள்ள பிராமணர்களுக்கு அரசனாக இரு. உனது ஆசியில்லாமல் செய்யப்படும் யாகங்கள் பயனைத்தராது" என்று கூறிவிட்டுப் பொய்ச் சாட்சி சொன்ன தாழம் பூவைக் கோபத்துடன் பார்த்து, "அற்ப புத்தியுள்ள நீ மனிதர் வாழுமிடங்களில் இருந்து தூரச் செல். இனி உன்னை எனது பூசைக்கு யாரும் உபயோகிக்க மாட்டார்கள்" என்றார்.

அதைக் கேட்ட தாழம்பூ மிகவும் வருந்தித் தனது சாபத்தை நீக்கும் படி மன்றாடச் சிவபெருமான் மனமிரங்கி, "தாழம்பூவே, எனது பக்தர்கள் உன்னை அணிந்து கொள்வார்கள்" என்று கூறி மறைந்தார்.

அருணாசல லிங்க மகிமை

திருநந்திதேவர் சொன்னார், "சிவபெருமானும் பார்வதிதேவியும் ஒரு சிங்காசனத்தில் எழுந்தருளி இருந்தனர் அப்போது பிரமாவும் விஷ்ணுவும் அவர்களை வணங்கிப் பலவகையான பொருட்களை அவர்களுக்குச் சமர்ப்பித்தனர்".

"குழந்தைகளே, இன்று ஒரு புண்ணியமான திருநாளாகும். இந்தத் திதிக்குச் சிவராத்திரி என்று பெயர். இந்த நாள் தான் நான் மிகவும் விரும்பி மகிழும் நாள். இந்தத்

திதியில் எவன் லிங்கத்தையோ விக்கிரகத்தையோ வணங்கிப் பூசை செய்கிறானோ அவன் உலக காரியங்களாகிய ஸ்ருஷ்டிஸ்திரி சங்காரங்களைச் செய்பவனாகிறான்''.

இத்திதியில் பூசை செய்தால் எனக்கு மிகவும் மகிழ்ச்சியுண்டாகும். நான் ஸ்தம்பமாக நின்ற காலம் மார்கழி மாதத் திருவாதிரை நட்சத்திரத்தில், அன்று எனது லிங்க உருவையோ விக்கிரகத்தையோ வணங்குபவன் மீது நான் எல்லையற்ற அன்பை வைப்பேன். நான் லிங்க உருவாக நின்ற இடம் லிங்கஸ்தானம் என்ற பெயரைப் பெறும். ஆதியந்தம் இல்லாத இந்தத் தம்பம் தரிசிப்பதற்காகச் சிறிதாக மாறும். இதைத் தரிசித்தாலும் வணங்கினாலும் இதை நினைத்துக் தியானம் செய்தாலும் முத்தியடையலாம். இது அக்கினி மலை போல உருவானதால் இந்தத் தலத்தை அருணாசலமென்று அழைக்கப்பட்டுப் பிரசித்தி பெற்று விளங்கும். இங்கு பல புண்ணிய தீர்த்தங்கள் உருவாகும். இங்கு வசிப்பவர்களும் இறப்பவர்களும் மோட்டசமைவர்.

இது எனது தலமாகும் இங்கு விழாக்கள் பூசைகள் செய்வோரும், பார்ப்போரும் முத்தியடைவர். இங்குள்ள லிங்கத்தைப் பூசை செய்தோர் இறைவனின் அருகில் இருக்கும் பாக்கியத்தைப் பெறுவர்.

அதன்பின் போரில் இறந்தவர்கள் எல்லோரும் உயிர்பெற்றெழுந்தனர். அவர்களை ஆசீர்வதித்த சிவபெருமான், ''எனது ரூபம் சகலமென்றும், நிஷ்களம் என்றும் இருவகைப்படும். வேறுயாரும் இவ் உருவ வடிவை உடையவர்களல்ல. அதனால் வேறுயாரும் ஈஸ்வரனும் அல்ல. முதலில் தம்ப ரூபமாகவும் காணப்பட்டமையால் பிரமத்வத்தை நிஷ்களம் என்றும் ஈஸ்வரத்வத்தைச் சகலம் என்றும் சொல்லப்படும். நான் தான் ஈஸ்வரன் என்றும் நீங்கள் இருவரும் போரிட்டமையால் அதை நிவர்த்தி செய்யவே இங்கு வந்தேன்.

இனி நீங்கள் உங்கள் அகந்தையை விட்டு விட்டு ஈஸ்வரனான என்னைப் பூசியுங்கள் இவற்றை உணர்த்தவே இங்கு வந்தேன். லிங்க பூசைதான் விக்கிரக பூசையை விடச் சிறந்தது. எனினும் இரண்டிற்கும் பேதமில்லை. இலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து விக்கிகப் பிரதிஷ்டை செய்யாவிட்டாலும் நான் எழுந்தருளியிருப்பேன். ஆனால் விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்து லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்யாவிட்டான் நான் அவ்விடத்தில் இருக்கமாட்டேன்'' என்று சிவபெருமான் திருவாய் மொழிந்தருளினார்.

பிரமாவுக்கும் திருமாலுக்கும் உபதேசம்

''மகாதேவா, ஐந்தொழில்களின் லட்சணங்களை எமக்குக் கூற வேண்டும்'' என்று பிரமாவும் திருமாலும் கேட்கச் சிவபெருமான் கூறினார்.

“பிரமனே, விஷ்ணுவே, சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என்ற எனது ஐந்து வகையான கிருத்தியங்களால் தான் உலகம் இயங்குகிறது. சிருஷ்டி ஸ்திதி என்பது அதை நிலை நிறுத்துவது. சம்சாரம் என்பது அழித்தல். திரோபவம் என்பது மறைத்தல். அனுக்கிரகம் என்பது அருளல் இவ் ஐந்தும் என்னாலேயே நிகழ்த்தப்படுகிறது.

இந்த ஐந்தொழில்களையும் ஐம் பூதங்களினாலேயே நடத்துகிறேன். சிருஷ்டி பூமியிலும், ஸ்திதி நீரிலும், சங்காரம் அக்கினியிலும், திரோபவம் வாயுவிலும், அனுக்கிரகம் ஆகாயத்திலும் என்னால் நடத்தப்படுகின்றன. பூமியில் சகலதும் படைக்கப்படுகின்றன. நீரால் அவை விருத்தியாகின்றன. அக்கினியால் அழிக்கப்படுகின்றன. வாயுவால் திரோபவிக்கப்படுகின்றன. அது போல என்னால் சகல யோகங்களும் அனுக்கிரகிப்படும். இவற்றை எனது ஐந்து முகங்களும் செய்கின்றன. முன்பு நான் உங்களுக்கு அனுக்கிரகம் தவிர்ந்த நான்கு தொழில்களையும் உங்களுக்குக் கொடுத்தேன்.

ஆனால் அனுக்கிரகத்தை என்னைத் தவிர வேறு யாராலும் செய்ய முடியாது. என்னை நீங்கள் தியானம் செய்ய மறந்ததால் இவ்விதம் துன்பப்பட்டீர்கள். இனியாவது என்னை உணர்ந்து தியானம் செய்யுங்கள். ஓம் என்ற பிரணவ மந்திரம் அகங்காரத்தைப் போக்குவது. அதனால் பிரணவத்தை என்னை நினைத்து ஓதுங்கள். ஓங்காரம் எனது ஐந்து முகங்களில் இருந்து தோன்றியது. ஓங்காரம் எனது ஐந்து முகங்களில் இருந்து தோன்றி ஓர் எழுத்தானது இது தான் எனது சக்தி. இதனால் தான் என்னை அறிய முடியும். இது சகல அறிவையும் உண்டுபண்ணும். அத்துடன் பஞ்சாச்சர மந்திரமாவும் விளங்கும்.

இந்த நான்கு தலையை உடைய நான்கு முகங்களில் இருந்து மூன்று பதங்களை உடைய காயத்திரி உண்டானது. காயத்திரியிலிருந்தே சகல வேதங்களும் உண்டாயின. வேதங்களில் இருந்து மந்திரங்கள் உண்டாயின. மந்திரங்கள் தத்தமக்குரிய பயன்களைக் கொடுக்கும். காயத்திரி நினைத்த அனைத்தையும் கொடுக்கும் என்று கூறிய சிவபெருமான் அவர்களது சிரசில் தனது கையை வைத்து மந்திரங்களைப் பார்வதி தேவியுடன் கூடியிருந்து உபதேசம் செய்தார்.

அதன்பின் பிரமாவும் விஷ்ணுவும் சிவபெருமானைக் குருவாக ஏற்று முறைப்படி வணங்கினர். அதனால் மகிழ்ந்த சிவபெருமான், “பிரணவ மந்திரத்தை ஜபம் செய்யுங்கள். அதைத் திருவாதிரை நட்சத்திரத்திலும், சதுர்த்தசித்திதியிலும் ஜபித்தால் பெரும் நன்மைகள் உண்டாகும். திருவாதிரையில் சூரியப் பிரவேச வேளையில் ஜபம் செய்தால் கோடி மடங்கு அதிக பயன் உண்டாகும். காலையிலும் மதியத்திலும், மாலைவேளையும் கோம தர்பனகாலங்களிலும் ஜபம் செய்தல் வேண்டும். அத்துடன் லிங்கத்தைப் பூசிக்க வேண்டும். லிங்கத்தை ஓங்கார மந்திரத்தாலும் விக்கிரகத்தைப் பஞ்சாச்சர மந்திரத்தாலும் பூசிக்க வேண்டும். லிங்கபூசை செய்தால் எனது பதவியை இலகுவாக அடையலாம்” என்று கூறிச் சிவபெருமான் மறைந்தார் என்று நந்திதேவர் சொன்னார்.

சிவலிங்கப் பிரதிஷ்டையும் மந்திர ஜெபமும்

“சனத்குமாரரே, லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்யும் முறைகளைப் பற்றியும் அதன் பூசை முறைகளையும் கூறுகிறேன். சுபவேளையில் புண்ணிய தீர்த்தக்கரையிலும் நதிக்கரையிலும், வேறு பொருத்தமான இடங்களிலும் லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்யலாம்”.

மண், கல் முதலியவற்றாலும் லிங்கத்தைச் செய்யலாம். ஸ்திரலிங்கமே விசேடமான பயன்களைக் கொடுக்கவல்லது. பன்னிரண்டு அங்குல உயரமான லிங்கம் உத்தமமானது. அதற்குக் குறைந்தது பிரதிஷ்டை பயன்தரும். பன்னிரண்டு அங்குலத்திலும் கூடினாலும் தோசமில்லை. லிங்கப் பிரதிஷ்டை செய்யும் ஆலயத்தை இரத்தினங்களால் அலங்கரித்து, முக்கிய இடங்களில் நீலம், வைடூரியம், மரகதம், வைரம், முத்து, பவளம், கோமேதகம் முதலியவற்றை லிங்கம் வைக்கும் பள்ளத்தில் வைத்து அதன் மீது லிங்கத்தை வைத்தல் வேண்டும்.

இலிங்கத்தை வைத்த பின்பு பஞ்சப் பிரம மந்திரங்களால் பூசித்து அவிசால் அக்கினி ஓமம் செய்து குருவையும் ஆசாரியனையும் பூசிக்க வேண்டும். பின் பிரணவ மந்திரத்தை ஓதி பிரதிஷ்டை செய்ய வேண்டும். சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்துள்ள இடத்தைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் நூறு முழமளவு பூமி புண்ணியத் தலத்திற்கு உரியது . அவ்விடத்தில் உள்ள கிணறு தடாகம் என்பவற்றைச் சிவகங்கை என்பர்.

“கலியுகத்தில் இவ்வாறு செய்வோர், அதிகமான பயன்களை அடைவர்” என்று சூத முனிவர் சொன்னார்.

தீர்த்த தல மகிமை

“முனிவர்களே, மோட்சத்தைக் கொடுக்கத்தக்க சிவத்தலங்களைப் பற்றியும் அவற்றின் சிறப்புக்களையும் விபரமாகச் சொல்கிறேன். சகல மக்களும் மோட்சமடைய வேண்டும் என்ற காரணத்தால் காசி முதலிய பல சிவத்தலங்களை நியமித்தருளினார். புண்ணியத்திருத்தளங்களுக்குச் சென்று வணங்குவதும் புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவதும் அத்தகைய இடங்களில் ஜபம் தவம் முதலியவற்றைச் செய்வதும் அவசியமாகும். தீர்த்தக்கரைகளில் பல சிவத்திருத்தலங்கள் இருக்கின்றன. சரஸ்வதி நதி புண்ணிய தீர்த்தமாகும். இமயமலையில் இருந்து நூறு பிரிவுகளாக வரும் கங்கை நதி மிகவும் புனிதமானது. அதன் கரையில் காசி முதலான பல சிவத்தலங்கள் உள்ளன. அங்கு சோணாபத்திரம் இருக்கிறது. அதில் தைமாதத்தில் மகரலக்கினத்தில் புதன்கிழமையில் நீராடினால் விநாயகர் பதவி கிடைக்கும். நர்மதா நதியில் நீராடியால் விஷ்ணு பதவி

கிடைக்கும் வேதாவலி நதியில் நீராடினால் பிரமகத்தி கோகத்தி முதலிய பாவங்களை ஒழித்து ருத்திரலோகத்தை அடையலாம்.

கிருஷ்ணவேணி நதி எல்லாப் பாவங்களையும் ஒழித்து விஷ்ணுபதத்தை அளிக்கும். துங்கபத்திரை நதியில் நீராடினால் பிரமலோகத்தை அடையலாம். முகரிநதி, சரஸ்வதி நதி, பம்பாநதி, கண்யாநதி ஆகியவற்றின் கரைகளில் வசிப்பவன் இந்திரபதத்தை அடைவான். காவேரிநதிக்கரையில் வசிப்போர் சுவர்க்கத்திற்குச் செல்வார்கள்.

இந்து நதியில் ஆடி மாதக் கடக லக்கினத்தில் நீராடினால் பிரமலோகம் கிடைக்கும். ஆவணி மாதத்தில் சிம்ம கேதார நதியிலும், கண்டகி நதியிலும் நீராடியால் ஞானம் உண்டாகும். கார்த்திகை மாதத்தில் குரு, விருட்சிக லக்கினத்தில் கூடி இருக்கும்போது காவிரியில் நீராடினால் விரும்பிய யாவும் கிடைக்கும்.

"மார்கழி மாதத்தில் குரு தனு லக்கினத்தில் இருக்கும் போது நர்மதா நதியில் நீராடினால் விஷ்ணு பதவி கிடைக்கும். பங்குனி மாதத்தில் குருவும் சூரியனும் மீனலக்கினத்தில் இருக்கும் போது கிருஷ்ண வேணியில் நீராடிச் சிரார்த்தத்தைச் செய்தால் புண்ணியம் உண்டாகும். மேற்சொல்லப்பட்ட நதிக்கரைகளில் அதிக சிவத்தலங்கள் உண்டு. அவ்வவ் நதிகளில் நீராடி விட்டுச் சிவனைத் தரிசித்தால் மோட்சம் உண்டாகும்" என்றார் சூத முனிவர்

சர்வா சாரம்

முனிவர்களே, "சுவாமி, உலகத்தை வெல்லக் கூடிய ஆசாரத்தையும் சுவர்க்க நரகங்களைக் கொடுக்கத்தக்க புண்ணிய பாவங்களையும் சொல்ல வேண்டும்" என்று கேட்டனர்.

"முனிவர்களே, பிராமணன் முழுமையான ஆசாரத்துடன் வேத உணர்வும், சந்திரியன் அற்பமான ஆசாரமும் அற்பமான வேத உணர்வும், வைசிகன் சிறிதளவு ஆசாரமும் வியாபாரத்தின் மூலம் வாழ்பவனாகவும் இருத்தல் வேண்டும். வியாபாரம் செய்யும் பிராமணன் சூத்திரப் பிராமணனாவான். ஒழுக்கமில்லாத பிராமணன் சண்டாளப் பிராமணனாவான். மேற்கூறிய மூன்று வர்ணத்தவர்களுக்கும் பணிவிடை செய்பவன் சூத்திரன் ஆவான். காலையில் எழுந்து சூரியனைப் பார்த்தால் ஆயுள் அதிகரிக்கும். அக்கினி மூலையைப் பார்த்தால் துவேசமும், தெற்கே பார்த்தால் மரணமும், தென்மேற்குத் திசையைப் பார்த்தால் பாவமும், மேற்குத் திசையைப் பார்த்தால் சம்பத்தும், வடமேற்கைப் பார்த்தால் புஷ்டியும் உண்டாகும்.

தூய்மையில்லாத பொருட்களைத் தொட்ட போதும், அரசனால் பயம் உண்டான காலத்திலும் பயணத்தின்போதும் பஞ்சாச்சர மந்திரத்தை ஓதுதல் வேண்டும். ஜெபம் செய்வதானால் காயத்திரி மந்திரத்தைத் தொடக்கத்திலும் முடிவிலும் மும்முறை ஓத வேண்டும். ஆயிரம் முறை ஜபம் செய்தால் பிரமஸ்தானமும், நூறு முறை செய்தால் இந்திரஸ்தானமும் கிடைக்கும். தினமும் இருபத்து நான்கு முறை ஜபம் செய்தால் சூத்திரன் பிராமணனாகப் பிறப்பான்.

முனிவர்களே, சந்நியாசி அதிகாலையில் பன்னிரண்டாயிரம் முறைகள் பிரணவத்தை ஜெபிக்க வேண்டும். பிராமணர்கள் ஞானப் பயிற்சி செய்தல் வேண்டும். தர்மம் செய்வதால் செல்வமும், செல்வத்தால் இன்பமும், இன்பத்தால் வைராக்கியமும் உண்டாகும். அதர்மத்தால் ஆசைகள் தான் உண்டாகும். திரவியத்தால் சம்பாதிப்பது, புண்ணிய தீர்த்தங்களில் நீராடலும் புண்ணியச் சிவத்தலத் தரிசிப்புமாகும். இக்கலியுகத்தில் தானம் செய்வதே சிறப்பானது திரவியம் இல்லாதவன் தவம் செய்தல் வேண்டும். இல்வாழ்வான் பொருட்கள் உணவு பழங்கள் பணம் உடைகள் என்பவற்றைத் தானம் செய்தல் வேண்டும். ஒருவரிடம் உணவை வாங்கி உண்டவன் பரப்பிரம ரூபத்தை அறிந்த பயனில் பாதிப் பயனைத் தனக்குத் தானம் செய்வதாலும் தவம் செய்வதாலும் போக்கிக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அவன் நரகத்தை அடைவான். ஒருவன் தனது பொருளைத் தர்மவிருத்தி ஆத்ம சுகம் ஆகியவற்றிற்காக மூன்றாகப் பிரித்தல் வேண்டும். தர்மத்திற்கு ஒதுக்கிய பொருளால் நித்திய நைமித்திய காமியகர்மங்களைச் செய்தல் வேண்டும். பிறரை வருத்தாது பொருளைத் தேட வேண்டும். வியாபாரத்தில் பாவமிருந்தால் அதன் ஒரு பகுதியைத் தானம் செய்தல் வேண்டும். ஆன்மவிருத்திக்காக ஒதுக்கிய பொருளில் சிவாலயம், குருமடம் ஆகியவற்றை விருத்தி செய்தல் வேண்டும் புதையல் கிடைத்தால் அதில் பாதியைத் தானம் செய்தல் வேண்டும். தீயவரிடம் பெற்ற திரவியத்தைக் கடலில் வீச வேண்டும். ஒருவன் செய்த பாவத்தைப் பார்த்தாலும் கேட்டாலும் அதைப் பிறரிடம் கூறலாகாது. பரப்பிரமத்தை அடைய விரும்பியவன் மேலே சொன்னவாறு செய்தல் வேண்டும். இவ்வாறு செய்வோர் சுவர்க்கத்தில் வாழ்வோராவர்".

தான தேச காலங்கள்

"சூத முனிவரே, தானம் செய்வதற்கான தேசம், காலம் என்பவற்றைக் கூறுங்கள்" என்று முனிவர்கள் கேட்டனர்.

"முனிவர்களே, புனிதமான இடங்களில் செய்தால் தான் நற்பயன்கள் உண்டாகும். பசுவின் தொழுவத்தில் செய்வது மிகுந்த பயனைத் தரும். நதிக்கரை, வில்வமரத்தடி, துளசி மரத்தடி, அரசமரத்தடி போன்ற இடங்களிலும் செய்தாலும் அதிக பயனைப் பெறலாம். மனதிற்குப் பிடித்தமான இடங்களில் யாகம், தானம், பூசை ஆகியவற்றைச் செய்யலாம்.

சுத்தமான மனமுடையவர்களுக்குச் சுத்தமான தினமாக இருந்தால் சரியான பயன் உண்டாகும்.

சூரிய கிரகணம் உண்டாகும் போது உலகிற்குத் தீங்கு உண்டாகும். அதைப் போக்குவதற்குத் தானம், ஜபம், நீராடல் என்பவற்றைச் செய்யவேண்டும். இவ்வேளையில் காயத்திரி மந்திரத்தை ஓதுவது சிறப்பானது. தன்னை மனனம் செய்பவனை நரகத்தில் இருந்து அம்மந்திரம் காப்பாற்றும். காயத்திரி மந்திரம் ஒருவனைப் பரிசுத்தப்படுத்தும்.

கோதானம், பூதானம், திலதானம், சுவர்ணதானம், நெய்தானம், வஸ்திரதானம், தானியதானம், வெல்லதானம், வெள்ளிதானம், உப்புத்தானம், பூசணிக்காய்தானம், கன்னிகாதானம் என்ற பன்னிரண்டு தானங்களும் சித்திரை முதலிய பன்னிரண்டு மாதங்களில் வெவ்வேறாக முறையாகவருவது, புண்ணிய காலங்களில் ஒருமித்தாவது தத்தமது விருப்பப்படித் தானஞ் செய்ய வேண்டும். கோதானத்தில் சாணம் முதலிய பஞ்சகவ்வியங்கள் இருப்பதால் தன தானியங்களுக்காகச் செய்த பாவங்கள் ஒழியும். கோமூத்திரத்தால் நீரில் செய்த பாவமும் நெய்யால் உண்டான பாவமும் ஒழியும். பால், தயிர், நெய் இவற்றைத் தானஞ் செய்தால் மனம், வாக்கு காயங்களாற் செய்த பாவங்கள் ஒழிந்து தேகபுஷ்டி உண்டாகும். பூதானத்தால் பூலோகத்திலும் பரலோகத்திலும் கீர்த்தியுண்டாகும். திலதானத்தால் பலமும் மரண நிவாரணமும், சுவர்ணத் தானத்தால் ஜடராக்னி வீரிய விருத்தியும். நெய்யால் புஷ்டியும் வஸ்திரதானத்தால் ஆயுள் விருத்தியும் தானிய தானத்தால் அன்னசமுர்த்தியும், வெல்லத்தானத்தால் மதுரமான பதார்த்த போஜனமும் வெள்ளிதானத்தால் ரேதஸ் விருத்தியும் உப்புதானத்தால் அறுசுவை பேத உணவும், பூசணி தானத்தால் சகல லோகங்களும் சேதபுஷ்டியும் கன்னிகாதானத்தால் ஜன்மம் கடைத்தேறுதலும், சகல ஜன்மங்களிலும் செய்த பாவ நிவாரணமும் உண்டாகும்.

பலா, மா, விளா, வாழை இவற்றின் பழங்கள், கந்த மூலங்கள், உளுந்து முதலிய பருப்புகள், காய்கனிகள், கடுகு முதலிய உபகரணங்கள் இவற்றில் எந்தப் பருவத்தில் எது கிடைக்குமோ அந்த ருதுவில் அந்தப் பதார்த்தத்தைத் தானஞ் செய்ய வேண்டும். சரோத்திராதி இந்திரியங்கள் திருப்தியடையும்படி கீதம், வாத்தியம் முதலியவற்றைக் கொண்டு செய்தவன், தன் இந்திரியங்கள் களிப்பெய்ய வாழ்வான். வேத சாஸ்திரங்களை ஆசிரியனால் உணர்ந்து, கர்மங்களைச் செய்வதால் பயன் உண்டாகும் என்று எண்ணுவது ஆஸ்திக்யம். பந்துக்களுக்கும் அரசனுக்கும் பயந்து காரியங்களைச் செய்வது சிரத்தை. அஸ்திக்யத்தைவிட குறைந்தது. தரித்திரனாக இருப்பவன், வாக்கினாலும் செயலாலும் யாகஞ்செய்ய வேண்டும். மந்திரம் ஸ்தோத்திரம், ஜபம் முதலியன வாசியாகமாகும். தீர்த்த யாத்திரை, விரதம் முதலியன காயிகயாகமாகும். எந்த உபாயத்தாலாவது சிறிதளவேனும் சிவப்பிரீதியாகச் செய்த காரியம் சுகத்தைக் கொடுக்கும். தவம், தானம் இரண்டுமே செய்யத்தக்கவையாகும். பொன் முதலியவற்றை ஈஸ்வரார்ப்பணமாக தானஞ்செய்தால் மோஷம் உண்டாகி, மீண்டும்

உயர்ந்த பதவியை அடையலாம். இந்த அத்தியாயத்தை வாசித்தவர்கள் தர்மபுத்தியும் ஞான சித்தியையும் அடைவார்கள்''.

பிரணவ மகத்துவம்

''மகாஞானியே, எமக்கு பிரணவ மகாத்மியம் பற்றிக் கூறுங்கள்'' என்று முனிவர்கள் கேட்கச் சூதமுனிவர் சொல்லத் தொடங்கினார்.

''முனிவர்களே, பிரவணம் என்பது சம்சார சாகரத்திற்குத் தெப்பம் என்றும், உங்களுக்குப் பிரபஞ்சம் இல்லை என்றும், அதிசயத்தால் மோட்சத்தைத் தருவது என்றும், தன்னை ஜெபிப்பவனின் பாவத்தை அகற்றி ஞானமுண்டாக்குவது என்றும் பொருள்படும். அது சூஷ்மம் என்றும் ஸ்தூலம் என்று இருவகைப்படும். அதில் சூஷ்மம் ஓர் எழுத்தையும் ஸ்தூலம் ஐந்தெழுத்தையும் கொண்டவை. சீவன் முத்தனானவன் சூஷ்ம பஞ்சாச்சரத்தை தன் உயிர் போகும்வரை ஓதி வந்தால் உடல் அழிந்து சிவபெருமானை நிட்சயமாக அடைவான்.

சூஷ்ம பஞ்சாச்சரம் யோகிகளின் இதயத்தில் பிரகாசிக்கும். மகரத்தில் விளங்கும் ஆகார உகார மகாரங்கள் மூன்றும் தாமோ குணம் என்னும் மூன்று தத்துவங்களாகும். அகரம் சிவன். உகரம் சக்தி. மகரம் ஜக்கியம். பாவத்தை ஒழிக்க விரும்புவோன் பிரணவ மந்திரத்தைச் செபித்தல் வேண்டும். வேதம் ஓதத் தொடங்கும் போது காலை மாலை வேளைகளிலும் செய்யும் சந்தியா வந்தனம் முதலிலும், குருவை வணங்கும் போது பிரணவம் ஓத வேண்டும்.

பிரணவஸ்வரூபியான சிவபெருமானை எப்போதும் தியானித்து ஜெபம் செய்து கொண்டிருப்பவன் சிவனே என்று கருதப்படுவான். ரிஷி, சந்தஸ் என்ற தேவதைகளைத் தியானம் செய்த பின்பு ஜெபம் செய்தல் வேண்டும். பிரணவத்தை மாதுருக்கா யுக்தமாகத் தேகத்தில் நியாசம் செய்தால் செய்பவன் ரிஷியாவான். சோடக உபசாரங்களுடன் சிவயோகிகளைப் பூசிப்பவன் சாலோக்கியம் முதலான கிரமமாகப் பரிசுத்தனாகி முத்தியடைவான்.

ஒருவன் சிவ பஞ்சாட்சர ஜபத்தைச் செய்தல் வேண்டும். சிவ என்ற இரண்டு எழுத்துக்களுக்கும் முன்னே நம என்பதைச் சேர்த்து சதுர்த்தியமாக்கி நம சிவாய என்று ஜபிக்க அது பஞ்சதத்துவமான ஸ்தூலப் பிரணவம் ஆகும். அதுவே சிவ பஞ்சாச்சரம். அதற்கு பிரணவத்தைச் சேர்த்தும் ஜபிக்கலாம்.

இந்த ஜபத்தைக் கிழக்கு முகமாக இருந்து செய்ய வேண்டும். கிருஷ்ண சதுர்த்தியின் உதயத்தில் காலைக் கடன்களை முடித்துவிட்டு பஞ்சாச்சர ஜபம் செய்து,

அந்தணரை அழைத்து அவர்களில் ஒருவரைக் குருவாகக் கொண்டு ஜபம் செய்தல் வேண்டும். முடிவில் குருவுக்குத் தட்சணை கொடுக்க வேண்டும்.

முனிவர்களே, ஸ்தூலப் பஞ்சாச்சரத்தை நூறு லட்சம் தரம் ஜபித்தவன் பிரமபதமும், மீண்டும் நூறு லட்சம் ஜபித்தவன் விஷ்ணுபதத்தையும், மேலும் தனித்தனி நூறு இலட்சம் முறை ஜபித்தவன் ருத்திரசக்கரத்தை அடைந்து பின் சிவலோகத்தை அடைவான்.

தெரியாதவர்களுக்கும், பெண்களுக்கும் ஜபம் செய்யும் முறையைக் கற்பிக்க வேண்டும். சாதகன் ஐந்து லட்சம் முடிந்தவுடன் மகாபிசேகம், மகா நைவேத்தியம் செய்து சிவ பக்தர்களுக்கு அன்னம் அளித்தல் வேண்டும். அதனால் சிவபெருமானே விருப்புடன் வசிப்பார். சிவனடியார்களின் வீட்டில் வசிக்கும் பெண்களும் தேவி மந்திரத்தை ஜபிக்க வேண்டும்.

பூசை செய்யும்போது முதலில் தேவி பூசையைச் செய்தல் வேண்டும். சிவபூசையையும் சிவனடியார் பூசையையும் முறைப்படி செய்தவர்கள் சிவரூபம் பெற்றுச் சிவத்தோடு கலப்பர். வேதசாரமான இதை வாசித்தவர்களும், சொன்னவர்களும் சிவ சந்நிதியில் வாழ்வர்.

பந்தமோட்ச ஸ்வ ரூபாதிகள்

முனிவர்கள் சூதமுனிவரை நோக்கி, "பந்த மோட்சங்களின் ஸ்வரூபத்தைச் சொல்ல வேண்டும்" என்று கேட்டார்கள்.

"முனிவர்களே, பிரகிருதி முதல் எண்வகையான பந்தங்களை உடையவன் சீவன். அந்தப் பந்தங்களில் இருந்து விலகிருப்பவன் முக்தன். பிரகிருதி முதலிய எட்டையும் விலக்கினால் தான் மோட்சம் கிடைக்கும். சீவன் பந்த சீவன் என்றும் முத்த சீவன் என்றும் இரு வகைப்படுவான். பிரகிருதி முதலிய எட்டால் செய்யப்பட்டது தேகம். தேகத்தால் கர்மமும் கர்மத்தால் தேகமும் உண்டாகும். தேகம் ஸ்தூலம் என்றும் சூஷ்மம் என்றும் காரணம் என்றும் மூன்று வகைப்படும். நடக்கவும் இருக்கவும் புசிக்கவும் ஸ்தூல தேகமும் இந்திரிய போகங்களுக்கு சூஷ்மதேகமும் ஆத்த போகத்திற்கு கரணதேகமும் அவரவர் செய்த கர்மங்களின் பயனாக உண்டாகும். இம் மூவகை கர்மங்களால் சம்சாரமாகிய கடலில் சக்கரம் போலச் சுழல்கிறான். இதை அகற்றச் சிவபெருமானை வணங்க வேண்டும். சிவப்பிரகாசத்தால் தான் துன்பங்கள் ஒழியும். அதனால் அதை உண்டுபண்ண சிவ பூசை செய்தல் வேண்டும். சிவனின் அனுக்கிரகத்தால் கர்மம் அழிக்கப்படும். அதனால் அவன் முத்தனாவான். அதனால் சிவலோக வாழ்வு கிடைக்கும். அதுவே சாலோக்கியமாகும். அதன் பின் சிவசாரூப்பியம் உண்டாகும்.

கலிங்கத்தைப் பூசிப்பதால் கிரமமான முத்திகிடைக்கும். அதனால் முறைப்படி சிவபூசை செய்தல் வேண்டும். தினமும் சிவ சிந்தனையுடன் வாழ்ந்து மலர்களால் சிவ பூசை செய்தால் சிவனை அடையலாம்" என்று சூத முனிவர் கூறியபோது முனிவர்கள், "சுவாமி, லிங்கபேதத்தையும் லிங்க பூசை விதிகளையும் கூறவேண்டும்" என்று கேட்டனர்.

"முனிவர்களே, சர்வகாமங்களையும் கொடுப்பது பிரணவலிங்கம். சகலதுமாக உள்ளது. நிஷ்களலிங்கம். அதுவே பஞ்சாச்சரம். இதைவிடப் பல லிங்கங்கள் உள்ளன. அவற்றின் விபரங்களைச் சிவபெருமான் தான் சொல்ல வேண்டும். இருப்பினதும் எனக்குத் தெரிந்த சில லிங்கங்களைக் கூறுகிறேன். தானே உண்டான சுயம்புலிங்கம், பிந்து லிங்கம், பிரதிஷ்டித லிங்கம், சரலிங்கம், குருலி லிங்கம், சுயம்பு லிங்கம் இவற்றைப் பூசிப்பதால் ஞானம் விருத்தியாகும். பிரணவ மந்திரம் அடங்கிய லிங்கம் பிந்து லிங்கம்.

சிவ பக்தர்கள் தமது வீட்டில் வைத்துப் பூசிப்பது சரலிங்கம். பாணலிங்கத்தைச் சத்திரியர்களும், சுவர்ணலிங்கத்தை வைசிகரும் பூசித்தால் திரவியலாபம், மேன்மை, சிறப்பு முதலிய உண்டாகும். சிவலிங்கத்தைச் சூத்திரர் பூசித்தால் அவர்களது கோரிக்கைகள் நிறைவேறும். ஸ்படிகலிங்கம், பாணலிங்கம் என்ற இரு லிங்கங்களையும் அனைவரும் பூசிக்கலாம்.

தனது வர்ணத்திற்குரிய லிங்கம் கிடைக்காத விடத்து வேறு லிங்கங்களைப் பூசிக்கலாம். சுமங்களிகள், பார்த்திவ லிங்கத்தையும், விதவைகள் படிகலிங்கத்தையும், ரசலிங்கத்தையும் பூசிக்கலாம். அவர்கள் பூசிக்கும் போது தாம் உண்ணும் உணவுகளை நிவேதிக்கலாம். வீபூதியை லிங்கமாகச் செய்தும் வணங்கலாம். வீபூதியானது லௌகிகம், வைதிகம், சிவாக்னிசம்பந்தம் என மூவகைப்படும்.

ஒருவன் தனது சரீரத்தைச் சிவ சொரூபமாக்கிக் கொண்டு பஸ்மோத்தூளனம் செய்தபின் திரிபுண்டரம் அணிய வேண்டும். பூசை வேளையில் நீரில் கலந்தும் ஏனைய வேளைகளில் தனியாகவும் வீபூதியை அணிதல் வேண்டும். நீரில் கலந்து வீபூதியை அணிபவர்கள் சிவபூசைப் பயனை உடனே பெறுவார்கள்.

விகாரங்களுடன் கூடிய ராஜச தாமச குணங்களை ஒழிப்பவன் குணாதீதனான பரமேஸ்வரனே குருவாக வருபவன் என்று தெரிந்து கொள்ள வேண்டும். பிரபஞ்சத்தில் உள்ள தனது சீடர்கள் எல்லோரும் அஞ்ஞானத்தை ஒழித்து, சிவரூபத்தை அடையச் செய்வதால் தான் குரு என்று சொல்லப்படுகிறான். அத்தகைய குருவின் சரீரம் தான் குருலிங்கமாகும். குருவிற்குப் பணிவிடை செய்வதே குருலிங்க பூசையாகும். குரு சொன்னவற்றை ஆராயாது அவற்றைச் செய்பவனே சீடன் எனப்படுவான். குரு உண்டபின் தான் உண்டு எப்போதும் பணிவிடை செய்வதால் அவன் புத்திரனாகிறான். அவ்வாறு வாழ்ந்தால் சிவபூசை செய்த பயன் உண்டாகும். ஒவ்வொரு செயல்களைச் செய்யுமுன் விக்னேஸ்வரனைப் பூசிக்க வேண்டும்.

"தரித்திரன் தனது சக்திக்கு ஏற்ப அன்னதானம் செய்தல் வேண்டும். பைரவர் பூசையும் செய்தல் வேண்டும். அத்துடன் தேவாலய மண்டபங்களில் தீபதானம் செய்தல் வேண்டும். அதற்கும் வசதியில்லாதவன் நீராடி சிறிதாவது தானம் செய்து விட்டுச் சூரிய மந்திரத்தை ஜபிக்க வேண்டும். சிவபக்தன் கால நிலையை அனுசரித்து தனது தேகநிலையையும் பணநிலையையும் கருத்திற் கொண்டு அவற்றிற்கேற்பவே கிரியைகளைச் செய்தல் வேண்டும். சிவனது திருத்தலத்தில் இருந்து பஞ்சாச்சர மந்திரத்தை ஜபம் செய்து தனக்குக் கிடைக்கும் உணவை உண்டு வாழுதல் வேண்டும். சிவயோகிகள் பிச்சை பெற்று உண்பதைச் சம்பு சத்திரம் என்பர் சிவபக்தர்களுக்குச் சிவனின் பெருமைகளைச் சொல்லல் வேண்டும். சிவமந்திர ரகசியத்தைச் சிவனைத் தவிர வேறு யாரும் அறியமாட்டார்கள். சிவபக்தன் சிவலிங்கத்தைத் தொழுவதால் சிவனுக்குச் சமானமானவனாவான். சரலிங்கபூசையினால் நிட்சயமாக முத்தனாவான். முனிவர்களே, சானை முறைகளை நான் வியாச பகவானிடம் கேட்டுத் தெரிந்த வகையில் முழுவதையும் நான் உங்களுக்குச் சொன்னேன். இந்தப் புராணம் முழுவதையும் கேட்ட உங்களுக்கும் இதைச் சொல்லிய எனக்கும் சிவபக்தி உண்டாகட்டும். இதைக் கேட்டவர்களும் சொன்னவர்களும் சிவகடாச்சம் பெறுவர்" என்று கூறிய சூதமுனிவர் அவர்களிடமிருந்து விடை பெற்றார்.

ஸ்ரீ சிவமகாபுராணம் முற்றும்